418

அமிணபே சரித்திரம்

Q7ய
N04
118136

# AMINBEY;

AN INTERESTING STORY

IN

TAMIL

BY

K. AHAMED KANY MARICAR,

NAGORE,

*Author of the "Gassän-Virgin."*

# அமீன்பே சரித்திரம்.

இது

"கஸ்ஸான்-கன்னிகை" இயற்றிய

நாகூர்:

க. அஹ்மதுக்கனி மரைக்காயரால்

மொழி பெயர்க்கப்பட்டது.

The Memorial Press,

Madras.

1904.

[All Rights Reserved.]

நாகூர்
தளவாய். ம. சின்னவாப்பு மரைக்காயர்
எழுதியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 MAY 1904

# அமீன்பே சரித்திரம்.

11/36
N04

இஃது

# அமீன்பே சரித்திரம்.

மிஸ்று:

பிரபல அறபு பண்டிதராகிய

மிஸ்டர் ஜார்ஜ், எம். ஆர். ஏ. எஸ். (M. R. A. S.)

என்பவரால் செய்யப்பட் டிருந்ததை,

"கஸ்ஸான்-கன்னிகை" இயற்றிய

நாகூர்:

கனம். க. அஹ்மதுக்கனி மரைக்காயர் ஆலிம் சாஹிபு

அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு,

நாகூர்:

தளவாய். ம. சின்னவாப்பு மரைக்காயரால்

இயற்றமிழ் வசன நடையில் எழுதி,

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்தில்

அச்சியற்றப்பட்டது.

1904.

[*All Rights Reserved.*]

# முகவுரை,

புகழடங்கலும், மானிடர்களுக்கு எழுதுகோலின் பிரயோசனத்தைக் கற்பித்தவனும், இணையும் ஒப்பு மற்றவனும், சர்வலோக ரக்ஷகனுமாய் விளங்கி நிற்கும் கர்த்தனாகிய "அல்லா" என்னும் திருநாமத்தை யுடைய ஆண்டவனுக்கே உரியனவாகும்.

ஸலவாத்தும், ஸலாமும், மனிதர்களின் உயிர் வாழ்க்கைக்கு முக்கியம் வேண்டியதும், எம்மதத்தினையும் தன் வசப்படுத்த வலியுள்ளதுமாய் நன்கு புலப்படும், "குர்ஆன் மஜீது" என்னும் சுத்த சத்திய வேதத்தை நமக்குக் கொண்டுவந்தருளிய நபிகணாயகம் முகம்மதுர் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆண்டகை யவர்களுக்கும், அவர்களின் அரிய குடும்பத்தினர்களுக்கும், ஏனைய மூமீன், முஸ்லீம்களுக்கும் உண்டாகுவனவாக. ஆமீன், ஆமீன், யாறப்பல் ஆலமீன்.

மிஸ்று தேசத்தில் மஹா பாண்டித்திய முடைய, (Mr. George M. R. A. S.) மிஸ்டர் ஜார்ஜ், எம். ஆர். ஏ. எஸ். என்பவரால், அறபுப்பாஷையில் கோவை செய்யப்பட்டிருந்த, "பிரின்ஸ் அமீன்பே" சரிதையை அப்பாஷையை அறியாதஎமது நண்பர்களும் வாசித்து இன்றியமையாத அதின் சாராம்ஸங்களை யுட்கொண்டு ஆனந்திக்குமாறு, நாகூர், காடுவெட்டிக் குடியேறிய, "கறுத்த அபூபக்கர்பிள்ளை மரைக்காயர் அவர்களின் கனிஷ்ட புத்திரரும், அறபுக் கல்வியில் தேர்ச்சி புடையவருமாகிய, எமது மருகர், அஹ்மதுக்கனி மரைக்காயர் அவர்களால், தமிழில் மொழிபெயர்க்கப் பட்டதை, கற்றவருக்கும், மற்றவருக்கும் எளிதிற் புலப்படுமாறு இயற்றமிழ் வசன நடையில் ஒருவாறு புனைப்பித்து இரண்டு பாகங்களாகவும், 48 அத்தியாயங்களாகவும் எம்மால் எழுதப்பட்டிருக்கிறது.

இச்சரித்திரம் வாசிப்போர்க்கு ஆரம்பத்தில் உருக்கத்தையும், இடையில் வியப்பையும், கடையில் ஆனந்தத்தையும் விளைக்கு

மென்பதில் யாதோர் ஐயமுமில்லை. இதின் சிலபாகம், மானிடப் பிறவிகளுக்கு முக்கியம் வேண்டிய பொறுமையைப் போதிக்கும். சிலபாகம் உயர்குல மக்களுடன் சம்பாஷிக்கும் யுக்தியைக் கற்பிக்கும். சிலபாகம் ஒழுக்கத்தை ஊட்டும்.

இதில், "பிரின்ஸ் அமீன்பே" சரித்திரமே பிரதான மென்றாலும், இடைக்கிடை, ஷாம், ஷாம், மிஸ்று முதலான தேசங்களின் உற்பத்திக் காலங்கள், அத்தேசங்களையாண்ட அரசர்களின் விவரங்கள், அவர்களின் ஆக்ஷிகாலங்கள், சிலுவைச்சண்டை, நப்போலியன் போனபார்ட்டு, மிஸ்றை கரவட்டமாகப் பிடித்து ஆளை செலுத்தியது, வஹ்ஹாபிக் கலகத்தை அடக்கியவர் இன்னாரென்பது, ஸர்கேஷிய அரசவமிசத்தார் கொல்லப்பட்டது, முஹம்மது அலிபாஷா அவர்களின் சரிதம், அவர்களின் புத்திரர்களில் இபுறுஹீம்பாஷா, தூசூன்பாஷா, இஸ்மாயீல்பாஷா இவர்கள் செய்த யுத்தங்கள், கிரீக்கு தேசம் கிரேக்கரின் சுயாதீனமான காரணம், லிபனுன் தேசத்தின் அமீர்பஷீர் உடைய சரித்திரம் முதலான வேறுபல விஷயங்களும், சுருக்கமாகவும் தெளிவாகவும், காலம் காரணத்துடன் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன.

இதில், சாதிபேதம், மதபேதமான விஷயங்கள் அறவே கிடையாததலின், எச்சாதியின ரிடத்திலும் இச்சரிதம் இருக்கப் பெறும். இச்சரித்திரத்தின் அருமையும் பெருமையும் நோக்குநர்க்கெல்லாம் இனிது விளங்குமென்பது வெளி. ஆகவே, கடவுளின் நல்லுதவியையும், உரை யாசிரியர்களாகிய வித்துவ ரத்தினங்களின் கிருபா கடாக்ஷமென்னும் ஆசிர் வாதத்தையும் வேண்டி வழிபார்த்துருகின்றேம்.

த. ம. சின்னவாப்பு மரைக்காயர்.

அமீன்பே சரித்திர புத்தகக் கையொப்ப அட்டவணை.

| பெயர். | அவர்கள். | ஊர். | பிட, |
|---|---|---|---|
| வா. பீ. காதர் பக்ஷ் | ” | காரைக்கால். | |
| இ. ஜெய்னுல் ஆபிதீன் | ” | ” | 10 |
| மு. தம்பி சாய்பு மரைக்காயர் | ” | ” | 6 |
| கா. மு. யூ. ஹாஜிமுஹம்மது முஹியித்தீன் | ” | ” | 2 |
| செ. அப்துர் றஜ்ஜாக்கு | ” | ” | 1 |
| வா. முஹம்மது சுலைமான் | ” | ” | 1 |
| அ. செய்கு பரீது | ” | ” | 1 |
| மு. கன்னி சாகிபு மரைக்காயர் | ” | ” | 1 |
| அ. பாவாக்கனி | ” | ” | 2 |
| கா. முஹம்மது யூசுபு மரைக்காயர் | ” | ” | 1 |
| கெ. கி. முஹம்மதுஅலி மரைக்காயர் | ” | ” | 2 |
| வயி. முருகைய பிள்ளை | ” | ” | 1 |
| அ. சேகமா லெப்பை மரைக்காயர் | ” | ” | 1 |
| செ. ஹுசைன் சாகிபு | ” | ” | 1 |
| ம. அபுல் ஹசன் | ” | ” | 1 |
| செ. செய்யிது அஹ்மது | ” | ” | 1 |
| மு. முஹம்மது அப்துல் காதிர் | ” | ” | 1 |
| பி. முஹம்மது முஹியித்தீன் | ” | ” | 1 |
| அ. நாகு முஹம்மது மரைக்காயர் | ” | ” | 1 |
| செ. சின்ன மரைக்காயர் | ” | ” | 1 |
| ஆ. முஹம்மது அலி | ” | ” | 1 |
| இ. சுல்தான் அப்துல் காதிர் | ” | ” | 1 |
| மு. சுல்தான் மரைக்காயர் | ” | ” | 1 |
| ம. தம்பி சாகிபு | ” | ” | 1 |
| அ. சாயபு மரைக்காயர் | ” | ” | 1 |
| மு. செய்யிது | ” | ” | 1 |
| மு. ஹசன் மீரா லெப்பை மரைக்காயர் | ” | ” | 1 |
| இ. மஸ்தான் கனி | ” | ” | 1 |
| ப. அக்கா சாகிபு | ” | ” | 1 |
| சுலே. மு. இ. சுல்தான் மரைக்காயர் | ” | ” | 1 |
| ப. அப்துல் காதிர் மரைக்காயர் | ” | ” | |

| பெயர். | அவர்கள். | ஊர். | பிரதி. |
|---|---|---|---|
| மு. காதிர்முஹியித்தீன்சாகிபுமரைக்காயர் | ,, | காரைக்கால். | 1 |
| செ. மு. அப்துல் கண்டு மரைக்காயர் | ,, | ,, | 1 |
| த. சின்னத்தம்பி | ,, | ,, | 2 |
| கா. காதிர் முஹியித்தீன் | ,, | தரங்கம்பாடி. | 1 |
| செ. முஹம்மது அப்துல் காதிர் | ,, | ,, | 1 |
| அ. பக்கிர் முஹியித்தீன் | ,, | ,, | 1 |
| காதிர் பாச்சா | ,, | தஞ்சாவூர். | 1 |
| சின்னபாய் | ,, | ,, | 1 |
| மு. கி. முத்து முஹம்மது | ,, | காயற்பட்டணம். | 1 |
| M. செய்கு அப்துல் காதிர் | ,, | ,, | 1 |
| பக்கிர் முஹம்மது | ,, | திருமுல்லைவாசல். | |
| சில்லடிப் பக்கிரு | ,, | ,, | 1 |
| செ. முஹம்மது யாகூபு மரைக்காயர் | ,, | ,, | 9 |
| அ. அப்துர் றஹ்மான் | ,, | திருவிடச்சேரி. | 1 |
| சு. அப்துர் றஹ்மான் | ,, | ,, | 1 |
| இ. பக்கிரு மஸ்தான் | ,, | ,, | 1 |
| கா. பக்கிரு முஹம்மது | ,, | ,, | 1 |
| நா. முஹம்மது இஸ்மாயீல் | ,, | கரைப்பாக்கம். | 1 |
| கொ. அ. இஸ்மாயீல் சாகிபு | ,, | ,, | 1 |
| ப. வாப்பு | ,, | ,, | 1 |
| கா. அப்துல் கரீம் | ,, | கூத்தூர். | 1 |
| ஆ. முஹம்மதுக்கனி | ,, | ,, | 1 |
| ப. உ. அப்துர் றஹ்மான் | ,, | காவி. | 1 |
| M. C. Mohamed | ,, | ,, | 1 |
| இஸ்மாயீல் றஹீம் | ,, | ,, | 1 |
| உ. லெ. ம. ஹாமிது | ,, | ,, | 2 |
| முஹம்மது யூசுபு | ,, | ஆயப்பாடி. | 1 |
| மெ. முஹம்மது யூசுபு | ,, | ,, | 1 |
| ரா. கா. சி. முஹம்மது யூசுபு | ,, | ,, | 1 |
| அ. முஹம்மது ஹுசைன் | ,, | கோட்டேர். | 1 |
| இ. முஹம்மது சுல்தான் | ,, | ,, | 1 |



| பெயர். | அவர்கள். | ஊர். | பிரதி. |
|---|---|---|---|
| அ. முஹம்மது சரீபு | ,, | கோட்டேர். | 1 |
| வா. முஹம்மது காசிம் | ,, | ,, | 1 |
| S. Syed Husain Sahib | ,, | Madras. | 1 |
| ப. ஹமீது | ,, | நாகபட்டணம். | 1 |
| ம. ஹாஜி முஹம்மது இபுறாஹீம் சாகிபு | ,, | ,, | 1 |
| வா. முஹம்மது சரீபு | ,, | ,, | 1 |
| ப. மீ. ஹசன் குத்தூசு மாலுமியார் | ,, | ,, | 1 |
| கி. அப்துர் றஹ்மான் | ,, | ,, | 1 |
| மு. க. அஹ்மது முஹியித்தீன் | ,, | ,, | 1 |
| செ. அலி. முஹம்மது அப்துல் காதிர் மரைக்காயர் | ,, | ,, | 1 |
| ம. அலியா மரைக்காயர் | ,, | ,, | 1 |
| அ. பக்கிரு செட்டியார் | ,, | ,, | 2 |
| மு. முஹம்மது பாவா சாயபு மரைக்காயர் | ,, | நிரவி. | 10 |
| அ. மஸ்தான் | ,, | ,, | 1 |
| மு. முஹம்மது இபுறாஹீம் | ,, | ,, | 1 |
| மெ. செய்கு தாவூது | ,, | ,, | 1 |
| க. முஹம்மது அலி | ,, | ,, | 1 |
| மு. முஹியித்தீன் பாவா மரைக்காயர் | ,, | ,, | 1 |
| வா. அ. அபூபக்கர் சாகிபு | ,, | திருக்களாச்சேரி. | 1 |
| ந. மீ. முஹம்மது இஸ்மாயீல் | ,, | கூத்தாநல்லூர். | 1 |
| தூ. ப. முஹம்மது ஹுசைன் | ,, | ,, | 1 |
| அ. வா. முஹம்மது காசிம் | ,, | | 1 |
| அ. மு. செய்கப்துல் காதிர் | ,, | ,, | 1 |
| ஆ. செய்கு தாவூது | ,, | ,, | 1 |
| சி. அப்துல் முஹம்மது | ,, | ,, | 1 |
| செ. செய்கு மதார் சாகிபு | ,, | சறுவாக். | 1 |

| பெயர். | அவர்கள். | ஊர். | பிரதி. |
|---|---|---|---|
| மு. சிறுஜுத்தீன் | ,, | கூடலூர். | 1 |
| மு. பாவாஜி கான் | ,, | ,, | 1 |
| க. உ. ஜெய்னுல் ஆபிதீன் மியா | ,, | பறங்கிப்பேட்டை. | 1 |
| லெ. முஹம்மது கவ்து மரைக்காயர் | ,, | ,, | 1 |
| பி. செ. கா. அப்துர் றஹ்மான்மரைக்காயர் | ,, | சிக்கில். | 1 |
| அ. மு. க. முஹம்மது இஸ்மாயீல் | ,, | ,, | 1 |
| கா. அப்துர் றஹ்மான் | ,, | மஞ்சக்கொல்லை. | 1 |
| ப. மு. முஹம்மது அபூபக்கர் | ,, | ,, | 1 |
| ம. அப்துர் றஹ்மான் | ,, | நாச்சியார்கோவில். | 1 |
| மு. ஹாஜி முஹம்மது கவ்து மரைக்காயர் | ,, | செய்கோன். | 21 |
| செ. அஹ்மது லெப்பை மரைக்காயர் | ,, | ,, சோலன். | 5 |
| செ. முஹம்மது காசிம் | ,, | ,, ,, | 1 |
| அ. மு. முஹியித்தீன் அப்துல் காதிர் | ,, | திருமலைராயன்பட்டணம். | 1 |
| நெ. மு. முஹம்மது நெய்னா மரைக்காயர் | ,, | ,, | 1 |
| வா. கட்டப்பிள்ளை மரைக்காயர் | ,, | ,, | 1 |
| ஒலி. செய்கு அப்துல் காதிர் | ,, | ,, | 1 |
| க. சி. மன்சூர் சாகிபு மரைக்காயர் | ,, | ,, | 1 |
| வா. சின்னத்தம்பி மரைக்காயர் | ,, | ,, | 1 |
| அ. இஸ்மாயீல் சாகிபு | ,, | டில்லி-மீடான். | 2 |
| ந. அஹ்மது சாகிபு | ,, | ,, | 1 |
| பி. கு. செய்யிது கனி | ,, | அதிவீரராமன்பட்டணம். | 1 |
| ம. முஹம்மது இஸ்மாயீல் | ,, | திட்டச்சேரி. | 1 |
| கா. உதுமான் சாகிபு | ,, | ,, | 1 |
| பொ. மு. நெய்னா முஹம்மது சாகிபு | ,, | ,, | 1 |
| ம. ஹுசைன் சாகிபு | ,, | ,, | 1 |
| அ. மு. ரு. மு. கம்பனியார் | ,, | ,, | 1 |
| அ. பு. ஹபீபு முஹம்மது | ,, | ,, | 1 |

| பெயர். | அவர்கள். | ஊர். | பிரதி. |
|---|---|---|---|
| அ. ம. முஹம்மது சரீபு | ,, | திட்டச்சேரி. | 1 |
| மு. முஹம்மது அலி | ,, | ,, | 1 |
| த. இ. முஹம்மது அபூபக்கர் | ,, | ,, | 1 |
| கொ. காதிர் சாகிபு | ,, | ,, | 1 |
| ரு. செய்கு தாவூது | ,, | சிங்கப்பூர். | 1 |
| அ. செய்கு புகாரி | ,, | ,, | 1 |
| செ. இ. சேகுமா லெப்பை | ,, | ,, | 1 |
| ஜி. இ. முஹம்மது மதார் சாகிபு | ,, | ,, | 2 |
| அ. முஹம்மது நூறுத்தீன் | ,, | ,, | 1 |
| சி. அல்லா பிச்சை | ,, | ,, | 1 |
| ரு. சிங்காரம் பிள்ளை | ,, | ,, | 1 |
| மு. யாக்கூபு | ,, | ஏனங்குடி. | 1 |
| க. ஒ. ஆதம் சாகிபு | ,, | அணைக்குடி. | 1 |
| ச. நெய்னா முஹம்மது சாகிபு | ,, | கருக்கங்குடி. | 1 |
| மீ. வா. முஹம்மது காசிம் | ,, | புங்கனூர். | 1 |
| ரு. இ. முஹம்மது காசிம் | ,, | பினாங்கு. | 1 |
| ஆ. மு. முஹம்மது அபூபக்கர் | ,, | அடியக்கமங்கலம். | 1 |
| ஆ. சி. நெ. பக்கிரு முஹம்மது | ,, | இராஜகிரி. | 1 |
| செ. இ. இமாம் சாகிபு | ,, | மதுக்கூர். | 1 |
| தா. முஹம்மது மதார் சாகிபு | ,, | கொரந்தை. | 1 |
| கா. முஹம்மது சுல்தான் | ,, | கல்லம்பூர். | 1 |
| மீ. தம்பிவாப்பு மரைக்காயர் | ,, | திரகாணு | 1 |
| ப. யூசுபு | ,, | கொல்லாபுரம். | 1 |
| மு. முஹம்மது இஸ்மாயீல் | ,, | திருவாரூர். | 1 |
| ப. முஹம்மது கவ்து மரைக்காயர் | ,, | ,, | 1 |
| இ. கா. அப்துர் றஹீம் | ,, | ,, | 1 |
| வா. மதார் சாகிபு | ,, | ,, | 1 |
| சி. அப்துர் றஹீம் | ,, | ,, | 1 |
| அ. மு. ஹமீது மரைக்காயர் | ,, | நாகூர். | 1 |
| மு. இ. காதிர் மஸ்தான் | ,, | ,, | 1 |
| மு. காதிர் பாச்சா சாகிபு | ,, | ,, | 1 |

| பெயர். | அவர்கள். | ஊர். | பிரதி. |
|---|---|---|---|
| யா. முஹம்மது இஸ்மாயீல் | ,, | நாகூர். | 1 |
| அ. ம. யூசுபு மரைக்காயர் | ,, | ,, | 1 |
| ப. மருதாங்கனி | ,, | ,, | 1 |
| கு. காசிம் நகுதா | ,, | ,, | 1 |
| மு. க. முஹம்மது நயினா மரைக்காயர் | ,, | ,, | 1 |
| ஹார்பிஸ். மு. முஹம்மது அலி சாகிபு | ,, | ,, | 1 |
| ம. ஹமீது | ,, | ,, | 1 |
| யூ. ஹாஜி முஹம்மதுகாசிம் மரைக்காயர் | ,, | ,, | 1 |
| அலியா மரைக்காயர் | ,, | ,, | 1 |
| ந. முஹம்மதுஅலி மரைக்காயர் | ,, | ,, | 1 |
| சு. முஹம்மது உசுமான் மியா | ,, | ,, | 1 |
| செ. அப்துல் காதிர் சருங்கு | ,, | ,, | 2 |
| ம. அப்துல் காதிர் | ,, | ,, | 1 |
| மு. முஹம்மது காசிம் மரைக்காயர் | ,, | புரையாறு. | 20 |
| க. செய்கு இஸ்மாயீல் சாகிபு | ,, | ,, | 1 |
| ம. சதக்கத்துல்லா | ,, | ,, | 1 |
| ச. ஜெய்னுத்தீன் | ,, | ,, | 1 |
| கத்திபு. மு. செய்கு புர்ஹானுத்தீன்சாகிபு | ,, | ,, | 1 |
| ப. மு. முஹம்மது நயினா மரைக்காயர் | ,, | ,, | 1 |
| கு. முஹம்மது | ,, | ,, | 1 |
| செ. கா. அப்துல்கனி மரைக்காயர் | ,, | ,, | 1 |
| அ. முஹம்மது சுல்தான் மரைக்காயர் | ,, | ,, | 1 |
| ஆ. சி. செ. பக்கிரு முஹம்மது | ,, | இராஜகிரி. | 1 |
| S. O. முஹம்மது சரிபு சாகிபு | ,, | விஜயபுரம். | 1 |
| செ. ம. சிந்தா சாயபு | ,, | ,, | 1 |

முற்றிற்று.

# CONTENTS.

## முதல்பாகம்.

## பொருள் அட்டவணை.


| அத்தியாயம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1 | விபனுன் ... ... ... ... | 1—3 |
| 2 | அகஸ்மாத்தாகக் கதவு தட்டப்பட்டல் ... | 3—7 |
| 3 | ஆழ்ந்த ரகசியம் ... ... ... | 7—15 |
| 4 | அமீர்பஷீர் ... ... ... ... | 16—21 |
| 5 | பைத்னுத்தீன் ... ... ... ... | 21—25 |
| 6 | அந்தப்புரம் ... ... ... ... | 25—30. |
| 7 | சஞ்சலப் பிரித்தல் ... ... ... | 31—37 |
| 8 | கரீபும், மிஸ்றும்... ... ... ... | 37—41 |
| 9 | காஹிறு ... ... ... ... | 42—49 |
| 10 | அற்புத மிதியல் ... ... ... ... | 49—51 |
| 11 | இராஜகுல மாது... ... ... ... | 52—70 |
| 12 | மேல் மிஸ்று ... ... ... ... | 70—73 |
| 13 | கரீபை யிழத்தல் ... ... ... | 73—78 |
| 14 | கரீபைத் தேடல் ... ... ... | 78—83 |
| 15 | அமீர் அமீன் ... ... ... ... | 83—88 |
| 16 | கரீபு ... ... ... ... ... | 89—93 |
| 17 | குதிரைவீரரின் விருந்து... ... ... | 94—98 |
| 18 | அமீர்பஷீரும், கலெக்டரும் ... ... | 98—103 |
| 19 | அந்தரங்கம் வெளிப்படல் ... ... | 103—107 |
| 20 | பிரான்ஸியரின் படையெடுப்பு ... ... | 107—117 |
| 21 | இபுறுஹீம்பாஷா ... ... ... | 117—120 |
| 22 | இராஜவம்சத்தார்கள் சங்கரிக்கப்பட்டதின் காரணம் ... ... ... | 121—125 |
| 23 | முஹம்மதுஅலி பாஷா ... ... ... | 126—156 |


முற்றிற்று.

# CONTENTS.

இரண்டாம்பாகம்.

பொருள் அட்டவணை.


| அத்தியாயம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 24 | அந்தரங்கம் வெளிப்பட வேண்டல் ... | 1—10 |
| 25 | அமீன்பேயைத் தேடல் ... ... ... | 10—19 |
| 26 | ஸயீதும் உத்மானும் ... ... ... | 19—23 |
| 27 | சூதான்-அறபியர் ... ... ... | 24—29 |
| 28 | ஷெண்டியும், நமிரும் ... ... ... | 29—33 |
| 29 | இஸ்மாயீல்பாஷாவின் மரணம் ... ... | 33—38 |
| 30 | இக்காவின் முற்றுகை ... ... ... | 38—43 |
| 31 | அப்துல்லாபாஷாவும், கரீமும் ... ... | 43—48 |
| 32 | கடவுளை விசுவசி, மற்றதை விட்டொழி ... | 48—53 |
| 33 | ஸாலிம்ஆகா ... ... ... ... | 53—58 |
| 34 | அபூர்வ சந்திப்பு ... ... ... | 58—62 |
| 35 | மகிழ்ச்சியான சந்திப்பு ... ... ... | 62—71 |
| 36 | பாரதூரமான அபாயம் ... ... ... | 71—76 |
| 37 | பட்சத்திற்காதாரம் பார்வை ... ... | 76—78 |
| 38 | தேடுவதடங்கலும் கூடுவதரிது ... ... | 79—82 |
| 39 | அபாயத்திலும் அபாயம் ... ... | 82—85 |
| 40 | முக்காடு நீக்கல் ... ... ... ... | 85—87 |
| 41 | உண்மையான நேசம் ... ... ... | 87—95 |
| 42 | இபுறுஹீம்பாஷாவும், ஷாமும் ... ... | 95—99 |
| 43 | மூவாறுயுத்தமும், இன்கிஷாரியர் நாசமும் | 99—104 |
| 44 | இழந்தபொருளைப் பெறல் ... ... | 104—108 |
| 45 | அதிட்ட விவாகம் ... ... ... | 109—111 |
| 46 | ஸயீது ... ... ... ... ... | 111—119 |
| 47 | இபுறுஹீம்பாஷா ஷாமைக் கைவிடல் ... | ——120 |
| 48 | அமீர்பஷீர் ஊருக்குப் புறம்பாக்கப்படுதல் | 120—122 |


முற்றிற்று.

# அமீன்பே சரித்திரம்.

## 1-வது அத்தியாயம்.

## (Lebanon) லிபனான்.

லிபனான் என்பது (Asiatic Turkey) ஆசியாத்துருக்கியில் (Mediterranean Sea) மத்திய தரைக்கடலை யடுத்த (Syria-சீரியா) ஷாமின் முக்கியமான ஓர் மாகாணம், உயரமானதும், சுகாதாரத்தைத் தரக்கூடியதுமான தொடர் மலைப்பூமி. அழகிய நந்தவனங்களாலும், செழித்தோங்கிய வேளாண்மைகளாலும், அதிக பெயர்பெற்றது. அந்தலிபனான்மலை, வருஷத்தில் அதிக பாகம் பனியால் மூடப்பட்டிருக்கும். அம்மாகாணம் பற்பலகோத்திர (அமீர்கள்) தலைவர்களால் ஆளப்பட்டு வந்தாலும், பனீஷிஹாபு கோத்திரத் தலைவர்களே அதிகமாக அவ்வூரை ஆண்டு வந்தார்கள். அவர்களிற் பெரும்பாலார், லிபனான் மாகாணத்தைச் சேர்ந்த பட்டணங்களிலொன்றாகிய (Deirulkamer) தீருல்கமர் என்னும் பட்டணத்தையே இராஜதானியாக்கிக்கொண்டார்கள். தீருல்கமர் என்னும் பட்டணம், லிபனான் மலையின்மேற்கில் வசதியான விடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. லிபனானின் மற்ற நாடுகளைப்போலவே அவ்வூரிலும் மதுரமான கனிவருக்கங்களைத் தரக்கூடிய விருக்ஷங்களுள்ள தோட்டங்களும், விதவிதமான பூங்காவனங்களும், நல்லதண்ணீர்த் துறவுகளும் உண்டாக்கப் பட்டிருக்கின்றன. ஆனால்; அத்தோட்டங்களில் மற்ற விருக்ஷங்களைவிட அத்திமரங்களும், கொடிமுந்திரிகைச் செடிகளுமே அதிகமாக இருக்கின்றன. லிபனான் நாடு, நீர்வளம் நிலவளத்தில் மிகச்சிறந்த பூமியாதலால், அந்த நாட்டில் பலனைத்தராத பாழ்நிலம் சுவல்பமேனுங் காணப்படமாட்டாது.

மேற்படி லிபனான் நாடு, கிறிஸ்து பிறந்த 18-ம் நூற்றாண்டின் கடைசியில் பனீஷிஹாபு கோத்திரத்திலுள்ள அமீர்பஷீர் என்பவரால் ஆளப்பட்டது. அந்த அமீர் சற்குணத்திலும், வீரதீரத்திலும், விடாமுயற்சியிலும், அதிகக்கீர்த்திப்பிரஸ்தாபமுடையவர். பார்ப்பவர் அஞ்சத்தக்க தோற்றமுடையவர். லிபனான் நாட்டார் மற்ற நாட்டாரிலும் அதிக வலுவும் தைரியமுமுள்ளவர்கள். அப்படியிருந்தும், அமீர்பஷீரிடத்தில் அவர்கள் சம்பாஷிக்கும்போது அவர்களின் நெஞ்சங்களில் படபடப்பும், கைகாற்களில் நடுக்கமுமில்லாமல் சம்பாஷிக்கவும், அந்த அமீரின் முகத்தை யேறிட்டுப்பார்க்கவும், திராணி பெறமாட்டார்கள்.

தீருல்கமர் என்னு மிராஜதானி நகரத்திற் கெதிரிலுள்ள ஓர்மலையடிவாரத்தில் பைத்துத்தீன் என்றழைக்கப்படும் ஒரு சிற்றூருளது. மேற்படி சிற்றூரில் (Druses) டரூஸ் வமிசத்தாரின் விசேஷ வணக்கத் தலமொன்றிருக்கிறது. அச்சிற்றூரை, அமீர்பஷீர் கிரயத்திற்கு வாங்கி, அதில் விசித்திரமான மாளிகைகளும், அழகான அனேக கட்டிடங்களும், சோலைகளும், பூங்காவனங்களும் உண்டாக்கி, எப்போதுந்தண்ணீர்ப் பஞ்சமுண்டாகா திருக்கும்படியாக கால்வாய்களும், ஏரிகளும், குளங்களும், கிணறுகளும் வெட்டுவித்து, அவ்வூரைத் தனக்கும் தன் குடும்பஸ்தர்களுக்கும் வாசஸ்தானமாக்கிக்கொண்டார். அதுமுதல் பைத்துத்தீனென்ற சிற்றூரானது, லிபனான் நாட்டின் மற்ற ஊர்களைப்பார்க்கிலும் அதிக சுகத்தைத் தரக்கூடிய சிற்றூராயிற்று. அமீர்பஷீர் அரசாட்சி விஷயத்தில் மெத்த விழிப்புடையவர்; குடிகளின் நயத்தைமிகக்கருதுகிறவர். முகக்குறியைப்பார்த்து, மனுஷர்களின் குணகுணங்களை யறியக்கூடிய சக்தியை கடவுள் அவரில் அமைத்திருந்தார். குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவனை அவருடைய சமுகத்திற்கொண்டுவந்து நிறுத்தினால், அக்குற்றவாளியை அவர் கூர்க்கப்பார்ப்பதுகொண்டு, குற்றவாளி சுத்தவாளியென் றறியக்கூடிய சக்தி அவரிலுண்டாயிருந்தது. அவரின் ஆட்சிபூமியில் இரகசியக்கருமம் எங்கே நடந்தாலும் அவ்ருக்குத்தெரிந்துவிடும். ஆராயினும் ஒருவன் ஒரு ஊரிலிருந்து வேறூருக்குப்பிரயாணப்பட்டால், அவன் இன்ன வேலைக்காகப் போகிறானென்று விளங்கி யறிவிப்பதற்காக, அமீரின் அந்தரங்கவுளவர்கள் அப்பிரயாணிக்குத் தெரியாமல் பின்சென்றறிந்து, அங்கு சம்பவித்தவைகளை



அமீருக் கறிவிப்பார்கள். ஆகையால் அவரின் ஆளுகைத்தேசங்களில் நடைபெறும் எவ்விஷயமும் அவருக்குத்தெரியாதிராது. அவர் தன் குடிகளின் நன்மையைக்கருதி நீதியாக அரசாட்சிபுரிந்து வந்தபடியால் குடிசனங்கள் அவரை மிகவுநேசித்து, சமாதானமாகவும், சுகமாகவும் வாழ்ந்துவந்தார்கள். அந்த அமீருடைய அரசாட்சி காலத்தில் லிபனான் நாடுகளடங்கலும் அமைதியையும், சமாதானத்தையும் பூண்டிருந்தன. சிறுவர்கள், பெண்டுகள் முதலிய சகலரும் இராக்காலங்களிற்கூட, பணங்காசு முதலிய திரவியங்களைக்கைகளிலெடுத்துக்கொண்டு, ஒரு ஊரிலிருந்து மறுவூருக்கு யாதோர் பயங்கரமுமில்லாதுபாட்டைசாரிகளாவார்கள்.

---

## 2-வது அத்தியாயம்.

## அகஸ்மாத்தாகக் கதவு தட்டப்படல்.

பைத்துத்தீன் என்னுஞ் சிற்றூருக் கருகில் பாதிரிமடம் ஒன்றுளது; அதில் பாதிரிகள் குடியிருந்து பகற்காலங்களிற் சில சமயம் வணக்கஞ்செய்தும், சிலநேரம் வேளாண்மைத்தொழிற்கள் செய்துங் காலங்கடத்தி வந்தார்கள். கி-பி-1812௵ டிஸெம்பர்௴ ஓரிரவில், பாதிரிகள் அம்மடத்தின் முற்றவெளியில் விழுந்திருந்த பனிக்கட்டிகளை அன்று பகலெல்லாந் தள்ளிக்கொண்டிருந்ததினாலும், அன்றிரவு மிகவும் குளிராகவிருந்ததினாலும், குளிர் காய்வதற்காகக் கணப்புச்சட்டி யொன்று சித்தப்படுத்தி, மடத்தினோரறைக்குள் அச் சட்டியை வைத்து சூழவர உட்கார்ந்து, பற்பல விஷயங்களைச் சம்பாஷித்தவர்களாகக் குளிர் காய்ந்துகொண்டிருந்தார்கள். மடத்தின் வெளிக்கதவு அடைக்கப்பட்டிருந்தது. பாதிரிகள் கம்பளி யுடையுடுத்து, கம்பளிக்கயிறுகளால் இடைக்கட்டு கட்டியவர்களாக விருந்தார்கள். அன்றிரவு மின்னலும், இடி முழக்கமும், பெருங்காற்றும், அதிகமாயிருந்ததுடன், பனிக்கட்டிகளும் மிகுதியாக விழுந்துகொண்டிருந்தன. அப்படிப்பட்ட சமயத்தில் மடத்தின் தலைமைப்பாதிரி மற்றவர்களைப்பார்த்து கேட்டார்.

தலைமைப்பாதிரி:—இன்று நானொருசெய்தி கேள்விப்பட்டேன்; அச்செய்தியெனக்குக் கலக்கத்தைக்கொடுத்தது; அதைநீங்கள்கேள்விப்பட்டீர்களோ? இல்லையோ?

மற்ற பாதிரிகள்:—அது என்ன செய்தி?

தலைமைப்பாதிரி:—பஸ்கந்தா சிற்றூர் வாசிகளில், பனிமாலைபு சந்ததியாரிலிருவர், ஜலக்மகாயில் என்னுஞ் சிற்றூறுக் கருகிற்போய்க் கொண்டிருந்த கத்தோலிக்கக் கோத்திரத்தலைவராகிய அக்நாதியூஸ் பாதிரியாரைக் கொன்று விட்டார்களாம்; அதை நம்முடைய அமீர் பஷீர் கேள்விப்பட்டு சினங்கொண்டு, அக் கொலைஞர்களைக் கண்டுபிடித்து தண்டிக்க முயன்றிருக்கின்றாராம்.

அவர்களுள் ஒருவர்:—எப்பொழுதும் விழிப்புள்ள நம்முடைய அமீரின் ஆட்சிபூமியில் இவ்வித சம்பவம் நிகழ்ந்தது பேராச்சரியம். கொல்லப்பட்டவர் கிறிஸ்தவராகையால் அமீரவர்கள் அவ்வளவாகக் கவனிப்பார்களென்பது சந்தேகம்.

தலைமைப்பாதிரி:—நம்முடைய அமீர் சமயபேதம் பார்ப்பவரல்லர்; எல்லாமதஸ்தரையும் ஒரேவிதமாகப் பாவிக்கிறவர்; நீர் மெதுவாகப்பேசும்; நாம் சம்பாஷிப்பவைகள் அவர் காதில் விழுந்தால் நமக்கு தீங்கு நேரிடவும் கூடும்.

மற்றொருபாதிரி:—நாமெங்கிருக்கிறோம்? அமீரெங்கிருக்கிறார்? நம்மிருப்பிடத்திற்கும், அமீரினிருப்பிடத்திற்கும், இரண்டு மைலுக்கதிகமிருக்குமே; நம்முடைய பேச்சு அவர் காதி லெவ்விதம் விழும்.

தலைமைப்பாதிரி:—அந்ததூரம் எனக்குந் தெரிந்ததுதான். அப்படியிருந்தாலும் நம்முடைய அமீரை மற்றவர்களைப்போல நீர்நினைக்கவேண்டாம். மஹா பாரதூரமான விஷயங்களை யெல்லாம் கடவுள் அவருக்கிலேசாக்கிக் கொடுத்திருக்கிறார். பேசுதற்கு சக்தியற்ற இவ்வறையின் சுவர்முதற்கொண்டு இங்கு நிகழ்வனவற்றை அவருக்கறிவிக்கப்போதும். அவர் தன்னரண்மனையி லிருந்துகொண்டே, லெபனொன்னாட்டின் பலபாகங்களிலும் நடைபெறுஞ் சகலரகசியங்களையும் தெரிந்துகொள்ளுகிறவராகவிருக்கிறார். அவரிடத்திலனேக வுளவர்களு மிருக்கிறார்கள். (என்று)பாதிரிகள் சம்பாஷித்துக்கொண்டிருக்கும்போது, மடத்தின் வெளிக்கதவு படபட்வென்று தட்டப்படுகிற சப்தம் அவர்களுக்குக்கேட்டது. கேட்கவே, அவர்களுக்குத் திடுக்கமும், நடுக்கமுமுண்டாகி, பேச நாவெழாமலும், எழுந்துபோய்க்கதவைத் திறக்க சக்தி பெறாமலு மிருந்தார்கள். தலைமைப்பாதிரி மற்றவர்களைப்பார்த்து "ஒஹோ! அமீர்பஷீர் அல்லது அவரின்வேவுகாரர் கதவு தட்டுகிறதுபோலிருக்கிறது; மெதுவாகப் பேசுங்களென்று.



நான் சொன்னதை நீங்கள் கேட்டீர்க ளில்லையே—இப்போது நீங்களென்ன பேசிக்கொண்டிருந்தீர்களென்று கேட்டால், நாமென்ன சொல்லுகிற" தென்று மனங் கலங்கியும், தன் மனதைச்சற்று திடப்படுத்திக்கொண்டு, ஒருபாதிரியைப் பார்த்து கதவைத் திறக்கும்படி யேவினார்; அப் பாதிரிகள் தங்களின் மனங்களை யெவ்வாறு திடப்படுத்திக்கொண்டாலும், அமீரினச்சம் அவர்களின் மனங்களை விட்டு முற்றாக நீங்கி விடவில்லை; தலைமைப் பாதிரியின் ஏவற்பிரகாரம் ஒரு பாதிரி அதிக பயத்துடனெழுந்துபோய்க் கதவைத் திறந்தார். யாத்திரியினுடை யணிந்தவனும், கருகிற முடையவனுமான ஒரு மனுடனும், கறுப்புடையணிந்து முகமூடியிட்ட ஒரு வாலிபஸ்திரியும் நிற்கவும், அக்கறுத்த மனுஷன் கையில் ஒரு சிறு குழந்தை யிருக்கவுங் கண்டார். மேலே கூறியவர்கள் குளிரின் கடூரத்தால் நடுக்க மெடுத்தவர்களாக விருந்தார்கள். கதவுதிறந்த பாதிரி அவர்களைப்பார்த்து "நீங்கள் யார்? இங்கு வந்தகாரண மென்ன?" வென்று கேட்டார். அதற்கு அக் கறுத்த மனிதன், "நாங்கள் வழிப்போக்கர்கள்; இன்றிரவு இம்மடத்தில் தங்குதற் [illegible]டுமோ?" வென்று கேட்டான். அதற்கப்பாதிரி "நல்லது, சந்தோஷத்துட[illegible]கீகரிக்கிறோ" மென்று கூறி, அவர்களை யழைத்துக் கொண்டுபோய், தலைமைப்பாதிரியின் சமுகத்தில் விட்டு, சமாச்சாரத்தைத் தெரிவித்தார். தலைமைப்பாதிரி, அம் மூவரையுந் தானிருக்கும் அறைக் கருகாமையிலுள்ள ஓரறையி லிருக்கச் செய்து, அவர்களை யதிகக் கவனத்துடன் உற்றுப் பார்த்து, முகக் குறியாலும், உடையாலும், தூரதேசத்திலிருந்து வந்தவர்கள் தானென் றறிந்து கொண்டார். அதனால் அமீரைப் பற்றி யவர்களுக் குண்டாயிருந்த அச்சப்பாடொருவாறு தணிந்தது. அப்பால் தலைமைப்பாதிரி, அவர்களைப் பார்த்து "இன்றிரவு நீங்கள் நம்மிடத்தில் இராத் தரிப்பதினாலே நாங்கள் அதிக பாக்கியம் பெற்றோம், மிகுந்த மகிழ்ச்சியுட னங்கீகரிக்கிறோம்; நீங்களெங்கிருந்து வந்தவர்கள், சொல்லுங்க" ளென்று, கேட்டார்.

அக்கறுத்த மனிதன் விசனகரமான பெருமூச் செறிந்தவனாக், "தூரதேசத்திலிருந்து வந்தோ"மென்று மறுமொழி கூறினான். தலைமைப்பாதிரி அவர்களை நோக்கி, "அப்படியானால் நீங்கள் பசித்தவர்களாக விருப்பீர்க" ளென்றுசொல்லி, அங்கிருந்த பாதிரிகளிலொருவரை யழைத்து, தின்பண்டங்கள் தயாராக்கும்படி கட்டளை

யிட்டார். தக்ஷணமே ரொட்டி, வெண்ணெய், தித்திப்புப்பதார்த்தங்கள், காப்பித்தண்ணீர் முதலியன தயார் செய்யப்பட்டன. அவ்விருந்தாளிகள் அவற்றைவயிறாரவுண்டு, வாயாரக்கடவுளைத் துதித்தார்கள். அந்தவாலிபஸ்திரீ புணவருந்தும்போது, முகமூடியை நீக்கினள். அவளின் முகம் பூரணச்சந்திரனைப்போலக் காணப்பட்டதுடன், அதிகசஞ்சலமும், கஷ்டமும் அடைந்த குறியும், மேன்மைப்பாடும், அச்சப்படத் தக்கவிதமான வுயர்குலத்தி னுடையாளமும், அவள் முகத்திற்புலப்பட்டன. பாதிரிகள் அவைகளைப்பார்த்து, ஆச்சரியமும் பிரமிப்பு மடைந்திருந்தார்கள். பின்னர், தலைமைப்பாதிரியின் கட்டளைப்பிரகாரம் குளிர்காய்வதற்காகக் கணப்புச்சட்டியொன்று கொணர்ந்து, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள். தலைமைப்பாதிரி, அவ்விருவரின் உடை நடை பாவனைகளைப்பார்த்து, இவர்கள் விபசன் நாட்டரல்லவென்று தனக்குள்ளே தீர்மானித்துக் கொண்டு, இரண்டாம் முறை அவர்களுடன் சம்பாஷிக்கத் தொடங்கினர்.

தலைமைப்பாதிரி:—[illegible] நீங்களிங்கே வந்ததைப் பற்றிக் கேட்பதற் கெனக் குத்தர வளிக்கவேண்டும்; நீங்கள் தூரதேசத்திலிருந்து வந்தவர்களாகத் தெரிகிறது; (Damascus - தமாஸ்கஸ்) திமஷ்கு பட்டணத்தி லிருந்து வந்தீர்களோ?

கறுத்தமனிதன்:—அல்ல, அல்ல, அப்பட்டணத்தைச்சேர்ந்த வொருசிற்றூரி லுள்ளவர்கள்; கடவுளினுதவியால் விடியற்காலையில் எங்களின் வரலாற்றை விவரிக்கிறோம்.

தலைமைப்பாதிரி:—நல்லது, இப்பொழுது நீங்கள் சயனிக்கநாடுவீர்கள்; உங்களுக்காகப் படுக்கை, தயார் செய்யப்பட்டிருக்கிறது; எழுந்து வாருங்கள். (என்று) அவர்களை வேறோரறைக்குளழைத்துக் கொண்டுபோனார். அவ்வறையி லிரண்டு விரிப்புக்கள் விரிக்கப்பட்டிருந்தன. கைகால் சுத்திசெய்துகொள்வதற்காக வெந்நீரும் வைக்கப்பட்டிருந்தது. தலைமைப்பாதிரி "வேறே யேதுந் தேவையுண்டோ?" வென்று, அவர்களைக்கேட்டார். அவர்க "ளொன்றுந் தேவையில்லை" யென்றார்கள். "படுத்து கண்ணுறங்குங்கோ" ளென்று சொல்லி விட்டு, தலைமைப்பாதிரி மற்ற பாதிரிக ளிருக்குமறைக்குட் போய்ச்சேர்ந்தார். அங்கே அவர்கள் அந்த சௌந்தர



வதியும், அவளின் குழந்தையும், கருநிறத்தனை னொரு மனிதனுடன் நடுச்சாமத்தி லங்கு வந்ததைப்பற்றி, ஆச்சரிய மடைந்தவர்களாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது, தலைமைப்பாதிரி அங்கேவந்து, "நாம் அமீர்பஷீரின் கோபத்தினின்றுங்காக்கப்பட்டதற்காக, கடவுளை நிரம்பத் துதிக்கிறேன்; ஏனென்றால் கதவைத்தட்டியவர் அமீர்பஷீர், அல்லது அவரின் உளவராக விருக்கலாமென் றெண்ணி யிருந்தேன்; இப்போது பார்க்க அப்படி யில்லாதிருப்பதைப்பற்றி மிகவுஞ் சந்துஷ்டியடைகிறே" னென்றார். அப்பாதிரிகளுள் ஒருவர், தலைமைப் பாதிரியைப் பார்த்து, "தங்களின் சந்தோஷத்திற் கோரெல்லை யிருக்கவேண்டும்; ஏனெனிலோ, அக்கறுத்தமனிதன், அமீர்பஷீரின் வேவுகாரனாக விருக்கக்கூடாதோ" வென்றார். அங்கிருந்த மற்றபாதிரிகளெல்லாம், "அப்படியிருப்பதாக நாம் நினைத்தற் கிடமில்லை; உடையினாலு மப்படிப்பட்டவர்களென்று விளங்கவில்லையோ? அவர்களைப் பார்க்குமிடத்து, வழிப்போக்கர்களாக[illegible] தோற்றப்படுகிறார்கள்; விடிந்தவுடன் அவர்களி னந்தரங்கத்தை யறி[illegible]க்கலா" மென்று சொல்லி யொருமணி நேரம் வரையில் பேசிக்கொண்டிருந்து, பிறகு தத்தம் படுக்கையறைக்குப் போய்ப் படுத்து நித்திரை போனார்கள்.

---

## 3-வது அத்தியாயம்.

## ஆழ்ந்த ரகசியம்.

அன்றிரவு பாதிரிகள் கண்ணுறங்கி, அதிகாலையிலெழுந்து, வழக்கப்பிரகாரம் அவர்களின் மடத்தில் விழுந்து கிடந்த பனிக்கட்டிகளை யெடுத்து வெளியிலெறிந்துகொண்டிருந்தார்கள். சூரியனுதயமானது. விருந்தாளிகளாகிய இருவரும் விழித்தெழுந்தார்கள். தயார்செய்யப்பட்டிருந்த காப்பி, ரொட்டி முதலானவைகளைப் பசியாறினார்கள். அவர்கள் பசியாறித் தீர்ந்தபிறகு, கறுத்தமனிதன் தலைமைப்பாதிரியிடத்தில் வந்து, "தங்களிடத்தில் இரகசியங்களைப்பேசவிரும்புகிறேன்" என்றான். தலைமைப்பாதிரி "நல்ல" தென்று, கறுத்தமனிதனை யோரறைக்குட் கூட்டிச்சென்று, அங்கேயிருவருந் தனித்துட்கார்ந்து பேச வாரம்பித்தார்கள்.

கறுத்தமனிதன்:—ஐயா! தங்களிடத்தி லிரகசியத்தை வைப்பதற்கிடமு[illegible]ா?

தலைமைப்பாதிரி:—நீயதொன்றிற்கு மஞ்சவேண்டாம். நாங்களோ மனுடர்களி னிரகசியங்களை மறைத்துக் காப்பாற்றும் இக்லீரூஸ் என்னும் பாதிரிகளாக விருக்கிறோம். எங்களிடத்தி லெவ்விதமான விரகசியங்களும் விண்ணப்பஞ் செய்யப்படலாம்.

கறுத்தமனிதன்:—நானதை யறிந்துதான் உங்களை விசுவசித்து வினவினேன்; இதோ, எங்களின் விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன்; நாங்கள் (தமாஸ்கஸ்) திமஷ்கு பட்டணத்தாரு மல்லோம்; அதைச்சார்ந்த நாட்டாருமல்லோம்; நாங்கள் (Egypt-எகிப்து) மிஸ்று தேசவாசிகள்; எங்களினுயிரைக் காப்பாற்றுதற்காக இவ்வூரை நாடி வந்தோம்.

தலைமைப்பாதிரி:—உங்களின் வரலாறென்ன?

கறுத்தமனிதன்:—இதோ என்னுடன் வந்திருக்கிற, என்னெஜமானியாகிய ஜமீலாநாயகி, [illegible]து மிஸ்றின் தேசாதிபதியாகவிருக்கிற முஹம்மது அலிபாஷா வுக்குமுன் அத்தேசத்தை யரசாட்சி புரிந்த அரசர் வமிசத்தி லுள்ள, ஓரமீரின் மனைவியாக விருக்கும்.

தலைமைப்பாதிரி:—நீ சொன்ன முஹம்மது அலிபாஷா அறபு நாட்டிற் கலகஞ் செய்துவரும், வஹ்ஹாபி கூட்டத்தாரை யடக்குதற்காக, தன்மகன் தூசூன் பாஷாவை யனுப்பு முன்னுக்கு, அவ்விஷயத்தைப்பற்றி (Coustantinople-கொஸ்தந்தீனியா) ஸ்தம்பூலின் சுல்தான் மஹ்முதுகான் அவர்களா லனுப்பப்பட்ட (பர்மான்) இராஜ கட்டளைப் பத்திரத்தை (Cairo-கயிரோ) காஹிறு கோட்டைக்குள் வாசித்து பஹிரங்கப் படுத்தற்கென்று, கூடுங் கூட்டத்திற்கு சமுகங்கொடுக்க, மிஸ்றுதேசத்தின் முந்தின அரசர்களின் வமிசத்தார்களை யழைப்பித்து, அவர்க ளடங்கலையுங் கொலைபுரிந்தாரென்று கேள்விப்பட்டேன்; உண்மைதானோ?

கறுத்தமனிதன்:—தலைமைப்பாதிரியாரே! அது உண்மைதான்; இந்த ஜமீலா நாயகியின் புருடநாயகரும் அம் மோசச் சபைக்குச் சென்றவர்களுளொருவரே; அவருங் கொல்லப்பட்டார்; அங்கு சென்றவர்களி லொருவரேனுந் தப்பிப் பிழைத்து வந்ததாக நான் கேள்விப்படவில்லை; அச்சபையில் வந்திருந்தவர்கள் யாவரையும்,



முஹம்மது அலிபாஷா சங்காரஞ் செய்தபிறகு, தன் மகன் தூசூனுடன் வெளியில்வந்து, மேற்படி யரசவமிஷ அமீர்களின் குடும்பத்தாரனைவரையுஞ் சங்கரிக்கும்படி கட்டளையிட்டார்.

உடனே (எகிப்திய) மிஸ்றிய, அல்பானிய, (Moorish) மொறோக்க யுத்தவீரர்கள் தெருக்கள்தோறுந் திரிந்தும், வீடுவீடாக நுழைந்தும், ஆங்காங்கு காணப்பட்ட இராஜவமிசத்தார்களை அற்பமேனுமிரக்கமின்றி கொல்லவும், மானபங்கப்படுத்தவும், அவர்களின் பொருட்களைச் சூறையாடவும், பெண்டுகளைச் சிறை வாரவுந் தலைப்பட்டார்கள். நான் என்னெஜமானின் மாளிகைப்பணிவிடையாளர்களுளொருவனாயிருந்து, என்னெஜமானை மிகவும் நேசித்து வந்தேன். அச்சமயம் ஜமீலாநாயகி கருப்பவதியாயிருந்தார்கள். அவர்களுக்கு ஸலீம் என்னும் ஏழுவயதுடைய புத்திரரொருவருமிருந்தார். மேலே கூறிய முஹம்மது அலிபாஷா இராஜ வமிசத்தார்களைத் தேடிக்கொல்லும்படி கட்டளையிட்டிருப்பதை, ஜமீலாநாயகி யறிந்து, அத்துன்பத்தினின்றுந் தப்பிப்பிழைப்பதற்காக, இப்போதே நாம் இத்தேசத்தைவிட்டுப்புறப்பட்டுப் போகவேண்டுமென்று எனக்குக்கட்டளையிட்டார்கள். அவர்களின் கட்டளைப்பிரகாரம் இப்படிப்பட்ட சங்கடமான சமயத்திலல்லவோ, அடிமைகள் எஜமான்களுக்கு விசுவாசத்தையும், நன்றியறிதலையுங் காட்டவேண்டுமென்றெண்ணி, யெங்கள் மாளிகையிலுள்ள விலையேறப்பெற்ற ஆடையாபரணாதி முதலியவற்றுள், எங்களாற் சுமக்கக்கூடியமட்டுக் கெடுத்துக்கொண்டு, நானுமென்னெஜமானி ஜமீலாநாயகியும், அவர்களின் அருமைப்புத்திரர் ஸலீமும் இரவானவுடனே கடினவேகமுள்ள பஞ்சகல்யாணிக் குதிரைகளிலேறி, மிஸ்றுதேசத்தைவிட்டு வெகுவிரைவாகக் குதிரைகளையோட்டிக் கொண்டோடினோம். அன்றிரவுமுழுவதும் சென்று, விடியற்காலையில் ஒருதலத்திலிறங்கி, யெங்களினயர்ச்சி தீரும் வரையில் அங்கிருந்து இரவானவுடனே புறப்பட்டு வடகிழக்குத் திசையை நோக்கி, மறுநாள் காலைவரையில் குதிரைகளை நடத்திச் சென்றோம். இவ்விதமாக வெகுகஷ்டத்துடனே சிலகால் வரையில் நடந்து சென்று, கடைசியாக (Syria-சிரியா) ஷாமின் எல்லைச்சாரகத்தில் வந்து சேர்ந்தோம். வழியிலென்னெஜமானி யடைந்த கஷ்டத்தையும் வடித்த கண்ணீரையும் பற்றி, தாங்களென்னைக் கேட்காதிருக்க வேண்டுகிறேன். பின்பு அங்கிருந்து (gaza) கஜா என்னும் பட்டணம்வந்து,

அங்கே ஒருவீட்டிற்போய்த் தங்கினோம்; அங்குள்ளவர்கள் எங்களை "நீங்கள் யார்" எனவினவினார்கள். எங்கள்மேலே அவ்வூர்ச்சனங்களுக்குச்சந்தேகமுண்டாகாதிருக்கும்படி "நாங்கள் தூரதேசத்தார்கள்" என்றுவிடைகொடுத்தோம். அவ்வூரில் சிலமாதங்கள் தங்கியிருந்தோம். அப்போது, என்னெஜமானிஜமீலாநாயகிக்குப் பிரசவநோக்காடுண்டாகி, அழகியவோராண் குழந்தையைப் பெற்றார்கள். அக்குழந்தைக்கு கரீபு என்று பெயரிட்டோம். பேறுகாலந் தீர்ந்தபிறகு, என்னெஜமானி, தன்புருஷனை யிழந்ததினா லடைந்திருக்கும் பாரியதுயரத்தையாற்றுவதற்காக வசதியான வோர்தேசத்தைத்தெரிந்து அதிற்போய் குடியிருக்கவேண்டுமென்கிற கருத்துண்டாகி, நானுமென்னெஜமானியும் யோசித்ததில், கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சுகத்தையும், சந்தோஷத்தையுந் தரக்கூடிய தேசங்களில், லிபனோன் மலைநாடுமொன்றாக விருப்பதாலும், அந்நாட்டின் அமீர், குடிகள்பேரில் அதிகபக்ஷமும் இரக்கமுமுள்ளவரென்று கேள்விப்பட்டிருப்பதினாலும், மேற்படி மலைநாட்டிலேயே வசிப்பதாகத் தீர்மானித்தோம். ஆனால் அவ்விஷயத்தில் என்னைப்பார்க்கிலும் என்னெஜமானி அதிகப்பிரியமும் பிடிவாதமுமுள்ளவர்களாக விருந்தார்கள், அதின்காரணம் இன்னதென்று எனக்குப் புலப்படவில்லை. பின்பு, கஜாவை விட்டுப் பிரயாணமாகி, வடபுறமாகச்சென்று (jaffa) ஜாபாவுக்கு வந்து சிலநாள் தங்கியிருந்தோம். பிறகு, அங்கிருந்து புறப்பட்டு (Acre) இக்காவுக்குப் போய்ச்சேர்ந்தோம். அப்பட்டணத்தில், நாங்களடைந்த வருத்தமும், எங்களுக்குண்டான அபாயமும் முந்தி நாங்களடைந்த சஞ்சலத்திற்குக் குறைந்ததல்ல."

என்று சொல்லி நிறுத்தவும், தலைமைப்பாதிரியார் அதிக துக்கத்துடனும், கவனத்துடனும், செவிசாய்த்துக்கேட்கவாரம்பித்தார். அவர் அதிக இரக்கமுள்ளவரானதால், மேற்கூறிய வைகளைக் கேட்டு தன்னுணர்வின்றி, கண்களால் தாரைதாரையாக ஜலத்தை வடித்துக் கொண்டிருந்ததுடன், எஞ்சிய சமாச்சாரங்களைக் கேட்பதற்கு மிகவும் அபேட்சையுடையவராகவுமிருந்தார்.

கறுத்தமனிதன்:—தலைமைப் பாதிரியாரே! சஞ்சலக்கடலில் ஆழ்ந்து கிடக்கும் என்னெஜமானி, ஜமீலாநாயகியின் விஷயத்தைப் பற்றிக் கொஞ்சஞ் சொல்லுகிறேன், கேட்பீராக. நாங்கள், இக்கா



என்னும் பட்டணம் வந்துசேர்ந்த சிலவாரங்களுக்குப்பின் என்னெஜமானியின் மூத்தகுமாரர் ஸலீமையும் பிரிக்கநேரிட்டது.

தலைமைப்பாதிரி:—அதென்ன சம்பவம்? என்மனம் பதறுகிறது.

கறுத்தமனிதன்:—பாதிரியாரே! இக்கா பட்டணத்தின் கடற்கரைக்குச்சமீபத்தில் தனித்த வொருவீட்டை வாடகைக்குப்பிடித்து, அவ்வீட்டில் குடியிருந்து வந்தோம். அப்படித்தனித்திருந்ததற்குக் காரணம், ஆரோக்கியத்தை நாடியும், எங்களிரகசியத்தை ஒருவருமறியா திருக்கவுமே யல்லாது வேறில்லை; நாங்க ளப்பட்டணத்தில் வசித்துவரும்போது, லிபனோன் மலைநாட்டிற்குப்போகிறபாதைகளில் நெருக்கமானதும், ஒழுங்கானதுமான பாதையைவிசாரித்தவர்களாகவே யிருந்தோம். என் னெஜமானியின் மூத்தகுமாரர் ஸலீம் என்பவர், தன் தகப்பனாரின் வடிவுக் கொப்பானவராக விருந்தமையால் அவரை யென்னெஜமானி மிகக்கிருபையுடன் வளர்த்துவந்தார்கள். அவரெதை விரும்பிக்கேட்பினுந் தடைசொல்ல மாட்டார்கள். அப்படியிருந்து வருங்காலத்தி லொருநாள், அவ்வூரிற் சில சிறுவர்கள் காற்றாடுவதற்காக சிறு படகொன்றிலேறி, கடலிற்போய் விளையாடிவிட்டு வருவதை ஸலீம் கண்டு தன் தாயாரிடத்தில் வந்து, தானுமவ்வாறு படகேறிப்போய் விளையாடிவர வுத்தரவு கேட்டார்; என்னெஜமானி, சமுத்திரத்தி னச்சத்தால் வேண்டாமெனத் தடுத்தார்கள்.

ஸலீம் தாயாரின் சொல்லைக்கேளாமல் பெரும் பிடிவாதம் பண்ணினார். அதினாலென்னெஜமானி "நல்ல"தென்று சம்மதித்து, அவருடன் என்னையுந் துணையாகப் போய்வரும்படி கட்டளையிட்டார்கள். நாங்கள்படகிலேறி சமுத்திரத்திற் சிறிதூரம்போனோம். படகோடிச் செல்வதைப்பார்த்து, ஸலீம் நிரம்ப சந்தோஷமடைந்திருந்தார். பிறகு துறைமுகத்துக்கு வந்துசேர்ந்தோம். படகோட்டி படகை வலித்துச்செல்வதை ஸலீம், மிகக் கவனமாகப்பார்த்துக்கொண்டிருந்தார். அதைப்பற்றி யோசிக்குமிடத்து படகோட்டும் வித்தையை அவருங் கற்றுக்கொள்ள ஆவலுற்றதாக விளங்கிற்று. பிள்ளையின் வருகையை வழிபார்த்திருந்த தாயார், ஸலீம் யாதொரு குறையுமின்றிக் கரையேறி, வீட்டுவாசலையடுக்கவரவே, அவரைத்தன்னெஞ்சோடணைத்துப் பலமுறை முத்தமிட்டு வீட்டினுள் அழைத்துச் சென்றார்கள். அப்படகை யெங்கள் வீட்டிற்கெதிர்த்த துறையில் வழக்கம்போல் கட்டி-

வைத்தோம். சிலநாளைக்குப்பின்பு, ஒருநாள் ஸலீம், வழக்கப்பிரகாரம் விளையாடுவதற்கு வெளியே புறப்பட்டார். அச்சமயம் எங்கள் வீட்டில் விருந்தாளிகளும் வந்திருந்தமையால், அவர்களுக் குபசரணை செய்வதில் இரண்டுமணிநேரம்வரைக்காக இருந்துவிட்டோம். கொஞ்ச நேரத்தின் பின்னர், என்னெஜமானி ஜமீலாநாயகிக்கு தம் புத்திரனுடைய ஞாபகம் வந்தது. "ஸலீமெங்கே?" யென் றென்னைக் கேட்டார்கள். "வீட்டுவாசலில் விளையாடப்போனு" ரென்று நான் சொல்லிவிட்டு, வெளியிற்போய்த் தேடிப்பார்த்தேன். ஸலீம் அகப்படவில்லை. என்னெஜமானி ஸலீம்! ஸலீம்! என்று சப்தமிட்டழைத்தும் மறுமொழி கிடைக்காமையா லதிக பதறுதலுடன்,

"ஆ! கடவுளே! என்னைப்பிடித்தகஷ்டகாலம் இன்னும் என்னை விட்டு நீங்கவில்லையா?. என்னருமைக் குழந்தை ஸலீமைக்காணேனே. எங்குசென்றனோ? என்னவானானோ?" எனப் பலவாறு புலம்பிப் பதறிப் பதறி யழுதார்கள். நான் தெருக்கள்தோறும் ஓடித்திரிந்து ஸலீம்! ஸலீம்! என்று சப்தமிட்டழைத்தேன். நான்போட்ட சப்தங்கள் எனக்கேயொழிய பிரயோசனத்தையுந் தரவில்லை. அப்புறம் மிகவிரைவாகப் படகுத்துறைக்கோடிவந்து பார்த்தேன். வழமையாகக்கட்டப் பட்டிருக்கும் படகு இல்லாதிருந்தது. ஒருக்கால் ஸலீம் படகோட்டிப்பார்க்கப் பிரியமுற்று, இங்குவந்து படகேறிச் சென்றதில் படகு அலைவாரிப்பட்டு தூரத்திற்போயிருக்கவுங் கூடுமென்று நினைத்து வீட்டிற்குவந்து, என்னெஜமானியைப் பார்த்தேன். ஸலீமென்ற சப்தம் அவர்கள்வாயை விட்டு நீங்காது அலறியழுதவர்களாகவும், முகத்தில் அறைந்துகொண்டும், தலைமயிரைப்பிய்த்துக்கொண்டும் பெருஞ்சப்தமிட்டவர்களாகவுமிருந்தார்கள். அடிக்கடி பூமியில் விழுந்து புரண்டுபுரண்டழுது "என்னருமந்தச்செல்வமே! உன் தந்தையையிழந்த சஞ்சலத்தையுன்னைக்கொண்டு தணித்துவந்தேனே. அதையுங் கெடுத்த மாறாக் கவலையை மேலுமேலும் எனக்குச் செய்துவிட்டாயே" எனவேரலமிட்டு சஞ்சலமிகைப்பால் மூர்ச்சையானார்கள். அவர்களின் மூர்ச்சை தெளியும்படிக்கான பரிகாரங்களைச்செய்தேன். அதினலவர்களுக்குச் சற்று தெளிவுண்டாயிற்று. பின்னரும் ஸலீம்! ஸலீம்! என்று சப்தமிட்டழுதார்கள். மறுபடியுமவர்களுக்கு மூர்ச்சை யுண்டாகப் போகிறதென்று பயந்து, என்னலானமட்டில் தேறுதல் கூறி, "என் னெஜமானியே! தாங்க ளொன்றிற்கும் யோ



சிக்கவேண்டாம்; ஸலீம் கூடிய சீக்கிரத்தில் வந்துசேருவார். இதோ, நானும்போய்த்தேடிப் பார்த்து கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்றுசொல்லிவிட்டு, துணையாக வொருமனிதனையுங் கூட்டிக் கொண்டு, நான்குநாள் வரையில் அப்பட்டண முழுதிலுந் தேடித்திரிந்தேன். ஸலீம் அகப்படவில்லை. அதைப்பற்றி கவர்ன்மெண்டா ரிடத்தி லறிக்கையிட வேண்டு மென்று நினைத்து, ஜமீலா நாயகி யிடத்தில் வந்து உத்தரவு கேட்டேன். அதற்கவர்கள் "அதைப் பற்றி நாமறிவிக்கப் புகுந்தால் நம்முடைய அந்தரங்கம் வெளியாகி விடும்; அதினல் நமக் கின்னமுங் கேடான கஷ்டங்க ளுண்டாகப் போகும்" என்று அச்சப்பட்டார்கள். அறிக்கை செய்யாது விட்டுவிட்டோம். பின்பு அருமையான ஸலீமையிழக்கப்பெற்ற இக்காவென்னு மூரில் இனிமேலுங் குடியிருப்பது கூடாதென்று நிர்மானித்து, அவ்வூரை விட்டுப் பிரயாணமானோம்.

என்னெஜமானியவர்கள் தன்னுயிர் துணைவரை மிஸ்றுதேசத்திலிழக்கப்பெற்றதினுலுண்டான சலிப்பை ஒருவாறாற்றிவந்த செல்வச்சேய், ஸலீமையும் இழக்க நேர்ந்ததை நினைத்துநினைத்து, வழியில் என்னெஜமானி ஜமீலாநாயகி, இரவு பக லிடைவிடாது, ஸலீம்! என்றழுதுகொண்டே நடந்தார்கள். நான் அவர்களுக்கு எவ்வளவுதேறுதற் சொல்லியும் பயன் தரவில்லை. அதினுலென் விழிகளினின்றுஞ் சொரியுங் கண்ணீரையும் என்னு லடக்கக்கூடவில்லை. கைக்குழந்தையாகிய கரீபு தாயாரின் வியசனப்பாலை யுண்டு வந்தமையால் அக்குழந்தைக்கும் சுகக்குறை வுண்டாயிற்று"

என்றுசொல்லி, அடிமையாகிய கறுத்தமனிதன் கண்ணீரைச் சொரிந்தனன். தலைமைப்பாதிரியும் தாரைதாரையாகக் கண்ணீரைச் சொரிந்தனர். அதன்பின்னர்,

கறுத்தமனிதன்:—சங்கை பொருந்திய தலைமைப் பாதிரியாரே, சுருக்கமாகச் சொல்லுகிறேன்: மேலே நான் கூறியவாறு நாங்கள் வடதிசையைநோக்கி நடந்து, கடைசியாக (Saida) சைதா என்னும் பட்டணம் வந்துசேர்ந்தோம்; அவ்வூரிற் சிலநேரந்தங்கிக் களையாற்றிக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு ஒவ்வோரூராகக்கடந்து நடந்தோம். எங்களுடைய கருத்தெல்லாந்தனித்த வோரிடத்தை வாசஸ்தானமாக்கிக் கொள்ளவேண்டுமென்பதேயன்றி வேறன்று. யாதொ

பழித்த சிலரிடம் விசாரித்தோம். இவ்வழியாக நடந்தா லிந்த மடத்துக்கு வந்து சேரலாமென்று விடை கொடுத்தார்கள். அப்பொழுது வழிகாட்டி யொருவனை யெங்களுடன் கூட்டிக்கொண்டு, நேற்று காலையில் இம்மடத்தை நோக்கிப் பிரயாணமானோம். நேற்று பகற்காலத்திலேயே இம்மடத்துக்கு வந்து சேர்ந்துவிடலா மென்றெண்ணியிருந்தோம். எங்களெண்ணப்படிக்கு வரச் சுணங்கியதால் வழிகாட்டியிட மின்னமெவ்வளவு தூரமிருக்கலா மென்று கேட்டோம். அதற்கவன் அனேகமாகப் பாதையைக் கடந்துவிட்டோம். இன்னும் கல்லெழுத்தூரந்தா னிருக்கிறதென்று சொன்னான். எங்களுக்கோ அயர்ச்சி யதிகரித்திருந்தபடியினாலும், மழையினா லெங்களுடைகள் நனைந்து குளிர் கடினமாக விருந்தபடியினாலும், மெத்த கஷ்டமடைய நேரிட்டது. வாகனங்களிலேறிச் செல்லலாமென்றாலோ, பாதை மெத்தவுளையாயிருந்ததினால் அதற்குந் தோதில்லாமற் போய்விட்டது. இந்தப்படிக்குக் கஷ்டப்பட்டுக்கொண்டு நடந்து வருகிறபோது, பொழுதடைந்திரவாயிற்று. கொஞ்சநேர மோரிடத்தில் தங்கினோம். அப்போது "இவ்விடத்திற்குச் சமீபத்தி லேதேனுமூருண்டோ?" வென்று வழிகாட்டியைக் கேட்டோம். அவன், "சமீபத்திலோர் பட்டணமிருக்கிறது. அப்பட்டணத்தின் பெயர் மைத்துநீன் என்று சொல்லப்படுகிறது. வியனா மகாகாட்டத்திபதியாகிய அமீர்பஷீர் அவ்வூரிற்றான் வாசஞ்செய்கிறார். அந்நாட்டின் முன்றிலில், பாதிரிகளின் மடமிருக்கிறது. ஆகையால் இம்மடத்தை நோக்கிச்செல்லுங்கள்" என்று சொல்லிவிட்டு, எங்களிடத்தி லிருந்த ஈவுபெற்றுக்கொண்டு போய்விட்டான். அங்கிருந்தெழுந்து நாங்கள் நடந்து வரும்வழியில், மழையினாலும், உளையினாலும் மெத்த அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறதைப் பார்த்து மெவரும் பரிகாலத்திலிவ்வழி வரலாமோ?" வென்றெங்களைக் குறைகூறினார்கள். "இப்படி யாரும் நடந்துதீரவேண்டு" மென்று விடை கொடுத்தோம்.

முன்னா லெங்களோடு வந்தவழிகாட்டி யெங்களை விட்டுப் பிரிந்தபிறகு, கறுத்த கம்பளி யுடுத்த வேறொருவரைக் கண்டோம். எங்கள் பார்வைக்கவர் சாமானிய ரல்லவென்று தெரிந்தது. அம்மனிதர் நாங்கள் போகுமிடத்தைப்பற்றி மிகத் தாற்பரியமாகக் கேட்டார். "இந்த மடத்திற்கு நேர்ச்சை கொடுக்கப்போகிறோ" மென்று மறுமொழி கொடுத்தோம். "நீங்கள் பரதேசவாசிகளாகத் தோற்றப்படுகிறபடியினாலே நானு முங்களுடன் துணையாக அம் மடத்துக்குச்செல்ல விரும்புவீர்களோ?" வென்று அவர் கேட்டார். "தங்களுக்கு மிக நன்றி யறிதலுந் துதியுஞ் செலுத்துகிறோ" மென்றோம். அவருட னிம்மடத்தின் வாசற்படி வரையில் வந்தோம். அவர் "நீங்கள் நாடி வந்த மட மிதுதான், கதவைத் தட்டுங்கள், திறக்கப்படு" மென்று சொல்லி யெங்களிடம் விடை கேட்டார். அவ ரெங்களுக்குச் செய்த பேருதவிக்காக நாங்க ளவருக்குத் துதி செலுத்தினோம். அவர் போய்விட்டார். பின்பு நாங்களுள் கதவைத்தட்டினோம். உங்களி லொருவர் வந்து கதவைத் திறந்தார். அதின் பிறகு நடந்தவைகளெல்லாம் நீங்க ளறிந்தவைகளே.



இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த தலைமைப்பாதிரி மனங் கலங்கினவராக, "துணைவராகவந்தவர் அமீர்பஷீர், அல்லது அவரினுளவரல்லாதிருக்கக்கடவ" தென்று தன்னுக்குள்ளே கடவுளை வேண்டிக்கொண்டார். ஆனால் அடிமையாகிய ஸயீது சொல்லிக்கொண்டு வந்த விஷயங்கள் தலைமைப்பாதிரிக்குப் பெருங்கவலையைக் கொடுத்தன. அதினால் அமீர்பஷீரினச்சம் ஒருவாறு மறந்திருந்தது. பிறகு, தலைமைப்பாதிரி ஸயீதைப்பார்த்து, "என்னருமை மகனே! சந்தோஷமாகவிரும். யாதொன்றிற்குமஞ்சாதீர். நீர் சொல்லிவந்தவிஷயங்களை யிரகசியத்தின் தலமாகிய என்னிருதயப் பொக்கிஷத்தி லடக்கிக்கொண்டேன். சர்வவல்லபக்கடவுள், இப்பெண்கள் நாயகிக்கு அழகான பொருமையை நன்கொடை கொடுத்தருள, அவரைநான் பிரார்த்திக்கின்றேன். நீங்களெங்களிடத்திலேயேயிருக்கநாடுவீர்களாகில் எங்களுக்கு மெத்த சந்தோஷம். நீங்கள் சுகமாகவும், உல்லாசமாகவுங் காலங்கழிப்பீர்கள். அப்படிக்குப் பிரியமில்லாவிடின் உங்களிஷ்டப்படிக்குச் செய்துவைக்கச் சித்தமாகவிருக்கிறேன், நீங்கள் கிறிஸ்துமதத்த ரல்லாதிருப்பினுஞ் சரியே. கிறிஸ்து மதஸ்தர்களென்றும், இஸ்லாமார்க்கத்தாரென்று மெங்களிடத்தில் வேற்றுமையில்லை. ஏனெனிலோ நாம் ஒரேகடவுளை வணங்குகின்றோம். அல்லாமலும் இத்தேசங்களை யாட்சிபுரிந்துவரும், எங்கள்நாயகம் ஸ்தம்பூல் சுல்தான் அவர்களனுசரித்து வருவதும் இஸ்லாம் மார்க்கமாகவேயிருக்கிறது" என்றுசொன்னார்.

## 4-வது அத்தியாயம்.

## அமீர்பஷீர்.

தலைமைப்பாதிரியார், ஸயீதுடன் பேசித் தீர்ந்தபிறகு, ஜமீலா
நாயகியின் க்ஷேமத்தைப்பற்றி அவனிடத்தில்கேட்டார். அதற்கவன்
"என்னெஜமானி சாப்பிட்டதின்பிறகு படுக்கைக்குப்போனவர்கள்
அங்குதானிருக்கிறார்கள். அறையின்கதவு அடைக்கப்பட்டிருக்கிற"
தென்றான். "அப்படியானால் நாமிருவரும் ஜமீலா நாயகிக்குத்தேறுத
லுண் டாகும்படிக்கான உபதேசங்களைச் சொல்லுவோ" மென்று
இருவருமாக ஜமீலாநாயகி படுத்திருக்கும் அறைக்கு வந்தார்கள்.
அறையின்கதவுட்களுக்குப் போடப்பட்டிருந்தது. இலேசான சில
வசனங்கள் காதிற்கேட்டன. அதென்னவென்று காதுதாழ்த்திக்
கேட்டுக்கொண்டிருந்தார்கள். அது ஜமீலாநாயகியின் புலம்பமாகவே
யிருந்தது. அதாவது, "நானிப்போதெங்கிருக்கிறேன். என்னுயிர்த்
துணைவராகிய புருடநாயக ரெங்கிருக்கிறார். அவரின் பணிவிடையா
ளர்க ளெங்கிருக்கிறார்கள். அவரின் பரிவாரங்க ளெங்கிருக்கின்றன.
என்னருமந்தப் புதல்வனாகிய ஸலீமே! என்கண்ணே! கண்ணின்மணி
யே! இருதயக்கொழுந்தே! சரற்குலையே! நீயெங்குசென்றனை? எவ்வா
றாயினை? சமுத்திரத்தின்மச்சங்களுக்கிரையாகி விட்டையோ? தந்தை
யிழந்த துயர் தலைப்பிள்ளையா லாறுமென்ப துலக வழக்கமாயிற்றே.
என்னருமைப்புதல்வா! விதிகெட்ட உன் அன்னையை அக்கினிக்கிடங்
கில் குப்புறவிழுந்து புரளும்படிக் காக்கிவிட்டையே.

நீயிருக்க நான்போக நீதியுண்டும் பெற்றெடுத்த
தாயிருக்க நீபோகத் தானுண்டோ ஞாயமென்னிற்.
காயிருக்கப் பிஞ்சுகிரக் கண்டிருந்துமேபேச
வாயிருக்குதோ வோர் வலதிருக்குதோமகனே.

செங்கனிபோல் வாயழகும் சேர்ந்தமணிப் பல்லழகும்
கண்களழகும் கமலமலர்க் கையழகும்
பெண்கள் மயங்கித்தொடரும் பின்னழகும் முன்னழகும்
என்கண்குளிர முன்போ லின்னமுநான் காண்பதென்றே.

என்று முன்னோர் கூறியுமிருக்கின்றார்களே. நான்உனக்குமுன்னிறந்
திருந்தால் இத்தனை துன்பத்தையுந் துயரத்தையு மனுபவிக்கமாட்டே



னே. ஆ! என்கடவுளே!! இப்படிப்பட்ட கஷ்டத்தைவிட்டு நான் தப்
புவதற்கு வழியொன்று மறிகிலேனே; என் அந்தரங்கத்தை அமீர்
பஷீருக்கு அறிவிக்கலாமோ? அப்படிக் கறிவித்தால் அவர் என்பே
ரில் குரோதங்கொண்டு என்னைத் தண்டிப்பாரோ? அல்லது நானிரு
க்குங் கேவலஸ்திதியைப்பார்த்து என்மேல் மனமிரங்கி மன்னிப்பா
ரோ? யாதோ? அறிகிலேனே" எனப்பலவாறு பிரலாபித்து, பின்ன
ரும் "ஆ! என்னெளியநெஞ்சே!! நீயேன் வீணிற்புலம்புகின்றாய்? விசு
வாசமுள்ள உன்னடிமையளவில் உன் பாரத்தைச் சுமத்தி, உன் கரு
மங்களை சர்வஜீவரக்ஷகக் கடவுளிடத்திற் பாரஞ்சாட்டுவாயாக. அவர்
நன்மையான பாதையில் உனக்கு வழிகாட்டுவார்" என்று பலவித
மாக ஜமீலாநாயகி புலம்புவதைப்பாதிரியாரும், ஸயீதும் கேட்டு மிக
வும் பரிதபித்தார்கள். பின்பு ஸயீது கதவைத்தட்டினான்; ஜமீலாநாயகி
வாய் மூடிவிட்டார்கள். அப்போது ஸயீது உரத்த சப்தத்துடன்
"என் நாயகியே! தாங்கள் ஒன்றிற்கும் பயப்படவேண்டாம். தங்க
ளுடைய அடிமை ஸயீது, இதோ வந்திருக்கிறு" னென்றான். கதவு
திறக்கப்பட்டது. ஸயீது உள்ளே நுழைந்தான்; ஜமீலா நாயகி தலை
விரிகோலமாக விருந்தார்கள். அவர்கள் ஸயீதைக்கண்டவுடனே
மறுபடியும் பலவாறு புலம்பியழுது பூமியில் விழ்ந்தார்கள். அவர்
களின் அழுகையையும் புலம்பத்தையும் ஸயீதுபார்த்து, அவர்களுக்கு
ஒருக்கால் மூர்ச்சை யுண்டாகப்போகிற தென்றுபயந்து, கிட்டநெரு
ங்கி அவர்களை யெழுந்திருக்கச்செய்து பலவிதத்தேறுதற்கூறி "என்
னெஜமானியே! இதோ, தங்களுடன் சம்பாஷிக்கிறதற்காக, தலை
மைப்பாதிரியார் முன்வாசலில் வந்து நிற்கிறார். தங்களி னுத்தரவை
யெதிர்பார்க்கிறு" ரென்றான். ஜமீலா நாயகி, பாதிரியாரை யுள்ளே
அழைத்துவரக் கட்டளையிட்டார்கள். பாதிரியார் உள்ளே நுழைந்து
ஜமீலா நாயகியின் ரூபலாவண்யத்தைப் பார்த்துப் புதுமையும், துக்க
நிலைமையைப் பார்த்து சகிக்கக்கூடாத துயரமுங் கொண்டு தாரை
தாரையாகக்கண்ணீரைச்சொரிந்தார். அதன்பின் தன் மனதைச்சற்று
திடப்படுத்திக்கொண்டு ஜமீலா நாயகி யைப்பார்த்து, "என்னருமை
மகளே! சஞ்சலப்படவேண்டாம். சஞ்சலம் திரேகத்தைக் கெடுத்து
விடுமல்லவா? தங்களின்காரியத்தைக் கடவுளிடத்தில் பாரஞ்சாட்டுவீர்
களாக; தங்களின் அழகிய தேகத்தின்மேலும், அருமந்தச்சேய் களீபு
மேலும் உருக்கம் வையுங்கள். இதோ, நம்மெதிரில்நிற்கிற தங்களின்

விசுவாசக்காரனாகிய ஸயீது, தங்களின் விருத்தாந்தங்களை ஆதியோடந்தமாய் விஸ்தரித்திருக்கிறான். அவ்விரகசியங்களை ஒருவரிடத்துஞ் சொல்லுகிறதில்லையென்று உறுதிவாக்களித்து மிருக்கிறேன்.

“தங்களின் சபிப்பில் நானும் கூட்டானவனே, தாங்கள், மனக் கிலேசம் நீங்கி, சந்தோஷம்பெற என்னுயிருள்ளவரையில், கடவுளை வேண்டுகிறேன். இதுமுதல் என்னை தங்களின் பிதாவாக அல்லது சகோதரனாகப் பாவிப்பீர்களாக. தங்களின் பாரத்தை யென்மேல் சுமத்துங்கள்.” என்று தலைமைப்பாதிரியார் பலவிதமாகப் பேசி, ஜமீலாநாயகியின் மனதைக்கொஞ்சந்தேற்றினார். ஜமீலா நாயகி கண்ணீரைத்துடைத்தார்கள். தலைமைப்பாதிரியார் அன்றுதான் ஜமீலா நாயகியின் அழகைச்சரிவரக்கண்டார். அத்தனை அழகுள்ள பெண்ணை ஒருக்காலும் அவர்பார்த்ததில்லையாதலால் அவ்வடிவத்தைச் சிருஷ்டித்த கடவுளை மிகமிகப்புகழ்ந்தார். பெண்களுக்குரிய சகலலக்ஷணங்களும் ஜமீலாநாயகியில் அமைந்திருந்தன. பார்ப்போரஞ்சத்தக்க இராஜ வடிவும், சற்குணமும், கூர்ந்த புத்தியு முடையவர்களாய்க் காணப்பட்டார்கள்.

பின்பு பாதிரியார், ஜமீலா நாயகியைப்பார்த்து, “என்னருமை மகளே! உங்களின் அந்தரங்கங்களை நான்திட்டமாக அறிந்துகொண்டேன். அவற்றை மற்றபாதிரிகள் அறியமாட்டார்கள். அவர்கள் வழக்கப்பிரகாரம் அவரவரின் வேலையளவிற் போயிருக்கிறார்கள். திரும்பிவந்து, நீங்களிவ்விடம் வந்ததின் காரணமென்னவென்று கேட்பார்கள். அப்போது நாமென்ன மறுமொழி கொடுக்கிறது? சொல்லுங்க”ளென்றுகேட்டார். அதற்கு “நேர்ச்சைக்கடன்கழிப்பதற்காக, சைதாபட்டணத்திலிருந்து இங்கே வந்ததாகச்சொல்வோ”மென்று ஸயீது சொன்னான். இவ்விதம் சம்பாஷித்துக் கொண்டிருக்குஞ் சமயத்தில், யாரோ வாசலில் கூப்பிடுகிற சப்தங்கேட்டது. தலைமைப்பாதிரியார் வெளியில்வந்து யாரென்று பார்த்தார். அமீர் பஷீராலனுப்பப்பட்ட தூதனென்றுதெரிந்து கலங்கிப்பதறி “எங்கு வந்தீ?” ரென்று கேட்டார். “அமீர்பஷீர், தங்களை அவர்களினிராஜ மாளிகைக்கு அழைத்துவரக்கட்டளையிட்டார்க”ளென்றான். அதைக் கேட்டபாதிரியாருக்குமேலுமேலும் அதிகபயங்கரமுண்டாயிற்று. ஆனாலும் “நாம் யாதொருகுற்றமுஞ் செய்ததில்லை. ஏன் நாம் பயப்



படவேண்டு”மென்று ஒருவாறு தன்மனதைத் திடப்படுத்திக்கொண்டு, தனதறைக்குள் நுழைந்து உடையணிந்து, அழைத்துவந்த மனிதனுடன்சேர்ந்து, அரண்மனையைநோக்கிநடந்தார். அரண்மனை முதல்வாசற்படியில் நின்றுகொண்டே இராஜசபையைப் பார்த்தார். அச்சபையில் சகலவுத்தியோகஸ்தர்களும் கிரமப்படிக்கு அவரவரின் ஆசனத்தில் தலை குனிந்தவர்களாக பயபக்தியுடனுட்கார்ந்திருந்தார்கள். அதைக்கண்ட பாதிரியாருக்கு பயங்கரம் அதிகப்பட்டது. (அமீர்பஷீருடன் சம்பாஷிக்க நாடுமெவரும், அவர்சமுகத்திற் பயமின்றிப்பேசவும், அவர்முகத்தை யேரிட்டுப்பார்க்கவும் சக்திபெற மாட்டார்களென்று முன்னருங் கூறியிருக்கிறோம்) தலைமைப்பாதிரியார் இக்லீருஸ் என்னும் பாதிரி கூட்டத்துக்குத் தலைவராகவும், பெருந்தகைமை யுள்ளவராகவு மிருப்பதால், தமக்குக்கிஞ்சிற்று மரியாதைகிடைக்குமென்னும்எண்ணமுடையவராக, தமது பாதரக்ஷையைவெளிவாசலிற்கழற்றிவைத்துவிட்டுஉள்ளேசென்று, இராஜவுடைதரித்து வெகுகெம்பீரமாக சிம்மாசனத்திலுட்கார்ந்திருக்கும் அமீர் பஷீரின் முன்னால்வந்துநின்று வணக்கத்துடன் வந்தனங்கூறி, “அமீர் நாயகமே! சர்வவல்லமையுள்ள கடவுள், தங்களை ஆசீர்வதிப்பாராக; வெற்றி மாராயத்துடனும், மனமகிழ்ச்சியுடனும், புத்திரபவுத்திரசம்பத்துடனும் நீடூழிவாழக்கடவீர்களாக”வென்று ஆசிகூறினார். அமீர் பஷீர் பிரதிவந்தனமளித்து தலைமைப்பாதிரியாரை ஒரு ஆசனத்திலிருக்கும்படிக்கு உத்தரவு கொடுத்தார். பாதிரியாருக்குப் புகைச் சுருட்டும், காப்பித்தண்ணீருங் கொடுக்கப்பட்டன. தன்னைக் கூப்பிடப்பட்ட காரணமின்னதென்று அவருக்குப்புலப்படாமற் கலக்கமுற்றிருந்தபடியால், அமீர்பஷீரால் செய்யப்பட்ட மரியாதை அவரை சந்தோஷப்படுத்தவில்லை.

அவ்வாறிருக்கும்போது அமீர்பஷீர் அக்கினிபோன்ற பிரகாசமுள்ள தன்பருத்தவிழிகளால் பாதிரியைக்கூர்க்கப்பார்த்து, அவர் கலங்கும்படியாகத் தன்தலையையசைத்து புன்னகைசெய்து, உரத்த சப்தத்துடன், “ஏஹே! தலைமைப்பாதிரியாரே!! நேற்றிரவு சிலவழிப்போக்கர்கள் உம்முடைய மடத்தில்வந்து தங்கியிருக்கிறதாக எனக்குத்தெரியவந்திருக்கிறது. அவர்கள்யார்? விஸ்தரிப்பீராக”வென்று கேட்டார்.

தலைமைப்பாதிரி:—மேன்மைபொருந்திய அமீர்நாயகமே! நானிருக்கும் மடத்துக்கு நேர்ந்த கடனிறுப்பதற்காக சைதா பட்டணத்திலிருந்து வந்தவர்கள்.

அமீர்பஷீர்:—நீங்கள் அந்தரங்கவிஷயங்களையறிந்தும், அறியாதவர்களைப்போல பாவிப்பவர்களென் றெண்ணுகிறேன். அமீர்பஷீரையேமாற்றி விடலாமென்று நினைக்கிறீர்களோ?

(அமீர்பஷீரின் கடுகடுத்த வார்த்தைகளைக் கேட்டுப் பயந்து எழுந்து நின்று வணக்கத்துடன்,)

தலைமைப்பாதிரி:என்னெஜமானாகிய அமீரே! மன்னிக்கவேண்டுகிறேன். உண்மையாக நாங்கள் உள்ளும்புறமும் ஒரேவிதமாக தங்களுக்கு வழிப்பட்டவர்கள். தாங்கள் சொன்ன, (அமீர்பஷீரையேமாற்றி விடலாமென்று நினைக்கிறீர்களோ?) என்ற வசனம் எங்களில் எக்காலத்திலுஞ் சம்பவித்ததில்லையென்பதைத் தாங்கள் அறிந்தேயிருக்கிறீர்கள். எங்கள்மடத்திற்கு வந்தவர்களில் இவர்கள் முந்தினவர்களுமல்லர். எங்கள் மடம் மிகப்பிரபலமாக விருப்பதால், பலகோணத்திலிருந்தும் சனங்கள்வந்து, அவரவரின் வேண்டுதலை நிறைவேற்றிப்போகிறது வழமையாகவே யிருக்கிறது.

அமீர்பஷீர்:—பாதிரியாரே! உட்காரும்; அவர்களெந்தமதஸ்தர்கள்?

தலைமைப்பாதிரி:—நாயகமே! எவ்வருணத்தாரா யிருப்பினுஞ் சரியே, எங்கள்மடத்தில் சாதிபேதம், சமயபேதம் பாராட்டாமல் யாவருடைய நேர்ச்சையும் ஒப்புக்கொள்ளப்படும்.

அமீர்பஷீர்:—(சிரித்துக் கொண்டு) நல்லது, அவர்களை யிங்கழைத்துவாரும்.

தலைமைப்பாதிரி:—அதுபோ லழைத்துவருகிறேன்.

என்று கூறிவெளியிற்புறப்பட்டு அமீரின் கோபம், ஜமீலாநாயகிமேலே எங்கேயுண்டாகப்போகிறதோ, என்று பயந்தவராக மடத்தைநோக்கி நடந்தார். மடத்திலிருந்த ஜமீலா நாயகியும், அடிமையாகிய ஸயீதும், அமீரிடத்துக்குச்சென்ற தலைமைப்பாதிரியார், அதுவரையில் திரும்பிவராதிருந்தமையால் கலக்கமுற்றவர்களாக, அவரின்வரவை யெதிர்பார்த்திருந்தார்கள். தலைமைப்பாதிரியார் மடத்திற்கு வந்துசேர்ந்து, தன்னை யெதிர்பார்த்திருந்த இருவருக்கும்



அமீர்பஷீரின் சமுகத்தில் நடந்தவைகளை விஸ்தரித்து, அவ்விருவரின் மனங்களைத்தேற்றினர். பின்பு ஜமீலா நாயகியைப் பார்த்து, "என்னருமைமகளே! எழுந்திருந்து தங்களிடமிருக்கும் உடைகளில் அழகான வுடையை யணிந்துகொண்டு; ஸயீதுடன் என்னைப் பின்தொடர்ந்துவாருங்கள். நாம் மூவரும் அமீர்பஷீரின் கொலுக்கூடத்திற்குப் போவோம். அதனால் நமக்கு நன்மை யுண்டாகப் போது"மென்றார்.

ஜமீலாநாயகி:—என்னருமைக் குழந்தை கரீமை என்ன செய்கிறது?

தலைமைப்பாதிரி:—இங்கொரு பாதிரியிடத்து குழந்தையை ஒப்பித்து, நாம் திரும்பி வரும்வரையில் வெகுபத்திரமாக அப்பாலனைப் பார்த்து வரும்படிக்குச் செய்துவிட்டு போவோம்.

ஜமீலாநாயகி:—ஒப்பேன், ஒப்பேன், ஒருக்காலும் ஒப்பேன்; என்னுயிர் பிரியும்வரைக்கும், என்னருமந்தக்குழந்தையை விட்டுப் பிரியேன்; எனக்குத்துணையும் ஆதரவு மக்குழந்தையே; இதற்குமுன்னர், நான் இழக்கக்கொடுத்தது போதும் போதும்.

தலைமைப்பாதிரி:—குழந்தையைக்கூடவேகொண்டுபோகலாம்.

உடனே, ஜமீலாநாயகி தன்னிடத்துள்ள வுடைகளில் தூயவெள்ளுடையுடுத்து, தலைவார்ந்து முடியைப்பின்னி முதுகில்தொங்கவிட்டு, மெல்லிய ரவைச்சல்லாவால் முகமூடியிட்டார்கள். அப்போதுதான் அவர்களின்சுயவடிவும் இராஜவமிசத்தினடையாளமுந்தோற்றிற்று.

---

### 5-வது, அத்தியாயம்.

## பைத்துத்தீன்.

---

தலைமைப்பாதிரியும், ஜமீலாநாயகியும், ஸயீதும், குழந்தையுடன் ராஜமாளிகைக்குப் போவதற்காக நடந்துசென்று கோட்டைவாசலையடுத்து, உள்ளேநுழைந்தார்கள். அங்கே வரிசைவரிசையாக வைக்கப்பட்ட பலவிருக்ஷங்களடர்ந்தசோலையாகவிருந்தது. பின்பு,அரண்மனைமுதல்வாசற்படிக்குவந்து, ஒவ்வொருவாசற்படிகளையுந்தாண்டி, கொலுக்கூடத்தின் முன்வாசலுக்குவந்தார்கள். அவ்வாசல் நிலைக்கு மேலே. அவ்வரண்மனை கட்டப்பட்ட காலத்தைக்காட்டும், இரண்டு அறபுசெய்யுட்களெழுதப்பட்டிருந்தன. அவ்வாசற்படியைத்தாண்டி

உள்ளே சென்றார்கள். அங்கு நிற்குங் காவலாளர்கள், ஜமீலாநாயகி, ஸயீது, கரீபு, இம்மூவரையும்பார்த்து, ஏதேதோ இரகசியமாகப்பேசிக்கொண்டார்கள். அங்கிருந்து இரண்டாம் வாசலுக்கு வருகிற வழியில், சலவைக்கற்களால்கட்டப்பட்ட பாரியதடாகமொன்றிருந்தது. அத்தடாகத்தின் நான்குபுறமும் சலவைக்கற்களாலேயே தளவரிசை போடப்பட்டிருந்தன. கணக்கி லடங்காத விதவிதப் பூச்செடிகள் வைக்கப்பட்டிருந்தன. விசித்திரமான அனேகமாளிகைகள் தொடர்பிரியாது கட்டப்பட்டிருந்தன. அவைகளனைத்தையும் ஒவ்வொன்றுக்கடந்து, மூன்றும்வாசலில்வந்து சேர்ந்தார்கள். அவ்வாயிலினிருபுறமும் காவலாளர்கள் துப்பாக்கிகளைத் தோளிலணைத்தவர்களாகக் காவல்புரிந்து நின்றார்கள். தலைமைப்பாதிரியை அக் காவலாளர்கள் முன்னரே அறிந்தவர்களானதால், அவர்கள் உள்ளேசெல்வதை ஒருவருந்தடுக்கவில்லை. அவர்கள் கொலுக்கூடத்தின்வாசலில் வந்து நின்றுகொண்டு, ஜமீலாநாயகியும்,ஸயீதும், குழந்தை கரீபுடன்வந்திருக்கிறதை, தலைமைப்பாதிரி, அமீர்பஷீருக்கறிவித்தார். அமீர்பஷீர் அங்குள்ள சகலரையும் வெளியிற் போகச்சொல்லி, அவர்களை உள்ளே அழைத்துவரும்படி உத்தரவளித்தார். அமீர்பஷீரின் கட்டளைப்பிரகாரம் தலைமைப்பாதிரிவெளியில்வந்து,ஜமீலாநாயகியை உள்ளேகூப்பிட்டார். அவர்கள் நாணத்தால், தன் இயற்கையான மிருதுவான நடையுடன், பலவித இரத்தினக்கம்பளங்களா லலங்கரிக்கப்பட்டிருந்த இராஜசபைக்கு வந்துசேர்ந்தார்கள். அங்கே நிதானமான வுயரமும், விரிந்தநெஞ்சும், அகன்றநெற்றியும்,வளைந்தபுருவமும், பருத்தவிழிகளும், உயர்ந்து வளைந்தநாசியும், கொஞ்சங்கொஞ்சம் நரைத்ததாடியும், தடித்தமீசையும் உடைய சிம்மம்போன்ற அமீர்பஷீர், (தமாஸ்கஸ்) திமஷ்குபட்டணத்து விலையேறப்பெற்ற விசாலமான அங்கியணிந்து(Cashmere)கஷ்மீர்தேசத்துஉயர்ந்தகம்பளிச்சால்வையிடைக்கட்டுகட்டி, அவ்விடைக்கட்டில் விலைமதித்தற்கரிய மேன்மையான இரத்தினங்கள் அழுத்தி சித்திரவேலைசெய்த கைப்பிடிச் சூரிகை சொருகி, அவ ரணிந்திருக்கும் அங்கியின்மேல் நியாய துரந்தரர்களணியும் திறந்த தொங்கற்குப்பாயமிட்டு, விலையுயர்ந்த தலைப்பாகையணிந்து, வெகு கெம்பீரமாக புகைச்சுருட்டு குடித்தவராக சிம்மாசனத்திலுட்கார்ந்திருந்தார். அவ்வரையும் அவரி விருப்பையுங்கண்ட ஜமீலாநாயகிக்கு அதிக திடுக்கமும் நடுக்கமு முண்டாயிற்று. ஜமீலா



நாயகியின் நடுக்கத்தைக்கண்ட அமீர், "அஞ்சவேண்டாம், நெருங்கி வாருங்க" ளென்று மிருதுவாகக் கூறினார். ஸயீதும் உள்ளே வர உத்தரவு தேடினான். அவனுக்கும் உத்தரவு கிடைத்தது. அவன் உள்ளேவந்து, அமீரின் முன்னிலையிற் கொஞ்சந் தூரத்தில் நின்றான். தெய்வரம்பைபோன்ற ஜமீலாநாயகியையும், அவர்கள் கொடுங்கையிலேந்தியிருக்கும் பாலகனையும், நெட்டையனாகிய ஸயீதையும் அமீர்பஷீர் பார்த்து புதுமை படைந்து ஸயீதை நோக்கி "இப் பெண்மணிக்கு நீ யார்" என்று கேட்டார். ஸயீது மரியாதையுடன் "என்னுடையநாயகமே! தங்களினடிமையாகிய நான், இஜ்ஜமீலா நாயகியவர்களின் பணிவிடைக்கார" னென்றான். அமீர்பஷீர், ஜமீலாநாயகியைப் பெருந்தகைமையுள்ள உயர்குலமாதென்றறிந்து "ஜமீலாவே! உம்முடைய புருஷநாயக ரெங்!" கென்று கேட்டார். ஜமீலாநாயகி குனிந்ததலையை நிமிர்த்தாமலும் மறுமொழி கொடுக்க நா வெழாமலும், முத்துதிர்வதுபோல மாறாது நீர்ச்சொரிய அழுதுகொண்டிருந்தார்கள். அதனால் அமீர்பஷீருக் கிரக்க முண்டானதுடன், அவர்களின் அழுகையினால் தன்னுடைய கேள்விக்கு மறுமொழியுந் தெரிந்துகொண்டு ஸயீதைப்பார்த்து,

அமீர்பஷீர்:—நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள்?

ஸயீது:—நாங்கள் எங்களின் நேர்ச்சையை நிறைவேற்றுவதற்காக, சைதாவிலிருந்து இவ்வூர் பாதிரி மடத்துக்கு வந்தோம்.

அமீர்பஷீர்:—நேற்றிரவு பாதிரிமடத்தின் தலைவாசல் வரைக்கும் உங்களைச் சேர்ந்து வந்தவர்யார்? அறிவீர்களா?

ஸயீது:—நாங்களறியாத ஒருமனிதர். இருள் கடிசாயிருந்ததால் அவரின் முகத்தை நாங்கள் நன்றாய்ப் பார்க்கக்கூடவில்லை. ஆனால், அவர் சாமானிய ரல்லவென எனக்குத் தோற்றப்பட்டார்.

அமீர்பஷீர்:—மறுமுறை அவரைக் கண்டாலறிந்து கொள்வீர்களா?

ஸயீது: ஆம், என் எஜமானே!

அப்போது அமீர்பஷீர் குறுநகை நகைத்தார். அதினால் அம்மனிதர் அமீர்பஷீர்தானென்று ஸயீது விளங்கிக்கொண்டான். அமீர்பஷீர், இராக்காலங்களில் மாறுவேடம்பூண்டு, தன்னூரைச் சுற்றிப்பார்த்து உளவறிவது வழக்கம். அரசர்களுக்கு ராஜத்ரோகிகளேற்

பட்டிருப்பதினாலே பெரும்பாலுந் துணையுடனேயே வருவார். சில சமயங்களில் தனித்தும் வருவார். அப்படி வந்த நேரத்தில்தான் அவர்களைச்சந்தித்தது.

அமீர்பஷீர்:—ஸயீதைநோக்கி, நீங்கள் ஸைதாவிலிருந்து வந்தோமென்கிறீர்களே. உங்கள் பேச்சானது (எகிப்தியர்) மிஸ்றிகளென்றறிவிக்கிறது.

ஸயீது:—இறந்துபோன என்னெஜமான், குடும்பசகிதராகசில நாள் அங்கு வசிக்க நேர்ந்ததால், அத் தேசபாஷையையே நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். இப்போதும் அப்பாஷையே எங்களுடைய நாவில் நடமாட்டமாயிருக்கிறது.

அமீர்பஷீர்:—மாறியும் சமீபத்தில் சுயதேசஞ்சேரநாட்டமோ?

ஸயீது:—யோசித்துச் சொல்லவேண்டும்; ஏனெனிலோ, என்னெஜமானி ஜமீலாநாயகியின் புருஷராகிய என்எஜமானையும், வீடு வாசல் முதலான சகலசம்பத்துகளையும் அவ்வூரிலிழந்து, தற்போது தாங்கள்பார்க்கிற இந்தரீதியிலாய்விட்டோம். ஆகையால், மேன்மை பொருந்திய தங்களின் அரசாக்ஷிநாட்டிலேயே யெங்களின் வாணுளைக் கழிக்க நாடுகிறோம்.

என்றபோது அமீர்பஷீர் உரத்தநெஞ்சினராகையால், அவரைத் தவிரம்ற்றவர்கள்கண்ணீர்வடித்தார்கள். அமீர்பஷீர்ஜமீலாநாயகியின் பரிதாபநிலைமையைப்பார்த்து, மனதிரங்கி, "ஜமீலாவே! நீங்கள் என் தேசக்குடியாவதை நான் மிகுந்த பூரிப்புடன் ஒப்புக்கொண்டேன். நீங்கள், என் சொந்த மாளிகையின் வசதியான வோரிடத்திலிருப்பதைப் பிரியப்படுகிறேன். அங்குள்ளயாவரிலும் நீங்கள் சிறந்தவர்களாக விருப்பீர்கள். அந்தப்புரத்தில் என்மனைவியுடன் வசிக்கலா"மென்றுகூறினர். ஜமீலாநாயகி,சைகையால் அச்சொல்லிற்கிசைந்ததாகக்காட்டி, எழுந்துநின்று வெகுமரியாதையுடனும், மேன்மைப்பாட்டுடனும், அமீர்பஷீரைப்பார்த்து, கண்ணீர் வடித்தவர்களாக "எங்களை இப்பாதையளவிற் கொண்டுவந்து தங்களுடைய திருச்சமுகத்திற் சேர்த்துவைத்த கடவுளைத் துதிக்கிறோம். உடைந்துபோன எங்கள் மனங்களைப்பொருந்தச்செய்தீர்கள். எங்களைப்பிடித்திருந்த கஷ்டங்களை யிலேசாக்கினீர்கள். ஆகையால், தங்களின் ஏவலுக்கு மாறுகூறாமல் வழிப்பட்டு நடப்பது எங்களுக்கு முக்கிய கடமை"



யென்று சொல்லி, அமீரை வாழ்த்தினார்கள். அச்சொற்களைக்கேட்டு அமீர்பஷீர், தன் பணிவிடையாளர்களை வரவழைத்து, "இராஜபத்தினிகளிருக்கும் அரண்மனைக்கு இந்த ஜமீலாநாயகியை அழைத்துக் கொண்டுபோய்விட்டு, இவர்களுக்கு தக்க மரியாதைசெய்து, அந்தப்புரத்திலேயே வைத்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு வாருங்க"ளென்று கட்டளையிட்டார். ஜமீலாநாயகி, அமீர்பஷீரை வெகுவாக வாழ்த்தி, அனேக வந்தனங்கூறி வெளியில் வந்து, தலைமைப்பாதிரியைப்பார்த்து, "பாதிரியாரே! தாங்களெனக்குச்செய்த வுபகாரம் எக்காலத்திலும் மறக்கக்கூடியதல்ல. அதற்குப் பிரதிசெய்ய கடவுளே தகுதியுள்ளவர். அமீர்பஷீரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு இன்னொருமுறை யென்னைச் சந்திக்க வரவேண்டு"மென்றார்கள். அவர் "நல்ல"தென்று மறுமொழி கொடுத்துவிட்டு, அமீர்பஷீரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, தன் மடத்துக்குச் சென்றார். ஜமீலாநாயகி தன்னடிமையாகிய ஸயீதைப்பார்த்து, "ஸயீதே! நீ அமீர்பஷீரின் கட்டளைப்பிரகாரம் நடந்துகொள்ளக் கடவாய்" என்று சொல்லிவிட்டு, அந்தப்புரத்துக் கேகினார்கள்.

## 6-வது அத்தியாயம்.

## அந்தப்புரம்.

ஜமீலாநாயகியும், தலைமைப்பாதிரியும், கொலுக்கூடத்தை விட்டு வெளிப்பட்ட பிறகு, ஸயீது அமீர்பஷீரின் கிட்ட நெருங்கி அவரின் கையை முத்தமிட்டு, தன்னெஜமானிக்கு அவர் செய்த பேருதவியைப்பற்றிப் புகழ்ந்து, தன் விஷயத்தி லிடப்படுங்கட்டளை யெவ்வாறென்பதை யெதிர்பார்த்து நின்றான்.

அமீர்பஷீர், "ஸயீதே! எப்பாஷையேனுங் கற்றிருக்கிறையா?" என்று கேட்டார். அதற்கவன் "அறபு, துருக்கி, இவ்விருபாஷைகளைப் பேசவும், எழுதவுங்கற்றிருக்கிறேன்" என்றான். அமீர்பஷீர் அவனைத் தன் சொந்தப்பணிவிடைக்காரர்களு ளொருவனாக நியமித்துக்கொண்டார். ஸயீது அமீரை மிகவும் புகழ்ந்து வெளியே வந்துவிட்டான்.

ஜமீலாநாயகி, அமீர்பஷீரின் பணிவிடைக்காரர்களுடன் கொலுக்கூடத்தின் வாசலுக் கடுத்த வாசலில் நுழைந்து, பல்வர்ணக்

கற்களால் தளவரிசை யிடப்பட்ட, அந்தப் புரத்திற்குப் போகிற
பாதை வழியாகச்சென்று வேறோர் வாசலிற் புகுந்து, அங்கிருந்து
ஒரு கெவுனி வாசல் வழியாகத் திரும்பி அந்தப் புரத்தின் வாசலைச்
சேர்ந்தார்கள். அங்கே காவற்புரிந்து நிற்கும் கோஜாக்களிடத்தில்
அமீர்பஷீர் சொன்ன சமாச்சாரங்களைச்சொல்லி, ஜமீலா நாயகியை
யுள்ளேயழைத்துப் போகும்படிக்குச்செய்துவிட்டு,அமீரின்கொலுக்
கூடப் பாதுகாவலர்கள் திரும்பிவிட்டார்கள். அவர்கள் சொற்
போல கோஜாக்கள், ஜமீலாநாயகியை யுள்ளே யழைத்துச்சென்று,
தெரிசனை மண்டபத்தில் ஒரு நாற்காலியிலிருத்தி, ராஜ மகிஷி யிடத்
திற்குப்போய், அந்த நாயகியின்வரவையும், அமீர்பஷீரின் கட்டளை
யையும், விஸ்தரித்தார்கள். உடனே அமீர்பஷீரின் மனைவியர், மற்
றஸ்திரீகளுடன் தெரிசனை மண்டபத்திற்கு வந்தார்கள். அம் மண்
டபம்விலையுயர்ந்த இரத்தினக்கம்பளங்களாலும்,விதவிதமானவிரிப்பு
களாலும், அவ்விரிப்புகளின்மேலே போடப்பட்டிருக்கும் பலவித
நாற்காலிகள், சோபாக்களாலும், சுவர்களெல்லாம் பொன்முலாங்
கொண்டு செய்யப்பட்டிருந்த நூதனமான சித்திரவேலைகளாலும்,
வெகலங்கிர்தமாகவிருந்தது. அமீர்பஷீரின் பெண்சாதி நாயகியும்,
மற்ற அந்தப்புர ஸ்திரீகளும் வந்து, ஜமீலா நாயகியைக் கண்டு சுப
சோபனங்கூறினார்கள். பிறகு அமீரின் மனைவியர், ஜமீலா நாயகி
யின் முகத்தை உற்று நோக்கினார்கள். அவர்களுக்கு தன்னை யறி
யாமல் ஆனந்தக்கண்ணீர் அபரிமிதமாக வடிந்ததுடன், அவர்களின்
மிருதுவானகைகளால் ஜமீலாநாயகியை அன்போடு இறுகவணைத்த
முகந்துகொண்டார்கள். ஜமீலா நாயகியின் கையி லிருந்த கரீபு என்
னுங் குழந்தையை அமீரின் மனைவியரும் மற்றவர்களும் ஆவலுடன்
தூக்கித்தூக்கி, நெற்றியிலும் கன்னங்களிலும் மாறிமாறி முத்தமிட்
டார்கள். அவர்கள் அவ்வளவு அழகுமுகக் குழந்தையைக் கண்ட
வர்களன்றாதலால் ஆச்சரியமுற்று, அக்குழந்தையின் ஆயுள் நீடித்தி
ருக்கவும், கண்ணேறு நாவேறு முதலிய துன்பங்களினின்றுங் காவற்
பாடுபெறவும், கடவுளைப் பிரார்த்தித்தார்கள்.

தன்மீதும், தன் குழந்தைமீதும், அந்தப்புர ஸ்திரீகள் அன்பு
பாராட்டுவதைப் பார்த்த ஜமீலா நாயகியின் மனம் ஒருவாறு சமா
தானப்பட்டிருந்தது. ஆனாலும் தன் புருஷனையும், சிரேஷ்டபுத்திரர்
ஷலீமையு மிழந்த விசனமானது, அவர்களின் நெஞ்சில் வேரூன்றி



யிருந்தபடியினாலே, அவர்களின் பிரகாசமான முகத்தில் கொஞ்ச
மேனும் சந்தோஷக்குறி காணப்படவில்லை. அமீரின் மனைவியர், ஜமீ
லாநாயகியை மிக்க அன்புடனழைத்துக்கொண்டு, தங்களிருப்பிடத்
திற்குச்சென்று, அலங்காரமான தனித்த ஓரறையை அவர்களுக்குக்
கொடுத்து, அவர்களின் பணிவிடைக்காகவும், அவர்களின் அரு
மைப்புத்திரர் கரீபின் பாதுகாப்பிற்காகவும், சில தாதிப்பெண்களை
நியமனஞ் செய்துவைத்தார்கள்.

அமீர்பஷீர் கொலுக்கூடத்தி லிருந்து அந்தப் புரத்திற்கு வந்து,
தன் மனைவியரிடத்தில் ஜமீலாநாயகியைப்பற்றி விசாரித்தார். அதற்
கவர்கள் ஜமீலாநாயகியின் குணாதிசயங்களைப் பற்றிப் புகழ்ந்து யா
தோர் குற்றங்கூறற் கிடமில்லாத மேன்மையும் பெருந் தன்மையு
முள்ள பெண்மணியென்றும், தனக்குகந்த சினேகி யென்றும் கூறி
னார்கள்.

அப்போது அமீர்பஷீர், தன் மனைவியருக்கு ஜமீலாநாயகி தன்
னிடத்தில் வந்துற்றவரலாற்றைவிவரித்துக்கூறி "ராஜமகிஷியே!கேட்
பாயாக; அந்நாயகி துக்கசாகரத்தி லாழ்ந்து, மனமுடைந்து சரீரம்
மெலிவுற்றிருந்ததாலும், சகல விஷயங்களிலும் உனக்குச் சமதியான
வர்களாக எனக்குத் தோற்றியதாலும், அந்நாயகிக்கு நான் சங்கை
புரிய நேர்ந்தது. துவக்கமாக அந்த நாயகியை நான் பார்த்தவுட
னே. என்மனதிலகி, என்னுடைய சுயபெந்துக்களைப்போல அவர்
களைப் பாவிக்கவும், கிருபை பாராட்டவும் வேண்டுமென்கிற நல்
லெண்ணத்தை யெனக்குண்டாக்குவித்த சகல சிருஷ்டி கர்த்தாவா
கிய கடவுளை மிகத்துதித்துப் புகழ்கிறேன்" என்றனர்.

பின்பு அமீரின் மனைவியர் "என்னாயகமே! தாங்க ளுண்மை
சொன்னீர்கள். கிராக்ஷேபமாக நான் சிறுபோதில் நேசித்திருந்த
நம் குடும்பத்திலுள்ள என் தோழியின் நடையுடைபாவனை, இலக்ஷ
ணக்குறிகள் முதலியன யாவற்றிலும் அந்நாயகி சமதி யுள்ளவர்
களாகவேயிருக்கிறார்கள். கடவுள் அவர்களுக்கும்,என்பழயதோழிக்
குங் கிருபை புரிவாராக. இன்று ஜமீலாநாயகியை நான் கண்டதும்,
தன் தகப்பனின் பிடிவாதத்தினால் யாவரும் பரிதபிக்கும்படிக்குத்
தப்பிப் போய்விட்ட என் பிரியமுள்ள பழய தோழியின் கியாபகம்
எனக்கு வந்து, என்னையு மறியாமல் என்கண்களில் நீர்ச் சொரிய
வும், ஜமீலாநாயகியை நான் கட்டித்தழுவவும், நேர்ந்த"தென்றார்கள்.

பிறகு அமீர்பஷீர், ஜமீலாநாயகியை அழைத்துவரக் கட்டளையிட்டார். அதுபோல ஜமீலாநாயகி, அமீர்பஷீரின் சமுகத்தில்வந்து வந்தனங்கூறி, அவரின் கையை முத்தமிட நாடினார்கள். அக்குறிப்பை அமீரறிந்து தன்கையை வெடுக்கென்றிழுத்துக்கொண்டு, "ஜமீலாவே! தங்களை இந்தவிடத்திற்கு வரச்செய்த கடவுளின் செய்கையானது எங்களை மிகவும் சந்தோஷப்படுத்தியது. இதோ! தங்கள் சமுகத்திலிருக்கிற இராஜமஹிஷியும், தங்களை நிரம்ப நேசிக்கிறார்கள். ஆகையால், இன்று முதல் எப்பொழுதும் தங்களுக்குத் தேவையாகும் சகல காரியங்களையும் நிராக்ஷேபத்துடனும், பிரியத்துடனும் செய்து கொடுக்கச் சித்தமாக விருக்கிறோம். துவக்கமாக நான் தங்களைக் கண்டபோதே, சங்கை பொருந்திய உயர் குலத்தில் உதித்தவர்களென்று எனக்கு வெளியானபடியினாலே, தங்களின் குலத்தைப்பற்றி விசாரிக்கவேண்டிய அவசரம் எனக்குண்டாகவில்லை. இன்று காலை, கொலுக்கூடத்தில் தங்களுடனே நான் சம்பாஷிக்கும்போதே, என்னிடத்தில் தாங்கள் எவ்விஷயத்தைப் பற்றியேனும் வாய் விடமாட்டீர்களென்பதை திட்டமாக அறிந்துகொண்டேன். இனிமேல் அவ்வாறிருக்கக்கூடாது. தேவையான சகல விஷயங்களையுங் கூச்சமின்றி எங்களிடத்தில் முறையிடக் கேட்டுக்கொள்ளுகிறோ" மென்றார்.

அமீரின் சொற்களைச் செவி சாய்த்துக் கேட்டுக்கொண்டிருந்த ஜமீலா நாயகியின் முகத்தில் * செந்நிறமும், பின்னர் † மஞ்சணிறமுந்தோன்றின. பின்பு ஜமீலா நாயகி அழுதவர்களாகவும், பெருமூச்செறிந்தவர்களாகவும், தலைகுனிந்தவர்களாகவும் அமீரைப்பார்த்து "நாயகமே! தற்போது என் சலிப்பை ஒருவாறு ஆற்றக்கூடியதாகவிருக்கும், என் அருமைப் புத்திரன் கரீபுடைய விஷயத்தில் மட்டில், தாங்கள் கவனிக்க வேண்டுமென்கிற தொன்றேயல்லாது வேறோர் தேவையும் எனக்கில்லை" என்றார்கள்.

அமீர்பஷீர்:—ஜமீலாவே! தங்களின் குழந்தை கரீபின் விஷயத்தில் யாதொரு கவலையும் வைக்காமல், தாங்கள் சந்தோஷமாகவிருங்கள். அக்குழந்தையை என்பிள்ளைகளுள் ஒன்றாகப்பாவித்து, நிரம்ப கவனத்துடனே பாதுகாத்து வருவேன்.

*செந்நிறம்-சந்தோஷத்தினறிகுறி. † மஞ்சணிறம்-துக்கத்தினறிகுறி.



ஜமீலாநாயகி:—தங்களிடத்தில் இன்னொருதேவையெனக்கிருக்கிறது. பிரியமிருந்தால் கட்டளையிடவேண்டும்.

அமீர்பஷீர்:—அதென்ன தேவை?

ஜமீலா நாயகி:—அதாவது - என்னுடைய விசுவாசமுள்ள அடிமையும், உண்மைத்தோழனுமான ஸயீதை இன்னொரு முறை நான் கண்டு பேசவேண்டும். ஏனெனிலோ, என்னுயிர் தப்பியதற்குக் காரணன் அவனே. அல்லாமலும் என் விஷயத்தில் அவன் அனேக கஷ்டங்களை யடைந்திருக்கிறான்.

அமீர்பஷீர்:—வாரத்திற் கோர் முறை கண்டு பேசிக்கொள்ள உத்தரவு கொடுத்தேன்.

அமீரின் உத்தரவு கிடைத்த பெரிய சந்தோஷத்தினால், ஜமீலா நாயகி அமீரைப் பலமுறைப் புகழ்ந்து, அவரின் கையை முத்தமிட வாரம்பித்தார்கள். அவர் சட்டென்று கையை யிழுத்துக்கொண்டார். பின்பு ஜமீலா நாயகி, அமீர்பஷீரின் அந்தப் புரத்திலேயே அவரின் குடும்பஸ்தர்களைப்போல சங்கையுடனும், சந்தோஷத்துடனும் இருந்து வந்தார்கள். அமீரின் கட்டளைப் பிரகாரம் ஸயீதும் வந்துபோய்க்கொண்டிருந்தான். தலைமைப் பாதிரியையும் சில சமயங்களில் அழைப்பித்துப் பேசி "எனக்கு இவ்வித சங்கை கிடைக்கச்செய்தது தாங்களே" யென்று துதி விடை கொடுத் தனுப்புவார்கள்.

ஜமீலாநாயகியின் புத்திரர் கரீபும், அமீரின் அரண்மனையில் வெகு செல்வீகமாக வளர்ந்துவந்தார். அவருக்கு வயசு (8) எட்டாயிற்று. பார்ப்பவர்கள் அவருக்கு 15-வயசிருக்கலாமென மதிப்பார்கள். அவர் வளர வளர அவரின் அழகும், புத்தி சாதுர்யமும், அதிகரித்துக் கொண்டே வந்தன. ஜமீலாநாயகி அப்பிள்ளைக்கு தந்தையின்னாரென்றறிவித்ததில்லை. அதனால் கரீபு, அமீர்பஷீரையே தந்தையரென் றெண்ணிக்கொண்டிருந்தார். அப்படிக் கிருக்கும்போது அமீர்பஷீர், தன் புத்திரராகிய அமீனுக்கு கல்வி கற்பிக்கும் (Hems) ஹிம்ஸ் தேசவாசியாகிய முஅல்லிம் பத்ரூஸ் கராமா என்ற உபாத்தி யாயரிடத்தில் கரீபையும் ஒப்பித்து, கல்வி கற்பிக்கக் கட்டளையிட்டார். அவ்வுபாத்தியாயரோ, அரபிலக்கண விலக்கியங்களில் மஹா தேர்ச்சி யடைந்த பிரபல பண்டிதர். அமீனும், கரீபும்,

ஒரே தாய் தந்தையர்களுக்குப் பிறந்த சகோதரர்களைப் போன்று,
மஹாவூக்கத்துடன் கற்றுவந்தார்கள். கரீபின் கூர்மையான புத்தி
யையும், தீவிரமான விளக்கத்தையும், நன்கறிந்த வுபாத்தியாயர்
மிகுந்த ஆச்சரியமுற்று, அவருக்கு மஹா பக்ஷத்துடனே கல்வி
கற்பித்துவந்தார். இச் சிறுபிராயத்தில், கரீபுக்குக் கூர்மையான புத்
தியும், சுறுசுறுப்பும், நன்னடக்கையும், தயாள குணமும், ஆச்சரி
யப்படத்தக்க அழகும் உண்டாயிருந்தமையால், அவரைக்காணும்
எவரும் அவர் பேரில் அதிகக் கிருபை பாராட்டா திரார்கள்.
ஆகலின், அவரின் அருமந்தத்தாயாராகிய ஜமீலாநாயகிக் குண்டா
யிருந்த அளவற்ற சந்தோஷத்தை யிம்மட்டென் றெடுத்துரைக்க
வொருவராலு மியலாது. அவர்கள் அச்சந்தோஷத்தை வெளி
விடாது தன்னுக்குள்ளே மறைத்து, அதைவிட அதிகரியான முண்
டாக வேண்டுமென்று ஆதரவு வைத்திருந்தார்கள்.

அமீர்பஷீர், கரீபை கடப்பான பிரியத்துடன், தன் சொந்தப்
பிள்ளையைப் போலவே பாவித்து வந்தார். அவர் அரசாக்ஷி விஷய
மாக, தன் வாசஸ்தானமாகிய பைத்துத் தீனிலிருந்து திருல் கமர்
இராஜதானிக்கும், அதைச் சார்ந்த பட்டணங்களுக்கும் அடிக்கடி
போய்வருவது வழக்கம். அப்படிக்குப் போய்விட்டு வந்தவுடனே
கரீபின் சுகத்தைப்பற்றி விசாரித்து, அவரைக்கண்டு முத்தமிடா
திரார். கரீபும் அமீரை மெத்த வுவந்திருந்தார்.

ஸயீது, மிஸ்று தேசத்தில் இராஜ வமிசத்தார், அல்பானியர்,
(Moors) முரேக்கர், இன்கிஷாரியர் முதலானவர்களுடன் கலந்
திருந்து, அவர்களின் லக்ஷணக் குறிப்பைத் தீரமாக அறிந்திருக்
கிறான். அப்படி யிருந்தும், அமீர் பஷீரைப்போல வொருவரையுங்
கண்டதில்லை யாதலால், புதுமையும் பிரமிப்பு மடைந்திருந்தான்.

ஒருவன் அமீர்பஷீருடன் சம்பாஷிக்குங் காலத்தில், மானு
ஷீகத்தன்மையில் உயர்ந்த தன்மையி லுள்ளவரோடே சம்பாஷிக்கிற
தாக எண்ணிக்கொள்ளுவான். அவரின் கொலுக்கூடத்தில் வந்து
கூடும் அமீர்களும், கோத்திரத்தலைவர்களும், அதிக பயபக்தியுட
னிருப்பார்கள். அச்சபையில் அவரின் சப்தமே உரத்த சப்தமாக
விருக்கும்.



## 7-வது அத்தியாயம்.

## சஞ்சலப்பிரித்தல்.

(சீரியா) ஷாம் தேசாதிபதியால் அமீர்பஷீர் பயமுறுத்தப்பட்ட
காரணத்தினாலே, கி-பி-1821-ம் வருஷத்தில் அமீர்பஷீர் அவ்விஷயமாக
மிஸ்றுக்குப் பிரயாணமாகும்வரையில், பைத்துத்தீனை விட்டு வெளிப்
பட்டு ஒரு பட்டணத்திற்போய் இருந்துகொண்டு, தன் குமாரர்
களாகிய கலீலையும், அமீனையும், தன்னுடன் கூட்டிப்போவதற்காக
கூப்பிட்டுவிட்டார். அமீரின் குமாரர் அமீன் என்பவருக்கு, ஜமீலா
வின் புத்திரராகிய கரீபு பள்ளிக்கூடத்து கூட்டாளியாகையால் அவ
ரையும் தன்னுடன் கூட்டிப்போக இரம்பப் பிரியப்பட்டு, தனது
உபாத்தியாயர் பத்ருஸ்கராமா விடத்திற்போய், தன் தகப்பனாரிடத்
தில் உத்தரவு வாங்கிக் கொடுக்கும்படிக்கு, சிபாரிசு தேடினார்.
உபாத்தியாயர், அமீரிடத்திற் சென்று சிபாரிசு பண்ணினார். அமீர்,
கல்விமான்களின் வார்த்தையை அங்கீகரிக்கிறவராக இருந்தது மல்
லாமல், பத்ருஸ்கராமா வுடையபேச்சை அதிகமாக மதித்து அவரை
நேசித்துவந்தபடியினாலே, அவரின் சிபாரிசையேற்றுக்கொண்டார்.

இந்தப்படி நடந்தவைகள் ஒன்றும் அப்போது ஜமீலா நாயகிக்
குத்தெரியாது. பின்பு, அமீர்பஷீர் மிஸ்றுக்குப் பிரயாணப்படுவதை
யும், அவருடன் தன்மகன் கரீபு போகிறதையும், ஜமீலா நாயகி அறி
ந்து, தன் புருஷனை யிழக்கக்கொடுத்த பூமிக்குப் போகிறார்களே யெ
ன்று அதிக திடுக்கமும், சஞ்சலமும் கொண்டு தன்னடிமை யாகிய
ஸயீதை வரவழைத்து "ஸயீதே! உன் னெஜமானாகிய என் புருஷ
ரையிழந்த மிஸ்று தேசத்தை நாம் வெறுத்திருக்கிறோ மென்பதும்,
திருடர்களைப்போல அவ்வூரைவிட்டு கஷ்டத்துடனும், கலக்கத்துட
னும் ஒளித்தோடி வந்ததும் உனக்குத் தெரிந்த விஷயங்கள் தான்.
அத்தேசத்திற்கு என்னருமை மகன் கரீபை, தன்னுடன் கூட்டிப்
போகிறதற்குப் பயணப்படுத்தி யனுப்பும்படிக்கு அமீர்பஷீர் தெரி
வித்திருக்கிறார்கள். என் மகன்பேரில் நான் வைத்திருக்கும் பக்ஷத்
தை நீ நன்றாக அறிவாய். இப்புவியின் சகல சுகங்களையும் அவனு
டைய பத்து வயது நிரப்ப
லேயே வெறுத்தேன் என்பதும், அவனுக்குப் பத்து வயது நிரப்ப
மார்க்கமில்லை யென்பதும் உனக்குத்தெரியும். அவன் போகிறதோ,
அவன் தகப்பன் கொல்லப்பட்ட வூர். கொன்றவரும் அத்தேசத்

தில்தானிருக்கிறார். அல்லாமலும், அவன் சகோதரனை யிழக்கக் கொடுத்த வூர் வழியாகவும் போகப்போகிறான். இதற்கு நானென்ன செய்வே" னென்று பெருமூச்செறிந் தழுதார்கள்.

ஸயீது "என் எஜமானியே! அவசியம் தாங்கள் பொறுதி செய்யத்தான் வேண்டும். என் எஜமானாகிய கரீபு. அவர் மட்டில் தனித்துப் போகவில்லை. மஹா பராக்கிரம சாலிகளா[illegible] பலத்த வீரர்களுடன் போகிறார். ஆகையால் கொஞ்சமும் அஞ்ச வேண்டியதில்லை. தன் தகப்பனை யிழந்த வூருக்குப் போகிறாரென்று தாங்கள் சொன்னதாகிறது அவரறிந்த விஷயமல்ல. மேலும், கரீபு இன்னாரென்பதை, தலைமைப்பாதிரி தவிர மற்றவர்க ளறியமாட்டார்கள். கரீபு, இவ்விட மிருப்பதைவிட இப்போது அங்கு செல்வதே நலம். ஏனெனிலோ, தற்போது இவ்விடத்தில் நேர்ந்திருக்குஞ் சில குழப்பத்தி னிமித்தமாகவே, அமீர்பஷீர் மிஸ்றுக்குப் போகிறார்." என்று சொன்னான்.

ஜமீலாநாயகி:—(அச்சொற்களைக்கேட்டுப்பதறி) ஸயீதே! அதென்ன குழப்பம்? எனக்கறிவிப்பாயாக.

ஸயீது:—என்னெஜமானியே! தாங்கள் பயப்படவேண்டாம். அவ்விஷயம் அரசாக்ஷியைப்பற்றிய பேதாபேதங்களாதலின் அதைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியதில்லை.

ஜமீலாநாயகி:—அப்பேதாபேதங்க ளின்னவை யென்று நீ எனக்கறிவிக்க விரும்புவாயா?

ஸயீது:—நல்லது, சொல்லுகிறேன். லிபனான் மாகாணத்தில் நம் அமீர்பஷீரின் ஆக்ஷியாகிறது துருக்கி யரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட, இக்கா என்னும் பிரதானப்பட்டணத்தின் கவர்னராகிய அப்துல்லாபாஷாவின் அதிகாரத்திற்குட்பட்ட தென்பதைநீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அந்தகவர்னரும், நம்முடைய அமீரும், ஒருவருக்கொருவர் அன்னியோன்னியமான நேசர்களாக இருந்து வருகிறார்கள். அப்படியிருந்து வருகையில், துருக்கி கவர்ன்மெண்டார், ஏதோ சில கோள்வாக்குமூலங்களினால், இக்காவின் கவர்னர் அப்துல்லாபாஷாவின்பேரில் வெறுப்புற்று, அவரின் உத்தியோகத்தினின்றும் நீங்கிக்கொள்ளும்படிக்கு அவருக்குகட்டளை யனுப்பினார்கள்; அதற்கவர் சம்மதிக்காமையால் அவரைநீக்கிப்போடும்படி-



ஷாமின் இராஜதானியாகிய திமஷ்கு பட்டணத்தின் கவர்னர் ஜெனரல் தர்வேஷ்பாஷாவுக்குக்கட்டளைவந்தது. அமீர்பஷீர், அப்துல்லாபாஷாவின் அதிகாரத்துக்குட்பட்டவராகவும், அவருக்கு உண்மையான நேசராகவு மிருப்பதினாலே, முதலில் அமீர்பஷீரின் ஆக்ஷியை லிபனான் மாகாணத்தைவிட்டு நீக்கியதுடன், அமீர் அப்பாஸ் என்பவரை அம்மாகாணத்துக்கு அமீராக நியமிக்கப்பட்டது. நம்முடைய அமீர்பஷீர் அதை யறிந்து, அப்துல்லா பாஷாவுடன் அதைப்பற்றிக் கலந்து பேச நாடிப் புறப்பட்டார்கள். அதையறிந்த திமஷ்கு கவர்னர் ஜெனரல் தர்வேஷ்பாஷா, அவரை இக்காவுக்குப் போகவிடாமல் ஒருவகுப்புப் பட்டாளத்தை யனுப்பித் தடைசெய்து போட்டார். ஆதலால், அப்துல்லா பாஷாவுக்கு, உதுமானிய (Porte) போர்ட்சங்கத்தாரால் மன்னிப்புக் கிடைக்கும்படிக்கு சிபாரிசு தேடற்காக, மிஸ்று தேசாதிபதியாகிய முகம்மதுஅலிபாஷா விடத்திற்குப் போகிறார்கள்.

ஜமீலாநாயகி:—(அவைகளைக்கேட்டு பதறியெழுந்து) ஆ! ஆ!! என்னைப்பிடித்த சனியன் இன்னமும் விலகவில்லையா? ஸயீதே! இத்தேசம் நம் விரோதிகைக்கீழானபிறகு நாம் எவ்வாறு இங்குவசிக்கிறது? நம்மைக்காப்பாற்றுகிறவர்யார்?

ஸயீது:—நாயகியே! உட்காருங்கள், பதறவேண்டாம்; நமக்கு யாதொரு தீங்கும் வாராமல் கடவுள் காப்பாற்றுவாராக. கடவுளின் கிருபையினாலே, நாம் எப்போதும் நம்முடைய அமீர்பஷீரின் பாதுகாப்பிலேயேயிருப்போம். ஏனெனிலோ, சிம்மம் வசிக்குந்தலத்தில் அச்சிம்மமில்லாதகாலத்திற்கூட, மற்றமிருகங்கள் வரப்பயப்படுமாப்போல, நம்முடைய அமீர்பஷீர் வசிக்குமிடத்திற்கு மற்றெவரும் வர மனந்துணியமாட்டார்கள். அல்லாமலும், அமீர்பஷீரின் மனைவியர்முதலான குடும்பத்தினர்களடங்கலும் இங்கு தானிருப்பார்கள். நம் அமீரோ, உயிரினும் மானத்தைப் பெரிதாகமதிப்பவர். நம் அமீருக்குப்பிரதியாக நியமிக்கப்பட்டிருக்கிற அமீர்அப்பாஸ், நம்அமீரின் குடும்பஸ்தர்களை யாதொரு தீங்கும் அணுகாமல் காப்பதாக இரகசிய வுறுதிவாக்களித்து மிருக்கிறார். இப்போது சம்பவித்திருக்கிற குழப்பம், நீடித்திருக்குமென்று நினைக்கவேண்டாம். லிபனான் தேசத்தின் ஆக்ஷி பலமுறை நம் அமீரைவிட்டு நீங்கி, மாறியும் அவராக்ஷிக்கு வந்திருப்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். குடிகள்,

லிபனானை யாளுதற்கு அந்தஸ்துள்ளவர் நம் அமீரைத்தவிர வேறில்லை
யென்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அஹ்மதுபாஷா அல்ஜஸார் என்பவர், ஷாமின் கவர்னர் ஜெனர
லாக விருக்குங்காலத்தில், லிபனான் மாகாணத்தை, இலஞ்சம் வாங்
கிக்கொண்டு அத்தேச ஆக்ஷியை அவரிஷ்டப்படிக்குச் செய்திருக்
கிறார். அதனால் நம்முடைய அமீர்பஷீர், தேசத்திற்குப் புறம்பாக்க
வும்பட்டிருக்கிறார். மேற்படிகவர்னர் ஜெனரலின்செய்கை நிலைபெறா
மல், லிபனானின் ஆக்ஷி மாறியும் நம் அமீருக்கே கிடைத்தது.

லிபனான் தேசக்குடிஜனங்கள் நம் அமீரின்மீது வைத்திருக்கும்
பக்ஷமும், விசுவாசமும் தங்களுக்குத் தெரிந்தவைகளே. கடவுளின்
கிருபையால் நாம் ஒருவிதத்திலும் அஞ்சவேண்டியதில்லை. மிஸ்றில்
நமக்குண்டான தீங்கில் நின்றும் நம்மை யிரக்ஷித்தகடவுள், இங்கும்
நம்மைக் காப்பார். நம்மை ஒருபோதுங் கைவிடமாட்டார். நாம்
படுங்கஷ்டத்திற் கியைந்தபடிக்கு, நம்முடைய பாவங்கள் பொறுக்
கப்படு மல்லவா?

ஜமீலாநாயகி:—ஸயீதே! இங்குநமக்கு யாதொருதீங்கும் சம்ப
விக்காதென்று உன்னால் உறுதியாகச் சொல்லக்கூடுமா?

ஸயீது:—ஓம், நான் உறுதியாகச் சொல்லுகிறேன். தற்சமயம்
என் எஜமானாகிய கரீபு இங்கிருப்பதைவிட, அமீர்பஷீருடனே யாத்
திரையிற்சென்று வருவதே நயமாகவிருக்கும். நம்முடைய அமீர்,
கரீபை தன்னுடனே அழைத்துப்போக நிச்சயித்திருப்பதால் அதை
ஒருவராலும் தடுக்கமுடியாதென்பதும், அவரெதைச்செய்ய நாடி
னாரோ அதை செய்தே முடிப்பாரென்பதும் தங்களுக்குத் தெரிந்த
விஷயந்தான். அல்லாமலும் அமீர்பஷீர் நம் கண்மணிபோன்ற
கரீபை தன்சொந்தப்பிள்ளையைப்போலப்பாவித்து, யாதோர் வித்தி
யாசமுமில்லாது பக்ஷத்துடனே வளர்த்துவருவதை மனப்பூர்வமாக
நாமறிந்திருக்கிறோம். பிள்ளைகள் சிறுவயதில் பலதேச சஞ்சாரஞ்
செய்து வருவதால், தேசாபிமானத்திலும், மற்ற விஷயஙகளிலும்
தேர்ச்சியடைவார்களல்லவா? ஆகையால், கரீபின் விஷயத்தில் தாங்
கள் மனநொந்துக்கலங்கவேண்டாம். அவருடன் துணையாக நானும்
போகலாமென்று நாடினால், சிலகாரணங்களால் கூடாமலிருக்கிறது.
அதென்னவெனிலோ, கரீபுகூட நான் மிஸ்றுக்குப்போனால், முதலா



வது நம்முடைய அந்தரங்கம் வெளிப்படுவதைப் பயப்படுகிறேன்.
இரண்டாவது தங்களின் சொந்தப்பணிவிடைக்காக சிலசமயங்களில்
என்னளவில் தங்களுக்குத்தேவையுண்டாகும். ஆனதால், தங்களை
விட்டுப்பிரிய என் மனந் துணியவில்லை. சிம்மம்போன்ற நம்முடைய
அமீர்பஷீர் நம்பிள்ளைக்குத் துணைவராக விருக்கும்போது, நாமேன்
அஞ்சவேண்டும்? தாங்கள் கொஞ்சமும் அஞ்சவேண்டியதில்லை. நம்
முடையபிள்ளை கரீபை அமீருடன் அனுப்புகிறதே உத்தமமாகத்
தெரிகிறது.

ஜமீலாநாயகி:—(பெருமூச்செறிந்து) நாம்தா னென்ன செய்ய
லாம்? யாவும் கடவுளின் சங்கற்பப்படிக்கே நடக்கும். நம் அரு
மைப்புத்திரன் கரீபை, கடவுளிடத்தில் பரஞ்சாட்டி யனுப்பிவிட்டு,
அழகான பொறுதி செய்யவேண்டியதுதான்.

இவ்வாறு ஜமீலா நாயகியும், ஸயீதும் சம்பாஷித்துக்கொண்
டிருக்குஞ்சமயத்தில், கரீபு,தன் தாயாரிடத்தில்வந்து வழக்கப்பிரகா
ரம் தாயாரின் இரண்டுகைகளையும் முத்தமிட்டு, அவர்களைப்பார்த்
து, "என்னருமைத்தாயே! என் தந்தையாகிய அமீர்பஷீர் அவர்கள்
இருக்குமிடத்திற்கு, என்னை அதிசீக்கிரத்திலழைத்து வரும்படிக்கு
ஆளனுப்பி யிருக்கிறாகள். நான் அங்குபோய், அவர்களுடன் சேர்
ந்து, மிஸ்றுக்குப்போகவேண்டும். தாங்களும்வாருங்கள், போகலா"
மென்றார். கரீபின் இனியவசனங்களைக்கேட்ட ஜமீலாநாயகி,அவரை
நெஞ்சோடணைத்து, இரண்டு புருவங்களுக்கிடையிலும், கன்னங்களி
லும் முத்தமிட்டு, "என்னருமந்தக்குழந்தாய்! நான்வரக்கூடாது.
கடவுளின் உதவியால் நீங்கள்போய் சுகத்துடனே திரும்பி வாருங்
கள். நீங்கள் திரும்பி யிவடம் வருகிறவரையில் உங்களுடைய வரு
கையை வழிபார்த்தவளாக விருப்பே" னென்றார்கள். அப்போது
கரீபின் கண்களில்நின்றும் கண்ணீரொலித்தோடச் சற்றுநேரம்வாய்
பேசாதுநின்றார். பிறகு, தன்னுடைய அடிமையைச் சுட்டிக்காட்டி,
"ஸயீதாவது என்கூடவரக்கூடாதோ?" என்றார். ஸயீது, "என்னெஜ
மானே! நான்வரக்கூடுமானால் மிகவும்சந்தோஷத்துடனேவருவேன்.
அப்படி வரக்கூடாமலிருப்பதால், என் எஜமானியாகிய தங்கள் தா
யாரவர்களின்பணிவிடையிலிருந்து தங்களின்வருகையை வழிபார்த்
திருப்பேன். இன்னமும் இந்தயாத்திரையானது உங்களுக்குமிகுந்த
சந்தோஷத்தை யுண்டாக்கும். நீங்கள் நாடிச்செல்லும் மிஸ்று தேச

மானது, மாரிகாலத்தில் அதிக சுகத்தையும் வியப்பையுந்தரக்கூடிய
அழகானபூமியாக இருக்கு" மென்று வியந்து கூறினன். பின்னர்
ஜமீலாநாயகி, தன்மகன் கரீபை இருகரங்களாலுங் கட்டியணைத்து,
பலமுறைமுத்தமிட்டு "என் அருமைமகனே! சர்வவல்லமையுள்ள
கடவுளிடத்தில் உன்னைப்பரஞ்சாட்டி யனுப்புகிறேன். அக்கடவுளே
துணையாக நீபோய் வருவாயாக. அவரின் துணையும் கிருபையும்
எப்போதும் உனக்குண்டாகக்கடவ" தென்று பலவாறு நமஸ்கரி
த்து மகனைப்பார்த்து, "மகனே! உன்னிடத்தில் ஒரு உறுதிவாக்
குக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது, உன்யாத்திரையில் என்
னுடைய கியாபகம் எப்போதும் உன்நெஞ்சைவிட்டு நீங்கா திருக்க
வேண்டுவதே" யென்றார்கள். தாயாரின் இனிய வசனங்களைக்
கேட்டகரீபு,கண்களால்முத்துதிர்வதுபோலக்கண்ணீரைச்சொரிந்து
"என் அருமைமாதாவே! நான் எப்படி தங்களை மறப்பேன்? என்
னைத்தாங்கள் பெற்றெடுத்து, முலையூட்டி மடிமேல்வைத்து, சயெறும்
புக ளண்டாமல் இரவுபகலாக விழித்திருந்து, எவ்வளவோ அருமை
யுடன் வளர்த்தெடுத்தீர்கள். நான் ஒருபோதும் தங்களுடைய கியா
பகமில்லா திருக்கமாட்டேன். தாங்கள் என்னை கிரம்பவழிப்பட்டு
நடக்கிற பிள்ளையாகக் காணப் பெறுவீர்க" ளென்று வணக்கமாகக்
கூறி, தாயாரின் கரங்களைப்பற்றிப்பிடித்துத் தன்னிருகண்களிலும்
வைத்துக்கொண்டழுதார். ஜமீலா நாயகி, கரீபைக் கட்டியணைத்து,
"மகனே! உன் பிரயாணத்தில் உனக்கு அவகாசமான வேளைகளில்,
உன்னுடைய சுகக்ஷேமத்தைப் பற்றியும், அமீர் முதலானவர்களின்
சுகத்தைப் பற்றியும், நீ காணும் காட்சிகளைப் பற்றியும் எனக்கு
அடிக்கடி யெழுதிக்கொண் டிருக்கவேண்டும். உன் கடிதம் எனக்
கோர் ஆறுதலாக விருக்கு" மென்றார்கள். கரீபும் "அவ்வாறே
செய்து வருகிறே" னென்று மறுமொழிகொடுத்தார். அவ்விருவர்
களின் இனிமையும் சஞ்சலமுமான பேச்சுக்களையும், அழுகையை
யும் கேட்டுக்கொண்டும், பார்த்துக்கொண்டும்நின்றஸயீதின் அழை
யும் கொஞ்சநஞ்ச மல்ல.

இந்தப்படிக் கவர்கள் வியசனப்பட்டுக்கொண்டிருக்கும்போது,
அமீர்பஷீரிடத்திலிருந்து, கரீபை அதிசீக்கிரத்தில் அழைத்துவரும்
படிக்கு அனுப்பிய தூதனொருவன் வந்து கரீபைக்கூப்பிட்டான்,
அதைக்கேட்ட ஜமீலாநாயகி, கரீபை நெஞ்சுடனணைத்து முத்தி,



"கடவுளினுதவியால் போய்வருக" வென்று விடையீய்ந்தார்கள்.
அப்போது கரீபு, தன் அன்னையின் மிருதுவான கரங்களைப்பற்றிப்
பிடித்து முத்தமிட்டு கண்களில் வைத்துக்கொண்டழுதார். அடிமை
யாகியஸயீது,தன்னெஜமானுகிய கரீபின்கரங்களை தன்கண்களிலொற்
றிக்கொண்டழுதான். அவ்விருவரின் மிதமிஞ்சிய அழுகையைப்பார்த்
துக்கொண்டிருந்த ஜமீலாநாயகிக்கு சகிக்கக்கூடாத சஞ்சலமுண்டு
பட்டிருந்தாலும், தன்மகன் கரீபின்சஞ்சலத்தை ஆற்றவேண்டுமென்
றெண்ணி, தன்முகத்தில் கொஞ்சம் சந்தோஷக் குறியைக்காட்டி,
"என் அருமைமகனே! சந்தோஷமாகப் போய்விட்டு வருவாயாக"
என்று இரண்டாமுறையும் உத்தரவளித்தார்கள்.

கரீபு, தன் தாயாரிடத்திலும், அந்தப்புரத்திலுள்ள அமீர்பஷீ
ரின் மனைவியர் முதலான சகலரிடத்திலும் பிரயாண்விடை வாங்கிக்
கொண்டு வெளிப்பட்டார். அமீர்பஷீரின் சிரேஷ்டபுத்திரர் கலீலும்
கனிஷ்டபுத்திரர் அமீனும், மற்றவர்களும் அவருடன் கூடப்புறப்
பட்டார்கள். கரீபின் தலைமறைகிறவரையில், ஜமீலாநாயகியும், ஸயீ
தும் நின்றுபார்த்துக் கொண்டிருந்து, உள்ளே போய்விட்டார்கள்.

---

8-வது அத்தியாயம்.

## கரீபும், மிஸ்றும்.

அமீர்பஷீரின் வாசஸ்தானமாகிய பைத்துத்தீனிலிருந்து ஜமீ
லாநாயகியின் புத்திரர் கரீபு பிறதேச யாத்திரைசெய்தது இதுதான்
முதல் முறை. அவர் பயணஞ்சொல்லிக்கொண்டு புறப்படும்போது,
சரிகைவேலைசெய்த அழகான பட்டுடை யுடுத்தவராகவும், சரிகை
வேலைசெய்த தலைப்போர்வை யிட்டவராகவும், அப்போர்வையின்
மேலே சரிகைக்குல்லாவை வலப்புறச்சாய்வாகத் தரித்தவராகவும்,
கடின வேகமுள்ள அழகான குதிரைமேல் சவாராகி, சகலரும்
வியக்கத்தக்க விதமாக, பைத்துத்தீனிலிருந்து அமீர்பஷீர் விடுதி
விட்டிருக்கும் இடத்தை நோக்கிக் குதிரையை நடத்தினர். அமீர்
பஷீரின் புத்திரர்களாகிய கலீலும், அமீனும் அழகான வுடைக
ளுடுத்து, பஞ்சகல்யாணிக் குதிரைகளில் சவாராகி, கரீபின் வலப்
பாகத்தி லொருவரும், இடப்பாகத்தி லொருவருமாகக் குதிரைகளை
நடத்தினர்கள். மெய்க்காப்பாளர்களாகிய குதிரை வீரர்கள், அம்

மூன்று இராஜபுத்திரர்களையும் நடுவணுக்கிச்சூழ்ந்துவந்தார்கள். லிபனான் நாட்டின் அமீர்மார்களின் புத்திரர்கள், சிறு பிராயத்திலேயே குதிரை யேற்றத்தில் பழக்கப்படுவார்கள். ஆகலின், இம்மூன்று அரசபுத்திரர்களும் குதிரையேற்றத்தில் பழகி தேர்ச்சி யடைந்திருந்தார்கள். சிறு அமீராகிய கரீபு, சகலவிஷயங்களிலும் மிகுந்த கூர்மையுள்ளவராகவும், தயாளகுண முடையவராகவு மிருந்துவந்தார். அதனால், அவருடன் கூடச்சென்ற அமீர்பஷீரின் புத்திரர்கள் முதலான சகலரும் கரீபிடத்தில் மிகுந்த பட்சங்காட்டி, எந்த விஷயத்திலும் அவரை உசாவுதல் செய்து நடப்பவர்களானார்கள்.

கரீபு, தன்னுடன் வார்த்தையாடும் ஒவ்வொருவருடனும் மிகுந்த தயாளமாகவும், இனிமையாகவும் பேசுவார். தங்களுடைய வழிப்போக்கில் பலவிதமான பேச்சுகளைப்பேசிக்கொண்டு, உல்லாசமாக அன்று நண்பகல்வரையில் குதிரைகளை நடத்தி, ஓர் வசதியான தலத்திற்சேர்ந்து, அவ்விடத்திலிறங்கி, பகற்போஜன மருந்திகளை யாறினார்கள். பின்பு அங்கிருந்து புறப்பட்டு, பொழுதடையும் வரையில் குதிரைகளை நடத்தி ஒரு சிற்றூரைச்சேர்ந்து, அன்றிரவு அங்கு விடுதிவிட்டார்கள். விடியற்காலையில் அங்கிருந்து பிரயாணமாகி, நடுப்பகலில் அமீர்பஷீர் விடுதி விட்டிருக்கு மிடத்திற்கு வந்து சேர்ந்து அமீருக்கு வந்தனங் கூறி, அவரின் கரத்தை முத்தமிட்டார்கள்,

அவ்விடத்தில் சற்று நேரமிருந்து களையாறியபின், சகலரும் ஒன்று சேர்ந்து மிஸ்றை நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்கள் நூற்றுச்சில்வானம் பேர்களிருந்தார்கள். அமீர்பஷீரின் புத்திரர்களுக்குக்கல்விகற்பிக்கும் உபாத்தியாயரும், பண்டிதர்களும், அவர்களின் பணிவிடைக்காரர்களும் அக்கூட்டத்திற்சேர்ந்திருந்தார்கள். அவர்களின் பிரயாணகாலத்தில் குறுக்கிடும் தேசங்களிலுள்ள ஜனங்கள், அமீர்பஷீர் வருவதைத்தெரிந்து அவரைப்பார்ப்பதற்காகக் கூட்டங் கூட்டமாகவந்து, அமீருக்கு வந்தனமும், சுபசோபனமுங் கூறிப் போவார்கள். இவ்விதமாக அமீர்பஷீர், தன்பரிவாரங்களுடனே வழி நடந்து கடைசியில் ஓர் கடல்துறை பட்டணம் வந்து சேர்ந்தார். அங்கு அவருக்காகத்தயாராக்கப்பட்டிருந்த கப்பலிலேறி, (எகிப்து) மிஸ்றின் துறைமுகமாகிய (Damietta) திம்யாத்து பட்டணத்திற் கருகாமையிலுள்ள ஓர் நாட்டில் வந்து சேர்ந்தார்கள். அவர்கள்



வந்திருக்கிறதை (Damietta) திம்யாத்தின் கலெக்டர் அறிந்து, எந்த விஷயத்தை நாடி வந்திருக்கிறாரென்று தெரிந்து வரும்படிக்கு ஒருவனைத் தூதனுப்பினார். அமீர்பஷீர் அத்தூதனிடத்தில், (அஜீஜ்) முகம்மதுஅலி பாஷாவைச் சந்தித்துப் போகவந்ததாக மறுமொழி கொடுத்தனுப்பினார். (மிஸ்றுதேச அரசர்களை அஜீஜ் என்று முன் முதல்கூறப்பட்டுவரும் வழக்கம்பற்றி அவரையும் அஜீஜென்றழைக்கப்பட்டது) அத்தூதன் அமீர்பஷீர் சொன்னவைகளை, கலெக்குத் தெரிவித்தான். அமீர்பஷீரை அவ்வூரிலேயே ஓரிரவுவிடுதிவிட்டிருக்கும்படிக்கு கலெக்டர் கேட்டுக்கொண்டார். அமீர்பஷீர் அதற்கிணங்கி அன்றிரவு அங்கேயே தங்கியிருந்தார். அவருக்கும் அவரின் பரிவாரங்களுக்கும் தேவைப்படும் சகலவஸ்துக்களும் கலெக்டரால் அனுப்பப்பட்டன. அன்று பகற் போசனத்தின்பிரகு சகலரும் அவ்வூரைச் சுற்றிப் பார்க்கப் போய்விட்டார்கள். கரீபு மட்டில் தனித்திருந்து, பயணத்தின்போது தன் மாதாவாகிய ஜமீலா நாயகி யிட்டகட்டளைப்படி தன் சுகத்தைப்பற்றியும், தன்தகப்பனார் அமீர்பஷீர், தமையன்மார்களாகிய சலீல், அமீன் முதலானவர்களின் சுகத்தைப்பற்றியும், பைத்துத்தினிலிருந்து புறப்பட்டது முதல் அப்போது தங்கியிருக்கும் ஊர்வரையில் வந்து சேர்ந்ததைப்பற்றியும், இடையில் கண்ட காக்ஷிகளைப்பற்றியும் கடிதமெழுதிக்கொண்டிருந்தார். கடிதமெழுதி முடிந்தபிறகு, கூடாரத்துள்ளிருந்து வெளியே வந்தார். சில வேலையாட்களும், குதிரை மேய்க்கிறவர்களுந் தானிருந்தார்கள். மற்றவர்களைக் காணவில்லை.

கரீபு அங்கு நின்றபடிக்கே அவ்வூர்ப்பூமியைப்பார்த்தார். அது மலை, குன்றுமுதலியனவில்லாத சமபூமியாகவும், அப்பூமியின்மணல் கருநிற முடையதாகவு மிருந்தது. அதைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கும்போது, திடீரென்று லிபனான்மலை நாட்டின் ஞாபகம் அவருக்குண்டாயிற்று. அதிலும் முக்கியமாக தான் வசித்திருந்த பைத்துத்தீனுடைய நினைப்பு மேலிட்டதில், அதின் அலங்காரத்தையும், அமைப்பையும்பற்றி ஆனந்தமுற்று, அங்குள்ள மலைகள், குன்றுகள், நன்செய் புன்செய் நிலங்கள், அரண்மனை முதலியனவற்றின்பேரில் ஞாபகத்தைச்செலுத்தி அவற்றை வியந்துமகிழ்ந்து கடைசியில் தன் அன்னையாகிய ஜமீலா நாயகியாரின் பேரிலும், பிரயாணத்தின்போது அவர்களிட்ட கட்டளையிலும் ஞாபகத்தைச்

செலுத்தினர். அவ்வெண்ணமானது கரீபுக்கு மனப்புதறுதலை யுற்பத்தியாக்கி, அவரின் கண்களில் நின்றும் அவரையுமறியாமல் கண்ணீரை வடித்து, அவரின் மிருதுவான கன்னங்களில் சென்னிறக்கோலை யுண்டாக்கிவிட்டது. தன் தாயாரின் எண்ணம் அவரை வாதித்துக்கொண்டிருந்ததால், கரீபு மிகுந்தவிபுசனமடைந்தார். அப்போது சூரியன் அஸ்தமிக்குஞ் சமயமாக விருந்தது. ஆகாயத்தையும், அடையப்போகிற சூரியனின் கதிர்க்காற்களின் பிரகாசத்தையும்பார்த்து, தன் விசனத்தை ஒருவாறு தணித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது ஊரைச்சுற்றிப் பார்க்கப்போயிருந்த அமீர்பஷீர் முதலானவர்கள் திரும்பி வந்து கூடாரத்தை நெருங்கினர்கள். கூடாரவாசலில் கரீபு தனித்தவராக நிற்பதை அமீர்பஷீர் கண்டு "என்னருமை மகனே! நீ யெங்கேபோயிருந்தாய்? ஏன் எங்களுடன் ஊருலாவவந்தாயில்லை?" யென்று கேட்டார். அதற்கு கரீபு "பிதாவே! மன்னிக்க வேண்டுகிறேன். நான், கூடாரத்தில் என் தாயாருக்குக் கடித மெழுதிக்கொண்டிருந்தேன். இதோ, அக்கடித மிருக்கிறது. அதைத்தாங்கள் கிருபை வைத்து, என் தாயாருக் கனுப்பிக்க வேண்டு" மென்று வணக்கமாகக் கூறினர். கரீபின் அருமையான வசனங்களை அமீர்பஷீர் செவி கொடுத்துக்கேட்டு சந்தோஷித்து, புன்னகையுடன் கரீபின் புத்தி கூர்மையைப்பற்றி மிகுந்த வியப்புற்று, "நல்லது மகனே! அந்தப்படியே செய்கிறேன்" னென்றார். சற்றுநேரத்திற்குள்ளாக மாலைப்போஜனம் தயாரிக்கப்பட்டது. சகலரும் புசியாகி முடிந்தபிறகு, பிரயாணத்தின் அயர்ச்சியால் அதிகநேரந் தாமசப்படுத்தாமல் படுக்கைகளுக்குப் போய்விட்டார்கள்.

புறதேச அமீர்கள் மிஸ்றுதேசத்துள் நுழைவதானால், அத்தேசாதிபதியாகிய முஹம்மதுஅலி பாஷாவிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு தான் உள்ளே நுழையவேண்டும். ஆதலால், அவரின் உத்தரவைப் பெற்றுக்கொள்வதற்காகவே, திம்யாத்தின் கலெக்டர், அமீர்பஷீரை ஓரிரவு அவ்வூரில் இராத் தரிக்கும்படிக்குச் செய்துவிட்டனே (Alexandria) இஸ்கந்தரிய்யாவில் வந்திருக்கும் முஹம்மது அலிபாஷாவுக்கு, அமீர்பஷீரின் வரவைத் தெரியப்படுத்தினர். உடனே முஹம்மதுஅலிபாஷா, அமீர்பஷீருக்கும், அவரின் பரிவாரங்களுக்கும் தகுந்த மரியாதைசெய்து, சீக்கிரம் அவர்களை (Cairo) காஹிறுவுக்கு அனுப்பிக்கும்படிக்கு திம்யாத்தின் கலெக்டருக்கும்,



"அமீர்பஷீர் காஹிறுவுக்கு வருகிறார். அவரைப்போல் சிறந்த அமீர் இதுவரையில் காஹிறுவுக்கு வந்ததில்லை. அவரின் வருகையே அவ்வூருக்கொரு பெரியபாக்கியம். ஆதலால் அவருக்கும், அவரின் பரிவாரங்களுக்கும் தேவைப்படும் ..வற்றைக்கொடுத்து கனப்படுத்துவதுடன், என்னுடையவந்தனமும், சுபசோபனமும் அவருக்குக்கூறுவீராக" என்று, காஹிறுவிலிருக்கும் தன்பிரதிநிதிக்குங் கட்டளைப் பத்திரங்களனுப்பினர். அவரின் கட்டளையைப்பெற்ற திம்யாத்தின் கலெக்டர், பொழுது விடிந்தவுடனே அமீர் பஷீரை வந்து கண்டு தகுந்த மரியாதை செய்து, அவரையும், அவரின் பரிவாரங்களையும் மிகுந்த சிறப்புடனே காஹிறுவுக்குப் பயணப்படுத்தி யனுப்பினர். அமீர்பஷீர் முதலானவர்கள் அங்கிருந்து பிரயாணமாகி, காஹிறுவின் துறைமுகமாகிய பூலாக்கு வந்துசேர்ந்தார்கள். அத்துறைமுகப் பாதுகாவலரான ஹினு அல்ஹிம்ஸி என்பவர் மிஸ்று தேசாதிபதியின் பிரதிநிதியின் கட்டளைப்படிக்கு, அவர்களை யெதிர்சென்றழைத்து வந்து தகுந்தமரியாதைசெய்து, "மிஸ்றின் தேசாதிபதி முஹம்மது அலிபாஷா, தற்போது இஸ்கந்தரிய்யாவுக்குப் போயிருக்கிறார்கள். சீக்கிரத்தில் வந்துவிடுவார்க" ளென்றுசொல்லி, அமீர்பஷீரையும், அவரின் புத்திரர்கள் முதலானவர்களையும் (Ancient Cairo) பழய மிஸ்றுக்கெதிரிலிருக்கும் றவ்லா என்னுந்தீவின் அழகான மாளிகையிலிருக்கும்படிக்குச் செய்து வைத்தார்.

இதுஇங்ஙனமாக, ஜமீலாநாயகியின் புத்திரர் கரீபு, வரும்வழியில் காணப்பட்ட காக்ஷிகளைக்கூர்மையாகப் பார்த்துவந்தார். காஹிறுத்துறைமுகம் வந்துசேரவே, அவ்வூர் ஜனத்திரளையும், விஸ்தீரணத்தையும், அமைப்பையும் பார்த்து வியப்படைந்து, அவ்வூரைச்சுற்றிலுங்காணப்படும் ஒவ்வொன்றையும் பற்றி மிகுந்த கருத்துடன்கேட்டறிந்து கொள்வார். அவர்கள் விடுதி விட்டிருக்கும், மேன்மை பொருந்திய (Nile) நீலாற்றின் நடுவி லிருக்கும் றவ்லா என்றதீவைப் பற்றி நிரம்பப்புதுமை யுடைந்திருந்தார். அத்தீவில் அவர்களிறங்கியிருக்கும், விசாலமும் அழகும்பொருந்திய மாளிகையையும், தேவையாகும் சகல வஸ்துக்களும், பணிவிடையாளர்களும் தயார் செய்யப்பட்டிருப்பதையும் பார்த்து மகிழ்ந்து, திம்யாத்தின் கலெக்டரைச் சந்தித்தது முதல், றவ்லா தீவைச் சேருகிறதற்கிடையில் கண்ட காட்சிகளைப் பற்றி, அன்றிரவு தன் தாயாருக்கு இரண்டாம் முறை கடித மெழுதினர்.

## 9-வது அத்தியாயம்.

## காஹிரு.

மறுநாட்காலையில், முஹம்மதுஅலி பாஷாவின் சிரேஷ்ட புத்தி
ரர் இபுருஹீம்பாஷாவைக்காணப்போகவேண்டுமென்று அமீர்பஷீர்
ஆலோசித்துக்கொண்டிருக்கும்போது, ஜமீலா நாயகியின் குமாரர்
கரீபு காஹிரு பட்டணத்தைச் சுற்றிப் பார்க்க ஆவலுற்று, அமீர்
பஷீரிடத்தில் உத்தரவு கேட்டார். றவ்லாதீவின் மாளிகைக் கதிப
ரான அஹ்மது என்பவரை யழைத்து, கரீபுக்கு அவ்வூரைச் சுற்றிக்
காட்டும்படிக்குக் கட்டளையிட்டு, அவருக்குக்காவலாக சில படைத்
தலைவர்களையும் விட்டுவிட்டு, அமீர்பஷீர், தன் புதல்வர்களாகிய
கலீல், அமீன் இருவரையும் கூட்டிக்கொண்டு, காஹிருவின்மேற்கில்
வசதியான தலத்தில் கட்டப்பட்டிருக்கிற இபுருஹீம் பாஷாவின்
அரண்மனையை நோக்கிச்சென்றார். கரீபு சிறுவயசினரானதால், இபு
ருஹீம் பாஷாவைக் காணப்போகிறதைவிட, ஊர் சுற்றிப் பார்ப்ப
தில் அவருக்கு மிகுந்த பிரியமுண்டாகி யிருந்தது. அவ்விஷயத்தில்
அமீர் பஷீரின் உத்தரவு கிடைத்தது அவருக்கு மெத்த சந்தோஷத்
தை விளைத்தது. மேற்கூறிய அஹ்மது, ஆதியில் முகம்மதுஅலிபாஷா
வின் பட்டாளத்தில் உத்தியோகஸ்தராக விருந்து, பிறகு அந்த
றவ்லாதீவின் மாளிகைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர்
அமீர் பஷீரின் கட்டளைப்பிரகாரம் கரீபை யழைத்துக்கொண்டு,
அந்நகரைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினார்கள். அங்குள்ள விசித்
திரங்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டே, நீலாற்றின் வெள்
ளம் வடிவு இவ்வளவென்னக் குறித்துக் காட்டும் அளவு மரத்துக்குக்
கிட்ட வந்தார்கள். கரீபு அம்மரத்தைச் சுட்டிக்காட்டி, "இதென்ன?"
வென்று கேட்டார். அஹ்மது அதையும் அதின் கணக்கையும் விப
ரித்துக்காட்டினார். அந்நகரைச் சுற்றிப் பார்த்த பிறகு, ஒரு படகி
லேறி தென் கிழக்கி லிருக்கிற பழைய மிஸ்ரை நோக்கிப் படகைச்
செலுத்திப் போகிறபோது, நீல் நதியின் விசாலத்தையும், நீரின்
பெருக்கத்தையும், கரைகளில் செழித்து வளர்ந்து நிற்கும் விருக்ஷங்
களையும், வேளாண்மைகளையும் கரீபு பார்த்து மிகுந்த புதுமையடை
ந்து, ஒவ்வொன்றைப்பற்றியும் அஹ்மதிடத்தில் கேட்டுக்கொண்டே
போனார். முக்கியமாக நீல்நதியைப்பற்றி பேராச்சரியமுற்று, "இதன்



ரம் எவ்வளவு" வென்றுகேட்டார். "இதின் நீளம் 4364-மைலிருக்
கும். ஆனால் இதின் துவக்கம் அறியப்படவில்லை. இவ்வாற்றின் ஜலம்
சரீரத்திற்கு மஹாசுகத்தைத் தரக்கூடிய" தென்று அஹ்மது சொன்
னார். இந்தப்படிக்கு ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டே பழைய
மிஸ்றின் துறைமுகத்தில்வந்து கரையேறி, ஊரைப்பார்க்க நடந்
தார்கள். இடைவழியில் காணப்படும் பூர்வகட்டிடங்களை கரீபு மிகக்
கூர்க்கப்பார்த்து, அஹ்மதிடத்தில் அவற்றைப்பற்றி விசாரிப்பார்.
கரீபு சிறுவயசினராக இருந்தும், தன்கண்ணுக் கெதிர்ப்படும் யாவற்
றையும் விபரித்துக்கேட்டு வருவதைப்பற்றியும், அவரின் நாகரீக
மான வார்த்தைகளைப் பற்றியும் அஹ்மது ஆச்சரியமடைந்து அன்பு
பாராட்டி அழைத்துச்சென்றார். அவ்வாறு செல்லும்போது ஒடுக்க
மான பாதையொன்று குறுக்கிட்டது. அவ்வழியாக நடந்தார்கள்.
எதிரில் உயர்ந்துவிரிந்த சுவர்கள் தென்பட்டன. அவைகளை கோட்
டைச்சுவர்களென்று கரீபு நிதானித்துக்கொண்டார். அச்சுவர்களில்
சில இடிந்திருந்தன. கரீபு அச்சுவர்களைச் சுட்டிக்காட்டி "இது
என்ன?" வென்றுகேட்டார்.

அஹ்மது, "அது தீருன்னஸாரு என்னும் கிறிஸ்தவர்களின்
மடம். அதற்குள் அவர்களின் பல மடங்களும், கனீஸதுல்-அதரு,
கனீஸா-அபீசர்ஜா, கனீஸா-மாரிஜார்ஜிஸ், கனீஸதுல் - குதிஸாபர்பாரு
எனும் நான்கு பிரதான கோவில்களும், வேறு சில கோவிற்களு
மிருக்கின்றன. மேற்படி கனீஸா-அபீசர்ஜா என்னும் கோயிலுக்குள்
குகையொன்றிருக்கிறது. அக்குகைக்குள்ளிறங்க சில படிக்கட்டுக
ளுங் கட்டப்பட்டிருக்கின்றன. (ஈசாநபி) தீர்க்க தரிசியாகிய ஏசுவின்
தாயார் (மரியம்) மரியாள் அவர்கள் மிஸ்ருக்கு வந்தபோது, அக்
குகைக்குள்ளே தரித்திருந்ததாக கிறிஸ்தவர்கள் சொல்லுகிறதுடன்
அக்குகையைக் கொண்டாடியும் வருகிறார்க" ளென்று விவரமாக
எடுத்துக்கூறினார். அதன்பிறகு மேலே குறித்த மதில்களைச் சுற்றிப்
பார்த்துக்கொண்டுவந்து, இடிந்துபோயிருந்த ஒருவழியால் உள்ளே
சென்று நடந்தார்கள். ஒருசிறுவாசல் வந்தெதிர்த்தது. அவ்வாசல்வழி
யாகக் கொஞ்சத்தூரம் நடந்தார்கள். இருப்புக்கதவு போடப்பட்டு
மஹாவுயரமான ஒருவாசற்படி தென்பட்டது. அவ்வாசற்படியை
நெருங்கவந்து சேர்ந்தார்கள். அதற்குள்ளே மேலேகூறிய கோவிற்
களும், மடங்களும் தெரிந்தன.

சரீபு:—(அஹமதைப்பார்த்து) இம்மடம் எங்கள் தேசத்தின்
மடங்களைப்போலில்லை. பாரியகோட்டையைப்போலக் காணப்படு
கிறது. இதைப்போல் நான்பார்த்ததில்லை.

அஹமது:—என் எஜமானே! உண்மை சொன்னீர்கள். இத்
தேசத்திலுங்கூட, இத்தனை பாரியமடம் வேறேகிடையாது. ஆதியில்
இதுமடமல்ல. கிறிஸ்து பிறக்குமுன் (Persians) பர்ஷியர் இம்மிஸ்று
தேசத்தை ஜெயித்தபோது, இவ்விடத்தில் ஒருகோட்டை கட்ட
வேண்டுமென்றுத்தேசித்து இக்கோட்டையைக்கட்டி, அவர்களின்
சுதேச ராஜதானியாகிய (Babylon) பாபிலோன் பட்டணத்தின்
பெயரை அக்கோட்டைக்குச் சூட்டினார்கள். அதுமுதல் (ஹிஸ்னு
பாபில்) பாபிலோன் கோட்டை யென்று அழைக்கப் பட்டுவந்தது.
கிப்திசுதேசகிறிஸ்தவர்கள், அக்கோட்டையினுள்ளே சிலமடங்களை
யும், கோயில்களையும் ஸ்தாபித்தார்கள். அதனால் தீருன்னசாரு
என்றும் அழைக்கப்பட்டு வருகிறது. (Heraclius) ஹிர்க்கீல் என்ற
கிரீக் சக்கரவர்த்தியின் ஆட்சிக் குட்பட்டிருந்த இந்த மிஸ்று தேசத்
தின்பேரில், கி. பி. 640-ம் ஆண்டில் இஸ்லாமானவர்களின் இரண்
டாவது (Caliph) கலீபாவாகிய நாயகம் (Omar) உமறுபுனுல்கத்தாபு
(றலி) அவர்களின் ஏவற்பிரகாரம், அம்றுபுனுல்ஆஸ் என்னும்
சேனாதிபதி படையெடுத்து வந்தபோது, சுதேசகிறிஸ்தவர்களாகிய
கிப்திகள் இக்கோட்டையினுள் முற்றிக்கை யிடப்பட்டார்கள்.

சரீபு:—இக்கோட்டையினுள்ளிருக்கும் கோவிற்களையும் மடங்
களையும், மற்றகட்டிடங்களையும் பார்க்கவேண்டுமென்கிற விருப்பம்
எனக்கதிகமாக விருக்கிறது.

அஹமது:—எஜமானே! இதைவிடநூதனமும், பிரதானமுமான
அனேககட்டிடங்க ளிருக்கின்றன. அவற்றைப் போய்ப்பார்க்க
வேண்டும், வாருங்கள்.

என்று அழைத்துக்கொண்டு, அம்மடத்திற்குக் கீழ்புறமிருக்
கும் புஸ்தாத்து என்னும் ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கே
விசாலமும், விசித்திரமுமான பள்ளிவாசல் ஒன்றிருந்தது. "இது
யாரால் கட்டப்பட்ட" தென்று சரீபு கேட்டார். அதற்கு அஹமது,
"இப்பள்ளிவாசல், மேலே கூறப்பட்ட சேனாதிபதி அம்றுபுனுல்ஆஸ்
அவர்களாற் கட்டப்பட்டது. இதன் பெயர் ஜாமிஉ-அம்று என்னப்
படும். இதின் வடிவும், விசாலமும், பரிசுத்த (Mecca) மக்கா



நகரத்தின் பள்ளிவாசலுக்குச் சமானமாக விருக்கும். ஆதியில்
இப்பள்ளிவாசலின் உட்சுவர்களில் குர்ஆன் என்னும் பரிசுத்தவேத
முழுவதும் தங்கமுலாம் கொண்டெழுதப்பட்டிருந்தது. இம் மிஸ்று
தேசத்தில் கட்டப்பட்ட பள்ளிவாசற்களில் இதுவேமுதன்மையாகக்
கட்டப்பட்ட" தென்று விவரித்துக்கூறினார். "புஸ்தாத்து என்று
இராஜாக்களின் கூடாரத்திற்கல்லவோசொல்லுகிறது. அப்பெயரைக்
கொண்டு இவ்விடத்தை யழைப்பதின் காரணமென்ன?" என்று
கரீபு, அஹமதைக்கேட்டார். அதற்கவர், "எஜமானே! மேலே
சொன்ன சேனாதிபதி அம்றுபுனுல்ஆஸ் அவர்கள் இவ்விடத்தில்
கூடாரமடித் திறங்கியிருந்தார்கள். அவர்கள் பாபிலோன் கோட்டை
யைப் பிடித்தபிறகு (Alexander the Great) மஹா அலெக்சாந்தர்
என்னும் சுல்தான் இஸ்கந்தர் துல்கர்னைன் அவர்களால் கட்டப்பட்ட
(Alexandria) இஸ்கந்தரிய்யாவைப் பிடிக்க படை யெடுத்துச்
செல்லும்போது, மேற்படிகூடாரத்தைப் பிடுங்கக்கட்டளையிட்டார்
கள். கூடாரத்தின் உச்சியில் புறாக்கள் கூடுகட்டி குஞ்சு பொரித்
திருந்தன. அதைப்பற்றி சேனாதிபதிக்குத் தெரியப்படுத்தினார்கள்.
"நம்மிடத்தில் கார்மானந்தேடி, நம்மிருப்பிடத்தில் வந்திருக்கும்
புறாக்களைக்கலைத்து விரட்டக்கூடாது. அல்லாமலும் இம்மாதமோ,
வருஷாரம்பத்தின் சங்கைபொருந்திய முஹர்றம் என்னும் முதல்
மாசமாகவு மிருக்கிறது. இம்மாசத்தில் கடவுளின் சிருஷ்டிகளை
நோவினைசெயவது மஹாதப்பிதம். நாம்இஸ்கந்தரியாவுக்குப் போய்
விட்டு திரும்பிவருகிறவரையில் அப்புறாக்கள் நம்முடைய கூடாரத்
தில் விருந்தாளிகளாக இருக்கவிடுங்கள்" என்றுசொல்லி, கூடாரத்
தைப் பிடுங்காமல் இஸ்கந்தரிய்யாவுக்குச் சென்று, அவ்வூரை கி. பி.
640-ம் வருடி டிஸம்பர்மீ 22உ பிடித்து, தன்னுடனே சமாதானஞ்
செய்துகொண்ட, ஹிர்க்கீல் சக்கிரவர்த்தியால் மிஸ்றுக்கு அரசனாக
நியமிக்கப்பட்டிருந்த மகூகஸ்யூஹின்னா என்பவனையே அவ்வூருக்குத்
தலைவராகநியமித்து வைத்துவிட்டு, அங்கிருந்து திரும்பி, புறாக்கள்
கூடுகட்டியகூடாரமிருந்த இந்தத்தானத்திற்குவந்து, அக்கூடாரமும்
அதில் புறாக்களுமிருக்கக்கண்டு, அக்கூடாரமிருந்த படிக்கேவைத்து
ஒருபட்டணமுண்டாக்கி, இப்பள்ளியையுங் கட்டினார்கள். அக்கூடா
ரத்தின் காரணத்திலேதான் இவ்விடத்தை புஸ்தாத்து என்றழைக்க
லாயினர். அல்லாமலும், அதுமுதல் இவ்விடத்தை அவர்களின்
சேர்ந்தது.

அரசாட்சித்தலமாகவும் ஆக்கிக்கொண்டார்கள்'' என்றுமறுமொழி
கொடுத்தார். அவரின்வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த கரீபு
க்கு, பக்ஷிசாதிகளுக்கிரங்கி, தன்கூடாரத்தை முதல் எடுக்காமற்
போய்விட்ட, சேனாதிபதி அம்றுபுனுல்ஆஸ் அவர்களின் உருக்கத்
தைப்பற்றி பெரும் வியப்புண்டாயிற்று.

அப்போது அஹ்மது கரீபைப்பார்த்து, "என்னெஜமானே!
மேலேகூறிய சேனாதிபதியவர்கள், இத்தேசத்தவர்களுக்கு அனேக
நன்மையான காரியங்களை யெல்லாம் செய்து வைத்திருக்கிறார்கள்.
இத்தேசத்தில் நெடுநாளாக நடைபெற்றுவந்த அனேக கொடிய
துர்வழக்கங்களை முற்றாக நீக்கியிருக்கிறார்கள். அவற்று ளொன்று
சொல்லுகிறேன்; கேட்பீர்களாக. அதாவது, இத்தேசத்தார் வரு
ஷந்தோறும் தவறாமல் பவூனு என்னும் கிப்திய 12-ட, கிப்தி சாதியி
லுள்ள கன்னிப்பெண்ணொருத்தியை, ஆடையாபரணாதிகளால் அலங்
காரமாக்கி வெகு ஆடம்பரமாக மேளதாளத்துடன் ஊர்வலம்
போக்கி, நீலாற்றுக்குக் கொண்டுவந்து, அப்பெண்ணை நீல்நதிக்குப்
பலியாக நதியிலெறிந்து விடுவதுவழக்கம். சேனாதிபதி அம்றுபுனுல்
ஆஸ் அவர்கள் மிஸ்றைப்பிடித்த அடுத்தவருஷத்தில், கிப்தியர்கள்
வழக்கம்போலப் பலியிடநாடி, சேனாதிபதி யவர்களிடத்தில்வந்து,
"மேன்மைபொருந்திய அமீரே! இந்த பவூனு மாசத்தில் நீல்நதிக்கு
நாங்கள் நரபலியிடுவது வழக்கம். அதனால் எங்களின் வேளாண்மை
களில் மிகுந்தபிரயோசனமுண்டாகும். அந்தநாள்சமீபித்துவிட்டது.
எங்கள் வழக்கப்படிக்கு நாங்கள் செய்துகொள்ளக் கட்டளை யிட
வேண்டும். இப்போதோ, நதியின் ஜலம் குறைந்திருப்பதால் வேளா
ண்மை நிலங்களுக்கு ஜலம்பாய்ச்சக்கூடவில்லை'' யென்று கேட்டு
நின்றார்கள். அதற்கு சேனாதிபதியவர்கள், "சனங்களே! நீங்கள்
கேட்கிற விஷயம் மஹா பாதகமானது. அவ்வித கெட்ட வழக்
கத்தைச்செய்ய, எங்களுடைய இஸ்லாம் மார்க்கம் ஒருக்காலும்
இடங்கொடுக்கமாட்டாது'' என்று தடுத்துவிட்டார்கள். அவர்கள்
பலியிடுங் காலமும்போய், மேற்கொண்டு மூன்று மாதங்களாயின.
குறைந்தஜலத்துடன் ஓடிக்கொண்டிருந்த நீல் நதியில் திடீரென்று
ஜலப்பெருக்குண்டாகி, கொஞ்சமும் தண்ணீரோட்டமில்லாது அப்
படியே நின்றுவிட்டது. அதனால் அத்தேசவாசிகள் அச்சமுற்று,
புறதேசங்களுக்கு வலசைவாங்கிப் போகவுந்தேசித்தார்கள்.



"அதையறிந்த சேனாதிபதி அம்றுபுனுல்ஆஸ் அவர்கள்,(Medina)
மதீனா விலிருக்கிற 2-வது கலீபாவாகிய (அமீறுல் மூமினீன்) பல
பாகங்களிலுமுள்ள சகல இஸ்லாமானவர்களின் தலைவர் உமறுபுனுல்
கத்தாபு (றலி) அவர்களுக்கு, நீல் நதியின் விஷயத்தைக் குறித்
தெழுதினார்கள். அவர்கள் நீல்நதிக்கொரு கடிதமெழுதி, சேனாதிபதி
யவர்களின் கடிதத்திற்குள் வைத்து, "இந் நிருபத்தை நீலாற்றில்
எறிந்துவிடவேண்டிய'' தென்று மறுமொழி யனுப்பினார்கள். அந்
நிருபத்தின் வாசகமாவது:—

"கடவுளின் அடிமையாகிய அமீறுல் மூமினீன் உமறு, மிஸ்றின்
நீலாற்றிற்குத் தெரியப்படுத்தும் செய்தி: கடவுளையும், அவரின்
உண்மையான திருத்தூதரையும் துதித்தபின்னர்,

"நீல்நதியே! நீ, உன் சுயதத்துவங்கொண்டு ஓடுகிறதாக இருப்பை
யேயானால், நீ ஓடவேண்டியதில்லை. சகலரையும் அடக்கி யாளும்படி
யான ஒரே கடவுளின் கட்டளைப்படிக்கு ஓடுகிறதாக இருப்பையே
யானால், அந்த கடவுளிடத்தில் உன்னை ஓட்டுவிக்கும்படிக்கு நாம்
கேட்டுக்கொள்ளுகிறோம்.''

என் றெழுதப்பட்டிருந்தது. அக் கடிதத்தை சேனாதிபதி
யவர்கள் கையிலெடுத்துக்கொண்டு, நீல் நதிக்கரைக்கு வந்தார்கள்.
அத் தேசவாசிகள் பெருந் திரளாகக்கூடி, அவர்களுடனே வந்து
சேர்ந்திருந்தார்கள். சேனாதிபதி அந்நிருபத்தை ஆற்றி லெறிந்
தார்கள். உடனே அந்நதி ஓடத்துவங்கி, 16-முழ ஜலம் இறங்கி
யோடிற்று. அது முதல் சாதாரணமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

"அவ்வதிசயத்தைக்கண்ட மிஸ்றிகள் மிகுந்த ஆச்சரியமுற்று,
அமீறுல் மூமினீன் அவர்களுக்கு நிரம்பப் பயந்து, அவர்களால் நிய
மிக்கப்பட்ட சேனாதிபதி அம்றுபுனுல் ஆஸ் அவர்களின் கட்டளைக்
கொழுகி நடந்துவந்தார்கள். மேலேகுறித்த, பலியிடுங்கெட்ட வழக்
கத்தையும் விட்டுவிட்டார்கள். ஆனால் அவ்வழக்கத்தின் அறிகுறி
யாக, வருடந்தோறும் மண்ணால் சிலையொன்றுசெய்து அதை அலங்
கரித்து, புதுப் பெண்ணென்று பெயரிட்டு, நீல் நதியி லெறிந்து வரு
கிறார்கள். இப்பொழுதும் அவ்வழக்கம் அவ்வூர் கிப்திகளால் நடத்
தப்பட்டே வருகிறது'' என்று சொன்னார்.

அதன்பிறகு, புஸ்தாத்தி லிருந்து கனாத்திறுஸ்-ஸிபாஉ என்
னும் வாராவதிக்கு வந்தார்கள். அவ்வாராவதியை கரீபு பார்த்து

விட்டு, "இது யாரால் கட்டப்பட்ட" தென்று கேட்டார். அதற்கு
" இப்பாலம் இத்தேசத்தை யரசாட்சி புரிந்த அரசர்களுள் ஒருவ
ராகிய லாஹிர் பேயரஸ் என்பவரால், காஹிருவின் மலைக் கோட்
டைக்கு நீல் நதியின் ஜலத்தைக் கொண்டு போவதற்காகக் கட்டப்
பட்ட"தென்று அஹ்மது சொன்னார். கரீபின்கேள்விகளுக்கு சுருக்க
மானவிடைகொடுத்து சீக்கிரத்தில் காஹிருவுக்கு அவரைக்கொண்டு
போய்ச் சேர்க்க வேண்டு மென்பதே அஹ்மதின் முக்கியகருத்தாக
விருந்தாலும், கரீபு தன் கண்ணுக் கெதிர்ப்படும் ஒவ்வொன்றையும்
விவரித்துக் கேட்டுக்கொண் டிருந்தமையால் அஹ்மதின் கருத்துக்
கிடம் வாய்க்கவில்லை. பிறகு, அவ் வாராவதியி லிருந்து கொஞ்சத்
தூரம் முன்னேறி ஒரு குன்றின்மேலாகி பல பாகங்களையும் பார்த்
ததில், கீழ்புறத்தில் அல்முகத்தம் என்ற மலையும், அக்குன்றின் அடி
வாரத்தில் காஹிருவின் கோட்டையும், மேல்புறத்தில் அல்அஹ்ரும்
என்ற பிரமாண்டமான மலையைப்போன்ற பூர்வீக மேன்மாடியும்
முன்பக்கத்தில் காஹிருவின் மற்ற மாட மாளிகைகளுந் தோற்றப்
பட்டன. அவைகளைப் பார்த்துவிட்டுக் கீழேயிறங்கி, பழய மிஸ்றின்
மற்ற கட்டிடங்களையும் பார்த்துக்கொண்டு, புதிய மிஸ்ருகிய
காஹிருவுக்குவந்து, தெருக்களைச் சுற்றிப்பார்க்க ஆரம்பித்தார்கள்.
கரீபு, சரிகை வேலை செய்த விபஹுன் தேசத்து அகன்ற சட்டை
யிட்டு, பொன்னூலிழைத்த தைலஸான் என்னும் தலைப் போர்வை
யைத் தலையிற்போட்டு, அதற்குமேலே சரிகைத் தொப்பி யணிந்து,
குதிரைமேல் சவாராகி வருவதையும், அவரின் பிரகாசமான முகத்
தின் அழகையும் பார்த்துப் புதுமை யடையாதவர்கள் அக் காஹி
ருப்பட்டணத்துள் ஒருவருமில்லை.

காஹிருவின் ஜனத்திரளையும், அவ்வூரின் விசாலமும் ஒழுங்கு
மான தெருக்களையும், அத்தெருக்களின் நடுவில் அமைக்கப்பட்
டிருந்த பூங்காவனங்களையும் கரீபுபார்த்து சந்தோஷமடைந்து முன்
னேறிச்சென்று, ஆங்காங்குள்ள பற்பல விசித்திரமான மாடமாளி
கைகளையும், ஜாமிஉ-தூலூன், ஜாமிஉ-சுல்தான்ஹசன், ஜாமிஉல்-
கவ்ரீ, அல்ஜாமிஉல்-அஜ்ஹர், ஜாமிஉ-கலாவூன், ஜாமிஉ-காயிதபாயி,
ஜாமிஉல்-பர்கூக் முதலான பிரதான பள்ளி வாசற்களையும் போய்ப்
பார்த்தார்கள். அப்போது கரீபைப்பார்த்து, "எஜமானே! நாம்
பார்த்துவிட்டுவந்த அல்ஜாமிஉல்-அஜ்ஹர் என்னும் தேவாலயத்தில்,



பிரதானமான அறபுக்கல்லூரி ஒன்றிருக்கிறது. அதில், அறபுப்
பாஷையில் பலவிதமான கல்விகளுங் கற்பிக்கப்படுகின்றன. உலக
முழுவதிலுமுள்ள அறபுக்கல்லூரிகளிலெல்லாம் இதுவே மஹாப்பிர
தானமானது. இதற்கு நிகரானபெயர்போன அறபுக்கல்லூரி, உலக
த்தி லெங்கும் இல்லை யென்பது நிச்சயம். பல பாகங்களிலுமுள்ள
இஸ்லாமானவர்கள் அறபுக்கல்வியின் தேர்ச்சியை விரும்பி, இங்கு
வந்துபடித்துத்தேறுவார்கள். இப்பொழுதுசுற்றேறக்குறைய15,000
மாணுக்கர்கள் கல்வி பயிலுகிறார்கள். இதில் கல்வி கற்கவரும் ஏழை
மாணுக்கர்களுக்கு, சாப்பாடு முதலான சகல செலவும், உபாத்தி
யாயரின்சம்பளமும், அப்பள்ளிக்கூடத்தின் பொக்கிஷத்தில் நின்
றுந்தான் செலவிடப்படும்" என்று அஹ்மது கூறினார். அதன்பின்
ஹுஸைனிய்யா, நஹ்ஹாசீன், கோரிய்யா, சலீபா, மன்சூர்பாஷா, தர்புல்
ஜமாமீஜ் என்னும் பிரபல்யமானதெருக்களையும், பாபுஷ்-ஷஅறிய்யா,
பாபுஷ்-ஷஅருவீ, பாபு-செய்யிதாஜெய்னப், பாபு-ஸஆதா, பிர்சதுல்-பீல்,
ஹம்ஜாவீ, ஸயாரிபு முதலானபிரதானஸ்தலங்களையும், ஆங்காங்குள்ள
விசித்திர மாடமாளிகைகளையும், சர்வ வல்லபக்கடவுளின் கிருபைக்
கடலுள் உதித்துவந்த மாட்சிமை தங்கிய கடைத்தீர்க்க தரிசியாகிய
நாயகம் முஹம்மதுநபி(ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்)அவர்களின்
சந்ததியார்களான இமாம்ஹுஸைன், செய்யிது ஜய்னுல் ஆபிதீன்,
ஜய்னபுநாயகி, நபீசாநாயகி, ஸகீனாநாயகி, றுகையாநாயகி, இமாம்ஷாபி
இய்யி (றலி) முதலானவர்களுடைய சமாதி ஸ்தானங்களையும், இஸ்
லாமானவர்களில் முதலாவதாக அவ்வூரை ஜெயித்து அரசு புரிந்து
வந்த சேனாதிபதி, அம்றுபுனுல்ஆஸ் (றலி) அவர்களின் சமாதி ஸ்தா
னத்தையும் தரிசனைசெய்து, முன்னேறி, அவ்வூரிலுள்ள ஔஷதசாலை
கள், கைத்தொழிற்சாலைகள், கண்காக்ஷி சாலைகள், யுத்தப்பயிற்சி
சாலைகள் முதலான பிரதான ஸ்தலங்களையெல்லாம் ஒவ்வொன்றாகப்
பார்த்துக்கொண்டு, கடைசியாக, ஹதீகதுல் - அஸ்பகிய்யா என்னும்
சிங்கார வனத்துக்குச் சமீபமாக வந்து சேர்ந்தார்கள்.

10-வது அத்தியாயம்.

## அற்புத மிதியல்.

மேலே கூறிய ஹதீகதுல்-அஸ்பகிய்யா என்னுஞ் சிங்காரவனம்,
ஒருபெரிய ஏரியின் நடுவிலுண்டாக்கப் பட்டிருக்கிறது. அதனுள்

பிரவேசிப்பதற்காகப் போடப்பட்டிருக்கும் வாராவதி வழியாக,
ஏராளமான ஜனங்கள் கும்பல் கும்பலாக அச்சிங்காரவனத்திற்கு
விரைந்துபோய்க் கொண்டிருக்கிறார்கள். அஹ்மதும், கரீபும்,அவரின்
பரிவாரங்களும் அவ்வனத்துள் பிரவேசித்தார்கள். அப்போது
கரீபை அஹ்மது பார்த்து, "நாம் நல்லசமயத்தி லிங்குவந்து சேர்ந்
தோம். இவ்விடத்தில் இன்றையதினம் ஒரு அற்புதம் நடக்கப்
போகிறது. அதற்காகவே இவ்வளவு ஜனங்களும் வந்து கூடியிருக்
கிறார்கள். நாமும் அவ்வற்புதத்தைப் பார்த்துவிட்டுப் போகலாம்.
இவ்விடத்தில் திருடர்கள் அதிகமாக வந்திருப்பார்கள். ஆகையால்,
தாங்களும் மற்றவர்களும் மெத்தஜாகிரதையாக இருக்கவேண்டு"
மென்றுசொன்னார். அவரின் சொற்களைக் கேட்டுக்கொண்டிருந்த
கரீபு, திருடர்களைப்பற்றிய பயத்தை ஒருபொருட்டாக் வெண்ணு
விடினும், தனக்கு எச்சரிக்கை செய்ததற்காக அஹ்மதுக்கு துதி
கூறினார்.

பிறகு, அஹ்மது கரீபைப்பார்த்து "நாயகமே! இதோ, நீண்ட
தொங்கற்குப்பாயமிட்டு, பாரியதலைப்பாகையணிந்த ஓர் சற்குரு,
ஜாதிக்குதிரையி லேறிவருவதையும், அக்குதிரை நாட்டிய மாடிக்
கொண்டு முன்னேறுவதையும் பார்த்தீர்களா?" என்றுகேட்டார்.
கரீபு, "ஆம், பார்த்தேன். அவர்யார்? சொல்லு" மென்றார். அதற்கு
அஹ்மது, "நாயகமே! இவர், சைகுஸ்-ஸஅதிய்யா என்றழைக்கப்பெ
றும் ஓர்சற்குரு. இவர்இன்னுஞ்சற்றுநேரத்திற்குள்ளே, மனிதர்களி
ன் முதுகுகளின்பேரில் தன்குதிரையை நடத்திச்செல்வார். அவ்வற்
புதத்தைத் தாங்கள் பார்ப்பீர்களாக" என்றுகூறி, அவ்வற்புதம் நன்
ருகத்தெரியுமாறு கரீபை ஒருமேட்டுத்தானத்தில் நிற்கும்படிக்குச்
செய்துவைத்தார். சற்றுநேரத்திற்குள், அங்குநின்ற ஜனங்கள் ஒரு
வரின்பின்னொருவராக எள்ளிடவிடமில்லாது, தளவரிசை யிட்டது
போலக் குப்புறப்படுத்துக் கொண்டார்கள். அச்சற்குரு ஏறியிருக்
கும் குதிரையின்கடிவாளக்கயிற்றை யிரண்டுபேர்பிடித்துக்கொண்டு,
குப்புறக்கிடக்கும் ஜனங்களின் முதுகுகளின்மேலே அக்குதிரையை
யிழுத்துக்கொண்டு போனார்கள். ஒருவன்பேரில் அக்குதிரையேறிக்
கடந்தவுடனே, அவன்எழுந்தோடுகிறான். இவ்வாருக ஒவ்வொருவர்
பேரிலும் குதிரைநடத்தப்பட்டது. அவர்களடங்கலும் யாதொரு
வருத்தமின்றி சந்தோஷமாகவே எழுந்திருக்கிறார்கள். மேற்படி



சற்குருவின்குதிரைக்கால் மிதியால்மோட்சபதவி கிடைக்குமென்று
ஜனங்கள்வந்து, அவ்வாறுபடுத்துக்கொள்ளுகிறது. அவ்வேடிக்கை
யைப்பார்த்துக்கொண்டிருந்த கரீபு நிரம்ப ஆச்சரியப்பட்டார். அப்
போது சூரியன் உச்சிசாய்ந்தது.

அஹ்மது கரீபைப்பார்த்து; "நாயகமே! இப்போது மத்தியான
மானபடியினாலேயும், தாங்களும், மற்றவர்களும் பசித்திருக்கிறபடி
யினாலேயும், இதற்குக் கொஞ்சம் தூரத்திலிருக்கிற என்வீட்டுக்குச்
சென்று, பசியாற்றிக்கொண்டு சாயரக்ஷை இன்னும் நாம் பார்க்க
வேண்டியிருக்கிற பி[illegible] பார்த்துவிட்டு, றவ்லாத்
தீவுக்குப்போகலாம், வாருங்க" ளென்று மேட்டின்மேலே நின்ற
கரீபையும், மற்றவர்களையுங் கூட்டிக்கொண்டு, முன்தாங்கள் ஏறி
வந்தபாலத்தின்வழியாக, தன்வீட்டைநோக்கிநடந்து, கைரூன் என்
னும் தலத்திலிருக்கும் ஒருவுயரமானவீட்டின் முன்வாசலுக்கு வந்
தார். அவ்வாசலில், வெள்ளைத்தலைப்பாகையணிந்த ஒருகாவற்காரன்
நின்றான். அஹ்மது அவனையழைத்து, "விருந்தாளிகள் வந்திருப்ப
தால், பெண்டுகளை அந்தப்புரத்துக்குப் போகச்சொல்லென்று இரக
சியமாக அவனுக்குச்சொன்னார். அவன் உடனே உள்ளேபோய்
சொல்லிவிட்டுத் திரும்பினான். அதன்பின், கரீபையும், மற்றவர்களை
யும் அஹ்மது கூட்டிக்கொண்டு, சபாமண்டபம் வந்து சேர்ந்தார்.
அவர்களனைவரும் அங்குபோடப்பட்டிருந்த நாற்காலிகள் மீதும்,
சோபாக்கள்மீதும் உட்கார்ந்தார்கள். உடனே காப்பிப்பானம் பரி
மாறுதல்செய்யப்பட்டது. கொஞ்சநேரத்திற்குள்ளே பகற்போஜன
மருந்தினார்கள். மறுபடியும் காப்பித்தண்ணீர் பரிமாறப்பட்டது.

பிறகு அஹ்மது கரீபைப்பார்த்து, "நாயகமே! சற்றுநேரம்
படுத்துக் கொள்ளுகிறீர்களா?" என்றுகேட்டார். அதற்கு கரீபு
"நல்ல" தென்று சம்மதித்தபடியினாலே, அவரை மேன்மாடிக்குக்
கூட்டிக்கொண்டுபோய், அங்கே சுகமானகாற்று வீசக்கூடிய ஓரிடத்
தில் போடப்பட்டிருந்த சோபாவின்மீது படுத்துக்கொள்ளும்படிக்
குச்செய்தார். கரீபு, தன்மேலங்கிகளைக்கழற்றி, கொளுக்குகளில்
மாட்டிவிட்டு, சோபாவின்மீது சாய்ந்துக்கொண்டிருந்தார். அவ்
வீட்டிற்கெதிர்க்க ஒருவீடிருந்தது.

## 11-வது அத்தியாயம்.

## இராஜகுல மாது.

—:0:—

ஸரீபு சோபாவின் பேரில் சாய்ந்த சற்று நேரத்திற்கெல்லாம்,
மஹாதுயரமான அழுகுரற்சப்தம் அவர்காதில் விழுந்தது. அதை
ஸரீபு செவிசாய்த்துக்கவனித்ததில், எதிர்த்த வீட்டிலிருந்து வருகிற
அழுகைச்சத்தமாக நிதானப்பட்டது. அவர் உடனே எழுந்து,
ஜன்னல்வாயிலால் உற்றுப்பார்த்தார். அவ்வீட்டில் பூரணச்சந்திரன்
போன்ற முகவிலாசத்தையுடைய ஓர்வாலிபஸ்திரீயை, கேவலவுடை
யணிந்திருக்கும் வயதால் முதிர்ந்த ஒருவன் கொஞ்சமேனும் இரக்க
மில்லாமல் அடிக்கிறதையும், அப்பெண் கெஞ்சிக்கெஞ்சி யழுவதை
யும் கண்டார். அவள்எவ்வளவுதூரம் கெஞ்சிக்கேட்டும் அப்பாதகன்
அடியைநிறுத்தவில்லை. அதனால் ஸரீபுக்கு அப்பெண்மணிபேரிலிரக்க
மும் அப்பாதகன்பேரில் கோபமுமுண்டாகி, தன்பரிவாரத்தாரில்
ஒருவிபனுனியை அழைத்து, "சீக்கிரம் இந்த எதிர் வீட்டிற்குச்
சென்று, அங்கு அடிபடும் பெண்ணைக் காப்பாற்றுவாயாக" என்று
கட்டளையிட்டார். அதுபோல் விபனுனி அஹ்மதிடத்திற்குச்
சென்று, அவ்வீட்டுக்குப்போகும் பாதையைக்கேட்டான். அஹ்மது
அந்தவீட்டுக்குப் போகிறவழியைக்காட்டியதுடன் "இக்கருமத்தை
வெளியிடவேண்டா" மென்று விபனுனிக்குச்சொல்லிவிட்டு, ஸரீபிரு
க்கும் மேன்மாடிக்குவந்தார். மிருதுமேனியாளான அப்பெண் அடி
பொறுக்கமாட்டாமல் சுழன்று சுழன்று விழுவதைப்பார்த்த ஸரீபு,
தனக்குண்டான உக்கிரகோபத்தால், அப்பெண்ணைக் காப்பாற்றுவ
தற்காக, தானனுப்பியமனுஷன் அவ்வீட்டுக்குள் செல்லுகிறவரைக்
கும் பொறுத்திருக்க முடியாமல், ஜன்னல் வழியாகப் பாய்ந்து விட
லாமா? என்று எண்ணினார்.

அப்படிக் கிருக்கும்போது யாரோ தன் முதுகுப் புறத்தில்
நடந்துவருகிற சப்தம் காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தார்.
அஹ்மது வருகிறார். அவரைப்பார்த்து, "அஹ்மதே, இவ்வேழை
மனுஷியைக் கிஞ்சித்தேனும் இரக்கமின்றி, கெஞ்சக் கெஞ்ச அடிக்
கின்றானே; மிருகம்போன்ற இவன் யார்?" என்று கேட்டார்.
அதற்கு அஹ்மது "நாயகமே! அவர்களின் வரலாற்றைச் சொல்லு
கிறேன்" என்று சொல்லி வாய்மூட முன்னரே, அப்பெண்ணைக்



காப்பாற்றச் சென்ற விபனுனியின் சப்தம் கேட்டது. ஸரீபும் அஹ்
மதும் ஜன்னலால் எட்டிப் பார்த்தார்கள். அடிபடும் பெண்ணைக்
காப்பாற்றச் சென்ற விபனுனி விரைந்து சென்று, அடித்துக்
கொண்டிருந்த மனுஷனை யுதைத்துத் தள்ளிவிட்டு, அப்பெண்ணை
அஹ்மதுடைய வீட்டுக்குக் கொண்டு வருவதைக் கண்டார்கள்.
விபனுனி அப்பெண்ணை வீட்டுக்குள்ளே கொண்டுவந்து சேர்த்தான்.
அவளைப்பார்க்க மூர்ச்சை யடைந்திருந்தாள். அவளை அஹ்மது
அந்தப்புரங் கொண்டுபோய்ச்சேர்த்தார். அங்கே அவளின்மூர்ச்சை
தெளியும்படிக்கான பரிகாரம் செய்யப்பட்டது. அப்பெண்ணை
யடித்த மனிதன் "என் பெண்சாதியை நீங்களெப்படிக்குக்கொண்டு
போகலாம். அவள் எனக்குச் சொந்தமானவ ளல்லவா? அவளை
யென்னிஷ்டப்போலச் செய்ய எனக்கதிகாரமிருக்கிறதே" யென்று
சப்தமிட்டுக்கொண்டிருந்தான். அவனின் இரைச்சலைக்கேட்டு ஸரீபு
மிகுந்த புதுமை யடைந்து, அஹ்மதிடத்தில் "அவன் சொல்கிறது
உண்மைதானா?" என்று கேட்டார். அதற்கு அஹ்மது, "உண்
மைதா" னென்றார். ஸரீபு "அவ்விருவரின் அந்தஸ்தையும் சீர்தூக்
கிப் பார்க்கப் புகுந்தால், வானத்திற்கும் பூமிக்குமுண்டான வித்தி
யாசங் காணப்படுகிறதே" யென்றார். அதற்கு அஹ்மது, "தாங்கள்
சொல்வதிற் சந்தேகமில்லை. அவர்களின் வரலாற்றைத் தங்களுக்கு
விவரிக்கு முன்னர், இம் மிஸ்று தேசத்தின் ஆக்ஷியைப்பற்றி சில
முந்திச் சொல்லவேண்டி யிருப்பதால் அதை முந்திக் கூறுகிறேன்;
கேட்பீர்களாக" என்று சொல்லத் தொடங்கினார்.

அதாவது - இம் மிஸ்று தேசம், விசேஷமாக மூவகைக் கோட்
பாட்டினர்களால் ஆளப்பட்டிருக்கிறது. 1-வது, கி. மு.5005 முதல்
கி. பி. 380வரையில் ஆக 5385வருஷம் அஞ்ஞானிகளாலும், 2-வது
380 முதல் 640 வரையில் 260வருஷம் கிறிஸ்தவர்களாலும் ஆளப்
பட்டுவந்தது. 3-வது, கி. பி. 640முதல் நாளதுவரையில் இஸ்லாமி
களின் ஆக்ஷியிலிருக்கிறது. ஆனால், இஸ்லாமிகளாகிய உதுமானியரின்
அரசாக்ஷிகாலத்தில், உலகமெங்கும் பேர்வாங்கிய சாமர்த்தியரும்,
யுத்ததந்திரருமாகிய (Napolian Bonnaparte) நப்போலியன்போன
பார்ட் என்னும் பிரான்ஸிய சேனாதிபதியானவர், மிஸ்றில் உட்கலகம்
விளைத்துக்கொண்டிருந்த அரச வமிசத்தாரை யடக்குவதற்காக
(Stamboul) ஸ்தம்பூலின் சுல்தான் அவர்களால் தாம் அனுப்பப்பட்

டிருக்கிறதாக மாறுபாடு பேசிக்கொண்டு, மிஸ்றின் எல்லையுட் பிர
வேசித்து அரச வமிசத்தாருடன் யுத்தம் புரிந்து ஜெயித்து, கி. பி.
1798 முதல் 1801 வரையில், அதாவது மூன்று வருஷம் ஆட்சிபுரி
ந்துவந்தார். கரவடமாக மிஸ்றைப்பிடித்துக்கொண்ட பிரான்ஸியர்
களை இத்தேசத்தை விட்டும் விரட்டுவதற்காக (Ottoman) உது
மானிய அரசாங்கத்தாரால் அட்மிரல் ஹுசைன் கப்பித்தான் பாஷா
வின் கைக்கீழ் அனுப்பப்பட்ட சேனுவீரர்களில் 300 பேர்களடங்கிய
(Macedonia) மஸிடோனியா பட்டாளத்தின் தளகர்த்தர் அலிஆகா
வுக்கு உபதளபதியாக இப்போது இம்மிஸ்றை ஆட்சிபுரிந்துவருகிற
எங்கள் முஹம்மதுஅலிபாஷாவும் அனுப்பப்பட்டார்கள். மேற்படி
தளகர்த்தர் அலிஆகா, சுகவீனங்காரணமாக சுயதேசம் போகநேர்ந்
தமையால்; அவரின் பட்டாளத்திற்கு முஹம்மதுஅலிபாஷாவே தள
கர்த்தராக நியமிக்கப்பட்டார். பிரான்ஸியர்களுடன் செய்தயுத்தத்
தில் அவர்காட்டிய வீரபராக்ரம யூகத்தினலும், மிஸ்றியர்பேரில்
அவர் பாராட்டிய அன்பினுலும் நாளுக்குநாள் உத்தியோகத்தா
லுயர்த்தப்பட்டுவந்து, கடைசியாக கி. பி. 1805-ம் ஞு ஜூலை 9வ
மிஸ்ருக்கு தேசாதிபதியாகநியமிக்கப்பட்டார். இவர் மஸிடோனியா
மாகாணத்தில் ஸ்தம்பூலுக்கு 320 மைல். தூரத்திலுள்ள 8000 குடி-
ஜனங்களையுடைய குவாலா என்னும் பட்டணத்தில் கி. பி. 1768-ல்
பிறந்தார். இவரின் தந்தையாகிய இபுறுஹீம் ஆகாவுக்கு 18 பிள்ளை
கள் பிறந்தார்கள். முஹம்மதுஅலிபாஷா தவிர மற்றவர்களிறந்து
போனார்கள். அதனால் இவரை தந்தையர் மிகுந்த கிருபையுடனும்
அருமையுடனும் வளர்த்துவந்தார். முகம்மதுஅலிபாஷா நான்கு
வயதுக் குழந்தையாக விருக்கும்போது, இவரின் தந்தையராகிய
இபுறுஹீம்ஆகா திடீரென்று இறந்துபோனார். அவரின் சகோதர
ராகிய தூசூன்ஆகாவால் முகம்மதுஅலிபாஷா போஷிக்கப்பட்டு
வந்தார். கொஞ்சகாலத்திற்குள்ளே தூசூன்ஆகா, உதுமானிய
கவர்ண்மெண்டாரால் குற்றஞ் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டார்.
சொற்ப நாட்களுக்குள்ளேயே சிறிய தந்தையரையும் இழக்க நேர்ந்
தது. இவரைப் போஷிக்க இவரின் நெருங்கிய பெந்துக்களில் யாரு
மில்லை. அதனால் அவ்வூர்ப்பிரஜைகளுக்குள்ளே இவருடைய கெதி
யெவ்வாருகப் போகிறதோ என்னும் பேச்சு நடமாடிக்கொண்
டிருந்தது. அப்படியிருக்கும்போது, இவரின் தந்தையர் இபுறுஹீம்



ஆகாவின் சினேகிதராகிய ஜர்பத்ஜீ-பறுவுஸ்தா என்பவர் இவர்பேரி
லிரக்கமுற்று இவரைஆதரித்துவளர்த்துவந்தார். அவரிடத்திருந்தே
இவர் வளர்ந்து வந்தார். இவருக்கு வேண்டுமான சகலவித்தைகளும்
கற்பிக்கப்பட்டன. இவர் சிறுவயதிலேயே யுத்தப்பயிற்சியில் தேர்ச்சி
யடைந்தார். அதனால் உதுமானிய கவர்ண்மெண்டில் ஒரு உத்தி
யோகத்தி லமர்ந்து, 18-ம் வயதில் ஓர் தலைவரானார். அப்போது
தன் குடும்பத்தில் ஒரு சீமாட்டியை விவாகஞ் செய்துகொண்டார்.
இவருக்கு இபுறுஹீம், தூசூன், இஸ்மாயீல் என்னும் மூன்று ஆண்
மக்களும் இரண்டுபெண்களும் ஆக ஐந்து குழந்தைகள் பிறந்தார்கள்.
இவர் கவர்ண்மெண்டு உத்தியோகத்தி லிருந்தாலும், புகையிலைத்
தொழிலும், வேறு வியாபாரங்களும் செய்துவந்தார். அவ்வாறு
நடந்துவரும் நாளில்தான் இவரின் போஷகராகிய ஜர்பத்ஜீ-பறு
வுஸ்தா என்பவரின் புத்திரர் அலிஆகாவுக்கு உபதளபதியாக அனுப்
பப்பட்டார்.

மிற்க, கி. பி. 640-ல் சேனாதிபதி அம்றுபுனுல்ஆஸ் அவர்களால்
இம் மிஸ்று தேசம் ஜெயிக்கப்பட்டது முதற்கொண்டு 10 இஸ்லாம்
அரச வகுப்பினர்களால் ஆளப்பட்டு வந்திருக்கிறது.

1-வது அல்குலபாஉர்-ருஷிதூன் கி. பி. 640 முதல் 661 வரைக்கும்
2-வது உமவிய்யா ... ,, 661 ,, 750 ,,
3-வது முதலாம் அப்பாஸிய்யா ,, 750 ,, 870 ,,
4-வது தூலூனிய்யா ... ,, 870 ,, 905 ,,
5-வது இரண்டாம் அப்பாஸிய்யா ,, 905 ,, 934 ,,
6-வது அஃஷீதிய்யா ... , 934 ,, 969 ,,
7-வது பாத்திமிய்யா ... ,, 969 ,, 1171 ,,
8-வது ஐயூபிய்யா ... ,, 1171 ,, 1250 ,,
9-வது ஸர்கேஷிய்யா ... ,, 1250 ,, 1517 ,,
இம்மிஸ்றை ஆண்டுவந்தார்கள்.
10-வது உதுமானிய்யா ... கி. பி. 1517 முதல்நாளிதுவரையில்
ஆக்ஷிபுரிந்துவருகிறார்கள்.

எதிர்த்தவீட்டில் அடிபட்ட பெண்மணி, இம்மிஸ்றை ஒன்ப
தாவதாக ஆண்டுவந்த ஸர்கேஷிய ராஜவமிசத்தி லுள்ளவர்கள்.
உலகத்தில் ஸர்கேஷியரே அழகிலும் புத்திகூர்மையிலும் பெயர்பெற்
றவர்கள். 8-ம் ஐயூபிய்யா அரசாக்ஷி காலத்தில் ஸர்கேஷியர்களுக்

குப் பற்பல வுத்தியோகங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. கி. பி.
1250 வரையில் அவர்கள் பற்பல வுத்தியோகங்களிலு மிருந்து
தேர்ச்சி யடைந்திருந்தபடியினலே, அதுமுதல் இவ்வூரை அவர்
களே ஆள ஆரம்பித்து கி. பி. 1517 வரையில் ஆண்டுவந்தார்கள்.
மஹாவீரசூரராகிய ஊதுமானிய சுல்தான், முதலாம் ஸலீம்பின்பாயஜீது
அவர்களால் கி. பி. 1517-ல் இவ்வூர் பிடிக்கப்பட்டு இப்போதும்
உதுமானியரின் ஆக்கினைக்குள்ளேயே யிருந்து வருகிறது. மேலே
கூறிய ஸர்கேஷியர்களுள் அரச வமிசத்தார்களாக விருந்தவர்கள்
உதுமானியரால் பற்பல உன்னத உத்தியோகங்களைப் பெற்று
அமீர்களாக இருந்து வந்தார்கள். ஆனல், இம்மிஸ்றின் தேசாதி
பதிகளாக உதுமானியரால் அனுப்பப்படும் பாஷாமார்களின் கட்
டளைக்கு ஒழுகி நடக்காமல் இடைக்கிடை ஸர்கேஷிய ராஜவமிசத்
தார்கள் தொந்தரவு கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அதனல்
அவர்களை அடியோடே தொலைத்தற்கு, உதுமானியர், தங்களின்
தேசாதிபதிகளின் மூலமாகப் பன்முறை முயன்றும் பயன்படாமற்
போயிற்று.

கடைசியாக எங்கள் அபந்தி, மிஸ்றின் தற்கால அஜீஜ், முஹம்மது
அலிபாஷா அவர்கள் 12-வருடமாக மேற்படி அரசவமிசத்தார்களை
நிர்மூலமாக்கநாடி, அதற்கான உபாயம் தேடிவந்தார்கள். முடிவில்
முஹம்மதுஅலி பாஷா அவர்களுக்கு சதியோசனையுண்டுபட்டு, அவ்
வரச வமிஷத்தார்க ளடங்கலையும் தாங்கள் இன்று காலையிற்கண்ட
காஹிறாமலைக்கோட்டைக்குள் வரும்படிக்குச்செய்து, அவர்களடங்
கலையுங் கொன்றுவிட்டு அவர்களின் பொருட்களைச் சூறையாடவும்,
அவர்களின் பெண்பிள்ளைகளைக் கல்யாணஞ் செய்துக்கொள்ளவும்
தன் போர்வீரர்களுக்குக் கட்டளை கொடுத்தார்கள். அதுபோல்
அவர்கள் நடத்தினர்கள். அதுமுதல் அவ்வரசகுடும்பப்பெண்கள்,
மரணத்தைவிடத் தீங்கான ரீதியிலாய்விட்டார்கள். மேன்மையுட
னும் சந்தோஷத்துடனும் சுகத்துடனும் வாழ்ந்துற்ற அரச குடும்ப
அமீர்களின் பெண்டுகளும், பிள்ளைகளும் தற்போது முஹம்மதுஅலி
பாஷா அவர்களின் போர்வீரர்களுக்கு அடிமைகளாய்விட்டார்கள்.
இப்பெண்கள் தங்களின் சுயாதீன காலங்களில் இப்போது தங்க
ளுக்குப் புருஷர்களாகவும், எஜமான்களாகவு மிருக்கிற போர்வீரர்
களைத் தங்களின் தொடுதோற்களைச் சுமக்கும் பணிவிடையிற் கூட



வைத்துக்கொள்ளமாட்டார்கள். சற்று முன்னர் அடிபட்ட இராஜ
குலஸ்திரீ அடித்த அந்த துஷ்டனுக்குப் பெண்சாதி யானதற்கும்
அதுவே காரணம். அந்த மூடன் எங்கள் அஜீஜின் போர்வீரருள்
ஒருவன். அப்பெண் ஓர் அமீரின் மனைவியர். அம்மூடன் அப்பெண்ணை
சொற்பத் தவறுதல்களுக்கெல்லாம் அடிப்பான். இவ்வேழைப்பெண்
பத்து வருடமாக அம்முரட்டாத்துமாவிடத்தில் அகப்பட்டு அடி
பட்டே வருகிறள். கள்ளு, சாராயம் முதலான லாகிரி வஸ்துக்களை
அவன் குடித்துவிட்டு வந்து, ஒவ்வோரிரவும் அப்பெண்ணை தாங்கள்
கண்டவிதமாக அடிப்பதே அவனுடைய வழக்கம்'' என்று அஹ்மது
சொல்லி முடித்தார்.

அஹ்மதின் வார்த்தைகளைச் செவிசாய்த்துக் கேட்டுக்கொண்
டிருந்த கரீபு, தன்விழிகளில் நின்றும் கண்ணீர்வடியப் பரிதாபப்
பட்டுக்கொண்டிருக்குஞ் சமயத்தில், அஹ்மதுடைய வீட்டுக்குள்
ளிருந்துஒருபணிப்பெண்வந்து, அஹ்மதிடத்தில் ''என்னெஜமானே!
அமீரவர்களைச்சந்திப்பதற்கு சபாமண்டபத்தினுள்ளேவர, காமிலா
நாயகி நாடுகிறர்க'' ளென்றள். அஹ்மது கரீபைப்பார்த்து, ''நாய
கமே! நாம் பேசிக்கொண்டிருந்தோமே அப்பெண்மணிதான்''
என்று சொல்லிவிட்டு, ''அவர்களை உள்ளேவரவிடுங்க'' ளென்று
தாதிக்கு உத்தரவு கொடுத்தார். தாதிபோய் காமிலாநாயகிக்குச்
சொன்னள். உடனே காமிலாநாயகி உள்ளேவந்து, கரீபின் காலில்
விழுந்தழுது, ''என்எஜமானே! நான் தங்களிடத்தில் அடைக்கலம்
புகுந்தேன். தங்களிடத்தில் சாளயப்பாட்டுடனும் நம்பிக்கையுட
னும் கெஞ்சிக்கேட்கிறேன். தங்களுடைய தகப்பனரவர்களின் சிர
சின்பேரில் சத்தியமாக அந்தமுரடனின் கஷ்டத்தினின்றும் என்னை
விடுதலாக்கிவைக்கவேண்டும். என்னை இவ்வூரில்வைக்காமல் தங்கள்
மனிதர்களின் மூலமாகத் தாங்கள் நாடியவிடத்திற்கனுப்பிக்கவேண்
டும். தங்களுடைய மனிதர்களோ மிகுந்த பலசாலிகளாகக் காணப்
படுகிறர்கள். மிருகம்போன்ற அந்தமுரடனின் தீங்கில் நின்றும்
என்னை அவர்கள் காப்பாற்றுவார்களென்ற நம்பிக்கையும் எனக்
குண்டாயிருக்கிற'' தென்று மிகுந்தவணக்கத்துடன் கேட்டுநின்றர்
கள், கரீபு, காமிலாநாயகி யவர்களின் வார்த்தைகளைக்கேட்டு மிகுந்த
இரக்கமுற்று, அவர்களை யுட்காரச்செய்து, ''என்சிறியதாயாரே!
தாங்கள் யாதொன்றிற்கும் பயப்படவேண்டாம். இன்றிரவு கடவுளி

வுதவியால் என் தந்தையரிடத்தில் தங்களுடைய சங்கதிகளைச்சொல்
லிக்காட்டி, அந்தமுரடனைவிட்டும் தங்களை நீக்கிவிடும்படிக்கான
வாக்குத்தத்தமும் அவர்களிடத்தில் வாங்கிக்கொள்ளுகிறேன். எங்க
ளுடனே தாங்களும் லிபனுன் தேசம்போகலா" மென்றார். "அப்
படியே உண்டாகக் கடவ" தென்று காமிலாநாயகி சொன்னார்கள்.

பின்பு சரீபு அஹ்மதைப்பார்த்து, "இப்பெண்ணின் சங்கதி
களை நான் என் தகப்பனாரவர்களிடத்தில் சொல்லிக்காட்டவேண்டிய
திருப்பதால், இவர்கள் நாளைக்காலைவரையில் உம்முடைய வீட்டி
லிருக்கலாமா?" என்று கேட்டார். அதற்கு அஹ்மது, "நல்லது,
அப்படியே ஆகட்டும். ஆனால், ஏதேனும் தொல்லையுண்டாகு மென்ப
தைப்பற்றித்தான் யோசிக்கிறே" னென்றார். சரீபு, "அஹ்மதே!
நீர் யாதொன்றிற்கும் யோசிக்கவேண்டாம். நடந்த காரியங்களை விபர
மாக நான் என் தகப்பனாரவர்களிடத்திற் சொல்லிக்காண்பிப்பே"
னென்றார். அதன்பின்னர் காமிலாநாயகி சந்தோஷத்தினால் சரீபின்
நெற்றியை முத்தமிட்டு, "என்னை மறந்து விடக்கூடா" தென்று
மிகவும் உருக்கமாக சரீபைக் கேட்டுக்கொண்டார்கள். சரீபு உறுதி
வாக்களித்தார். அவர்கள் சரீபை மிகமிகத்துதித்து, மனப்பூரிப்
புடையவர்களாக அந்தப்புரத்துக்குச் சென்றார்கள். அப்பெண்ணின்
புருஷனாகிய போர்ச்சேவகன், "அமீர்பஷீரின் மகன் சரீபுடைய
கட்டளைப்படிக்கு அவருடைய வேலைக்காரன் என்பெண்சாதியைக்
கொண்டுபோய்விட்டா" னென்று மிஸ்றின் சேனாதிபதியிடத்தில்
பிராதுகொடுத்தான். "தேசாதிபதியாகிய முஹம்மதுஅலி பாஷா
வுக்கு அமீர்பஷீர் மெத்தநேசமுடையவராக இருப்பதால், அந்தஅமீ
ரின்பிள்ளைபேரில் கொண்டுவரப்பட்டவழக்கு ஒப்புக்கொள்ளப்பட
மாட்டா" தென்று சேனாதிபதி வழக்கைத் தள்ளிவிட்டார். அப்
போர்வீரன், "வழக்கிற்குத்தான் இடமில்லையே; யாரையாவது து
தனுப்பி, நம்முடைய பெண்சாதிக்கு நல்லவார்த்தைசொல்லி வசப்
படுத்தி திருப்பிக்கொள்ளவேண்டு" மென்றிருந்தான்.

பின்பு, சாயங்தரம் அஹ்மது, சரீபையும் அவரின் பரிவாரங்
களையும் கூட்டிக்கொண்டு, காஹிரிப்பட்டணத்தில் பார்க்கவேண்டி
யிருந்த மற்றவிடங்களையுஞ் சுற்றிக்காட்டிக்கொண்டு, கடைசியாக
அவ்வூரின் மலைக்கோட்டை வாசலுக்குவந்துசேர்ந்து சரீபைப்



பார்த்து, "நாயகமே! நான் முன்சொன்ன மலைக்கோட்டையிதுதான்.
நியாய சபையும் இதற்குள்ளேதானிருக்கிறது. இக்கோட்டைக்
குள்ளேதான் மேலே நான்சொல்லியிருக்கிற ஸர்கேஷிய அரசவமிசத்
தார்கள் கொல்லப்பட்டார்கள்." என்று சொன்னார். அப்பால்கொஞ்
சம் முன்னேறினார்கள். அக்கோட்டைவாசலில், முழங்கால்வரையில்
(Boots) நெடும்பாதரக்ஷைகள்மாட்டி, அதற்குமேலே காற்சட்டை
யுடுத்து, சரிகைவேலைசெய்த, புயகிருதுகளமைந்த, ஐந்துபொத்தான்
களுள்ள சகலாத்துச்சட்டையணிந்து, பலவர்ணப்பட்டுவார் இடுப்
பிற் பூட்டி, அதில் கைத்துப்பாக்கியொன்றும் குற்றுடைவாளொன்
றுஞ்சொருகி, இடப்புறத்தில் நீண்டவாளொன்று தொங்கவிட்டு, பின்
புறம் கொஞ்சம்சாய்வாக நீண்டகுஞ்சத்தையுடைய துருக்கித்தொ
ப்பி தலையில்தரித்து, உயரமும், அவ்வுயரத்திற்குத் தக்கபருமனும்,
பருத்தமீசையும், கூர்மையான பார்வையும், சுத்தவீரத்தனத்தைக்
காட்டக்கூடிய முகமும் உடைய ஒருவர் உலாவிக்கொண்டிருக்கிற
தை சரீபு முதலானவர்கள் கண்டார்கள். அவ்வுத்தியோகஸ்தரிடத்
தில் கோட்டைக்குட்புகுத அஹ்மது உத்தரவுகேட்டார். அவர்
உத்தரவுகொடுத்தார். சரீபு முதலானவர்கள் உள்ளேபுகுந்தார்கள்.
'வழியிற்கண்ட, குறித்த உத்தியோகஸ்தர்யார்?' என்று சரீபு அஹ்ம
திடத்திற்கேட்டார். அதற்கு, "அவர், பராக்கிரமசாலிகளாகிய அல்
பானிய சாதியிலுள்ளவர். அந்தசாதியாருள் 4000பேர், முஹம்மது
அலிபாஷா அவர்களின் மெய்க்காப்பாளர்களாக இருந்திருக்கிறார்க"
ளென்று அஹ்மது கூறினார். சரீபு முதலானவர்கள் கோட்டைவாச
லுக்குள்ளே புகுந்துவருகிறவழியில் ஒருமைதானமும், அதில் ஒரு
மணல்மேடும் தென்பட்டன. அதைக்கடந்து, பாபுல் அஜபு என்னும்
இரண்டாம் வாசலுக்குவந்தார்கள். அப்போது அஹ்மது சரீபைப்
பார்த்து, "எஜமானே! அந்தவாசலுக்குள்ளாக முன்னரே, இவ்வாச
லையும், அம்மணல் மேட்டையும் கூர்க்கப்பார்த்து, ஞாபகத்தில்
வைத்துக் கொள்வீர்களாக. அதைப்பற்றிப் பின்னால் பேசப்படப்
போது" மென்றார்.

அப்பால் அவ்வாசலில்நுழைந்து, மலைக்கற்களால் இரண்டரு
கிலும் கரடுமுரடான சுவர்களிடப்பட்ட ஒருபாதைவழியாகநடந்து
மூன்றும்வாசலுக்குவந்து, கோட்டைக்குள்ளானார்கள். அது, மலையடி
வாரத்தி லுண்டாக்கப்பட்ட நானாவித மாடமாளிகைகளை யுடைய

ஒருசிற்றூர் போன்றிருந்தது. அப்பொழுது அஹ்மது கரீபைப் பார்த்து, "பாபுல் அஜபு என்னும் இரண்டாம் வாசலுக்கும், இந்த மூன்றாம்வாசலுக்கும் இடைநடுவிற்றான் இராஜவமிஷத்தலைவர்கள் கொல்லப்பட்டார்க" ளென்றார்.

கரீபு, "அச்சம்பவம் எவ்வாறு நிகழ்ந்தது, விஸ்தரிப்பீராக" என்று அஹ்மதைக்கேட்டார். அஹ்மது, "எஜமானே! அரபிநாட்டிற் கலகம் விளைத்து, (Mecca) மக்கா, (Medina) மதீனு முதலான ஊர்களைத் தம்வசப்படுத்திக்கொண்ட வஹ்ஹாபிகளையடக்கி, அத்தேயங்களைவிட்டும் அவர்களை விரட்டற்காக, தன்மகன் தூசூன் பாஷாவை அனுப்பும்விஷயத்தில், மாட்சிமைதங்கிய நாயகம், உதுமானியசுல்தான் மஹ்மூதுசான் அவர்களனுப்பியிருக்கிற பர்மானை வாசித்தும், வாளாயுதத்தை தூசூன்பாஷா வுக்குக்கொடுத்தும் பிரயாணப்படுத்துதற்காகக் கூடப்போகிற நியாயசபைக்குச் சமுகங்கொடுப்பதற்கென, ஸர்கேஷிய அரசவமிஷத்தலைவர்கள் சற்றேறக்குறைய 400 பெயர்கள் முஹம்மதுஅலிபாஷா அவர்களால் அழைக்கப்பட்டார்கள். அத்தலைவர்கள் தத்தம்உத்தியோகவுடையணிந்தவர்களாக இக்கோட்டைக் குள்ளிருக்கிற இராஜசபாமண்டபத்திற்கு வருவதற்காக, கி. பி. 1811-ம் வரு மார்ச்சுமீ 1உ வெள்ளிக்கிழமை பகற்காலத்தில், எங்கள் முஹம்மதுஅலிபாஷா அவர்களின் அரண்மனையில் வந்துகூடினார்கள். அவ்வரண்மனையில் அத்தலைவர்களுக்கு காப்பிநீர் பரிமாறப்பட்டது. ஸர்கேஷிய அரசகுடும்ப அமீர்மார்களின் தலைவர் ஷாஹீன்பேயும் அங்குவந்திருந்தார்.

இதற்குக்கொஞ்சந்தூரத்திலிருக்கிற ராஜசபைக்கு வருதற்காகக் குறிக்கப்பட்டகாலம் சமீபித்தது. அங்கிருந்த சகல அமீர்களையும் எழும்பும்படிக்கு முகம்மதுஅலிபாஷா கட்டளையிட்டார். உடனே சகலருமெழுந்து அவரவரின் வாகனத்தில் சவாராகி வரிசையாகநின்றார்கள். முஹம்மதுஅலிபாஷாவும் அவரின் மெய்க்காவலரும், தூசூன் பாஷாவும் முன்னணியில்நின்றார்கள். முஹம்மதுஅலி பாஷாவின் அல்பானியபோர்வீரர்கள் புடைசூழநடந்து, பாபுல் அஜ்பென்னும்



இரண்டாம் வாசலையடுத்து நுழைந்து, ஹவ்ஷுல் ஆலி என்னும்,
இப்போது நாமிருக்கிற இந்த மூன்றாம்வாசலை முன்னோக்கி வந்தார்
கள். அவர்களுள் முன்னணியிலிருந்த மூவரும், இம்மூன்றாம்வாசலுக்
குள்ளாய் விட்டார்கள். அப்போது முஹம்மதுஅலிபாஷா திரும்பிப்
பார்த்தார். சகலஅமீர்களும், போர்வீரர்களும் 2-ம் வாசலைக்கடந்து
உள்ளுக்காய்விட்டதைக் கண்டவுடனே தன்மெய்க்காவலருக்கோர்
சைகை காட்டினார். அவர், முன்னரே செய்யப்பட்டிருந்த ஏற்பாட்
டின் பிரகாரம் போர்வீரர்களுக்கு சமிக்கை கொடுத்தார். 2-ம் வாச
லினதும், 3-ம் வாசலினதும் கபாடங்கள் அடைக்கப்பட்டன.
அதைக் கண்ணுற்ற அரசவமிசத்து அமீர்மார்கள், "இதேதோ சதி
மோசமாகக்காணப்படுகிற" தென்றுதிகில்கொண்டு, சுவர்களின்கரடு
முரடானகற்களைப்பிடித்தேறி ஓடிப்பிழைக்கமுயன்றார்கள். அவர்
களைவிட, (Albanians) அல்பானியர்கள் மலையேற்றத்தில் தேர்ந்தவர்
களானதால், அவர்களின் முயற்சிகைகூடவில்லை. பலதிசையாலும்
அவர்கள் சுடப்பட்டார்கள். அப்பொழுதும் அவர்கள் அவ்வபா
யத்தினின்றுந் தங்களை விலக்கிக்காக்கப் பிரயாசையெடுத்தார்கள்.
அதுவும் அவலமாயிற்று. அவர்களனைவரும் அங்கு கொல்லப்பட்
டார்கள். மேற்படி அமீர்களின் தலைவர் ஷாஹீன்பேயுங் கொல்லப்
பட்டார். ஆனால், இச்சபைக்கு சமுகந்தர அழைக்கப்பட்ட அமீர்
களுள் ஒருவர், யாதுகாரணத்தாலோ கொஞ்சிற்றுப்பிந்திவந்து இம்
மலைக்கோட்டையின்முதலாம்வாசலுட்பிரவேசித்துப்பார்க்க, பாபுல்
அஜ்பென்னும் இரண்டாம் வாசலுக்குள் சகலரும் புகுந்து விட்ட
தைக்கண்டு, 'நாம்மட்டில் தனித்தவனாக அங்கேகுவது அழகல்ல;
உள்ளேபோகிறவர்கள் திரும்பிவரும்வரைக்கும் இங்குதானேநின்று
அவர்களுடன் சேர்ந்து, வீட்டுக்குத்திரும்புவோ' மென்றுன்னி,
தான் முன்தங்களுக்குக் கியாபகப்படுத்திய மனான் மேட்டின்பேரில்
தன்குதிரையைநிறுத்திநின்றார். அங்ஙனம் நின்றசிலநிமிஷத்திற்குள்
வெடிச்சப்தம் கேட்டது. நாற்புறமும் திரும்பிப்பார்த்தார். முதல்
வாயிற்கதவும், இரண்டாம் வாசற்கதவும் சாற்றப்பட்டிருப்பக்

கண்டு, 'ஓஹோ! இதுவேதோ மடிப்பாகக்காணப்படுகிறது; நாமிங்கிருப்பது சரியல்ல; இதை விட்டுத்தப்பிப்பிழைப்பதே உசித'மெனக் கருதி, அங்குநின்றபடிக்கே தானேறியிருந்தகுதிரையை விசையாகத் தட்டி கோட்டைமதிலைத் தாண்டும்படிக்குப் பாயவிட்டார். அக்குதிரை மதிலைத்தாண்டி வெளியேவந்து விழுந்தது. குதிரை யிறந்துபோயிற்று." அவரின் கெதி யெவ்வாறாயிற்றென்பதை நாங்கள் இதுகாறும் அறவே கேள்விப்படவில்லை.

மேலேவிஸ்தரித்தவாறு அரசவமிஷ அமீர்கள் கொல்லப்பட்டபின்னர், முஹம்மதுஅலி பாஷாவின் யுத்தவீரர்கள் கோட்டையிலிருந்து வெளிப்பட்டு, "ஸர்கேஷிய அரசகுல அமீர்களின் தலைவர் ஷாஹீன்பே கொல்லப்பட்டா" ரென்றுவீதிகடோறுஞ்சென்று அபயமிட்டவுடன், கொல்லப்பட்ட அமீர்மார்களின் வீடுகளுட்பிரவேசித்து, பொருட்களைச் சூறையாடவும், பெண்களைச் சிறைவாரவுந் தொடுத்தார்கள். "ஷாஹீன்பே கொல்லப்பட்டா" ரென்னும் சமாசாரம் இவ்வூர்ப்பிரஜைகளுக்கு கடுந்த திகிலையுண்டாக்கி விட்டது. அமீர்மார்களின் வீடுகளில் அழுகையும் கூக்குரலுமாகவேயிருந்தன.

மறுநாட் காலையில் முஹம்மதுஅலி பாஷாவும் தூசூன்பாஷாவும் இக்கோட்டையிலிருந்து கீழிறங்கி, "கொள்ளையிடவும், சிறைவாரவுங் கூடா" தென்று வற்புறுத்தி, "இம்மிஸ்றின் எல்லையுள் ஸர்கேஷிய அரசகுல ஆண்மக்களைக் கண்டால், உடனே பிடித்துவந்து, கஃயாபே என்னுந் தலைவரிடத்து ஒப்புவிக்கக்கடவீர்க" ளென்று தன் போர்வீரர்களுக்குக் கட்டளையிட்டார்கள். அறுக்கக்கொண்டு போகப்படுகிற ஆட்டுக்கடாக்களைப்போல அரசகுல ஆண்மக்கள் பிடிக்கப்பட்டு, கஃயாபேயிடங் கொண்டுவரப்பட்டார்கள். அவர் அவர்களை சங்கரித்துக்கொண்டேயிருந்தார்.

அஃதவ்வாறாக, "மேற்படி அரசகுலப்பெண்கள் தன் போர்வீரர்களுக்கே வாழ்க்கைப்படவேண்டுமென்றும், வாழ்க்கைப்படாதிருக்கக்கூடாதென்றும், புறதேசங்களுக்குப் போகப்படாதென்



றும்" முஹம்மதுஅலி பாஷாவால் பிரசித்தவிளம்பரம் வெளிப்படுத்தப்பட்டது. அதனாலேயே, தங்களிடத்து அடைக்கலம் புகுந்திருக்கிற காமிலாநாயகி, அப்போர்ச் சேவகனுக்குப் பாரியாளாகச் சேர்ந்த" தென்று அஹ்மது கூறினார்.

அஹ்மதின் சொற்களைக் காது தாழ்த்திக் கேட்டுக்கொண்டிருந்த கரீபும், அவரின்பரிவாரங்களும் மிகவும்பரிதாபப்பட்டார்கள். அதன் பின், அங்கிருந்து எதிரிற்காணப்பட்ட சிற்றூர்போன்ற தலத்தை நோக்கி முன்னேறி, இராஜசபை மண்டபத்திற்கு சகலரும் வந்தார்கள். அஹ்மது, "எஜமானே! கொல்லப்பட்ட அமீர்மார்கள் இச்சபாமண்டபத்திற்குத்தான் அழைக்கப்பட்டார்க" ளென்று கரீபுக்குக்கூறினார். அச்சபாமண்டபத்தின் அமைப்பையும், அதன்விசாலத்தையும், அதில்போடப்பட்டிருந்த விசித்திரமான நாற்காலிகள், மேசைகள், சோபாக்கள், மஞ்சங்கள் முதலானவற்றையும், தூக்கப்பட்டிருந்த விதவிதமான விளக்குகள், (பங்கா) காற்றாடிகள், சேட்டுகள், பலவர்ணப்பாதரசக்கலசங்கள் போல்வனவற்றையும், சுவர்களில் மாட்டப்பட்டிருந்த வாள்சேட்டுகள், நானாவிதமுகரூபப்படங்கள், விதவிதக்கலைக்கண்ணாடிகள் முதலியனவற்றையும், தேசவுருவகங்களடங்கிய கண்ணாடிப்படங்கள், கீழேவிரிக்கப்பட்டிருந்த அருமையான இரத்தினக்கம்பளங்கள் முதலிய யாவற்றையும்பார்த்து, கரிபு முதலானவர்கள் ஆச்சரியமுற்றவர்களாக அங்கிருந்து முன்னேறி, தங்கசாலை, யுத்தாயுதசாலை, போர்ப்பயிற்சிசாலை முதலியனபிரதான தலங்களைப் போய்ப்பார்த்துவிட்டு, கடைசியாக ஓர் விசேடமான கூவலுக்குவந்தார்கள். அப்போது கரீபுக்கு அஹ்மது அக்கிணற்றைச் சுட்டிக்காட்டி, "எஜமானே! இக்கிணறு இம்மலைக்கோட்டையையுண்டாக்கிய மிஸ்றின் 8-ம் அரசாக்ஷி, ஐயூபிய்யா அரசருள் முதலாவதரசரான சுல்தான்சலாஹுத்தீன்யூசுபுஅல்ஐயூபிய்யி அவர்களால் வெட்டப்பட்டது. இதின்ஜலம் சகலினர்களுக்கு மிகுந்த ஆரோக்கியத்தைத்தரக்கூடியதாகவிருக்கிற" தென்று விவரித்தோதி, கரீபைப்

பார்த்து, "நாயகமே! அந்தசுல்தான்சலாஹுத்தீன் அவர்கள், கி. பி. 1171ல் இம்மிஸ்றை அரசாளத்தொடுத்தார்கள். மஹாபராக்கிரம சாலிகளாகிய ஐரோப்பியமன்னர்களின் சிம்மாசனங்களைக் குலுங்கச் செய்தவர்கள் அவர்களே. ஐரோப்பிய அரசர்களே அந்த சுல்தான் அவர்களை நீதமுடைய சுல்தானென்று புகழ்ந்திருக்கிறார்கள். அவர்களின் வீரத்தைப்பற்றியும், நீதியைக்குறித்தும் சில வுரைக்கிறேன்; கேட்பீர்களாக.

ஹிஜ்ரி 15க்குச் சரியான கி. பி. 636ல், பரிசுத்தத் தலங்களுளொன்றாகிய (Jerusalem) பைத்துல் முகத்திஸ், கிறிஸ்தவர்களிடத்திருந்து இஸ்லாமிகளின் 2-வது கலீபாவாகிய நாயகம் உமறுப்னுல் கத்தாபு (றலி) அவர்களின் ஆட்சிக்குள்ளாயிற்று. அதுமுதல் கி. பி. 1099 வரையில் இஸ்லாமிகளின் ஆளுகையிலேயே யிருந்து வந்தது. பின்பு அவர்களுக்குள் ஒற்றுமைக் குறைவுகளும், உட்கலகங்களு முண்டுபட்டு, பலவித குழப்படிகளாக விருந்ததை கிறிஸ்துவ அரசர்களறிந்து, பாதிரிமார்களின் தூண்டுதலின்பேரில் பைத்துல் முகத்திஸை இஸ்லாமிகளிடத்திருந்து பறித்தெடுக்க இதுவேதக்க சமயமெனக்கருதி; அவர்களனைவரும் ஒர்மித்து, படையெடுத்து (சீரியா)ஷாமுக்குவந்து யுத்தமாரம்பித்து, ஒவ்வோரூராகப்பிடித்துக் கொண்டு முன்னேறிவந்து, கடைசியாக கி. பி. 1099ல் பைத்துல் முகத்திஸை முற்றிக்கை யிட்டார்கள். அக்காலத்தில் அப்பட்டணத்தை யாண்டுவந்த இஸ்லாம் அரசருக்கு விரோதிகளாயிருந்த சில இஸ்லாமிகள், கிறிஸ்துவ அரசர்களுக்கு அந்தரங்க ளுளவர்களாயிருந்தபடியினாலே, குறித்த கி. பி. 1099-ம் வருஷம் ஜூலை மீ 15உக்குச் சரியான ஹிஜ்ரி 492-ம் வருஷம் ஷஃபான் மீ 23உ வெள்ளிக்கிழமையன்று பைத்துல் முகத்திஸை கிறிஸ்துவ அரசர்கள் பிடித்துக் கொண்டார்கள். அவர்களோ, இஸ்லாமிகளின் பெண்களையும், சிறுவர்களையும் சுவல்பமேனு மிரக்கமின்றி குரூரவதை செய்துவந்ததுமல்லாமல், அல்மஸ்ஜிதுல் அக்ஸா என்னும் பிரதான தேவாலயத்துள்



ளிருந்த வித்துவான்கள், தபோதனர்கள், மெய்ஞ்ஞானிகள், போதகர்கள் முதலான மஹாத்துமாக்களில் 70,000 பேர்களைக்கொன்று, அவர்களின் பிரேதங்களைத் தெருக்களிலெறிந்தார்கள். அத்தேவாலயத்துள்ளிருந்த பொன் வெள்ளி விளக்குகளில் மிகப்பெரிதமான 190 விளக்குகளைக் கொள்ளையிட்டார்கள். இஸ்லாமிகளில் கொல்லப்பட்ட அளவறுந்த ஜனங்கள்போக, மீதியிருந்தவர்கள் தாவூது (நபி) தீர்க்கதரிசி அவர்களின் வணக்கத்தலத்துள் புகுந்து, கிறிஸ்தவர்களிடத்தில் அடைக்கலந் தேடினார்கள். (Jews-யூதர்கள்) எஹூதிகள் அவர்களின் கோயிலுக்குட் புகுந்திருந்தார்கள். கிறிஸ்தவர்கள் அடைக்கல வாக்களித்தபிறகு, அவர்களுக்குள் ஒரு [illegible] பேசியதில், இஸ்லாமிகளையும், எஹூதிகளையும், ஒருவரையும் விடாமல் நாளைக்காலையில் சர்வசம்ஹாரஞ்செய்து போடுகிறதென்று தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்தை யறிந்த இஸ்லாமிகள் அன்றிரவே சமயம்பார்த்து, அஸ்கலான் என்னும் ஊருக்கு ஒளித்தோடிவிட்டார்கள். எஹூதிகள் கோயிலுக்குள் ளிருந்தபடிக்கே தீய்க்கிரையாக்கப்பட்டார்கள். பின்பு அவ்வூருக்கு அதிபராகப் பிரான்ஸிய சேனாதிபதி கோட்ப்ரா என்பவன் [illegible] நியமிக்கப்பட்டு, மற்றவர்கள் அவரவர்தேசம் சென்றார்கள். மேலே கூறிய சுல்தான் சலாஹுத்தீன் அவர்கள், கி. பி. 1187-ம் வருஷம் மார்ச்சு மீ 12உக்குச் சரியான ஹிஜ்ரி 583-ம் வருஷம், கடைத்தீர்க்கதரிசியாகிய முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் (மிஃராஜ்) வானுலக யாத்திரைசெய்து வந்தநாளாகிய றஜபு மீ 27உ வெள்ளிவாரம் காலைப்போதில் கிறிஸ்தவர்களிடத்திருந்த பைத்துல்முகத்திஸை தன் வசப்படுத்தினார்கள். அக்காலத்தில் அவ்வூர்க் குடிகளாயிருந்த கிறிஸ்தவர்களுள் ஒருவராவது கொல்லப்படவில்லை. அவர்களின் பெண்டுகள் சிறைவாரப்படவுமில்லை; பொருட்கள் சூறையாடப்படவும்,

மில்லை. அதனாலேயே மேற்படி சுல்தான் அவர்களை நீதமுடையவ ரென்று கிறிஸ்தவர்கள் புகழ்ந்து கூறுகிறார்கள்

பைத்துல் முகத்திஸை, சுல்தான் சலாஹுத்தீன் அவர்கள் பிடித்துக்கொண்டார்க ளென்பதை (Pope) பாப்பு முதலான ஐரோப்பிய பிரதான பாதிரிகளறிந்து, ஐரோப்பிய கிறிஸ்தரசர்களுக்கு அதைப் பற்றி உரோசமுண்டாகக்கூடிய போதனைகளைப் போதித்தார்கள். அச்சமயம் பிரித்தானியருக்கும் பிரான்ஸியருக்கும் உண்டுபட்டிருந்த குரோதமும் இவ்விஷயத்திற்காகவே சமாதானமாக்கப்பட்டது. அப்பால் கிறிஸ்தவர்கள் ஒன்றித்து, ‘சிங்கநெஞ்சினர்’ என்று பிரக்கியாதிபெற்ற வீரசூரராகிய, ஆங்கிலேயஅரசர் (Richard) றிச்சார்டை அவர்கள் செய்யப்போகிற யுத்தத்திற்குத் தலைவராக்கி, மஹாயூகசாலியாகிய பிலிப் பென்னும் பிரான்ஸிய அரசர், இத்தாலிய ராஜர், நோர்மாண்டிய மன்னர், ஆஸ்திரிய அதிபதி, ஜர்மானிய அதிபர் முதலான மற்ற அரசர்களும் ஒருங்கே சேர்ந்துபோகத் தீர்மானித்தார்கள். கிறிஸ்தவ அரசர்கள், தங்கள்தேசப்பிரஜைகளாகிய (யூதர்) எஹூதிகளிடத்தில், அவர்களாலிறுத்தற்கியலாத வரியை, யுத்தச் செலவை முன்னிட்டு ஏற்படுத்தினார்கள். எஹூதிகள் இத்தனைவரிபெங்களா லிறுத்தற் கியலாதென மனுச் செய்து கொண்டார்கள். அவர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டதுடன், அவர்களுள் பெரும்பாலார் கொல்லப்பட்டார்கள்.

பின்பு, கிறிஸ்திய அரசர்கள் குறித்த கெடுப்படிக்கு ஐரோப்பாவிலிருந்து பிரயாணமாகி, (சிரியா) ஷாமுக்கு வந்து பைத்துல்



அவர்களுடன் பல முகத்திஸைப் பிடிக்க, சுல்தான்சலாஹுத்தீன் கடைசியில் பாகங்களிலும் கடும்பூசல்விளைத்தும் பயன்படாமல், செய்துகொண்டு சுல்தானவர்களுடன் சமாதான வுடன்படிக்கை லஹமில் (Jesus- அவ்வூர்க்குட்புகுந்து, (Bethlehem) பைத்துல் (Mary - மரியாள்) ஏசு) ஈஸா (அலை) அவர்கள் பிறந்த தலத்தையும், மற்ற மஹாத்து மரியம் (அலை) அவர்களின் சமாதிஸ்தானத்தையும், சுல்தானவர்களிடந் மர்க்களின் கல்லறைகளையுந்தெரிசித்துப்போக, அதுபோல் சுல்தான் அவர்கள் உத்தர தில் உத்தரவுகேட்டனர்கள். வளித்தார்கள்.

அக்கிறிஸ்திய அரசர்களுக்குட்சிலர், சகலரையும் ஏககாலத் தில் ஒரேகும்பலாக பைத்துல் முகத்திஸுக்குட் பிரவேசிக்க விடுவது கூடாதவிஷயமென்று சுல்தான் அவர்களுக்கு அந்தரங்கத் தில் போதித்தார்கள். சுல்தான் அவர்கள், அவர்களின் போதனையை அனுத்தையும் பொருட்படுத்தவில்லை. பிறகு கிறிஸ்தவர்கள் ஊர்க்குட்சென்று, மஹாத்துமாக்களின் சமாதிஸ்தானங்களைத் தரிசித்துத் திரும்பினார்கள்.

இருவகுப்பினர்க்கிடையில் கடும்போர்நடந்து வருங்காலத்தில் றிச்சார்டு அரசர் கடுஞ்சுரத்தாற்பீடிக்கப்பட்டு, கிறிஸ்தவ (Doctors) பண்டிதர்களால் சுகப்படுத்தக்கூடாமல் மரணத்துவாயி லிருக்கிறா ரென்பதை, சுல்தான் அவர்களறிந்து, “ஆ, ஹா! இப்படிப்பட்ட சுத்தவீர ரிருந்தாலன்றோ, நம்முடைய போர்த்திறத்தை யறிய வேண்டு” மென்றெண்ணி, உடனே, அவருக்குத் தேவையான சகலசாமான்களையும், திறமானவைத்தியர் ஒருவரையும் அவரிடத் தனுப்பினார்கள். அவ்வைத்தியர்மூலத்தில் றிச்சார்டு சுகமடைந்தார்.

யுத்தம் நிறுத்தப்பட்ட நேரங்களிலெல்லாம், சுல்தானவர்கள் நிச்சார்வைட நன் சமுகத்தழைத்துவைத்து பரிந்து பேசிக்கொண்டிருப்பார்கள். இதனால் அவர்களின் சுத்தவீரத்தன்மை இப்போதும் பிரபல்யமாகவே யிருக்கிறது. கிறிஸ்தவர்களெழுதிவைத்திருக்கிற சரித்திரப் புத்தகங்களே சாக்ஷிகூறு" மென்று சவிஸ்தாரமாகக் கூறி முடித்தார்.

•

பிறகு அக்கிணற்றைவிட்டுங்கடந்து, அங்குள்ள வேறுசிலவுன்னதமாடமாளிகைகளையும் பார்த்துவிட்டு, அஹ்மதுடன் சகலரும் முன்னேறி ஓர் உயர்ந்ததானத்தில் நின்றுகொண்டு காஹிரு வின் நான்கு திசைகளையும் பார்த்தார்கள். பலவித வுயர்ந்த மேன்மாடிகளாலும், நூற்றுக்கணக்கான வுயர்ந்தமனூராக்களாலும், நாற்புறமும் சிங்கார வனங்களையுடைய சிறந்த பிரதான மாளிகைகளாலும், நானாவித கனிவருக்க விருக்ஷங்களையுடைய தோட்டங்களாலும், கரீபின் ஆயுள் நீடித்திருக்கவும், அமீர்பஷீரின் நாட்டம் நிறைவேறவும், கடவுள்பால் கையேந்துவபோல் மலர்ந்துவிரிந்த செந்தாமரைப்புட்பங்கள் நிறைந்த தெண்ணீர்த்தூரவுகளாலும், அடைபொழுதின்பிரகாசம் மகிமைபொருந்திய நீலாற்றின் ஜலத்தின்மேல் விழுந்து அந்த ஜலம் பிரகாசித்துக் கொண்டிருந்ததாலும் சரீபு முதலானவர்களுக்கு அத்தேசத்தின் மகிமையைப்பற்றி யுண்டான ஆச்சரியத்திற்கும், சந்தோஷத்திற்கும் ஓரெல்லையில்லை. அப்பட்டணத்தின் திரண்ட சனங்களின் நடையாலும், யானைகள், ஒட்டகைகள், குதிரைகள், வண்டில்கள் முதலானவைகளின் ஓட்டத்தினாலும் உண்டான புழுதியினால், ஆகாயமட்டில் ஷாமின் ஆகாயத்தைப்போல் தெளிவாகத் தோற்றப்படவில்லை. அப்பால் அம்மேட்டினின்று கீழிறங்கி, கோட்டைக்குள்ளிருந்து வெளிப்பட ஆரம்பித்தார்கள். அச்சமயம் பொழுதடையுந்



தருணமாக இருந்தது. இந்நேரம் கோவேறு கழுதைகளி லேறிச் சென்றால் மெத்தசுகமாக விருக்குமென்று கோவேறு கழுதைகளைத் தருவித்து சகலரும் ஏறி, (Ancient Cairo) பழயமிஸ்று நீலாற்றுக் கரைவந்திறங்கி படகேறி றவ்லாத் தீவைநோக்கிவலித்துச் செலுத்தி வந்து கரையேறினார்கள்.

•

கரீபு மிகுந்த விரைவாக மாளிகையை நோக்கி நடந்துவந்து, வெளிவாசற் காவற்காரனிடத்தில், "இபுறாஹீம் பாஷாவைக் காணப் போயிருந்த என்தந்தையர் அமீர்பஷீர் அவர்களும், மற்றவர்களும் வந்துவிட்டார்களா?" என்றுகேட்டார். வந்துவிட்டதாகக் காவற்காரன் மறுமொழிகொடுத்தான். உடனே கரீபு உள்ளேபுகுந்து அமீர்பஷீரைக்கண்டு வந்தனங்கூறி, அவரின் இருகரங்களையும் முத்தமிட்டுக்கொண்டு அருகிலுட்கார்ந்தார். அமீர்பஷீர் கரீபிடத்தில், "காஹிருவைச்சுற்றிப்பார்த்ததில் கண்ணுற்ற புதினங்களென்ன?" வென்று கேட்டார். கரீபு தான் கண்டுவந்த யாவற்றையும் சவிஸ்தாரமாக எடுத்துக்கூறியதுடன், இராஜகுலமாதாகிய காமிலாநாயகியின் சமாசாரத்தையும் விவரித்துக்காட்டி, அப்பெண்ணை ரக்ஷிக்கவும் தேடினார். அதற்கு அமீர்பஷீர், "என்னருமந்தச்சேயே! நமக்கும் அப்பெண்ணுக்கும் என்னசம்பந்தமிருக்கிறது? அன்றியும், நாம் புறதேசத்தில் வந்திருக்கிறோமே" யென்றார்.

கரீபு, "என் தந்தையரே! என் குற்றத்தைமன்னித்து அப்பெண்ணை கட்டாயம் இரக்ஷிக்கவேண்டும். அவளைக்காப்பாற்றுவதாக எனக்குறுதி வாக்களிக்கவும் வேண்டு" மென்று பிடிவாதமாகக்கேட்டார். கரீபின்பிடிவாதத்தை அமீர்பஷீர் பார்த்து அஹ்மதைக்கூவி,

கரீபு சொல்லுகிறபெண்ணின் சமாசாரமென்ன?" வென்று கேட்டார். அதற்கது, நடந்த சம்பவங்கள்யாவற்றையும் விபரித்துரைத்தார். "நாளைக்காலையில் இவ்விஷயத்தைப்பற்றி யெனக்குநினைப்பூட்டுங்க" ளென்ருர். அப்படி யிருக்கும்போது மாலைப்போஜனம் தயார் செய்யப்பட்டது. சகலரும் இராப்போசனமருந்தி, அவரவரின் படுக்கையறைக்குப் போய் விட்டார்கள். கரீபு, தன்படுக்கையறைக்குப்போய் நவ்லாத்தீனிலிருந்து படகேறிச்சென்று, பழயமிஸ்றையும், புதியமிஸ்ருகிய காஹிறுவையும் சுற்றிப்பார்த்ததையும், ஆங்காங்கு கண்ணுற்ற நவீனவிடயங்களையும் ஆதிமுதல் அந்தம்வரையில், தன்னருமைத் தாயாராகிய ஜமீலாநாயகி யவர்களுக்கு மூன்ருவதாகக் கடிதமெழுதிமுடித்தார்.

---

12-வது அத்தியாயம்.

## மேல்மிஸ்று.

மறுநாட்காலையில் அமீர்பஷீரும் அவரின் புதல்வர்களாகிய கலீலும், அமீனும், ஜமீலாநாயகியின் புத்திரர் கரீபும் காப்பிநீர் அருந்திக்கொண் டிருந்தார்கள். கரீபு அமீர்பஷீரின் பாரிசத்தில் நெருக்கமாக வுட்கார்ந்திருந்தார். அச்சமயம் அமீர்பஷீர் கொஞ்ச முகவர்ட்டமுடையவராக விருந்தார். அவரின் முகக்குறியைப் பார்த்து, அங்கிருப்பவர்க ளனைவரும் அவரிடத்தில் அதைப் பற்றிக் கேட்கவும், ஜமீலாநாயகியின் விஷயத்தை அவருக்கு ஞாபகப்படுத்தவும் மனந்துணியாதிருந்தார்கள். அவ்வாறிருக்குஞ் சமயத்தில், மாளிகை வாசற்காப்பாளன் ஒருவன்வந்து, அமீர்பஷீரைப் பார்த்து, "நாயகமே! அட்மிரல்ஹிறு அல்ஹிம்ஸி யவர்கள் தங்களைச்சந்திப்பதற்காக இதோ, முன்வாசலில் வந்திருக்கிருர்க" ளெ



ன்றுசொன்னுன். உடனே அமீர்பஷீர் எழுந்து வெளியில்வந்து, அட்மிரல்ஹிறுவுக்கு வந்தனங்கூறி கைலாகுகொடுத்து, உள்ளே யழைத்துவந்து ஓராசனத்திலிருத்தி, தானும் உட்கார்ந்தார். அப்போது அட்மிரல்ஹிறு அமீரைப்பார்த்து, "நாயகமே! எங்கள் தேசாதிபதியாகிய முஹம்மதுஅலி பாஷா அவர்கள், தங்களையும் தங்கள்பரிவாரங்களையும் (Upper Egypt) மேல்மிஸ்றில் மிகுந்த சுகத்தைத் தரக்கூடிய, நீலாற்றின் கரையிலிருக்கிற (Banisoucf) பனீசுவைபு ஜில்லாவுக்குஅனுப்பிக்கும்படிக்கும், அவர்கள் இஸ்கந்தரிய்யாவிலிருந்து காஹிறுவுக்கு வருகிறவரையில் தாங்கள்பனீசுவைபிலேயே ஆரோக்கியத்துடனிருக்க வேண்டுமென்றும், தான் வந்தவுடனே தங்களுடைய நாட்டம் நிறைவேற்றப்படுமென்று தங்களுக்குத் தெரிவிக்கும்படிக்கும், தங்களுக்கும் தங்கள்பரிவாரங்களுக்கும் தேவையான கும் சகலவஸ்துக்களும் கொடுத்துவரும்படிக்கும், தங்களின் சொந்தச் செலவிற்காக மாசம் ஒன்றுக்கு நூறு தங்கப்பவுன்கள் கொடுக்கும்படிக்கும் அவர்களின் பிரதிநிதிக்கு நிருபமனுப்பியிருக்கிருர்கள். அவ்விவரங்களைத் தங்களுக் கறிவித்து வரும்படிக்கு அப்பிரதிநிதி என்னைத்தங்களிடத்துக்கனுப்பினு" ரென்று கூறினுர். அவரின்சொற்களைக் கேட்ட அமீர்பஷீர் சந்தோஷத்துடனெழுந்து, பயணத்துக்குத் தேவையான சகலசாமான்களையும் ஓர்கப்பலிலேற்றித் தானும் மற்றவர்களும் அக்கப்பலில் ஏறி, பனீசுவைபுஜில்லாவின் திசையையிலக்காக்கி கப்பலைப் பாய்விரித்துச் செலுத்தினுர்கள். பகற்காலங்களில் கப்பலை நடத்துகிறதும், இராக்காலங்களில் கரையோரத்தில் நங்கூரமிட்டுத் தங்கியிருக்கிறதுமாக விருந்தார்கள். போகிறபாதையில் நீலாற்றின் இருகரைகளிலும் எதிர்ப்படும் ஒவ்வொன்றைப் பற்றியும் விபரித்துக்கேட்பதே, கரீபுக்கு வேலையாக இருந்தது.

ஒருநாள், ஜீஜா என்னும் ஸ்தலத்திற்குச் சமீபமாகக் கப்பல் வரும்போது, அதன்பின்னாலிருந்த, மலைகளைப்போல வுயர்ந்த அல் அஹ்ரும் என்னும் பழயகாலத்துக் கட்டிடங்களைக் கண்டு, அவற்றைச் சுட்டிக் காட்டி "இவை என்ன கட்டிடங்கள்?" என்று சரீபு கேட்டார். "இவை, முற்காலத்தில் (ஜின்) இராக்கதர்களால் கட்டப்பட்டவைகளென சொல்லப்படுகிற" தென்று மறுமொழிகொடுத்தார்கள். "என்னத்திற்காகக் கட்டப்பட்ட" தென்று சரீபு கேட்டார். "ஆதியில் இம்மிஸ்றை யாண்டுவந்த அரசர்களின் சமாதிகளுக்காகக் கட்டப்பட்டது. அவ்வரசர்களின் பிரேதங்கள் உக்கியிறந்து போகாதபடிக்குப் பக்குவப்படுத்தி, இக்கட்டிடங்களில் சேமிக்கப்பட்டிருக்கின்றன. சில ஆண்டுகளின்பின்னர் உயிர்த்தெழுந்து வருவார்களென்பதே அவர்களின் கொள்கை" யென்று கப்பலிலுள்ளவர்கள் சொன்னார்கள். ஒருநாள் சாயரட்சை வழக்கப்படிக்கு கப்பலை நங்கூரமிட்டு, அன்றிரவு கரையேறி, பசுமையான ஒருதானத்தில் நின்றுகொண்டு அமீர்பஷீர் முதலானவர்கள், தெற்கிலிருந்து வடக்கே ஓடிக்கொண்டிருக்கும் நீலாற்றின் தண்ணீரையும், கிழக்கு மேற்காக வளர்ந்து நீண்ட மலைத்தொடரையும் கண்ணுற்றார்கள். இதனால்தான் இத்தலம் (வாதின்னீல்) நீலாற்றோடை யென்று அழைக்கப்படுகிறதென்று கிரகித்துக்கொண்டார்கள். கரீபு, அப்பூமியை மிகவுங் கவனமாகப்பார்த்து, மிஸ்றின் பூமிக்குப், லிபூனன் பூமிக்கும் உள்ள வித்தியாசத்தைச் சீர்தூக்கிப் பார்த்துக்கொண்டிருந்தார். அச்சமயம் அவருக்கு, தான்காப்பாற்றுவதாக வாக்களித்த பெண்பிள்ளையுடைய நினைவு திடீரென்றுண்டாயிற்று. கரீபு உடனே அங்கிருந்து, கூடாரத்தின் வெளியில் காற்றுரிக்கொண்டிருந்த அமீர்பஷீரிடத்துக்கு வந்து, அவரருகில் நெருங்கி நின்று, காமிலாநாயகியைப் பற்றி அமீர்பஷீருக்கு நினைப்பூட்டினர்.



அதற்கு அமீர்பஷீர், "மகனே! அவ்விஷயத்தைப்பற்றி அட்மிரல்ஹிஜ அல்ஹிம்வியிடத்தில் சொல்லி யிருக்கிறேன். அஹமதை அவருக்குத் துண்டுகோலாக்கியு மிருக்கிறேன். அப்பெண், அப்போர்ச் சேவகர்களைவிட்டு நீங்கி, அவள் நாடிய விடத்திலிருக்கச் சம்மதங் கொடுக்கப்படுவாளென்று நம்புகிறேன். என்னருமந்தக் குழந்தாய்! நீ அதைப்பற்றிக் கவலையுற வேண்டுவதில்லை. அப்பெண்ணின் காரியம் நயமாகவே முடியும். நம்முடன்கூட வேறு பெண்களில்லாமையால், அவளை நாம் கூட்டிச் செல்வது மரியாதையல்ல" வென்றார். அமீர்பஷீரின் சொற்களைக்கேட்ட கரீபு சந்தோஷக் கடலில் மூழ்குளித்தவர் போலாகி, அமீரின் கரங்களைப் பன்முறை முத்தமிட்டுத் துதித்துத் திரும்பினார். பொழுதுபுலர்ந்தது. சகலரும் கப்பலிலேறி நங்கூரந் தூக்கிப் பாய்விரித்தார்கள். நீரோட்டம் கடினமாகவும் காற்று மிதமாகவு மிருந்தமையால், கப்பல் மெதுவாக வோடிக்கொண்டிருந்தது. அன்றிரவு ஒரு செழுமையான நாட்டிற் றங்கியிருந்து, காலையில் கப்பலைப் பாயெடுத்துச் சென்றார்கள். இவ்வாறாகச் சிலநாள் கப்பலையோட்டிச் செலுத்தி, 11,000 குடிஜனங்களையும், பல வளங்களையுமுடைய பனீசுவைபு ஜில்லாவுக்கு வந்து சேர்ந்தார்கள். இவர்களின் வருகையை முன்னோக்கியவராக இருந்த அவ்வூர் ஜில்லா கலெக்டர், அமீர்பஷீர் முதலானவர்களை யெதிர் சென்றழைத்து வந்து, அவர்களுக்காகச் சித்தப்படுத்தப்பட்டிருந்த மாளிகையி லிருக்கச் செய்தார். அந்ஜில்லா கலெக்டர், அமீர்பஷீரைக் கண்டு அச்சப்பட்டவராக விருந்தார்.

13-வது அத்தியாயம்.

## கரீபை யிழத்தல்.

அமீர்பஷீர் அவர்கள் மிஸ்றுக்கு வரும்போது கொண்டுவந்த ஷாம் தேசத்து, க்ஷத்திரிய ஜாதிக் குதிரைகளில் அழகான ஐந்து

புரவிகளை முஹம்மதுஅலிபாஷா அவர்களுக்கு வெகுமதி கொடுத்து விட்டு, மற்றவைகளை அவரின் சொந்த வுபயோகத்திற்காக வைத்துக் கொண்டார். 12-ம் அத்தியாயத்திற் கூறப்பட்ட வளம் பொருந்திய பனீசுவைபு ஜில்லாவுக்கு, அமீர்பஷீர் முதலானவர்கள் வந்திருக்கும் நாட்களி லோர் நாள், குதிரை சவாரி செய்யஅமீர்பஷீர் நாட்டமுற்று, ஜில்லா கலெக்டரிடத்தில், "சாரிவிடற் கிணக்கமான தானம் எங்கிருக்கிற" தென்று விசாரித்தார். "அதோ, எதிர்த்த கரையில் தெரிகிற மலைச்சாரலில் சமதரையையுடைய விசாலமான ஒரு மைதான மிருக்கிற" தென்று ஜில்லாகலெக்டர் விடைகொடுத்தார். மறுநாட் காலையில் அமீர்பஷீர், தன் குதிரைகளை அக்கரை வெளி நிலத்திற்குக் கொண்டுபோக வேலையாட்களுக்குக் கட்டளையிட்டு, அவரும், அவரின் புத்திரர்களும் மற்றவர்களும் படகேறி அக்கரை சேர்ந்து, அவ்வெளி நிலத்தில் பட்டாம் வீடுகளமைத்திருந்தார்கள். அப்பொழுது காலை 7-மணியிருக்கும். சகலரும் சிற்றுண்டி யருந்திய பிறகு, குதிரைகளில் சவாராகி, அவ்வெளி நிலத்தில் குதிரைகளைச் சாரிவிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஜமீலாநாயகியின் புத்திரர் கரீபும் ஒருவரா யிருந்தார். அவர், 6-வயதுப் பிள்ளையாக விருக்குங்காலத்தி லிருந்தே, குதிரையேற்றத்தில் மஹா தேர்ச்சி யடைந்து வந்தார். அவர், குதிரையேறி சாரி வரும்போது பார்ப்பவர்களின் கண்களுக்கு சேணத்தோ டொட்டிக் கொண்டிருப்பதாகக் காணப்படுவார். லிபனானிகள், வாள்வீச்சிலும், கேடயப் பரீக்ஷையிலும், குதிரை யேற்றத்திலும் மற்ற தேசத்தார்களைவிட மிகச் சிறந்தவர்கள். குறித்த மூவகைப் பரீக்ஷையிலும் கரீபு தேர்ந்தவ ராகவே யிருந்தார். அன்றைத் தினம் கரீபு பந்தய வுடை யணிந்தும், முகத்தில் சூரிய வெப்பந் தாக்காது மறைக்குந் தொப்பியைத் தலையிலிட்டுக்கொண்டும், தன் குதிரையைச் சூறைக் காற்றுக்குச் சமதியாக விட்டுக்



கொண்டிருந்தார். குதிரையைப் பாய்ச்சும் அவரின் தந்திரத்தையும், ஊக்கத்தையும், அமீர்பஷீர் முதலானவர்கள் பார்த்து வியந்து மகிழ்ந்தார்கள். அவ்வூர் கலெக்டர், கரீபின் குதிரை செலுத்துந் திடாரிக்கத்தைக் கண்ணுற்று பேராச்சரிய முற்றார். அச்சமயம் கரீபு சவாரா யிருந்த புரவியோ, அமீர்பஷீர் ஆரோகணிக்கும், பருத்துயர்ந்த மிர்மஜர்திப் புரவியா யிருந்தது. அப்புரவிகூட, கரீபு விட்ட விசைப்பாய்ச்சலால் களைத்துப் போயிற்று. கரீபுக்கு அற்பமேனும் அயர்ச்சியுண்டாகவில்லை. குதிரை யிளைப்புற்றதைக் கண்டவுடனே, கரீபு கீழிறங்கினார். கலெக்டர் அவரை யெதிர் சென்று தழுவி, பட்டாம் வீட்டுக் கழைத்து வந்தார். அமீர்பஷீருக்கு கரீபுபேரில் சந்தோஷமுண்டாகி, அவரின் இருபுருவங்களுக்கிடையில் முத்தமிட்டார். அவ்வா றிருக்கும்போது, கரீபுடைய பார்வை எதிரிற் கட்டப்பட்டிருந்த பெரிய ஒரு குதிரையின் மேல் விழுந்தது. கலெக்டரிடத்தில் "இக்குதிரை யாருடைய" தென்று கேட்டார். "என்னுடைய" தென்று கலெக்டர் சொன்னார். கரீபு, "அக்குதிரையிலேறிப் பார்க்கப் பிரியப்படுகிறேன்" என்றார், கலெக்டர், "நல்லது; ஆனால் அக்குதிரையோ, மஹா முரட்டாட்டமும், மேலிருப்பவரைக் கீழே தள்ள முயலுந் திக்குணமும் உள்ள ஆக்திர ஜாதியிலுள்ள" தென்றார். கரீபு, புன்னகை கொண்டவராக, அக்குதிரைக்குக் கல்லணை வைக்கச் செய்து, அதன்மேல் பாய்ந்தேறினார். முந்தி கரீபுடன் பந்தயம் விட்டவர்க ளடங்கலும் களைத்துப்போய் குதிரைகளை விட்டிறங்கி, உட்கார்ந்துகொண்டு, சிறு சவாரிக்காரராகிய கரீபின் இரண்டாமுறைச் சாரியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கரீபு, அக்குதிரையிலேறி யுட்கார்ந்த வுடனே, அற்குணப் புரவிதா னென்றறிந்து கொண்டார். உரோசத்தினால் இறங்கி

விடாமற்படிக்கு அக்குதிரையைச்சாரிவிடற்கே முயன்றார். குதிரையோ, கரீபைக் கீழே வீழ்த்தத் தெண்டித்துங் கூடாமலாயிற்று. அக்குதிரையின் தீக்குணம் கரீபுக்கு உரோசத்தையும், சினத்தையும் உண்டாக்கி விட்டது. அதனால் கரீபு, தன் கையிலிருந்தசவுக்கால் ஓங்கி யடித்து (Boots) பூட்ஸின் குறட்டு முட்களால் கடுமையாக நெருக்கினார். அப்போது அக்குதிரை வெகு வேகமாகப் பாய்ந்து சீறி முன்னேறிற்று. அவ்விடத்தி லிருந்தவர்கள் யாவரும், கரீபு எறியப்பட்டே விடுவாரென்று திகைத்திருந்தார்கள். கரீபு கிஞ்சிற்றேனும் அஞ்சா நெஞ்சினராக அக்குதிரை போன போக்கிற்கே வாய்வடக்கயிற்றை யிளக்கி விட்டுவிட்டார். அதைக்கண்ட அங்குள்ளா ரடங்கலும் வியப்புங் கலக்கமு மடைந்தார்கள். சுவற்ப நேரத்திற்குள்ளே அக்குதிரை கண்புலனுக் கெட்டாது மறைந்து போயிற்று.

"கரீபு, மிகுந்த வேகமாகக் குதிரையை தன்னிஷ்டத்துக்கு விட்டுப் போகிறார்; சற்றுநேரத்திற்குள் அக்குதிரையின் விறைப் படங்கிவிடும். கூடிய விரைவில் குதிரையைத் திருப்பிக்கொண்டு வருவார்" என்று அமீர்பஷீர் முதலானவர்கள் அவரின் வருகையை வழிபார்த்திருந்தார்கள். அவ்வெளி நிலத்தைத் தாண்டிச் சென்ற குதிரையாவது, கரீபாவது வெகுநேர மாகியுந் திரும்பி வாராமையால், அமீர்பஷீர், தன் குதிரைவீரர்களை, சிம்மநாதம் போன்ற உரத்த சப்தமிட்டழைத்து, "கரீபு இன்னமும் வரவில்லை. அதிசீக்கிரத்தில் நீங்கள் சென்று பார்த்து வாருங்க" ளென்று கடிந்து கூறினார். உடனே குதிரைவீரர்கள் தங்கள் குதிரைகளிலேறி, கரீபேறிய குதிரை சென்ற திசையை முன்னோக்கிக் குதிரைகளை நடத்தினார்கள். அமீர்பஷீர், தீப்பொறியில் நிற்பவரைப் போன்று, கரீபின் வருகையை யெதிர் பார்த்திருந்தார். பகற்போஜனம் தயா



ராக்கப்பட்டது. அதை யவர் அருந்தாமல், கரீபைப்பற்றிச் சிந்தித்தவராக, அவர் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தார். கரீபு போய் 2-மணி நேரமாயிற்று. தேடிப்போனவர்கள் முதல் ஒருவரும் திரும்பி வரவில்லை. அமீர்பஷீர், ஆறாக்கி வம்சத்தாரான அவ்வூர் கலெக்டரைப் பார்த்தார். பார்க்கவே, அவர் ஆறாக்கியாக விருந்தும், அமீரின் அச்சத்தால் அவருடைய முகத்தில் மஞ்சணிப்புண்டாகி, உதட்டையுஞ்சப்பச்சக்தியற்றவராகத் தத்தளித்துக் கொண்டிருந்தார். அப்போது அமீர்பஷீர், "என்பிள்ளையுடைய விஷயத்தில் உம்முடைய அபிப்பிராய மென்ன?" வென்று கேட்டார். அதற்கு கலெக்டர், "நாயகமே! அவ்விஷயத்தில் கடவுள் நிரம்ப அறிந்தவர். தங்களின் குழந்தை யேறிச் சென்ற குதிரையை நாட்டறபிகளிடத்திலிருந்து நான் வாங்கி கொஞ்ச நாட்கள்தா னாகின்றன. அக்குதிரையில் இதுபரியந்தம் நானேறிப் பார்த்ததுமில்லை. ஆனால், அவ்வறபிகள் அக்குதிரைமுரட்டாட்ட முடையதென்று சொல்லி யிருக்கிறார்க" ளென்றார்.

"அக்குதிரையை யுமக்கு விற்ற அறபிகளை நீரறிவீரா?" என்று அமீர்பஷீர் கலெக்டரைக் கேட்டார். அதற்கு கலெக்டர், "நான் அவர்களின் பேர் நாமங்களை யறியமாட்டேன். ஆனால், பனீவாவில் கோத்திரத்தா ரென்பதை யறிவேன்" னென்று மறுமொழி கொடுத்தார். உடனே அமீர்பஷீ ரெழுந்து நின்று, "அக்குதிரை பனீவாவில் கோத்திர அறபிகளிருக்கும் தலத்திற்கே போயிருக்க வேண்டுமாகையால், அங்குபோகப் பாதை யறிந்தவர்கள் உம்மிடத்திருக்கிறார்களா?" என்று கலெக்டரைக் கேட்டார். கலெக்டர், "உண்டு; ஆனால் மிகுந்த பயங்கரமான பாதை" யென்றார். அமீர்பஷீர் கலெக்டரைப் பார்த்து, "இவ்வித வார்த்தையை யின்னொரு முறை சொல்லாதிருக்கக் கடவீர். ஏனெனிலோ, நாம்

அச்சத்தையும், கஷ்டத்தையும் பொருட்படுத்த மாட்டோம். வழிகாட்டிகளில் சிலரைக்கொண்டுவாரும். அவர்களைத் துணையாகக் கொண்டு, காணுமற்போன என் அருமை மகன் கரீபை நானே போய்த் தேடிக்கொண்டு வருகிறே" னென்றார். அவரின் சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்த, அமீரின் சிரேஷ்டபுத்திரர் கலீலும், கனிஷ்ட புத்திரர் அமீனும், மற்றவர்களும், வணக்கமாக, "எங்கள் நாயகமே! தாங்கள் போகவேண்டுவதில்லை. நாங்கள் போய்த் தேடிக் கொண்டு வந்து சேர்க்கிறோ" மென்று சொல்லி, குதிரைகளி லேறினார்கள். கலீலையும், அமீனையும், போகவேண்டாமென்று சிலர் தடுத்துப் பிடித்துக் கொண்டார்கள். குதிரைகளிலேறியவர்கள் புறப்பட ஆரம்பித்தார்கள். அமீரின் புத்திரர் அமீன், கரீபு பேரில் மிகுந்த பட்சமுடையவராகவும், கரீபு மிஸ்றுக்கு வரக் காரணராகவும் இருந்ததால், தானே போய், கரீபைத் தேடிக் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்றும், அவரைக் காணுமல் திரும்புகிறதில்லை யென்றுஞ் சத்தியஞ் செய்தார்.

## 11-வது அத்தியாயம்.

## கரீபைத் தேடல்.

கரீபைத் தேடுதற்காகக் குதிரைகளி லேறியவர்கள் இரு பிரிவினராகி, ஒரு பிரிவார் வடதிசையை நோக்கியும், இன்னொரு பிரிவார் தென்திசையை நாடியும் குதிரைகளைச் செலுத்தினார்கள். தென்திசையை நோக்கிச் சென்றவர்களுடன், அமீர்பஷீரின் குமாரர் அமீனுமிருந்தார். ஒவ்வோர் பிரிவாருடனும் ஒவ்வோர் வழிகாட்டியு மிருந்தான். இரு பிரிவினரும் இரவானவுடனே, இருதிசை



க்கு நடுவண் வந்து சேர்கிறதென்றும், அதுவரையில் கரீபு அகப்படா திருந்தால் அத்தலத்தில் மேல்யோசனை செய்து கொள்ளுகிறதென்றும் தீர்மானித்துக்கொண்டு புறப்பட்டார்கள். பொழுதடைந்திரவாயிற்று, தேடிச் சென்றவர்களுள் ஒருவரும் திரும்பி வரவில்லை. அமீர்பஷீர் முதலானவர்களுக்கு, அமீனைப்பற்றியுங் கலக்க முண்டானது. அமீர்பஷீர், கலெக்டரைத் திரும்பிப் பார்த்தார். கலெக்டர் ஆலோசனைக் கடலி லாழ்ந்தவராகக் காணப்பட்டார். அமீர்பஷீர், "கலெக்டரே! கரீபைத் தேடிச் சென்றவர்கள் இன்னும் வரவில்லையே" யென்றார். அதற்கு கலெக்டர். "என்னாயகமே! சொற்ப துணையுடன் அமீன், அங்கு சென்றது தவறென்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், அவ்வனவாசிகளாகிய நாட்டறபிகள், யுத்தத்தில் மஹா திறசாலிகள். நம்மிஸ்றுகவர்ன்மெண்டார், அவர்களை யடக்க எத்தனையோ தடவைகளில் பிரயாசை யெடுத்தும் கூடாமற் போயிற்று. அவர்களில் கொள்ளைக்காரர்களும், கள்ளர்களும் மிகுந்திருக்கிறார்கள். எங்கள் தேசாதிபதி முஹம்மதுஅலி பாஷா அவர்கள், கலகக்காரர்களாகிய ஸர்கேஷிய அரசவமிஷத்தார்களை முற்றுகநாசப்படுத்தி, இத்தேசத்தை நன்னிலைமையில் வைத்து, தக்க காவற்பாட்டுடன் விழிப்பாகவிருந்தும், அவ்வறபிகள் கொஞ்சமும் அஞ்சாமற்படிக்கு இவ்வூர்களில் வந்து புகுந்து கொள்ளையிட்டுப் போவார்கள். அவர்கள், இராஜதுரோகிகளும் மோசக்காரர்களுமாகவே யிருக்கிறார்கள். ஸர்கேஷிய அரச வங்கிஷத்தார்கள் கொல்லப்பட முன்னர், அவர்களுள் யாரேனுங் குற்றச்சாட்டி லகப்பட்டுக் கொண்டால், உடனே ஒளித்தோடி, அவ்வறபிகளுடன் போய்ச் சேர்ந்து கொள்வார்கள். ஆகையால், அவ்வறபிக ளிருக்கும் பாலைவனத்தை நாடிச் சென்றவர்களின் விஷயத்தில், கடவுளின் நாட்டம் எவ்வாறோ? நாம் அறிய மாட்டோ" மென்றார்.

கலெக்டர் சொல்லிவந்த கவலைக் கிடமான வார்த்தைகளைக் கேட்டதும், அமீர்பஷீரின் கண்களில் தீப்பொறிபறக்க, சிங்கமுகம்,

போன்ற தன் முகத்தைக் கலெக்டராளவில் திருப்பி, "காரியம் அவ்
வாறானால் கட்டாயம் அத்தலத்திற்கு நாமே போகவேண்டும்.
ஒருக்கால் அவர்கள் கஷ்டத்தி லகப்பட்டவர்களா யிருக்கவும்
போதும். கரீபைத் தேடிச் சென்றவர்கள் மஹாபராக்கிரமசாலிக
ளென்பதை நான் திட்டமாக அறிந்திருப்பதால் அவர்கள் விஷயத்
தில் பயப்பட வேண்டியதில்லை. அன்றியும், குதிரை யேற்றத்தில்
மிகத் தேர்ந்த பனீ-தஹ்தாஹ் கோத்திரத்தாரிற் சிலரும் அவர்க
ளுட னிருக்கிறார்கள். இருந்தாலும், பொழுதடைந்துவிட்டபடி
யாலும், போனவர்கள் திரும்பிவரா திருக்கிறபடியாலும், அவர்க
ளின் சங்கதியைப்பற்றி ஒருவரும் நமக் கறிவிக்கா திருக்கிறபடியா
லும் நாம் தாமசிக்காது உடனே அவர்களைத் தேடிப்போகக் கட
மைப்பட்டவர்களாக விருக்கிறோ" மென்றார். அமீர்பஷீர் போகா
திருக்கக்கூடிய அநேக சமாதானங்களை கலெக்டர்எடுத்துக்கூறினார்.
அமீர்பஷீர் யாதொன்றையுங் கவனிக்காதபடிக்கு, போகத்தான்
வேண்டுமென்று ஒரே பிடிவாதமாகத் தன் குதிரைக்குக் கல்லணை
வைத்துக்கொண்டு வரும்படிக்குக் கட்டளை யிட்டார்.

அப்போது குதிரைக் காலடிச் சப்தம் காதிற் கேட்டது.
சப்தம்வந்த திசையைப் பார்த்தவண்ணமாகவே யிருந்தார். சற்று
நேரத்திற்குள்ளே சில குதிரைவீரர்கள் வருகிறதாகத் தெரிந்து,
கொஞ்சிற்று சந்தோஷ முடையவராக விருந்தார். அக்குதிரைவீரர்
கள் சமீபித்து வரவே, கொஞ்சம் பேர்களே வந்திருப்பதையும்,
அமீன் இல்லாதிருப்பதையும் பார்த்து அவர்களிடத்தில் "உங்க
ளுடன் வந்த அமீன் எங்" கென்று கேட்டார். அதற்கவர்கள்
"எஜமானே! எங்களுடன் திரும்பிவர அமீனுக்குப் பிரியமில்லை.
அவரின் சகோதரர் கரீபைக் காணும் வரையில் திரும்பி யிங்கு
வருகிறதில்லை யென்று சத்தியஞ் செய்திருக்கிறார். தங்கள் சமு
கத்தில் சமர்ப்பிக்க இதோ, ஒரு நிருபமும் கொடுத்திருக்கிறா"
ரென்று கூறி, அக்கடிதத்தை அமீர்பஷீர் கையிற் கொடுத்தார்கள்.
அமீர்பஷீர் அக்கடிதத்தை வாங்கி முத்திரை நீக்கிப் பார்த்தார்.



அதன் வாசகமாவது:—

கடிதம்.

என்னைப் போஷிக்கும், அருமைப் பிதாவாகிய நாயகமே! தங்
களின் கரங்களை முத்தமிட்டவனாக வணக்கத்துடன் எழுதிக்கொள்
ளும் விண்ணப்பப் பத்திரம் என்னவென்றால்,

கரீபை நான் தரிசித்திருந்தால், இங்கிருந்து கொண்டுவருபவர்
களுடன் சேர்ந்துவரக் கொஞ்சமேனும் பின் வாங்கமாட்டேன்.
அவரை மீஸ்றுக் கழைத்து வரச்செய்தது நானென்பதைத் தாங்க
ளறிந்திருக்கிறீர்கள். அதனாலேயே அவரைக் கண்டு பிடிக்கிற
வரையில் நான் திரும்பி வராமையைப்பற்றி மன்னிக்கவும். தங்
களின் ஏவலுக்கு மாறு செய்தவனென் றென்னைச் சொல்லாதிருக்
கவுங் கேட்டுக்கொள்ளுகிறேன். என்னருமை சகோதரர் கரீபுட
னேயே அல்லாமல் தங்களின் திருச் சமுகத்திற்கு வரப் பொருந்த
மற்றவனாக விருக்கிறேன் என்பது நிட்சயம். தங்கள் மனச் சமா
தானத்திற்காகவே, குதிரைவீரர்களில் 20 வீரர்களை யென்னுடன்
வைத்துக் கொண்டேன். கடவுளின் கிருபா நோக்கம் சதாகாலமும்
தங்களுக்குண்டாவதாக.

இங்ஙனம்,

வழிப் பாட்டையுடைய

தங்கள் புத்திரன்

அமீன்.

அமீர்பஷீர் அமீனின் கடிதத்தை வாசித்துப் பார்த்துவிட்டு,
குதிரைவீரர்களிடத்தில் "அமீனை யெவ்விடத்தில் விட்டு வந்தீர்க"
ளென்று கேட்டார். அவர்கள் "எஜமானே! இங்கிருந்து புறப்
பட்ட நாங்கள் இரண்டு பிரிவாகப் பிரிந்து, வடக்கேயும், தெற்கே
யும் சென்றோம். பொழுதடையும் சமயத்தில், முன்னமே நாங்கள்
செய்துகொண்ட தீர்மானப்படிக்கு அவ்விரு திசைக்கும் நடுவன்

நீரூற்றுள்ள ஓர் தலத்திற் சந்தித்துக் கொண்டோம். இரு திசையிற் சென்றவர்களும் கரீபைக் காணவில்லை யென்பதை அவ்விடத்தில் தெரிந்துகொண்டோம். தென்திசை சென்றவர்களுடன் அமீனு மிருந்தார். தற்போது அவர்கள் பனீவாஸில் கோத்திர அறபிகளின் வனத்திற்குச் சமீபத்தி லிருக்கிறார்கள். கரீபு ஏறிச் சென்ற குதிரை அங்குதான் போயிருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அறபுக் குதிரைகள் பெரும்பாலும்பிறந்ததலத்தை நாடிப்போகிறதே வழக்கமானதால், அமீன் அந்த அறபிகளிருக்கும் வனத்துக்குப் போகத் தயாரா யிருந்தார். தாங்கள்கவலையடையா திருப்பதற்காகவே இக்கடிதத்தை யெங்களிடத்திற் கொடுத்து, எங்களைக் கட்டாயப்படுத்தி தங்கள் சமுகத்திற் கனுப்பினார். நாங்கள் அவருக்கு வழிப்படக் கடமைப்பட்டவர்க ளானதால், அதுபோல் வந்தோ" மென்றார்கள். அவர்களின் வார்த்தையைக் கேட்ட அமீர்பஷீருக்கு அதிக கலக்கமுண்டாகி, சற்றுநேரம் சிரங்குனிந்திருந்து ஆலோசித்து, "நம்முடைய மக்களை சர்வ சிருஷ்டிகர்த்தர்பால் பரஞ்சாட்டி யிருப்பதே உசிதம். தப்பிப்போனவர்களை மீள்விக்கவும், நம் மனைவரையுங் காக்கவும் சக்தி யுள்ளவரும் அவரே" யென்று தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டிருந்தார்.

கலெக்டர் அமீர்பஷீரிடத்தில் வந்து, "நாயகமே! இன்றிரவு (Banisouef) பனீசுவைபுக்குப் போகப் பிரியப்படுகிறீர்களா?" என்று கேட்டார். அதற்கு அமீர்பஷீர் "ஓஹோ, கலெக்டரே! என்னருமந்தமக்களைப் பாதகர்கள் வசிக்கும் பாலையில் விட்டுப்போட்டு மாளிகையில் இராத்தரிக்க என் மனம் பொருந்துமா? ஒருக்கால் அர்த்த ராத்திரியில் அவர்களைக் காப்பாற்றச் செல்லவேண்டி வரினும் வரும். ஆகையால், காரியத்தின் முடிவைக் கண்டறியும் வரையும் நாமிங்குதா னிருக்கவேண்டு" மென்றார்.

பின்பு இராப்போஜன முண்டு, அமீர்பஷீரும், கலீலும் அவர்களின் கூடாரத்துக் குள்ளானார்கள். மற்றவர்கள் அவரவரின் கூடாரத்துக்குள்ளாய்ப் படுத் துறங்கினார்கள். அமீர்பஷீரும்,



கலீலும் அன்றிரவு முழுதும் நித்திரை போகாது, அமீனுடையவும் கரீபுடையவும் காரியத்தைப் பற்றிக் கவலை யடைந்தவர்களாகவும், கவனித்தவர்களாகவும் பேசிக்கொண்டே யிருந்தார்கள்.

---

### 15-வது அத்தியாயம்.

## அமீர் அமீன்.

அமீர் அமீன், மேலே கூறிய நீரூற்றுக்குச் சமீபத்தில் அவரின் றுணைவர்களுடன் சற்றுநேரங் களையாறிக்கொண்டிருக்கும்போதே, அவர்கள்நாடிவந்த காரியத்தைப்பற்றியோசித்துக்கொண்டிருந்தார்கள். அன்றிரவு கடிசான இருளா யிருந்தது. எப்படி யிருந்தாலும் பனீவாஸில் கூட்டத் தறபிகள் வசிக்குந் தலத்திற்குச் சென்று, கரீபைத் தேடிப்பார்க்க வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்துக் கொண்டார்கள். அவர்களுக்குப் பாதைகாட்ட வந்தவன் அத்தலத்தைப்பற்றி அச்சப்பட்டவனாக அமீர் அமீனிடத்தில் வந்து, "நாயகமே! தாங்கள் நீண்ட காலம் வரையில் சுகத்துடன் சீவித்திருக்கக் கடவீர்கள். நாம் இப்பொழுது பெரிய அபாயத்திலிருக்கிறோம். இவ்விடத்திற்கு மனிதர்களின் வரத்து மிகச்சொற்பம். பகுத்தறிவில்லாத, காட்டறபி யடிமைகள் நடமாடுந் தலங்களுள் இதுவும் ஒன்று. பனீவாஸில் கோத்திர பதவிப் பாதகர்கள் வசிக்குந் தலத்திற்குச் சமீபமான தலம். தப்பித்தவறி யிங்கு வந்தவர்கள் அப்பாதகர்களின் கைகளை விட்டும் தப்பிப் போகிறது அருமையிலும் அருமை. அப்பாதகர்கள் பாரதூரமான கொடிய செய்கைகளையும் விலக்காகக் காணவே மாட்டார்களென்பதை தாங்களறிந்து மிருக்கிறீர்கள். கொலை புரிவதும் கொள்ளையடிப்பதுமே அவர்களின் தொழில். பகற் காலங்களில் மலைக் குகைகளில் படுத் துறங்குவார்கள். இராக்காலங்களில் இந்

திசைகளில் சுற்றித் திரிந்து அவர்களின் தொழிலை நடத்துவார்கள. இப்போது தாங்களே தங்களுடைய சிவனைக் கொடிய ஆபத்திலாக்கி விட்டீர்க" ளென்றான்.

அதற்கு அமீர் அமீன், வழிகாட்டியே! இவ்வித ஆபத்துக்களை யெல்லாம் நான் அறிந்துதா னிருக்கிறேன். நீ யென்னைச் சிறு பாலியனென் றெண்ணிப்பேசுகின்றாய். நான் (சிரியா) ஷாமின் எல்லைகளில் இவர்கள் போன்ற நாட்டறபிகளுடன் கலந்துறவாடி, அவர்களின் நடவடிக்கைகளை மெத்த அறிந்திருக்கிறேன். உன்னிடத்தில் என்னுடைய தேட்டமாகிறது, நீ பயப்படாமல் என்னுட னிருந்து, தைரியத்துடனே நீ நாடிவந்த அலுவலைச் செய்வதில் உண்மையான ஊழியனாக இருக்கவேண்டு மென்பதே"யென்று சொல்லிவிட்டு, தன்னுடனிருக்கிற குதிரைவீரர்களைப் பார்த்து, "உங்களுடைய காரியம் எவ்வா" றென்று கேட்டார். அவர்களடங்கலும், "எஜமானே! நாங்கள் தங்களின் அடிமைகளாகவும், உயிர்த் துணைவர்களாகவு மிருக்கிறதுடன், இதோ, தங்களின் கட்டளைப் பிரகாரம் அருமையான தங்கள் தம்பின் கரீபைத் தேடிப் புறப்படத் தயாரா யிருக்கிறோம். அவ்விஷயத்தில் எங்களுடைய உயிர்களை யணுவாக மதிக்கவு மாட்டோ" மென்று மறுமொழி கொடுத்தார்கள். அமீர் அமீன், தன் குதிரைவீரர்களைத் துதித்து," சனங்களே, நீங்கள் இணை பிரியாது சேர்ந்துவரவேண்டு"மென்று ஆக்ஞாபித்தார். உடனே சகலரும் குதிரைகளில் சவாரியாகி, பனீவாயில் கோத்திர நாட்டறபிக ளிருக்குந் தலத்தை முன்னோக்கிக் குதிரைகளை நடத்தினார்கள்.

அன்றிரவு கடின இருளாக விருந்ததால், வெளிச்சத்துக்காகவும், பார்ப்பவர்கள் அவர்களை அப்பூமியி லுள்ளவர்க ளென்றெண்ணிக் கொள்வதற்காகவும் முன்னாலொருவனை தீவர்த்தி யொன்று பிடித்து வரச்செய்து, மற்றவர்கள் பின்றொடர்ந்து முன்னேறினார்கள். அவர்களின் வலம் இடம் பின்புறம் இருளாக விருந்தது. இடைவழியில் மனிதர்கள் குடியிருக்கும் தலங்க ளொன்றாவது



மதனபடவில்லை. 2 - மணித் தியாலம் குதிரைகளைச் செலுத்தி
னார்கள். அவர்களின் வலப் பாரிசத்தில் ஒரு குதிரைச் சவாரிக்
காரன் போவதுபோல் தோற்றிற்று. "அவனைப் பின்தொடர்ந்து
நெருங்கி, யாரென் றறிந்து வாருங்க" ளென்று அமீர் அமீன் தன்
குதிரைவீரர்களிற் சிலரை யனுப்பினார். அவ்வீரர்கள் விரைந்து
சென்று, சேணம் வைக்கப்பட்ட ஓர் குதிரையைக் கொணர்ந்
தார்கள். அக்குதிரையை அமீன் அமீனுடன் வந்திருக்கிற வழி
காட்டி கண்டவுடனே, "குதிரைவீரர்களே! இதுதான் எங்கள்
கலெக்டருடைய குதிரை" யென்று பெருஞ் சப்தமிட்டவனாக,
"அதிலேறி யிருந்த கரீபெங்கே?" யென்றுகேட்டான். அவனின்
சப்தத்தைக் கேட்டதும் அவர்க ளடங்கலும் அவ்விடத்திலேயே
நின்று விட்டார்கள். அமீர் அமீன் அக்குதிரைக்குச் சமீபத்தில்
வந்து அதை யுற்று நோக்கி, வழிகாட்டியின் சொல்லை ஸ்திரப்படுத்
தினார். அவர்களுள் ஒருவர், "கரீபு இக்குதிரையின் பேரிலிருந்து
விழுந்திருக்கப் போதும். அதனாலேயே யிக்குதிரை சேணத்
துடன் தெறிகெட்டுத் திரிந்த" தென்று சொன்னார்.

அதற்கு அமீர் அமீன், "என் தம்பின் ஒருக்காலும்வீழ்ந்திருக்க
மாட்டார். சிறுபோதுமுதல் குதிரை யேற்றத்தில் மிகுந்த
தேர்ச்சி யடைந்திருக்கிறார். இதைவிட மேடு பள்ளமான தலங்
களி லெல்லாம் சாரி வரும்போது விழாதவரா, இக்குதிரைமே
லிருந்து இச்சமதரைச் சாரியில் விழப் போகிறார்? ஒருக்காலு
மில்லை. ஆகையால் இப்போதுஉங்களுடைய அபிப்பிராயமென்ன?"
வென்று அவர்களைக் கேட்டார். அவர்களுள் குதிரை யேற்றத்
தில் பரிபூரண மடைந்த வொருவர், அமீர் அமீனின் சமுகத்தில்
நெருங்கி நின்று, "எங்கள் நாயகமே! அமீரே!! மாட்சிமைதங்கிய
தங்களின் தந்தையரும், எங்க ளெஜமானுமாகிய அமீர்பஷீர் அவர்
களின் சென்னியின்பேரி லாணையாகச் சொல்லுகிறேன். அமீர்கரீபு
இக்குதிரைமே லிருந்து ஒருக்காலும் விழுந்திருக்க மாட்டார்.
குதிரை யேற்றத்தில் அவருக்குண்டா யிருக்கும் தேர்ச்சியை நான்

தீர்க்கமாக அறிந்திருக்கிறேன். அவர் எப்போதாவது தவறி
விழுந்ததை நம்முள் ஒருவரும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை.
இக்குதிரையின் கல்லணையும், அங்கபடியும் அதனின் தானத்தி
லேயே யிருக்கிறது. அதுவே அவர் விழவில்லை யென்பதைத்
ஸ்திரப்படுத்துகிறது. அவர் விழுந்து விட்டதாக நாம் வைத்துக்
கொள்கிறதானாலும் இச் சேணத்தின் அங்கபடியோ, பூட்ஸைக்
கவ்விப் பிடிக்கிறதா யிருப்பதால், அதைவிட்டும் பூட்ஸ் விலகாமல்
அவர் குதிரையுடன் இழுக்கப்பட்டே வரவேண்டும். அப்படிக்கு
மில்லை. பூட்ஸ் களையப்பட் டிருக்கிறது. ஆகையால், நிகழ்ந்த சம்
பவத்தைக் கடவுளைத் தவிர மற்றவர்க ளறியமாட்டார்கள். நாம்
பனிவாயில் கோத்திரத்தாரின் எல்லைக்குப் போகவேண்டியதில்லை.
குதிரை யிங்கிருப்பதால் அமீர்கரீபு அங்கு போயிருக்கமாட்டா
ரென்பது நிச்சயம். ஆகையால், நாமிங்கிருந்து திரும்பி இருவ
ரிருவராக ஒவ்வோர் தீவர்த்தியுடன் பல பாகங்களிலுமாகி, நாம்
சாரி செய்த சமதரையைச் சேருகிற வரையில் பாதைகளைக் கவ
னத்துடன் உற்று நோக்கிச் செல்லவேண்டும். இதுவே யெனக்
கெட்டிய யோசனை" யென்றார்.

அவருடைய யோசனை சகலருக்கும் உசிதமாகக் காணப்பட்
டது. உடனே பந்த விளக்குகளைச் சித்தப்படுத்தி இரண்டிரண்டு
பேர்களாகப் பல பாதைகளிலும் பிரிந்து சென்று,கரீபைத்தேடற்
காரம்பித்தார்கள். அவ்வெளி மணற்பூமியாக விருந்தபடியால்,
குதிரைகளின் காலடிச் சப்தம் கேட்கப்படவில்லை. ஏதேனுந்
தென்படுகிறதா, என்று அவர்கள் கவனித்துப் பார்த்துக்கொண்டு
போனார்கள். யாதோ ரரவமும் கேட்கவில்லை. அமைதியாகவே
யிருந்தது. மூன்றுமணித் தேசகாலம் அவர்கள் அவ்வெளிச் சுற்
றோட்டத்தி லிருக்கும்போது, அவர்க ளேறி யிருக்குங் குதிரைகள்
திடீரென்று வெருண்டு கனைக்க வாரம்பித்த படியால், ஏதோ ஒன்
றைக் கண்டுதான் வெருண்டிருக்க வேண்டுமென்று யூகித்தறிந்த
அமீர் அமீன், "குதிரைகளை நிறுத்துங்க" ளென்று சப்தமிட்டார்.



உடனே அவர்க ளனைவரும் குதிரைகளை யடக்கி நிறுத்தினார்கள்.
ஒரு குதிரை மட்டில் அடங்காமல் சுற்றிக் கொண்டிருந்தது. அக்
குதிரைமே லிருப்பவர், "இதோ ஓர் சடலம் பூமியிற் கிடக்கக்
காண்கிறே" னென்று கூவினார்.

அவரின் கூக்குரலைக் கேட்டவுடனே, அமீர் அமீன் முதலான
வர்கள் தங்கள் குதிரைகளை விரைவாக விட்டுக்கொண்டு, அம்
மனிதர் நின்ற தலத்தளவி லாகிப் பார்க்கவே, இரத்தத்தில்புரண்ட
வோர் மனிதன் இலேசான முனக்கத்துடன் பூமியிற் கிடந்தான்.
அமீர் அமீன் அவனை உற்று நோக்கினர். அவன் பதவிகளின்
உடை யணிந்த, நடு வயதுள்ள, மாநிறமுடைய ஒருவனாகக்காணப்
பட்டான். அவனுடன் பேச்சு கொடுத்தார். மறுமொழி கிடைக்க
வில்லை. அவனுக் குண்டுபட்டிருந்த காயத்தைப் பார்த்தார்.
வாள் வீச்சினால் கண்டத்தின் எலும் பறந்துபோ யிருந்தது.
அவர்களுட னிருந்த பாதை காட்டி அந்த பதவியைப் பார்த்து,
"அமீரே! இவன் பனிவாயில் கோத்திர வழிப்பறிக் கொள்ளைக்
காரர்களு ளொருவன். நாம் இவனைக் கவனிக்க வேண்டியதில்லை.
நாம் வந்த காரியத்தில் முன்னேக்குவோம்; வாருங்க" ளென்றான்.

அமீர் அமீன் கண்ணீர்ச் சொரிய பெருமூச்சு விட்டவராக,
"இவனை யிந்த நிலைமையில் விட்டுப் பிரிய எனக்கு மனம்வரவில்லை.
இவன் எனக்கொரு துர்க்குறியாகத் தோற்றப் படுகிறான். இத்
தகைய துர்க்குறியை கடவு ளெனக்குக் காட்டாதிருக்க வேண்டு
கிறேன். இவன் இப்போது இறந்து போனான். துஷ்டஜெந்துக்
களுக் கவனின் பிரேதம் இரையாவதைவிட குழி கெல்லிப் புதை
த்து விடுவதே யுத்தமம்" என்று கூறி, தன் ஆட்களைக்குழிதோண்
டும்படிக் கேவினார். அவர்கள் குழி தோண்டிக்கொண் டிருந்தார்
கள். அமீர் அமீன் மறுபடியும் அப்பிரேதத்தை யுற்று நோக்கி,
தன் சகோதரர் கரீபுக்கு அத்தகை சம்பவிக்கா திருக்க வேண்டு
மென்று கடவுளைப் பிரார்த்தித்தார். வியசனத்தினால் அவரி னிரு

தயம் தெறித்து விழுவதுபோ லிருந்தது. சற்று நேரத்திற்குள் குழிகெல்லித் தீர்ந்தது. புதைப்பதற்காக அப்பிரேதத்தைத் தூக்கும்போது ஏதோ சில வஸ்து அப்பிரேதத்தின் மடிச் சீலைக்குள்ளிருப்பதாகத் தெரிந்து பரிசோதித்ததில், கரீபின் தலைப்போர்வையும், தொப்பியு மிருந் தெடுக்கப்பட்டன. அதைக் கண்ட அமீர் அமீன், கோவென் றலறி, "அது என் சகோதரனின் உடையல்லவா? இங்கு கொண்டு வாருங்கள். இன்னும் அப்பிணத்தைப் பரிசோதியுங்கள், வேறேது மிருக்கப்போது" மென்றார். அதுபோல் பரிசோதிக்கப்பட்டதில், கரீபுடைய இரத்தினமாலையொன்றிருந்தது. அதை யெடுத்து அமீர் அமீனிடத்திற் கொடுத்தார்கள். அவர் அதை வாங்கிக் கண்களில் வைத்து முத்தமிட்டுக் கொண்டு, மூத்துதிர்வதுபோலக் கண்ணீரைச் சொரிந் தழுதார். வேறே வஸ்துக்கள் அப்பிரேதத் திடத்தி லில்லாமையால் அப்பிரேதத்தை யடக்கஞ் செய்தார்கள். அமீர் அமீன், கரீபின் இரத்தினமாலை, தலைப் போர்வை, தொப்பி இவைகளை அடிக்கடி முத்தமிடுகிறதும் கண்களி லொற்றிக் கொண்டழுகிறது மாகவே யிருந்தார். அவரின் விசனகரமான அழுகையைக் கண்ட குதிரைவீரர்களும் அழ வாரம்பித்தார்கள்.

அவ்வா றிருக்கும்போது அமீர் அமீன் தன் மனதை ஒருவாறு பதப்படுத்திக்கொண்டு, அவ்வெளி யெங்கும் சுற்றி கரீபைத் தேடும்படிக்கு தன் குதிரைவீரர்களுக்குக் கட்டளை யிட்டு, தான் பலவாறு சிந்தனை கொண்டவராக வுட்கார்ந் திருந்தார். (இச்சரித்திரத்தை வாசிக்கும் நேசர்காள்! புருஷனை யிழந்து, ஜேஷ்ட புத்திரனைப் போக்கடித்து, கனிஷ்ட சேயே கதியெனக் கருதி படாதபாடும் பட்டு அருமையுடன் வளர்த்து அன்பு பாராட்டி வந்த, லிபனான் தேசத்திலிருக்கும் கரீபின் தாயார் ஜமீலாநாயகிக்கு, கரீபு காணமற் போய்விட்டா ரென்னும் சங்கதி தெரியப்படுத்தப் பட்டால், அம்மாது சிரோமணியின் மனமும் உடலும் என்னநிதியிலாகு மென்பதை நீங்களே அறிந்து கொள்ளுவீர்கள்.)



## 16-வது அத்தியாயம்.

## கரீபு.

ர் அமீன் சற்றுநேரம் அவ்விடத்தில் தன்னுணர்வற்றவராக உட்கார்ந்திருக்கும்போது, புதைக்கப்பட்ட கர்ட்டறபியின்நிலைமை தன் சகோதரர் கரீபுக்கும் உண்டாகப்போகிறதாக அவருக்குத் தோற்றமானது. அதனால் காரிருட் படலம் போர்த்த அவ்விரவில் பலவற்றையுஞ் சிந்தித்துக் கலக்கமுற்றிருந்தார். பின்பு கரீபின் தாயார் ஜமீலாநாயகியின் உருத்தோற்றம் அவருக்குண்டாயிற்று. அப்போது, அருமையுடனும் பட்சத்துடனும் வளர்த்தெடுத்த குழந்தை கரீபுக்கு ஏதேனுந் தீங்கு சம்பவித்த தென்பதை அவர்களறிந்தால், அவர்களின் கெதி யெவ்வாறாகப்போகிறதோ, என்பதை நினைநினைத்து யோசித்துக்கொண் டிருந்தார். அதனால் அவரின் அருமையான உடலில் வெப்பமும் குளிர்ச்சியு மாறி மாறி யுண்டுபட்டுக்கொண்டிருந்தன. அதன்பின், கரீபை லிபனான் மலை நாட்டிலிருந்து இங்கு வரச்செய்தது தான்தானென்னும் ஞாபகத்தில் பராக்கானார். அக்ஷணம் அவரின் திடகாத்திர சரீரம் ஒருவிசை குலுங்கி நடுங்கி, மனம்பதறி, கண்களில் தாரை தாரையாக நீர் வடியச் சகிக்கக்கூடாத விதமாக அழுது கொண் டிருந்தார். அச்சமயம் அவரின் இருதயத்தில் அக்கினி கொழுந்திட் டெரிவது போன்றிருந்தது.

அப்படிப்பட்ட சமயத்தில் அவருக்கு வெகு தூரத்தில் சிறு வெளிச்சமொன்று தெரிந்தது. உடனே தன்குதிரைமீதேறி அவ்வெளிச்சங் காணப்படுந்திசையையிலக்காக்கி, எவ்விதத்திலாவது கரீபைக் கண்டு பிடிக்கவேண்டு மென்கிற கவலைமிகைப்பால் அணுத்துணை அச்சமும், ஒருவரின் துணையுமில்லாதவராகக் குதிரையை வெகுவேகமாகச் செலுத்தி, அவ்வெளிச்சத்துக்குக் கொஞ்சதூரத்தில் வரும்போது, யாரோ ஒருமனிதன் நிற்பதாக அவர் கண்ணுக்குத் தெரிந்ததுடன், "எடா, அறபு நாயே! நீ யெங்களிடத்திற்கு வராமல் சீக்கிரந் திரும்பி யோடுவாயாக. மீறி வந்தால் உயிரிழக்கப் பெறுவாயென்பது சரத" மென்னும் சப்தம் அம்மனிதனினின்று முண்டானது அமீர் அமீனின்செவிக்கேறியது. அப்போது அமீர் அமீன், "ஓஹோ, மனிதனே! நீர் யார்? நான், நீர்சொல்லும்

அறபியல்ல. நீர் சற்று பொறுதி செய்துகொண்டு அங்குதானே நிற்பீராக. நான் உம்மைச் சந்தித்து ஒரு விஷயத்தைக் குறித்துக் கேட்கவேண்டியதிருக்கிற" தென்று உரத்துக் கூறினார். அம்மனி தன் "நாடியதைக் கேட்டுக்கொள்வாயாக, என்னை நெருங்கி வராதே" யென்று பிரதி கூறினார்.

அமீர அமீன், "ஓஹோ, மனிதனே ! நாங்கள் இப்பூமியிலுள்ள வர்களல்லர். எங்களிடத்திருந்து தவறிப்போன ஒரு வஸ்தைத் தேடி சொற்ப ஜனங்கள்தான் இங்கு வந்திருக்கிறோம். அதிலும் தற்போது நான் தனித்தவனாகவே யிருக்கிறே" னென்றுகூறினார். அப்படிக்கிருக்கும்போது அமீரின் குதிரைவீரர்கள் அவரைத் தேடி அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களை அங்குதானே நிற்கச் செய்து, "என்னுடன் பேச்சு கொடுத்த மனிதனைப் போய்ப் பார்த்து வருகிறே" னென்று சொல்லி முன்னேறி அம்மனிதனின் சமீபத்திலாகி அவருடைய முகத்தைக் கூர்க்கப் பார்த்தார். அவர், வெள்ளைச் சல்லாப் போர்வையிட்டு, வெள்ளைத் தொப்பி தரித்து, முகமூடியிட்ட ஒருவர், நீலநிறக் குதிரையின் மீதிருந்ததால், அவருடைய முகம் அமீர் அமீனுக்குத் தெளிவாகத்தெரியவில்லை. அம்மனிதர் அமீர் அமீனைக் கண்டவுடனே, "உங்களுக்கு சுபசோபன முண்டாகக் கடவதாக; நீங்கள் இழந்த வஸ்துவை யிவ்விடத்தில் திட்டமாகப் பெற்றுக்கொண்டீர்கள்" என்று சொன்னார்.

அம்மனிதரின், "பெற்றுக் கொண்டீர்கள்" என்ற வார்த்தை யினாலே, அமீர் அமீனின் இருதயம் பூரித்துத் ததும்பி, "அவ்வஸ்து எங்கிருக்கிற" தென்று அவரிடத்தில் அமீர் அமீன் பதறிப்பதறி கேட்டார். அதற் கம்மனிதர், "அவர் என்னிடத்தில் யாதோர் குறைவுமின்றி சுகத்துட னிருக்கிறார். அவரைப்பற்றி நீங்கள் அணுவளவுஞ் சஞ்சலப்படவேண்டியதில்லை" யென்று சொல்லி, அமீர் அமீனையும், மற்றவர்களையும் அழைத்துக்கொண்டு ஒருமைல் தூரம் போனார். அங்கொரு படாம் வீடும், சில வெளிச்சங்களு மிருந்தன. அம்மனிதர் அமீர் அமீன் முதலானவர்களைப் பார்த்து, "நீங்களடங்கலும் ஒன்றாகச் சேர்ந்து கூடாரத்திற்குள் நுழைய வேண்டாம். இங்குதானே யிருங்க" ளென்றார். அப்போது அமீர் அமீன், "தப்பிப்போனவர் என்னுடைய சகோதரரானதால் நான் மட்டில் உள்ளே புகவுத்தரவு கொடுக்க வேண்டு" மென்றார்.



அவர் அமீர் அமீனை மட்டில் உள்ளே அழைத்துச் சென்றார். அக்
கூடாரத்தினுள்ளே ஒருவர் படுத்திருக்கவும், வேறொருவர் அவரரு
கில் உட்கார்ந்திருக்கவுங் கண்டு, அமீர்அமீன்; "கரீபு எங்கே ?"
யென்று கேட்டார். அவரை யழைத்துச்சென்றமனிதர், "அதோ
படுத்திருக்கிறாரே அவர்தா" னென்று விடையளித்தார்.

அமீர் அமீன் விரைவாகப் போய், படுத்திருந்தவரின் முகத்
தைக் கூர்க்கப் பார்த்தார். தலையில் ஒரு சீலைத்துண்டு கட்டியிருக்
கவும், இரு கண்களும் மூடி யிருக்கவுங் கண்டார். அமீர் அமீனை
அக்குதிரைவீரர் பார்த்து, "இப்போது அவரை யெழுப்பிவிடாதீர்.
ஆரோக்கியம் பெற்று, தானே விழித்தெழுந்திருக்கட்டு" மென்றார்.
"அவரின் தலையில் ஏன் துணி சுற்றப்பட்டிருக்கிற" தென்று கேட்
டார். அவருடைய தலையில் சொற்பக் காயம் பட்டிருப்பதால்
அதற்குத் தக்க மருந்தமைத்துக் கட்டியிருக்கிறேன். கடவுளின்
கிருபா நோக்கத்தால் அவருக்கு யாதோர் ஆபத்துமில்லை" யென்று
அக்குதிரைவீரர் கூறினார். அப்போது அமீர் அமீனுடைய மனம்
கொஞ்சிற்று சமாதானமானது. "கரீபுடைய விஷயத்தில் நடந்தவை
களை விவரிக்கவேண்டு" மென்று அமீர் அமீன் அக்குதிரை வீரரைக்
கேட்டார். அவர் "இங்கிருந்து பேசக்கூடாது, வெளியேபோய்ப்
பேசிக் கொள்ளலாம், வாரு" மென்று அமீர் அமீனை அழைத்துக்
கொண்டு வெளியே வந்தார். அப்போது அம்மனிதரிடத்தில்
கரீபைப்பற்றி விசாரணை செய்தார்.

அக்குதிரை வீரர் அமீனைப் பார்த்து, "இன்று சாயுங்காலம்
நான் வேட்டையாடப் போய்விட்டு திரும்பி வரும்போது, கார்
மானந்தேடி யலறுந் தொனி என் காதில்விழுந்தது. உடனே நான்
அத்திசையைநோக்கிச் சென்றேன். அங்கே இப்பிள்ளையைச் சில
நாட்டறபிப் பாதகர்கள் சூழ்ந்துகொண்டு, ஒருவன் தடியாலடித்து
விழ்த்திக் கொல்ல ஆரம்பித்தான். அப்போது நான் உரத்த ஒரு
சப்தமிட்டு, கொல்ல முயன்றவனை யென் கைவாளால் வீசினேன்.
அவன் மண்மேற் சாய்ந்தான். மற்றவர்கள் ஓடிவிட்டார்கள். அப்
பிள்ளையின் அருகில் நின்ற குதிரையும் வெருண்டோடிவிட்டது.
நான் அப்பிள்ளையை நெருங்கிப் பார்த்தேன். அவர் தடியடியின்
வருத்தத்தால் சோக முற்றிருந்தார். உடனே அவரை நான் தூக்
கிக்கொண்டு என் குதிரைமேலேறி யிக்கூடாரத்திற்கு வந்து, அவ

ருடைய தலைக்காயத்தை மிருதுவாகக் கழுவி துணியால் கட்டினேன். பிறகு அவருக்குக் கொஞ்சம் பால் கொடுத்து குடிக்கச் சொன்னேன். அவர் சரியான வுணர்வில்லாதவராக விருந்தும், என் சொல்லைத் தட்டினாரென்கிற பேர் அவருக்குண்டாகாமற்படிக்குக் கொஞ்சம் பாலுங் குடித்தார். படுக்கை தயார் செய்து, படுக்க வைத்தேன். அவருக்குத் தூக்கம் மிகைத்தது. அவரைக் காத்துக்கொண் டிருக்குமாறு என் வேலைக்காரனுக்கு தகுந்தபடி சொல்லிவிட்டு, என்னால் வெட்டப்பட்டவனின் சனங்கள் கூட்டங்கூடி யென்னைத் தேடிவரவும் போதுமாதலால், அவர்களின் ஊசாட்டத்தை வழிபார்த்தவனாக என் கூடாரத்தைவிட்டு ஒரு மைல் தூரத்திற்போய் நின்றேன். இரவிற் சிலபாகமுங்கழிந்தது. அவர்களி லொருவரேனும் வரவில்லை. சில நிமிஷங்களுக்குப் பின்னால், நீங்கள் வந்து என்னைக் கண்டீர்கள். இதுதான் நடந்தவை" யென்று விவரமாகச் சொன்னார்.

அக்குதிரை வீரரின் சொற்களை வெகு கவனமாக அமீர்அமீன் கேட்டுக்கொண்டிருந்ததுடன், அவரை யின்னாரென்றறிய விருப்பமுற்று அவருடைய முகத்தை யுற்றுப் பார்த்தார். அவர் முகமூடியிட்டிருந்தபடியினாலே, இன்னாரென்றறிந்துகொள்ளக்கூடிற்றில்லை. அவருடைய கண்கள் மட்டில் தெரிந்தன. ஆனால் அவரின் வார்த்தையானது அவரை பதவியாகக் காட்டவில்லை. அவருடைய பேச்சு மிஸ்திரிகளின் பேச்சிற்குச் சற்றேறக்குறைய ஒத்திருந்தது.

அக்குதிரைவீரர் கரீபின் சங்கதிகளைச் சொன்ன பிறகு, அவரை அமீர் அமீன் சந்தோஷத்தினால் இறுகத்தழுவி, "குதிரை வீரரே! காப்பாற்றுதலென்னும் கிருபையான மழையை யெங்கள் பேரிற் சொரிந்தீர்கள். நாங்கள் சீவித்திருக்குங் காலமெல்லாம் தாங்கள் செய்த வுபகாரத்தை ஒரு போதேனு மறக்கமாட்டோம். வல்லபக் கடவுள் எங்களைக்கொண்டு தங்களுக்கு அதிகநன்மையைத் தருவாராக. மேலும் தங்களிடத்தில் இன்னொரு விஷயத்தைப் பற்றிக் கேட்கவும், அதற்குத் தாங்கள் மறுமொழி கொடுக்கவும் வேண்டுமென்கிற நாட்டம் பாக்கியிருக்கிறபடியினாலே, தங்களி னுத்தரவை யெதிர் பார்க்கிறேன்" னென்றார். அதற்கவர், "நாடியதைக்கேளும்; மறுமொழி தருகிறேன்" னென்றார். அமீர் அமீன், "தங்களுடைய நாமத்தையும், தாங்கள் இந்நாட்டுப்புறத்தாரல்லவென்று எனக்குத் தோற்றுகிறபடியால், தாங்கள் இங்குவந்திருக்கவேண்டிய



காரணத்தையும் எனக்குச் சொல்லவேண்டு" மென்று அவரைப் பார்த்துக் கேட்டார்.

அமீர் அமீனின் வார்த்தைகளைக் கேட்ட குதிரைவீரர், சஞ்சலப்
பெருமூச் செறிந்தவராக, "தங்கள் கேள்விக்கு விடை தரக்கூடிய
சமயம் இதுவல்ல. இப்போது அதைப்பற்றிக் கேட்கவும்வேண்
டாம். நீங்கள் இழந்தபொருளைத் தேடும் விஷயத்தில் மெத்தக்
கஷ்டப்பட்டவர்களாகத் தோற்றப்படுகிறீர்கள். ஆகையால், சற்று
நேரம் இளைப்பாறுதற்குத் தாங்களும் தங்களுடனிருக்கிற குதிரை
வீரர்களும் இங்கு வாருங்க" ளென் றழைத்தார். அதற்கு அமீர்
அமீன், "ஆம், ஆம்; இன்றுபகல்முதல் தங்களைச் சந்திக்கிற வரை
யில் இவ்வெளியின் பல பாகங்களிலும் அலைந்தலைந்து அயர்ந்து
போயிருக்கிறோ" மென்றார். "அப்படியானால்கொஞ்சம்பசியாறிக்
கொள்ளுங்க" ளென்று அவர் கூப்பிட்டார். அதற்கு அமீர் அமீன்
"நல்ல" தென்றெழுந்தார். ஆனால் இன்னொருமுறை கரீபைப்
பார்க்காமல் அக்கூடாரத்தை விட்டு விலகி, வேறிடத்திற்குப்
போகக் கூடாதவராக விருந்தார்.

அதனால் அமீர் அமீன் மறுபடியுங் கூடாரத்திற்குள்ளே
புகுந்து, கரீபு கண்ணுறங்குவதையும், கொசுகு முதலானவைகள்
அவர்பேரில் மொய்க்காதபடிக்கு வேலைக்காரனொருவ னிருந்து
விசிறிக்கொண்டிருப்பதையும், கரீபின் நெற்றியில் சன்னமுத்துக்
கள் போன்ற வியர்வைத் துளிகள் மலிந்திருப்பதையும் கண்டு,
அவரை முத்தமிட நாடினார். கரீபின் தூக்கங் கெட்டுப்போவதைப்
பயந்து, கரீபை முத்தமிட வேண்டாமென்று அமீர் அமீனவேலைக்
காரன் கேட்டுக் கொண்டான். அமீர் அமீன், உடனே வெளிக்
கிட்டு, தன் குதிரைவீரர்களில் சிலரையழைத்து, "இக்ஷணமே
நீங்கள் இங்கிருந்து புறப்பட்டு, என் தந்தையராகிய அமீர்பஷீரிடத்
திற் சேர்ந்து, "என் அருமை சகோதரர் கரீபை இன்றிரவுதான்
நான் கண்டேன். இப்போது என்னுடனேதானிருக்கிறார். நாளைத்
தினம் கடவுளின் கிருபா நோக்கத்தால் தங்கள் சமூகத்தில் வந்
திருப்பார்" என்று நான் கூறியதாகச் சொல்லுங்க" ளென்று
கூறி, கரீபைக் காப்பாற்றிய குதிரைவீரரின் ஆட்களில் சிலரையும்
அவர்களுக்குத் துணையாகவும் வழிகாட்டிகளாகவும் சேர்த்துப்
பயணப்படுத்தி யனுப்பினார். அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு
அமீர்பஷீரிருக்குந் தலத்தைநாடிச் சென்றார்கள்.

### 17-வது அத்தியாயம்.

## குதிரைவீரரின் விருந்து.

மேலே கூறியபடிக்கு அமீனும் அவரைச் சேர்ந்தவர்களும் விருந்துக்கான தின்பண்டங்கள் சித்தப்படுத்தி வைக்கப்பட்டிருந்த வேறோர் கூடாரத்திற்கு வந்து, வரிசையாக உட்கார்ந்தார்கள். விருந்தளிக்கும் குதிரைவீரர் தன்னிடத்தில் போதுமான வேலையாட்களிருக்க, அவர்களைக்கொண்டு அக்காரியத்தை நடத்தாமற்படிக்குத் தானே முதன்மையாக நின்று அவ்விருந்துக் காரியத்தை நடத்திக் கொண்டிருந்தார். அறபிகளின் வழக்கம் அதுவே. அப்போது, முழுசாகச் சமைத்த ஒருஆடும், மற்றதிவ்யமான பதார்த்தங்களும், தித்திப்புப் பதார்த்தங்களும், கத்திகளும் முட்களும், கைக்குட்டைகளும், சவர்க்காரங்களும், பழவினங்களும் வைத்த, சித்திர வேலை செய்து வெள்ளி முலாம்பூசிய மிஸ்று தேசத்தின் தாம்பாளமொன்று வைக்கப்பட்டிருந்தது. அமீர் அமீன் முதலானவர்கள் நாட்டறபிகளின் வழமையையறிந்தவர்களானதால், அமீர் அமீன் அவ்வாட்டின் தலையை யறுத்து, விருந்தளிக்குங் குதிரைவீரருக்காக வைத்தார். அதனால் அக்குதிரைவீரர், அமீர் அமீன் நாட்டறபிகளுடன் கலந்து, அவர்களின் நடவடிக்கையை யறிந்திருக்கிறாரென்று விளங்கிக் கொண்டார்.

அமீர் அமீன் முதலானவர்கள் ஒருகாலை மடக்கி நிறுத்தி மற்றொருகாற் படத்தின்மேல் சதுர்முகமாக உட்கார்ந்து, கை வாய் சுத்தி செய்துகொண்டு, அங்கு வைக்கப்பட்டிருந்த தின்பண்டங்களைப் போதுமான மட்டிற் புசித்து, கை வாய் அலம்பினார்கள். அதன்பின், பிரபல்யமான காவா என்ற அறபுக்காப்பி தயாராக்கப்பட்டது. சில வேலையாட்கள் மரக்கலசங்களில் பாலைக்கறந்து அப்பானைகளைச் சிறுதடிகளால் தட்டிக்கொண்டு வந்தார்கள். அக்கலசங்களின் சப்தம் செவிக்கினிமைதரும் இசைப்பாட்டுபோன்றிருந்தது. அப்பாலே வேறுபாண்டத்தில் வார்த்துக் காய்ச்சி, ஸ்தம்பூல் படிக பாத்திரங்களில் நிரப்பிக் கொண்டுவந்து, முன் தயாராக்கப்பட்ட காப்பியுடன் கலந்து, முதலில் அமீர் அமீனுக்கும்; அதன்பின் அவரின் வலப்பாரிசத்திலிருந்து மற்றவர்களுக்குங் குடிப்பாட்டினார்கள். ஏலம், இலவங்கம் முதலிய வாசனைச்



சரக்குகள் அக்காப்பியுடன் கலக்கப்பட்டிருந்த படியினாலே, அமீர் அமீன் முதலானவர்கள்மிகுந்தபிரியத்துடன் பருகினார்கள். பிறகு அமீர் அமீன் நீங்கலாக மற்றவர்கள் அவரவரின் படுக்கைத் தானத்துக்குப் போய்விட்டார்கள்.

அமீர் அமீன், கரீபிருக்கும் கூடாரத்திலேயே யிருப்பதற்கு அக்குதிரை வீரரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டார். கறுப்புக் கம்பளிகளாற் செய்யப்பட்ட அக்கூடாரம், பெண்டுகளுக்கொரு பாகமும், ஆண்பிள்ளைகளுக் கொருபாகமுமாகச் செய்யும்வழக்கம் போன்றில்லாமல், ஒரே திறப்பாக விருந்தது. அமீர் அமீன் அக்கூடாரத்தில் கரீபின் தலைமாட்டில் தனக்காகப் போடப்பட்டிருந்த படுக்கையளவிற் போய்ப் படுத்து நித்திரை போனார்.

அன்றிரவுபோய், மறுநாட்காலை 7-மணி சுமாருக்கு கரீபு நித்திரை தெளிந்து கண்ணை விழித்துப்பார்க்க, தன் தலைமாட்டில் அமீர் அமீன் உட்கார்ந்து படுத்திருக்கக்கண்டு, பிரமிப்படைந்தார். அப்போதே அமீர் அமீனும் விழித்தெழுந்து, கரீபின்கிட்டநெருங்கி தன் னிருகரங்களால் அவரை யிறுகத்தழுவி முகந்துகொண்டு, "என்னருமை சகோதரரே! மனக்கலக்கங் கொள்ளாது மகிழ்ந்திருப்பீராக" வென்றார். "இப்போதுநானெங்கிருக்கிறேன்?" என்று கரீபு கேட்டார். அதற்கு அமீர் அமீன், "கரீபே! இப்போது நீர் உம் சகோதரருடனும், தந்தையார் அமீர்பஷீருடனும் இருக்கிறீர், அஞ்சாதீர்" என்றார். கரீபு, "கள்ளர்களெங்கே?" யென்று கேட்டார். அமீர் அமீன், "கரீபே! அக்கள்ளர் ஓடிப்போய்விட்டார்கள். அவர்களைப் பற்றிக் கொஞ்சமும் நீர் அஞ்சவேண்டியதில்லை. தைரியமாகவும் மனச் சமாதானமாகவுமிரும். நீர் என் சமுகத்திலிருக்கிறீர். நான் உம்முடைய சகோதரன் அமீனல்லவா?" என்றார்.

என்றதும், கரீபு பதறிப் பதறி, "அமீனே! என்தகப்பனாரெங்கே? நானேறியிருந்த முரட்டாட்டப் புரவியெங்கே? என் தாயாரெங்கே?" யென்று கேட்டார். அமீர் அமீன், கரீபுக்கு அநேக தேறுதல்களைச் சொல்லி, உணர்ச்சியுண்டாக்கினார். அதன்பின் அமீர் அமீன், அதுவரையில் நடைபெற்ற சந்தோஷச்சம்பவங்களுக்காககடவுளுக்குத்துதி செலுத்திகரீபைப்பார்த்து, "கரீபே! நீர் எங்களை விட்டுப் பிரிந்த பின்னால் நடந்தவைகளை விவ

ரிப்பீராக" வென்று கேட்டார். அதற்கு கரீபு "அமீனே! நான் அக்குதிரையின் மேலேறியபிறகு, அக்குதிரை யென்னைக் கீழே யெறிந்துவிடற்குக் கூடியவரையில் முயற்சித்தது. நான் அதற்கிடங் கொடுக்கவு மில்லை. அதையடக்க என்னால் இயலவு மில்லை. இரண்டுமணி நேரத்துக் கதிகமாகவே, பல திசையிலும் மிகுந்த வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அச்சமயத்தில் எனக்கெதிரில் சற்று தூரத்தில் சில குதிரைக்காரர் வரக்கண்டு, "எனக்குதவி புரிய வாருங்க" ளென்று அவர்களை அழைத்தேன். அவர்கள் என்னிடத்தில் வந்து, நானேறியிருந்த குதிரையின் வாய்வடக் கயிற்றைப் பிடித்து நிறுத்தி, என்னைக் கீழே யிறங்கச் சொன்னார்கள்.

"அவர்களின் சொற்போல கீழே யிறங்கினேன். அவர்களுள் ஒருவன் என்னை நெருங்கிவந்து பரிசோதித்து, என்னிடத்திலிருந்த வஸ்துக்களை வம்பித்துக் கேட்டான். நான் கொடுக்கமாட்டேனென்று மறுத்தபடியால் அவனுக்கும் எனக்கும் மல்யுத்தம் நடந்தது. அவர்கள் என் தகப்பனாரின்வீரர்களைவிடக் கொஞ்சமாயிருந்தார்கள். எனக்குப் பின்பக்கத்திலிருந்த ஒருவன் ஒரு தடிக்கொம்பால் என் தலையிலடித்தான். நான் வலிபொறுக்கமாட்டாதவனாய்க் கீழே விழுந்தேன். அதற்குப்பின்னால் நடந்தது எனக்குத் தெரியமாட்டாது. அப்புறம் இக்கூடாரத்திலிருக்கிறது போலும், பால் குடித்ததுபோலு மிருந்தது. இப்போது உங்களை யென்னருகிற் காண்கிறே" னென்று கூறினார்.

அமீர் அமீன், கரீபின்சொற்களைக் கேட்டவுடனே பன்முறை கரீபின் நெற்றியை முகர்ந்து கண்ணீர்வடிய, கரீபு குதிரையேறிச் சென்றதுமுதல் அதுவரையில் நடந்தவைகளை ஆதிதுவக்கம் அந்தம் வரையில் விவரமாக அவருக்குச் சொல்லிக்காட்டி, "கரீபே! நீர் உயிர்தப்பிப் பிழைத்தற்குக் காரணர் இக்கூடாரத்தின் அதிகாரராகையால், அவர் நமக்குச் செய்திருக்கிற பேருதவிக்கு நாம் பிரதி செய்ய கடவுள் கற்பிப்பாராக" என்றார். அதற்கு கரீபு, "இவ்விஷயத்தை யென் தாயாரறிந்தால் அவர்செய்தவுதவிக்காகஅவரை மிகவும் உவந்து தக்கமரியாதை செய்வார்க ளல்லவா?" என்றார். கரீபும் அமீனும் பேச்சை நிறுத்தினவுடனே, அக்கூடாரத்திற் குடையவர் அமீனை நோக்கி, "நீங்களிருவரும் இன்னாரென்பதை நானறிய விரும்புகிறே" னென்றார். அதற்கு அமீன்,



"நாங்கள், லிபனான்மலைநாட்டரசர் அமீர்பஷீருஷ்-ஷிஹாபியவர்களின் புத்திரர்கள். ஒருவிஷயத்தை முன்னிட்டு மிஸ்று தேசத்திற்குவந்து கொஞ்சநாட்கள்தான் ஆகின்றன. மிஸ்றின் தேசாதிபதி முஹம்மதுஅலி பாஷா அவர்களுடைய கட்டளைப்படி, இஸ்கந்தரிய்யாவிலிருந்து அவர்கள் காஹிருவுக்கு வருகிற வரைக்கும் பனீசுவையில் தங்கியிருக்கிறோம்.

"நேற்று காலையில் பனீசுவையின்எதிர்த்தகரையிலுள்ள மைதானத்தில் குதிரை சவாரி செய்வதற்காக வந்தோம். என்சகோதரராகிய இவரேறிய குதிரை, தன் முரட்டாட்டத்தினால் இவரை யிப்பாலைக்குக் கொண்டோடி வந்து விட்டது. அதற்குப் பின் நடந்தவைகளைத் தாங்கள் கண்டுங் கேட்டு மிருக்கிறீர்கள். இப்போது நாங்கள் எங்கள் தகப்பனாரிருக்கிற தானத்திற்குப்போக வேண்டும். நாங்கள் அங்குபோய்ச் சேர்ந்து, இவ்விடத்தில்நடந்தவைகளை யெங்கள் தகப்பனாரவர்க ளிடத்திற் சொன்னோமேயானால், யாதொரு சந்தேகமின்றி தங்களைத் தரிசிக்க அவர்கள் பிரியப்படுவார்கள். ஆகையால், எங்கள்கூடவே தாங்களும் வருவதை நாங்கள் விரும்புகிறோ" மென்றார்.

அதற்கு அக்கூடாரவீரர் யாதோர் மறுமொழியுந் தராது சற்றுநேரம் வாய்மூடி, சிரங்குனிந்து மவுனமாக விருந்து, அமீனைப்பார்த்து, "அமீனே! நான் உங்களுடன் அங்குவரக்கூடாமைக்கு அநேக முகாந்தரங்க ளிருக்கின்றன. அவைகளைத் தற்போது உங்களுக்குச் சொல்லவும் இடம்பாடாக மாட்டாது." என்று சொல்லி, மறுபடியுஞ் சற்றுநேரம் தலைகுனிந்திருந்து, நிமிர்ந்து, "அமீர் அமீனே! அமீர்கரீபுடைய காயம்சுகமாகிற வரைக்கும் அவரும் நீங்களும் இவ்விடத்தில் தானே யிருந்து, சுகமானவுடனே கடவுளின் காவலில் நீங்கள் நாடிய தலத்திற்குப்போகிறது நலமாகத் தோன்றுகிற" தென்றார். அமீர் அமீன், "அப்படிக்கிருக்க வாய்க்காது; எங்கள் தகப்பனார் எங்களின் வரவையெதிர்பார்த்தவர்க ளாகவே யிருப்பார்கள். ஆகையால், சீக்கிரத்திற் போய்ச்சேரவேண்டு" மென்றார். கூடாரக்காரர், "உங்களுடைய செய்தியை உங்கள் தகப்பனா ரவர்களுக்கு அறிவித்து வரும்படிக்கு நம்முடைய மனிதரில் ஒருவரை அங்கனுப்புவோம். அவர்கள் இங்குவர நாடுவார்களானால், வேறுசில்லை, அவர்களை யழைத்து

வரும்படிக்கு அனுப்பிப்போ" மென்றார். "அவர்கள் வருவார்களென்பதை நான் நம்பவில்லை. ஆகையால், கட்டாயம் இன்றைக்கே நாங்கள் போய்ச் சேரவேண்டும். தாங்களும் எங்கள் கூடச் சேர்ந்து வந்தால் மெத்த சந்தோஷமாக விருக்கும். வரக்கூடாதிருந்தால், தங்களின் திருநாமத்தை யெங்களுக்குச் சொல்லவேண்டும். தங்களைப்பற்றி யெங்கள் தகப்பனாரிடத்திற் சொல்லவேண்டு" மென்று அமீர் அமீன் கூறிக் கேட்டார்.

கூடாரக்காரர், "நான் வரக்கூடும்போ விருந்தால் என்னைத் தடுப்பவர் ஆருமில்லை. இது வரக்கூடாத சமயமாகவிருக்கிறது. கடவுளின் சித்தத்தில் அவர்களை நான் சந்திப்பேன் என்றிருக்குமானால், அப்போது என் பெயரை அவர்களிடத்தில் சொல்வேன். நீங்கள் என்க்குப் பிரதி செய்வதை நான் வழி பார்க்கவுமில்லை. கரீமை இன்னாருடைய பிள்ளை யென்றறியா திருக்கும்போதே, என்னாலாகவேண்டிய கடமையை நான் செய்தேனே ஒழிய வேறில்லை" யென்றார். அமீனும், கூடாரக்காரரும் பேசி முடிந்து, இருவரும் வெளியே வந்தார்கள். அமீர் அமீன், அத்தலம் விசாலமான மணற் பூமியாக விருப்பதையும், அனேகபடாம் வீடுகளமைந்திருப்பதையும் பார்த்து ஆச்சரியமடைந்து, "இப்படிப்பட்ட விடத்தில் இவர் குடியிருக்கவேண்டிய காரணமென்ன? அவர் பெயரைச் சொல்லாமலும், முகத்தை மூடிக்கொண்டு மிருக்கவேண்டிய நிமித்த மென்ன?" என்று யோசித்து, "அவருடைய காரியத்தை தன் தகப்பனார் அமீர்பஷீரவர்களிடத்தில் அகத்தியம் சொல்லிக் காட்டத்தான் வேண்டு" மென்று தனக்குள்ளே தீர்மானித்துக் கொண்டார்.

---

18-வது அத்தியாயம்

## அமீர்பஷீரும், கலெக்டரும்.

அமீர்பஷீர் அன்றிரவு முழுதுங் கண்ணுறங்காமற்படிக்கு, தன் சிரேஷ்ட குமாரர் கலீலுடன், அமீனையும் கரீமையும் பற்றிப் பேசிக்கொண்டே யிருந்ததினால், அவ்விரு பிள்ளைகளின் எண்ணம் அவர் நெஞ்சத்தை விட்டொழியா திருந்தது. அப்போது, கரீபேறிய



முரட்டாட்டக் குதிரையைப்பற்றி யோசித்தார். அக்குதிரை இங்குள்ளவர்களில் யாரையோ மோசஞ் செய்தற்காக நாட்டறபிகளால் விற்கப்பட்டதென்றும், அம்மோசம் கரீமிடத்திலானதென்றும் அவருக்குப் புலப்பட்டது. பொழுது விடிந்த வுடனே கலெக்டரை வரவழைத்து "நம்முடைய பிள்ளைகளைப்பற்றிய விஷயம் ஏதேனுங் கிடைத்திருக்கிறதா?" என்று கேட்டார். கலெக்டர், "இல்லை" யென்று மறுமொழி தந்தார். அமீர்பஷீர், குதிரைவிற்ற அறபிகளைப் பிடித்துக்கொண்டு வரும்படி கலெக்டருக்குக் கட்டளையிட்டார். கலெக்டர், நல்லதென்று சில போலீஸ் வீரர்களை யனுப்பி வைத்தார்.

போலீஸ் வீரர்கள் போய் அந்த நாட்டறபிகளைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள். அமீர்பஷீர், கோபத்தினால் கண்களில் நின்றுந் தீப்பொறி தெறிக்க, மரச்சிலைபோன்று அசையாது உட்கார்ந்திருந்தார். அப்படிப்பட்ட சமயத்தில், பிடிபட்ட, குதிரைவிற்ற நாட்டறபிகள் அமீர்பஷீரின் முன்னிலையிற் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார்கள். அப்போது அமீர்பஷீர் கலெக்டரைப் பார்த்து, "இத்தானத்தினின்றுங் காணாமற்போன என் புத்திரர்களை உம்மிடத்திலேயே திட்டமாகத் தேடுகிறேன். மற்றவர்களை நான் அறிந்தவனுமல்ல. நீரே அதற் குத்தரவாதி யாகையால், இதோ வந்திருக்கிற, உம்க்குக் குதிரைவிற்ற நாட்டறபிகளிடத்தில் காரியத்தின் உண்மையைக் கேட்டு விளங்கிக்கொள்ள வேண்டியது உமது கடமை" யென்றார். கலெக்டர், அமீர்பஷீரின் வார்த்தைகளைக் கேட்டுப் பயந்து நடுக்குற்று, கடுஞ் சினங்கொண்டவராகி, "இந்த நாட்டறபிகள் காரியத்தினுண்மையை விண்ணப்பம்செய்கிறவரைக்கும் அவர்களைச் சவுக்காலால் அடிப்பதில் கொஞ்சமும் பின்வாங்கக்கூடா" தென்று தன் சேவகர்களுக்குக் கட்டளையிட்டார். கட்டளைப் பிரகாரம் நாட்டறபிகள் அடிக்கப்பட்டு; அடிதாங்கமாட்டாதவர்களாகி, பூமியிற் சாய்ந்தார்கள். அப்போதும் கடுமையாகவே அடிக்கப்பட்டார்கள். முதுகு, கை, கால், முதலிய வுறுப்புகள் வீற்று வீற்றுக்கப்பட்டு இரத்தம் பீறிட்டோடிற்று. எவ்வளவு அடிபட்டாலும் இரகசியத்தை வெளியிடாதவர்களாகவே காணப்பட்டார்கள். அவர்கள்பேரிற்பட்ட அடிகளெல்லாம் ஆறிய இரும்பின் மேற் பட்ட சம்மட்டியடிகள் போலாயின. அந்நாட்டறபிகளின் பிடிவாதத்தைப்பற்றி அங்கிருந்த சகலரும்

வியப்படைந்தார்கள். அவ்வடிகள் அமீர்பஷீரின் கோபாக்கினியைக்
கொஞ்சங் குளிரச்செய்ததால், அடியை நிறுத்தும்படிக்கு அமீர்
பஷீர் கலெக்டருக்குக் கட்டளைபண்ணினார். அடி நிறுத்தப்பட்
டது.

பின்பு, சிம்மராஜன் உக்ரகோபத்துடன் பாய எழும்புவது
போல அமீர்பஷீர் பாய்ந்தெழுந்து, சிங்க கர்ச்சனை போன்ற வுரத்த
சப்தத்தால், "ஓ, நாட்டறபிகாள்! நீங்கள் என்னிடத்தைநெருங்க
வாருங்க" ளென்றழைத்தார். அவர்கள் தள்ளாடித்தள்ளாடி
நடந்துவந்து அமீர்பஷீரினெதிரில் நின்றார்கள். அமீர்பஷீர், கண்
களில் தீப்பொறி பறக்க அதி சினத்துடன் அவர்களை யுறுக்கிப்
பார்த்து, "என் பிள்ளைகளை உங்களையல்லாதவர்களிடத்தில்கேட்கவு
மாட்டேன்; நான் மற்றவர்களை அறியவுமாட்டேன்; நீங்களேன்
வெறுமனே யிரகசியத்தை மறைக்கின்றீர்கள்? உங்களின் துற்
கிரியை யெப்போதும் மறைக்கப்பட் டிருக்குமென்று கருதி யிருக்
கிறீர்கள் போலும். உங்களின் துற்செயலின் அந்தரங்கத்தை உங்க
ளுள்ளொருவனே எனக்குப் பரிஷ்காரமாகத் தெரிவித்திருக்கிறான்.
நீங்கள் அச்செய்கையைச்சுயேச்சையாகச்செய்யவில்லை யென்பதை
நான் அறிந்திருக்கிறபடியால், நீங்கள் குற்றச்சாட்டுக்குள்ளாக்கப்
படமாட்டீர்கள். அறியாமையால் உண்மையை நீங்கள் வெளிப்
படுத்தாமல் இன்னமும் மறைக்கத் துணிவீர்களேயானால், நான்
இலேசில் விடமாட்டேனென்பதும், நீங்கள் கடின தண்டனை யடை
வீர்களென்பதும் சரத" மென்று கடிந்து கூறினார்.

அமீர்பஷீரின் சொற்களைக் கேட்ட நாட்டறபிகள் ஒரே வாக்
காக, "எங்கள் அபந்தியே! தாங்கள் நீடூழி வாழ்ந்திருக்கக் கடவீர்
களாக. நாங்கள் வம்பிக்கப்பட்டவர்க" ளென்றார்கள். அமீர்பஷீர்
"நாட்டறபிகாள்! நீங்கள் வம்பிக்கப்பட்டவர்க ளென்பதை நா
னறிந்துதானிருக்கிறேன். நடந்த கருமத்தை நீங்கள் சொல்லாது
போனால் கட்டாயம் சிக்ஷிக்கப்படுவீர்க" ளென்கவே, அவர்களுள்
ஒருவன் அமீரின், அச்சத்தால் நடுக்கமுற்றவனாக அமீர்பஷீரின்
கால்களில் வீழ்ந்து வணங்கி யெழுந்து, "எஜமானே! சத்தியமாக
நாங்கள் ஏவப்பட்ட அடிமைகள். நாங்கள் சுயேச்சையாக ஒன்றை
யும் செய்து விடவில்லை. பனீவாவில் கோத்திரத்து அமீர், அக்
குதிரையை என்ன விலை கேட்டாலும் பனீசுவைபுஜில்லாக் கலெக்



97 NOV
118136

டருக்கே விற்றுவிட்டு வரும்படிக்கு எங்களுக்குக் கட்டளையிட்டார்.
அவரின் ஏவற்படிக்கே நாங்கள்செய்தோம். அவ்விஷயத்தில் அவ
ருடையநாட்டம்இன்ன தென்பதை நாங்கள் அறியவேமாட்டே
மென்றார்கள். அமீர்பஷீர் அவனைப் பார்த்து, "நீ சொன்னது
போது"மென்று சொல்லி,அவர்களைக் காவலில் வைக்கும்படிக்குக்
கட்டளை யிட்டார்.

பின்பு அமீர்பஷீர் கலெக்டரைப் பார்த்து, "பனீவாவில்
கோத்திர அமீருக்கும்உமக்குமிடையில் விரோதம்பகையுமுண்டோ?"
என்று கேட்டார். அதற்கு கலெக்டர், "ஆம், ஆம். அக்கோத்திரத்
ளேக்காரருள் சிலரை, நான் என் சேவகர்களை யனுப்பிப் பிடித்து
வரச் செய்து, சிக்ஷித்திருக்கிறேன். அதனிமித்தம்மனவருத்தமுண்
டாயிருக்கப்போது" மென்றார். அதனால் அமீர்பஷீர் அதிக கலங்
கங் கொண்டவராக, தன் ஜேஷ்ட புத்திரர் கலீலைவிளித்து,"கலீலே!
என்னுடைய மக்களும், உம்முடைய சகோதரர்களுமாகிய அமீனை
யும், கரீமையும் நாட்டறபிகளிடத்தில் வெட்டுப்பட விட்டுவிட்டு,
நாம் சுகத்துடனிங்கிருப்பது உமக்குப் பொருத்தமோ?" என்று
கேட்டார். தகப்பனார் சொன்ன சொற்களின் சாராம்சத்தை
யறிந்த கலீல் ("குலத்தளவேயாகு மாங்குணம்" என்பதுபோல,)
நடுக்கத்துடனும், பதறுதலுடனும் விரைந்தெழுந்து, "ஓஹோ, குதி
ரைவீரர்களே! இதோ, நான் பனீவாவில் கோத்திர நாட்டறபிக
ளிடத்திற்குப் போகப் போகிறேன். என்னுடைய சகோதரர்
அமீனும் கரீமும் யாதோர் விக்கினமின்றி சுகத்துடன் சீவித்திருக்
கக் கடவுள் கற்பிப்பாராக. இரண்டாவொருவருக்குஅந்நாட்டறபி
களால் உயிர்ச்சேத மேற்பட்டிருக்குமாயின், அவ்வறபிகளடங்கலை
யும் சர்வஸம்ஹாரஞ் செய் தொழிக்காது திரும்பமாட்டேனென்
பது மறுக்கப்படாத சத்தியம். ஆகையால், என் குதிரைக்குக்
கல்லணை வீக்கிக் கொண்டு வாருங்க" ளென்றார். அமீர்பஷீர், தன்
குதிரையையும், மற்றவர்கள் அவரவரின் புரவிகளையும்தயார்ப்படுத்
தினார்கள். அவர்களின் ஆரவாரத்தை கலெக்டர் கண்டுதிகைத்து,
அமீர்பஷீரின் சமூகத்தில் வந்து, "நாயகமே! இவ்விஷயத்தில்
கவர்ன்மெண்டு கவலை யெடுத்துக்கொள்ளு மாகையால், தாங்கள்
அங்கு செல்ல நாடவேண்டா" மென்று அதிக வணக்கத்துடனும்,
மரியாதையுடனும் வேண்டி நின்றார். கலெக்டரின் சொற்களை

அமீர்பஷீர் செவி சாய்த்துக் கேட்கவில்லை. கலெக்டர் மெத்த கலக்கமுற்றிருந்தார்.

அவ்வாறிருக்குஞ் சமயத்தில், ஆகாயத்தில்புழுதிபறந்தேறக் கண்டார்கள். சற்று நேரத்திற்குள்ளே, சில குதிரைவீரர்கள் வருவதாகத்தெரிந்து அவர்களின் வருகையையெதிர்பார்த்திருந்தார்கள். அவர்கள் நெருக்கத்திலாகவே, அமீர்பஷீரின் மனிதர்களாகத் தோற்றப்பட்டார்கள். உடனே அமீர்பஷீர் தன் புத்திரர்களின் சமாசாரத்தை யறியவேண்டி, அவர்களை முன்னோக்கிச் சென்றார். அவர்கள், தன்மகன் அமீர் அமீனால் அனுப்பப்பட்டவர்க ளென்பதையறிந்தும், அவர்கள் சொன்ன சந்தோஷ வார்த்தைகளைக்கேட்டும், அமீர்பஷீர் ஒருவாறு பதறுதலடங்கியவரா யிருந்ததுடன், அவர்களின் காரியங்களைத் தெளிவா யறியப் பேரவாவுள்ளவராகவுமிருந்தார். வந்தவர்கள் சொன்னதுபோல, அன்று மாலை நேரத்தில் அமீர் அமீன், கரீபு முதலானவர்கள் வருவார்களென்பதை அமீர் முதலானவர்கள் ஆவலுடன் வழிபார்த் திருந்தார்கள். அன்றிரவு 8-மணி சுமாருக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அமீர்பஷீர் அவர்களை யெதிர் சென்றழைத்து வந்து, தான் அருமையாக வளர்த்த மகன் கரீபை பலமுறை முத்தமிட்டு, பிள்ளைகள் வந்து சேர்ந்ததற்காகக் கடவுளைத் துதித்து வணங்கினார்.

பின்பு, அமீர்பஷீரின் கட்டளைப்படிக்கு சகலரும் அம்மைதானத்தை விட்டுப் புறப்பட்டு, எதிர்த்த கரையிலிருக்கும் பனீசுவைபைநோக்கிப்படகேறிச் சென்றார்கள். வழிப்போக்கில்,கரீபுடைய விஷயத்தில் நடந்தவைகளை ஆதியோடந்தமாக அமீர்பஷீருக்கு அமீர் அமீன் விவரித்துக்கூறி, “கரீபின் உயிர் காக்கப்படக்காரணர், கூடாரத்தையுடைய குதிரைவீரரே” யென்றுபேச்சைநிறுத்தினார். அமீர்பஷீர் அமீனை விளித்து, “அம்மனிதர் நமக்குச் செய்தபேருதவிக்குப் பகாரஞ் செய்யவேண்டியது நம்மீது கடமையாயிருக்க, நீர் என், அவரைவிட்டுவிட்டுவந்தீ” ரென்று கேட்டார். அமீர் அமீன், “என் தந்தையரே! நான் சொல்வதை நம்புங்கள். என்னுடன் சேர்ந்து தங்கள் சமுகத்திற்கு வரவேண்டுமென்று பலமுறை பிடிவாதம் பண்ணி அவரை யழைத்தேன். அவர் என் வார்த்தைகளுக் கிணங்கினாரில்லை. அவர், பேச்சினாலும் நடை உடை பாவனையினாலும் நாட்டறபி யல்லவென்றும், மிஸ்று கனவான்களுள்



ஒருவராக இருக்கவேண்டுமென்றும், மிஸ்று தேசாதிபதியால் ஏற்பட்ட ஏதோ ஒரு கருமத்தால், அவர் மிஸ்றை விட்டு நீங்கி அங்கு போயிருக்கக் கூடுமென்றும் நான் நினைக்கிறேன். தங்கள் சமுகத்திற்கு வர அவரை யென்னாலியன்ற மட்டில் கூப்பிட்டும், அவர் கொஞ்சமும் சம்மதிக்கவில்லை. அதுவும் ஒரு அத்தாக்ஷியாகிறது. மேலும், நேற்று என்னுடன் அவர் சம்பாஷிக்கும்போது அவரிட்டிருந்த முகமூடியைக் கொஞ்சமேனு நீக்கினாரில்லை. அதுவும், அவர் நாட்டறபி யல்ல வெனும் என் நினைப்பை ஸ்திரப்படுத்தும் ஓர் காரணமாக விருக்கிறது. நான் இன்று சாயுநேரம் அவரைவிட்டுப் பிரிந்ததுமுதல் இது வரைக்கும் அவர் விஷயத்தில் அதியாலோசனை யுடையவனாகவே யிருக்கிறேன். அவரிடத்தில் நான் பயணவிடை வாங்கும்போது அவர் என்னைப் பார்த்து, ‘அமீனே! மேன்மை பொருந்திய தங்கள் பிதாவாகிய அமீர்பஷீர் அவர்களுக்கு என்னுடைய வந்தனத்தைச் சமர்ப்பித்து, எனக்குக் கஷ்டமில்லாத விதமாக நான் அவர்களைச் சந்திக்கும் பாக்கியத்தைப்பெற, கடவுளிடத்தில் ஆதரவு வைத்திருக்கிறேன். அவர்களிருக்குந் தலத்திற்கும் நானிருக்கும் வனத்திற்கும் வெகு தூரமானதால், அவர்கள் இங்கு வரமாட்டார்களென்று நினைக்கிறேன். நான் அவர்களின்சமுகத்தடைந்து அவர்களைச்சந்திக்கக்கடமையுடையவனாயிருந்தும் சாத்தியப்படாதிருப்பதைப்பற்றி, கடவுளிடத்தில் முறையிட்டவனாக விருக்கிறேன். அவர்களைச்சந்திக்குங்காலத்தில் நலவைப் பெற்றுக்கொள்வே னென்பதில் சந்தேகமில்லை யென்று நான் கூறியதாகச் சொல்லுங்க' ளென்று சொன்னா” ரென, அமீர் அமீன் விஸ்தரித்து முடித்தார்.

---

## 19-வது அத்தியாயம்.

## அந்தரங்கம் வெளிப்படல்.

---

அமீர் அமீன் சொல்லி வந்தவைகளை அமீர்பஷீர் கேட்டு, “அமீனே! அம்மனிதர் கஷ்டத்தி லகப்பட்டவராயும், அதைவிட்டு நீக்கிக் காப்பவரளவில் தேவையானவராயும், நீர் சொல்லி வந்தவைகளால் எனக்குப் புலப்படுகிறது. அரசாக்ஷி (warrant) மறியற் கட்டளைக்குப் பயந்து, இங்குவரப் பயப்படுகிறார்போலும்.

மானுஷீகத் தன்மையும் வீரத்துவமும் பரோபகார சிந்தையு முடைய நாம், அவரிருக்குமிடத்திற்குப் போகும் விஷயத்தில் எவ் வளவு கஷ்டம் சம்பவிப்பினும் பொருட்படுத்தாது செல்லவேண் டியது நம்பேரில் கடமையா யிருக்கிறது. ஆகையால், நாளைக்காலை யில் பாதை காட்டிகளிற் சிலரை துணையாகக்கொண்டு நான் "அவ ரிடத்திற்குப் போகவேண்டு" மென்றார். அமீர்பஷீர் அமீர் அமீனு டன் பேசிக்கொண்டிருக்கும்போது, அமீர்கலீல் அமீர் கரீபுடன் அன்பாகப் பேச்சுக் கொடுத்து, அவரை முத்தமிட்டு, அவருக்கு நேர்ந்த கருமங்களைப்பற்றிக் கேட்டு தெரிந்து கொண்டிருந்தார். இவ்வாறாக, பனிசுவைமி லிருக்கிற அவர்களின் விடுதிக் கூடம் வரையில் பேசிக்கொண்டுபோய்ச் சேர்ந்தார்கள். பின்பு, இராப் போஜனமுண்டு களைப்பாற்றிக்கொண்டு, சென்ற இரவு நித்திரை யில்லாதிருந்தவர்களானதால் சகலரும் படுக்கை யறைகளுக்குப் போய் விட்டார்கள்.

மறுநாட்காலையில் அமீர்பஷீர் முதலானவர்கள் கரீபுடைய மாளிகைக்கு வந்து, அவரின் சிரசில் சுற்றப்பட்டிருந்த துணியை அவிழ்த்து காயத்தைப் பார்க்கவே, அனேகமாக ஆறியிருந்தது. அமீர்பஷீரின் அரண்மனை வைத்தியர் கரீபின் காயத்திற்கு தக்க பரிகாரஞ் செய்து, "இரண்டுநாள் வரையில் கரீபை வெளியிற் போகவிடாதீர்க" ளென்று அமீர்பஷீருக்குச் சொன்னார். பிறகு அமீர்பஷீர், "கரீபை வெகு ஜாக்கிரதையாகப் பரிகரித்து வரக்கட வீ" ரென்று அரண்மனைப் பண்டிதருக்கும் கவினுக்கும் கட்டளை யிட்டு, அவரும், அவரின் கநிஷ்ட குமாரர் அமீனும், குதிரைவீரர் களிற் சிலரும் புறப்பட்டார்கள். அமீர்பஷீர், "கரீபைக் காப் பாற்றிய குதிரைவீரருக்கு நேரிட்டிருக்கும் துன்பத்தை யென் னாலான மட்டிற்கும் நீக்கிக்காப்பே" னென்றுசத்தியஞ் செய்த வராக அவ்வீரரின் கூடாரத்தை நாடி நடந்தார். சிலமணித் தியா லத்தின் பின், அக்குதிரை வீரரின் கூடாரத்தை நெருங்கினார்கள். இவர்களின் வருகையை அறிந்து, அவர் தன் ஆட்களில் சிலருடன் லிபனூன் மலைநாட்டின் அமீர்பஷீரை யெதிர்சென் றழைக்க தன் கூடாரத்தைவிட்டு வெளியேவந்து, அமீர்பஷீரைக் கண்டார். அமீர்பஷீரின் அச்சத்தால் அவருடைய முகத்தைக் கூர்க்கப்பார்க்க அவ்வீரருக்குத் திராணியில்லா திருந்தது. அமீர்பஷீர் முதலான வர்கள் குதிரைகளினின் றிறங்கி, அக்குதிரைவீரரின் விசாலமான



கூடாரத்துள் நுழைந்து, அவர்களுக்காகத் தயார்செய்யப்பட்டிருந்த விடுதி யிடங் காட்டினார்கள்.

அமீர்பஷீர் முதலானவர்களுக்கு காப்பியும், சிகரெட்டும் கொடுத்து, விருந்தளிப்பதற்கான பதார்த்தங்களும் தயாராக்கி னார்கள். அப்போதும் அக்குதிரைவீரர் முகமூடியிட்டவராகவே யிருந்தார். கொஞ்சநேரத்திற் குள்ளாக அறபிகளின் வழக்கம் போல, வெள்ளை விரிப்புக்களின் பேரில் பலவிதமான தின்பண்டங் கள் பரத்தப்பட்டு, அமீர்பஷீர் முதலானவர்கள் அழைக்கப்பட் டார்கள். விருந்து கொடுக்கும் குதிரைவீரர் அமீர்பஷீர் முதலான வர்களைப் பார்த்து, "நீங்கள் நாட்டறபிகளின் வழக்கப்படிக்கு போ ஜனம் பரிமாறப் பழகி யிருக்கமாட்டீர்க ளென்று நினைக்கிறேன்" என்றார். அமீர்பஷீர், "நாங்க ளவ்வழக்கத்தில் பழகியிருக்கிறோ" மென்று மறுமொழி கொடுத்தார். நாட்டறபிகளின் வழமையை யறிந்து சகலரும் உணவருந்தி கைவாய்க் கழுவினார்கள். மறு முறை காப்பித்தண்ணீர் குடிப்பாட்டப் பட்டார்கள். விருந் தளித்தவரின் நடவடிக்கைகளை அமீர்பஷீர் வெகுகவனமாகப் பார்த்து அவரைப் பற்றி ஆச்சரியமடைந்தார். உணவருந்தித் தீர்ந்த பிறகு, அமீர்பஷீர் அக்குதிரைவீரருடன் தனித்தார்.

அமீர்பஷீர் அவரைப்பார்த்து, "உமக்கும் நமக்கு மிடையில் திரையில்லா திருப்பதால், உம்முடைய முகமூடியை நீக்குவீராக. நீர் நமக்குச் செய்த பேருதவிக்குப் பிரதிசெய்ய என்னாலியலாது. அமீர்பஷீ ரிடத்தில் உம்முடைய அந்தரங்கத்தைச் சொல்லும். நீர் நாடுங் காரியம் அவ்விஷயத்தில் அநுபவமேனும் யோசிக்காதீர். அமீர்பஷீர் பிணைபட்டவர் களைக் கூடுமானமட்டில் முடித்துத்தர, அமீர்பஷீர் நீக்கிவிட்டு உமது ராதலால், உம்முடைய முகப்போர்வையை நீக்கிவிட்டு உமது அந்தரங்கத்தைச் சொல்லு" மென்றார். அவர் அமீர்பஷீரின் முன்னால் நின்று, தன் முகமூடியை நீக்கினார். நீண்டு பருத்த நாசியும், அகன்ற நெற்றியும், உயர்ந்த நாசியும் நரைத்தமீசை, விழிகளும், அகன்ற நெற்றியும், ஏறக்குறைய 40, 50-வயதுடைய தாடியும் உடையவராகவும், ஏற்றத்தாழ்வு யாருக்கும் அமீர்பஷீர் தோட்டத்தில், வாசகவும் தோற்றப்பட்டார்! அமீர்பஷீர் கோட்டயிட்டதில், அறபியுமல்ல, மிஸ்ரியுமல்லவென்று புலப்பட்டது.

அம்மனிதர் அமீர் பஷீரைப்பார்த்து, "நாயகமே! என் மீசையையும், மோவாய்மயிர்களையும் பார்த்தீர்களா? அவை, கால

வர முன்னரே வெளுத்துவிட்டன. கஷ்ட காலத்திலும் இஷ்ட காலத்திலும் எங்களின் உதவியை நிரம்பத் தேடுவார்களே அவர்களால்தான் அதிசீக்கிரத்தில் நரைத்துவிட்டன" என்றார். அமீர்பஷீர், "சகோதரரே! உட்கார்ந்து உம்முடைய வரலாற்றைப் பரிஷ்காரமாகச் சொல்லு" மென்றார். அதற்கு அம்மனிதர் "நான் சொல்லப் போகிற, என் வரலாறுகளை தாங்கள் கேட்டு, அதில் நான் குற்றவாளியாகக் காணப்பட்டால், தாங்கள் என்மீதிரக்கமுற்று மன்னிப்பீர்களா?" என்று கேட்டார். அமீர்பஷீர், "நல்லது, அப்படியே மன்னிக்கிறேன். உமது ஆகத்தைச் சொல்லு", மென்றார்.

உடனே அவர் உட்கார்ந்து, "அமீரே! சுமார் 12-வருடங்களுக்கு முன், காஹிரு மலைக் கோட்டைக்குள் சதிமோசம் நடந்ததாகத் தாங்கள் கேள்விப்பட்டிருப்பீர்களல்லவா? அந்த அரச வமிசத்து அமீர்களுள் நானு மொருவன். அச்சதிமோசச்சபைக்கு அழைக்கப்பட்ட அமீர்களுடன் நானும் அழைக்கப்பட்டவனாயிருந்தேன். அவ்வழைப்புக்கு நான் கொஞ்சம் பிந்திப்போனபடியினாலே, என்னுயிர் தப்பும்படிக்குக் கடவுள் கற்பித்திருந்தார் போலு" மென்றார். அமீர்பஷீர், "நீர் பிரின்ஸ் அமீன்பேயா யிருப்பீரோ?" என்றார். அதற்கவர், "ஆம், ஆம்; அச்சதிமோசத்தில் அகப்படாமல் நான் விரண்டோடி சிலகால மாகிறது. என்னுயிரைக் காப்பதற்காக இங்கு ஓடிவந்தேன். நான் காஹிராவில் விட்டு வந்த என்பெண்சாதி, பிள்ளைகளைப் பார்ப்பதற்கு அவ்வூருக்குத் திரும்ப நாடினேன்.

"அப்படிக் கிருக்கும்போது, மிஸ்றின் தேசாதிபதி முஹம்மது அலிபாஷா, அரச வமிசப்பெண்களை தன் போர்ச்சேவகர்கள் தான் கலியாணஞ் செய்து கொள்ள வேண்டுமென்று ஆக்ஞாபித்திருக்கிறதைக் கேள்விப்பட்டேன். நான் காஹிராவில் விட்டு விட்டு வந்த, என் பெண்சாதி பிள்ளைகளின் கெதி யெவ்வாறாயிற்றோ? நானறியேன். அவர்களின் சங்கதியை அறிய, சில வுளவர்களை நான் காஹிராவுக் கனுப்பினேன். அவர்களாலும் சரியான சமாசாரங்கொண்டு வரக் கூடவில்லை. அவர்கள் மிஸ்றி லிருக்கிறதாக சிலரும், வேறு வேறூர்களி லிருக்கிறதாக சிலரும் சொன்னார்கள். அதுமுதல், பரிதாபப்படத்தக்க என் பெண்சாதி சீவித்



திருந்து, என் பகைவருள் ஒருவன் விவாகஞ்செய்து கொண்டானோ? அவர்கள் கருப்பவதியா யிருந்தபடியினாலே பிரசவ அறையி லிறந்து விட்டார்களோ? என் பிள்ளையின் கெதியெவ்வாறாயிற்றோ? என்பதொன்று. நான் இவ்விடத்துக்கு ஓடிவந்தது முதல், என் விஷயத்தில் கவர்ன்மெண்டார் என்பேரில் மெத்த விழிப்பாயிருப்பதால், நான் பட்டணங்களிற் குடியிருக்கவுங் கூடவில்லை; என்னைக் கண்டால் கொன்று போடும்படிக்குக் கவர்ன்மெண்டார் கட்டளை யிட்டிருக்கிறபடியால், என்னைக்கண்ட எவனும் என்னை உயிருடனே விடமாட்டானென்பது நிட்சயம்; என்னைக்கொன்றவனுங் குற்றவாளியாக மாட்டானென்பது இரண்டு. இவ்விரண்டு விஷயங்களும் எப்போதும் எனக்குக் கலக்கத்தையும், சஞ்சலத்தையும் விளைத்துக்கொண் டிருக்கின்றன" என்றார்.

அமீர்பஷீர், "நீர் கலங்காதிரும். இன்னுங் கொஞ்ச நாளைக்குள் நான் மிஸ்றின் தேசாதிபதியைச் சந்திப்பேன். உம்முடைய காரியத்தைப்பற்றி அவரிடத்திற்பேசி, உமக்கு மன்னிப்புத் தேடுவேன். கடவுளின் உதவியால் நீர் பயப்படாதிரும். உம்முடைய விஷயத்தில் மன்னிப்புத் தேடுவது என்பேரில் கடமை. கட்டாயம் உம்முடைய நாட்டத்தைப் பெற்றுக்கொள்ளுவீர்" என்று கூறினார்.

## 20-வது அத்தியாயம்.

## பிரான்ஸியரின் படையெடுப்பு.

அமீன்பே:——அமீர்பஷீரைப் பார்த்து, "மாக்ஷிமை தங் ப அமீரே! என் வரலாறு மேலே நான் கூறியதுமட்டுமல்ல. தைவிட மிகத் துயரமான இன்னொரு விஷய மிருக்கிறது. அது ப்போதும் என் ஞாபகத்துக்கு வந்துக்கொண்டிருப்பதால், என த மாறுதவியசனத்தையும், தீராத கவலையையும் விளைத்துக்கொண் ந்க்கிறது. அதை நான் சொல்லுகிறேன். தாங்கள் செவி ய்த்துக்கேட்டு, நான் செய்த குற்றத்தை மன்னிக்கும்படிக்கு திக வணக்கத்துடன் தங்களிடத்தில் மனுச்செய்து கொள்ளு றேன்."

அமீர்பஷீர் :——என்னைப்பற்றி நீர் யாதொன்றிற்கும் அஞ்ச வேண்டியதில்லை ; துணிந்து கூறும்.

அமீன்பே :——மேன்மை பொருந்திய அமீரே! என் பெண் சாதி (என்றபோது, அமீன்பே பெருமூச்செறிந்தழுது,) அவர்களுக்குத் துன்பத்தை யுண்டாக்கியது நானே. அவர்கள் என் குடும்பத்தி லுள்ளவர்களுமல்லர். என் தேசத்தி லுள்ளவர்களு மல்லர். நான் மடமையுடையவனு யிருந்தும், கடவுளின் சங்கற்பம் அவர்களை யென்னிடத்தி லாக்கியது.

அமீர்பஷீர் :——அப்பெண் யார் ?

அமீன்பே :——அவர்கள் (என்றதும் அழுகை மிகைத்தது ; அச்சத்தால் வாய்மூடி மவுனமாக விருந்தார்.)

அமீர்பஷீர் :——அமீனே! அஞ்சாதீர் ; சொல்வீராக.

அமீன்பே :—— நாயகமே! தங்களின் நெருங்கிய பெந்துக் களி லுள்ளவர்கள் தான்.

என்று அமீர்பஷீரின் கரங்களைமுத்தமிட்டுக்கொண்டு, குனிந்து நின்றார். அமீன்பே சொன்ன 'நெருங்கியபெந்துக்களி லுள்ளவர்கள்தா'னென்ற சொல்லை அமீர்பஷீர் கேட்டுப்பதறி, தன் கையை முத்தமிட்டுக்கொண்டு குனிந்து அழுது கொண்டிருந்த அமீன் பேயை உட்காரச் செய்து, "அப்பெண்ணை யெங்ஙனம் நீர்விவாகஞ் செய்து கொண்டீர் ?" என்று கேட்டார். அதற்கவர், "நான் சிறு பாலியனாக விருக்கும்போது, அதிகக்காலம் மிஸ்றில் அரசவமிஷத்தாரில் நாட்டாண்மைக் கர்த்தர்களாக விருந்த, உல்பிய்யா சந்ததி அமீர்களில் ஒருவராகிய, என் சிறிய தந்தையருடன், ஹிஜ்ரி 1213-க்கு சரியான, கி. பி. 1798-ல் மிஸ்றைப் பிடிப்பதற்காக, பிரான்ஸிய சேனாதிபதி (Napolian Bounaparte) நப்போலியன் போனபார்ட் இம்மிஸ்றுக்கு வந்தபோது, (சீரியா) ஷாம் தேசத்துக்கு ஓடிப்போனோம். பிறகு அங்கிருந்து கடவுளின் கற்பனைப்படிக்கு லிபனான் மலைநாட்டைச் சேர்ந்தோம். எங்களை யின்னாரென ஒருவரும் அறியமாட்டார்கள். அப்போது, மகிமை பொருந்தியதாங்கள் அத்தேசத்திற்கு அமீரா யிருந்தீர்கள். ஆனால் (Acre) இக்கா கவர்னர் அல்ஜஸார், தாங்கள் பிரான்ஸியர்கூட ஒற்றுமையாயிருக் கிறீர்களெனச் சந்தேகித்து, தங்கள் பேரில் வெறுப்புற்றிருந்தா



ராம். அமீர்யூசுபுடைய மக்களில் ஒருவரை லிபனான் மலை நாட்டிற்கு அமீராக்க வேண்டுமென்பது அவருடைய நாட்டமாம். பிறகு அவர் நாட்டம்போல செய்துவிட்டாரென்றும், ஷாமைப் பிடிக்க நாடி யிருக்கிற பிரான்ஸியரைத் தடுப்பதற்கான எத்தனங் களில் இக்கா கவர்னர் பராக்கா யிருந்தபடியால், மேற்படி அமீர் வசம் லிபனானின் மலைநாட்டின் ஆட்சியை ஒப்புவிக்கக்கூடாதவரா யிருந்தாரென்றுங் கேள்விப்பட்டேன்.

"அதுமுதல் தாங்கள் பிரான்ஸியரின் ஒற்றுமைக்காரர்க ளென்று நாங்கள் நினைத்து, தங்களுக்குத் தீங்கு வருத்த வழிதேடி னோம். வாய்க்கவில்லை. சமயம் வாய்க்குங் காலத்தில் தங்களைக் கொன்று போடுகிறதென்று தீர்மானித்து வழிபார்த்திருந்தோம். ஒருநாள், லிபனானின் இராஜதானியாகிய தீருல்கமருக்குச் சமீபமான ஓர் நாட்டுக்கு நாங்கள் போகவேண்டியதாக வந்தது. அங்குள்ள வர்கள், அவர்களுக்குள் ஏற்பட்டிருந்த விரோதத்தை ஒழுங்காக் கும் விஷயத்தில் பராக்கா யிருந்தார்கள். பிறகு உதுமானியகவர்ண் மெண்டாரின் (Porte) போர்ட் சங்கத்தார், பிரான்ஸியருக்கு விரோதமாக மிஸ்றுக் கனுப்பிய விளம்பரத்தால், அங்கு வந்திருக் கும் பிரான்ஸியருக்குக் கலக்கம்பிடித்திருப்பதாகக் கேள்விப்பட்ட படியால் நாங்கள் மிஸ்றுக்குத் திரும்ப நாடியிருக்குஞ் சமயத்தில், என் சிறிய தகப்பனாரவர்களை, மிஸ்றுக்கு வந்து அவர்களின் துணை வர்களான அரசவமிஷத்து அமீர்களுடன் சேர்ந்துக்கொள்ளும் படிக்கு, அவர்களுக்கு மிஸ்றி லிருந்து பல கடிதங்கள் வந்தன. ஒரு நாளிரவு, நாங்கள் பிரயாணத்துக்குத் தயாராகி, குதிரைகளிலேறி, அந்நாட்டைவிட்டு வெளியானோம். அங்கே கொடிமுந்திரிகைச் செடிகளுக்கிடையில் ஒருவரிருப்பதாக எங்களுக்குத் தெரிந்தபடி யால், கொடி முந்திரிகைப்பழம் வாங்கி வரும்படிக்கு எங்களில் ஒரு வரை யனுப்பிவிட்டு நாங்கள் முன்னேறினோம். பழம் வாங்கப் போனவர், 14-வயதையுடைய ஒரு பெண்ணைத் தன்னுடன் அழைத்து வந்தார். அப்பெண் தெய்வரம்பை போன்றிருந்தாள். அவளைக் கூர்க்கப் பார்த்தேன். முன்னொருமுறை அவளை நான்கண்ட ஞாபகம் எனக்குண்டானதுடன், அவள்பேரில் கிருபையும் பட்சமும் உண்டாயின. அப்பெண், சரியான அமீரின் புத்திரி யென்று நான் அறிந்திருந்தபடியால், அப்பெண்ணை நான் கல்யாணஞ்செய்து கொள்ள அவளைக்கேட்க என் மனந் துணியவில்லை.

அப்பெண்ணை யழைத்துவந்த மனிதர், "கொடிமுந்திரிகைச் செடிகளுக் கிடையில் இவளைக் கண்டேன். அவள் முன்னொருமுறை யென்னைக் கண்டிருப்பதாகவும், பொழுது போய்விட்டபடியால்இவ்விடத்திற்குச் சமீபத்தி லிருக்கிற தன் வீட்டில் தன்னைச் சேர்த்துவிக்க வேண்டுமென்றும் என்னை வேண்டிக்கொண்டாள். அதனாலேயே இவளை யிங்கே கொண்டுவந்தேன்." என்று பகிரங்கமாகவும், "தாங்கள் விவாகஞ் செய்துக்கொள்ள, தகுந்த அந்தஸ்துடைய பெண்" ணென்று என் காதில் இரகசியமாகவும் சொன்னார். நான் அப்பெண்ணை மிஸ்றுக்குக் கொண்டு சேர்ந்து விவாகஞ் செய்துக்கொள்ளலாமெனக் கருதிக் கொண்டு, அதைப் பற்றி அப்பெண்ணிடத்தில் ஆலோசித்தேன். அவள் மறுமொழி தாராமல் அழுதுக் கொண்டிருந்தாள். அவள் அச்சத்தினால் அழுகிறாளென்று நினைத்து "யாதொன்றிற்கும் அஞ்சவேண்டா" மென்று பலவிதமான போதனைகளைப் போதித்து, சமாதானப் படுத்தி அவள் மனதைச் சற்று திடப்படுத்தினேன்.

அதன் பின், என் சிற்றையருடனும் அவ்விஷயத்தைப் பற்றிக் கலந்துபேசி, அவர்களின் அபிப்பிராயத்தை வழிபார்த்தேன். அவர்களுக்கும் அது பொருத்தமாகத் தெரிந்து, "இப்பெண் உனக்கேற்றவள்தா" னென்றார்கள். அச்சமயம் (ரத்தன்) ஷெய்க் தானும் எனக்குத் துற்போதனை போதிக்கத் தலைப்பட்டான். அப்போதனையில் நான் சிக்கிக்கொண்டு, அப்பெண்ணை யெவ்விதத்தாலாவது கல்யாணஞ் செய்துகொள்ளுகிறதென்று தீர்மானித்து அவளை நான் மருட்டிக்கலைத்து, அன்றிரவிலேயே எங்களுடன் இட்டுக்கொண்டு, லிபனானின் எல்லையை விரைந்து கடந்து முன்னேறி நடந்து, சைதாவுக்கு வந்து சேர்ந்து, அங்கு விவாகபந்தனவுடன் படிக்கை யெழுதி, அவளை யெனக்குப் பாரியாளாக்கிக் கொண்டேன். நான் அவளுக்குச் செய்துவந்த உபசாரணையினாலே, சொற்ப நாளைக்குள்ளாக அவள் தன் குடும்பத்தா ரடங்கலையும் மறந்து, என்னுடன் மருவி யிருந்தா" ளென்றார்.

அமீர்பஷீர் திடுக்குற்றுப் பதறி, "அப்பெண் (அமீரா)பிரின்ஸெஸ் ஸல்மாநாயகியா யிருக்கலாமோ" வென்று கேட்டார். பிரின்ஸ் அமீன்பே, "அமீரே! ஆம், ஆம்; அவர்கள்தா" னென்று சொன்னார். அப்போது அவருடைய முகத்தில் மஞ்சனிப்புண்டாயிற்று.



அமீர்பஷீர், "அமீன்பே! நீர் சொன்ன, ஸல்மாநாயகி யெங்களை விட்டுத் தவறிப்போனது எனக்கு ஞாபக மிருக்கிறது. அவளைக் கடத்திச் சென்றவனை கண்டவிடத்தில் கொல்லும் படிக்கு நான் வற்புறுத்துக் கட்டளை யிட்டிருக்கிறேன். ஆனால், என்மகன் கரீபுவைப் விஷயத்தில் நீர் செய்த பேருதவிக்காக உம்முடைய பாரிய குற்றத்தை மன்னித்தேன். நடக்கவேண்டியது நடந்துவிட்டது. இப்போது நீர் நமக்கு பெந்துவாகவு மாயினீர். பிரின்ஸெஸ் ஸல்மாநாயகி ஜீவித்திருக்கவும் போது" மென்றார். அப்போது அமீன்பே தாரை தாரையாக வழுது, "அவ்விஷயத்தை கடவுளே ஒழிய மற்றவர்க ளறிய மாட்டார்கள். பரிதாபப் படத்தக்க அப்பெண்ணை நான் மருட்டிக் கொண்டு போன எண்ணம், எப்பொழுதும் என் னெஞ்சைப் புண்ணாக்கிக் கொண்டே யிருக்கிறது. ஏனெனிலோ, அப்பெண்ணை சம்ரக்ஷிக்க என்னாலாகவில்லை. நான் அவர்களை விவாகஞ் செய்துகொண்ட கொஞ்சநாட்களுக்குள்ளே மிஸ்றைப் பிடித்துக்கொண்ட பிரான்ஸியர், ஷாமையும் பிடிக்க வருகிறார்களென்று கேள்வியானோம். ஆனால், அவர்கள் இக்காவைக் கடக்கவில்லை. அவ்வூரை 50-நாள்முற்றிக்கை யிட்டிருந்து, ஆங்கிலேய புடைக் கப்பல்கள் வந்து அவ்வூராருக்கு உதவி புரிந்தமையால், வந்தவழியே திரும்பி மிஸ்றுக்குப் போய்விட்டார்களென்று என் சிறிய தகப்பனார் எனக்குச்சொன்னதுடன், இச்சமயம் மிஸ்றுக்குப் போவதில் யாதொரு பிரயோஜனமுங் கிடைக்காதாகையால், நாம் லிபனான் தேசத்திற்கே திரும்பிச் செல்வது நலமாகக் காணப்படுகிறதென்றார்கள்.

"அதற்கு நான், லிபனானுக்குத் திரும்புவது தகாத காரியம். மீறிச் சென்றால் அங்கு நமக்குத்தீங்கு சம்பவிக்காதிராதென்று என் சிற்றையருக்குச் சொன்னேன். அதற்கவர் மறுமொழி கூறாமல் சற்று நேரம் பிரமித்தவராக விருந்தார். அப்போது எங்களுள் ளொருவன், "பிரான்ஸியர், ஜாபாவில் அல்பானியர், மொறாக்கர் இவர்களில் 4000 பேர்களை, ஆயுதங்களைப் பறித்துக்கொண்டு சங்கரித்ததுபோல, மிஸ்றிகள் ஷாமுக்குப் போனால் அத்தேசத்தாரால் அவர்கள் சங்கரிக்கப் படுவார்கள்" என்றும் என் சிறிய தகப்பனாரை நோக்கி, பிரான்ஸியர், 'நாங்கள் முஸ்லிம்கள்' என்று பிதற்றும் பிதற்றலால் மிஸ்றிகள் மோசம் போவார்களென்று நினைக்கிறீர்களோ? ஒருக்காலும் மோசம் போக

மாட்டார்கள். பிரான்ஸியர் இஸ்லாமிகளாக விருந்தால் சர்ராயக் குடிக்கமாட்டார்க ளென்பதையும், பெண்டுகளை முகமூடி யிடாத வர்களாக வெளியிற் கொண்டு வரமாட்டார்க ளென்பதையும் அவர்கள் அறியாதவர்களல்ல. அல்லாமலும் பிரான்ஸியரை, மிஸ்ரை விட்டு விரட்டும்படிக்கு, மாகூதிமை தங்கிய நாயகம், சுல்தான் சக்கரவர்த்தி யவர்கள் மிஸ்றிகளுக்குக் கட்டளைப் பத்திரம் அனுப்பியிருக்கிறதாகவும், இன்று இக்கா வாசிகளி லொருவன் எனக்குச் சொன்னா ரென்றும்'' கூறினன்.

“மகிமை பொருந்திய அமீர் நாயகமே! நான் செய்த கருமத்தினலே எனக்குத் திங்கு சம்பவிப்பதைப் பற்றிப் பயந்து, வியனன் தேசத்தை விட்டு விலகி, தூரத்தி லிருப்பதற்காக மெத்த பிரயாசை யெடுத்து, மிஸ்றுக்குப் போகும் எண்ணத்தை மனசுக்குள்ளடக்கிக்கொண்டு, மிஸ்றின் எல்லைக்குச் சமீபத்திலாவதுபோயிருக்கலாமென்று என்சிறிய தந்தையரிடத்தில் முறையிட்டேன். இவ்வாறு எங்களுக்குள் வெகுநேரம் தருக்கமாக விருந்து, முடிவில் மிஸ்றின் எல்லையை நோக்குவதென்றே தீர்மானித்தோம். அதனல் நான் மிகுந்த சந்தோஷ மடைந்தேன். ஸல்மாநாயகியும் சந்தோஷ முற்றார்கள். அவர்களுக்கு சந்தோஷமும், சமாதானமும் உண்டாக்கும் விஷயத்திலேயே என்காலத்தைக்கடத்தினேன். அவர்களாலேயே, பிரான்ஸியர் மிஸ்றி லிருக்கிறவரையில் நாம் அத்தேசத்துட் புகக் கூடாதென்று தீர்மானித்து, அவர்கள் எப்போது வெளிப்படுவார்க ளென்பதை வழிபார்த்தவனக விருந்தேன். பிரான்ஸியர் மிஸ்றி லிருக்கும்போது அங்குசென்றால் ஏதேனும் எனக்கும் என் பெண்சாதிக்குந் திங்கு சம்பவிக்குமோ வென்றும் அப்படி திங்குண்டானல் என் பெண்சாதிக்குத் திங்குண்டாக்கியது நானகவே ஆவேனல்லவா? என்றும் பலவாறுயோசித்துக்கொண்டே நடந்து, கடைசியில் அரீஷ் என்னும் பட்டணத்துக் கருகாமையி லுள்ள ஓரிடத்தைச் சேர்ந்து அங்கே விடுதி விட்டோம்.

நாங்கள் அங்கே தலைமறைவாக இருந்துக்கொண்டு, பிரான்ஸிய ருடையவும் மிஸ்றிய ருடையவும் சமாச்சாரங்களை யறிந்துவர, சில வேவுக்காரர்களை யனுப்பி, நப்போலியன் போனபார்ட் கி. பி. 1799-ன் கடைசியில் இரகசியமாக மிஸ்றிலிருந்து



தன்சுயதேசத்துக்குப்போய் விட்டதை அறிந்து சந்தோஷ முற்று பிரின்ஸெஸ் ஸல்மாநாயகிக்கும் அச்செய்தியை அறிவித்தேன். பிறகு மிஸ்றிகளும் அரசவமிஷ அமீர்களும் ஒன்றித்து, பிரான்ஸியரை மிஸ்றிலிருந்து விரட்டி யடிப்பதற்குப் போராயத்தஞ் செய்து வருகிறதாக என் சிறிய தகப்பனராகிய அமீருல் உஸ்பி யவர்கள் கி. பி. 1801-ல் அட்மிரல் ஹஸைன் கப்பித்தான் பாஷாவின்கீழ் உதுமானியரின் போர்க்கப்பல்களும், அவர்களுக் குதவியாக அட்மிரல் ஸர் ஸிட்னி ஸிமித்தின்கீழ் ஆங்கிலேயரின் போர்க்கப்பல்களும் மிஸ்றுக்கு வந்து சேர்ந்தன. அதனல், மிஸ்றிகள் ஆனந்த முற்று யுத்தாரம்பஞ் செய்து, பிரான்ஸியருடன் கடும்போர் புரிந்தார்கள். பிரான்ஸியர் சமாளிக்கக் கூடாதவர்களாகி ஓட்டம் பிடித்தார்கள். மிஸ்றிகளின் வெற்றியை நாங்கள் கேட்டு சந்தோஷமாகி, உடனே காஹிருவுக்குப் பிரயாணமாக ஆரம்பித்தோம்.

“பிறகு, ஆங்கிலேயர் உதுமானிய அரசாங்கத் தாருக்கு மிஸ்றை ஒப்புவிக்க வுடன்பட் டிருக்கிறதாகவும், உதுமானிய கவர்னருக்கு, அரசவமிஷ அமீர்க ளடங்கலையுங் கொல்லும்படிக்கு உதுமானிய போர்ட் சங்கத்தா ரிடத்திருந்து கட்டளைப்பத்திரம் வந்திருக்கிறதாகவும் நாங்கள் கேள்வி யுற்றபடியினலே, அப்போது நாங்களிருந்த விடத்திலேயே யிருப்பது நலமென் றிருந்தோம்.

“ஏழைப் பெண்ணகிய ஸல்மாநாயகியை காஹிருவுக்குக் கொண்டுபோய், மேன்மையாக வைக்கவேண்டுமென்று நினைத்த என் விதிவசத்தைச் சற்று கவனிப்பீர்களாக.

“ஸல்மாநாயகி கலக்கமுற் றிருப்பதற்காகவே, அங்கு நடக்கும் கருமங்களில் ஒன்றையும் நான் அவர்களுக்குச் சொல்லுகிறதில்லை. மிஸ்றில் அப்போது நடந்த குழப்படிகளைப் பற்றிய சரித்திரங்களைத் தங்களுக்கு விவரிக்க வேண்டு மென்கிற நாட்டம் எனக்கில்லையெனினும், அச்சரித்திரத்திற்சில என்னைச்சார்ந்திருப்பதால், அதைச் சுருக்கிக்கூறநேருகிறது. அதாவது, தற்போது மிஸ்றின் தேசாதிபதியாக விருக்கிற முகம்மதுஅலி பாஷா, பிரான்ஸியரை விரட்டியடிப்பதற்காக வந்த உதுமானிய யுத்த வீரர்களுள் ஒருவர், மேற்படி யுத்தத்தில் அவர்காட்டிய வீர தந்திரத்தினல் படிப்படியே உயர்த்தப்பட்டு, கடைசியாக தேசாதிபதி உத்தியோகத்திற்குத் தகுதியுள்ளவராக நியமிக்கப் பட்டார். அப்போது மிஸ்றின் தேசாதி

பதியாயிருந்த வருக்கும், இவருக்கும் மனத்தாங்க லேற்பட்டதால் அரச வமிஷத்தாராகிய எங்கள் அமீர்மார்களின் உதவியை முஹம்மதுஅலி பாஷா தேடினார். அவரின் வேண்டுகோளுக் கிணங்கி நாங்கள் அவருக்குச்செய்த வுதவியினாலேயே, அவர் மிஸ்றுக்கு தேசாதிபதியுமானார். அவர் தேசாதிபதியானதின் பின்னர், எங்களின் சுதந்தரத்தை நாங்கள் கையாக்ஷிசெய்ய இடந் தந்தாரில்லை. அதனால் அவருடனும் நாங்கள் ஈடுகொடுக்க வேண்டி வந்தது.

"அச்சமயம், என் சிறிய தகப்பனார் சைதாவி லிருந்தார்கள். நானும், என் பெண்சாதி ஸல்மாநாயகியும் அவர்களுடனேயே யிருந்தோம். அதற்கு முன், மிஸ்றின் தேசாதிபதியா யிருந்து, எங்களால் நீக்கப்பட்டிருந்த கோர்ஷித்பாஷா, முகம்மது அலிபாஷாவை நீக்கி, தன்னை அவ்வேலையிலாக்கும் விஷயத்தில் உதவியா யிருந்தால்,அரசவமிசத்தாராகியஎங்களுக்குமிஸ்றிலுள்ள சுதந்தரங்களை, என் சிறிய தகப்பனார் அமீருல்உல்பியவர்களுக்குக் கொடுக்கிறதென்று, அவ்வமீருல் உல்பி யவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டார். அவ்விஷயத்தில் ஆங்கிலேய பிரதி நிதியும், "மிஸ்று எங்கள் கையிலாக நீங்கள் உதவிபுரிந்தால், சகல சுதந்தரங்களும்தங்களுக்கே கொடுக்கப்படு" மென்று என் சிறிய தகப்பனாரவர்களிடத்தில் தூதனுப்பினார்.

"நாங்கள் எங்கள் நாட்டங்களைப்பெறக்கூடிய சமயங் கிடைத்தும், விதிவசத்தால் வியர்த்தமாயின. எவ்வாறெனிலோ,உதுமானிய கவர்ண்மெண்டார்,அரசவமிசஅமீர்கள்மேற்படிகவர்ண்மெண்டுக்குச் செய்த குற்றங்கள் மன்னிக்கப்பட்டனவென்றும், முஹம்மதுஅலி பாஷாவே மிஸ்றின் தேசாதிபதியாக ஸ்தாபிக்கப்பட்டாரென்றும் விளம்பரப் படுத்தினார்கள். அதுமுதல் அரசவமிச அமீர்மார்கள் (Upper Egypt) மேல் மிஸ்றிலும், மற்றப் பாகங்களிலு மிருந்துவந்தார்கள். நான்மட்டில் காஹிறுவில் வசித்து வந்தேன்.

"அப்போது அவ்வூர் அப்பிராந்தியா யிருந்தபடியினாலே, என் மனோபீஷ்டப்படிக்கு ஸல்மாநாயகியின் மனசை உல்லாசப் படுத்துவிக்கக்கூடியவனா யிருந்ததனால், என்னை நானே பாக்கிய வானெனக் கருதியிருந்தேன். அப்போது நான் கோரியபடிக்கு விசாலமான, அழகிய, ஓர் மாளிகையைக்கட்டி, அதற்கு வேண்டுவன சகலதளவாடங்களும், பணிவிடைக்காரர்களும், தாதிப்பெண்களும் சித்தப்



படுத்தி, என் அருமைமனைவி ஸல்மாநாயகியை அம்மாளிகையிலிருப்பாட்டினேன். சில மாதங்களின்பிறகு எனக்கோர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு ஸலீம் என்று பெயரிட்டேன். பின்பு, அரசவமிசத்தாரின் தலைவரான், மேல் மிஸ்றில் குடியிருந்த, என் சிற்றையர் அமீருல் உல்பி அவர்கள் பரலோக யாத்திரை யானார்கள்.

"ஷாஹீன்பே என்பவர் முஹம்மது அலிபாஷாவுக்கு அமைந்து நடந்துவந்தபடியினாலே, அவரை அமீர் உல்பிக்குப் பகரமாகவும், எங்கள் அரச வமிசத்தார்களுக்குத் தலைவராகவும் நியமித்து, ஜீஸா, பனீசுவைபு, புயூம் இவ்வூர்களுக் கிடையிலுள்ள நிலங்களையும் அவருக்குக் கொடுத்திருந்தார். ஷாஹீன்பே அதிரூபியானதால், அரசவமிசத்தார் யாவரும் அவருக்கு ஐக்கியப்பட்டு நடந்து வந்தார்கள். அரசுரிமை சுதந்தரங்களை நாங்களிழந்த பின்னராவது, குழப்பமின்றி சமாதானத்துடன் காலங்கடத்தலாமென்று கருதி யிருந்தோம். கொஞ்சக்காலத்திற்குள்ளாக, எங்களெண்ணத்திற் கிடையூறு சம்பவித்தது. அதாவது—அக்காலத்தில் அறபு நாட்டில் பூசல் விளைத்துக்கொண்டிருந்த வஹ்ஹாபி கூட்டத்தினரை யடக்குவதற்காக, முஹம்மதுஅலி பாஷா தன் மகன் தூசூன்பாஷாவை, நாயகம் சுல்தான் மஹ்முதுகான் அவர்களின் கட்டளைப் பிரகாரம் அனுப்புதற்கு, காஹிறு மலைக்கோட்டை நியாயசபை மண்டபத்தில் கூடும் கூட்டத்திற்கு, அரசவமிசத்து அமீர்மார்களடங்கலும் வந்து சேரும்படிக்கு இராஜ கட்டளைப் பத்திரம் அனுப்பினார். அது தங்களுக்குத் தெரிந்த விஷயமே; அதுபோல, குறித்தபெடிய படிக்கு, என்னைத் தவிர மற்றவர்கள் போய்க் கூடினார்கள்.

"அன்றைத்தினம் நானும் அச்சபைக்குப்போவதற்காகக் குதிரையைத் தயாரிக்கும்படிக்கு என் குதிரைப் பாகனுக்குக் கூறினேன். அதை யறிந்த ஸல்மாநாயகி என்னைப் பார்த்து, "தாங்கள் போக உத்தேசித்திருக்கிற கருமத்தில் அவ்வளவு துரிதம் வேண்டாம். இன்று என்னிருதயம் சரியான நிலைமையிலில்லை. குழம்பிக்கொண்டே யிருக்கிறது. அதிலும் நேற்றிரவு பயங்கரமான சொப்பனங்கண்டேன். அதுமுதல் என் மனம் நிலைகலங்கியிருக்கிறது. ஆகையால், தாங்கள் அங்கு செல்வதைக் கொஞ்சம் பிற்படுத்தக் கோருகிறேன்" னென்றார்கள். அதற்கு நான், "ஏன் அன்

புக்குரிய ஸல்மாவே! கனவை அவ்வளவாக நம்பக்கூடா" தென்று கூறி, அப்பெண்மணியின் பேச்சை மறுத்ததற்குப் பிரியமற்றவனாக, அவர்களின் சமுகத்தி லுட்கார்ந்து, அவர்கள் மனப்பதறுத லடங்கக்கூடிய அனேகந் தேறுதல்களைச் சொல்லிக்கொண்டும், தெய்வரம்பைபோன்ற அவர்களின் ரூபலாவண்யத்தைப்பார்த்து மகிழ்ந்துகொண்டும் சம்பாஷித்துக் கொண்டிருந்தேன். அப்படிக்கிருக்கும்போது, சபைக்குப்போகும் ஞாபகம் வந்தது. உடனே குதிரையிலேறி, காஹிறுக் கோட்டைக்கு அதிவேகமாகக் குதிரையை நடத்திச் சென்றேன்.

"நான் இராஜ கட்டளைப்படிக்குப் போகிறபடியினாலே, ஸல்மா நாயகி முற்றாக என்னைப் போகவேண்டாமென்று தடுத்து நிறுத்தக்கூடாதவர்களானார்கள். நான் போகிற காலத்தில் அவர்கள் கருப்பவதியா யிருந்தார்கள். நான் விரைந்துபோய், காஹிறுக் கோட்டைக்குள் நுழைந்து பார்க்க, சகலரும் பாபுல்-அஜ்பு என்னும் வாசலைக் கடந்து கோட்டைக்குள்ளாய் விட்டார்கள். உள்ளே போனவர்கள் திரும்பி வருகிற வரைக்கும் நாம் இங்கு தானேயிருந்து, அவர்களுடன் கலந்துகொள்ளலா மென்றெண்ணி, கோட்டைச் சுவருக்குச் சமீபத்தில் ஒரு மேட்டின்பேரில் குதிரையை நிறுத்திக்கொண்டிருந்தேன். அப்படி நிற்கும்போது, திடீரென்று வெடிச் சப்தங்கள் எனக்குக் கேட்டன. நாற்புறமுந் திரும்பிப் பார்த்தேன். கோட்டையின் முதல்வாசலும் இரண்டாம் வாசலும் அடைக்கப்பட்டிருந்தன.

"ஓஹோ, நம்மை சற்பனை செய்தற் கேற்படுத்திய கருமந்தானென்று நான் யூகித்தறிந்துகொண்டு, மேட்டில் நின்றபடிக்கே என் குதிரையை கோட்டைச் சுவரைத் தாண்டப் பண்ணினேன். என் குதிரை கோட்டைக்கு வெளியில் வந்து விழுந்து இறந்து போயிற்று. உடனே நான் எழுந்துபோய் ஓரிடத்தில் மறைந்திருந்து, என்ன நடக்கிறதென்பதை யறிய வழி பார்த்துக்கொண்டிருந்தேன். அப்படிக்கிருக்கும்போது, கோட்டைக்குட் சென்ற அரசவமிசத்து அமீர்களடங்கலும் அவர்களின் தலைவர் ஷாஹீன்பேயுடன் சங்கரிக்கப்பட்டார்களென்பதாயும், கண்ட கண்ட விடங்களிலெல்லாம் அவ்வரசவமிஷச்சந்ததியார்கள், இராஜ கட்டளைப்படிக்குக் கொல்லப்படுகிறார்களென்பதையும் நான் கேட்டுத் திகிலடைந்து,



யாதொன்றுந் தோற்றாதவனாக, இப்போது நாமிருக்கிற இவ்வனத்துக்கு வெகுகஷ்டத்துடனுந் தந்திரத்துடனும் ஒளித்தோடிவந்து, இங்குள்ள ஒருகோத்திர அமீரிடத்திற் புகலிடந் தேடினேன்.

"அவர் எனக்குத் தேவையான சகலவஸ்துக்களுங் கொடுத்து, என் பணிவிடைக்காகவும் துணைக்காகவும் சிலபேர்களை யென்னுடன் சேர்த்து, இவ்விடத்தி லிருக்கும்படிக்குச் செய்தார். அது முதல் இங்குதான் வாசஞ்செய்து வருகிறேன். கருப்பவதியா யிருந்த என் அருமைப்பாரியின் கெதியும், சுந்தாக்குழந்தை ஸலீமின் கெதியும் எவ்வாறாயிற்றோ, நானறியேன்" னென்று சொல்லி, சிறுவர்களைப் போலத் தேம்பித் தேம்பி யழுது குவித்தார். அமீன் பேயின் பரிதாபமான சரித்திரத்தை அமீர்பஷீர் கேட்டு அச்சரியமடைந்து, அவர்பேரிற் கிருபையாகி, "நீர் ஒன்றிற்கும் யோசிக்காமலும் அச்சப்படாமலு மிரும். கடவுள், உம்முடைய மனைவி மக்களைக் கண்டு களிக்கக் கருணைபுரிவாராக. நான் சமீபத்தில் காஹிறாவுக்குப் போகவேண்டியதிருப்பதால், அங்கடைந்தவுடனே, தேசாதிபதி முஹம்மதுஅலி பாஷா விடத்தில் உம்முடைய காரியங்களைச் சொல்லிக்காட்டி, நீர் நமக்குச் செய்திருக்கிற பேருதவிக்குப் பிரதிசெய்யக் கடமையுடையவனாக விருக்கிறேன். ஆகையால் உனக்குத்துடனிரும்" என்று ஆசீர்வதித்தார்.

அமீன்பே, தான் விவரித்த சமாச்சாரங்களைப்பிரகசியமாகவைத்துக்கொள்ள வேண்டுமென்று அமீர்பஷீரை வேண்டிக் கொண்டார். அவரின் வேண்டுதற்படிச் செய்கிறதாக அமீர்பஷீர் வாக்குத்தத்தம் பண்ணினார்.

---

## 21-வது அத்தியாயம்.

## இபுறாஹீம்பாஷா.

பின்பு, அமீர்பஷீரும், பிரின்ஸ் அமீன்பேயும் கூடாரத்தைவிட்டும் வெளியி லானார்கள். அங்கே பனீசவைபி லிருந்துவந்த ஒரு தூதனைக் கண்டார்கள். அவனிடத்தில் அமீர்பஷீருக்கொரு கடிதமிருந்தது. அதை அமீர்பஷீர் வாங்கி முத்திரை விடுத்துப்பார்த்தார். மேல் மிஸ்றிலிருக்கிற பர்தூஷ் பட்டணத்துக்குப் போ

வதற்காக, சமீபத்தில் இபுறாஹீம்பாஷா அவர்கள் பனீசவைபுக்கு வரப்போகிறதாக எழுதப் பட்டிருந்தது. உடனே அமீர்பஷீர் அமீன்பேயைப் பார்த்து, "இதுநல்ல சமயம்; மிஸ்து தேசாதிபதி முஹம்மதுஅலி பாஷா அவர்களின் குமாரர் இபுறாஹீம்பாஷா, சமீபத்தில் நமக்கருகாமையிற் செல்லப் போகின்றார்கள். சந்தேகமின்றி ஓரிரவு, அல்லது பகல் நம்மிடத்தில் தங்குவார்கள். அவர்கள், தன் தகப்பனாரிடத்தில் தகுதியும், சிபாரிசும் பெற்றவர்களென்பதை நீரும் அறிந்திருக்கக் கூடும். இதற்கு முன்னர் ஓர் முறை அவர்களுடன் வசனித்திருக்கிறேன். நீதத்தைக்கைக்கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள். நாம் நாடியிருக்கும் கருமத்திற்கு இது, தக்க சாவகாசமான சமயமாகக் காணப்படுகிறது.

"உம்முடைய காரியத்தைப்பற்றி நாம்அவர்களிடத்தில்முறையிட்டுக்கொண்டால், சந்தேகமின்றி முழு உதவியும் அவர்களால் நமக்குக் கிடைக்கக் கூடும். ஆகையால், இப்போதே நீர் நம்முடன், பனீசவைபுக்குப் பிரயாணமாவதை நன்மையாகக் காண்கிறேன். நீர், என் மனிதரைப்போல உடையணிந்து கொள்வீரேல், உம்மை யின்னாரென்று ஒருவரும் அறிந்துகொள்ள மாட்டார்கள். உம்முடைய குற்றத்தை மன்னிக்கும்படிக்கு, நான் தேசாதிபதி முஹம்மதுஅலி பாஷா விடத்திற் கேட்டு, அவர் மன்னிக்கா விட்டாலும் மன்னிப்புக் கொடுத்து, நீர் உம் மனைவிமக்களைத் தேடிக் காணுதபோது, உமக்கு மிஸ்றிலிருக்கப் பிரியப்படாவிட்டாலும், என்னுடன் லிபனான் தேசத்துக்குப் போய்விடலாம். நான் எப்பொழுதும் மறக்கக்கூடாத உதவியை என்மகன் கரீமின் விஷயத்தில் செய்துவிட்டீர். ஆதலால் நீர் நம்மிடத்தில் இரம்ப நெருங்கிய உவப்புள்ள மனிதர்களில் முதன்மையானவராக இருப்பீரென்பதில் சந்தேகமில்லை" யென்றார்.

அமீர்பஷீரின் பட்சமான வார்த்தைகளை பிரின்ஸ் அமீன்பே கேட்டு மனம் பூரித்தவராக நல்லதென்று சம்மதித்து, உடனே தானிருந்த கூடாரத்தைப் பிடுங்கிவிடத் தன்மனிதர்களுக்குக் கட்டளையிட்டு, தனக்கு அடைக்கல வாக்களித்து உதவிபுரிந்த அமீருக்கு, நடந்த வரலாற்றை விவரமாக ஒரு கடிதத்திலெழுதி, அவரைத் துதித்து, அக்கடிதத்தை ஒரு தூதனிடத்திற் கொடுத்து, நடந்த சமாசாரங்களை யிரகசியமாக அவ்வமீருக்குச் சொல்லும்



படிக்குப் போதித்து அவனை யனுப்பிவிட்டு, தான் பிரயாணத்துக்குத் தயாரா யிருந்தார். அன்று சாயுங்காலம், அமீர்பஷீர், பிரின்ஸ் அமீன்பே, அமீர் அமீன் முதலானவர்கள் குதிரைகளில் சவாரியாகி பனீசவைபை நோக்கிப்பிரயாணமானார்கள். இடைவழியில் பிரின்ஸ் அமீன்பே, தன்னுடைய கருமத்தைப் பிறரறிவதைப்பற்றி அஞ்சி, தன்னை "சுலைமான்" என் றழைக்கும் படிக்கு அமீர்பஷீரிடத்திற் கேட்டுக்கொண்டார். அமீர்பஷீரும் சம்மதப்பட்டார். அவருடைய "அமீன்பே" என்னுஞ் சயநாமத்தை, அமீர்அமீன் முதலிய மற்றவர்களும் அறியவே மாட்டார்கள். ஆதலால் அவரை சகலரும் "சுலைமான்" என்றே அழைத்து வந்தார்கள். பின்பு சகலரும் பனீசவைபுக்கு வந்து சேர்ந்தார்கள். கரீமின் சுகத்தைப் பற்றி சுலைமான் விசாரித்தார். சுகத்துட னிருக்கிறாரென்று சொல்லப்பட்டது. சுலைமான், கரீமின் அறைக்குட்போய் அவரைக்கட்டித் தழுவி, அவரின் சுகத்தைப்பற்றி விசாரித்தார். தன்னை யிரட்சித்த சுலைமானின் கையை கரீபு முத்தமிட்டார். அமீர்பஷீரின் மக்களுள்பட சகலரும், சுலைமான் கரீமின் உயிரைக் காப்பாற்றியவரென் றறிவார்களே தவிர, அவரின்னாரென்பதையும், அவரின் அந்தரங்கம் இன்ன தென்பதையும் அறிய மாட்டார்கள். "அவருடைய பெயர் சுலைமான் தானென்றும், ஏதேனும் அவர் மிஸ்று கவர்ன்மெண்டாருக்குக் குற்றஞ் செய்திருப்பார்; அவருக்கு மேற்படி கவர்ன்மெண்டாரிடத்தில் மன்னிப்பு வாங்கிக் கொடுத்தால், தன்னுடைய மகன் கரீபுக்கு அவர்செய்த உபகாரத்திற்குப் பிரதியுபகாரமாகப் போதுமென் றெண்ணி, அவரை அமீர்பஷீர் தன்னுடன் அழைத்து வந்திருப்பாரென்றும்" எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

இபுறாஹீம்பாஷா, சற்றுநேரத்திற் குள்ளே வரப்போகிறதாக பனீசவைபு ஜில்லா கலெக்டருக்குச் சமாச்சாரம் எட்டியது. உடனே கலெக்டர் அமீர்பஷீருக்குத் தெரியப்படுத்தி விட்டு, பனீசவைபின் பட்டாளங்களை நீலாற்றின் கரையிலிருந்து இபுறாஹீம் பாஷா வந்து தங்கப்போகிற, அமீர்பஷீரிருக்கும் இராஜமாளிகை வரையில் அணியாக நிறுத்தி, அமீர்பஷீரையும், அவரின் மக்களாகிய அமீர் கலீல், அமீர் அமீன் இவர்களையும் கூட்டிக்கொண்டு நீல்நதிக்கரையை நோக்கி இரதங்களிலேறிச் சென்றார். 'சுலைமான்'

என்ற அமீன்பே, அமீர்பஷீரின் மனிதர்களைப் போல், கரீபுடனே மாளிகையிலேயே யிருந்தார். அமீர்பஷீர் முதலானவர்கள் நீல்நதிக்கரைக்கு வந்து சேர்ந்த சில நிமிடங்களுக்குள், இபுருஹீம்பாஷா ஏறிவருகிற கப்பல் அங்குவந்துசேர்ந்தது. அமீர்பஷீர்,கலெக்டர் முதலானவர்கள் கப்பலுக்குச் சென்றார்கள். அமீர்பஷீர்,இபுருஹீம்பாஷாவுக்கு கைலாகு கொடுத்தார். கலெக்டரும், அமீர் கலீலும், அமீர் அமீனும், அவர்கையை முத்தமிட்டார்கள். அதன்பின் சகலரும் கரையேறி, இபுருஹீம் பாஷாவும், அவரின் மெய்க்காப்பாளரும், அமீர்பஷீரும் ஓர் இரதத்திலும், கலெக்டர், கலீல், அமீன் மூவரும் ஓர் இரதத்திலும் ஏறி, குறித்த மாளிகைக்கு வந்து சேர்ந்து, விலையுயர்ந்த பலவர்ணப் பட்டாடைகளாலும், சூரியப் பிரபைகளையும் நாணுவித்த வில்லூர்திகளாலும், விலைமதித்தற் கியலாத இரத்தினக் கம்பளங்களாலும் விரிப்பு விரித்து, அவ்விரிப்புக்களின்மீது போடப்பட்டிருந்த, பலவித ஆசனங்களில் அவரவரின் தராதரப்படிக்கு உட்கார்ந்தார்கள்.

சுலைமான், இபுருஹீம்பாஷாவுக்குப் பயந்து, தலைமறைவாக வெளியில் வராமல், கரீபுடன் பேசிக்கொண்டு கரீபின் அறைக்குள்ளேயே யிருந்தார். தெரிசன மண்டபத்தி லிருந்தவர்கள் பல விஷய நிமித்தம் வெளிப்பட்டு விட்டார்கள். இபுருஹீம்பாஷாவும், அமீர்பஷீரும் தனித்திருந்தார்கள். இபுருஹீம்பாஷா, நிதானமான உயரத்தையும், அதற்குத்தக்க பருப்பத்தையும், கூர்மையான மூக்கையும், சிவந்த மயிரையும், வசூரி மறுக்கள் படர்ந்த முகத்தையும், 35-வயதையு முடையவர். சரிகை வேலைசெய்த உத்தியோக உயர்பதவி உடையணிந்து, வாகுவலயம், புயகிருதி முதலியன பூண்டு, நீண்ட குறுக்கித் தொப்பி தலையில் தரித்து, நெஞ்சில் பலவித கீர்த்தி முத்திரைகள் இலங்கவிட்டு, இடப்புறத்தில் தங்க வுறையிடப்பட்ட நீண்டவாளொன்று தொங்க விட்டு வெகு காம்பீரமாக வுட்கார்ந்திருந்தார். அவர் கடுகடுத்த முகத்தினராதலால், அவரின் தந்தையர் முஹம்மதுஅலி பாஷா விடத்தில் பிரஜைகள் பட்சங்காட்டுவது போல அவரிடத்தில் காட்டமாட்டார்கள். ஆனால், அவரை மெத்தப்பயப்படுவார்கள். முடுக்கான தீவிரகோபமே அவரின் சுபாவம். ஆனால், பொறுமையும், கபடமுமில்லாதவர். நல்லெண்ண முடையவர்.



22-வது அத்தியாயம்.

## இராஜவமிசத்தார்கள் சங்கரிக்கப்பட்டதின் காரணம்.

இபுருஹீம்பாஷா :——அமீரே! இம்மிஸ்றுதேசத்தின்பூமியை யெப்படிப்பட்டதென்று கண்டீர்கள்?

அமீர்பஷீர் :——மிகுந்த வளமான பூமியாகக் காண்கிறேன். ஆனால், இதின்மண் எங்கள் தேசத்து மண்ணுக்கு மெத்த வேற்றுமையாகக் காணப்படுகிறது. நான் இதற்கு முன் மிஸ்றுக்கு வந்தபோது, இஸ்கந்தரிய்யா வரைக்கும் போய்ப்பார்த்தேன். அக்காலத்தில் இப்பூமியை இத்தனை வளமுடையதாகக் காணவில்லை. இப்பூமியின்வளத்திற்கும்,குடிகளின்க்ஷேமத்திற்கும், அவர்கள்சமாதானத்துடன் வாழுதற்கும் காரணர் தங்களின் தகப்பனாரென்றே ஸ்திரப்படுத்துகிறேன்.

இபுருஹீம்பாஷா :——அரசவமிச அமீர்களின் ஆக்ஷிகாலத்தில் இப்பூமியிலிருந்த நிலைமையும், தற்போதிருக்கு மியல்பும் சீர்தூக்கிப் பார்க்கப்படின் இரம்ப வித்தியாசங் காணப்படும். இப்பூமி இவ்வளவு சீக்கிரத்தில் நன்னிலைக்கு வந்துவிட்டதைப் பற்றி ஆச்சரியப் படக்கூடும். அக்காலத்தில் தத்துவ முள்ளவர்களே உயிரும் பொருளும் உடையன வாயிருந்தனர். சென்ற நூற்றாண்டின் கடையில் இத்தேசத்தில் நிகழ்ந்த குரூரங்களைத் தாங்க ளறிந்திருப்பீர்களாதலின், அதை விவரிக்கவேண்டியதில்லை.

அமீர்பஷீர் :——பாழடைய விருந்த இப்பூமியை, பட்டணமாக்கியது தங்களின் தந்தையரென்றே சொல்ல வேண்டும்.

இபுருஹீம்பாஷா :——தாங்கள் சொல்வது உண்மை. ஆனால், இம்மிஸ்று தேசவாசிகளில் அரசவமிசத்தார்கள் மட்டில் எப்போதும் உட்கலகம் விளைத்துக்கொண்டிருந்தமையால், அவர்களை முற்றுக் களையவேண்டுமென்று நெடுநாள் வழிபார்த்து நாசப்படுத்திய பின்னர்தான், இவ்வூர் நன்னிலைமையையுஞ்சமாதானத்தையும் பெற்றது.

அமீர்பஷீர் :——அந்த அரச வமிசத்தார்கள் சங்கரிக்கப்பட்டதையும், அவர்களின் விஷயங்களைப் பற்றியும் கொஞ்சம் சம்பாஷிக்க வுத்தரவளிப்பீர்களா?

இபுறுஹீம்பாஷா:——நல்லது, சம்பாஷிக்கத் தடையில்லை.

அமீர்பஷீர்:——அவ்வரச வமிசத்தார்கள் இத்தேசத்தை ஆக்ஷிசெய்து வந்த காலத்தில் கொடுங்கோன்மையாக அரசு புரிந்தார்களென்று சொல்லப்பட்டாலும், அவர்களடங்கலும் அவ்வாறு செய்தார்களென்று கூறற் கிடம்பாடாகாது. ஏனெனிலோ, 13, 14, 15-ம் நூற்றாண்டுகளிலும், 16-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அவர்கள் இத்தேசத்திற்கு அரசர்களாக விருக்கும்போது அவர்கள் செய்த நன்றியின் அறிகுறியாக, சில ஆதாரங்களிருக்கின்றன. நாயகம் சுல்தான் ஸலீம்கான் அவர்களால் இவ்வூர் உதுமானியரின் அரசாக்ஷிக்குள்ளாக்கப்பட்டபோது, அவ்வரச வமிசத்தாரின் சுயாதீனம் நீங்கி, அவர்கள் பலவுத்தியோகங்களிலும் அமர்த்தப்பட்டார்களென்பது தாங்களறிந்த விஷயந்தான். அக்காலத்தில் உதுமானியர்களால் இத்தேசத்துக் கனுப்பப்பட்ட கவர்னர்களின் காரணத்தினாலேயே அவர்கள் கலகம்பண்ண ஆரம்பித்தார்களென்பதைத் தாங்கள் மறுக்கவு மாட்டீர்கள். அவர்கள் அந்த கவர்னர்களை உயிரிழந்த பிரேதங்களுக் கிணையாகக் கண்டமையால், நாடிபூ படிக்கெல்லாம் கலகம் விளைத்து, குடிஜனங்களை யிம்சித்தார்கள். மேற்படி துருக்கி கவர்னர்களின் திறமைக்குறைவினாலேயே, அரச வமிசத்து அமீர்களுள் ஒருவரான அலீபே அல்கபீர் என்பவர், சென்ற நூற்றாண்டின் நடுவில் மிஸ்றை வசப்படுத்தவும், (சிரியா) ஷாமைப் பிடிக்கவும் இடம்பாடு பெற்றார். அவருடைய மைத்துனர் முஹம்மதுபே அபூதஹ்பு என்பவர் அவருக்கு மோசஞ் செய்யாதிருந்தால், மிஸ்றும், ஷாமும் அவரின் சுயாதீனத்திலேயே யிருக்கும். யோசிக்குமிடத்து, அவரின் செய்கையும் சதிமானமாக எனக்குத்தோற்றப்படவில்லை. பிரான்ஸியர் மிஸ்றுக்குவந்தபிறகு, அரசவமிசத்தார்களை மெத்த தூஷித்து, கஷ்டப்படுத்தினார்கள். அதனாலேயே மிஸ்றிகள் அரசவமிசத்தார்களை நேசிக்கவும், அவர்களுக் குதவிபுரியவும் நேர்ந்தது. அதுநிற்க, தங்கள் தகப்பனாரவர்கள் மிஸ்றின் தேசாதிபதியான பிறகு, அவர்களின்கட்டளைக்கு அரசவமிஷத்தாரடங்கி நடந்து, தங்கள் தகப்பனாரவர்களின் கோரிக்கை நிறைவேற உதவியும்செய்தார்கள். மாட்சிமைதங்கிய சுல்தான் மஹ்மூதுகான் அவர்களால் அவ்வரச வமிசத்தார்கள் மன்னிக்கப்பட்டது முதற்கொண்டு, தங்கள் தகப்பனாரவர்களும், அரச



வமிசத்தார்களும் இரம்ப ஒற்றுமையுடையவர்களா யிருந்ததை நானறிந்திருக்கிறேன். அரசவமிசத் தலைவர் ஷாஹீன்பேயும், தங்கள் தகப்பனாரவர்களும், ஒருவரை ஒருவர்போய் தெரிசித்து வருகிறவர்களாக விருந்தார்கள். ஒற்றுமையுடனிருந்தார்களென்பதற்கு அதுவோர் திருஷ்டாந்தமாகிறது. அத்தனை ஒற்றுமையுடையவர்களாக விருக்கும்போது, அவர்களைக் கொல்ல, தங்கள் தகப்பனாரவர்கள் நாடாதிருந்தால் நலமா யிருக்குமல்லவா?

இபுறுஹீம்பாஷா:——அவ்விஷயத்தில் தங்களுடைய அபிப்பிராயத்தைப் போலவே, என் தகப்பனாரவர்களின் நெருங்கிய சிநேகிதர்களாகிய பெரிய மனிதர்களில் அநேகர் அபிப்பிராயப்பட்டார்கள். யோசிக்குமிடத்தில் அவர்களின் அபிப்பிராயம் சரியென்றே புலப்படும். ஆனால், காரியம் அப்படிக்கல்ல. என் தகப்பனாரவர்கள்பேரில் குறைகூறவும் வழியில்லை. ஏதினாலென்றாலோ, மிஸ்றை ஆக்ஷிபுரிந்துவந்த அரசவமிசத்தாருள் அநேகர், அரசாக்ஷியை நியாயமாக அனந்தரங் கொண்டவர்களல்ல. அவர்களின் வலுவாலும், சனக்கட்டாலும் வம்பாக அபகரித்தார்களென்பதை, அப்பெரிய மனிதர்கள் அறிந்துதானிருக்கிறார்கள். இத்தேசம் உதுமானியரின் வசத்திலான பிறகு, நாயகம் சுல்தான் ஸலீம்கான் அவர்கள் அவ்வரச வமிசத்தார்களை அமீர்களாக நியமித்தது அவர்களால் குழப்பமும், தீங்கும் உண்டுபடாதிருப்பதற்காகவே யன்றி பிறிதிற்கன்று. பிறகு, உதுமானிய கவர்ண்மெண்டாரால்தேசாதிபதிகளாக நியமிக்கப்பட்ட பாஷாமார்களுக்கு, அவ்வரசவமிஷத்து அமீர்மார்கள் செய்துவந்த பெருந் தொந்தரைகளைத் தாங்களும் திட்டமாக அறிந்திருப்பீர்கள். அத்தொந்தரைகளை உதுமானிய கவர்ண்மெண்டார் சஹிக்கக் கூடாதவர்களாக, பிரான்ஸியரின் படையெடுப்பிற்குப் பிறகு, அவ்வரச வமிசத்தாரடங்கலையும் நாசப்படுத்தத் தீர்மானித்து, அதைப்பற்றி அவர்களின் கவர்னர்களான பாஷாமார்களுக்கு இரகசியக் கட்டளை தந்தார்கள். ஆனால், அக்கட்டளையை நிறைவேற்ற அப்பாஷாமார்களுக்கு இடம்வாய்க்கவில்லை. என் தகப்பனாரவர்கள், உதுமானியகவர்ண்மெண்டாரால் தேசாதிபதியாக நியமிக்கப்பட்ட பிறகு, அக்கவர்ண்மெண்டாரால் அவ்வரச வமிஷத்தார்களுக்கு மன்னிப்பு கிடைத்தபடியால், அவர்கள் மாற்றஞ் செய்யக்கூடாதவர்களாகி, வெளிப்பார்வைக்கு என்

தகப்பனாரவர்களிடத்தில் ஒற்றுமையைக் காட்டி, அந்தரங்கத்தில் கலகத்தை விளைத்து வந்தார்கள். கி. பி. 1811-ல், அறபு நாட்டில் கலகம் விளைத்துவந்த வஹ்ஹாபிகளை அடக்குதற்கு, என் சகோதரர் துசூன்பாஷாவை அனுப்பிக்கும்படி என் தகப்பனாரவர்களுக்கு உதுமானிய கவர்ன்மெண்டார் கட்டளையிட்ட பொழுது, யுத்தவீரர்கள் அறபு நாட்டிற்கேகியபிறகு, அவர்களின் நாட்டத்தை நிறைவேற்ற நல்ல சமய மென்று அவர்கள் கருதி யிருந்தார்கள். ஆனால், என் தகப்பனாரவர்கள்முந்திக்கொண்டபடியால், அவ்வரச வமிஷத்து அமீர்கள் முற்றாக நாசமாக்கப்பட்டார்கள். என் தகப்பனாரவர்கள் அவ்வாறு செய்தது, உதுமானிய (Porte) போர்ட் சங்கத்தாரின் கட்டளையைக்கொண்டுதா னிருக்கவேண்டும். அமீரே! நான் திட்டமாகச் சொல்லுகிறேன்; கேட்பீர்களாக. அவ்வரச வமிசத்தார்கள் அவ்வாறு சங்கரிக்கப்படாதிருந்தால்,இத்தேசம் மேனிலையையும், சீர்திருத்தத்தையும் பெறவொட்டாமல் கெடுதி செய்துகொண்டே யிருப்பார்கள்.

அமீர்பஷீர்:——அவர்களைச் சங்கரித்தது அரசகட்டளையைக் கொண்டா யிருக்குமானால், தங்கள் தகப்பனாரவர்கள் அதில் சம்பந்தப்பட்டவர்களல்ல. அவர்கள் தன் கடமையை நிறைவேற்றினார்களே யன்றி வேறில்லை. அல்லாமலும், அவர்களைச் சங்கரிக்குங் காலத்தில் தங்கள் தகப்பனாரவர்களைப்பற்றி நான் கேள்விப்பட்ட விஷயம் இப்போது என் ஞாபகத்து வந்திருக்கிறது. அதாவது, அச்சங்கார காலத்தில் அக்கொடுமையைப் பார்க்க தங்கள் தகப்பனாரவர்கள் மனசில்லாதவர்களாக, தன்னுடனிருந்த சேனாதிபதியும், மெய்க்காவலருமாகிய முஹம்மதுபே லாஜச்லூ என்பவரையும் சாலிஹ்கூஷ் என்பவரையும் விட்டுப் பிரிந்து,கொலுமண்டபத்திற்குச் சென்று, பிரமிப்படைந்து, ஒருவருடனும் பேசாமல், திறம்பேதலித்தவர்களாக இருந்தார்களாம். அதுவே, அச்சங்கரிப்பை தங்கள் தகப்பனாரவர்கள் தன் சுயேச்சையாய்ச் செய்யவில்லையென்பதையும், அப்பழி அவர்களைச் சாராதென்பதையும் ஸ்திரப்படுத்துகிறது. கடவுள் இரம்ப அறிந்தவர். நாம் சம்பாஷிக்கும் விஷயத்தைச் சார்ந்த ஒன்றை, தங்களுக் கெடுத்துக்காட்டப்போகிறேன். அதாவது, அவ்வரச அமீர்களுள் ஒருவர், கால ஒற்றுமையால் உயிர் தப்பப் பெற்றார். அவர், என் புத்திரி லொருவனை



மரணத்தினின்றுங் காப்பாற்றி யிருக்கிறார். அவர் செய்த பேருதவிக்குப் பகரமாக, அவரைப்பற்றி தங்கள் தகப்பனாரவர்களிடத்திற் சொல்லி, அவருக்கு மன்னிப்புவாங்கிக் கொடுக்க நாடுகிறேன். அந்நாட்டம் இடம் பெறுமென்று தாங்கள் நினைக்கிறீர்களா?

இபுறாஹீம்பாஷா:——அம்மனிதன் தப்பி யோடியதை நாங்களும் அறிந்திருக்கிறோம். அவன் ஓர் நாட்டறபித் தலைவனிடத்தில் அடைக்கலம் புகுந்திருக்கிறானாம். அவனிருக்குந் தலம் அறியப்பட்டால், என் தகப்பனாரவர்கள் அவனைக் கொல்லவே நாடியிருக்கிறார்கள். அவர்களுக்குள்ள பிடிவாதம் அவன்பேரில்மெத்தவா யிருக்கிறது. மற்றவர்கள்பேரில் அப்படிக்கில்லை. ஆயினும், தாங்கள் என் தகப்பனாரவர்களிடத்தில் அதிக சங்கை பெற்றவர்களாக எனக்குத்தெரிகிறபடியினாலே,அவனைப்பற்றிய தங்களுடைய சிபாரிசு, என் தகப்பனாரவர்களிடத்தில் அங்கீகரிக்கப்படுமென்பதற் கையமில்லை. நான் இவ் யாத்திரையினின்று திரும்பினவுடனே, அதைப்பற்றி என் தகப்பனாரவர்களிடத்தில் முறையிடுகிறேன்.

அமீர்பஷீர்:——தங்களுக்கு நான் நிரம்பத் துதி செலுத்துகிறேன். அவர் எனக்குச் செய்திருக்கிற நன்றிக்குப் பிரதி,மேலே கூறியபடி நான் செய்யாதுபோனால், என்மனம் ஒருக்காலும் சமாதான மடைந்திராது.

இபுறாஹீம்பாஷா:——சந்தோஷத்துடனும் நம்பிக்கையுடனும் இருங்கள். கடவுளின் உதவியால் தங்கள் மனம்போலாகும். அம்மட்டோடு பேச்சு நின்றுவிட்டது. பின்பு அமீர்பஷீர், வஹ்ஹாபிகளைக் குறித்தும் அவர்களுடன் போர் புரிந்ததைக் குறித்தும் கேட்டார். அதற்கு இபுறாஹீம்பாஷா விவரங்கூறினார். பிறகு போஜனம் அருந்தினார்கள். மறுநாட் காலையில் இபுறாஹீம்பாஷா, தான் நாடிவந்த தானத்துக்குப் பிரயாணமாகிச் சேர்ந்து சொற்ப நாளைக்குள், காஹிறாவுக்கு வந்து சேர்ந்தார்.

### 23-வது அத்தியாயம்.

## முஹம்மதுஅலி பாஷா.

அமீர்பஷீர், பனீசுவைபில் சில மாதங்கள் விடுதிவிட்டிருந்தார். பிறகு, முகம்மதுஅலி பாஷா காஹிறுவுக்கு வந்துவிட்டதாகவும், அமீர்பஷீரை காஹிறுவுக்கு வரும்படியாகவும் நிருபம் வந்தது. அச்சமயம், கரீபுக்கு முழுக்காயமும் ஆறியிருந்தது. அமீர்பஷீருக்கும், இபுறுஹீம்பாஷாவுக்கும் இடையில் நடந்த, தன்னைக் குறித்த சம்பாஷணைகளை சுலேமான் கேட்டு, மிகுந்த சந்தோஷத்துடனிருந்தார். அமீர்பஷீர் முதலானவர்கள், முஹம்மதுஅலி பாஷாவின் நிருபப்படிக்கு, காஹிறுவுக்குப் போய்ச் சேர்ந்து அவர்களுக்காகத் தயார் செய்யப்பட்டிருந்த மாளிகையில் விடுதி விட்டார்கள். அவர்களின் வருகைக்காக, முஹம்மதுஅலிபாஷா விடத்திலிருந்து மேலான குதிரைகளனுப்பப்பட்டன. அமீர்பஷீரும், கலீலும், கரீபும் குதிரைகளிலேறி, முஹம்மதுஅலி பாஷாவின் அரண்மனையைச் சேர்ந்தார்கள். அங்குள்ள காவலாளர்கள் எழுந்து நின்று, அவர்களுக்கு மிகுந்த மரியாதை செய்தார்கள். அங்கிருந்து அலங்காரமான கொலுக்கூடத்துக்கு வந்தார்கள். அம்மண்டபத்தில், ஒருகையில் ஜபமணியும், மற்றொரு கையில் வாளும் பிடித்து ஆசனத்திலுட்கார்ந்திருந்த முஹம்மதுஅலி பாஷா எழுந்து, வந்தவர்களுக்கு கைலாகு கொடுத்து, ஆசிகூறி, தனக்குச் சமீபத்திலிருந்த ஆசனங்களில் உட்கார்த்தினார். கலீல், அமீன், கரீபு இம்மூவரும் பாஷாவின் கரத்தை முத்தமிட்டார்கள். முஹம்மதுஅலி பாஷா "இப்பிள்ளைகள் யார் ?" என்று கேட்டார். அமீர்பஷீர், தன்னுடைய பிள்ளைகளென்று மறுமொழி கொடுத்தார்.

முஹம்மதுஅலி பாஷா சிரித்துக்கொண்டு, தனக்குச்சமீபத்திலுட்கார்த்தினார். அவ்விராஜ தரிசனை, கரீபுக்கு முதன்முறையாயிருந்தபடியினாலே, அவர் பிரமித்திருந்தார். மும்மதுஅலி பாஷா, உயர்ந்த நெற்றியையும், அடர்ந்த புருவங்களையும், கறுத்த விழிகளையுடைய பருத்த கண்களையும், குவிந்த வாயையும், பெரிய மூக்கையும், அடர்ந்த தாடியையும், பயங்கரமான தோற்றத்தையும் உடையவர். அவர், அகன்ற அங்கியும், துருக்கித் தொப்பியும்



அணிந்திருந்தார். அவருக்கு, கரீபு வியப்பானவராகத் தோற்றப்பட்டபடியினாலே, அவரை தனக்குச் சமீபத்திலிருத்திக்கொண்டார். அவர், அமீர் கரீபுடைய சிரசிலிருந்த தழும்பைச் சுட்டிக்காட்டி "இதென்ன மறு ?" வென்று அமீர்பஷீரைக் கேட்டார். "அடிபட்ட காய" மென்று அவர் விடைகூறினார். "அஃதெப்படி?" என்று பாஷா கேட்டார். அமீர்பஷீர், நடந்த சம்பவங்களை யெடுத்துக்கூறி, மேற்குல மக்களுள் ஒருவர், என் மகனைக் காப்பாற்றாவிட்டால், தாங்கள் அவரைக் காணப்போகிறதில்லை. அக்காப்பாளரின் உதவிக்குப் பிரதி செய்ய, நான் எவ்வளவு கடமைப்பட்டிருக்க வேண்டு மென்பது தாங்களறியாததல்ல" வென்றார். "உண்மையில் அவர் எவ்விதப் பிரதிக்கும் பாத்திரவானே" யென்று முஹம்மதுஅலி பாஷா கூறினார். "அவருக்குச் செய்யும் பிரதி தங்கள் சமுகத்திலேயே பெறவேண்டும்" என்று அமீர்பஷீர் சொன்னார். "அதெப்படிப்பட்ட பிரதி?" யென்று மும்மதுஅலி பாஷா கேட்டார். உத்தரவு கிடைத்தால் இரகசியமாகச் சம்பாஷிப்பேன்" என்று அமீர்பஷீர் சொன்னார். அதற்கு முஹம்மதுஅலி பாஷா, "நல்ல" தென்று இருவரும் எழுந்து ஓரிடத்தில்தனித்துட்கார்ந்தார்கள். மற்றவர்களடங்கலும் வெளியே போய் விட்டார்கள்.

அமீர்பஷீர் ஆதிமுதல் அந்தம் வரையில் நடந்தவைகளைச்சவிஸ்தாரமாகக்கூறி, "அவரைத் தாங்கள் மன்னிக்கவேண்டுமென்பதே, அவருக்கு நான் செய்யவேண்டிய பிரதி" யென்று வேண்டிக்கொண்டார். முஹம்மதுஅலி பாஷா அமீர்பஷீரை நோக்கி, "தாங்கள் சொன்ன அக்கருமத்தைப்பற்றி, என்மகன் இபுறுஹீம் என்னிடத்தில் முறையிட்டிருக்கிறார். தங்களை சங்கைப் படுத்துவதற்காகவும், தங்கள் மனம் சந்துஷ்டி யடைவதற்காகவும் அவருடையகுற்றங்களை மன்னித்தேன். ஆனால், அவர் இம் மிஸ்று தேசத்திலிருக்கக்கூடாது. அவருக்கு மன்னிப்பும் கொடுத்து, மிஸ்று தேசத்திலிருக்க இடமுங் கொடுத்தால், எனக்குப் பழிப்புண்டாகு மென்பதைப் பயப்படுகிறேன். அன்றியும் அவர், இம்மிஸ்றின் ஆக்ஷியை என்னிடத்திலிருந்து பிடுங்கி ஆங்கிலேயருக்கு ஒப்புவிக்க முயன்ற அமீருல்உல்பியின் நெருங்கிய பெந்துவாக விருப்பதால், அவரை, மற்ற அரசவமிசத்தார்களைவிட கடுமையாய் சிக்ஷிக்கவேண்டு

மென்று கருதியிருந்தேன். தாங்கள் அவரின் குணங்களைக் குறித்
துப் புகழ்ந்து, அவர் செய்த நன்றிக்குப் பிரதி செய்யவேண்டு
மென்று கேட்டுக் கொண்டதானது அவருக்கு மன்னிப்பளிக்க
என்னைக் கட்டாயப் படுத்திற்று" என்று கூறினார்.

அமீர்பஷீர், முஹம்மதுஅலி பாஷாவைப்பார்த்து; "நாயகமே!
நான் இங்கிருந்து போகிறவரையில் அவர் என்னுடனே யிருப்பார்.
நான் போகிறபோது அவரையுங் கூடக் கொண்டுபோகிறேன்.
அதற்கிடையில், அவர் முன்னிருந்த அவருடைய வீட்டுக்குப்
போய், அவருடைய பெண்சாதி பிள்ளைகளைத் தேடிப்பார்க்கட்டும்.
ஒருக்கால் அவர்களைச் சந்திக்கவும்போது" மென்றார். முஹம்மதுஅலி
பாஷா, "அவ்விஷயத்தில் நான் அவருக்கு உத்தரவு கொடுத்தே"
னென்று சொன்னதுடன், "அமீரே! தங்களுடன், சங்கடமான
சில விஷயங்களைப்பற்றிப்பேச சிலநேரம் தனிக்க விரும்புகிறேன்.
தங்களுக்குப் பிரியமிருந்தால் தங்களின் அருமைப் புத்திரர்க
ளுடன் தாங்களும், ஷிப்ரு என்னும் என்னுடைய மாளிகைக்கு வரு
விர்களேயானால், அங்கே சாவகாசமாக சம்பாஷிக்கலாம். அங்கே
ஒருவரும் வரமாட்டார்கள். இது இராஜாதிகாரம் நடக்கும் மண்
டபமாயிருக்கிறது. அந்த ஷிப்ரு மண்டபம், நான் காற்றுரும்
மண்டப" மென்று கூறினார்.

அமீர்பஷீர் "தாங்களென்னை யெப்போது அழைக்கிறீர்களோ
அப்போது வரத் தடையில்லை" யென்று முஹம்மதுஅலி பாஷா
வுக்கு விடையளித்துவிட்டு, உத்தரவு பெற்றுக்கொண்டு, சுலைமா
னுக்கு மன்னிப்புக் கிடைத்ததைக் கொண்டு மிகுந்த சந்தோஷ
முற்றவராக, தன் மக்களுடன் தானிருக்கும் மாளிகைக்கு வந்து,
சுலைமானை வரவழைத்து, அவருக்கு மன்னிப்பு கிடைத்ததையும்
அவருக் கறிவித்து, அவருக்குக் காவலாக சில சேவகர்களையும்
அவர்கூடச் சேர்த்தனுப்பினார். கெடுநாளாகத் தான் விட்டுப்பிரிந்
திருந்த பெண்சாதி பிள்ளைகளைப் பார்க்க அதிக ஆவலுடையவரா
யிருந்தபடியினாலே, உடனே புறப்பட்டுப் போனார்.

பின்பு, அட்மிரல் ஹினு அல்ஹிம்லி அமீர்பஷீரிடத்து வந்து,
"ஷிப்ரு மாளிகைக்கு, தங்களையும், தங்கள் புத்திரர்களையும் அழை
த்து வரும்படிக்கு முஹம்மதுஅலிபாஷா அவர்களின் கட்டளை பிறந்
திருக்கிற"தென்று கூறினார். கரீபு மட்டில் போகாதிருக்கநாடினார்.



அமீர்பஷீர் கட்டாயப்படுத்திக் கூட்டிக்கொண்டு சகலரும் குதிரை
களிலேறி, ஷிப்ரு மாளிகைக்குப்போய்ச் சேர்ந்தார்கள். வழிப்
போக்கில், குடிகாரப் போர்ச் சேவகனை விட்டும் விடுதலாக்கிக்காப்
பதாக வாக்களித்திருக்கிற அப்பெண்பிள்ளையின் ஞாபகம் கரீபுக்கு
வந்ததும் அதைக் குறித்து அமீர்பஷீரிடத்திற் கேட்டார். அவர்,
அட்மிரல்ஹினு அல்ஹிம்லியிடத்தில் முன்னரேசொல்லியிருந்தபடி
யினாலே, அவரிடத்தில் அமீர்பஷீர் கேட்டார். அதற்கு அட்மிரல்;
"அக்குடியனை விட்டும் அப்பெண்ணை விடுவித்து, தங்களைச் சந்தோ
ஷப்படுத்துவதற்காக அப்பெண்ணுக்கு எங்கள் தேசாதிபதியவர்
களால் மாசாந்தச் சம்பளமும் ஏற்படுத்தப்பட்ட"தென்றார். அத
னால் கரீபுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று.

அம்மாளிகை, விதவிதகனிவருக்க விருக்ஷங்களாலும், வாசனை
யைத்தரும் நானாவிதப் பூச்செடிகளாலும் வெகு சிங்காரமாக்கப்
பட்ட ஓர் பூங்காவனத்தின் மத்தியில், நீல் நதிக்கரையில்கட்டப்பட்
டிருக்கிறது. அமீர்பஷீர் முதலானவர்கள் அம்மாளிகைமுன்றிலில்
வரவே, முஹம்மதுஅலி பாஷா எதிர் சென்றழைத்து சோபனங்
கூறினார். சகலரும் அம்மாளிகைக்குள் ளானார்கள். முஹம்மதுஅலி
பாஷா, தனக்கெதிரில் அமீர்பஷீரையும் அருகில் அவரின் புத்
திரர்களையும் இருக்கச்செய்து, லிபனான் தேசத்தின் அமீர்பஷீ
ருடைய அரசாக்ஷி விஷயங்களைக் குறித்து வினவினார். அமீர்பஷீ
ரின் புத்திரர்கள், "இச்சமயம் நாமிங்கிருக்கவேண்டிய அவசிய
மில்லை" யெனக்கண்டு வெளியில்வந்து, அச்சிங்காரவனத்தைச் சுற்
றிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவ்வனத்தில், பூத்து, காய்
த்து, முதிர்ந்து, உதிர்ந்து, பரிமளித்துக் கிடக்கும் பழவினங்கள்,
பூவினங்களைச் சுட்டியும், அத்தினத்திற்கும், கரீபை யிழந்த தினத்
திற்கும் இடையிலுண்டான வித்தியாசத்தைப்பற்றியும், சுலைமா
னுக்கு மன்னிப்பு கிடைத்ததையும், அவரின் நடைபடிகளைக்
குறித்தும் பேசிக்கொண்டு சந்தோஷமா யிருந்தார்கள். பின்பு
அன்றிரவு அம்மாளிகையில் சகலரும் விருந் தருந்தினார்கள். விருந்
துக்களரி முடிந்த பிறகு, அமீர்பஷீர் தன் மாளிகைக்குப்போக
முஹம்மதுஅலிபாஷாவிடத்தில் உத்தரவு கேட்டார். அவர் உத்
தரவு கொடுத்து, "இன்னொருமுறை தங்களுக்கும், எனக்கும் இரக
சிய சந்திப்புண்டாகவேண்டும்; தங்களுடன் ஒருவருமிருக்கக்கூடாது;

தாங்கள் மட்டில் தனித்து வரவேண்டு" மென்றார். அமீர்பஷீர், "நல்ல" தென்று மறுமொழி கொடுத்து விட்டு, மக்களுடன் தானிருக்கும் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தார்.

மூன்று நாளைக்குப் பிறகு, அமீர்பஷீரை, காஹிருமலைக்கோட்டைக்குள்ளே வரும்படிக்கு முஹம்மதுஅலி பாஷா செய்தியனுப்பினார். முன்னர் சொன்னபடிக்கு, இரகசிய சந்திப்பிற்காக அழைக்கப்போதுமென்று அமீர்பஷீர் நினைத்து, தான்மட்டில் தனிமையாக காஹிருமலைக் கோட்டைக்குப் போனார். முஹம்மதுஅலி பாஷா, (சிரியா) ஷாம் தேச விஷயத்தில் தான்நாடியிருக்கும் நாட்டத்தைக் கூறி, "அதற்குத் தாங்கள் உதவிசெய்யவேண்டு" மென்று அமீர்பஷீரிடத்தில் கேட்டார். அமீர்பஷீர், "நல்ல" தென்று வாக்களித்தார். "தாங்கள் கேட்டபடிக்கு இக்கா பட்டணத்தின் கவர்னர் அப்துல்லாபாஷாவுக்கு, உதுமானிய கவர்ன்மெண்டாரால் மன்னிப்புக் கிடைப்பதற்காக கூடியவரையில் நான் முயற்சிக்கிறேன்; அதிசீக்கிரத்தில் அவ்வூருக்கு அவரே கவர்னராயிருக்கப்பெறுவா" ரென்று முஹம்மதுஅலி பாஷா அமீர்பஷீருக்குச் சொன்னார். அமீர்பஷீர் முஹம்மதுஅலி பாஷாவைப் பார்த்து, "தாங்கள் தங்களின் போர்வீரர்களை பிரான்ஸிய போர்வீரர்களின் ஒழுங்கைப் போல சீர்திருத்தியிருப்பதால், தங்களின் ஆக்ஷிபூமியை தாங்கள் விஸ்தரப்படுத்த எடுத்த முயற்சி நிறைவேறுமென்பதற்கு முதற்காரணம் இதுவே. ஷாம் தேசத்தாரும், அவர்களல்லாத ஏழைத் தேசத்தாரும் இந்த பட்டாளத்தாரின் ஒழுங்கை அறியமாட்டார்கள். ஆதலால், தங்களுடைய போர்வீரர்களுடனெதிர்த்து நிற்க, அவர்கள் சக்தி பெறமாட்டார்க" ளென்றார்.

முஹம்மதுஅலிபாஷா புன்னகை நகைத்து, "தாங்கள் சொன்னது நிசம். இவ்விஷயத்தில் நாம் அதிக கஷ்டமடைந்திருப்போமென்பது தங்களுக்கு மறைவானதல்ல. ஆனால், நான் அதிலும் அதிக கஷ்டமடைந்தவனாயிருக்கிறேன். எவ்விதத்தினாலென்றாலோ, அல்பானிய, துருக்கிய போர்வீரர்கள் இப்புதுப்போர்ப் பயிற்சியை, சங்கை பொருந்திய இஸ்லாம் மார்க்கத்திற்கு விரோதமான காரியமென்றெண்ணிக்கொண்டு, அவர்கள் எனக்கு மாற்றஞ் செய்ய நாடினார்கள். நான் அதை யறிந்து, அவர்களை வஞ்சிக்



காமல் அவர்கள் பிரியப்படிக்கு விட்டுவிட்டு, நான் அவர்களுடைய கலகத்தைவிட்டும் ஒழிந்திருப்பதற்கான ஒரு சூழ்ச்சியெடுத்தேன். அச்சூழ்ச்சி எனக்கு பிரயோஜனத்தைத் தருமென்பதற்குத் தடையில்லை. அதாவது, யுத்தத்தில் முன்வைத்த காலைப் பின்வாங்காத, மஹா வீரர்களையுடைய சூதான் தேசத்தைப் பிடிப்பதற்காக, என் மகன் இஸ்மாயீலின் கீழ், மேற்படி அல்பானிய, துருக்கிய போர்வீரர்களை அனுப்பியிருக்கிறேன். அப்போரில் அவர்கள் நாசமடைந்தால், அவர்களுடைய தீங்கை விட்டும் ஒழிந்திருப்பேன்.

"அவர்களை சூதானுக்கனுப்பிய பின்னர், மிஸ்று வாசிகளில் போர்ப் பயிற்சிக் கிணக்கமானவர்களைக் கண்டெடுத்து, பிரான்ஸிய படைத் தலைவர்களைக்கொண்டு அவர்களின் ஒழுங்குப்படிக்குப் பழக்கியிருக்கிறேன். இக்கூட்டத்தார், போர்த்தொழிலைநன்றாகக் கற்றுக்கொண்டது மல்லாமல் எனக்கு இரம்ப வழிப்பட்டும் நடக்கிறார்கள்" என்று கூறினார். அமீர்பஷீர், முஹம்மதுஅலி பாஷாவின் இராஜ தந்திர யூகத்தைக் கேட்டு வியப்படைந்து, "இப்படிப்பட்ட பாஷாவுக்கு இந்தேசத்தாரும், ஏனைய தேசத்தாரும் வசப்பட்டு நடப்பது ஆச்சரியமல்ல" வென்று தன்னுக்குள் தானாகச் சிந்தித்து, அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, மனமகிழ்ச்சியுடையவராகத் தானிருக்கு மாளிகைக்கு வரப்பிரயாணமாகிவரும் வழியில், சுலைமானின் பெண்சாதி ஸல்மாநாயகி அவருக்கு நெருங்கிய பெந்துவி யுள்ளவர்களாகையால், அவர்களையும், அவர்களின் புத்திரர்களையும் பார்க்கவேண்டுமென்கிற வாஞ்சை அவருக்குண்டாகி, சுலைமான், அவருடைய பெண்சாதி பிள்ளைகளைத் தேடச் சென்று மூன்று நாளாகிறதே, அவருடைய காரியம் எவ்வாறாயினதோ, எனச் சிந்தித்தவராக வந்து சேர்ந்தார். அப்போது சுலைமான் அங்கு வந்திருக்கக் கண்டார். ஆனால், அவர் முகவாட்டமுடையவராகவும், மனக் கலக்கமுடையவராகவுங்காணப்பட்டார். அப்போது அமீர்பஷீர் சுலைமானிடத்தில் "நீர் நாடிச்சென்ற காரியம் யாதாயிற்று?" என்று கேட்டார். அதற்கவர், "நாயகமே! மூன்று நாள் வரையில் இவ்வூர் முழுதுஞ் சுற்றிப் பார்த்துத் தேடினேன். அவர்களைக் காணக்கூடவில்லை. அவர்களின் சங்கதியைக் குறித்து அறிவிப்பாருமில்லை. அதனாலேயே என்னைத் தாங்கள் கலக்கம் பிடித்த ஒருவனாகக் காணுகிறீர்கள். அதற்கென்ன

செய்வே னென்பதும் எனக்குப் புலப்படவில்லை'' யென்றுகூறி, நான் என்ன செய்வேன் ? என்ன செய்வேன்?'' என்று ஓலமிட் டலறி யழுதார்.

அமீர்பஷீர் சுலைமானுக்குத் தேறுதற் சொல்லி அவர்மனதைப் பதப்படுத்த முயற்சித்தார். அதற்கவர், "நாயகமே ! என் பெண் சாதி யிருக்குமிடத்தை நான் அறிகிற வரையில் எவ்விதமானதேறு தலும் எனக்குப் பிரயோசனந் தரமாட்டாது. அப்பெண் துன்ப மடைய நேரிட்டதற்கு நானே காரண கர்த்தாவா யிருக்கிறேன். இராஜ வம்சத்தார்கள் சங்கரிக்கப்பட்ட அன்று மட்டில் என் பெண்சாதியையும், பிள்ளையையும் கண்டதாகவும், அதற்குப்பிறகு ஒருவருங் காணவில்லையென்றுஞ் சொல்லுகிறார்கள். ஆகையால், இனிமேலும் இத்தேசத்தி லிருக்க எனக்குப் பொருத்தமில்லை. நான் ஜீவித்திருப்பதைக்காண மரணத்தை யனுபவிப்பதே உத்த மம். முஹம்மதுஅலி பாஷாவிடத்தில் நான் மன்னிப்பை ஆதரவு வைத்திருந்தது அப்பெண்மணியைச் சந்திப்பே னென்னும் வாஞ் சையினலேயே. சந்திக்கமாட்டேனென்றறிந்திருந்தால்ஜீவித்திருக்க மாட்டேன். முன்னிருந்தது போலவே, மன்னிப்புப்பெறுதிருந்து விட்டால் மெத்த நலமாக விருக்குமே'' யென்றார். அதற்கு அமீர் பஷீர், "சுலைமானே! இக்காரியத்தை நீர்பெரிதாகஎணவேண்டாம். இத்தேசத்தி லிருக்க வுமக்கு மனமில்லாது போனல், நம்முடைய சுதேசத்திற்கு உம்மைக்கொண்டு சென்று, மேன்மையுடன் வைப் போ''மென்றார். அதைக்கேட்டு, சுலைமான் பெருமூச் செறிந்து, "நாயகமே ! கூடாது, கூடாது. கற்பனை யென்னுங் கரத்தால் என்னை விட்டும் பிரிக்கப்பட்ட ஸல்மாநாயகியை நான் அப்புறப்படுத் திய தேசத்தனவில் அவர்களில்லாமல் நான்மட்டிற் போவதற்கு ஒருக்காலுந் துணியமாட்டேன். இனி நான் எங்குசெல்வேனென் பதையும் அறியமாட்டேன்.'' என்று சொல்லி யெழுந்து, அமீர் பஷீரின் கையை முத்தமிட ஆரம்பித்தார். அமீர்பஷீர் சட்டென்று கையை யிழுத்துக்கொண்டார்.

அப்போது சுலைமான் அமீர்பஷீரைப் பார்த்து, "வனுப்பங்கீ கிய அமீரே ! தாங்கள் எனக்குச் செய்த பேருதவியை ஒருக்காலு மறக்கமாட்டேன்'' என்று மொழிந்து, அமீர் கலீலையும், அமீர்



அமீனையும் முத்தமிட்டு, தன் முகரூபத்தைக் கொப்பான, ஸலீமுக் கினையா யிருக்கிற கரீபை அதிகமாக முத்தமிட்டார்.

(இப்புத்தகத்தை வாசிப்பவர்கள், கரீபின் தாயார் ஜமீலாநாய கிக்கு சுலைமானே புருஷனென்பதை அறிந்து கொள்ளுவார்கள். அவர் மிஸ்றை விட்டுப் புறப்படுங் காலத்தில் கரீபு கருப்பத்தி லிருந்ததால், அவரைத் தன் புத்திரரென்றறிந்து கொள்ளவில்லை. கரீபும், அமீர்பஷீரைத் தவிர தனக்கு வேறே தகப்பனுண் டென் பதை அறியமாட்டார். ஜமீலாநாயகி இன்ன வூரிலிருந்து வந்த வர்களென்னும் உண்மையை அமீர்பஷீரும்அறியமாட்டார். ஆனல், அமீன்பே எடுத்தோதிய சமாச்சாரங்களால், ஸல்மாநாயகி, ஜமீலா வாக இருக்கப்போதும் என்கிற சந்தேகம் அவருக்குண்டா யிருக் கக்கூடும். ஆயினும், ஜமீலாநாயகி, சைதாவிலுள்ளவர்க ளென்று சொல்லி யிருப்பதினலும், ஜமீலாநாயகி, ஸல்மாநாயகியா யிருப் பார்களானல் தன்னுடைய அந்தரங்கம் வெளியாவதைப் பயந்து, ஒருபோதும் தன் சுதேசத்திற்கு வரமாட்டார்களோ என்பதின லும் அச்சந்தேகம் நீங்கி யிருக்கவும் போதும்.)

மேலே கூறியபடிக்கு சுலைமானென்றழைக்கப்படுகிறபிரின்ஸ் அமீன்பே அமீர்பஷீரின் கையை முத்தமிட்டு வெளிப்பட நாடிய போது, "இம்முத்துதலின் கருத்தென்ன?'' வென்று அவரை அமீர் பஷீர் வினவினர். அதற்கவர், "இதோ, நான் வெளியே போகப் போகிறேன். நான் இன்னது செய்யவேண்டு மென்னும் சுவரனை யின் ஊசாட்டம் எனக்குண்டாகும்படிக்கு கடவுளைப் பிரார்த்திக் கிறேன். அன்றியும், மற்றொருமுறை தங்களின் சமுகத்துற்று தரிசனை புரிய கடவுள் கற்பிக்காமலிருப்பதைப் பயப்படுகிறேன். அப்படிக்கில்லாமல் மறுமுறையும் தங்களைச் சந்திக்கும்படிக்கு கடவுள் கருணை புரிவாராக'' என்று சொல்லிவிட்டு திரும்பிப்பாரா மல் சரேலென்று வெளியே நடந்து விட்டார். அவருடைய விஷ யத்தில் அமீர்பஷீர் மெத்த ஆலோசித்தார். அவர் சரேலென்று புறப்பட்டது அமீர்பஷீருக்கு மனவருத்தத்தை யுண்டாக்கின போதிலும், அவர்பேரில் அமீர்பஷீர் வைத்திருந்த கடந்த பட்சத் தினல், அவர் மனக்கவலையால் அப்படிக்குப் போயிருக்கக் கூடு மென்று தன் மனதை ஒருவாறு சமாதானப் படுத்தியதுடன், தன் பெண்சாதியை யின்னமுந் தேடிப்பார்க்க வேண்டுமென்னும் எண்

னைத்தால், தானறிந்த இடத்திற்குப் போயிருக்கக்கூடு மென்றும் எண்ணிக்கொண்டிருந்து விட்டார். அமீரின் புத்திரர்களும், கரீபும் சுலைமானின் அந்தரங்கவிஷயங்களை அறியாதவர்களானதால், அவர் சொல்லிய சொற்களின் சாராம்சத்தை யறிந்துகொள்ளவில்லை.

சில நாளைக்குப் பிறகு, வியனாவிலிருக்கிற ஜமீலாநாயகி அமீர்பஷீருக்கு ஒரு நிருப மனுப்பினார்கள். அக்கடிதத்தில், இதற்கு மேலும் கரீபை விட்டுப் பிரிந்திருக்கத் தனக்குப் பொறுதியில்லை யென்றும், அவரைப் பார்க்க அதிக தேட்டமாக விருப்பதால் சீக்கிரத்தில் வியனாவுக் கனுப்பிக்கவேண்டு மென்றும் இரம்ப வணக்கத்துடன் கேட்டெழுதி யிருந்தார்கள். அமீர்பஷீர் கரீபை அழைத்து, "உம்முடைய பிரியம் எவ்வா"றென்று கேட்டார். அதற்கு கரீபு "என் அருமைப் பிதாவே! நான் பைத்துத்தீனுக்குப்போய், என் தாயாரைப் பார்க்க இரம்ப வாஞ்சையுடையவனாகவே யிருக்கிறே"னென்றார். உடனே அமீர்பஷீர், தன் மனிதர்களுட் சிலரை அவருக்குத் துணையாக்கி, மிகுந்த ஜாக்கிரதையுடன் கரீபை பைத்துத்தீனுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமென்று ஆக்ஞாபித்தார். கரீபு அமீர்பஷீருடைய கையை முத்தமிட்டு, தன் சகோதரர்களைக் கட்டித்தழுவி கண்ணீர்வடித்து, விடைபெற்றுக்கொண்டு பிரயாணமானார்.

(இவ்விடத்தில்)

(பிரின்ஸ் அமீன்பேயைக் குறித்துச் சில பேசுவோம்.)

அவர் அமீர்பஷீரின் சமுகத்திருந்து வெளியாகி, நேரே முஹம்மதுஅலி பாஷாவின் அரண்மனைக்கு வந்து, அவரைத் தெரிசிக்க வுத்தரவு தேடினார். உத்தரவு கொடுக்கப்பட்டது. அவர் உள்ளே வந்து, மிகுந்த மரியாதையுடன் வந்தன வாழ்த்துக்கூறி, முஹம்மதுஅலி பாஷாவின் கையை முத்தமிட்டு, அவர், தனக்கு மன்னிப்பளித்ததற்காக அவருக்குத் துதிசெலுத்தி, "மாட்சிமை தங்கிய பாஷாவே! நான் இத்தேசத்தில் வாசஞ் செய்யவும் தொழுக்குப்போய் வசிக்கவும் மனமில்லாதவனாக, இதோ, தங்கள் சமுகத் தடைந்திருக்கிறேன். தங்களின் பணிவிடைக்காரர்களுள் ஒருவனாக என்னைமதித்து, மரணம் அதிகமாகவுண்டாகுந் தலத்திற்கு, தங்களின் பணிவிடையின்பேரில் என்னை அனுப்பிக்கவேண்டும்.



என் அருமையான பெண்சாதி பிள்ளைகளை யிழந்த பிறகு நான் ஜீவனோடிருப்பதைவிட, மரணத்தை அநுபவிப்பதே பெரிதாகத்தெரிகிறது. நான் தற்கொலை புரிந்து கொள்ளவும் நினைத்தேன். தற்கொலை புரிந்து கொள்ளுகிறது ஆண் பிள்ளைகளின் இலக்ஷணமல்லவென்று என் மனம் எனக் கறிவித்தபடியினாலே, அவ்வெண்ணத்தைநீக்கி, அதைப்பற்றி தங்களிடத்தில் முறையிட்டுக்கொண்டால் ஏதேனும் ஓர் யுத்தத்திற் கனுப்பிப்பீர்களென்றும், அங்கே ஒரு மணித்தியாலமாவது போர் புரிந்து, மரணத்தை யனுபவிக்கலாமென்றும், தற்கொலை செய்துகொள்வதைவிட இதுவே தகுந்த யுக்தி யென்றுந் தீர்மானித்துத் தங்கள்சமுகத்தடைந்தே"னென்று கூறி, வேண்டி நின்றார்.

அவரின் சஞ்சலமான சொற்களை முஹம்மதுஅலி பாஷா கேட்டு மனமிரங்கி, அவ்வெண்ணத்தை விட்டொழிக்கும்படிக்கு இரம்பவெல்லாம் சொல்லியும் அச்சொற்கள் பயன்தரவில்லை. பிறகு, முஹம்மதுஅலி பாஷா அமீன்பேயைப் பார்த்து, "நீர் நாடிய படிக்குக் கட்டாயம் போகத்தான்வேண்டுமென்றிருந்தால், தற்போது, என்புத்திரர் இஸ்மாயீலை சூதானியருடன் போர்புரிந்து அத்தேசத்தைக்கொற்றங்கொள்ள அனுப்பியிருக்கிறேன்; அத்திசைக்கு உம்மையு மனுப்புகிறேன். இன்றைக்கு அல்பானிய போர்வீரர்களில் ஒருவகுப்பினர் அங்கு செல்லவிருக்கின்றார்கள்" என்று கூறவே, அமீன்பே, "நாயகமே! என் முழுஎண்ணமும் இதுவே. ஆனால், என்னிரகசியம் வெளிப்படாதிருப்பதற்காக, என் சுய நாமங் கொண்டென்னை யழைக்காமல் 'சுலைமான்' என்றழைக்கும் படிக்குக் கேட்டுக்கொள்ளுகிறே"னென்றார். அதற்கு முஹம்மதுஅலி பாஷா, "நல்ல"தென்று சம்மதிகொடுத்து, அவரை ஒரு ஆபீஸராக நியமித்து, பிரயாணமாகவிருக்கிற அல்பானிய போர்வீரர்களுடன் போய்ச்சேர்ந்து கொள்ளும்படிக்குக் கட்டளையிட்டார். சுலைமான் முஹம்மதுஅலி பாஷாவிடத்தில் விடைவாங்கிக்கொண்டு புறப்பட ஆரம்பித்தார். முஹம்மதுஅலி பாஷா "சுலைமானே! ஜயம்பெற்று, சந்தோஷத்துடனே திரும்பிவரக்கடவீ"ரென்று ஆசிகூறியனுப்பினார். அன்று சூதானுக்குப் பிரயாணமான போர்வீரர்களுடன் சுலைமானுஞ் சேர்ந்து சென்றார். சுலைமான் சூதானுக்குப் போனதை, அமீர்பஷீர் முதலானவர்கள் அறியமாட்டார்கள்.

(இனி ஜமீலாநாயகி யைக்குறித்துப்பேசுவோம்.)

கரீபு, ஜமீலா நாயகியை விட்டுப் பிரிந்தது முதல், அவர்களுக்கு சரியான ஊணுறக்கங்கிடையாது. எப்போதும் தன் புத்திரனை நினைப்பதும், அவரின் கடிதத்தை வழிபார்ப்பதுமே அவர்களுடைய வேலை. கரீபுடைய கடிதங்கிடைத்தால், நித்திரை விடுக்குமுன்னரே அதைமுத்தமிட்டு, கண்களிலொற்றிக் கொண்டபிறகுதான் பிரித்து வாசிப்பார்கள். விசுவாசமும், நன்றி யறிதலுமுடைய அடிமை ஸயீது, ஜமீலாநாயகிக்குத்தேறுதல் கூறிவருவான். அவர்கள் தன் அந்தரங்கங்களை அவனிடத்திலேயே அல்லாமல் மற்றவர்களிடத்தில் வெளிப்படுத்தமாட்டார்கள். அப்படியிருக்கும்போது கரீபுடைய மூன்றாவது நிருபங்கிடைத்தது. அதில் காஹிறாவைச் சுற்றிப்பார்த்த விவரமும், ஸர்கேஷிய அரசவமிஷத்தார்கள் கொல்லப்பட்டவிவரமும், அவ்வமீர்களுளொருவர் அச்சதியாலோசனைச் சபைக்கு கொஞ்சம் பிந்திச் சென்றமையால், அவர்மட்டில் பிடிக்குத்தப்பிப்பிழைத்தோடிவிட்டாரென்றும் எழுதப்பட்டிருந்தன. அதைப்பார்த்தபோது, ஜமீலா நாயகியின் இருதயம் ஒருமுறை திரும்பிற்று. உடனே ஸயீதைவரவழைத்து அந்நிருபத்தை அவன் கையிற்கொடுத்தார்கள். அவன் அதை வாசித்துப்பார்த்து, தலைகுனிந்தவனாகச் சற்றுநேரம் யோசித்திருந்து, தலையைநிமிர்த்தி ஜமீலா நாயகியைப் பார்த்து, "என்எஜமானியே! தப்பியோடியவர் என்னெஜமான் பிரின்ஸ் அமீன்பே யாயிருக்கப்போது" மென்றான். என்னவே, ஜமீலா நாயகி, சன்ன முத்துக்களைப்போல கண்ணீருதிர அழுது, "ஸயீதே! அக்கடிதத்தை வாசிக்கும்போது யாதுகாரணம்பற்றி என்மனம் துணும்பிற்றென்பதை நானறியமாட்டேன். அதன் உண்மையை அறிதற்கு நாமென்ன செய்யலா" மென்று யோசித்தார்கள்.

ஸயீது:——என் எஜமானியே! நாம் அமீர்பஷீருக்கெழுதிக் கேட்டால், நமக்கு அவர் விபரந் தெரிவிப்பதுடனே, தப்பியோடியவர் நாம் எண்ணியவராயிருந்தால், அவர்விஷயத்தில் நமக்குதவியுஞ் செய்வார்.

ஜமீலா நாயகி:——(ஹா! ஹா!! என்னும் சஞ்சலச்சொற்களைக் கூறி,) ஸயீதே! நாம், நம்முடைய அந்தரங்கத்தை அவர்களுக்கு மறைத்திருப்பதால், நான் பயப்படுகிறேன்.



ஸயீது:——நம்முடைய இரகசியத்தை இப்போது அவர்களுக்குத்தெரிவிக்க என்னதடை? நாம்தெரிவித்தால், நாம்மறைத்ததைக்குறித்து மன்னித்து, நமக்கு உதவியும் புரிவார்களென்று நம்புகிறேன்.

ஜமீலாநாயகி:——(பெருமூச்செறிந்து அழுது, சற்றுநேரம் மவுனமுற்றிருந்து,) ஸயீதே! மற்றொரு விஷயத்தைப்பற்றி நான் பயப்படுகிறேன்.

ஸயீது:——அஃதென்ன?. தங்களுடையவிஷயத்தில் நானறியாத வேறேயாதும் உண்டோ?

ஜமீலாநாயகி:——ஆம்; அந்த இரகசியத்தை யிதுவரையில் நான்உன்னிடத்தில் சொல்லவில்லை.

ஸயீது:——(அதைக் கேட்டு பிரமிப்படைந்து,) அஃதென்ன?

ஜமீலாநாயகி:——அது, நான் சிறுவயதிற்செய்ததவறு. உன் வழக்கப்பிரகாரம் இவ்விரகசியத்தையும் மறைத்து வைக்கிறதாக நீ வாக்களிக்கிறவரையில் நான் சொல்லமாட்டேன்.

ஸயீது:——என் எஜமானியே! நான், தங்களுடைய விசுவாசமுள்ள அடிமையென்பதை தாங்கள் அறிந்திருப்பதால் என்னிடத்தில் விசுவாசம் வைப்பது தங்களின் கடமை. தாங்கள் நாடியபடிக்கே நான் வாக்களிக்கிறேன்.

ஜமீலாநாயகி:——ஸயீதே! நீ எண்ணிக்கொண்டிருப்பது போல, நான் ஸர்கேஷிய அரச வமிசத்திலுள்ளவளல்ல. பனீ ஷிஹாபு சந்ததியிலுள்ளவள்.

ஸயீது:——(இதைக்கேட்டு பிரமிப்படைந்து,) தாங்கள், நாயகம் அமீர்பஷீரின் குடும்பத்திலுள்ளவர்களோ?

ஜமீலாநாயகி:——ஆம்; நாம் மிஸ்றைவிட்டு வரும்போது, லிபனோன் தேசத்துக்கு வரும் விஷயத்தில் உன்னைவிட எனக்கு அதிகப்பிரியமுண்டாயிருந்தது ஞாபகமிருக்கிறதா?

ஸயீது:——ஆம்; தாங்கள் என் எஜமானுக்கு எவ்விதத்தில் மனைவியானீர்கள்?

ஜமீலாநாயகி:—நான் இவ்வூரிற் கடுத்த ஒரு சிற்றூரிலுள்ள ஓராமீரின் புத்திரி. என் தகப்பனார் காலஞ்சென்றுவிட்டதாகக் கேள்வி. கடவுள் அவர்களுக்கு பாவ மன்னிப்புக்கொடுத்தருள்வாராக. அனுத்தினையும் சமீபத்திலிருக்கவும், வெறுத்துப் பார்க்கவும் எனக்குப் பொருத்தமற்ற, என் சிறிய தந்தையரின்மக்களுள் ஒருவருக்கு என்னை விவாகஞ் செய்து கொடுக்க, என் தந்தையார் நாடினார்கள். அவ்விஷயத்தை நான் முற்றாக வெறுத்தேன். நான் பிறந்த வீட்டில் எனக்குக் கொப்பூழ் கொய்தது முதல், என்னை அவருக்கே விவாகஞ் செய்து கொடுக்கிறதென்று என் தந்தையார் என் சிறிய தந்தையருடன் வாக்குத் தத்தஞ் செய்திருக்கபடியினாலே, அவருக்கே என்னை வாழ்க்கைப் படுத்த ஒரே பிடிவாதம் சாதித்துக்கொண்டிருந்தார்கள். நான் பலமுறை என் தந்தையாரிடத்திற் சென்று, "தந்தையரே! என்பேரில் கிருபை கூர்ந்து, குறித்த அம்மனிதனுக்கு என்னை விவாகஞ் செய்து கொடுக்காதிருக்க வேண்டு" மென்று, இரம்பக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். அப்போதும் என் தந்தையார், தன்னுடைய பிடிவாதத்தை விட்டார்களில்லை. அப்போது, "நான் உங்களுடைய நாட்டத்திற்குத், தீங்கு விளைக்காதிரே" னென்று என் மனசுக்குள்ளேயே நிர்மாவப்படுத்திக் கொண்டு மௌனமாக விருந்து விட்டேன்.

"அச்சமயம் எனக்கு வயது 13ஆக விருந்தது. அப்படியிருக்கும்போது, பிரான்ஸியர் மிஸ்ஸறைப் பிடித்துக்கொண்டதினாலே, ஸர்கேஷிய அரசவமிசத்து அமீர்களுள் சிலர் இத்திசைக்கோடி வந்தார்கள். அவர்களுள் உன்னெஜமானும் ஒருவராகவிருந்தார்கள். ஒருநாள் நான் அவர்களைக் கொடிமுந்திரிகைத் தோட்டத்திற் கண்டேன். தயாள குணமும், சவுந்தரியமும் உடைய வாலிபராக என் கண்ணுக்குத் தோற்றப்பட்டார்கள். எனக்கும் அவர்களுக்கும்பொருத்தசம்பந்தமில்லாதிருந்ததால், நான் அவர்களுக்கு வாழ்க்கைப்படவேண்டுமென்ற எண்ணம் அறவே என் மனதில் ஊசாடவில்லை. பின்பொருநாள், என் தந்தையார் என்னையழைத்து, அவர்களுடைய நாட்டப்படிக்கு என் சிறிய தகப்பனாரின் மகனுக்கு என்னை வாழ்க்கைப்படுத்துங் காலஞ் சமீபித்து விட்டதென்று சொன்னார்கள். அதற்கு நான் யாதொரு மறுமொழியுஞ்சொல்லாதிருந்தேன். அதனால் நான் சம்மதித் திருப்பதாகவே அவர்கள்



கருதிக்கொண்டிருந்தார்கள். சற்று நேரத்தின் பின்னால், அவர்கள் வெளியே போய்விட்டார்கள். அதன் பின் நான் தனியேயுட்கார்ந்து, என்னுடைய காரியத்தைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்தேன். எனக்குப் பொருத்தமில்லாதவருக்கு என்னை விவாகஞ் செய்து கொடுக்கப்போகிற விஷயத்தில் அதிக மனச் சடைவும், வெறுப்பும் எனக்குண்டாயிற்று. அப்போதே, எங்கள் வீட்டிற்குச் சமீபத்திலிருந்த கொடிமுந்திரிகைத் தோட்டத்திற்கு நான் வந்து, அங்கிருந்து என் விவாக காரியத்தைப்பற்றிச் சிந்தித்தவளாக நெடுக நடந்தேன். பொழுதடைந்துவிட்டது. அதனால் ஓரிடத்தில் நின்றுகொண்டிருந்தேன். சில மனிதர்கள் குதிரைகளிலேறிப் போனார்கள். அவர்கள் எனக்குப்பிரயாணிகளாகத்தோற்றப்பட்டார்கள். அவர்களைக் கவனித்துப் பார்த்தேன். உன் எஜமானு [illegible] ர்களைச் சேர்ந்தவர்களுமாக விருந்தார்கள்.

அதனால் நான் திகைப்புற்றவளாக நின்றேன். நிற்கும்போது, அவர்களுள் ஒருவர் என் சமீபத்தில் வந்து, "திராட்சப்பழம் வாங்கவேண்டும். தோட்டக்காரன் எங்" கென்று கேட்டார். பல தடவைகளில் அம்மனிதரை நான் கண்டிருந்ததால், அவருக்கு நான் பயப்படவில்லை. அவர் என்னையின்னாளென் றறிந்துகொண்டு, "நாயகியே! ஏன், இங்கு நிற்கிறீர்கள்?" என்று கேட்டார். திராக்ஷைச் செடிகளைப் பார்த்துக் கொண்டே இவ்வளவு தூரம் வந்துவிட்டே" னென்றேன். "என்கூட வந்தால் தங்களின் மாளிகையிற் கொண்டுபோய்ச் சேர்க்கிறே" னென்றார். நல்லதென்று அவருடனே நடந்தேன். அவர் இன்னவிடத்திற்கு என்னைக் கொண்டுபோகிறாரென்பதை நானறியாதவளா யிருந்தேன். கொஞ்சநேரத்தின் பின், சில சனங்களிருக்கும் தலத்தில் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்தார். அவர்கள், நான் வந்ததைக் கண்டவுடனே ஏதேதோ, இரகசியமாகப் பேசிக் கொண்டார்கள்.

"சற்று நேரத்தின் பிறகு, உன் னெஜமான் என்னிடத்தில் வந்து, என்னை அவர்கள் விவாகஞ் செய்துகொள்ள நாடுகிறதாகச் சொல்லி, என்னிடத்தில் சம்மதந் தேடினார்கள். விவாகமென்பது இன்னதென்பதை நான் அறியாதவளாயிருந்தபடியாலும், வெட்கம் என்னை மிகைத்து விட்டபடியாலும் அவர்களுக்கு நான் மறு

மொழி கொடாமல் அழுதுகொண்டிருந்தேன். அவர்களெனக்குப் பலவித தேறுதலைச் சொன்னார்கள். என் தந்தையர் மீது நான் கொண்டிருந்த கடுங் கோபத்தினாலும், அவர்கள் என்னை வீழ்த்தாட்டக் கருதியிருந்த படுகுழியை விட்டும் நான் காப்பாற்றப்பட விருந்த எண்ணத்தினாலுமே, உன்னெஜமானியின் கேள்விக்கு மறுமொழி கொடாது மௌன முற்றிருந்தேன். அப்போதும் அவர்கள் எனக்குப் பலவிதத் தேறுதல் கூறி, அவ்விரவே அவர்களுடன் என்னைக் கூட்டிக்கொண்டு, அதிவேகமாகக் குதிரைகளை நடத்திச் சென்றார்கள். சில நாட்களின் பிறகு, ஜைதாவுக்குப் போய்ச் சேர்ந்தோம். அவ்வூரில் உன்னெஜமான் என்னை, நம்முடைய சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கச் சட்டப்படிக்கு விவாகஞ் செய்துகொண்டார்கள். அங்கிருந்து மிஸ்றுக்குப்போகும்போது, என்னையுங்கூடவே கொண்டு சென்றார்கள். மிஸ்றில் சிலகாலமிருந்தோம். அதற்குப்பின் நடந்தவை நீ அறிந்தவைகளே. அந்தரங்கம் வெளியானால் நான் அதிக சங்கடத்திற் சிக்கிக்கொள்வேனென்பதைப் பயந்தே, மறைத்து வைத்திருந்தேன். இச்சங்கடமாகவே, என் தந்தையரும், லீபனானின் அதிபதியாயிருந்த அமீர்பஷீரும், என் இரத்தத்தைச் சிந்தவைப்பதை ஆமாக்கி வைத்திருந்தனவே," என்றார்கள்.

ஸயீது:—(ஜமீலா நாயகியின் அந்தரங்கத்தில் தானறியாத இவ்வாசகத்தைக் கேட்டு பிரமிப்படைந்து,) என்னெஜமானியே! தாங்கள் இந்த அமீர்பஷீரவர்களின் நெருங்கிய பெந்துவாயிருப்பீர்களோ? பிரிந்தவர்களைச் சேர்த்து வைத்த கடவுளுக்கு துதி செலுத்துகிறேன். இப்போது நாம் என்ன செய்யவேண்டும்?

ஜமீலாநாயகி:—நம்முடைய கருமத்தை வல்லக் கடவுளிடத்தில் பாரஞ்சாட்டி, அழகான பொறுமையுடனிருப்பதைத்தவிர வேறு வழியில்லை. உன்னெஜமான் ஜீவந்தராக இருக்கக்கூடுமென்று நான் நம்புகிறேன். கடவுள், பொறுதி செய்தவர்களுடனிருப்பார். இப்போது, என் அருமந்தப் புத்திரன் கரீபை நினைத்து நினைத்து என்மனம் மிகவும் கலக்கமுறுகிறது.

என்று கூறி, ஜமீலாநாயகி தாரைதாரையாய்க் கண்ணீரொலித்தோட அழுதார்கள். அவர்களின் கலக்கம் நீங்கத் தகுந்த சமா



தான வார்த்தைகளை அவர்களுக்கு ஸயீது கூறி, அவர்களின் கலக்கத்தை ஒருவாறு தணித்து வந்தான்.

ஒரு நாளிரவு, ஜமீலாநாயகி ஒரு கனவுகண்டு, திடுக்குற்று பதறியெழுந்து ஸயீதை வரவழைத்து, "ஸயீதே! இன்றிரவு என்மகன் கரீபைப்பற்றி ஓர் கனவுகண்டு பதறி விழித்தேன். அக்கனவு, என் புத்திரனுடைய விஷயத்தில் எனக்குத் திடுக்கத்தையும், கலக்கத்தையும் விளைத்துக்கொண்டே யிருக்கிறது. இனிமேலும் என்னால் பொறுதி செய்தற்கேலாது. ஆகையால், கரீபு பேரிலெனக்குண்டாயிருக்குந் தேட்டத்தைப் பற்றியும், கூடிய விரைவில் அவனையென்னிடத்திற் கனுப்பிக்க வேண்டுமென்றும் நானெழுதுவதாகப் போல, அமீர்பஷீரவர்களுக்கு ஒரு நிருபமெழுதுவாயாக. என் சலிப்பை ஆற்றக்கூடிய புத்திரன் அவனே யொழியவேறில்லை. கடவுள் அவனைக் காப்பாற்றி, நான் அவனைக் காணற்கு உதவிபுரிவாராக" என்றுகூறி பெருமூச் செறிந்தார்கள். உடனே ஸயீது, தன் எஜமானியின் கட்டளைப்படிக்கு நிருபமெழுதி, மேல்வரிபொறித்து, மஞ்சள் பட்டிற் பொதிந்து, அமீர்பஷீருக் கனுப்பப்படுங் கடிதங்களுடன் சேர்த்தனுப்பினான்.

(கரீபு காஹிறாவிலிருந்து)

(பைத்துத்தீனுக்கு வந்ததைப் பேசுவோம்.)

ஜமீலாநாயகியின் கடிதஞ் சென்ற, சில வாரங்களுக்குப் பின் ஒருநாள், அமீர்கரீபு பைத்துத்தீனை நெருங்கிவந்துவிட்டாரென்னும் நற்சமாசாரம், அங்குள்ளவர்களுக்குக் கிடைத்தது. அவ்வூர் வாசிகள் கரீபுபேரில் மிகுந்த பிரீதியுடையவர்களாகையால், அவர்களுள் அநேகர் கரீபை யெதிர்சென்றழைக்க வந்தார்கள். ஸயீது முன் வரிசையிலிருந்தான். அமீர்கரீபு பைத்துத்தீனுக்குள்ளானதும் அவரின் சங்கைக்காக அநேக வெடிகள் தீர்க்கப்பட்டன. ஸயீது, தன்னெஜமானாகிய கரீபை முத்தமிட்டு, அவர் க்ஷேமத்துடன் வந்துசேரச்செய்த கடவுளுக்குத் துதி கூறினான். பின்பு அங்கு வந்தவர்களடங்கலும் ஒவ்வொருவராக கரீபின் கையை முத்தமிட்டு, அமீர் கலீல், அமீர் அமீன் அமீர்பஷீரின் க்ஷேமத்தைப் பற்றியும், "சகல முதலானவர்களின் சுகத்தைப் பற்றியும் விசாரித்தார்கள்.

றும் சுகத்துட னிருக்கிறார்கள். சீக்கிரத்தில் இங்கு வந்து சேர்வார்கள்" என்று விடை யளித்துவிட்டு, ஸயீதுடன் தன் தாயாரின் அந்தப்புரத்தை முன்னோக்கிச் சென்றார்.

மாளிகை வாசலில் மகனின் வருகையை வழி பார்த்துக் கொண்டுநின்ற ஜமீலாநாயகி, கரீபைக் கட்டி யணைத்து, பன்முறை முத்தமிட்டு, ஆனந்தக் கண்ணீரொலித்தோட, தன் புத்திரன் கரீபை உள்ளுக் கழைத்துச் சென்றார்கள். அந்தப்புரத்திலுள்ள அமீர்பஷீரின் மனைவியர் முதலானவர்கள் கரீபைமுகந்து, க்ஷேமாதிசயங்களைப்பற்றி விசாரித்தார்கள். மெல்லினமான தொனியால், இனிமையான வாக்கால், நாகரீகமான பாஷையால், சமாளமான முகத்தினராக, "சகலரும் யாதோர் குறைவின்றி சுகத்துட னிருக்கிறார்கள். சீக்கிரத்தில் நாம் கண்டுகொள்ளக் கடவுள் உதவிபுரிவாராக" என்று மறுமொழி கொடுத்தார். அவர் பேசிய நாகரீகமான பேச்சுகளைக் கேட்ட சகலரும் வியப்பும், பிரமிப்பும் அடைந்து, அவரின் மிருதுவான உதட்டின் அசைவைப் பார்ப்பவர்களாக விருந்தார்கள். சற்று களையாறிக்கொண்டு, தாயாருடைய கட்டளைப்படிக்கு ஸ்நானஞ்செய்து, வேறுவுடையணிந்து, தாயாரின் அருகில் கரீபு உட்கார்ந்தார். ஜமீலாநாயகி, கரீபின் சிரசில்ஓர் தழும்பிருக்கக்கண்டு, கூர்க்கப்பார்த்து, "மகனே! இதென்ன காயம்?" என்று கேட்டார்கள். கரீபு, "தாயாரே! இக்காயத்தின் வரலாற்றை இன்றிரவு விவரித்துக் கூறுகிறேன்" என்றார். ஜமீலாநாயகி அக்காயத்தை உற்று நோக்குவதும், அதைக்குறித்து கைசேதப்படுவதும், இரவைவழி பார்ப்பதுமே அலுவலாக விருந்தார்கள். ஜமீலாநாயகி, இரவானவுடனே கரீபுக்கு இராப்போஜனம் வட்டித்தாயின பிறகு, படுக்கையறைக்குள் அவரை யழைத்துக்கொண்டு சென்று, தனக்குச் சமீபத்தி லுட்காரச் செய்து, காயத்தின் காரணத்தைக் கேட்டார்கள். கரீபு, பனீசுவையின் எதிர்த்தகரைச்சமவெளியில்குதிரைச்சாரிவந்ததையும், தலைக்கடருடைய குதிரையிலேறி பாலைவனத்தானதையும், நாட்டறபிக் கரவர்கள் சூழ்ந்துகொண்டு, ஒருவன் தன் தலையில் தடிக்கொய்பாலடித்ததையும், முகப்போர்வையிட்ட கூடாரக்காரர், அதி யூக்கத்துடன் எதிர்த்து, தன்னைக்காப்பாற்றியதையும், அதற்குப் பின்னால் நடந்தவைகளையுஞ் சவிஸ்தாரமாக எடுத்துக் கூறினார். கரீபு சொல்லிக்கொண்டு வரும்போது, ஜமீலாநாயகி



மிருந்த கவன்மாய் காது தாழ்த்திக் கேட்டுக்கொண்டு வந்ததுடன், அவர்களின் நெஞ்சு படபடத்து, தன்னையறியாமல் அழுதுகொண்டு மிருந்தார்கள். ஆனால், கரீபைக் காப்பாற்றிய மனிதரை யின்னாரென் றறிந்துகொள்ள வேண்டுமென்னும் பேராசைமிகைப்பால், "மகனே! அம்மனிதர் இன்னாரென்பதை நீர் அறியமாட்டீரோ?" என்று கேட்டார்கள்.

அதற்கு கரீபு, "என் மாதாவே! அவரை நான் இன்னாரென் றறியமாட்டேன். அவர், தன்னுடைய கருமத்தை யெங்களிடத்திற் கூறப் பிரியப்படவுமில்லை. அவர் எனக்குச் செய்த பேருதவியை, என் தந்தையராகிய அமீர்பஷீர் செவியுற்றபோது, அவர்கள் உடனே அவரைப்போய்த் தரிசித்தார்கள். அவர், தன் வரலாற்றை என் தகப்பனாரவர்களிடத்தில் விவரித்து, அவர்கள்கூட பனீசுவைபுக்கு வந்தார். அங்கிருந்து, எங்களுடன் மிஸ்றுக்கும் வந்தார். அவர் பெரிய தொந்தரையில் சிக்குண்டவராக மட்டில் நான் விளங்கிக் கொண்டேன். மிஸ்றின் தேசாதிபதி முஹம்மதுஅலி பாஷா அவர்களிடத்து என் தகப்பனாரவர்கள் செய்த சிபாரிசினாலே அம்மனிதர் காக்கப்பட்டார். நாங்கள் அவரை யெமனுக்கு அழைத்துவர நாடி யிருந்தோம். ஒருநாள், அவர் எங்களிடத்தில் பயணவிடை வாங்கிக்கொண்டுபோனார். எங்கு சென்றாரென்பதை நாங்களறியமாட்டோம். அதற்குப் பிறகு நாங்கள் அவரைக்கண்டதுமில்லை" யென்று கூறினார்.

ஜமீலாநாயகி, அம்மனிதரின் செய்திகளைக் கேட்டபோது திடுகூறாக அவர்களுக் கோர்வித சந்தோஷமுண்டாகி, அவர் கரீபுடனே வந்திருந்தால் அவர் செய்த உதவிக்குப் பிரதி செய்யலாமே, என்றெண்ணி, அவரின் வாராமையை நினைந்துக் கைசேதமடைந்தார்கள். அவர்களுக்குண்டான சந்தோஷத்தின் காரணம்இன்னதென்பதை அவர்களறியாவிடினும், தன் மகன் கரீபு பிராணாபாயத்தினின்று காக்கப்பட்டுவந்ததனா லுண்டான பூரிப்பென்று கருதி யிருந்தார்கள்.

கரீபு, மிஸ்றில் தான் கண்ணுற்றவைகளைப்பற்றி ஜமீலாநாயகியுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கும்போது, கரீபின் கையில் அழகான பட்டுக் கைக்குட்டை யொன்றிருக்கக் கண்டு, அதைக்கூர்க்கப்

பார்த்தார்கள். அதனால் அவர்களி னிருதயந் துளும்பி, மயிர்க்கூச் செறிந்து, சரீரம் நடுக்கமுற வாரம்பித்தது. அப்படிக்காக விடாமல் தன்னைச் சமாளித்துக்கொண்டு, கரீபின் கையிலிருந்த கைக்குட்டையை வாங்கி விரித்துப் பார்த்தார்கள். அது, அவர்களின் புருஷர் பிரின்ஸ் அமீன்பேயுடையதாகவும், அதன் நான்கு தலையிலும் நடுவிலும் செய்யப்பட்டிருந்த சரிகைவேலை, தன்கைவேலையாகவு மிருப்பக்கண்டு, உணர்வற்று, கரீபை விளித்து, "மகனே! இக்கைக்குட்டை யெங்கிருந் துனக்குக்கிடைத்தது?" என்று கேட்டார்கள். அதற்கு கரீபு, "என் மாதாவே! இக்கைக்குட்டை, பாலைவனத்தில் என்னைக் காப்பாற்றியவருக்குடையது. என் சிரசிற்பட்ட காயத்திற்கு மருந்தமைத்து, இதனாலே கட்டியிருந்தார். இதை அவரிடத்தில் திரும்பக் கொடுக்க மறந்துவிட்டே" னென்றார். அதைப்பற்றி அதிகமாக விவரித்துக்கேட்க, ஜமீலாநாயகிக்குப் பிரியப்படாமலுந் துணியாமலும், வேறு விஷயங்களைக் கேட்பதில் பராக்காயிருந்து படுத்துவிட்டார்கள். "பொழுது புலர்ந்தவுடனே ஸயீதை வரவழைத்து, அவனிடத்தில் இச்செய்தியைப் பற்றி ஆலோசிப்போ"மென்றுபொறுதியுடனிருந்தார்கள். ஆனால், அக்கைக்குட்டையைக் கண்டது முதற்கொண்டு, அதிலேயே தன் சிந்தையைச் செலுத்தியவர்களா யிருந்தபடியினாலே, அன்றிரவு முழுதும் ஜமீலாநாயகி கண்ணுறங்கவே யில்லை.

அன்று விடியற்காலையில், தன்னெஜமானின் புத்திரர் கரீபைப் பார்ப்பதற்காக ஸயீது வந்தான். ஜமீலாநாயகியின் எண்ணத்தின் படிக்கு ஸயீது வந்துவிட்டபடியால், அவனைத் தனித்த வோரிடத் திற்கு அழைத்துச் சென்றார்கள். கரீபு, யாத்திரையின் அயர்வால், கண்ணுறங்கிக் கொண்டிருந்தார். ஜமீலாநாயகி, கரீபிடத்திலிருந்த பட்டுக் கைக்குட்டையை ஸயீதுக்குக் காண்பித்து, "இதை நீ அறி வையா?" வென்று கேட்டார்கள். ஸயீது அதைக் கண்டவுடனே ஓவென்றலறி, "இது, என்னெஜமான் பிரின்ஸ் அமீன்பே யுடைய தல்லவா? இது எங்கிருந்து கிடைத்த" தென்று கேட்டான். ஜமீ லாநாயகி, கரீபு சொன்ன சகல சம்பவங்களையும் ஆதிமுதல் அந் தம் வரையில் சொல்லிக் காட்டினார்கள்.



ஸயீது:—எஜமானியே! இவைகளைக்கொண்டு நம்முடைய எண்ணத்தை ஸ்திரப்படுத்தக் கூடுதில்லை.

ஜமீலாநாயகி:—இவ்விஷயத்துடன், கரீபு காஹிராவிலிருந்து எழுதிய மூன்றாங்கடித விஷயத்தையுஞ் சேர்த்து சீர்தூக்கிப்பார்.

ஸயீது:—அம்மனிதரின் பெயரை அறிந்தீர்களா?

ஜமீலாநாயகி:—நான் கேட்கவில்லை. கேட்க வேண்டியது முக்கியந்தான். அப்பெயர் சிக்கலை யவிழ்க்குமாதலின், கரீபு விழித்தவுடனே தெரிந்து கூறுகிறேன்.

கொஞ்ச நேரத்திற்குள்ளே, கரீபு விழித்தெழுந்தார். ஜமீலாநாயகி, "மகனே! இன்றிரவு நீர் சொன்ன சரித்திரத்தில் உம்மைக் காப்பாற்றியவரின் பெயரைச் சொல்லவில்லையே. அவர் நமக்குச் செய்த நன்றியைப்பற்றி நாம் நினைவு கூர்ந்திருப்பதற்காக, அவருடைய நாமத்தைத் தெரிந்து கொள்ளவேண்டுவது நம்பேரில்முக்கிய கடமையல்லவா?" என்று கேட்டார்கள். அதற்கு கரீபு, "ஆம். அவருடைய பெயர் சுலைமான்" என்றார். கரீபு, சுலைமானென்று சொன்னாலும், அப்பெயர், தன் புருஷருடைய பெயரல்லாததால், அம்மனிதர் அமீன்பேயா யிருப்பாரென்று எண்ணியிருந்த சந்தேகம், ஜமீலாநாயகிக்கு நீங்கிவிட்டது. "இக்கைக்குட்டை அம்மனிதர் கையில் எவ்வழியாகச் சேர்ந்ததோ" என்று நினைத்துக் கொண்டு, "அது எப்படியிருந்தாலும் சரியே. இக்கைக் குட்டையை, நம்புருஷனின் அறிகுறியாக வைத்து, அதின் வாடையை நாம் பெற்றுக்கொள்வதற்காக, இதை வெகு ஜாக்கிரதையுடனே வைத்திருக்க வேண்டு"மென்று தன்னுக்குள் தானே தீர்மானித்துக் கொண்டார்கள். ஜமீலாநாயகியின் கருத்துப்படிக்கே, ஸயீதும் ஒத் தோதினான்.

(இனி, அமீர்பஷீரைப்பற்றி வசனிப்போம்.)

அமீர்பஷீர், கி. பி. 1822-ம் ௵ பிறக்கும் வரையில் மிஸ்றிலேயே யிருக்கும்படிக்கு நேர்ந்தது. அப்போது, அப்துல்லாபாஷாவுக்கு உதுமானிய போர்ட் சங்கத்தாரிலிருந்து மன்னிப்புப் பத்திரம் வந்து விட்டதாக, மிஸ்று தேசாதிபதி முஹம்மதுஅலி பாஷா அமீர்பஷீருக்கு அறிவித்தார்கள். அமீர்பஷீர், முஹம்மதுஅலி

பாஷாவின் முயற்சிக்காக அவருக்குத் துதி செலுத்தி, தன் சுய
தேசம் சேர வுத்தரவு வேண்டினார். அதற்கு முஹம்மதுஅலி பாஷா
"அமீரே! தாங்கள் இன்னுஞ் சிலகாலம் மிஸ்றிலிருக்க விரும்பு
கிறேன். இக்கா கவர்னர், அப்துல்லாபாஷாவுக்கு மன்னிப்புக்
கிடைக்கும் விஷயத்தில் நான் முயற்சி யெடுத்த தெல்லாம் தங்கள்
மனதைத் திருப்திப்டையப் பண்ணுதற்கே யல்லாது வேறில்லை.
மேலும், தாங்கள் என்னிடத்தில் என் ஜேஷ்டபுத்திரர் இபுறுஹீ
மின் தகமைமி லிருப்பதால், நான் கேட்டுக் கொண்டபடிக்கு
இன்னுஞ் சிலகாலம் இம்மிஸ்றி லிருப்பதை நான் நாடுகிறேன்" னென்
றார்.

அதற்கு அமீர்பஷீர் முஹம்மதுஅலி பாஷாவுக்குத் துதிகூறி,
"நாயகம் உதுமானிய சுல்தான் அவர்களின் வலுப்பந் தங்கிய மந்திரி
யாராகிய பாஷாவே! தாங்களெனக்குச் செய்த வுபகாரத்திற்குப்
பிரதிசெய்ய, நான் சக்தி பெறப்போதும்." என்றார். அதன் பின்,
முஹம்மதுஅலிபாஷா அமீர்பஷீருக்கும் அவரின் மக்கள் மூவருக்
கும் அருமையான நான்குஅறபுக்குதிரைகளும், நான்குஉடைகளும்
(Medals) கீர்த்தி முத்திரைகளும் வெகுமதியளித்து, அமீரே! நம்
உதுமானிய கவர்ண்மெண்டாருக்குத் துரோகஞ்செய்துவரும்கிறேக்க
ருடன் யுத்தம் புரிந்து, அவர்களின் துரோகத்தை யடக்குதற்
காக, என் மகன் இபுருஹீமை, நாயகம் உதுமானிய சுல்தான் அவர்
களின் கட்டளைப்படிக்கு, (கிரீஸ்) கிறேக்க தேசத்திற்கனுப்ப நான்
நாடியிருப்பதால், தங்களுடைய மனிதர்களில் வீரத்தன்மையை
யுடைய 4000 பெயர்களை எனக்கனுப்பிக்கக்கூடுமானால் அனுப்பிக்க
வேண்டும். லிபனூன் தேசவாசிகள், போரில் வீரத்தன்மையும்,
துணிவும், யூகமும் உடையவர்களென்பதை நான் அறிந்திருக்கிறே"
னென்றார். அமீர்பஷீர், நல்லதென்று சம்மத வாக்களித்தார்.

பிறகு அமீர்பஷீர் முஹம்மதுஅலி பாஷாவிடத்தில் பிரயாண
விடை பெற்றுக்கொண்டு, காஹிறுவிலிருந்து தன் மக்கள் பரிவார
சகிதமாக (Alexandria) இஸ்கந்தரிய்யாவை முன்னோக்கி நடந்தார்
கள். அப்போது இஸ்கந்தரிய்யாவில் வாந்திபேதிக் குழப்பமா
யிருந்தபடியால், ஊருக்குள்ளே பிரவேசிக்காமல் வெளியில்தானைய
மிட்டிருந்து, கப்பலிலேறி இக்காவுக்குப் பிரயாணமாகி வந்து
சேர்ந்தார்கள். அப்போது இக்காப்பட்டணம் உதுமானியரால்



முற்றிக்கை யிடப்பட்டிருந்தது. இக்கா கவர்னர் அப்துல்லாபாஷா
வுக்குக் கிடைத்த மன்னிப்புப் பத்திரத்தை, முஹம்மதுஅலிபாஷா
தன் சேனைத் தலைவர் ஒருவரிடங் கொடுத்து, அவரை அமீர்பஷீர்
கூடவே அனுப்பி யிருந்தார்.

அச்சேனைத் தலைவர், மன்னிப்புப் பத்திரத்தை இக்காவை
முற்றிக்கை யிட்டிருக்கும் சேனாதிபதி யிடத்திற் காட்டினார்.
உடனே, முற்றிக்கை விடப்பட்டது. அமீர்பஷீரின் சங்கைக்காக
பிரங்கி வெடிகள் சுடப்பட்டன. அமீர்பஷீரும், அவருடன் வந்த
மற்றவர்களும் கரையேறியவுடனே, அமீர்பஷீர், தன் மக்களாகிய
அமீர் கலீலையும் அமீர் அமீனையும் பைத்துத்தீனுக்குப் பிரயாணப்
படுத்தி யனுப்பிவிட்டு, அப்துல்லாபாஷாவின்வேண்டலுக்கிணங்கி,
இக்காவில் சிலநாள் தங்கியிருந்தார்.

[illegible]ப்துல்லாபாஷா, தனக்காக இவ்வளவுதூரம் பிரயாசையெடுத்
துச் சென்று மன்னிப்பு வாங்கிக் கொடுத்த அமீர்பஷீருக்கு மிக
வும் துதி செலுத்தினார். மன்னிப்புக் கிடைத்த செய்தி லிபனூன்
தேசமுழுதும் பரம்பிற்று.

அமீர்பஷீரின் மக்களிருவரும் இக்காவிலிருந்து பைத்துத்தீன்
வந்து சேர்ந்தார்கள். அங்குள்ள குறிப்பான பெரிய மனிதர்கள்
அவர்களை வந்துகண்டு, சோபனங்கூறி, வந்தனஞ் செலுத்தி மீண்
டார்கள். கலீபு, தன் சகோதரர்களுடன் மருவுதலா யிருந்தார்.
ஜமீலா நாயகிக்கும், ஸைதுக்கும் பட்டுக் கைக்குட்டையையுடைய
வரைப் பற்றி மாறியும் ஆசங்கை யுண்டானபடியினாலே, அமீர்பஷீர்
மூலமாக அம்மனிதரின் அந்தரங்கத்தைத் தெளிந்தறிய நாடி, அவ
ரின் வருகையை யெதிர்பார்த்திருந்தார்கள்.

ஆனால், அமீர்பஷீர், தன்னரசாக்ஷி விஷேய நிமித்தம் இக்காவில்
தங்கியிருந்து, சிலநாட்களின் பிறகு பைத்துத்தீனுக்கு வந்துசேர்ந்
தார். அமீரைத் தெரிசித்து சோபன வாழ்த்து கூறுதற்காக, லிப
னூன் தேசவாசிகள் திரள் திரளாய் வந்துக்கொண்டிருந்தபடியால்,
கொலுக்கூடத்தி லிருந்து அந்தப்புரத்திற்கு அமீர்பஷீர் வருதற்
குச் சுணக்கமுற்றது. அன்றிரவு, அமீர் அந்தப்புரப் பிரவேசஞ்
செய்தார்.

அமீர்பஷீரின் வருகையை ஜமீலாநாயகி அதி விருப்பத்துடன் எதிர் பார்த்திருந்தார்கள். அமீர் இராப்போஜன மருந்தியபிறகு, அரண்மனை முற்றவெளியில் நான்குபுறமும் வெண்ணிறச் சலவைக் கற்களால் தளவரிசை பரப்பப்பட்ட தெண்ணீர்குளக்கரைக்கு,காற் றுருதற் கென்று தன் பத்தினி சகிதமாக வந்தார். மனோரம்மிய மான விரிப்புக்கள் விரித்து, பலவர்ண வில்லூர்திக் திண்டுத் தலை யணைகள் போடப்பட்டிருந்தன. பூரணச் சந்திரனும் உதயமானது. ஜமீலாநாயகியும், கரீபும், அந்தப்புர ஸ்திரீகளில் வேறு சிலரும் அங்கு வந்துற்றார்கள். அமீர்பஷீர் ஸிகரெட்டு குடித்தவராக ஒரு திண்டில் சாய்ந்துகொண்டு பல விஷயங்களிலும் தன் மனதைச் செலுத்திக் கொண்டிருக்கும்போது, மிஸ்றுக்கு யாத்திரைபோன தும், தேசாதிபதி முஹம்மதுஅலி பாஷாவால் தனக்கு சங்கை கிடைத்ததும், பனீசுவைபுக்குச் சென்றதும், கரீபு குதிரைசவாரி செய்ததும், கரீபை முரட்டாட்டக் குதிரை கொண்டு பாலையிற் சென்றதும், அவர், கள்ளர்கள் கையிற் சிக்குண்டதும், அடிபட்ட தும், அமீன்பேயால் காப்பாற்றப்பட்டதும் அவருக்கு ஞாபக மாயின.

உடனே அமீர்பஷீர் தன் பெண்சாதியைப் பார்த்து, "ஸலீமின் தாயாரே! சிறுவயதிற் றவறிப்போன (அமீரா) பிரின்ஸெஸ் ஸல்மாநாயகியின் ஞாபகம் தங்களுக்கிருக்கிறதா"வென்றுகேட்டார். அப்போது அங்கிருந்த ஜமீலாநாயகியின் நெஞ்சம், அமீரின் பேச் சைக்கேட்டுப் படபடப் பெய்திற்று.

அமீர்பஷீரின் கேள்விக்கு அவர் மனைவி, "ஆம், அவர்களின் காரியம் ஞாபகத்தி லிருக்கிறது. அவர்கள் என்னிடத்தில் அதி நேசத்தோழியா யிருந்ததால் நான் அவர்களை மறந்து விடவில்லை. முன்னொருமுறை நான் தங்களிடத்தில் சொல்லியதுபோலச்சொல் லுகிறேன். இதோ, என் புதியதோழியாகிய ஜமீலாநாயகி, பிரின் ஸெஸ் ஸல்மாநாயகிக்கு ஒப்பானவர்களாக, சகல விஷயங்களிலும் காணப்படுகிறார்கள். அதனாலேயே, என் பழய தோழியின்நினைவு அடிக்கடி எனக்கு வந்துக் கொண்டிருக்கிற" தென்றார்கள்.

இச்சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்த ஜமீலாநாயகியி னிரு தயம் அதிக படபடப்பும் நடுக்கமுங் கொண்டது. மறுபடியும்



அமீர்பஷீர் தன் பெண்சாதியைப் பார்த்து, "அந்த ஸல்மாநாயகி யின் விஷயத்தில் தங்களுடைய கருத்து எவ்விதம்?" என்று கேட் டார். அதற்கு இராஜபத்தினி, "நாயகமே! அவர்கள்சிவித்திருப் பதாக நான் நினைக்கவில்லை. அவர்களின் தவறுதலுக்குக் காரணரா யிருந்த, அவர்களின் தந்தையர்க்கு கடவுள் பாப மன்னிப்பளித் துக் கிருபை புரிவாராக. என்னருமைத் தோழி ஸல்மாவின்ஞாப கம் திடீரென்று தங்களுக்கு வந்துற்றதின்காரணம் யாது?" என்று கேட்டார்கள். அமீர்பஷீர், "நான் செய்துவந்த இப்பிரயாணத்தில், அதி விநோதமான ஓர் சரிதை யெனக்குக் கிடைத்தது. அதை வெளிப்படுத்துகிறதில்லை யென்று வாக்களித்திருக்கிறேன். இருந் தாலும், தாங்கள் என்னுயிர்த்துணைவி யாதலால் தங்களுக்கு மட் டில் தனித்துச் சொல்லுகிறேன்" என்றார்.

(இவர் சொன்னவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த ஜமீலா நாயகியின் கெதி யெவ்வா றிருக்கு மென்பதை நாம சொல்லவேண் டியதில்லை.)

ஆனால், ஜமீலாநாயகி தனக்குண்டாகும் திகிலையும் படபடப் பையும் பதப்படுத்திக்கொண்டு, அமீருடன் சம்பாஷிக்கக் கருதி னார்கள். நாவெழவில்லை. அதைக்குறித்து அமீரிடத்தில் கேட் கத் தனக்குப் பிரீதியுண்டா யிருந்தும், தன்னுடைய இரகசியம் வெளிப்பட்டு விடுமென்பதைப் பயந்திருந்தார்கள். மேலும் அவர் களுக்குத் திகிலும், நடுக்கமும், படபடப்பும் அதிகரித்துக் கொண் டிருந்தமையால், அவற்றை யடக்குவதற்காக அங்கிருந்தெழுந்து தன் படுக்கை யறைக்குப்போக நாடினார்கள். அதற்குக் காலெழ வில்லை. அப்படிக்கிருக்கும்போது அமீரின் மனைவியர், "நாயகமே! அச்சரித்திரத்தை இப்போது சூடலாக சொல்லுங்கள்; நாமிரு வருந் தனித்தபோது விவரிக்கலாம்; ஏனென்றாலோ, அதுவரையில் என்னால் பொறுதி செய்துக்கொண்டிருக்கக் கூடா" தென்றார்கள்.

அமீர்பஷீர்தன்மனைவியரைப்பார்த்து, "சூடலாகவாவது இப் போதே சொல்லவேண்டுமென்று தாங்கள் பிடிவாதமாகக்கேட்கிற படியால், அதில் இரண்டொன்றைச் சொல்லுகிறேன். நான் இந்த யாத்திரையில், பிரின்ஸெஸ் ஸல்மாநாயகியைக் கடத்திச் சென்ற மனிதரைக் கண்டேன். அவர் என்னிடத்தில் தன் காரியங்களை

என்று, அமீர் தன் பேச்சை முடிப்பதற்குள்ளாக, ஜமீலாநாயகி, "ஆ!" வென்றலறிக் கீழே விழுந்து உணர்வற்றுக் கிடந்தார்கள். அருகிலிருந்த கரீபு, "என் தாயே! தாயே!!" என்று ஓலமிட்டழுதார். அங்குள்ள மற்றவர்களும் திக்பிரமை கொண்டிருந்தார்கள். சிலர் வாசனைத் திரவங்களும் சுத்த ஜலமுங்கொண்டோடிவந்து, ஜமீலாநாயகியின் முகத்திற்றெளித்து, நாசித் துவாரங்களில் புகையேற்றினார்கள். சற்று நேரத்தின் பிறகு அவர்களுக்குத் தெளிவுண்டாகி, பெருமூச் செறிந்து அதிகமாக அழுதார்கள். அங்கிருந்தயாவரும் இச்சம்பவத்தைக் கண்ணுற்று, பிரமிப்படைந்து பச்சாதாபப் பட்டார்கள். ஏதோ இது நரம்பு சம்பந்தமான வியாதியா யிருக்கலாமென்றெண்ணி, ஜமீலாநாயகி யிடத்தில் சிலர்கேட்டார்கள். ஜமீலாநாயகி, தன்னழுகையை நிறுத்தி மறுமொழி கொடுக்கலாமென்று தன்னாலியன்ற வரையில் முயற்சித்தும் கூடவில்லை. மறுபடியும், "திடுகூறாய் புதிதாக வுண்டான வியாதியா யிருக்கலாமோ?" என்று ஜமீலாநாயகியைக் கேட்டார்கள். அவர்கள், ஆமென்று தலையை அசைத்தார்கள்.

(ஜமீலாவின் காரியத்தில் முற்கனவே அமீர்பஷீருக்குச் சந்தேகம் பிறந்திருந்தபடியால், அதை அவர் நரம்பைப்பற்றியவியாதியென்று நினைக்கவில்லை. அவர் பைத்துத்தீனுக்கு வந்த பிறகுஅச்சந்தேகம் பழயபடி உண்டாகி, அதைத் திட்டமாய் அறிந்துகொள்வதற்காகவே அச்சரித்திரத்தைச் சொல்ல நாடி யிருக்கலாம்.) ஜமீலாவினின் அற்பத்தியான நோயினாலே அவர்களின் அந்தரங்கத்தைத் தெரிந்து கொண்டார். ஆனால், ஜமீலாநாயகி மெல்லினமான சரீரத்தினர்களாகையால், அவ்விஷயத்தைக் குறித்து விவரித்துக் கேட்கப் புகுந்தால் அஞ்சுவார்கள். அதனால் ஏதேனும் அவர்களுக்குத் தீங்கு சம்பவிக்கப்போதுமென்பதைப்பயந்து, தானறியாதவரைப்போலபாவனைகாட்டி,ஜமீலாவிடத்தில்யாதொன்றையுங் கேட்காதிருந்துவிட்டதும் அல்லாமல், "நிசந்தான், இது நரம்பைச் சார்ந்த நோய்தான்; இவ்விதமாக அநேகருக் குண்டுபட்டிருக்கிறதைக் கண்டிருக்கிறேன்" னென்றுகூறி, ஜமீலாவை தான் கண்டது முதல் அது வரையில் நடந்த காரியங்களைச் சிந்தித்து, இந்த ஜமீலா, பிரின்ஸெஸ் ஸல்மாவா யிருந்தும், தன் இரகசியத்தை வெளியாக்காமல் மறைத்திருக்கிறதைப் பற்றி, தனக்குள் வியந்திருந்தார்.



அமீர்பஷீர், மேலேகூறியபடிக்கு சற்றுநேரம் யோசித்துக்கொண்டிருந்து, ஜமீலாவின் அந்தரங்கத்தைஅறியாதவரைப்போல பாவனைகாட்டி, தன் பெண்சாதியைப் பார்த்து, "ஜமீலாநாயகிக்கு இன்றிரவு நேர்ந்த நோயினால் நம்முடைய சந்தோஷகருமங்கலைந்து போயிற்று. கடவுள் உதவி புரிந்தால் பாக்கி சமாச்சாரத்தை நாளைக்குச் சொல்லுகிறேன்" னென்று கூறினார். அச்சமயம் ஜமீலாநாயகி கரீபின் நெஞ்சிற் சாய்ந்துகொண்டு, மரச்சிலைபோன்றுஅசைவற்றிருந்தார்கள்.

அமீர்பஷீர். ஜமீலாவைப் பார்த்து, எங்கு தீங்குண்டாகப்போகிறதோ என்று பயந்து, "ஜமீலாவே! தாங்கள் படுக்கையறைக்குப் போய்விடுகிறது நலவாகத்தெரிகிறது. தங்களுக்குண்டானவியாதியானது நிலாவெளிச்சத்தின் குளிர்ச்சியால் உண்டானதாக விருக்கப்போது" மென்றார். ஜமீலாநாயகி யாதொன்றும் பேசாமல், எழுந்திருக்க நாடினார்கள். முழங்கால்கள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு எழுந்து நிற்கக்கூடாதிருந்ததால்அதிக வெட்கமுற்று, தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, கரீபின் உதவியாலெழுந்து அவரைப் பிடித்தவர்களாகத் தன்னறையை நோக்கிநடந்தார்கள்.

கரீபு தாயாரை அணைத்துப் பிடித்து நடத்தி, பள்ளியறையில் கொண்டுவந்து விட்டார். ஜமீலாநாயகி, தன் படுக்கையில் மல்லார்ந்து படுத்து, இஷ்டப்படிக்கு அழுது குளித்தார்கள். கரீபு தாயாரைப் பார்த்துப் பரிதபித்து, "அழவேண்டிய காரணமென்ன?" வென்று கேட்டார். அதற்கு ஜமீலாநாயகி மறுமொழி கொடாமல், "மகனே! இரைந்து பேசாதிருப்பாயாக" என்றுசைகைகொடுத்தார்கள். அதனால் கரீபும் அழத்தொடுத்தார்.

அப்படிக் கிருக்கும்போது, காஹிறாவி லிருப்பதுபோலும், தன் புருஷர் பிரின்ஸ் அமீன்பே தன்னிடத்தில் விடை வாங்கிக்கொண்டு காஹிறாமலைக்கோட்டைக்குப் போவதற்காகக் குதிரை மீதேறிச் செல்வதுபோலும் ஜமீலா நாயகிக்குத் தோற்றமுண்டானது. அதை உண்மையான புலப்பாடென் றெண்ணி, "அமீனே! அமீனே!!" என்று உரத் தழைத்தார்கள். அதை, அமீர்பஷீருடைய புத்திரர் அமீனைக் கூப்பிடுகிறார்களென்று கரீபு நினைத்து, உடனே வெளியில் வந்து, அமீனை யழைத்துக்கொண்டு தன் தாயாரின் சமுகத்துக்கு வந்தார்.

அமீர் அமீன் ஜமீலாநாயகியின் சமுகத்தில் நின்றுக்கொண்டு, "என் சிறிய தாயாரே! ஏன் என்னை யழைத்தீர்கள்? என்னாலாக வேண்டிய அலுவல் ஏதேனு மிருக்கிறதோ?" என்று கேட்டார். அப்போது ஜமீலாவுக்குத் தன்னுணர்வு வந்து, எழுந்துட்கார்ந்து, அமீர் அமீனைப் பார்த்து, "என்னருமந்தப் புதல்வாய்! நான் உம்மை யழைக்கவில்லை. கரீபு தவறாக வும்மை யழைத்திருக்கப் போது" மென்றார்கள். அதற்கு கரீபு "மாதாவே! தாங்கள் மூன்றுமுறை 'அமீன் அமீன்' என்று கூப்பிட்டீர்கள். இவ்விடத்தில் என் தமையன் அமீனைத் தவிர வேறே அமீன் இல்லையே" யென்றார்.

அதற்கு ஜமீலாநாயகி, "அப்படியானால் உம்மை யழைப்பதற்குப் பதிலாக, ஞாபகக் குறைவால் அமீனென்றழைத்திருக்கக்கூடு" மென்றார்கள். அப்பால் அமீர் அமீன், ஜமீலாநாயகியுடன் சற்று நேரம் அன்பு வார்த்தைகளாடி, அவர்களின் சலிப்பு நீங்குவதற்கான அநேகந் தேறுதல்கூறி, அவர்களுக்குச் சரியான வுணர்வுண்டாகக்கூடிய வாசனைத் தண்ணீர் முதலானவைகளைக் கொடுத்து முகரச் செய்தார்.

(இனி அமீர்பஷீரைப்பற்றிக் கூறுவோம்.)

மேலே கூறியபடிக்கு ஜமீலாநாயகி படுக்கை யறைக்குப்போன பிறகு, அமீர்பஷீர் தன் மனைவியரை நோக்கி, "இதற்குமுன் ஜமீலாநாயகிக்கு இவ்வித சம்பவம் நிகழ்ந்ததுண்டோ?" என்றுகேட்டார். அதற்கவர்கள், "இதுதான் முதற்றடவை; இவ்வித சம்பவம் மற்ற பெண்டுகளிலுங்கூட சம்பவிக்க நான் கண்டதில்லை" யென்றுகூறி, ஜமீலாநாயகிக்கு நேர்ந்த விபத்தைக் குறித்து அவர்களுக்கு அச்சமுண்டாகி, தானும் படுக்கை யறைக்குப் போகவேண்டுமென்று அமீர்பஷீரிடத்தில் உத்தரவு கேட்டார்கள். அவர், "நல்ல" தென்று தன் மனைவியர்கூட, ஜமீலாவின் காரியத்தைப்பற்றி சிந்தித்தவராகப் படுக்கை யறைக்கு வந்து சேர்ந்து, ஜமீலாவின் சங்கதியை அறிந்து வரும்படிக்கு சிலதாதிப்பெண்களை யனுப்பினார். ஜமீலாநாயகி, அமீர் முதலானவர்கள் தன்னைப் பார்க்க வராதிருக்க வேண்டுமென் றெண்ணிக்கொண் டிருக்குஞ் சமயத்தில், பணிப்பெண்கள் வந்தார்கள். அவர்களுடன் எப்போதும் போல



அளவளாவியாகப்பேசி, "நான் இப்போது சுகத்துட னிருக்கிறேன். என்னைப்பற்றி கொஞ்சமுங் கவலைப்படவேண்டாமென்று அமீர் பஷீருக்கும், அவரின் மனைவியருக்குஞ் சொல்லுங்க" ளென்று கூறி யனுப்பினார்கள். பிறகு ஜமீலாநாயகி, தன்னில் நின்று முண்டான விஷயத்தினால் அமீர்பஷீர் முதலானவர்களுக்கு சந்தேகமுண்டாயிருக்கப் போதுமென்று நினைத்து, தன்னைத்தானே நிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

(தன் அந்தரங்கத்தை அமீர்பஷீர் அறிந்து, தன் தவறுதலைப் பற்றியும், தன் புருஷரின் செய்கையைப் பற்றியும் உண்டான குற்றங்களை அவர் மன்னிப்பாரென்பதை ஜமீலாநாயகி அறிந்திருந்தால், இவ்வளவு தூரம் சஞ்சலப்பட நேராது. தன் அந்தரங்கம் வெளியானபோது அவர் மன்னிக்காமல் தண்டிப்பாரென்றும், அதனால் தனக்கு மானபங்க முண்டாகு மென்றும் பயந்ததினாலேயே, இவ்வாறு சஞ்சலிக்க நேர்ந்தது.)

அன்றிரவு முழுதும் எவ்வித முயற்சியாலும் ஜமீலாநாயகிக்குத் கண்ணுறக்கம் வரவில்லை. அதனால் பிற்சாமத்தி லெழுந்து தன் மகன் கரீபைப் பார்த்தார்கள். அவர் அயர்ந்த நித்திரை போய்க்கொண்டிருந்தார். உடனே ஜமீலாநாயகி பள்ளி யறைக் கதவை மெல்லத் திறந்துகொண்டு வெளியில் வந்தார்கள். அந்தப்புரத்தில் யாதோர் அரவமும் கேட்கவில்லை. அங்கிருந்து மெல்ல மெல்ல நடந்து கொல்லை வாசலுக்கு வந்து, அதன் கதவைத்திறந்து கொண்டு, அவ்வழியால் அரண்மனைக் கொடிமுந்திரிகைத் தோட்டத்துக்கு வந்தார்கள். அடுத்த தோட்டக்காரர்கள் பயிர்களுக்குந் தண்ணீ ரிறைக்குஞ் சப்தம் கேட்டது. அத்தோட்டம் மஹா விசாலமானதால் நெடுக நடந்து சென்று, ஒரு மேட்டுத் தானத்தில் ஒருவரும் தன்னைக் காணக்கூடாது மறைக்கக்கூடிய ஓர் செடியின் கீழே கொடுங்கை கொடுத்துச் சாய்ந்துட்கார்ந்து, தன்னுடைய காரியத்தைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, அமீர் பஷீர் சொன்ன வார்த்தையில் ஞாபகம் சென்றது. அப்போது ஜமீலாவின் இதயந் துளும்பி, அவர்களின் சரீரத்தில் நடுக்கங் கண்டது.

பிறகு, "அமீர்பஷீர் சொன்ன செய்தியின் முடிவையறியஎன்ன உபாயஞ் செய்யலாம்; நம்முடைய இரகசியத்தை அமீருக்குச்

சொல்லி, அவருடைய காற்களில் வீழ்ந்து மன்னிப்புத்தேடி, நம்புருடரின் செய்தியைக் கேட்கலாம். ஒருக்கால் அவர் சீவித்திருக்கவும் போது"மென்றும், "நாம் அந்தரங்கத்தைச் சொல்லிமன்னிப்புக் கேட்டால், கொடுக்கமாட்டார். நம்புருடரும் சீவித்திருப்பதாக நினைக்க வழியில்லை. அவரிறந்து எத்தனையோ வருடமிருக்கு"மென்றும் பலவாறாக யோசித்தார்கள். பிறகு, கரீபு காஹிருவிலிருந்தெழுதிய கடிதம் ஞாபகத்து வந்தது. "அதில், ஒருவர் தப்பியோடிப் பிழைத்தாரென்றெழுதி யிருப்பதால் அவர்நம்புருடராக இருப்பாரோ" என்றும் நினைத்தார்கள். அவர்களின் யோசனைக்கு ஒரு முடிவுமில்லா திருந்தது.

அப்படியிருக்கும்போது, "நாம் நம்முடைய அந்தரங்கம்வைக்குந்தலம், ஸயீதும், தலைமைப்பாதிரியுமே யாகையால், பொழுது விடிந்தவுடனே ஸயீதை வரவழைத்து, இன்றிரவு அமீர்பஷீர் சொன்ன செய்தியை அவனிடத்திற் சொல்லிக்கொண்டு, அவன் மூலமாக அமீர்பஷீரிடத்தில் மிகவும் சங்கையையுடைய தலைமைப்பாதிரியாரைக் கூப்பிட்டு வந்து, அவரிடத்திலும் அச்செய்தியைக் கூறி, அமீர்பஷீரிடத்தில் மன்னிப்புத் தேடுதற்கான வழியை மூவரும்யோசித்தறியலாம்." என்னும்யோசனை ஜமீலாநாயகிக்கு ஊசாட்டமானது. அப்போதே அவர்களி னிதயத்தில் சுமத்தப்பட்டிருந்த சுமை நீங்கிற்று. அச்சமயம் அதிகக் குளிரா யிருந்தபடியினாலே, ஜமீலாநாயகி படுக்கை யறைக்குத் திரும்பி விட்டார்கள்.

இது இங்ஙனமாக, ஜமீலாநாயகியிடத்தில் நேர்ந்தவைகளை, தன் பெண்சாதிகண்டுகலக்கமுற்றிருப்பதை அமீர்பஷீர் அறிந்து, அச்சரித்திரத்தைச் சொல்ல ஒருநாளைக் குறித்தார். அமீர்பஷீரின் மனைவியர், "என் அருமைப்பாங்கி ஸல்மாவின் சரிதத்தை ஆவலுடனே கேட்க நாடியிருக்குஞ் சமயத்திலா, ஜமீலாவுக்குத் தங்கடம் வர வேண்டும்?" என்று கைசேதப்பட்டார்கள். பொழுது விடிந்தவுடனே, ஜமீலாநாயகியின் சுகத்தைப்பற்றி அமீர்பஷீரின் மனைவியர் விசாரித்தார்கள். சுகத்துடனிருப்பதாகச் சொல்லப்பட்டது.

விடியற்காலையில் ஜமீலாநாயகி ஸயீதை அழைத்து வரும்படிக்கு தன்மகன் கரீபுக்குக் கட்டளையிட்டார்கள். ஸயீது வந்தவுடனே அவனுடன் ஜமீலாநாயகி தனித்திருந்து, அன்றிரவு நடந்தவைகளை விவரித்துக்கூறி, "இவ்விஷயத்தில் தலைமைப்பாதிரியாரின் ஆலோ



சனை முக்கியம் வேண்டியிருப்பதால், இப்போதே அவரை யிங்கு அழைத்துவருக" வென்றார்கள். ஸயீது அப்போதே சென்று அழைத்துவந்து சேர்த்தான். மூவரும் தனித்தவோரிடத்தி லுட்கார்ந்தார்கள்.

ஜமீலாநாயகி தலைமைப்பாதிரியைப்பார்த்து, விளித்து "இன்றிரவு எனக்கு நேரிட்ட தங்கடத்தை யார் காண்கினுஞ் சகித்துறமாட்டார்கள். நீங்களிருவரும் உங்களின் யோசனைகளைக்கொண்டு எனக்குதவிபுரியவேண்டும். இல்லாத வரையில் என் மனக்கவலையால் யாதுஞ் செய்யச் சக்தியற்றவளாவேன். என் புருடர் விஷயத்தில் உண்டா யிருக்கிற என்னுடைய எண்ணம் உண்மையென்பதை நானறியவுமாட்டேன்.

"நான் வைத்திருந்த ஆதரவு இடையி லற்றுப்போய், தற்போது மீளவும் உற்பத்தியா யிருக்கிறது. ஆ, பெருமூச்சை விளைக்குந் துக்கமே! இதை வீணெண்ணமென்று நினைக்கவேண்டாம். என் மேலெண்ணம் நிசமென்பதற்கு, காஹிரு மலைக்கோட்டைக்குச் சென்ற அரசவமிசத்து அமீர்களுள் ஒருவர் தப்பிப்பிழைத்ததாக வந்திருக்கிற பிரஸ்தாபம் ஒன்று, என் இருதயக் கனியாகிய கரீபை மரணாபாயத்தினின்றும் காப்பாற்றியவருடைய இந்தப்பட்டுக்கைக்குட்டை இரண்டு, இன்றிரவு, என்னைக்கடத்திச் சென்ற மனிதரை அமீர்பஷீர் தற்போது சென்றுற்ற யாத்திரையிற் கண்டதாக அவர் சொன்னது மூன்று, இம்மூன்றுமே திருஷ்டாந்தங்களாகின்றன. அமீர்பஷீரிடத்தில் மீதி சமாச்சாரத்தையுங் கேட்டால், நம்முடைய சந்தேகம் நிவாரணமாகக்கூடும். நான், அவரிடத்தில் கேட்கிறதினால் என் அந்தரங்கம் வெளியாகிவிடுமென்பதைப் பயப்படுகிறேன். என் அந்தரங்கம் வெளிப்படுவதினாலே, என் உயிர், அல்லது மானத்துக்கு ஈனம் வரக்கூடும். நான் என் பிதாவின் நாட்டத்திற்கும், குடும்பத்தாரின் வழக்கத்திற்கும் மாற்றஞ்செய்து, அன்னியருக்கு வாழ்க்கைப்பட்டதினாலே எனக்குப் பழிப்புண்டாவதையே முக்கியமாகப் பயப்படுகிறே"னென்று கூறினார்கள்.

ஜமீலா கடத்தப்பட்டுப்போனதும், அமீர்பஷீருக்குபெத்துவா யிருப்பதும் தலைமைப்பாதிரிக்குத் தெரியா திருந்ததால், ஜமீலா சொன்னவைகளை அவர் விளங்கிக் கொள்ளவில்லை. அதை ஸயீது

கண்டபோது, ஜமீலாநாயகி யென்று இப்போது அழைக்கப்படுகிற பிரின்ஸெஸ் ஸல்மாநாயகி, தன் வீட்டைவிட்டுப்புறப்பட்டதுமுதற் கொண்டு நடந்தவைகளை சவிஸ்தாரமாக, பாதிரியாருக் கெடுத்துக் கூறினான்.

தலைமைப் பாதிரியார் அவைகளைக் கேட்டு ஆச்சரியமடைந்து, புன்னகை நகைத்து மகிழ்ச்சியுடன், ஜமீலா என்னும் ஸல்மாநாயகியைப் பார்த்து, "நாயகியே! தாங்கள் யாதொன்றிற்கும் அஞ்சாமல் சந்தோஷத்துடனிருக்கக் கடவீர்களாக. ஆரம்பமாக நான் தங்களை அறிந்தபொழுதே என்னாலியன்ற வரையில் தங்களுக்கு நலமுண்டாகும் விஷயத்தில் பணிவிடை செய்கிறதாக வாக்களித்திருக்கிறேனல்லவா? என்றென்றைக்கும் ஜீவித்திருக்குங்கடவுளி னுதவியால் தங்கள் சமுகத்தில் இப்பணிவிடையைச் செய்ய நான் சக்தி பெற்றிருப்பதினாலே, நான் அதிக பாக்கியவானென்று வெளியாகிறது. கடவுளின் கிருபையால் இப்போது சொன்ன பாரதூரமான பணிவிடையையும் என்னால் செய்து முடிக்கக்கூடுமென்று நினைக்கிறே" னென்றார்.

அதற்கு ஜமீலாநாயகி, "மெய்தான், மெய்தான், தலைமைப் பாதிரியாரே! தாங்கள் ஒருயிரைக் காப்பாற்றினீர்கள். அதன் முடிவு நன்மையாயிருக்கப்போகும். அந்தநேசரும்சிலவேளையிருக்கப் போகும். அப்படியிருந்தால் பல வுயிர்களைக் காப்பாற்றியவர்களாவீர்கள்" என்றார்கள். ஸயீது மிகுந்த மரியாதையுடன், "மேன்மை பொருந்தியபாதிரிநாயகமே! இக்காரியத்தைத் தாங்கள் முடித்து வைப்பீர்களானால், நான் எப்பொழுதும் தங்களின் அடிமையாக விருப்பேன். தங்களின் வார்த்தையின்பேரில் ஆணையாக, தங்களுடைய ஆலோசனைப்படிக்கு நடக்கக் காத்திருக்கிறே" னென்று பணிந்து கூறினான்.

அமீன்பே சரித்திரம்

முதல்பாகம்.

முற்றுப்பெற்றது.

# அமீன்பே சரித்திரம்.

## இரண்டாம் பாகம்.

21-வது அத்தியாயம்

## அந்தரங்கம் வெளிப்பட வேண்டல்.

தலைமைப் பாதிரி, ஜமீலாநாயகியையும் ஸயீதையும் பார்த்து: "நீங்களிருவரும் கண்குளிர்ந்தவர்களாக மனமகிழ்ச்சியுடனிருங்கள்; இன்றிராத்திரி நான், அமீர்பஷீரைத் தெரிசிக்கிறேன். கடைசி காலத்தில் இந்த லிபனான் நாட்டிற்கு அமீராக நியமிக்கப்பட்ட அமீர் அப்பால் நம் அமீரின் கிருபாநோக்கத்தைப் பெற முயன்று, அதற்காக சிபாரிசுசெய்ய, பெரிய மனிதர்களும், அமீர்களும், நம் அமீரின் சமுகத்திற்கு வந்துபோய்க்கொண்டிருப்பதினாலே, அவருக்கு பகற்காலங்களில் அலுவல்கள் உண்டுபடுகின்றன. அதனாலேயே பகற்காலத்தில் நான் அவரைத் தெரிசிக்க, சாவகாசப்படாதென் றெண்ணுகிறேன். இராக்காலங்களில், அப்படிப்பட்ட அலுவல் அவருக்கிருக்கமாட்டாது. நாம் பேச நாடியிருக்கும் விஷயமோ, அதிக நுட்பமானது. அவ்விஷயத்தைப்பற்றி, நான் அவருடன் சம்பாஷிக்கும்போது, அவருக்குக் கோபமுண்டாகா திருக்கும்படி அதிக பயபக்தியுடனும், உசாருடனு மிருக்கவேண்டும்.

"அவருக்குச் சினமுண்டாகிவிட்டால், சமாதானஞ்சொல்லி யடக்குவது, நம்மாலியலாத காரியம். அவர் ஒரு விஷயத்தில் தலையிட்டுவிட்டால், கடவுளைத் தவிர, மற்றவர்களால் அதைத் தடைப்படுத்தமுடியாது. ஆகையால், நம்முடைய காரியங்களை சர்வ சக்தி கர்த்தரிடத்தில் பாரஞ்சாட்டிவிட்டிருப்பதே நமது முறைமை.

"என் அருமைப் புத்திரியே! தங்களுக்காகவும், தங்கள் புருஷருக்காகவும், கடவுளைப் பிரார்த்திக்கிறேன். அவரினுதவியால் நீங்களிருவரும், பரலோகயாத்திரையின் முன்னரே, இன்னொருமுறை தெரிசனை புரிந்துகொள்வீர்கள்" என்று கூறி விடை வாங்கிக்கொண்டு, வெளியே புறப்பட்டார்.

அப்போது யாரோ, தன்னைக் கூப்பிடுவதாகக் கேட்டுத் திரும்பிப்பார்த்தார். அந்தப்புர வாசற்காவற்காரனென்றறிந்து, "ஏன் என்னை யழைத்தா"? யென்றனர். அவன்: "அமீர்பஷீரவர்களின் கட்டளைப்படிக்" கென்றான். தலைமைப் பாதிரியார், திரும்பியுள்ளுக்காகி, அமீர்பஷீரிருக்கும் மேல் மாடத்தின் படிகளிலேறிச் சென்று, எப்போதுந் தனித்திராதவர் இப்போதிருக்கவேண்டிய காரணமென்னவென்று, அதிசயமடைந்தவராக, அமீரின் சமுகத்தில் வந்து வணக்கத்துடன் வந்தனமளித்து, அவரின் கையை முத்தமிட்டு நின்றார்.

அச்சமயம், அமீர்பஷீர் முகவாட்டமுடையவராக விருந்தார். "தலைமைப்பாதிரியாரே! உட்காரு" மென்றார். அவர் ஓர் நாற்காலியிலுட்கார்ந்தார். பாதிரியார் கலங்கிக்கொண்டிருந்தார். அமீர்பஷீர்: "பாதிரியாரே! நான் உம்மைக் கண்டு அதிகாளாகின்றனை. இன்று அதிகாலையில் நம்முடைய மாளிகையில் உம்மைக் காண்கிறேனே" என்றார். தலைமைப் பாதிரியார்: "எங்கள் நாயகமே! அமீரே! நாங்கள் தங்களின் ஊழியர்களென்பது தாங்களறிந்த விஷயந்தான்; தங்களுடைய பொருத்தங்கொண்டே யல்லாமல் நாங்கள் சுகம் பெறுகிறதில்லை; தங்களின் தெரிசனையினால் நாங்கள் சிறப்புப்பெறுகிறோம். தாங்கள், மிஸ்றிலிருந்து வந்த அன்றைக்கே, தங்களைத் தரிசிக்க நாடினேன். தங்களுக்கு அதிக அலுவலேற்பட்டிருப்பதை யறிந்து, என்னால் அவ்வேலைக் கிடையூறுண்டாகக்கூடாதென்று, தங்களுக்குக் கொஞ்சம் அவகாசங் கிடைக்கும் வேளையை வழிபார்த்திருந்தேன்." என்று கூறினார்.

அமீர்பஷீர்: "பாதிரியாரே! அதிகாலையில் இங்குவந்த காரணமென்ன?" வென்று கேட்டார். இக்கேள்வி யுண்டாமென்பதை பாதிரியார் ஏலவே அறியாதிருந்ததால், அப்போது சற்று மனந்தடுமாறி ஆலோசித்து, "நாயகமே! கரீபின் தாயாரும், என் பழய நேசியுமாகிய ஜமீலா நாயகியைத் தெரிசிக்கவந்தே" னென்று மறு



மொழி கொடுத்தார். இதைக் கேட்ட அமீர்: "உங்களிருவரின் நேசமும் பரிபூரணமுற்றிருக்கக் கடவதாக" என்று பரிகாசமாகக் கூறி, "நீர் நும் சுயேச்சையாக வந்தீரென்று நான் நினைக்கவில்லை" யென்றார்.

அப்போது, தலைமைப் பாதிரியார்: (தேடிய பூண்டு காலிடையிலானது போல, நாம் நாடியிருக்கிற காரியத்தை அமீர்பஷீர் வெளிப்படுத்த நாடுகிறாரென்றறிந்து,) தன் மனசைத் திடப்படுத்திக்கொண்டு, "வலுப்பந்தங்கிய அமீரே! நான், ஜமீலாநாயகியா லழைக்கப்பட்டேன். நேற்றிரவு, அவர்களுக்கு அதிக பயங்கரமான நோய் சம்பவித்ததை யென்னிடம் முறையிடற்காக, என்னை அழைப்பித்தார்கள். தங்களின் கோபத்திற் கஞ்சி, தங்களிடத்தில் முறையிடாது, அவர்கள் மறைத்துவைத்திருக்கிற சில விஷயங்களை யென்னிடத்தில் விஸ்தரித்தார்கள். அவர்களின் சரித்திரம் நேற்றிரவு, நாங்கள் கூறிய ஸல்மா நாயகியின் சரிதையைப் பார்க்கிலும் புதுமைப்படத்தக்கது" என்றார்.

அதற்கு அமீர்பஷீர்: சிரித்துக்கொண்டு, "கரீபின் தாயாருடைய சரித்திரம், உமக்குப் புதுமையாயிருந்தாலும், அமீர்பஷீருக்குப் புதுமையாகாது. அவர்கள் துவக்கமாக இச்சிற்றூருக்கு வந்தபோதே, அவர்களின் வருகையை அறிந்த ஒருவருக்கு, அவர்களுடைய சரிதம் மறைந்திராது. அவர்கள் அதை மறைக்கத் துணிந்தாலுஞ் சரியே. அதை நேற்று நான் விவரிக்கவில்லையென்று நினைக்கிறீர்போலும். இதற்குமேல் மறைக்கத் தேவையில்லை. நேற்று ஜமீலாநாயகி, அச்சத்திற்கிரையாய் விடுவார்களென்பதை நான் கவனிக்காதிருந்தால், அதை விவரித்துத்தானிருப்பேன். அவர்களின் அந்தரங்கமறியாத பாவனையை நான் காட்டி, அவர்களைப் படுக்கையறைக்குப் போகக் கட்டளையிட்டேன். நானே நேரில் அதைச் சொல்லப்புகுந்தால், தீங்குண்டாகுமென்பதைப் பயந்து, இன்று உம்மை வரவழைத்து, உமது மூலமாக அவர்களின் சரித்திரத்தை அவர்களுக்கு விளக்கமாக்க நினைத்து, அதற்காகவே ஒருவரையும் உள்ளே வரவிடாதிருக்கக் காவற்காரனுக்குக் கட்டளையிட்டுவிட்டு, நான் தனித்துட்கார்ந்திருக்கிறேன். கரீபை, மரணபாயத்தினின்றுங் காப்பாற்றிய, ஜமீலாநாயகியின் புருஷர், தன் சரித்திரத்தை யென்னிடத்து முறையிட்டார். அப்போதே,

அவருக்கு மன்னிப்பளித்தேன். அவரின் குற்றத்தை மன்னிக்க நான் நாடியிருந்ததில்லை. என் அருமை கரிபைக் காப்பாற்றியதினாலும், ஸல்மாநாயகிபோன்றவர்களுண்டாயிருப்பது அருமையினும் அருமையானதினாலுமே மன்னிக்கநேர்ந்தது.

“இப்போது, ஜமீலாநாயகி இங்கே வரவும், அவர்களின் புருஷருடைய செய்தியை அவர்களுக்குச் சொல்லிக்காட்டவும் நாடுகிறேன். ஆனால், நான் அவர்களை அழைக்க ஆள்விட்டால், என் கூப்பிடுதலில் அவர்களுக்குச் சந்தேகமுண்டாகி, அதனால் இரம்பப் பயந்து நடுங்குவார்களென்னும் என் யோசனை தடைபடுத்துகிறது. ஆகையால் பாதிரியாரே! நீர் அவர்களிடத்திற் சென்று, அவர்களை தைரியப்படுத்தி, நான் சொன்னவைகளை அவர்களுக்குச் சொல்லிக்காண்பித்து, அவர்களைச் சந்தோஷப்படுத்தி இங்கழைத்துவாரும்” என்றார். அதுபோல பாதிரியார், ஜமீலாநாயகியிடத்திற்கு வந்தார். அப்பொழுது ஜமீலாநாயகி அவ்விஷயத்தைக்குறித்தே, ஸயீதுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். தலைமைப் பாதிரியாரின் வருகையை அவர்கள் கண்டு, ஏதோ ஒரு காரணம்பற்றியே வருகிறாரென்று பயந்தார்கள்.

உடனே, பாதிரியார்: “நாம் எடுத்த முயற்சியை நிறைவேற்றி நல்லுதவிபுரிந்த கடவுளுக்கு இரம்ப துதி செலுத்துகிறேன்” என்றார். இதைக்கேட்ட ஜமீலாநாயகி நற்சமாச்சாரந்தானென்று விளங்கிக்கொண்டு, கடவுளை யதிகம் புகழ்ந்தார்கள். பாதிரியார் அமீர்பஷீர் சொன்னவைகளைச் சொல்லிக் காண்பித்தார். அதைக் கேட்ட ஜமீலா நாயகியின் மனம் சமாதானமடைந்தது. ஆனால் அமீர்பஷீரை யெவ்வாறு தெரிசிக்கிறதென்ற அச்சம் ஊடாடிக்கொண்டிருந்தது. தலைமைப் பாதிரியார், ஜமீலாநாயகியை அமீர்பஷீரின் சமுகத்திற்கு அழைத்துவந்தார். ஸயீதும் கூடவே வந்தான். ஜமீலா நாயகி தலைகுனிந்தவர்களாக, அச்சப்பாட்டுடன் அமீர்பஷீரின் முன்னெருங்கி, அவரின் காலில் விழுந்து, “அமீரே! தாய்தந்தையரின் மனங்களை முறித்து அவர்களுக்கு மாறுசெய்த, மூதேவியின் குற்றத்தை மன்னிக்கவேண்டும். அல்லது அவளைக் கொன்றுவிடவேண்டும். அதற்கவள் பாத்திரவாளிதான்” என்று சொல்லி யழுதார்கள்.



உடனே அமீர்பஷீர், ஜமீலாநாயகியின் கையைப்பிடித்து தூக்கிவிட்டு, “என்சிறியதந்தையின் புதல்வியாகிய ஸல்மாவுக்கு சோபன் உண்டாவதாக. என் அன்பிற்குரிய ஸல்மா! தாங்கள் செய்தகுற்றத்தைத்திட்டமாகப்பொறுத்துக்கொண்டேன். கடவுள் சகலருடைய குற்றங்களையும் பொறுப்பாராக. உட்காருங்கள். கிஞ்சிற்றேனும் அஞ்சவேண்டாம்”. என்று கூறி, ஸல்மாநாயகியின் மனதைத்திடப்படுத்தி உட்காரச்செய்து, தன்பெண்சாதியை அழைப்பிக்க ஆளனுப்பினர். அது போல் அவர்களும் வந்தார்கள்.

பிறகு, அமீர்பஷீர், பிரின்ஸ் அமீன்பேயின் சரித்திரத்தை விவரித்தோதிக் கொண்டிருந்தார். சகலரும் காதுதாழ்த்திக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அச்சமாசாரத்தின் முடிவையறிய, ஸல்மா நாயகி அதிகஆவலுற்றிருந்தார்கள். கடைசியாக, “அமீன்பே எனக்கும், என்புத்திரர்களுக்கும் பயணஞ் சொல்லிக்கொண்டு போய்விட்டார்” என்று, அமீர்பஷீர் சொன்னவுடனே, “எங்கே போனார்கள்” என்று ஸல்மா நாயகி கேட்டார்கள். அதற்கு, அமீர்பஷீர், “என்சிறப்பிற்குரிய ஸல்மாவே! நானறியேன். தங்களை நான் ஸல்மா என்றறிந்திருந்தால், அவரைப் போகவிடாமல் எவ்விதத்தாலாவது இங்குகொண்டுவந்து சேர்த்திருப்பேன். அவரும் தன் மனைவி யென்னிடத்திலிருப்பதை அறிந்திருந்தால், ஒருக்காலும் அவர் என்னை விட்டுப்பிரியமாட்டார். நாம்தானென்ன செய்யலாம்; கடவுளின் கற்பனை அந்தப்படிக்கிருந்ததாக்கும்” என்று கூறினர்.

உடனே, ஸயீது எழுந்து நின்று, வணக்கத்துடன்: “நாயகமே! நான் கிஞ்சித்துப்பேச நாடுகிறேன்; உத்தாரமளிக்கவேண்டுகிறேன்” என்றான். அமீர்பஷீர் உத்தரவளித்தார்.

ஸயீது :—நாயகமே! என் எஜமான் சிவந்தராகவிருக்கிறாரென்று நாங்கள் கேள்விப்பட்ட பிறகு, அவர்களைக்காணாதிருப்பதில் யாதுபிரயோஜனம்? அவர்களை நாங்கள் தெரிசிக்கும்படியான ஒரு ஏற்பாடு, தாங்களே செய்து வைக்கவேண்டுமென்று மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

அமீர்பஷீர் :—பாதையறிந்த ஒருவனை, மிஸ்றுக்கனுப்புவோம். மிஸ்றின் தேசாதிபதிக்கு ஒரு கடிதமெழுதி, அவன் வசங்கொடுத்தனுப்பினால், அவனுக்கு அவர்கள் உதவிபுரிவார்கள்.

ஸயீது :——நானே போகிறேன் ; கடவுளின் உதவியால் என் எஜமானைக் கண்டுபிடிக்காமல் நான் இங்கு திரும்புகிறதில்லை.

அமீர்பஷீர் :——அதைப்பற்றி நாளைக்குக் கவனிப்போம்.

ஸயீது :——என் எஜமானே ! தவணைபோடுவதில் காரியமில்லை. என் எஜமானி அக்கினிக் கங்கியில் புரண்டவர்களாயிருப்பதை நான்திட்டமாக அறிந்திருக்கிறேன். என்னிருதயம் படுகிறபாட்டைக் கேட்க வேண்டியதில்லை. என் எஜமானைத் தேட இன்றைக்கே நான்மிஸ்றுக்குப் பிரயாணமாக உத்தரவளிக்க வேண்டுகிறேன். நன்றிசெய்வதில் மேன்மையானது விரைந்து செய்வதல்லவா ! (என்று கூறினான்).

அங்குள்ளசகலரும், ஸயீதுக்கு எஜமான் பேரிலிருக்கும் பக்தியையும், விடாமுயற்சியையும், சற்குணத்தையும் பார்த்து, ஆச்சரியமடைந்தார்கள். உடனே அமீர்பஷீர், தன் அந்தரங்க சிநேகராகிய முஅல்லிம் பத்ருஸ் கராமா வைவரவழைத்து, பிரின்ஸ் அமீன்பேயைக்குறித்தும், அவரை ஸயீது தேடிவருகிறதைப்பற்றியும், அவனுக்கு உதவிசெய்யவேண்டுமென்றும், மிஸ்றின் தேசாதிபதி முஹம்மது அலி பாஷா அவர்களுக்கொருகடிதமெழுதி ஸயீது கையிற்கொடுத்தார். அந்திருபத்தை அவன் வாங்கிக்கொண்டு பயணத்துக்குத் தயாரானான். அப்போது சூரியன் உச்சிசாய்ந்திருந்தது. உடனே ஸயீது அங்குள்ள சகலரிடத்திலும் பயணஞ்சொல்லிக்கொண்டு, குதிரை மேல் சவாரி யாகி, பைத்துத்தீனை விட்டுப்புறப்பட்டு மிஸ்றை நோக்கிச் சென்றான். அவனுடைய நாட்டம்நிறைவேறும்படி சகலரும் கடவுளை வேண்டினார்கள். பிறகு, ஸல்மாநாயகி எழுந்துநின்று, அமீரைப்பார்த்து: "நாயகமே ! இச்சமாசாரத்தை என்மகன், கரீபுக்குத்தெரிவிக்காதிருக்க வேண்டுகிறேன். நாம் அவனுக்கறிவித்தபிறகு அவனுடைய தந்தையரைக்கண்டுபிடிக்கக் [illegible] போனால், அவன் இரம்பக்கலங்குவான். அவனுக்குத் [illegible]யது நாமேயாவோம். அப்படிக்கெல்லாம் வராமல் கடவுள் காப்பாராக. அவனின்தந்தையரை நாம்கண்டுபிடித்தபிறகு, அவர்களின் அந்தரங்கத்தை அவனுக்குச்சொல்லுவோம். இதுவரையில் தங்களையே தந்தையரென்றெண்ணியிருக்கிறான். ஸயீது, மிஸ்றுக்குச்சென்று அங்குநடக்கும் விஷயங்களை, நமக்கவன்தெரியப்படுத்துகிறவரையில் அவனுடையஎண்ணப்படிக்



கே விட்டு வைப்போம்" என்று, அமீர்பஷீரிடத்தும் மற்றவர்களிடத்தும் கேட்டுக்கொண்டார்கள். அவர்களடங்கலும் சம்மதவாக்களித்தார்கள்.

ஜமீலாநாயகியும், அமீர்பஷீரின் பெண்சாதியும் அமீரிடத்தில்விடைவாங்கிக்கொண்டு, வெளியே வந்தார்கள். அமீரின் மனைவியர், தன்பழயபாங்கியாகிய ஸல்மாவை விட்டுப்பிரியாதவர்களாகவிருந்து, ஸல்மாவின் பெற்றோர்களடைந்த துயரத்தையும் அவர்களின் மரணங்களையும் விபரித்துக்கூறி, ஸல்மாநாயகியின் சங்கதிகளை விவரித்துக் கேட்டார்கள். ஸல்மா நாயகி ஆதிதொடங்கி அந்தம்வரையில் எடுத்தோதினார்கள். ஸல்மா நாயகி, பெற்றோரின் செய்திகளைக்கேட்டு மிகவுந் துக்கித்தார்கள். அமீரின் மனைவியர் தேறுதல் கூறினார்கள். அமீரின் மனைவியர் தன்பழய தோழியைக்கண்டதனாலுண்டான ஆனந்தத்திற் கோர் எல்லையில்லாதவர்களாயிருந்தார்கள். நிற்க;

கரீபு, தன்தந்தையரின் காரியங்களில் ஒன்றையும் அறிந்தவரல்லர். ஸயீது, கரீபிடத்தில் பிரயாணவிடைவாங்குகின்றபோது கரீபு, புதுமையுடையவராக "நீர் எங்கே போகிறீ" ரென்றுகேட்டார். ஸயீது "மிஸ்றுக்" கென்று கூறிப்போனான். அதைப்பற்றி கரீபு தன் தாயாரிடத்தில் கேட்டார். அதற்கு, மிஸ்றின் தேசாதிபதியிடத்திற்கு ஒரு முக்கிய விடயத்திற்காக அமீர்பஷீர் அனுப்பியிருக்கிறார்களென்று கூறினார்கள். கரீபு, அச்சொல்லை நம்பியிருந்தார்.

ஸயீது, தன் எஜமான் பிரின்ஸ் அமீன்பே, இந்தலிபனான்நாட்டிற்குவருமுன், தான் இங்குவருகிறதில்லை யென்று தனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு புறப்பட்டான். அவன் உரோசமும், விடா முயற்சியும், கூர்ந்த புத்திசாதுர்யமுமுள்ளவன். அவன் "காஹிறுவுக்கு வந்தவுடனே, அதற்கு முன் அவ்வூரில் தானிருந்த நிலைமைகளை யெண்ணிப்பார்த்து, அவ்வூரின் பலபாகங்களையும் நன்றாயறிந்தவனாதலால் தேசாதிபதியைக் காணுதற்காக, அவரின் மாளிகையை முன்னோக்கிச் சென்றான். இடைவழியில், தேசாதிபதி இம்மாளிகையிலில்லை; சிலநாளாக "ஷிப்ரா" மாளிகையிலிருக்கிறார்களென்று கேள்வியுற்று, அம்மாளிகைக்குச் சென்றான். அம்மாளிகை வாசற்காவலாளன், இவன் வந்தகருமத்தைப் பற்றி விசாரித்தான். அதற்கு ஸயீது, "தேசாதிபதியவர்களுக்கு நிருபங் கொண்டு

வந்திருக்கிறேன்; நேரில்கண்டு கொடுக்க வேண்டும்" என்றான். காவற்காரன் அச்செய்தியை, தேசாதிபதிக்கறிவித்தான். ஸயீதை உள்ளே விடும்படிக்கு, தேசாதிபதி கட்டளை கொடுத்தார். ஸயீது உள்ளேபோய், அமீர்பக்ஷீரின் நிருபத்தை தேசாதிபதி யிடத்திற் கொடுத்து, அவரின் கையை முத்தமிட்டு நின்றான். அவர் நிருபத்தை முத்திரையுடைத்து வாசித்த பிறகு, ஸயீதை நோக்கி, "ஏடா! நீ, அமீன் பேயின் அடிமையாகிய, " ஸயீதா? என்று கேட்டார். ஸயீது "ஆம், எஜமானே" யென்றான். அப்போது தேசாதிபதி; "ஸயீதே! இதுவரையில் நீ யெங்கிருந்தாய்? ஆச்சரியம். உன்னுடைய எஜமான் தன்மனைவிமக்களிருக்கு மிடத்தையறியாத நிமித்தம், இனிமேலும் சீவனோடிருக்கப் பிரியப்படாமல், மரணத்தை அபேட்சித்து, (Soudan) சூதானுக்குப் போய்விட்டார். அக்காரணம்பற்றியே தற்கொலை புரிந்து கொள்ளவும் நாடினார். அப்படிச் செய்துகொள்வது சுத்தவீரர்களின் இலக்கணமல்லவென்று நினைத்து, அவ்வெண்ணத்தைத் தவிர்த்து, மரணம் அதிகமாக வுண்டாகும் தலத்திற் சென்று, சிறந்த மரணத்தையனுபவிக்க வேண்டு மென்று தீர்மானித்து, என்னிடத்தில் முறையிட்டுக் கொண்டார். அவ்வெண்ணத்தை விட்டொழிந்திருக்கும் படிக்கு நான்கூடியவரையில் சொல்லித்தடுத்தேன்.

"அவர் ஒரேபிடிவாதமாக, தன்நாட்டத்தையே ஸ்திரப்படுத்தவேண்டினார். அதனால், சூதானியருடன் யுத்தம் புரியச்சென்றிருக்கும் என்புத்திரன் இஸ்மாயீலுக்கு அனுப்பப்பட்ட, உதவிப் போர்வீரர்கள் கூட, உன் எஜமானையும் அனுப்பி யிருக்கிறேன்" என்றார். இதை ஸயீது கேட்டு, முகத்தி லறைந்துகொண்டு, இரம்ப வியசனமுற்று, தலைகவிழ்ந்திருந்து யோசித்து, "குற்றமல்ல நன்மையா யிருக்கப்போது" மென்று தன்னுக்குள்ளே நினைத்துக்கொண்டு, தேசாதிபதியைப் பார்த்து. "எஜமானே! சூதான் தேசம் மஹாவிசாலமான பூமியாதலால், அவர்கள் தற்போது, எத்திசையிலிருப்பார்களென்றத் தாங்களறிவீர்களா ?. என்று கேட்டான்.

அதற்கு தேசாதிபதி: "என் உத்தேசம் (Khartoum) கர்தூமுக்கும், (Sen-naar,) ஸன்னாருக்குமிடையிலிருக்கலாமெனக்கூறி, இக் கேள்வியில் என்னபிரயோஜனமிருக்கிறது"? என்றார். அதற்குஸயீது



"என்னாட்டத்தில் நானே அங்குடைந்து அவர்களைக் கண்டு சந்திக்கவேண்டும், அல்லது அவர்களுக்குச் சம்பவித்ததை எனக்கும் சம்பவிக்கவேண்டுமென்று ஆசாபடுகிறபடியால் அவ்வெல்லையை விசாரித்தேன்" என்றான். தேசாதிபதி: ஸயீதே! அத்தேசத்தில் நிப்பான அநேக கஷ்டங்களிருக்கின்றன. ஆதலால், அங்குதனித்து நன்றியாக ஒருவன்போக சக்திபெற மாட்டானே" யென்றார். ஸயீது புன்னகை கொண்டு, "தேசாதிபதியே! தங்களின் இவ்வடிமை அத்தேச பூமியை ஒரு சாணிடம் விடாமல் திர்க்கமாகத் தெரிந்திருக்கிறான். அத்தேச பாஷையும், அவர்களின் நடவடிக்கைகளும், எனக்கு விளக்கமாகத் தெரியும். அவர்களுடன் நானும் கலந்திருந்து இரகசிய சமாச்சாரங்களை யறிந்து, தங்களுடைய சேனாதிபதிகளுக்குத் தெரிவிக்க கடவுளின் கிருபையால் கூடியவனாயு மிருக்கிறேன். அதுவே யென்னுடைய நாட்டமும்" என்று கூறினான்.

பின்பு தேசாதிபதி தன்மகன் இஸ்மாயீல் பாஷாவுக்கு ஸயீதைப் பற்றியும், அவன் அங்கு வருவதைப்பற்றியும், வேறு சில போதனையைக் குறித்தும் ஓர் கடிதமெழுதி, ஸயீதிடத்திற்கொடுத்தார். அவன் அதைவாங்கி, தன் உட்சட்டைச் சாக்கில் பத்திரமாக வைத்து, தேசாதிபதியிடத்தில் விடைவாங்கிக் கொண்டு வெளிப்பட்டு, தன்னுடைய எஜமான் தற்கொலை புரிந்து கொண்டாரோ? அல்லது அவருக்கு என்ன துன்பம் சம்பவித்ததோ? எனப் பலவாறு சிந்தித்தவனாகவே, தன்பிரயாணத்திற்காக தலைமுதல் பாதம் வரையில் கொழுப்புப்பூசி, தலைமயிரைத் திரித்துச் சடையாக்கிப் பின்புறம் விட்டு, மேல் மிஸ்றில் செய்யப்பட்ட பருத்து முழங்காலுக்குப் புடவையுடுத்து, சூதான் தேசத்து தோற்கேடகமொன்றும், அத்தேசத்து வாளொன்றும், சூதான் கைக் கத்தியொன்றும் சேகரித்து, விரைந்து நடக்கக்கூடிய ஒட்டகை யொன்றின்மேல் இலேசான சுமையேற்றி, அதனிருபுறமும் நல்லதண்ணீர் நிறைந்த தோற்பைகளைப் போட்டு, (Upper Egypt) மேல் மிஸ்றுபுகையிலை ஒரு தகரப்பெட்டியும், மற்ற தேவையான தின்பண்டங்களும் தயார்ப்படுத்தி வைத்துவிட்டு, பைத்துத்தீனிலிருக்கும் தன் எஜமானியாகிய ஸல்மாநாயகிக்கு கடிதமெழுதி யனுப்பினான். மறுநாள் காலையில் தன் எஜமானுடன் சென்ற போர் வீரர்களின் காரிய பாகங்களையும், தன்னெஜமானின் சுலைமான் என்ற

புதுப்பெயரையும் அறிந்து கொண்டு, முதலுள் சேகரித்த ஆயுதங்களணிந்து, ஒட்டகையில் ஏறி, கர்தூமை முன்னோக்கி ஒட்டகையை நடத்தினான்.

ஆனால், முதலில் கீழ்த்திசைப் (Sahara) பாலையின் (Nile) நீல் நதிக்கரையோரமாக குரூஸ்கூவுக்குப்போய், அங்கிருந்து உத்மூர் பாலைவழியாக (Abuhammad) அபூஹம்மதின் ஊடாக (Berber) பர்பரைச் சேர்ந்து, அங்கிருந்து மேற்படி நதிக்கரையோரமாக கர்தூமுக்குப்போய்ச் சேரவேண்டும் என்பதே அவனுடைய கருத்தாயிருந்தது.

## 25-வது அந்தியாயம்.

## அமீன்பேயைத் தேடல்.

(ஸயீதை கர்தூமுக்குச் சென்றவனாக விட்டு விட்டு, பைத்துத்தீனளவில் மீளுவோம்.)

ஜமீலா நாயகி, ஸயீது திரும்பிவருவதை வழிபார்ப்பதில் பராக்காகி, அக்கினியில் வீழ்ந்தபுழுப்போல் துடிதுடித்துக் கொண்டிருந்தார்கள். அவன் சூதானுக்கு யாத்திரையானதை, அவர்கள் அறியமாட்டார்கள். அவன் மிஸ்றில்தானிருக்கிறனென்றும், ஒருமாசத்திற்குள் திரும்பிவருவானென்றும், எண்ணியிருந்தார்கள். இரண்டு மூன்று வாரங்களும் ஆய்விட்டன. அவனுடையசமாச்சாரம் கிடைக்கவில்லை. நான்காம் வாரத்துவக்கத்தில் மிஸ்றிலிருந்து தபால் மூலமாக அவனுடைய கடிதமொன்று ஜமீலாநாயகிக்குக்கிடைத்தது.

### கடிதம்.

“சர்வலோகரக்ஷகக் கடவுளையும், அவரின் உண்மைத்தூதர், தீர்க்கதரிசிகளின் நாயகர், முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களையும் துதித்துப்புகழ்ந்தபிறகு, மேன்மை பொருந்திய என் எஜமானியாகிய, ஜமீலா நாயகியே! தங்களின் கரகமலத்தை முத்தமிட்டவனாக, எழுதிக்கொள்ளும் சமாச்சாரங்களாவன:—

“நான் காஹிருவுக்கு வந்து, என் எஜமானவர்களைப்பற்றி விசாரித்தேன். சூதானியரை அடக்கச்சென்றிருக்கும் இஸ்மாயீல் பாஷாவுக்குதவியாக அனுப்பப்பட்ட போர்வீரர்களுடன், என் எஜமானவர்களும் சேர்ந்துபோய் சிலமாசங்களாகின்றனவாம். தாங்கள் சிவித்திருப்பதை, அவர்கள் அறியக் கூடாதிருந்த நிமித்தம் பற்றியே, உயிர்த்திருக்க மனமில்லாமல் அங்குபோயிருக்கிறார்களாம். தற்கொலை புரிந்துகொள்ளவும்நினைத்தார்களாம். பின்பு அந்நாட்டத்தை ஒழித்து, யுத்தகளத்தில் சிறப்பான மரணமடைய நாடிப்புறப்பட்டார்களாம். ஆகையால், அதைப்பற்றித்தாங்கள் அஞ்சவும்கவலைப்படவும் வேண்டாம். இதோ நான், தேசாதிபதிமுஹம்மது அலிபாஷா அவர்களிடத்தில் அவர்களின் புத்திரர், இஸ்மாயீல் பாஷாவுக்கு கடிதம் வாங்கிக்கொண்டு, என் எஜமானைத்தேடப் புறப்படத் தயாராகிவிட்டேன். கடவுளினுதவியால், இரண்டு மாசத்திற்குள் என் எஜமானுடன் நானும் தங்கள் சமூகம் வந்து சேருகிறேன்.”

இங்ஙனம், தங்களின் அடிமை

ஸயீது

ஸயீதின் கடிதத்தை ஜமீலாநாயகி வாசித்தபோது, அவர்களின் மனம்பதறிக் கலங்கினார்கள். அமீர்பஷீரின் மனைவியருக்கு அக்கடிதத்தைக் காண்பித்தார்கள். அவர்கள் அமீர்பஷீருக் கறிவித்தார்கள். அவர் ஜமீலாநாயகியை வரவழைத்து, சமாதான வார்த்தைகளைச் சொல்லி அவர்களைத் தேறுதலாக்கினார். அவ்வாறாக இரண்டுமாசங் கடந்துவிட்டன. ஸயீதிடத்திலிருந்து யாதொரு சமாச்சாரமும் வரவில்லை. அதனால் ஜமீலாநாயகி இரம்பக் கிலேசமடைந்து, யாதொன்றிலும் மனம்சேராதவர்களாகவும், நிலையற்றவர்களாகவுமிருந்தார்கள். அவர்கள் பல விஷயங்களையும் நினைத்து நினைத்து, கலக்கத்துக்குமேல் கலக்கமுண்டுபட்டவர்களாகி, அமீர்பஷீரிடத்தில் வந்து, அவரின்கையை முகர்ந்து கொண்டு, தன்கலக்கத்தை முறையிட்டார்கள். அதற்கு அமீர் பஷீர்: “அவ்விஷயத்தின் உண்மையை மிஸ்று தேசாதிபதியிடத்தில் எழுதிக்கேட்டுத் தெரிவிக்கிறேன்” என்று ஸல்மாவுக்கு வாக்களித்தார்.

இரண்டுவாரத்தின் பிறகு, மிஸ்று தேசாதிபதியின் கடிதம் கிடைத்தது. அதில் அமீன்பேயுடன் சென்ற போர்வீரர்கள், என்மகன் இஸ்மாயீலின் சேனைவீரர்களுடன் சேர்ந்து கொண்டு, உணைக்களையும், சேனைகளையும் சேகரப்படுத்தற்காக, சகலரும் கர்தூமின் வடதிசையை நோக்கிப்போகின்றார்கள். தங்களுடைய தூதன் ஸயீது, (Shendy) ஷெண்டி பக்கத்தில் அவர்களைக் கண்டுகொள்ளுவானென்றெண்ணுகிறேன். அவனை யாரும்பயமுறுத்தி அவனுக்குத்

தீங்குண்டாக்காதிருப்பதற்காகவும், அமீன்பேயை அவனிடம் ஒப்பிக்கும் படியாகவும், என்மகன் இஸ்மாயீலுக்கு ஒரு கடிதமெழுதி அவனிடத்தில் கொடுத்திருக்கிறேன்" என்றெழுதியிருந்தது.

அமீர் பஷீர் அக்கடிதத்தை ஜமீலாவுக்குக் காண்பித்தார். ஜமீலா நாயகி அதைப்பார்த்தபிறகு கொஞ்சம் தைரியமடைந்து, கடவுளின் உதவியால் தனக்கு நல்ல சமாசாரங் கிடைப்பதைஎதிர்பார்த்திருந்தார்கள். கரீபு இச்சம்பவங்களில் ஒன்றையும் அறியமாட்டார். அமீர்பஷீரின் மக்களுடன், கல்வி கற்பதிலும், குதிரை யேற்றத்திலும், யுத்தப்பயிற்சியிலும் பராக்காயிருந்தார். அவரின் புத்தி சாதுரியமானது சகலரையும் அவர்பேரில் பட்சங்காட்டச்செய்து விட்டது.

சிலநாளைக்குப் பிறகு, இஸ்மாயீல் பாஷாவும், அவர்களுடனிருந்தவர்களும், ஷெண்டியில் சதிக்கொலைபுரியப்பட்டார்களென்ற ஓர்சமாசாரம், மிஸ்றில் அங்கு வந்தது. அச்செய்தியை ஆரம்பமாகக் கேள்விப்பட்டவர் அமீர்பஷீரே. அமீன்பே, இஸ்மாயீல்பாஷாவுடனிருந்ததை அவர் அறிந்திருந்தவராதலால், கொல்லப்பட்டவர்களுடன் அவருங்கொல்லப்பட்டிருப்பாரென்றெண்ணி, அதைஜமீலாவுக்கறிவித்தால், அவர்களுக்குத் தீங்குண்டாகுமென்பதைப் பயந்து, அவர்களுக்குச் சொல்லாமல் மறைத்து, தன்பெண்சாதிக்கு மட்டிலும் சொல்லி, ஜமீலாவுக்குச் சொல்லவேண்டாமென்று தடுத்திருந்தார். ஆனால் அச்சமாசாரம் சிலநாளைக்குப்பிறகு, பைத்துத்தீனில் பிரஸ்தாபமாகி, ஜமீலாநாயகியின் செவிக்கும் எட்டிற்று. அதனால் அவர்கள் தன்புருடரை எப்போதாகிலுங் கண்டுகொள்ளலாமென்று வைத்திருந்த ஆதரவு முற்றுகநீங்கி, அதிக கலக்கத்தை அவர்களுக்குண்டாக்கிவிட்டது. நினைத்தபோதெல்லாம் அமீர்பஷீரிடத்திற்குவர உத்தரவு பெற்றிருக்கிறபடியினாலே, ஜமீலாநாயகி உடனே அமீரிடத்து வந்து, தான் கேள்விப்பட்டதைச் சொன்னார்கள்.

அமீர் பஷீர்: "ஸல்மா!" எனவிளித்து, "அச்சமாசாரம் சில நாள்களுக்குமுன்னரே எனக்கெட்டியிருக்கிறது. அதின் உண்மையை நாம் அறிகிறவரையில் ஒன்றையும் தீர்மானிக்கக்கூடாது. ஆதலால், மிஸ்றின் தேசாதிபதி முஹம்மதுஅலிபாஷா அவர்களுக்குஅவர்களின் புத்திரர் இஸ்மாயீல்பாஷாவைப்பற்றி,சலிப்பாற்றுக்



கடிதம் எழுதப்போகிறேன். அதில் தங்களின் புருடருடைய சமாசாரத்தைத் தெரிந்தமட்டில் அறிவிக்கும்படிக்கு எழுதிக்கேட்கத் தீர்மானித்திருக்கிறேன்" என்று சொன்னார். இதைக்கேட்ட ஸல்மாநாயகி பெருமூச்செறிந்து, வாய்பேசாது அழுதுகொண்டிருந்தார்கள்.

சற்று நேரத்தின் பிறகு, ஸல்மா நாயகி அமீர்பஷீரைப்பார்த்து, "என் நாயகமே! உண்மையாக என்னிதயம் இவ்வளவு கஷ்டத்தையும், துயரத்தையும் அடைந்தும் நிடப்படவில்லை; அவர்கள் சீவித்திருப்பார்களென்னும் ஆதரவு அற்றுப்போயிருந்தபடிக்கிருந்தேனில்லையே. மாறியும் அவர்கள் உயிரோடிருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தேனில்லையே. முதலில் அவர்கள் சீவித்திருப்பார்களென்னும் ஆதரவு பற்றற்றுப்போனபடியால், அவர்களைப்பற்றிய எண்ணம் எனக்கில்லாதிருந்தது. பிற்பாடு அவர்கள் உயிரோடிருக்கிறார்களென்று கேள்வியுற்று,எப்போதாவது அவர்களின் சந்திப்பு கிடைக்குமென்று நம்பியிருந்தேன். இப்போது முன்னையைப் போலவே ஆதரவற்றுப்போக நேர்ந்ததால், துயரத்துக்குமேல் துயரமும், கவலைக்குமேல் கவலையும் அடைய லபித்தது.

"இவ்வாறாக எனக்கு கவலையும்,கஷ்டமும்,உண்டுபட்டுக்கொண்டிருப்பது, நான் என் சிறுவயசில் என் பெற்றோருக்குச் செய்த பெரும் பிழையின் பிரதியாக்கும். ஆ! கடவுளே! இத்தனை துயரத்தையுஞ் சுமக்க என் இதயத்திற்கு சக்தியில்லையே. நானென்ன செய்வேன்" என்றலறி, அமீர்பஷீரின் காலில் வீழ்ந்தழுதார்கள். இதைப்பார்த்த அமீரின்மனைவியரும் துணையாக அழத்தொடங்கினார்கள்.

உடனே அமீர் பஷீர் எழுந்து, ஸல்மாவின் கையைப் பிடித்து, தூக்கியிருப்பாட்டி, "என் அருமந்தச் சகோதரியாகிய ஸல்மாவே! இதோ அவ்விஷயத்தைக் குறித்து, மிஸ்றுதேசாதிபதியவர்களுக்கெழுதிக் கேட்கப்போகிறேன். இரண்டு வாரத்தில் உண்மையான செய்தியை அறிந்துகொள்ளலாம். தாங்கள் அழவேண்டாம். பொறுதிசெய்யுங்கள்" என்று, அனேக தேறுதல் கூறினார். அதற்குப் பிறகு, ஸல்மாநாயகி அமீரின்சமுகம் விட்டெழுந்து, தன்னிடத்திற்குப் போக ஆரம்பித்தார்கள். அமீரின்மனைவியரும் தேறுதல் சொல்லிக்கொண்டு, கூடவே போனார்கள். எவ்வளவு தேறுதற்

கூறினும் அவர்களின்மனம் பதப்படவில்லை. மேற்கூறியபடிக்கே, அமீர்பஷீர் மிஸ்றுதேசாதிபதிக்குக் கடிதமெழுதியனுப்பினர்.

இரண்டு வாரத்தின்பிறகு, அக்கடிதத்திற்கு மறுமொழி கிடைத்தது. அதில், "கடிதங்கள் மூலமாகவும், ஆள்மூலமாகவும், எனக்குக் கிடைத்த சமாசாரங்களில் அமீன்பேயைப்பற்றி யாதொன்றும் சொல்லப்படவில்லை. அச்சதிக்கொலைக்குத் தப்பிவந்த சிலரிடத்தும், அவரைப்பற்றி விசாரித்தேன். அவர், இஸ்மாயீலின் சேனைத்தலைவர்களுட னிருந்ததாகவும், சதிக்கொலைக்குப்பிறகு அவரைக் காணவில்லை யென்றும், அக்கொலையிலகப்படாதவர்கள் அதிக சொற்பமென்றும், அவர்கள் பலபக்கத்திலுஞ் சிதறுண்டார்க ளென்றுஞ் சொல்லுகிறார்கள். ஆகையால், நம்மால் யாதொன்றையும் தீர்மானப்படுத்தக் கூடவில்லை. அமீன்பே தப்பிப்பிழைத்தோடினாரோ? கொல்லப்பட்டாரோ? கடவுள் நிரம்ப அறிந்தவர்" என்று எழுதப்பட்டிருந்தது.

அக்கடிதத்தை அமீர்பஷீர் பார்த்தபிறகு, அமீன்பே மரணத்தைநாடி, குதாவுக்குப்போயிருக்கிறாரென்று, ஸயீது எழுதிய கடிதத்தின் ஞாபகம் வந்தபடியினாலும், அவர் இஸ்மாயீல்பாஷாவின் தளகர்த்தருள் ஒருவராயிருந்ததை அவர் அறிந்தவரானதாலும், அமீன்பே கொல்லப்பட்டிருப்பாரென்றே தீர்மானித்துக்கொண்டார். ஸல்மாநாயகி, மிஸ்றிலிருந்து மறுமொழிக்கடிதம் வருகிறவரையில் பொறுதிசெய்யக் கூடாதவர்களாகக் கவலையில் மூழ்கி, அதையே வழிபார்த்துக்கொண்டிருந்தார்கள். இரண்டு வாரஞ் சென்றபிறகு, அமீர்பஷீரிடத்தில்ஸல்மாநாயகிவந்து, அதைப்பற்றிக் கேட்டார்கள்.

அமீர் பஷீர் அக்கடிதத்தைமறைக்க நாடினர். "சொல்லத்தான் வேண்டு" மென்று பிடிவாதஞ் சாதித்தார்கள். அதற்குஅமீர்பஷீர்: "ஸல்மாவே! மிஸ்றுதேசாதிபதி யிடத்திலிருந்து கடிதம் வந்தது. தங்கள்புருஷரின் சமாசாரம் யாதொன்றும் அறியப்படவில்லை யென்றும், ஷெண்டியில் இஸ்மாயீல்பாஷாவின் படைகளுடன் திட்டமாக இருந்தாரென்றும், எழுதியிருக்கிற" தென்றார். ஜமீலா அச்சொல்லை நம்பவில்லை. அமீர்பஷீர் கடிதத்தைக்காண்பித்தார். ஜமீலாநாயகி அக்கடிதத்தைப் பார்த்து, ஹா! வென பெருமூச்சு விட்டு, கண்ணீர்ச் சொரிந்து, அமீரின் முன்னுக்கு அழுகையை



அடக்கிக்கொண்டு, உடனே யெழுந்துபோய், தன்னறைக்குட்புகுந்துகதவடைத்துக்கொண்டு, தன்விதியை நினைந்து முகத்திலடித்துக்கொண்டு, கதறிப்புலம்பி யழுதுகொண்டிருந்தார்கள். ஸல்மாநாயகி வெடுக்கென் றெழுந்து போனதைக் கண்ட அமீர்பஷீர், ஸல்மாநாயகி தனித்த விடத்திற்குப் போய், அழப்போகிறார்களென்று யூகித்தறிந்து அச்சமுற்று, தன்மனைவியாரிடத்தில் காரியபாகங்களைச் சொல்லி, "ஸல்மா இடத்திற்கு இப்போதே சென்று, துயரத்தின் கடிசால் அவர்களுக்குத் தீங்கணுகாதிருக்கும் படியான தேறுதல்களைச் சொல்லுங்க" ளென்று கூறினர்.

உடனே அவர்கள் ஸல்மாவின் அறைக்கு வந்தார்கள். அறைக்கதவு உட்டாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. உள்ளே அழுகுரற் சத்தங்கேட்டது. அமீரின் மனைவியார் கதவை மிருதுவாகத் தட்டி, "ஸல்மாவே!" எனக்கூப்பிட்டார்கள். அப்போது ஸல்மாநாயகி அழுகையை நிறுத்தி, ஜவாபுகொடுத்து, கதவைத்திறந்தார்கள். ஸல்மாநாயகி, பார்ப்பவர்கள் அழக்கூடிய ஸ்திதியிலிருந்தார்கள். அமீரின் மனைவியார் தனக்கு வந்த பொங்காரத்தை யடக்கிக்கொண்டு, ஸல்மாவின் அறைக்குட் புகுந்து, "என் சோதரியே! ஸல்மாவே! தங்களுடைய புருஷர், காஹிருமலைக்கோட்டைக்குள் கொல்லப்பட்டார்களென்று நீங்கள் தீர்மானித்துக்கொண்டபிறகும், சீவித்திருக்கிறார்களென் றறிந்ததை நினைவுகூர்ந்துபாருங்கள்.

"அதுபோல, இப்போது நாம் கேள்வியுற்றதைக்கொண்டு அவர்கள் கொல்லப்பட்டார்களென்று தீர்மானிக்கக்கூடாது. முன்போல நாமறியாத ஒருகாரணத்தினிமித்தம், அச்சதிக்கொலைதானத்திற்குப் பிந்திப்போயிருக்கவுங் கூடுமாதலின், அவ்விஷயத்தில் தாங்கள் பொறுதி செய்யுங்கள். கடவுள் பொறுதி செய்தவர்களுட னிருப்பாரென்று, அனேகதேறுதல்கூறினார்கள். அதற்கு அவர்கள் அழுகையின்கடினால் கொவ்வைப்பழம்போன்று செவந்திருந்த கண்களால் அமீரின்மனைவியாரை நோக்கி, "என்னருமைத்தோழியே! தாங்கள் சொன்னவைகளை நான் அறியாதவளல்ல. ஆயினும் அவர்கள் சீவித்திருப்பார்களென்று நான் ஆதரவுவைத்த அந்நாளை நினைத்து கைசேதப்படுகிறேன். அவர்களின் விஷயத்தை நிச்சயப்படுத்தக் கூடாதென்ற தங்களுடைய யோசனையை என்மனம் ஒப்புக்கொள்ளவுமில்லை. அவர்கள் பரலோகமடைந்திருப்பார்கள் என்பதை

சந்தேகிக்கவுமில்லை"யென்றுசொல்லி தன்கைக்குட்டை நனையும்படி
தேம்பித்தேம்பி யழுதார்கள்.

ஸல்மா நாயகி,தன் கைக்குட்டையால் கண்ணீர் துடைப்பதை
அமீரின் மனைவியர் கண்டு, "நாம் நிகூஷயத்தை யறியாதிருக்கும்
போது இலேசான கேள்வியைக்கொண்டுஒருவிஷயத்தையெவ்வாறு
ஸ்திரப்படுத்துகிறது;ஸல்மாவே!எவ்விஷயத்தையும் கடவுளிடத்தில்
பரஞ்சாட்டவேண்டிய கடமையுடைய நாமாயிருப்பதால், நாம்
வைத்திருக்கிற ஆதரவை 'முறித்துவிடக்கூடாது" என்று சமா
தானங்கூறினார்கள்.

ஸல்மா நாயகி சற்றுநேரம் அழுகையை நிறுத்தி, அமீரின்
மனைவியரைப் பார்த்து, "என் எண்ணத்தை ஊர்ஜிதப்படுத்தும்
படியான ஒன்றை, இதோ தங்களுக்குக் காண்பிக்கிறேன்" என்று
கூறி, தன் கைப்பெட்டியைத் திறந்து ஒருகடிதத்தை யெடுத்து
அவர்கள் கையிற் கொடுத்தார்கள். அவர்கள் அதை வாங்கிப் பார்த்
தார்கள். அது, ஸயீது மிஸ்றிலிருந்து எழுதிய கடிதமாக விருந்தது.
அதில், தன் எஜமான் அமீன்பே அவர்கள் தன்மனைவியரைக் கண்டு
பிடிக்கக், கூடாதிருந்ததினால் ஜீவித்திருக்கப் பொறுக்கப்படாமல்
தற்கொலை புரிந்துகொள்ள நாடினதாகவும், பின்பு அப்படிசெய்யக்
கூடாது, யுத்தகளத்திற் சென்று மரணமடைவதே நலமென்று
கண்டு, அதற்காக சூதானுக்குப் போயிருக்கிறதாகவும் எழுதியிருந்
தது.

அக்கடிதத்தை அமீரின் மனைவியர் பார்த்தபிறகு, அவர்களை
ஸல்மா நாயகி நோக்கி, "மரணத்தில் வேட்கைவைத்து யுத்தத்துக்
குச் சென்ற, அவர்களுடனிருந்த போர் வீரர்கள் கொல்லப்பட்ட
தாக நாம் அறிந்திருக்கிறபோது, அவர்கள் மட்டில் தப்பிப்பிழைத்
தார்களென்று நீங்கள் நினைக்கிறீர்களோ? ஓட்டம் பிடிக்காமல்
எவ்வாறு தப்பக்கூடும்? மரணத்தை வலியத்தேடிப்போனவர்கள்
ஓடிவிட்டதாக நினைக்க இடமிருக்கிறதா? அப்படிப்பட்ட எண்ண
முடையவர்கள் எண்ணப்படி வாய்த்தபோது, சோபனங்கூறிச்
சந்தோஷத்துடன் முன்னேறுவார்களல்லவா?" என்றுகூறினார்கள்.

அச்சொற்கள் அமீரின் மனைவியருடைய வாயை மூடச்செய்
தது. செய்தாலும், அவர்களுக்கு வேறுயோசனை தட்டுப்பட்டு
ஸல்மாவைப் பார்த்து, "என் அருமைத்தோழியே! இப்படிப்பட்ட



விணெண்ணங்களை அகற்றிவிடுங்கள்; ஸயீது போய் மூன்று
மாசமாகிறது. அவன் இன்னுந் திரும்பவில்லை. அவ்விஷயத்தை
அவன் அறிந்ததாக நமக்கெழுதவுமில்லை. அவன் சூதானிலிருக்
கிறதை நாம் அறிந்திருக்கிறோம். அவ்விஷயத்தின் நயநட்டத்தை
அவனறிந்தால், அதை நமக்கறிவிக்க உடனே அங்கிருந்து புறப்
பட்டு வரமாட்டானா? அல்லது நமக்கெழுதமாட்டானா?இப்போது
தாங்கள் செய்துவருகிறது கூடாத வேலை; அதனால் யாதொரு
பிரயோசனமுமில்லை.

"இன்னுங் கொஞ்சநேரத்திற்குள், தங்களின் புத்திரர் கரீபு
வெளியிலிருந்து வந்துவிடுவார். அவர், தன் தகப்பனாரின் விஷயங்
களொன்றையும் அறியாதிருக்கிறார். தாங்கள் இக்கோலத்திலிருப்
பதை அவர் கண்டால், இரம்பக்கலங்கி, தங்கள் அழுகையின் கார
ணத்தைக் கேட்கக்கூடுமல்லவா. அப்படிக் கேட்டால் அதின் கார
ணத்தை உள்ளபடிச்சொல்லத் துணிவீர்களா"? என்று கேட்டார்
கள்.

அதற்கு ஸல்மா நாயகி, "மாட்டேன், மாட்டேன்,ஒருக்காலுஞ்
சொல்லமாட்டேன். ஆதிமுதல் அவனுக்கு அவ்விஷயங்களை மறைத்
திருக்கும்படி உதவிபுரிந்த கடவுளைத் துதிக்கிறேன். அவனறியா
திருப்பதுபோல நானும் அறியாதிருந்தேனில்லையே. நான் அறிந்ததில்
தான் என்ன பிரயோசன மிருக்கிறது? துயரத்தையும், கலக்கத்
தையும், புதுப்பித்து வைத்ததே ஒழிய வேறில்லையே" என்றார்
கள்.

உடனே அமீரின் மனைவியரெழுந்து, ஸல்மாநாயகியின் கை
யைப்பிடித்து, "என் அருமைத்தோழியே! எழுந்திருங்கள். நா
மிருவரும் நம்மிருதயங்களை ஆரோக்கியப் படுத்துவதற்காகவும்,
இக்கோலத்தில் தங்களை கரீபு காணாதிருப்பதற்காகவும், சிங்கார
வனத்துக்குப் போவோம்" என்றழைத்தார்கள்.

ஸல்மா நாயகி, தன் கண்ணீரைத் துடைத்து, உடைகளை ஒழுங்
குபடுத்திக்கொண்டு, அமீரின் மனைவியருடன் சிங்காரவனத்திற்கு
வெளிவாசல் வழியாகச் சென்று, ஆரோக்கிய மண்டபத்தில் இரு
வரும் உட்கார்ந்தார்கள். ஒருமணித்தேசகாலம் வரையில் அமீரின்
மனைவியர் ஸல்மாநாயகிக்குத் தேறுதல் கூறிக்கொண்டிருந்தார்

கள். பொழுதடைந்துவிட்டது. அங்கிருந்து இருவரும் அந்தப்புரத்தை நோக்கி வந்தார்கள்.

அப்போது அமீர்பஷீர், தன் அறையின் தாழ்வாரத்தில் உலாவிக்கொண்டிருந்தார். இவர்களிரண்டுபேரையுங் கண்டு, தன்னிடத்தில்நெருங்கிவரச் சைகைகொடுத்தார். அவ்விருவரும் அமீர்பஷீரின் சமுகத்தில் வந்து, அவருடைய கையை முத்தமிட்டு நின்றார்கள். ஸல்மாவின் முகத்தை அவர் பார்த்தார். வியசனகரத்தினால் வாட்டமுற்றிருந்தது. அமீரின் சங்கைக்காக ஸல்மாநாயகி, தன் முகத்தில் சமாளக்குறி காட்ட, கூடியமட்டில் முயன்றார்கள். முகமலர்ச்சியுண்டாகவேயில்லை.

அமீர்பஷீர்: "ஸல்மாவே! உங்களுக்குண்டபட்டிருக்கிற சலிப்பில் நானுங் கூட்டுறவாக விருக்கிறேன். ஆனால், அக்காரியத்தை உறுதியாக நாம் அறியாதிருப்பதால் அவ்வளவுதூரம் சலிக்கக் கூடாது. சமீபத்தில் மிகவும் சுகிர்தமுள்ள ஒருவரை நான் மிஸ்றுக் கனுப்பப்போகிறேன். மஹா யூகசாலியாகிய அவர், மிஸ்றுக்குப் போய் நிச்சயசெய்தி அறிந்துவந்து, நமக்குத் தெரிவிப்பார். ஆகையால், நீங்கள் யாதொன்றிற்கும் அஞ்சவேண்டாம்" என்றுகூறினார்.

இதைக் கேட்ட ஸல்மா நாயகி அமீரை மிகத்துதித்தார்கள். ஆனால், எவ்வளவுதேறுதல்களைக் கேட்டாலும் அவர்களின் மனம் தரிபாடாகவில்லை. மிஸ்றுக்குச்சென்ற அமீர்பஷீருடையமனிதர், "சதிக்கொலை நடந்த நேரம் வரையில், இஸ்மாயீல்பாஷாவுடைய சேனையில் அமீன்பேயுமிருந்தார். அதற்குப்பிறகு அவரைப்பற்றி யாதொன்றும் அறியப்படவில்லை" யென்று முஹம்மதுஅலிபாஷா அமீர்பஷீருக்கெழுதிய கடிதத்தின் சமாசாரத்தை யுறுதிப்படுத்தும்படியான செய்தியைக் கொண்டுவந்தாரே ஒழிய வேறில்லை.

இதையறிந்த ஸல்மா நாயகி, தன் புருஷருடையசிவிப்பின் விஷயத்தில் ஆதரவுவைக்க வழியற்றவர்களாகி, "நாம்தான் என்ன செய்யலாம்; கடவுளின் சங்கற்பத்தைக் கூட்டவுங் குறைக்கவும் யாரால் கூடும்? கூடாதாகலின், நாம்வியசனிப்பதனால் என்னாகப் போகிறது? ஆதிமுதல் அந்தம்வரையில் நம்புருஷருடைய விஷயத்தில் கேள்வியுற்றவைகளைச் சொப்பனமாக வைத்துக்கொண்டு, பொறுதியுடனிருப்போமென்றும், இடைக்கிடை தேறுதல் சொல்லிக்கொண்டுவந்த உண்மையும் விசுவாசமும் உடைய, என்



அடிமை ஸயீது, என் புருஷரைத்தேடிச்சென்றானே. அவனுக்கென்ன தீங்கு சம்பவித்ததோ? எங்கிருக்கிறானோ? எனப் பலவாறு யோசித்துக் கலங்கிப் பரிதபித்து, யாவற்றையும் கடவுளிடத்தில் பரஞ்சாட்டுவதைவிட வேறு வழியில்லை" யென்று தனக்குத்தானே தேறுதல் கூறி, பொறுதியுற்றிருந்தார்கள். நிற்க,

## 26-வது அத்தியாயம்.

## ஸயீதும் உத்மூரும்.

ஸயீதின் சமாசாரத்தை ஆரம்பிப்போம்.)

ஸயீது, காஹிறாவை விட்டு எட்டு நாள் கீழ்ப்புறப் பாலைவனத்தூடாக நடந்து (Assouan) அஸோவானுக்கு வந்து, அங்கிருந்து இரண்டாவது நாள் குரூஸ்கூவையடைந்து, அவ்வூரிலிருந்து முன்னேறிப்போகும் உத்மூர் பாலைநிலத்தில் தண்ணீர் கிடைப்பது கஷ்டமானதினாலும், நெடுநாள் பயணவெளியானதாலும், பலவித ஆபத்துகள் நிறைந்த அகன்ற நிலமானதாலும், பத்துநாளைக்குப் போதுமான தண்ணீரும் தீன்பண்டம் முதலானவைகளும் வாங்கிக்கொண்டு, பாதையறிந்த ஒருவனைத் துணையாகக் கொண்டு போகவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தான்.

அப்படியிருக்கும்போது, மிஸ்றிகளும் (சிரியர்) ஷாமிகளும் சேர்ந்த ஒரு வர்த்தகக் கூட்டத்தார் அங்கு வந்தார்கள். சூதான் தேசம் "இஸ்மாயீல்பாஷாவால் பிடிக்கப்பட்ட பிறகு, மிஸ்றின் தேசாதிபதி முஹம்மதுஅலிபாஷாவுடைய கட்டளைப்படி சூதானில் யானைத்தந்தம், தீக்குருவிபிறகு முதலான விலையுயர்ந்த வர்த்தகச் சரக்குகள் வாங்கப்போகிறவர்களாயிருந்தார்கள். அவர்கள்கூட பாதையறிந்த சிலருமிருந்தார்கள். வழிப்பயணத்திற்கான சகல வஸ்துக்களும் வைத்திருந்தார்கள். அவர்கள் ஸயீதை நெருங்கி வந்தார்கள். அவன் சூதானிபாஷையால் வந்தனங் கூறினான். அவர்கள் மறுமொழி கொடுத்தார்கள். (ஸயீது அவர்களுடன்பேசல்)

ஸயீது:———நீங்கள் எதை நாடிப் போகிறீர்கள் ?

வர்த்தகர்:——கர்தூமையும், அதன் பலபாகங்களையும் நாடிப் போகிறோம. நீ யார் ? எங்கு போகிறாய் ?

ஸயீது:——நான், கர்தூமுக்கு வடக்கே சிலநாட்பயணதூரத்திலிருக்கிற (Metemma) முதிம்மா என்ற ஊரிலுள்ளவன்.

வர்த்தகர்:——ஒரு முக்கிய விஷயத்தினிமித்தம், அங்கிருந்து நீ இங்கு வந்திருக்கக்கூடும்.

ஸயீது:——ஆம், ஒரு, இரகசிய கருமத்திற்காகவே இங்கு வந்தேன். அதுபோலொத்தவிஷயத்தை முன்னிட்டுத் தான் இஸ்மாயீல்பாஷாவிடம் போகிறேன்.

வர்த்தகர்:——(அவன்விஷயத்தில் அவர்களுக்கு மருவுதலுண்டாகி) நீ எங்கள்கூட வருவதை விரும்புகிறோம்.

ஸயீது:——(அவர்களைவிட அவன் அதிக விருப்பமுடையவனானதால்) நல்லது, வருகிறேன்.

என்று பேசிக்கொண்டு, அன்றிரவு குருஸ்கூவில் தங்கி, அதிகாலையில் ஸயீதுள்பட சகலரும் பிரயாணமாகி, ஒட்டகைக் காலடிச்சப்தங் கேட்காத சொரிமணற்பாலையில் நடந்தார்கள். பொழுதுபுலர்ந்த சற்றுநேரத்தின் பிறகு, அக்கூட்டத்தாரை ஸயீது பார்த்துக் கேட்க வாரம்பித்தான்.

ஸயீது:——உங்களிடத்திலிருக்கிற பொதிகளி லென்ன, விருக்கிறது?

வர்த்தகர்:——ஐரோப்பாவின் புடைவைதினிசுகளும், அரிசி, சர்க்கரை, காப்பிக்கொட்டை முதலானவைகளுமே.

ஸயீது:——அவைகளை என்ன செய்யக் கொண்டுபோகிறீர்கள்?

வர்த்தகர்:——சூதான்தேசச் சரக்குகளுடன் மாற்றக்கொண்டுபோகிறோம்.

ஸயீது:——வெகுநாளாக இது உங்களுடைய தொழிலோ?

வர்த்தகர்:——நன்றியுள்ள அடிமையே! அவ்வாறன்று.

ஸயீது:——அஃதெப்படி?

வர்த்தகர்:——சூதான்தேசத்தில், இரண்டு வருஷத்துக்குமுன் வியாபாரம் நடத்துவது மஹா கஷ்டம். அத்தேசம் ஆபத்தால் குழப்பட்டிருந்தது. அக்காலத்தில் அத்தேச வர்த்தகச்சரக்குகள் அவ்வூர்வாசிகளாகிய வர்த்தகர்கள் மூலமாக எங்களுக்குக் கிடைக்கும்.



ஸயீது:——இப்போதும் அப்படிச்செய்து வராமல் நீங்களே போகவேண்டிய காரணமென்ன?

வர்த்தகர்:——எங்கள் தேசாதிபதி முஹம்மதுஅலிபாஷா அவர்கள், தன் மகன் இஸ்மாயீல்பாஷாவை அங்கனுப்பி, அதின்பெரும்பாகத்தை அவர் தன்வசப்படுத்திக் கொண்டபடியால் எங்களை அங்கு வர்த்தக விஷயமாகப் போம்படிக்கு, தேசாதிபதியவர்கள் கூறினார்கள். ஆரம்பத்தில் நாங்கள் சம்மதிக்கவில்லை. பிறகு ஒப்புக்கொண்டு, சில பாதைகாட்டிகளுடன், அத்தேசத்தை நோக்கிப் புறப்பட்டோம்.

ஸயீது:——எங்கள் தேசாதிபதியவர்கள், தன் தேசம் சீர்திருந்தவும், பிரஜைகள் க்ஷேமமடையவும் இரம்பப் பிரயாசையெடுக்கிறவர்களாகத் தெரிகிறதே.

வர்த்தகர்:——அதில் யாதொரு சந்தேகமுமில்லை; எவ்விதமான ஆக்ஷேபனையுமில்லை; மூதேவிகளான அரசவமிசத்தார் மிஸ்றில் கொடுங்கோலோச்சிய பிறகு, மிஸ்று இப்போதிருக்கிற நன்னிலைக்கு வருமென்பதை நினைத்தவர் யார்? அவர்களின் கொடுங்கோன்மையினின்றும் நம்மை விலக்கிக்காத்த கடவுளை இரம்பத் துதிக்கிறோம்.

ஸயீது:——(அறியாதவனைப்போல) அவ்விராஜவமிசத்தார் யார்?

வர்த்தகர்:——எங்கள் தேசாதிபதி முஹம்மது அலிபாஷாவுக்கு முந்தி, மிஸ்றில் (அமீர்கள்) தலைவர்களாயிருந்தவர்கள்.

ஸயீது:——அவர்கள் எவ்வாறு கொடுங்கோல் புரிந்தார்கள்?

வர்த்தகர்:——அவர்கள் அநியாயக்கொலை புரிகிறவர்களாகவும், ஞாயமின்றி பிறர்பொருளை அபகரிக்கிறவர்களாகவும், அட்டூழியக்காரர்களாகவு மிருந்தார்கள்.

அவர்களுள் ஒருவர்:——நம்மை அவ்வரச வமிஷத்தார்களின் தீங்கினின்றும் விடுவித்த கடவுளைத் துதிக்கிறோம்; நம்முடைய தேசம் சரியான மேனிலைக்குவர, இன்னும் ஒருதடை யிருக்கிறது.

ஸயீது:——அஃதென்ன தடை?

வர்த்தகர்:——அல்பானியரும், முறேக்கருந்தான்.

ஸயீது :——அவர்கள் யார் ?

வர்த்தகர் :——அவர்கள் பிரான்ஸியர் வசமிருந்து, மிஸ்ரை மீட்டவந்த போர்வீரர்களி லுள்ளவர்கள்.

ஸயீது :——அவர்களால் என்ன தடை யேற்பட்டது ?

வர்த்தகர் :——நம் தேசாதிபதி அவர்கள் நவீனபோர்ப்பயிற்சியின் ஒழுங்கை அவர்களுக்குக்கற்பிக்க நாடினார்கள். பழய வழக்கத்திற்கு மாற்றமானவைகளை மார்க்கவிரோத நூதனமென்று அவர்கள் நினைத்து, தேசாதிபதியவர்களின் சொல்லுக்கு மாறு செய்யத் தலைப்பட்டார்கள்.

இன்னொருவர் :——அப்படிப்பட்டவர்களை இன்ன விதமாக நடத்தவேண்டுமென்று, நம் தேசாதிபதிக்குத் தெரியுமென்பது உனக்கு மறைந்ததல்ல. அவ்வீரர்கள் தன்சொல்லுக்கிணங்காமையால் தன்முயற்சிக் கிடையூறுண்டாகாதிருப்பதை முன்னிட்டே நம்தேசாதிபதி மரணத்தை அதிகமாக வருத்தக்கூடிய சூதான் தேசத்தைப் பிடிப்பதற்காக அவர்களை அங்கனுப்பிவிட்டு, அவர்களில்லாத சமயத்தில் மிஸ்றியர்களைத் தெரிந்தெடுத்து, நாட்டப்படிக்கு புதிய யுத்தப்பயிற்சியில் தேற்றி வருகிறார்கள்.

வேறொருவர் :——சூதான்தேசத்திற்கு அவர்களை அனுப்பியது கொண்டு அவர்களின் முழுநாட்டமும் அதுதானென்கிறதல்ல. அத்தேசத்திலிருக்கும் பொற்சுரங்கங்களைக் கண்டுபிடிக்கவும், வியாபாரத்தை விருத்திசெய்யவும் வேண்டுமென்பதே அவர்களுடைய முக்கிய கருத்தென்று எனக்குச் செய்தி யெட்டியிருக்கிறது.

ஸயீது :——இவ்வேற்பாட்டின்பேரில் போர்ப்பயிற்சி செய்வதின் கருத்தென்ன ? அதனால் பிரயோசனமென்ன ?

வர்த்தகர் :——அதனால் அநேக பிரயோசனமிருக்கின்றன. புதிய யுத்தப்பயிற்சியிற் றேர்ந்த 100 போர் வீரர், அப்பயிற்சியில்லாத 1000 வீரர்களை யெதிர்க்கக் கூடியவர்களாவார்கள்; இருபதேசில்வான வருடங்களுக்குமுந்தி, மிஸ்றுக்குவந்த பிரான்ஸியபோர்வீரர்கள் புதிய போர்ப்பயிற்சியில் பழக்கப்படாதவர்களாயிருந்தால், மரணத்தை அணுத்துணையும் பொருட்படுத்தாத ரணசிம்மங்களாகிய அரசவமிசத்தாரை ஜயிக்கக்கூடுமென் றெண்ணுகிறாயோ ?



ஸயீதும் மற்றவர்களும் :——நாங்கள் உம்முடைய சொல்லை சரிகாண்கிறோம்.

வர்த்தகர் :——எங்கள் தேசாதிபதிக்கு வேறு சில நாட்டங்களுமுண்டு; அதை அவர்கள் வெளிப்படுத்தாதிருந்தாலும் நாங்க ளடங்கலும் அறிந்தேயிருக்கிறோம். கடிதமானது அதின் மேல் வாசகத்திலிருந்தன்றோ வாசிக்கப்படும் ?

ஸயீது :——அவர்களின் நாட்டத்தில் நீங்கள் கொண்டவெண்ணம் யாது ?

வர்த்தகர் :——எங்கள் தேசாதிபதியவர்களுக்கு தேசாதிபத்தியம் நிலைத்து, மிஸ்றில் எவ்விதமான குழப்படிகளுமில்லாமல், அமரிக்கையும், ஐக்கியமும் அடைந்தபிறகும், தன்மக்களையும் தன்போர்வீரர்களையும், வஹ்ஹாபிகளுடனும் சூதானிகளுடனும் போராட அனுப்பி அவர்களைப் பரீக்ஷித்தபின்னாலும், இம்மிஸ்று பூமிமட்டிற் போதுமென் றிருந்துவிடாமல், ஷாம் தேசத்தையும் அதற்கப்பாலுள்ள பூமிகளையும் பிடிக்கநாடி, அதற்காகவே போர்வீரர்களுக்கு புதிய போர்ப்பயிற்சி யூட்டிவருகிறார்களென்று சிலர் சொல்லுகிறார்கள்.

மற்றொருவர் :——அது உண்மையென்பதில் ஆக்ஷேபணையில்லை. அப்படியில்லையேல், லிபனான்தேசத்தின் அமீருடைய தெரிசனைக்கும், அவருடன் நம்தேசாதிபதி பலமுறை இரகசிய சம்பாஷணை புரிந்ததற்கும் அருத்தமென்ன ?

பிறிதொருவர் :——நாமேன் அவற்றைச் சிந்திக்கவேண்டும் ? அவையனைத்தும் மறைவான கருமங்களாயிருப்பதால் கடவுளைத் தவிர மற்றவர்களறிய மாட்டார்கள். ஆனால், நம் தேசாதிபதியவர்கள் மிஸ்றில் சமாதானத்தை நிலைநிறுத்துவதிலும், கல்விச்சாலை, கைத்தொழிற்சாலை முதலியவைகளை ஸ்தாபிப்பதிலும், இடைவிடா முயற்சியுடன் உழைக்கிறார்களென்பதையும், வைத்தியசாலை யொன்று திறப்பதற்காக, தேர்ந்த பண்டிதர்களை (France) பிரான்ஸ்தேசத்திலிருந்து வரவழைக்க ஆளனுப்பியிருக்கிறார்களென்பதையும் நாம் ஸ்திரப்படுத்திச்சொல்லக் கூடியவர்களாயிருக்கிறோம். அவைகளும் மிகுந்த சிலாக்கியமான கருமங்களேயாம்.

27-வது அத்தியாயம்.

## சூதான்—அறபியர்.

அவர்கள் அவ்வாறாக, சம்பாஷித்துக்கொண்டு போகிறபோது, தூரத்தில் தூசுபறப்பது தெரிந்தது. அப்போது ஒருவீரர் வேகமான ஒட்டகை யொன்றின் மேலேறி, விரைவாக அவ்வொட்டகத்தைச் செலுத்திவருகிறார். அவரை யாரென்று உற்றுநோக்கிறார்கள். அவர் முகமூடி யிட்டிருந்தார். அவரின் கோலத்தால் சூதானியராக விளங்கப்பட்டார். அவர் அக்கூட்டத்தாருக்குச் சமீபத்திலானபோது, தன் ஒட்டகத்தின் கடிவாளக்கயிற்றைக்கையிற்பிடித்துக்கொண்டு அதிதீவிரமாகவந்து அவர்களுக்கு வந்தனங் கூறினார். அவர்கள் அவருக்கும் பிரதிவந்தனமளித்து, அவரை இஸ்மாயீல் பாஷாவின் தளபதிகளிலொருவராக அறிந்துகொண்டார்கள்.

பின்பு அவரைப்பார்த்து "இப்பாலைவனத்தில் நீர்மட்டில் தனித்துவந்த காரணமென்ன" வென்று அவர்கள் கேட்டார்கள். அவர் கர்தூமிலிருந்து வருகிறதாகவும், இஸ்மாயீல்பாஷாவுடைய கடிதங்களை காஹிருவுக்குச்சுமந்து போகிறதாகவும் விடையளித்தார். அவ்விடத்திய சமாசாரங்களைப்பற்றி அவரிடத்தில் விசாரித்தார்கள். அதற்கவர். "நம்முடைய போர்வீரர்கள் கர்தூமையும், ஸன்னாரையும் பிடித்துக்கொண்டார்கள்; ஷாய்கிய்யா கோத்திரத்தார் நம் பாஷாவுக்குக் கீழ்ப்பணிந்தார்கள். அதற்குப்பிறகு நமது இஸ்மாயீல்பாஷா, தன் சேனைகளுடன் பஸ்கல் மலைக்குவந்து பொற்சுரங்கங்களைக் கண்டுபிடிக்க முயன்றார்கள். தொற்றுநோய் நம்சேனையில் பரவினமையால், அதைவிட்டுத் திரும்ப நேர்ந்தது.

"நான், கர்தூம் திசையில் அவர்களை விட்டுவிட்டு, காஹிறாவுக்குக் கடிதங் கொண்டுசெல்ல இவ்வழி வந்தேன்" என்றார். ஸயீது "உங்களுக்குதவியாக, காஹிறாவிலிருந்து பின்திவந்த அல்பானியா முறேக்க போர்வீரர்கள் உங்களிடத்தில் வந்துசேர்ந்து விட்டதாகச் சொல்லுவீர்களா"? என்று கேட்டான். அதறகவர் "சொற்ப நாளைக்குமுந்தியே வந்து, சூதானியர்களுடன் சமராடி, அவ்விருவகுப்பினருள்ளும் பெரும்பாலார் ரணகளத்தில் மரணமடைந்தபடியினாலே, மீதியானவர்கள் பாஷாவின் சேனையிற் கலந்திருக்கிறார்கள்.



"தற்சமயம் அவர்கள்யாவரும் சேனைவீரர்களைச் சேகரிப்பதற்காகவும், பகுதிப்பணம் அறவிடுதற்காகவும், ஸன்னாரில் அஹ்மது பேயையும், அவருக்குதவியாகச் சிலரையும் விட்டுவிட்டு, ஷெண்டி திசையை நோக்கிச் செல்கிறார்க" ளென்றார். ஸயீது சிலகேள்விகள் கேட்க நாடினான்; அதற்கவர், காலதாமசப்படுவதைப்பயந்து, "சாவகாசப்படா" தென்று சொல்லிவிட்டு விரைந்துபோய்விட்டார்.

இதைக்கேட்ட ஸயீது, கொல்லப்பட்டவர்களில் தன் எஜமானும் சேர்ந்திருப்பாரோ? வெனப்பயந்து, வெகுநேரம்வரையில் வாய்பேசாதிருந்தான். "அதின்காரணமென்ன?" வென்று வர்த்தகர்கள் ஸயீதைக்கேட்டார்கள். அதற்கு ஸயீது, "நீல்நதிப்பாய்ச்சலுள்ள வளம்பொருந்திய பூமிகளில் உண்டாயிருக்கிற விருக்ஷங்களைப்போல, தண்ணீரில்லாத இப்பாலைவனத்திலும் செழிப்பான விருக்ஷங்களிருப்பதைப் பற்றி ஆலோசிக்கிறே" னென்று விடையளித்தான்.

வர்த்தகர்கள், "ஸயீதே! மாரிகாலத்தில் இவ்வனத்தில் பெய்யும் கடினமழையினாலேயே, கோடையிலுங் கூட விருக்ஷமுதலிய புற்பூண்டுகள் செழித்து வளர்ந்திருக்கின்றன. அப் புற்பூண்டுகள் இங்குள்ள ஒட்டகங்களுக் கிரையாகின்றன" வென்று கூறினார்கள். மறுபடியும் ஸயீதுக்கு, தன்எஜமான் வெட்டுப்பட்டதுபோலும், இரத்தத்தில் துவட்டப்பட்டதுபோலும், வேறுபல விதமாகவும் தோற்றமுண்டாகி பிரமித்திருந்தான்.

அப்படியிருக்கும்போது சூரியவெப்பம் கடிசாயிருந்ததினால் முன்னேறக்கூடாதவர்களாகி, பகற்போசனத்திற்காகவும், ஆயர்ச்சி தீர்த்துக்கொள்ளுவதற்காகவும், வர்த்தகர்கள் ஓரிடத்தில் விடுதிவிட்டார்கள். ஸயீதும் கூடவே விடுதிவிட்டான். ஆனால், "கடைசிவரையில் இவர்களுடன்சேர்ந்து நடப்போமா? இவர்களுடைய ஒட்டகைகள் பொதிசுமத்தப்பட்டு நடைகுறைந்திருக்கின்றதால்விரைந்து செல்லமாட்டாமல் தாமசப்படுகிறது; ஆதலால் நாம் முந்திப்போவோமா"? என்ற ஆலோசனையி லிருந்தான்.

பசியாறி முடிந்தபிறகு வர்த்தகர்கள் படுத்திருந்தார்கள். ஸயீது மட்டில் உட்கார்ந்திருந்தான். அப்போது அவனுக்கு, தன் எஜமானுடைய ஞாபகம்வந்து, "ஒரு நிமிடநேரமாவதுபிந்துகிறது கொண்டு ஒருக்கால் நம் எஜமானுக்கு மரணம் சம்பவிக்கக்கூடு"

மென்ற எண்ணம் உண்டாகி, முறுகக்காய்ச்சிய வெந்நீர் தன் தேகத்தில் ஊற்றப்பட்டதுபோலிருந்தபடியினாலே உடனே யெழுந்து, தன் ஒட்டகையின்பேரிலேறி, "உங்களைப்போல நான் தாமசப்படுத்தக்கூடா" தென்று அவ்வர்த்தகர்களிடத்தில் சொல்லிவிட்டு, பொழுதடைகிறவரையில் ஓரிடத்திலுந் தரிக்காமல் தென்புறமாக, தன்னொட்டகத்தை மிகுந்தவேகமாக நடத்தினான். பொழுதடைந்து நிலவெழுந்தது. அப்போதும் தங்காமல் முன்னேறி, அர்த்தராத்திரியில் நாட்டறபிகள் குடியிருக்குமோரிடத்திற்குவந்து சேர்ந்தான்.

அவ்வறபிகளில் ஒருவன் ஸயீதைநோக்கி, "அதுயா" ரென்று கேட்டான். ஸயீது "இஸ்லாமி" யென்று மறுமொழிகொடுத்தான். அவ்வறபிகள் அவனை தங்கள் கூட்டத்திலுள்ளவனாயிருக்கப் போதுமென்றெண்ணி, அவர்களுடைய பாஷையால் சோபனங்கூறினார்கள். அவன் அவ்வறபிகள் இட்டநெருங்கி, அக்கோத்திரத்தாரின் அப்பியாசப்படி வந்தனங்கூறினான். அவர்கள் அவனுடைய குலத்தை விசாரித்தார்கள். ஸயீது கறுப்பாகவும், அவ்வறபிகள் செவந்தமேனியர்களாகவுமிருப்பதாலும், அவர்கள் கறுத்தவர்களை அடிமைகளாக வேலைக்கு வைத்துக்கொள்ளுகிறது வழக்கமாயிருப்பதாலும், "நான், ஷொய்பிய்யா கோத்திரத்தைச் சேர்ந்தவ" னென்று சொல்லி, அவர்களிடத்தில் இரசத்சரித்தான்.

மறுநாட்காலையில் ஸயீது பிரயாணத்திற் காரம்பித்தான். அதைக்கண்ட அவ்வறபிகளின் கோத்திரத்தலைவர் ஸயீதைப்பார்த்து,

தலைவர் :——நீ, வடதிசையை நோக்கிச் செல்கிறாயா? அல்லது தென்திசையை நோக்கிச் செல்லுகிறாயா?

ஸயீது :——தென்திசையை நோக்கிப் போகிறேன்.

தலைவர் :——எதைநாடிச் செல்லுகிறாய்?

ஸயீது :——நேற்றிரவு என்னை விட்டுப்பிரிந்த என்னுடைய எஜமானைத் தேடிப்போகிறேன்.

தலைவர் :——உன்னெஜமானைத் தேடுதற் குதவியாக, உன்கூட என்மனிதரில் சிலர்வர நீ விரும்புகிறாயா?



ஸயீது :——ஆம், அதுவே என்நிர்மான நாட்டம். ஆனால், இதற்கு 6, 7 - நாட்பயண தூரத்திலுள்ள அபூஹம்மதுக்கு என்னெஜமான் சென்றிருப்பாரென்றெண்ணுகிறேன். ஆகையால், தங்களுடைய மனிதர்களுக்கு சிரமத்தைக் கொடுப்பது எனக்குத்தகுதியென்று நான் எண்ணவில்லை.

தலைவர் :——விசுவாசமுள்ள அடிமையே! அதனால் குற்றமில்லை. உன்னுடைய எஜமான்கள் உரோஷமும், தகுதியுமுடையவர்கள். ஆதலால், என்மனிதரிற் சிலரை உனக்குத் துணையாக அனுப்பாமல் உன்னை தனியே விடுகிறது எனக்கழகல்ல.

என்றுகூறி, அத்தலைவர், தீராப் என்னும் ஒருவாலிபரை வரவழைத்தார். கூர்மையான கறுத்தவிழியும், சிறுத்த மூக்கும், கிஞ்சிற்று கறுத்தமயிரும், சிறியவாயும், விரிந்த செவியும், வெளுத்த பற்களும், திரண்டகெண்டைக்கால்களும், நிதானஉயரமும், வலுத்த தேகமும், அதிகசுறுசுறுப்பும் உடைய ஒரு நாட்டறபி வந்து, அக்கோத்திரத்தலைவரின் சமுகத்தில் நின்றார்.

அத்தலைவர் அவரைப்பார்த்து, "மகனே! நீ, இந்தமனிதனுடன் துணையாகச்சென்று, அவனுடைய எஜமானைக்கண்டுபிடித்து, அவருடைய கூட்டத்தாரளவில் சேர்க்கிறவரைக்கும் கூடவேயிருந்து, பின்பு இங்கு நீ திரும்பிவருவாயாக" வென்று கட்டளையிட்டார். அவன், "தங்களின் ஏவலுக்கு வழிப்பட்டே" னென்றுகூறி ஒட்டகையிலேறினான். ஸயீதும்தன்னொட்டகத்திலேறினான். அவ்விருவருக்குந் துணையாக இரண்டடிமைகளுங்கூடச்சென்றார்கள். அந்நால்வருந் தென்திசையைநோக்கி முன்னேறினார்கள். ஸயீது, தனக்குத்துணையாக மூன்றுமனிதர்கள் வருவதால், வழிதவறிப் போகாதென்று தைரியமுற்றிருந்தான்.

ஆனால், இரண்டொருநாள் துணையாகவந்து, திரும்பி விடுகிறார்களோ? என்னவோ? என்று அச்சமுற்று, முடிவுவரையில் அவர்கள் தன்கூடவே யிருப்பதற்கான யுக்திபண்ணவேண்டுமென்று ஆலோசித்து, அவர்களுடன் சம்பாஷிக்க ஆரம்பித்தான்.

ஸயீது :——தீராப்! உங்கள்தலைவரின் திருநாமமென்ன?

தீராப் :——அவர், என்தந்தையார் ஷெய்கு அபூஸர்ஹான் என்னுந் திருநாமத்தினர்; உம்எஜமான் எப்படி தப்பிப்போனார்?

ஸயீது:——உங்களுக்கு நான் உண்மையுரைக்க நாடுகிறீர்களோ?

தீராப்:——ஆமாம், சொல்லும்.

ஸயீது:——என்னுடைய எஜமான், உத்துஅலி என்னும் ஓர் அமீரின்குமாரர். குதிரையேற்றத்தில் அதிகப்பிரீதியுடைய வாலிபர். மிஸ்றுப்படைகள் கார்த்தூம் திசையில் போர்புரிகிறதாகவும் ஷெண்டி திசையை முன்னோக்கிப் போகிறதாகவும் கேள்வியுற்று, ஒருயுத்தத்தில் தன்சினேகிதருள் ஒருவரை இஸ்மாயீல்பாஷா கொன்றுவிட்டாராம். அப்பழிக்குப்பழி அப்பாஷா விடத்தினின்றும் வாங்குவதற்காக, அங்குள்ள சிலகோத்திரத்தாருடன் போய்ச்சேர்ந்துகொள்ள நாடினார். அவருடைய நாட்டம் குறைந்தயோசனையாலும், மௌட்டியத்தினாலும்உண்டானதென்பதில் யாதொரு ஆசங்கையுமில்லை. ஆதலால், அவருடைய தந்தையர் பலமுறை அவரைப் போகவிடாமல் தடுத்திருந்தார். அவ்வாறிருந்தும், அவர்கேட்காமல் நேற்றுகாலையில்ஒருவருக்குந் தெரிவிக்காமல்புறப்பட்டுப் போய்விட்டார். இதுவரையில் திரும்பிவரவில்லை. அதனால் அவரைத்தேடிக்கண்டுபிடித்து, கொண்டுவருமாறு, என்னை அவருடைய தந்தையர் அனுப்பினார். அவர் முதிம்மாவை நாடி, அபூஹம்மதுக்குச் சென்றிருப்பாரென்பதே என் முழுக்கருத்து.

தீராப்:——அப்படியானால் நாம் நேரே அபூஹம்மதுக்குப் போவதே நலமாகக் காணப்படுகிறது.

ஸயீது:——என் எண்ணமும் அந்தப்படிக்கே யிருக்கிறது.

(ஸயீதின் முடிவான எண்ணமும் அதுபோலவே யிருந்தது) ஆனால், அவர்களுடைய கருத்தை அறிவதற்காகவே, இந்த நீண்ட பேச்சைத் தொடுத்தான். (சுருக்கிக் கூறுவோம்.)

அவர்கள் வெகு விரைவாக நடந்து, மூன்று நாளைக்குப் பிறகு மருத்து என்னும் தலத்திற்கு வந்து விடுதி விட்டார்கள். அத்தலம் உத்மூர் பாலைவனத்தின் மத்தியபத்தி லிருக்கிறது. அதில் சிறுகைப்பான நீர் ஊற்றுகளிருக்கின்றன. வழிப்போக்கர்கள் அங்கு விடுதிவிட்டு களையாறி, வாகனங்களுக்குத் தண்ணீர் புகட்டி, அபூஹம்மதுக்குப் போய்ச் சேருகிறவரையில் தேவைப்படுந் தண்ணீரை, தோற்பைகளில் நிரப்பிக்கொண்டு போவார்கள்; அதுபோலவே இவர்களும் செய்துகொண்டு, அங்கிருந்து நடந்து சில நாளைக்குப்



பிறகு, உத்மூர் பாலைவனத்தின் முடிவான நீல்நதியின் கீழ்க்கரையோரத்திலிருக்கிற அபூஹம்மதுக்கு வந்து சேர்ந்தார்கள்.

தீராப்:——(ஸயீதைப்பார்த்து) உம்முடைய எஜமானின் புத்திரரை இதுவரையில் நாம்காணவில்லையே. அவர் முதிம்மாவுக்குப் போயிருப்பாரென்றெண்ணுகிறீரோ?

ஸயீது:——ஆம், அவர்கள் அங்கு போயிருப்பார்களென்றே யெண்ணுகிறேன். அப்படிக்கில்லாதிருந்தால் அவர்களை நாம் சந்தித்திருப்போம். அல்லது அவர்களுடைய சமாசாரத்தை அறிந்திருப்போம். அது எப்படிக்கிருந்தாலும் இருக்கட்டும். தற்போது தாங்கள், தங்கள் தகப்பனாரவர்களிடத்திற்கு மீண்டு, எனக்கும் என் எஜமானுக்கும் பிரதியாக தாங்களிருந்து, அவர்கள் எனக்குச் செய்த உதவிக்காக எங்களுடைய ததியை அவர்களுக்கு தாங்கள் செலுத்தும்படி மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். நான், என் தலத்தினில் மீண்டபோது, தாங்கள் செய்த உபகாரத்தை என் எஜமானாகிய பெரிய அமீரவர்களுக்கு விவரித்துக் கூறுகிறேன்.

தீராப்:——முதிம்மாவரையில் நாங்களும் உமக்குத்துணையாக வருவதை நாடுகிறோம். நீர் பொருந்தவேண்டும்.

ஸயீது:——(தன்னுடைய இரகசியம்வெளியாவதைப்பயந்து) தீராப்! அவ்வளவு சிரமம் தாங்கள் படவேண்டாம்.

அப்போது அவர், ஸயீதிடத்தில் பயணவிடை வாங்கிக்கொண்டு, தன் தகப்பனாரிருக்குமிடத்திற்கு, தன் அடிமைகளிருவருடன் சென்றார்.

ஸயீது அங்கிருந்து நீல் நதியைக்கடந்து மேற்புறக் கரைக்கு வந்து, ஒருபாலைவனத்தின் வழியாக முதிம்மாவைநோக்கிவிரைந்து சென்றான். அப்பாலைவனம் விசாலத்தால் அபூஹம்மதின் பாலைக்குச் சமதியாயிருந்தது. ஆனால் அவ்வனத்தைவிட, இவ்வனத்தில் தண்ணீருள்ள கிணறுகள் மலிந்திருந்தன. அவன் நீலாற்றைக் கடக்கும்போது, தோற்பைகளில் ஜலம் நிறைத்துக்கொண்டபடியால், அக்கிணறுகளின் தண்ணீர் அவனுக்குத் தேவைப்படவில்லை.

## 28-வது அத்தியாயம்.

## ஷெண்டியும், தமிரும்.

மேலேகூறியபடி ஸயீது வெகுவிரைவாகச் சென்று,சிலநாளைக்குப்பிறகு ஆபார் ஜக்லேல் என்னுமிடத்திற்கு வந்து சேர்ந்தான். அவ்

விடம் சந்றேறக்குறைய அப்பாலேவனத்தின் மத்தியில் உள்ள மலைப்பூமி. அது, மாரிகாலத்திற்பெய்யும் மழைத்தண்ணீர்பலபாகங்களாலும் ஓடிவந்து தங்கக்கூடிய இடமாகையால், அவ்விடத்தில் தட்டில்லாமல் தண்ணீர் கிடைக்கும், ஸயீது அங்கிறங்கி, தன் ஒட்டகத்திற்குத் தண்ணீர்க் குடிப்பாட்டி, தானுங்குடித்து, ஓரிரவுதங்கி மறுநாள் காலையில் தனக்குத் தேவையான தண்ணீரை முகந்துகொண்டு முதிம்மாவை நோக்கிச்சென்றான்.

இரண்டாம்நாள் ஆபாறு அபீதலீஹ் வன்னும் தலத்தூடாகச் சென்று, மறுநாள் முதிம்மாவை யடைந்தான். அது நீல் நதியின் மேற்புறத்தில் உண்டாக்கப்பட்ட ஓர்பட்டணம். அதுஷெண்டிக்கு எதிரி லிருக்கிறது. ஷெண்டியைவிட முதிம்மா குடிஜன முதலியவற்றால் மிகச்சிறந்தது. அவ்விரு பட்டணங்களின் ஊடாக நீலாறு ஓடிச் செல்கிறது. ஸயீது, முதிம்மாவின் எல்லையிலாகி, அத்தேசவாசிகளைப்போலவே ஊருள்ளானான்.

அத்தினம் செவ்வாய்க்கிழமையாயிருந்தது. அன்று சந்தை கூடும் நாளானபடியால், எப்போதும்போலே பெருந்திரளான ஜனங்கள்கூடி, வியாபாரஞ் செய்து கொண்டிருந்தார்கள். கஷாயிகள் மாடு, ஆடு, ஒட்டகை, முதலானவைகளின் மாமிசங்களை நாக்கிளைகளில் தொங்கவிட்டு, நிறையின்றி மதிப்பாக விற்றுக்கொண்டிருந்தார்கள். சூதான் வியாபாரிகளில் சிலர் புகையிலையும், சிலர் பால், ஜெய்த்துன், பேரீத்தம்பழம் முதலான பல சாமான்களும் விற்றுக்கொண்டிருந்தார்கள். இடையர்கள் ஆடு, மாடுகளைக்கொடுத்து, கிருஷிகர்களிடத்தில் கோதுமை முதலிய நவ்தானியங்களை மாற்றுகிறதும், வெண்ணெய்யைக் கொடுத்து, பேரீத்தம்பழம், புகையிலை மாற்றுகிறதும், சேணியர்கள் பலவூர் வர்த்தகர்களிடத்தில் தங்களின் புடைவை தினிசுகளைக்கொடுத்து, அரிசி, காப்பி, சர்க்கரை முதலியவை மாற்றுகிறதும், அதிகமும்முரமாயிருந்தது.

அவர்கள் பிரதிவாரமும், இரண்டிரண்டுநாள் ஒவ்வோரூரிலும் சந்தை கூடுவார்கள். அவ்வூர் வாசிகளும், மற்ற சிற்றூரார்களும், ஆங்காங்குவந்து, கொடுக்கல் வாங்கல் நடத்துவார்கள். முதிம்மாவில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் சந்தை கூடுவது வழக்கம். அச்சந்தைக் கூட்டங்கள் வியாபாரத்தின் பிரயோஜனத்தைக்கட்டிலும் விளக்குமென்கிறதல்ல. பலதேச நூதனசமாச்சாரங்களையும்அறி



யக்கூடும். அதற்காகவே முக்கியமாக, பெரும்பாலார் அங்குவந்து கூடுவது வழமையாயிருந்தது.

ஸயீது அப்பட்டணத்தின் அடுத்த ஒரு நாட்டினனைப்போல அக்கூட்டத்தாருடன் கலந்திருந்து, சிலரிடத்தில் மிஸ்று யுத்தவீரர்களின் நிலைமையை விசாரித்தான். அவர்களொவ்வோரூராய்ப் பிடித்துக்கொண்டு போகிறதாகவும், திறைப்பணம் வாங்குவதற்காக சில தினங்களுக்குள் ஷெண்டிக்கு வருவார்களென்றும் சொன்னார்கள். மறுநாள் மிஸ்று சேனைகள் ஷெண்டிக்கு வரப்போகிறதென்று சொல்லப்பட்டது.

அன்று சாயுநேரம் இஸ்மாயீல்பாஷா, தன்போர்வீரர்களுடன் ஷெண்டிக்கு வந்து, கூடாரங்களடித்துத் தங்கினார்கள். அப்பட்டணத்துக்கு வெளியிலிருக்கும் அடர்ந்த, பாரிய ஓர் விருக்ஷத்திற்கு சமீபத்தில், இஸ்மாயீல்பாஷா வந்திறங்குவதற்காகத் தயார் செய்யப்பட்டிருந்த மாளிகையில் அவர்விடுதிவிட்டார். அத்தேசவாசிகள் இவர்களுக்கு வேண்டுமான சகலவஸ்துக்களுங் கொண்டுவந்து கொடுத்தார்கள்.

முதிம்மா வாசிகளிற் பெரும்பாலார், மிஸ்று போர்வீரர்களின் காக்ஷியைப் பார்ப்பதற்காக, ஷெண்டிக்குப் போகப் படகுகளிலேறினார்கள். அவர்களுடன் ஸயீதும்படகேறி, இஸ்மாயீல்பாஷாவின் தானையமிருக்கு மிடத்திற்கு வந்துசேர்ந்து யுத்தவீரர்கள், தளபதிகள் முதலானவர்களின் முகங்களை நாற்புறமும் திரும்பித் திரும்பிக் கூர்க்கப்பார்த்தான். அப்படிப் பார்ப்பதினாலே, அப்போர்வீரர்கள் அவன்பேரில் சந்தேகப்படுவார்களென்பதைப் பயந்து, ஒருதட்டில் பேரீத்தம்பழமும், முட்டையும் வைத்துக்கொண்டு விற்கவந்தவனைப்போல பாவனைகாட்டி, சகலரையும்வெகு நோட்டமாகப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அப்படிக்கிருக்கும்போது ஓர் இரைச்சல் கேட்டது. அதென்னவென்று கவனிக்கும்போது, ஷெண்டி நகரின் ஷாய்கிய்யா வமிஷ நமீர் அரசர், தன்பரிவார சகிதமாக இஸ்மாயீல்பாஷாவின் தெரிசனைக்கு வருவதாகத் தெரிந்தது. இத்தெரிசனையின் காட்சியைப் பார்ப்பதற்காக திரண்ட ஜனங்கள் வந்து கூடியிருந்தார்கள்.

இஸ்மாயீல்பாஷா போருடை யணிந்து, (Tunis) தூனிஸ் தேசத்துத் துருக்கித் தொப்பியும், துருக்கிக் காற்சட்டையும்

அணிந்தவராக, மாளிகை வெளிவாசலில் சூதானியரின் ஓராசனத்தில் சாய்ந்து கொண்டிருந்தார். அவ்விடத்தில் விலையுயர்ந்த விரிப்புகள் விரிக்கப்பட்டிருந்தன. இஸ்மாயீல்பாஷா சுங்கான் கையில் வைத்திருந்தார். அவரைச் சூழவர, தளகர்த்தர்களும் சிரேஷ்ட போர்வீரர்களும் தராதரப்படிக்கு இருப்பிலும் நிலையிலுமிருந்தார்கள்.

அப்போது முதிர்ந்தவயதையும், சிறுதாடியையும், மாநிறத்தையும், கூர்மையான பருத்த விழிகளையும் உடைய நமிர் அரசர் பட்டுக்குப்பாயமணிந்து, அதற்குமேலே வெள்ளைப் பரிவட்டம் போர்த்து, சிரசில் தலைப்பாகைதரித்து, கையில் சுங்கான் பிடித்து, சுங்கான் தயாராக்கும் ஆட்கள், ஆயுதந் தாங்கிய போர்வீரர்கள் முதலானவர்களுடன், இஸ்மாயீல்பாஷா விருக்கும் மாளிகைக்குச் சமீபத்தில் வரும்போது, தன்கையிலிருந்த சுங்கானை ஒருவனிடத்திற்கொடுத்து, சகலரையும் தூரத்திலிருக்கும்படிச் செய்துவிட்டு, அவர்மட்டில் தனித்தவராக மிகுந்த மரியாதையுடன் பாஷாவுக்கு முன்னால் வந்து, தலை குனிந்தவராக வந்தனங்கூறி, பாஷாவின் கையை முத்தமிட்டுகின்றார்.

இஸ்மாயீல்பாஷாவோ, சுங்கானைக் கையிற்பிடித்துகொண்டும், நாற்காலியில் சாய்ந்துகொண்டும், தலையைக்கொஞ்சமேனும் நிமிர்த்தாமல் வெகு இறுமாப்போடிருந்து, சற்று பொறுத்து, நமிர் அரசரை உட்காரும்படி சைகைகாட்டினார். அவர் கீழே உட்கார்ந்து, பாஷாவுக்கு சோபனங்கூறி, தன் தாழ்மையைக் காண்பித்தார். அவர் காட்டியதாழ்மை, இஸ்மாயீல்பாஷாவுக்கு அதிக இறுமாப்பையும், தன்னை மதிப்பையுமுண்டாக்கியதேயன்றி வேறில்லை.

நமிர் அரசரின் சோபனவார்த்தை நின்றவுடனே, இஸ்மாயீல் பாஷா அவ்வரசரைப் பார்த்து, "நமிரே! திறைப்பணமும், போர்வீரர்களும் சேகரஞ்செய்வதற்காக, நான் உம்மிடத்தில் வந்திருக்கிறேன். இதோயிருக்கிற பைகள் நிறைய (Dollars) வெள்ளிகளும், உம்முடைய மனிதரில் 2500 பேர்களும் ஐந்து நாட்களுக்குள்ளாக, தயார்செய்து தரவேண்டியது உம்பேரில் கடமை" யென்றார். நமிர் அரசர் உடனே யெழுந்து நின்று, "பாஷா அவர்களே! கடவுள் நீண்டகாலம் தாங்கள் ஜீவித்திருக்கச் செய்வாராக. நாங்களோ ஏழைக்குடிகள்; தாங்கள் கேட்கும் அவ்வளவு பெருந்தொகைப்பணம்



எங்களுக்கு எங்கிருந்து கிடைக்கக்கூடும். கூடாததாகலின், தாங்கள் எங்கள்மீது இரக்கம்வைத்து, தொகையைக் குறைக்கவேண்டுகிறேன்" றென்று மிகுந்த வணக்கத்துடன் கேட்டார்.

அப்போது சாய்ந்துகொண்டிருந்த இஸ்மாயீல்பாஷா நிமிர்ந்துட்கார்ந்து "நமிரே! உமக்கு நான் கட்டளையிட்டுவிட்டேன். அதைப்பற்றி நீர் என்னிடத்தில் மறுத்துப் பேசக்கூடா"தென்று கடுகடுத்துக்கூறினார். அதற்கவர், "பாஷாவே! அவ்வளவுதொகைப் பணங்கொடுக்க என்னாலியலா" தென்று மறுபடியுஞ்சொன்னார். அதற்கு இஸ்மாயீல்பாஷா "நல்லது, இப்போது 50,000 வெள்ளியாக்கினே" னென்றார். நமிர்அரசர், "பாஷாவே! இவ்வளவு தொகையும், சனங்களும் ஐந்து நாட்களில் சேகரப்படுத்தமுடியா" தென்றார். அப்போது பாஷாவுக்குக் கோபமுண்டாகி, தன்கையிலிருந்த சுங்கானால் நமிர் அரசரின் முகத்திலடித்தார். அது அவ்வரசருக்கு வெஞ்சினத்தை யுண்டாக்கினாலும், அச்சமயம் அதை யடக்கிக்கொண்டு, வெளிப்பார்வைக்குத் தாழ்மையைக்காட்டி, மனத்துள் குரோதத்தைப் பூரணமாக வைத்திருந்தார்.

ஸயீது, தன் எஜமானைத்தேடும் பராக்கிலிருந்தபடியால், இஸ்மாயீல்பாஷாவுக்கும், நமிர் அரசருக்கு மிடையில் நடந்தவைகளை அவ்வளவாகக் கவனிக்கவில்லை. அவ்விருவர்களுமிருக்கு மிடத்திற்கு வேறுமனிதர்களை வரவிடாமல் போர்வீரர்கள் தடுத்து நின்றபடியால், பாஷாவின் தளகர்த்தர்கள் கூடியிருக்கும் அச்சபையிற்போய், தன் எஜமானைத்தேடல் ஸயீதுக்குக் கூடாதிருந்தது.

பொழுதடைய சமீபித்ததும் நமிர் அரசர் பரிவார சகிதமாகத் தன்பட்டணம் போய்ச்சேர்ந்தார். இஸ்மாயீல் பாஷாவின் பாளையத்தில் பட்டணவாசிகள் தங்கியிருக்க இடங்கொடுக்கமாட்டார்களென்று ஸயீது பயந்து, நமிர் அரசரின் சனங்கள் கூடவே, ஷெண்டிக்குவந்து விட்டான். அவனுடைய அந்தரங்கத்தை ஒருவரும் அறியமாட்டார்கள். ஆனால் அவனை அடுத்த நாட்டிலுள்ளவனென்றே யெண்ணி யிருந்தார்கள். பொழுது விடிந்தவுடனே, இஸ்மாயீல்பாஷாவுடைய பாளையத்திற்குப்போய், தன்எஜமானைத் தேடவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தான்.

29-வது அத்தியாயம்.

## இஸ்மாயீல்பாஷாவின் மரணம்.

நமிர் அரசர், தன்மாளிகைக்கு வந்துசேர்ந்து, தன்பிரஜைகளை வரவழைத்தார். கோபத்தின் கடூரத்தால் அவருடையகண்

களில் நெருப்புப்பொறி பறந்து கொண்டிருந்தது. ஸயீதும் அக்கூட்டத்தில் சேர்ந்திருந்தான். சகலரும் வந்துகூடியபிறகு நமிர் அரசர் எழுந்து நின்று அவர்களைப்பார்த்து, "ஷாய்கிய்யா" கோத்திரத்தார்களே! இன்றுபகல் யாதோர்க்குற்றமுஞ் செய்யாத உங்களரசர் நமிருக்குநேரிட்ட அவக்கியாதியைத் திட்டமாக நீங்களறிந்திருக்கிறீர்கள். அத்தூஷணம் பொறுக்கக்கூடியதல்லவென்பதை நீங்கள் தெரிந்து மிருக்கிறீர்கள்.

"ஆதலால், என்னைத்தூஷணித்த ஒருவனுக்கு நான் பிரதிசெய்யாதினால், நீங்களெனக்குமாறுசெய்வீர்களோ?" என்றுகேட்டார். உடனே அவர்கள் யாவரும் "ஒருக்காலும் தங்களுடைய நாட்டத்திற்கு மாற்றஞ்செய்யமாட்டோ" மென்று மறுமொழி கொடுத்தார்கள். நமிர் அரசர் சற்றுநேரம் வாய்பேசாது நின்று, பிற்பாடு தனக்குச்சுகிர்தமான சிலருடன் தனித்துப் பேசிக்கொண்டிருந்து, வெளியே புறப்பட்டுப் போய்விட்டார்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஸயீது, பொழுதுவிடிந்தவுடனே இஸ்மாயீல் பாஷாவிடத்துக்குப் போய், நமிர் அரசருடைய கருமத்தில் உசாருடனிருக்கும்படிக்குச் சொல்லவேண்டுமென்று நினைத்து, அன்றிரவு இராத்தரிப்பதற்காக இடந்தேடிப் புறப்பட்டான். அவன் போகிறபோது, இஸ்மாயீல்பாஷாவின் தாணையத்திற்கு சிலர் வைக்கோற் சுமைகள் கொண்டுபோகிறதைக்கண்டு, ஒட்டகைகளுக்குப் போடக் கொண்டுபோகிறதாக நினைத்து, அதை அவ்வளவாகக் கவனிக்கவில்லை. பின்பு மனிதர்கள் அப்பாளையத்தை நோக்கிப் போகிறதைக்கண்டு, அங்குடப் பவைகளை தானுமறியக்கருதி, அச்சனங்களுடன் சேர்ந்துபோனான்.

அங்கே நமிர் அரசரும், இஸ்மாயீல்பாஷாவும், அவரின் தளகர்த்தர்களும், பாளையத்தின் நடுவணிருந்து உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கெதிரில் சூதானியரிற்சிலர் புள்ளாங்குழல் முதலியன வாத்தியக்கருவிகள் வாசித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் நடித்துக்கொண்டிருந்தார்கள். நமிர் அரசர் தாமசத்தில் அதிக லாகிரியையுண்டாக்கக்கூடிய சோளத்தினாற் செய்த மரீஸா என்னும் ஓர்விதக் குடிப்பை இஸ்மாயீல்பாஷா முதலான சகலருக்கும் பரிமாறிக்கொண்டிருந்தார். அன்றிரவில்



அதிகபாகமும் கழிந்துவிட்டது. ஸயீது அங்குள்ளவர்களை ஒவ்வொருவராக நோட்டமிட்டுப் பார்த்துக்கொண்டு வரும்போது, பாஷாவின் சபையிலுட்கார்ந்திருந்த ஒருவர்பேரில் அவனுடைய பார்வை சென்றது.

அவருடைய முகத்தில் மற்றவர்களின் முகங்களைப்போல சந்தோஷக்குறி காணப்படவில்லை. மேலேகூறிய மரீசாவை அவர் குடிக்கவுமில்லை. மற்றவர்களைப்போல், நடனமுதலியவற்றில் அவர் பராக்காகவுமில்லை. மற்றவர்களடங்கலும் அதிகவுற்சாகத்துடன் கெக்கலிக்கொட்டிச் சிரித்து, வேடிக்கைவிளையாட்டுகளில் மகிழ்ந்திருந்தார்கள்.

ஸயீது மேற்கூறிய மனிதரின் முகத்தை உற்றுநோக்கி அம்மனிதரை இலக்ஷணத்தில் பெரும்பாலும் தன்எஜமானுக்குச் சமதியானவராகக் கண்டான். அவரோ தலைகுனிந்தவராகவும், ஹுங்காணைக்கையிற்பிடித்து புகைகுடித்தவராகவு மிருந்தார். அப்போது ஸயீதுக்கு அமீர்பஷீர் சொன்ன சமாசாரத்தின் ஞாபகம் வந்து, நாம் பார்த்தகாலத்தில் நம்முடைய எஜமான் வாலிபராயிருந்தார்கள். இப்போது அமீர்பஷீரின் சொற்போல நடுவயதினராயிருக்கிறார்கள். ஆகையால், இவர்களே நம்முடைய எஜமானென்று தீர்மானித்தான். அப்போது அவன் சந்தோஷத்தின் கடூரத்தால் பறக்க நாடினான்.

அக்கூட்டத்தின் நடுவிலிருக்கிற தன்எஜமானை சப்தமிட்டழைக்க நினைத்த ஸயீதுக்கு அன்றுபகல் இஸ்மாயீல் பாஷாவால் நமிர் அரசர்க்குக் கிடைத்த அவமானம் ஞாபகத்துக்கு வந்து தனக்கும் அவருடைய கோபத்தின் தாங்கை தாவக்கூடுமென்பதைப் பயந்து சமயத்தை வழிபார்த்திருந்தான். இருந்தாலும் சந்தோஷத்தின் மிகைப்பால் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டிருந்தான்.

அங்குள்ள சகலரும் அவனைப்பார்த்து கூத்தாடியென்றெண்ணி, நகைக்க ஆரம்பித்தார்கள். இதை ஸயீது பார்த்து, நாம் நம் எஜமானின் சமுகத்திலாக இது நல்லசமயமென்று நினைத்து, நடித்துக்கொண்டே முன்னேறினான். அச்சபையிலுள்ள சகலருக்கும் மஸ்து மண்டைக்கேறி விட்டபடியினாலே, அவர்களும் கூட நடித்தார்கள். ஸயீதின் எஜமான் தடுதடுத்த முகத்துடன் தலைகுனிந்து

கொஞ்சமும் அசையாமல் சுங்கான் குடித்துக்கொண்டிருந்தவர், சரேலென்றெழுந்து, இஸ்மாயீல்பாஷாவின் இருப்பிடத்தின்பின்பக்கமாகப்போனார். அவர் ஒருவேலைநிமித்தம் போகிறாரென்றும், சீக்கிரம்வந்து விடுவாரென்றும் ஸயீது நினைத்துக் கொண்டிருந்தான். அவ்விராஜசபையைத் தாண்டிப்போகக் கூடாதிருந்தமையால், ஸயீது அவரைப்பின்தொடர்ந்து செல்லாமல், அவரின் வருகையை வழிபார்த்துக்கொண்டிருந்தான். வெகுநேரமாகியும் அவர் திரும்பிவரவில்லை. இஸ்மாயீல்பாஷாவும், அவரின் தளகர்த்தர் பிரதானிகள்முதலிய சகலரும், ஊண், தீன், குடிப்புக்களால் வயிறுநிரம்பி மயக்கமுற்றிருந்தபடியினாலே, படுக்கைகளுக்குப் போய் விட்டார்கள்.

ஸயீது வெகுநேரம் அங்குநின்று, தன்எஜமானின் வருகையையெதிர்பார்த்தும், அவர்வாராதபடியினாலே அவரைத்தேட ஆரம்பித்துச் சுற்றிக்கொண்டு வரும்போது, இஸ்மாயீல் பாஷாவின் மாளிகையிலும், அதின்பக்கங்களிலுள்ள கூடாரங்களிலுமிருந்து பெருநெருப்பின் சுவாலையும், புகையுமுண்டாவதைக்கண்டான். அந்நெருப்பு அன்றிரவு ஷாய்கிய்யா கூட்டத்தாரால் கொண்டுவரப்பட்ட வைக்கோற் கட்டுக்களிலிருந்துண்டானதா யிருந்தது. ஸயீது அக்குபாடத்தை அறிந்தவனல்ல. தன்எஜமான், அவர்களின் மனைவியர் சீவந்தரியா யிருப்பதை அறிய முன்னமே இவ்வக்கினிக்கிரையாகி விடுவார்களோ? என்னவோ? என்று கலங்கி, உடனே விரைந்து அந்நெருப்புக்குச் சமீபத்திலாகி, தன்எஜமானைத் தேடினான்.

அவர் அங்கு காணப்படாமையால் பித்துக்கொண்டவனைப் போலப் புலம்பி, தன்னுணர்வின்றிச் சுற்றிக்கொண்டிருக்கும்போது, ஒருதிசையில் அக்கினிச்சுவாலையிட்டெரிவதையும், மற்றொருதிக்கில் ஷாய்கிய்யாக்களின் வாள், ஈட்டிமுதலிய ஆயுதங்கள் வேலைசெய்வதையும் கண்டு, அவ்விரண்டு ஆபத்துக்களுக்கு மூடாக நமிர் அரசரின் கூட்டத்தார்கள், தன்னையும் அவர்களைச்சேர்ந்தவனென் றெண்ணிக்கொள்வதற்காக, தன்வாளையுருவிக் கையிற்பிடித்து வீசிக்கொண்டே அந்நெருப்புக்குச் சமீபத்தில் ஸயீது வரும்போது, அமீன்பே "ஸல்மாவே! உனக்குப்பின் நான் சீவித்திருப்பதில் காரியமில்லை" யென்று சொல்லிக்கொண்டு தன்கூடா



ரத்திலிருந்து வெளியாகி, அந்நெருப்பை நாடி வந்தார். அதைக்கேட்ட ஸயீது, தன்எஜமான் சீவித்திருக்கப்பிரியப்படாமல் நெருப்பில் விழுந்து சாகப்போகிறாரென்று நினைத்து, "என்எஜமானே! தாங்கள், அருமையான தங்களின் உயிரை பெருந்தீயிற் போக்கிவிடாதீர்கள்; என் எஜமானி ஸல்மாநாயகி சீவித்திருக்கிறார்க" ளென்று சப்தமிட்டான்.

இதைக்கேட்ட அமீன்பே சூதானியரின் கோலம்பூண்டிருந்த ஸயீதை சூதானியென்றெண்ணி, தன்கைவாளினால் அவனின் கண்டத்தை யிலக்காக்கி ஒருவீச்சுவீசினார். அவ்வீச்சால் அவன் கீழே சாய்ந்து அசைவற்றிருந்தவன், மாறியும் "என் எஜமானே! என்னைக்கொன்றுவிட்டீர்களே. நான், தங்களுடைய அடிமை ஸயீதல்லவா?" என்று அவர்காதில் விழும்படிக்கு உரத்துக்கூறினான். அவனுடைய சொல்லை நிச்சயந்தானா? என்றறிய அவனளவில் நெருங்கினார். அப்போது ஒரு கூட்டத்தார் ஆயுதபாணிகளுடன் அடர்ந்தேறி வருவதை அவர்கண்டு, தன்மனைவி உயிர்த்திருக்கிறாளென்ற சொல்லைக் கேட்டுவிட்டபடியால், மரணமடைய நாடிய எண்ணத்தை விட்டொழிந்து முகம்போன போக்கில் ஓட்டம் பிடித்தார்.

வெகுதூரம் ஓடிச்சென்று அச்சமில்லாத வோரிடத்திலுட்கார்ந்து, தன் செவிக்கேறியவைகளையும், கண்ணுக்குப் புலப்பட்டவைகளையும் ஆலோசித்து, கனவாகமதித்து, ஸயீதின் காரியத்தைத் திட்டமாக அறியாமல் ஓடிவந்ததை நினைத்து, கைசேதமடைந்து, அபாயகரமான அத்தலத்திற்குச் சென்று, அவனுடைய செய்தியை அறியலாமென்று எண்ணங்கொண்டார். ஆனால்அங்கு செல்லுவதில் தனக்குத் தீங்கு சம்பவிக்குமென்றும், தான்வெட்டிய வெட்டு அவனைக் கொல்லக்கூடியதா யிருந்தபடியால் அவன்இறந்து போயிருப்பானென்றும் யோசித்து, போகாதிருந்தார்.

அப்போது "என் எஜமானே! என்னைக் கொன்றுவிட்டீர்களே" யென்று அவன் சொன்னசொல் அடிக்கடி அவருடைய ஞாபகத்துக்கு வந்துக்கொண்டிருந்தபடியாலும், தன்மனைவி இன்னவிடத்திலிருக்கிறாளென்று சொல்லப்படாமையாலும், அவற்றைப்பற்றி முறையே, சலிப்பும், கைசேதமுமடைந்து, ஸயீதுசீவித்திருப்

பானென்னும் ஆதாரமிழந்தவராகத் தன்மனைவியரைத்தேடி முகம் போன போக்கிற்போய்விட்டார்.

(அமீன்பேயை, தன் பெண்சாதியைத் தேடுபவராக விட்டு விட்டு, பைத்துத்தீனுக்குச்செல்வோம்.)

30-வது அத்தியாயம்.

## இக்காவின் முற்றுகை.

ஸல்மாநாயகி, தன் புருடர் ஜீவித்திருப்பாரென்பதில்திட்டமாக ஆதரவற்றிருப்பதை நாம் காண்கிறோம். அவ்வாறு ஏழாண்டு சென்றும், தன்புருடரைப்பற்றியசெய்தி யொன்றேனும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதனால், "நம்புருடரைச் சந்திப்போ" மென்கிற எண்ணம் அவர்களிருதயத்தை விட்டும் எடுபட்டுப் போய்விட்டது.

கரீபுக்கு வயதும் 21 ஆய்விட்டது. அவர் குதிரையேற்றத்தையும், யுத்தப்பயிற்சியையும் தீர்மானமாகக் கற்றுக்கொண்டார். அமீர்பஷீர் கூட பலமுறை உள்நாட்டுக் கலகங்களிற் சென்று, சகலரும் பிரமித்துத் திடுக்கிடும்படியான அதிக விரதீரத்தைக்காட்டியிருக்கிறார். அவரின் சாமர்த்தியத்தைப்பற்றிப் புகழ்ந்து அவரை நேசிக்காதவர் ஒருவருமில்லை. அது, ஸல்மாநாயகிக்கு ஒருதேறுதலாயிருந்தது. அதுவரையில் கரீபு, தன் உண்மைப் பிதாவின் காரியங்களில் ஒன்றையும் அறியாதவராயிருந்தார்.

ஸல்மாநாயகி, தன்மகன் கரீபுக்கு விவாகஞ் செய்துவைக்க நாட்டமுற்று, பனீஷிஹாபு கோத்திரத்தில் சகல லக்ஷணங்களும் பொதிந்த, அழகிற்சிறந்த ஓர் கன்னிகையைக் குறிப்பிட்டு, தன் புத்திரரின் அபிப்பிராயத்தை யறிந்து, அப்பெண்ணைப்பேசவேண்டுமென்றெண்ணி, கி - பி - 1831-ம் வருஷம் நவம்பர் மாசத்தின் ஓரிரவில், தன்புத்திரரை அறைக்குளழைத்துப்போய், தன்னாட்டத்தை அவருக்குக்கூறி, தான் குறிப்பிட்டிருக்கிற பெண்ணைப்பற்றி வியந்துபேசி, அவரின் அபிப்பிராயத்தைக் கேட்டார்கள்.

புத்திரர் :—என் அருமைத் தாயாரே! நான் அப்பெண்ணின் நாமத்தையாவது, உருவத்தையாவது அறிந்தவனல்லன். தாங்கள் பிரியப்பட்ட ஒன்றை நானும் பிரியப்படுகிறேன். அப்பெண் எனக்குத் தகுதியானவளா யிருப்பாளென்று அனேகமாய் நம்புகி



றேன். ஆனால், இது விவாகஞ் செய்துகொள்ளக் கூடியநேரமல்லவே.

தாயார் :—புத்ரா! அதற்கென்ன தடையிருக்கிறது?

புத்திரர் :—இப்போது என் தந்தையர் அரசாங்கக் குழப்ப விஷயத்தில் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருப்பதால், கல்யாண விஷயத்தைக் குறித்து அவர்களிடத்தில் நாம்பேசத் துணிவது முறைமையாகாது. மற்றொருநாளைச் சாவகாசம் பார்ப்பதேநலம்.

தாயார் :—என் அருமைக் குழந்தாய்! அமீர் அவர்கள் கலங்கவேண்டிய அப்படிப்பட்ட குழப்பமென்ன?

புத்திரர் :—மாதாவே! லிபனன் நாட்டின்பேரில் என் தந்தையர் அமீர்பஷீர் அவர்களின் ஆக்ஞை, இக்கா கவர்னர் அப்துல்லாபாஷாவின் அதிகாரத்துக்குட்பட்டதென்பது தாங்களறிந்த விஷயமே. நான், முந்தி யென் தந்தையருடன் மிஸ்றுக்குச்சென்றதைத் தாங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். அவர்கள் அங்குபோனது அப்பாஷாவின் விஷயத்தில் மிஸ்று தேசாதிபதியாகிய, முஹம்மதுஅலிபாஷாவைக்கொண்டு, நாயகம் சுல்தான் அவர்கள் சமுகத்தில் மன்னிப்புப் பெறுதற்காகவே. அதுபோல் மன்னிப்பும் இக்காவின் தேசாதிபத்தியமும் அவருக்குக் கிடைத்தன. அதை அவர் எண்ணிப்பார்க்காமல், என் தந்தையருக்கும், முஹம்மதுஅலிபாஷா அவர்களுக்கும் மாற்றஞ் செய்யத் தலைப்பட்டுவிட்டார். அதனால் அவரைத் தண்டிக்க என் தந்தையர் நாடினார்கள். ஆனால், இவர்கள் அவருடைய கட்டளைக்குட்பட்டவர்களானபடியால், பகிரங்கத்தில் யாதொன்றைச் செய்ய இடம் வாய்க்கவில்லை.

அப்படிக்கிருக்கும்போது, மிஸ்று தேசாதிபதி முஹம்மதுஅலிபாஷா அவர்களுக்கு அப்துல்லாபாஷாபேரில் உண்டுபட்டிருக்கிற குரோதத்தின் கோபத்தை அடக்கமாட்டாதவர்களாகி, இக்காவை ஜெயித்து, அப்பாஷாவை அடக்குவதற்காக, தன்மகன் இபுறாஹீம்பாஷாவை அங்கே யனுப்பியிருக்கிறார்கள்.

அப்துல்லாபாஷா தனக்குதவிபுரிய பரிவார சகிதராக இக்காவுக்குவந்து சேரும்படிக்கு, என் தந்தையருக்குக் கடிதமெழுதியிருக்கிறார். என் தந்தையர், அப்துல்லா பாஷாவுக்குமாற்றஞ் செய்யக்கூடாதவர்களென்பதைத் தாங்களறிந்திருக்கிறீர்கள். ஆகை

யால், என் தந்தையர் லிபனன் நாட்டின் பலஜில்லாத் தலைவர்களையும் போர்வீரர்களுடன் வரும்படி கட்டளை யனுப்பினார்கள்.

அப்படியிருக்குஞ் சமயத்தில், இபுறாஹீம்பாஷா விடத்திலிருந்து என் தகப்பனாரவர்களுக்கொரு நிருபம் வந்தது. அதில், அவர்களை இக்காவுக்கு வரும்படி எழுதியிருந்தது. அதனால் என் தந்தையர் இருதலைக்கொள்ளியின் நடுவனுறும் எறும்புபோன்று கலக்கத்திலிருக்கிறார்கள். அப்துல்லாபாஷாவின் கோபத்திற்கஞ்சி இபுறாஹீம்பாஷாவின் அழைப்புக் கிணங்கவும், இபுறாஹீம்பாஷா (சிரியா) ஷாமுக்கு வந்தால் அவருக்குதவிசெய்வதாக முஹம்மதலி பாஷாவுக்கு வாக்களித்திருக்கிறபடியால், அவரின் கூப்பிடுதலுக்கு மாறுகூறவும் கூடாதவர்களாக, என்ன செய்கிறதென்ற ஆலோசனையிலிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சமயத்தில், விவாக விஷயத்தைக் குறித்து அவர்களிடத்தில் பேசக்கூடாதென்றதற்குஇதுவே காரணம்.

தாயார் :——(இதைக்கேட்டு திகிலடைந்து) என் அருமந்தப் புத்ரா! அவர்கள் யாருடைய கட்டளைக் கிணங்குவார் களென்று நீ உத்தேசிக்கிறாய்?

புத்திரர் :——அனேகமாக இபுறாஹீம்பாஷாவின் கட்டளைக்கே இணங்கிப்போகவேண்டும்.

தாயார் :——எப்போது பிரயாணத்தை நாடியிருக்கிறார்கள்?

புத்திரர் :——நாளைக்காலையில் பைத்துத்தீன் விட்டு பரிவாரசகிதராக இக்காவுக்குப் பிரயாணமாகக் கருதியிருக்கிறார்கள். நானும் அவர்கள் கூடப்போகத்தான்வேண்டும்.

தாயார் :——(பதறிச்சப்தமிட்டு) கூடாது, கூடாது. என் கண்மணியே! உனக்கேன் அவ்வெண்ணம்?

புத்திரர் :——என் மாதாவே! தற்போது நான் திட்டமாக வாலிபனாகிவிட்டேனென்பதைத் தாங்கள் நோட்டமிடுங்கள். சகலபுகழ்ச்சிக்கும் உரியவர் கடவுள் ஒருவரே. நான் சிறுவயதில் தூரதேசயாத்திரை செய்தகாலத்திற்கூட இவ்வளவு திடுக்கமும், அச்சமும் தங்களுக்குண்டானதாக நான் காணவில்லையே.

தாயார் :——மகனே! முதல்முறை நீ யாத்திரைபோனது யுத்தத்திற்காகவல்ல. அந்த யாத்திரைக்குப் பிறகு நான் பட்ட



பாடு போதும் போதும். (என்னும்போது, அவர்களுக்கு புருஷரின் ஞாபகம் வந்து, தன்னை யறியாமல் அழுதார்கள்.)

புத்திரர் :——(ஆச்சரியமடைந்து) என் மாதாவே! தங்களுக்கு இப்போதுண்டான அழுகையின் காரணமென்ன?

தாயார் :——என் அருமைக்குழந்தாய்! முன்னர் உனக்கு திருடர்களால் நேர்ந்த ஆபத்து என் நினைவுக்கு வந்ததினால் உண்டான அழுகையேயன்றி வேறு காரணமில்லை. (என்றுகூறி, தன் மகனுக்குமுன்பாகத் தன் பேதைமையை வெளிப்படுத்தியதைப் பற்றி கைசேதமுற்று) புத்ரா! நீ, யுத்தத்திற்குப்போவதைப் பற்றி நான் அஞ்சுகிறதாக நினைக்கவேண்டாம். ஆண்பிள்ளைகள் யுத்தத்திற்காகவே படைக்கப்பட்டிருக்கிறார்கள். அளிப்பதும் அழிப்பதும் கடவுளிடத்திலிருக்கின்றன. நீயோ, அதிவீரசூரர்களுடன் போகின்றாய். அவர்கள்கூட, சிம்மராஜன் கொடிகலங்கக் கூடிய வீரசூரராகிய உன் தந்தையர் அமீர்பஷீரு மிருக்கின்றார். ஆகையினாலே நீயும் கூடப்போகத் தீர்மானித்திருந்தால், கடவுள் துணையாகப்போய் வருவாயாக. ஆனால் நான் உனக்கொரு உபதேசஞ் செய்கிறேன். அதை நீ யெப்போதும் மறக்காதிருக்க வேண்டும்.

புத்திரர் :——என் மாதாவே! கட்டளையிடுங்கள்; நான் தங்களின் ஏவலுக்கு வழிப்பட்ட பிள்ளையா யிருப்பேன்.

தாயார் :——என்னருமந்தப் புதல்வாய்! எப்போதும் கடவுளைப் பயந்துகொள். நயத்தையும், பயத்தையும் அவரிடத்தில் பரஞ்சாட்டு. இதுவே என்உபதேசம்.

என்று கூறி, ஒருதுண்டுக் கடிதத்தில் தன்கையால் சிலவார்த்தைகளை யெழுதிமடித்து முத்திரித்து, தன்புத்திரரைப்பார்த்து, ‘‘மகனே! இக்கடிதத்தில் பொன்மொழி பொறித்திருக்கிறேன். உனக்குத் தாங்கக்கூடாத கஷ்டம் சம்பவித்தகாலத்தி லல்லாது மற்ற வேளைகளில் முத்திரைவிடவேண்டாமென்றுசொல்லி, கரீபு கையிற் கொடுத்தார்கள். அவர் அக்கடிதத்தை வாங்கி, கண்களிலொற்றி முகந்துகொண்டு, சட்டைச்சாக்கில் பத்திரப்படுத்திவைத்தார். அப்போது அவருடைய கண்களில் கண்ணீர்மலர்ந்தது. அது, தன் கோழைத்தனத்தை வெளியாக்குமென்பதைப் பயந்து, தன் கண்ணீரை அடக்கிக்கொண்டார்.

மறுநாட்காலையில் கரீபு உள்பட சகலரும் பயணத்திற்குத் தயாராகும்படி அமீர்பஷீரால் கட்டளை யிடப்பட்டது. கரீபின் வீரம், விவேகம், முயற்சி, ஆண்மை முதலியவற்றால் அமீர்பஷீர் அவரைக் கடப்பாக வுவந்திருந்தபடியால், அவரும் தன்னுடன் வரவேண்டுமென்று கட்டாயப்படுத்தினார். உடனே கரீபு, தன் தாயாரிடத்தில் வந்து, பயண விடைவேண்டினார். தாயார், மகனைமுத்தமிட்டு, தைரியப்படுத்தி யனுப்பினார்கள். ஆனால், அவர் தன்னைவிட்டுப் பிரிவதால் தன்னிதயம் இரத்தஞ் சிந்திக்கொண்டிருப்பது போன்று கவலையுற்றிருந்தார்கள்.

அமீர்பஷீர், கரீபு முதலானவர்கள் குதிரைகளில் சவாரியாகி இக்காவை முன்னோக்கிப் புறப்பட்டார்கள். வழியில் ஒரு குதிரை வீரனைக்கண்டார்கள். அவன் மிஸ்று தேசாதிபதியின் கடிதமொன்றை அமீர்பஷீரிடத்தில் கொடுத்தான். அவர் அக்கடிதத்தைப்பிரித்து வாசித்தார். அதில் "என்மகன் இபுறுஹீம், தங்களை இக்காவுக்கு வரும்படி யழைத்ததாகவும், தாங்கள் இதுவரையில் அங்கு வராதிருக்கிறீர்களென்றும்,எனக்கெழுதியிருக்கிறார். ஆகையால், தாங்கள் எனக்குக் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்தின்படி அதிசீக்கிரத்தில் தாங்கள் என்மகனின் அழைப்புக்கிணங்கி, இக்காவின் வனத்திற்குப் போய்ச் சேரவேண்டும். அப்படி யில்லையானால், தங்களின் குடியிருப்புத் தலங்களை யழித்து நிரவி, ஜெய்த்தூன் (Olives) மரங்களை நாட்டிவிடுவோ" மென்றெழுதியிருந்தது.

அமீர்பஷீர் அக்கடிதத்தைப் பார்த்துக்கொண்டு நெடுகநடந்து கடைசியாக (Heefa) ஹீபாவுக்கும் (Karmel) கர்மல் மலைக்கும் வடப்புறத்திலிருக்கும் இக்கா வின் வனத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே பாளையமிட்டிருந்த இபுறுஹீம்பாஷா, அமீர்பஷீர் முதலானவர்களின் வருகையையறிந்து, தன் தளகர்த்தர்களில் ஜெனரல் முஸ்தபா பர்பர், கர்னல் ஹுஞுபே முதலானவர்களை மேளவாத்திய கோஷ்டத்துடன் எதிர்சென்றழைத்துவரக் கட்டளையிட்டார். கட்டளைப்பிரகாரம் அவர்கள் அமீர்பஷீர் முதலானவர்களையெதிர்சென்றழைத்துக்கொண்டு, வெகு ஆடம்பரத்துடன் இபுறுஹீம் பாஷாவின் தாணையத்திற்கு வந்தார்கள்.

சற்றேறக்குறைய 33 வருடங்களுக்கு முன்னர், பிரான்ஸிய சேனாதிபதி (Napolian Bounaparte) நப்போலியன் போனபார்ட்டு



(Acre) இக்காவைப் பிடிக்கவந்தபோது பாளையமிட்டிருந்த தானத்திலேயே இபுறுஹீம்பாஷா தாணையமிட்டிருந்தார். அமீர்பஷீர் அங்கு சமீபித்துவரும்போது, மரியாதைவெடிகள் முழக்கப்பட்டன. இபுறுஹீம்பாஷாவின் கூடாரத்தினடுக்க அமீர்பஷீர் கூடாரமடித்து தாணையமிட்டிருந்தார்.

## 31-வது அத்தியாயம்.

## அப்துல்லாபாஷாவும்; கரீபும்.

இக்கா பட்டணம், எதிரிகள் முன்னேறி வரக்கூடாதவிதமாக தடுபடை வீரர்களால் வ்லுவாகக் காக்கப்பட்ட அரணிப்பான ஒருமலைக், கோட்டையாயிருந்தது. அவ்வூரைப் பிடிப்பதற்காக இபுறுஹீம்பாஷா ஐந்துமாதங்களுக்கு முன்னிருந்து முயன்றுங் கூடாதவரானார். போர் நடந்து வந்ததில் இருபக்கத்திலும் வெற்றியுந் தோல்வியும் உண்டுபட்டிருந்தன. யுத்தம் நிறுத்திருக்கிற நேரங்களில், அடுத்தவனங்களில் வேட்டையாடுதற்கு கரீபு செல்லுவார். சிலசமயங்களில் (Shifa-Omar) ஷிபா உமர் என்ற வனம்வரையிற் சென்று, மான், மரை, புறா முதலானவைகளை வேட்டை யாடிவருவார்.

இபுறுஹீம்பாஷாவின் போர்வீரர்கள், நப்போலியன் போனபார்ட்டு ஏற்படுத்திய போர்ப்பயிற்சியில் தேர்ச்சியடைந்திருந்தார்கள். அவர்களுடன் பழயசேனையில் மிச்சப்பட்ட துருக்கிய, அல்பானிய, முறேக்க போர்வீரர்களில் அதிகம்பேர்கள் கலந்திருந்தார்கள். இபுறுஹீம்பாஷாவின் தளகர்த்தர்களும் போர்நிறுத்தியிருக்கிற நேரங்களில் வேட்டையாடப் போவார்கள்.

கி-பி-1831-ம்௵ டிசம்பர்மாசத்தில் ஒருநாள் அதிகாலையில் குளிர் கடிசாயிருந்ததால், கரீபு கம்பளிபோர்த்துக்கொண்டு அமீர்பஷீரின் கூடாரத்திலிருந்து வெளியே வந்து, அம்மலையடிவாரத்திலுள்ள வனத்தை நோட்டமிட்டார். அவ்வனம், அன்றிரவு பெய்தமழையால் சுத்தமாக்கப்பட்டிருந்தது. ஆகாயம் தெளிவாயிருந்தது. சூரியனின் சுடர்க்காற்கள் மத்தியதரைக் கடல் மேல் பாய்ந்து, அக்கடனீரின் மீது அழகான பலவர்ணங்கள் காணப்பட்டன. பக்ஷிசாதிகள் கூண்டுகளிலிருந்து வெளிப்

பட்டு, பலவித சங்கீதங்கள் பாடிக்கொண் டிருந்தன. சமுத்திரத்தின் மெல்லினமான அலைகள் மதுமொழிகொடுப்பன போன்றிருந்தன. இவைகளை அவர்பார்த்து மிகுந்த சந்தோஷமடைந்து, குதிரையிலேறி அத்திசைகளைச் சுற்றிப்பார்க்கவேண்டு மென்கிற பிரியம் அவருக் குண்டாயிற்று. மணற்றரையில் சாரிவருவது மிகுந்தசுகமாக விருக்கும். அதிலும், மழைபெய்தபின்னால் அத்தரை சவாரிக்கு அதிக இணக்கமாக விருக்கும். ஆதலால், கரீபு உடனே கூடாரத்துள் விரைந்துவந்து, உடையணிந்து குதிரைமேலேறி ஒருவருக்கும் செய்தியறிவிக்காமல் குதிரையை நடத்தினார்.

ஆனால், அவர்போகிறதை சில போர்வீரர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கரீபு பாளையத்தைவிட்டு வெளியாகி, குதிரையை சாரிவிட்டுப்பார்க்க நாடி, அவ்வனத்தின் கீழ்த்திசையில் செலுத்தி இக்காவின் வடக்குக் கோட்டை வாயிலுக்கு நேரேவந்து, அம்மலைக்கோட்டையையும், மதில்களையும், இக்காவிலிருந்து நான்குமைலித் தியாலம் தண்ணீரோடிச் செல்லும் பழய மதகுகளையும், அகழியையும், மற்றவைகளையும் ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டு, தான்போகுந் திசையைக் கவனிக்காதவராக, குதிரையைச் செலுத்திக்கொண்டே, கோட்டையின் கீழ்ப்புறவாசலுக்கு வந்துவிட்டார்.

அப்போதும் அவருக் குசாருண்டாகவில்லை. திடீரென்று வெடி சப்தத்தைக்கேட்டு உசாராகி, தன் உயிர் தப்புவதற்காகக் குதிரையை வனத்தளவில் திருப்பினார். கொஞ்சத்தூரம் போகிறதற்குள்ளே, குதிரைக்குக் குண்டொன்றுபட்டுக் கீழேவிழுந்தது; அவர் ஓட்டம் பிடிக்க நாடினார். அதற்குள் இக்கா கோட்டை வாயிற் காப்பாளர்கள் பெருங்கூட்டமாக வந்து விழுந்து, அங்கபடியிலிருந்து கரீபு காலைக்கழற்று முன்னரே, அவரைச் சிறைவாரிக்கொண்டு கோட்டையின் கீழ்ப்புறவாசலை நோக்கிச் சென்றார்கள்.

கரீபு பொறுதியுடையவராகப் போனார். அப்போது அவர் அமீர்களின் உடையணிந்திருந்தார். அவரின் நடையும் அவரை, சாமானியரல்ல வென்றறிவித்தது. அவ்வூர்ச்சனங்கள் கரீபை வெகு புதுமையாகக்கண்டு, இவ்வாலிபரின் கெதி எவ்வாறாகப்



போகிறதோ வென்று பேசிக்கொண்டார்கள். கரீபு யாதொன்றையும் கவனிக்காமல் தன் சொந்தமாளிகைக்குப் போகிறவரைப் போலவே போனார். கோட்டைவாயிற் காப்பாளர், கரீபை கூட்டிக்கொண்டு கோட்டைமேலேறி உட்சென்று, அப்துல்லா பாஷாவின் மாளிகைக்கு வந்து சேர்ந்தார்கள்.

நிதான வயதும், பொன்னிற மயிரும், அடர்ந்த தாடியும், கடுகடுத்த முகமுமுடைய அப்துல்லாபாஷா தலையில் துருக்கித் தொப்பிதரித்து, வாளை துடையின்பேரில் வைத்துக்கொண்டு, மந்திரி, பிரதானிகள் புடைசூழ, கடினகோபமும், பதறுதலுமுடையவராக வுட்கார்ந்திருந்தார். அவரின் முன்பாக கரீபு நிறுத்தப்பட்டார். அப்துல்லா பாஷா, கரீபை இன்னாரென் றறிந்துகொண்டு கடுகடுப்புடன் உரத்தசப்தமிட்டு,

அப்துல்லாபாஷா:——நீர், இராஜாங்கத்தாருக்கும், குடிஜனங்களுக்கும் சதிமானஞ்செய்த அமீர்பஷீரின் புத்திரனல்லவா ?

கரீபு:——மேன்மை பொருந்திய கவர்னரே! உண்மையாக நான் அவர்களின் புத்திரன்தான். அவர்கள்பேரில் தாங்கள்கூறிய அவதூறு அவர்களுக்குடையதாகாது. ஒருமுறை அவர்களைத் தாங்கள் சந்திப்பீர்களேயானால், காரியாம்சத்தை அறிந்துகொள்ளுவீர்கள்.

அப்துல்லாபாஷா:——உம்முடைய தகப்பனாரை, பரிவாரத்துடனே இங்குவரும்படி நான் செய்தி யனுப்பியிருக்க, அவர் நம் விரோதியோடு சேர்ந்துகொண்டார். அவரை நான் காண்பேனானால், வழிப்பாடும், விசுவாசமும் இன்னவை யென்பதை அவருக்குக் கற்பித்து வைப்பேன். கடவுள் நமக்கிடையில்தீர்மானஞ்செய்கிறவரையில், நீர் நம்மிடத்தில் சிறைவாரப்பட்டவராக விருப்பீர்.

கரீபு:——வற்புறுத்தலையும், அச்சம் பூட்டலையும் அதிகப்படுத்தவேண்டாம். என் தகப்பனாருடைய விஷயத்தில் தாங்கள் கூறியவார்த்தை கட்டப்பானதாக மதிக்கப்படும். தங்களுக்கு நயமுண்டாகும் விஷயத்தில் அவர்கள் எடுத்தபிரயாசையில் பின்வாங்கவில்லை. உதுமானிய இராஜாங்கத்தாரின் கோபத்திலிருந்து உங்களைக் காப்பாற்றவில்லையா ? உங்களின் பிரஜைகள் உங்களுக்குப் பணிந்து நடக்க எவ்வளவோ வுதவிபுரிந்திருக்கிறார்கள். தற்போது,

அவர்கள் மிஸ்று சேனையில் சேர்ந்துகொண்டதற்கு, தக்க காரணமிருக்கக்கூடும். அதை நான் அறிந்தவனல்லன்.

அப்துல்லாபாஷா:——அவர் செய்தது சதிமானமேயன்றி வேறு காரணமின்று; நான் அவரைக்கண்டுகொண்டால், இராஜவிசுவாசம் இன்னதென்பதை அவருக்குக் கற்பிப்பேனென்று ஆரம்பத்தில் நான் கூறவில்லையா? இபுறுஹீம்பாஷா எனக்குச் செய்த தீங்கிற்குச் சமமாக நானும் தீங்கு செய்கிறவன்ல்லன். விவேகமும் விசுவாசமும் இந்தப்படிக்கல்ல.

கரீபு:——என் தகப்பனர் விஷயத்தில் தாங்கள் கூறும் குற்றப்பாட்டை மறுக்க என்க்கிடந்தரவேண்டும். நீங்களிருவரும் சந்தித்துக் கலந்துகொள்வீர்களானல், யாருடையசொல் உண்மையென்பதை அப்போது அறிந்துகொள்ளுவீர்கள். அபகடம் செய்கிறது அமீர்பஷீரின் இயற்கையல்ல.

என்று இப்ராஹீம் இன்னமும்கரீபுபேசப்போகிறதைஅப்துல்லாபாஷா நிறுத்தச்சொல்லி "ஸாலிம் ஆகா! இவனை விலங்கிட்டுச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோம்" என்று உரத்த சப்தமிட்டுச் சொன்னர்.

உடனே, தளகர்த்தரின் உடையவலிந்த, அழகானமுகத்தையும், பூனைக்கண்ணையும், செம்பட்டை மயிரையும், நிதானமான வுயரத்தையும், ஏறக்குறைய முப்பது வயதையுமுடைய ஒருவாலிபர், துப்பாக்கி வீரர்களிருவர் அவரின் வலமிடம்வர, உருவினவாளாயுதம் கையிற்பிடித்தவராக, கரீபுக்கு முன்னல் வந்து நடக்கும்படிசைகை காட்டினர்.

கரீபு அசையாமல் நின்றுகொண்டு, அப்துல்லாபாஷாவைப் பார்த்து, "அமீரின்மக்களை இவ்வித அவமானப்படுத்திச் சிறைச்சாலைக்கனுப்புவது உங்களின் ஒழுக்கமாக்கும்; என்கைவிலங்கு தறிபடும் வரையில்இவ்விடத்தைவிட்டுநான் அசையமாட்டேன்; விலங்கு தறிபட்ட பிறகு நீங்கள் நாடுமிடத்துக்குத் தடையின்றிப் போகிறே"னென்றார்.

இதைக்கேட்ட அப்துல்லாபாஷா, "ஆ! இதென்ன துணிகரம்!! என் ஏவலுக்கு மாறு செய்கிறாயா"? என்று உறுக்கி உரத்த சப்தத்துடன் அலறி, "என் முன்னல் இப்போதே இவனைப் பிடித்திழுத்



துக்கொண்டு சீக்கிரத்தில் போய்விடுங்கள். இல்லாது போனல் இந்த வாளைக்கொண்டு அவன் தலையைவீசியெறிவே"னென்றார்.

அப்துல்லாபாஷா அவ்வளவு கடின கோபத்துடன் கூறிய வார்த்தைகளை கரீபு ஒரு திரணமாகவும் மதிக்காமல், அவருக்குமுன்னல் நெருங்கி, "கவர்னரே! இந்த அச்சுறுத்தலினல் எனக்குஅச்சமுண்டாக்க நாடுகிறீரோ? நான் சிவனைப் பெரிது காண்கிறவனல்லன். மரணத்துக்குப் பயப்படுகிறவனுமல்லன். நான்சுத்தமுடையவனுயிருக்கிறவரையில், இவ்வித பயமுறுத்தலை நான் கொஞ்சமும் பாராட்டவேண்டியதில்லை. என்னுடைய ஆயுதங்களைப் பறித்துக்கொண்டு, என்கைக்கு விலங்கிட்டு, என்னை வெட்டுவது உமக்குஅவமானமென்பதை யோசிக்கிறேன். நீர், உம்மை பரீக்ஷிக்க நாடுவீரேல், என் கைவிலங்கைத் தறித்துவிடும், கடவுள் நமக்கிடையில் அவருடைய நீதத்தைக்கொண்டு தீர்ப்புளிப்பார். நீர் ஒரு அமீருடன் தனிப்போராடுகிறீர். அது உமக்குத் தாழ்மையாகாது" என்றார்.

அங்குள்ள சகலரும் கரீபின் தைரியத்தையும், விவேகத்தையும்பற்றி அதிக ஆச்சரியமடைந்து, அப்துல்லாபாஷா கோபத்தினல் எங்கே கரீபை வெட்டிவிடக் கட்டளையிட்டு விடுகிருரோ, என்று பயந்து பரிதபித்துக் கொண்டிருந்தார்கள். மற்றவர்களைவிட ஸாலிம் ஆகாவுக்கு கரீபு மீது அதிக இரக்கமுண்டாகி, கிட்ட நெருங்கி அவருடைய முழங்கையைப் பிடித்தழுத்தி, "பேச்சை நிறுத்தும், அது வுமக்கு நயத்தைத்தரும்" என்று சைகைகாட்டி, அவரைக் கூட்டிக்கொண்டுபோனர்.

அப்துல்லாபாஷாவுக்கு அதிகசினமூண்டு, கரீபை வெட்ட நாடினர். அதற்குள்ளே ஸாலிம் ஆகா அவரைசிறைச்சாலைக்குக்கொண்டுபோவதைக்கண்டு, அவ்வெண்ணத்தை விட்டிருந்தார். அவர், கோபத்தின் கடூரத்தால் மனம்போனபோக்குக் கிடங்கொடுத்திருந்தால், கரீபை வெட்டியேயிருப்பார்.

ஆனல், "தற்போது நாம் மிஸ்று யோர் வீரருடன் எதிர்த்து நின்றாலும் கடைசியில் தோல்வியடைவது நாமே" யென்பதை யறிந்து, சமாதானம்பேச நாட்டமுற்றவராகவும், பிந்தி தனக்கு தைரியமுண்டாகும்படிக்கான சில கட்டளைகள் (Constantinople) ஸ்தம்பூலால் வந்தபடியால் சமாதானந் தேடுவதை நிறுத்திவிட்டு,

உதவிப்படை வருவதை வழிபார்த்தவராகவும், "நாம், அறபுகூதான் முதலான தேசங்களுக்குச்சென்று வெற்றிபெற்றுவந்த, புதிய யுத்தப்பயிற்சியில் தேர்ந்த பெருஞ்சேனையுடனெதிர்த்து ஜெயிக்க முடியாமல் வீரமிழந்து தோல்வியடைந்து, அமீர்பஷீர் கையில் நாம் சிக்கிக்கொள்ளுவோம். இப்போது நாம், கரீபைக் கொன்றுவிட்டால் அமீர்பஷீருக்கு அதிக கோபமுண்டாகி, கட்டாயம் நம்மை வெட்டியே தீர்ப்பா"ரென்று பலவாறு யோசித்தவராகவும் இருந்தபடியினாலேயே, கரீபு தன் முன்னாலிருப்பதைப் பொருந்தாமல் சிறைச்சாலைக்கு சீக்கிரங் கொண்டுபோகக் கட்டளையிட்டார்.

32-வது அத்தியாயம்.

## கடவுளை விசுவசி, மற்றதை விட்டொழி.

மேலேகூறியபடிக்கு ஸாலிம்ஆகா, கரீபை சிறைச்சாலைக்குக் கூட்டிக்கொண்டு சென்றார். அச்சிறைச்சாலை அதிக கஷ்டத்தை யுண்டாக்கக்கூடியதென்பது எங்கும் பிரஸ்தாபமாயிருந்தது. பூமிக்குள் கட்டப்பட்ட இருளான கட்டிடம். அநேகம் படிக்கட்டுகளைத் தாண்டி அங்குபோகவேண்டும். கரீபு அங்கேபோகிறபோது திடீரென்று தனக்குண்டான துன்பத்தை நினைத்து பலவாறு சிந்தனைகொண்டதில், தன் அருமை மாதாவின் எண்ணம் மதிகரித்து "நமக்கு நேரிட்டிருக்கிற துன்பத்தை அவர்கள் கேள்வியுற்றால், என்னபாடுபடுவார்களோ"? என்று இரம்ப துக்கமடைந்தார்.

சற்று நேரத்தின் பிறகு, தாயார்கொடுத்த தங்கவசனம் அடங்கிய கடிதத்துண்டும், அவர்களின் உபதேசமும் ஞாபகத்துக்கு வந்து, அப்போது விலங்குகழற்றப்பட்டிருந்ததால் சட்டைச்சாக்கில் கைவிட்டு அக்கடிதத்தை யெடுத்து, கண்ணீரொற்றி முகர்ந்துகொண்டு பிரித்து வாசித்தார். அதில் "கடவுளை விசுவசி, மற்றதை விட்டொழி" யென்றெழுதப்பட்டிருந்தது. அதைப் பார்த்தவுடனே கரீபுக்கு தைரியமும், உற்சாகமும் உண்டாகி, யாதொருகஷ்டத்திலுஞ்சிக்குறாதவர்போன்று முகமலர்ச்சியடைந்தார். அவர் கடிதமெடுத்ததையும், முத்தமிட்டதையும், பிரித்துப் பார்த்ததையும், காவற்காரர்கள் வெகு கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கரீபை துவக்கமாகக் கண்டபோதே பரிபூரணமான



கிருபையை அவர்பேரில் வைத்து அவரைச்சற்றுநேரமேனும் பிரிந்திருக்கப்பொருந்தாத ஸாலிம்ஆகா, கரீபைப்பார்த்து,

ஸாலிம்ஆகா :——தாங்கள் திறந்து பார்த்த கடிதம் என்ன ?

கரீபு :——தங்களுக்குத் தேவையில்லாத கடிதம்.

ஸாலிம்ஆகா :——மெய்தான், நானறிவேன்: ஆனால் அதைப் பார்க்க நாடுகிறேன்.

கரீபு :——மறைக்கக்கூடிய விஷயம் ஒன்றும் அதிலில்லை. சிறப்பான ஒரு மனிதரிடத்திலிருந்து எனக்கு அது கிடைத்தபடியினாலே, அது என்னிடத்தில் இரம்பமதிப்புள்ளதாயிருக்கும்.

ஸாலிம்ஆகா :——(சிரித்தவராக) ஒருவேளை அது தங்கள் பிரிய நேசியால் தங்களுக்குக் கிடைத்திருக்கலாமோ ?

கரீபு :——(வெட்கமுற்றவராக) அப்படிக்கல்ல. என் அருமை மாதாவால் கிடைத்த ஒருபெரும்பாக்கியம்.

ஸாலிம்ஆகா, மாறியும் அக்கடிதத்தைக்கேட்கநாடினார். சிறைச்சாலைவாசலுக்கு நெருக்கத்தில் வந்துவிட்டபடியால், அந்நாட்டத்தைநிறுத்தி, காவலர்களை வெளியேபோகும்படி கட்டளையிட்டு, கரீபை உள்ளேகொண்டு சென்றார். கரீபு அவ்விருண்டபாதையில் நடந்துசென்றதால் வருத்தமுற்று, கண்களில் தீப்பொறிதெறிக்கத்தக்க கோபமுடையவராயிருந்தார். அவருடன் ஸாலிம் ஆகாவைத்தவிரவேறே ஒருவருமில்லை. அச்சிறைச்சாலையின் அறைகள் விலங்கிடப்பட்ட குற்றவாளிகளால் நிரப்பப்பட்டிருந்தன. அவர்களிருவரும் ஒவ்வோரறையாகக் கடந்து, கடைசியில் வெளிச்சமான ஓரறைக்குள் வந்தார்கள். அங்கே ஒருவருமில்லை. அங்கு விரிக்கப்பட்டிருந்த விரிப்பில் கரீபை உட்கார்த்தி, ஸாலிம்ஆகாவும் அவருக்கருகிலுட்கார்ந்தார்.

கரீபுக்கு, ஸாலிம்ஆகா அவ்வளவான கிருபைபாராட்டுவதைப்பற்றி ஆச்சரியமடைந்து, அது தன்னைக் கொல்லுதற்கெடுத்தசதிக்கிருபையென்று நினைத்து, கரீபு வெகு ஜாக்கிரதையாக அவரைப் பார்த்துக்கொண்டேயிருந்தார். ஆனால் ஸாலிம்ஆகாவுடையமுகத்தில் சதிக்குறி காணப்படவில்லை. அப்படியிருக்கும்போது, ஸாலிம்ஆகா,கரீபுக்குக்கிட்டநெருங்கி,அக்கடிதத்தைக் காண்பிக்கும்படிக்கு அவரிடத்தில் மெல்லினமாக கேட்டார்.

அதற்கு கரீபு, "அதைக்கொண்டு தங்களுடைய காட்ட மெ
ன்ன"? வென்று கேட்டார். ஸாலிம்ஆகா "தாய் தந்தையரின் உப
தேசத்தைப்பார்க்க நாடுகிறேனேயன்றி வேறுகாரியத்திற்கல்ல"
வென்றார். கரீபு அக்கடிதத்தை அவர் கையிற்கொடுத்தார். அவர்
அதைப்பார்த்தார். அவருக்கும் அதுமேன்மையான வசனமாகத்
தெரிந்தபடியால் உச்சிமயிர் சிலிர்த்து மெய்யாகவேஇதையெழுதிய
மாதா விலைமதிக்கக்கூடாத இரத்தினமாக விருக்கிறார்கள். அவர்கள்
பெற்றபிள்ளையின் ஊக்கத்தையும், விவேகத்தையும்பற்றி ஆச்சரி
யப்படவேண்டியதில்லை" யென்றார். "ஸாலிம்ஆகா எவ்வளவு அன்
புபாராட்டிப்பேசினும் அப்துல்லாபாஷாவின் மனிதர்களில் அவ்வ
ளவு சுகுணசீலரிருப்பது அரிதென்றறிந்த கரீபு அவரைநம்பாமல்
சதியான வுபசாரனையென்றே யெண்ணியிருந்தார். கரீபைப்பார்
த்து,

ஸாலிம்ஆகா:—பகற் போசனத்தின் வேளையாய்விட்டது.
பசியாறிக்கொள்ளவேண்டுகிறேன்.

கரீபு:—என்மனம் தற்போது ஊண் தின் குடிப்பை நாட
மாட்டாது.

ஸாலிம்ஆகா:—அமீரே.! கடவுளின் உதவியால்இச்சிறைச்
சாலையில் தங்களுக்கு கஷ்டமுண்டாகமாட்டாது. இன்றிரவில்தங்
களுக்கு, கடவுள் சந்தோஷத்தைக் கொடுப்பார்.

(பின்னதை கரீபுகேட்டு உண்மையாக இம்மனிதர் நமக்கு உத
விசெய்வதை நாடுகிறாரென்றெண்ணி, மனக்கலக்கமடங்கி பசியாற
ஆரம்பித்து கொஞ்சம் உண்டுவரும்போது, தன் தாயாருடைய
நினைப்பு வந்ததும் நிறுத்திவிட்டார். அவருடைய முகம் வாடி
விட்டது.)

ஸாலிம்ஆகா:—என் நாயகமான அமீரே! தங்களுடைய
முகத்தில் வாட்ட முண்டுபட்டதின் காரணமென்ன?

கரீபு:—என்சகோதரரே! நான் மரணத்துக்குப் பயப்படு
வதாகத் தாங்கள் நினைக்கவேண்டாம். என் ஜீவனை நான் ஒரு
திருணமாகவும் மதிக்கவில்லை. என் தந்தையரின் பிரசுபேரி
லாணையாக, எனக்குண்டுபட் டிருக்கும் இத்தீங்கை யென்தாயா
ரவர்கள் கேள்விப்பட்டால் மெத்தக் கலங்குவார்கள். எனக்குப்



பின்னால் ஒரு நிமிஷநேரமாகிலும் அவர்கள் ஜீவித்திருக்கப் பொ
ருந்த மாட்டார்கள் என்பதை நினைத்தே நான் கலங்குவதும்,
பயப்படுவதுமா யிருக்கிறேன். நான் ஜீவித்திருப்பதும் அவர்களின்
க்ஷேமத்தைக் கருதியே.

ஸாலிம் ஆகா:—(புன்னகைகொண்டு) மேன்மையிற் சிறந்த
அமீரே! மனமகிழ்ச்சியுடனிருங்கள். இச் சிறைச்சாலையைவிட்டு
நீங்க நானே உதவியாயிருப்பேன்.

கரீபு:—இச்சிறைச்சாலையில் எனக்குக்காவலாக தாங்கள்
ஏவப்பட்டிருக்க, எவ்விதத்தில் எனக்குதவி செய்வீர்கள்.

ஸாலிம் ஆகா:—அந்த ஏவலை ஒருபெரிதாக எண்ணவேண்
டியதில்லை. நாம் நாடியதைச் செய்வோம்.

கரீபு;—தாங்கள் செய்ய நினைக்கிற சதிமானச்செய்கைக்
குக் காரணன் நானேயாகி, மரிப்பதைவிட இவ்விடத்திலேயே தரி
பட்டிருப்பது நலமென் றெண்ணுகிறேன்.

(கரீபின் விவேகமான வார்த்தைகளை ஸாலிம் ஆகா கேட்டு
வியந்து அவர்பேரில் முன்னிலும் அதிக வுவப்புடையவராகி, அவ
ரின் நெற்றியை முகர்ந்து,)

ஸாலிம்ஆகா:—என் நாயகமே! அதைசதிமானச்செய்கை
யென்று கருதவேண்டாம். அநியாயக்காரனுடைய கையிலிருந்து
ஒரு சுத்தமானவரை விடுவிக்கப்போகிறேன். அப்துல்லாபாஷா
முரட்டுத்தனமுடைய துஷ்டர். அவர்எனக்குத் தலைவராயிருக்க,
அவரைப்பற்றி நான் குற்றப்பாடு சொல்கிறதாக தாங்கள் நினைக்க
வேண்டாம்; அவருக்கு விசுவாசமும் அன்பும் இன்னவையென்று
தெரியாது. அவரிடத்தில் சிலவிஷயங்களை நான் கண்டபடியால்
அவரை வெறுத்து மிஸ்றிகளை நேசிப்பதில் என்மனஞ்சாய்ந்தது.

கரீபு:—இதென்ன புதுமை? அப்படியானால் எஜமானுக்கு
மாறுசெய்தவர்களாகவும், சுதேசத்திற்கு இடையூறு விளைத்தவர்
களாகவும் ஆய்விடுவீர்களல்லவா?

ஸாலிம்ஆகா:—(சிரித்துக்கொண்டு) என் நாயகமே! அப்
படிக்கல்ல. அப்துல்லாபாஷா எனக்கெஜமானுமல்ல. நான் இச்சா
வாசியுமல்ல. (சிரியா) ஷாம் வாசியுமல்ல. கடவுளின் கற்பனையால்

நான் இங்கு வரநேர்ந்தது. சாவகாசமான வேளையில் என்வரலாற்றைத் தங்களுக்கு விஸ்தரிக்கிறேன்.

கரீபு:—இப்போது நாம் என்ன செய்யலாம்?

ஸாலிம்ஆகா:—இன்றிரவு யாதோர் அபாயமின்றி தங்கள் தகப்பனாரவர்களின் பாளையத்தில் தங்களைக் கொண்டுபோய்ச்சேர்க்கிறதற்கு நான்உறுதிவாக்களிக்கிறேன். தாங்கள், இபுறுஹீம்பாஷா முன்னால் என் உயிரைக் காப்பதாக வாக்களிக்கவேண்டும். சகல விஷயங்களுக்கு முன்பாக நாம் ஒருவருக்கொருவர் வாக்குத்தத்தஞ் செய்து, சகோதரர்களாய் விடவேண்டும்.

கரீபு:—நல்ல காரியம், அதற்குத் தடையில்லை.

ஸாலிம் ஆகா:—இப்போது நான், இங்கிருந்துபோய் அதற்கான காரியங்களைத் தயாராக்கிவைத்துவிட்டு பொழுதடைந்தபிறகு இங்கு வந்து சேருகிறேன்.

கரீபு:—நல்லது, போய் வாருங்கள்.

ஸாலிம்ஆகா போனபிறகு, கரீபு தனித்திருந்து ஸாலிம் ஆகாவுடைய சொற்களில் சந்தேகமுற்று ஆலோசனையாகி, அவரின் வருகையை வழிபார்த்திருந்தார். பொழுதடைந்து ஒருமணிநேரத்தின் பிறகு ஸாலிம் ஆகா அங்கடைந்து கரீபைப்பார்த்து,

ஸாலிம் ஆகா:—எல்லாம் தயாராக்கப் பட்டிருக்கின்றன. வெளிப்பட ஆயத்தமாகுங்கள்.

கரீபு:—சத்தியமாக இங்கிருந்து ஓடிப்போகிறது எனக்கு அவமானமாய்த் தெரிகிறது. அதற்கென்ன செய்யலாம்?

அப்போது ஸாலிம் ஆகா கரீபின் கையைப்பிடித்து வெளியிற் கொண்டுவந்து நெடுகநடந்து, பூட்டிடப்பட்டிருந்த ஓரறைவாசலுக்கு வந்து, அதைத்திறந்து, அவ்வறைக்குள்ளானார்கள். அவ்வறையின் மேல்பாகச்சுவரில் இருப்புக் கம்பிகளிட்ட ஜன்னலொன்றிருந்தது. ஸாலிம் ஆகா ஒரு ஏணியைச் சுவரில்சாற்றியேறி, தன் கையிலிருந்த ஆயுதத்தால் அக்கம்பிகளில் சிலதையறுத்து, ஒரு ஆள்நுழைய வழியுண்டாக்கி, நீளமான இரண்டு கயிறுகளை மற்றகம்பிகளில் வலுவாகக்கட்டி வெளிப்புறந்தொங்கவிட்டு, கரீபைப்பார்த்து, "நாயகமே! இவ்வேணியிலேறுங்க" ளென்று கூறினார்.



கரீபு ஏணியிலேறினார். ஸாலிம் ஆகா "அமீரே! நேரத்தைப் போக்காமல் தங்களின் கால்களை முதலில் இந்த ஜன்னலுக்கு வெளியிலாக்கி, அங்கு தொங்கிக்கொண்டிருக்கிற கயிறுகளைப் பிடித்துக்கொண்டு அஞ்சாமலிறங்குங்கள். கீழே படகொன்று தயாராக்கப்பட்டிருக்கிறது. தாங்கள் படகிலானவுடனே அப்படகோட்டிகள் தங்களைக்ஷேமமாகக் கொண்டு போய்க் கரையிற் சேர்ப்பார்கள்" என்றார்.

இதைக்கேட்ட கரீபு அவரின் சொற்படிக்குக் கயிற்றைப்பிடித்துக்கொண்டு கடலையுற்றுப் பார்த்தார். அன்று காற்றின் கடிசால் கடல் கொந்தளித்து அலைகள் சுவரிலடித்துக்கொண்டிருந்ததாலும், அதிக ஆழமாகவிருந்ததினாலும், "நமக்கு நீந்தத்தெரியாதே; கயிறறுந்து நாம் கடலில் வீழ்ந்தால் என்ன செய்கிற" தென்று யோசித்து மனதைத் திட்டப்படுத்திக்கொண்டு இறங்கி படகிலானார். உடனே படகோட்டிகள் படகைவலித்து வெகுதூரஞ்சென்று கடைசியில் ஒருகரையைச் சேர்ந்தார்கள்.

அவ்விடத்தில் ஸாலிம் ஆகா இரண்டுகுதிரைகளுடன் தயாராக நின்றார். இருவரும் குதிரைகளிலேறி இபுறுஹீம்பாஷாவின் பாளையத்தை நோக்கிச் சென்றார்கள்.

## 33-வது அத்தியாயம்.

## ஸாலிம் ஆகா.

அன்றுகாலையில் கரீபு வெளிப்பட்டு போனது அமீர்பஷீருக்குத் தெரியாதிருந்தது. காலைப்போஜன மருந்தும்போது அவரைக் காணாமையால் "கரீபெங்கே"? யென்று கேட்டார். அதிகாலையில் அவர்குதிரையேறி வெளியிற்போனதாக ஒரு போர்வீரன் சொன்னான். "இப்போது அவர் எங்கிருக்கிறார்? பாருங்க" ளென்றார். சிலர்வெளியிலோடிப் பார்த்துவிட்டுவந்து, "காணோ" மென்றார்கள்.

உடனே அமீர்பஷீர் சில போர்வீரர்களை யழைத்து "இவ்வனத்தைச் சுற்றிப்பார்த்து அழைத்துக்கொண்டு வாருங்க" ளென்று கட்டளையிட்டார். அவர்களும் போய்ப்பார்த்துவிட்டு காணோமென்று வந்துவிட்டார்கள். இதைக்கேட்டவுடனே, அமீர்பஷீ

ருக்குக் கடுங்கோபமுண்டாகி பொறுதிசெய்யக் கூடாதவராய் உடனே தன்குதிரையிலேறினார். அவருடன் சிலபோர்வீரர்களும் குதிரைகளிற் சென்றார்கள். காற்றுருவதற்காக அவ்வனத்தின் வசதியான தலங்களுக்குப் போயிருப்பாரென்றெண்ணி, தென் திசையில் குதிரைகளை நடத்தி அஸ்தமனகாலம் வரையில் கரீபைத் தேடினார்கள். கண்டார்களில்லை.

அமீர்பஷீர் அதிககோபத்துடனும், கலக்கத்துடனும் தன் கூடாரத்துக்குத் திரும்பிவந்தார். அங்கே கரீபும், ஸாலிம் ஆகாவும் தன் கூடாரத்துக்குள் ளிருக்கக்கண்டார். அமீர்பஷீர் உள்ளே வந்தவுடனே, அவ்விருவருமெழுந்து நின்று, கரீபு முதலில் தந்தையருக்கு வந்தனங்கூறி கையைமுத்தமிட்டார். "கரீபே! நீர் எங்குபோயிருந்தீ"ரென்று அமீர்பஷீர் கேட்டார். கரீபு நடந்த யாவற்றையும் விவரித்தோதி, "மரணாபாயத்தை விட்டும் என்னைக்காப்பாற்றியவர், இதோநிற்கிற ஸாலிம் ஆகாதா"னென்று அவரைச் சுட்டிக்காட்டினார்.

உடனே அமீர்பஷீர், ஸாலிம் ஆகாவைப்பார்த்து, "நீர்செய்த அரியநன்றி ஒருக்காலு மறக்கக்கூடியதல்ல. அதற்குப்பிரதி நான் உமக்குச் செய்யவேண்டு மாதலால், தேவையானதைக் கேளு"மென்றார். அதற்கு ஸாலிம் ஆகா மிகுந்தவணக்கத்துடன் அமீர்பஷீரின் கையைமுத்தமிட நாடினார். அமீர்பஷீர் கையைபிழுத்துக் கொண்டார்.

பின்பு ஸாலிம் ஆகா, அமீர்பஷீரைப்பார்த்து "என் நாயகமே! இபுருஹீம்பாஷா இடத்தில் முந்தி நான் ஒரு போர்வீரனாயிருந்து, அவர்களுடைய வுத்தரவில்லாமல் வெளிப்பட்டு விட்டேன். அவர்கள் என் தப்பிதத்தை மன்னித்து மறுபடியும் என்னைச்சேர்த்துக் கொள்ளும்படியாக அவர்களிடத்தில் தாங்கள் சிபாரிசுசெய்யும் படி கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றார். அமீர்பஷீர் "நல்லது, நாளைக்காலையில் இபுருஹீம்பாஷா விடத்திற்குச் சென்று, அதுபோல் நடத்தச்செய்கிறே"னென்று கூறி, ஸாலிம் ஆகாவை சந்தோஷப்படுத்தினார். மறுநாட்காலையில் அமீர்பஷீர், கரீபையும் ஸாலிம் ஆகாவையும் கூட்டிக்கொண்டு, இபுருஹீம்பாஷாவின் கூடாரத்துக்குவந்து அமீர்பஷீரும், கரீபும் உள்ளேபுகுந்து உத்தரவுவாங்கி, ஸாலிம் ஆகாவையும் உள்ளே வரவழைத்துக்கொண்டார்கள்.



ஸாலிம் ஆகா கூடாரத்துக்குள்ளான வுடனே, இபுருஹீம் பாஷா அவரை யின்னாரென்றறிந்து கொண்டு, "நீர் ஸாலிம் ஆகா வல்லவா"? என்று கேட்டார்.

ஸாலிம் ஆகா:——ஆம், எஜமானே! நான் தங்களுடைய அடிமை ஸாலிம்தான்.

பாஷா:——(Maura) மூவாரு யுத்தத்திற்குப் பிறகு, நீர் எங்கேபோனீர்? நான் மிஸ்றுக்கு வந்த பிற்பாடு உம்மைக்காணாமை யால் உமக்கு ஆபத்து சம்பவித்திருக்கப்போது மென்றெண்ணிக் கொண்டிருந்தேன்.

ஸாலிம் ஆகா:——என் நாயகமே! அப்படிக்கல்ல. எனக்கு யாதொரு அபாயமும் சம்பவிக்கவில்லை. தவறிப்போன ஒருவரைத் தேடுவதற்காக இங்குவந்துவாசஞ்செய்துகொண்டிருந்தேன்.

பாஷா:——இதென்ன புதுமை? தவறிப்போனவர் யார்? (Greece) கிறேக்கு தேசத்திலிருந்து நம்முடன் சேர்ந்து வந்தீரே. அப்போது உம்மை, கிறேக்கு தேசவாசியென்றன்றோ எண்ணியிருந்தேன். அப்படியிருக்க, இங்கே ஒருவர் தவறிப்போனதாகச் சொல்லுகிறீரே.

ஸாலிம் ஆகா:——(பெருமூச்செறிந்து) என் எஜமானே! இது தான் நடந்தது. என்குற்றத்தைத் தாங்கள் பொறுப்பதை நாடி, நாயகம் அமீர்பஷீர் அவர்களுடன் தங்களின் சமுகத்திற்கு வந்திருக்கிறேன்.

என்று அவர்பேசி முடித்தவுடனே, அமீர்பஷீர் இபுருஹீம் பாஷாவைப் பார்த்து, "இவ்வாலிபர் என்மகன் கரீபை மரணாபாயத்தினின்றும் காத்து, எனக்குப்பெரிய வுபகாரஞ்செய்திருக்கிறார்" என்று சொல்லி, ஆதிமுதல் அந்தம் வரையில் நடந்தவைகளைவிவரித்துக்காட்டி, "இவர் நம்முடனிருப்பதில் நமக்கு அதிகபிரயோசன மிருக்கிறது. இவர்மூலமாக பகைஞர்களின் அந்தரங்க விஷயங்களை யறிந்துகொள்ளலா மென்று காதிடத்தில் இரகசியமாகச் சொன்னார்.

பாஷா:——ஸாலிமே! உண்மையாக உம்முடைய குற்றத்தை நான் மன்னித்தேன். இக்காவின் நிலைபரத்தையும், அதின்

சேனாபலத்தையும், அப்துல்லாபாஷாவின் நாட்டத்தையும் இவ்வாறென்று நீரறிவிப்பது நமது கடமை.

ஸாலிம் ஆகா:—(உடனேயெழுந்து முழங்காலிற்படிந்து). என் நாயகமே! மேலேகூறிய விஷயங்களை யறிவிப்பதற்கு இடம் படாது. நான் பட்டணத்திலிருந்து இரகசியமாகப் புறப்பட்டு வந்ததும், சிறைச்சாலையிலிருந்து நான் காப்பாற்றக் கடமைப்பட்ட ஒருவரைக் கூட்டிக்கொண்டு வந்ததும் எனக்குப்போதுமானது. அதினால் என் தலைவரின் கட்டளைக்கு மாறுசெய்தவனா யிருக்கிறேன். மாக்ஷிமைபொருந்திய தாங்கள் இப்பட்டணத்தின் இரகசியங்களை அறியத்தேடுகிறது விசுவாசமான ஊழியத்தையும், சத்திய வாக்கையும் முறிக்கிறதாயிருக்கும்.

அமீர்பஷீர் அவ்வாலிபரின் விவேகத்தையும், விசுவாசத்தையும்பார்த்து ஆச்சரியமடைந்தார். இபுறாஹீம்பாஷா, மூவாரு பூமியில் நடந்த யுத்தங்களில் அனேகமுறை அவரை இதுபோன்ற விஷயங்களில் பரீக்ஷித்திருக்கிறபடியினாலே, அவருடைய விவேகத்தையும், விசுவாசத்தையும் பற்றி வியப்படையவில்லை. ஆயினும் ஸாலிமைப்பார்த்து, "நீர் ஆதியில் நம்முடைய ஊழியத்தி லுள்ளவரானதால், அவ்விஷயங்களை நீர் வெளிப்படுத்துவதினால் சத்தியவாக்கை முறிக்கிறதாகாது. முந்திய எஜமானின் கடமையை யிறுத்தவராவீர்" என்று சொன்னார்.

ஸாலிம் ஆகா "நாயகமே! மன்னிக்கவேண்டும். வேவுகாரரின் தொழிலை நான் கையாட மாட்டேன். அவ்வேலையிலிறங்க என்மனம் ஒருக்காலும் இடந்தரமாட்டாது. இப்பட்டணத்தின் நிலைமையில் இன்னும் ஒரு சொபகாரியத்தையும் நான் அறிவிக்க இடம்வாய்க்காது. தாங்கள் என்னை எவ்வாறு வம்பிப்பினும் சரியே. என்னுடையகாரியம் இப்போது தங்கள் கைவசமிருக்கிறது" என்று மறுமொழி கொடுத்தார். அதற்கு இபுறாஹீம்பாஷா புன்னகை நகைத்து, "ஸாலிமே! பரவாயில்லை. உம்மை நான் பலமுறை பரீக்ஷித்திருக்கிறே" னென்று கூறி, ஒருபடைத்தலைவரை வரவழைத்து, "இந்த ஸாலிமை நம்முடைய போர்வீரருள் ஒரு தலைவராகப் பதிவுசெய்து கொள்ளு" மென்று கட்டளையிட்டார். ஸாலிம், பாஷாவின் கையை முத்தமிட்டு வெளியிற்போய் விட்டார்.



அமீர்பஷீர், இபுறாஹீம்பாஷாவைப் பார்த்து, "இவ்வாலிபரின் விவேகத்தைப்போல உண்மையாக நான் கண்டதேயில்லை" யென்றார். அதற்கு இபுறாஹீம்பாஷா சிரித்துக்கொண்டு, "இது முதல் தடவையல்ல. சற்றேறக்குறைய ஐந்துவருடங்களுக்குமுன், கிறேக்குதேசத்தின் மூவாருவிலுள்ள நாபாரினில் இவ்வாலிபரின் விவேக சாதுரியத்தைப்பற்றி முதலில் நானறிந்திருக்கிறேன்.

உதுமானிய கவர்ண்மெண்டாருக்குக் கீழ்ப்படியாமல் (Greeks) கிறேக்கர் கலகந்தொடுத்தபோது உதுமானிய (Porte) போர்ட் சங்கத்தாரின் கட்டளைக்கிணங்கி, கப்பற்சேனையுடன் நான் மூவாருவுக்குச் சென்றதைத் தாங்களறிவீர்கள். கி. பி. 1826-ல் எங்கள் கப்பல்கள் நாபாரீன் துறைமுகத்தில் நங்கூரமிட்டு நாங்கள் அப்பட்டணத்தைப் பிடிப்பதற்காக அடர்ந்தேறிக்கொண் டிருக்கையில், இவ்வாலிபர் ஓர்படகில் வெள்ளைக்கொடி போட்டுக்கொண்டு எங்களிடத்தில் வந்துசேர்ந்தார். அவருடைய நாட்டத்தை விசாரித்தோம். அதற்கவர், "கிறேக்கரின் ஓர் போர்வீரரென்றும், இட்டமாக தான் இஸ்லாமாகி வந்ததாகவும், இஸ்லாத்திலானது அச்சத்தையாவது, சதிமானத்தையாவது முன்னிட்டல்ல வென்றும் சொல்லி, எங்களுடனே ஒரு போர்வீரரா யிருக்கப் பிரியப்பட்டார்.

அவர் அறபுப்பாஷை நன்றாகப்பேசினதினால் அவருடைய வரலாற்றை விசாரித்தேன். அதைப்பற்றி தன்னிடத்தில் கேட்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டார். பின்பு, நான் அவரிடத்தில் கிறேக்கரின் வலுவையும், நாட்டத்தையுங் குறித்து உசாவினேன். கிறேக்கர் தன்னை நம்பி, தானறியும்படிக்கு வெளியாக்கியிருக்கிற அந்தரங்கங்களை, பிறருக்கறிவிப்பது கூடாதகாரியமென்றும், தான் கிறேக்கனல்லா திருந்தாலும், விவேகமும் விசுவாசமும் அந்த இரகசியங்களை மறைக்கின்றனவென்றும் சொன்னார்.

நாங்கள் பலவிதமான பயங்கரங்களைக்காட்டி அவரைக்கேட்டோம். ஒருவிஷயத்தையாவது அவர் வெளிப்படுத்தினாரில்லை. அவருடைய விவேகத்தையும், விசுவாசத்தையும் நினைத்து நினைத்து, நான் மிகுந்த ஆச்சரிய மடைந்தேன். பின்பு, அவரின்மனோபீஷ்டப்படிக்கு எங்களுடனிருக்க உத்தரவு கொடுத்தேன். நாங்கள் மிஸ்றுக்கு வந்தபோது அவரும் எங்களுடனேயே வந்தார்.

நாங்கள் (Alexandria) இஸ்கந்தரிய்யா வந்துசேர்ந்த சொற்ப நாளைக்குப் பிறகு, அவரை நான் காணவில்லை. அவர், எங்களுடைய படையிலிருப்பது எனக்கு மிகப் பிரியமாயிருந்தது. ஆனதால், அவரை யெப்போதும் நான் கவனித்தவனாகவே யிருந்தேன். இப்போது கண்டு கொண்டேன்" என்று கூறினார்.

அமீர்பஷீர் "பாஷாவே! அவர்பேரில் தாங்கள் அதிகக்கிருபை யுடையவர்களா யிருக்கவேண்டும். தாங்கள் அவருக்குச்செய்கிற எக்கருமமும் எனக்குச் செய்ததுபோலாகு" மென்றார். அதற்கு இபுறுஹீம்பாஷா "அப்படியே செய்கிறே" னென்று வாக்களித்தார்.

## 34-வது அத்தியாயம்.

## அபூர்வ சந்திப்பு.

கி. பி. 1832-ன் துவக்கத்தில் ஸைதாவின் ஆட்சியையும், அதைச்சார்ந்த நாடுகளின் அதிகாரத்தையும் அமீர்பஷீருக்குக் கொடுக்கும்படிக்கு முஹம்மது அலிபாஷா, தன்மகன் இபுறுஹீம்பாஷாவுக்கு கட்டளையனுப்பினார். கரீபு அதையறிந்து, "இனிமேல் நாம் இக்காவிலிருக்கவேண்டிய அகத்தியமில்லை" யென்றுகண்டு, பைத்துத்தீனுக்குப் போக அமீர்பஷீரிடத்தில் உத்தரவுவேண்டினார். அவர் உத்தரவு தந்தார். கரீபு, தன்தோழர் ஸாலிம் ஆகா முதலானவர்களிடத்தில் பயணவிடை பெற்றுக்கொண்டு, சிலபேர்துணையுடன் புறப்பட்டு, அங்கிருந்து ஒன்றரைநாள் பயணதூரத்திலுள்ள (Soor) சூர்என்னும் பட்டணத்துக்கு வந்துசேர்ந்தார். ஆனால் அப்பட்டணத்துக்குள்ளே போகப் பிரியமில்லாதவராக, மேற்படிபட்டணத்திற்கு அரைமணித்தியாலப் பயணதூரத்திலுள்ள றுசுல்ஐன் என்னுமிடத்தில் இராத்தரிக்க நாடி, அங்கு கூடாரமடித்திறங்கினார்.

அவ்விடத்தில் அவ்வூர்த்தோட்டம் முதலானவைகளுக்கு ஜலம் பாய்ச்சுகிற நான்கு புறமும் மதிலிடப்பட்ட வெந்நீரூற்று ஒன்றிருக்கிறது. அச்சமயம் பொழுதடையும் காலமாயிருந்தது. அங்குள்ள விருக்ஷங்கள் மிகச்செழிப்பாகவும், அதிகமழையினால் பூமி சுத்தமாக்கப்பட்டதாகவும், ஆகாயந்தெளிவாகவு மிருந்தன.



கரீபு குதிரையிலிருந்திறங்கியவுடனே இராப்போஜனந்தயார்ப்படுத்தும்படிக்குக் கட்டளை பண்ணிவிட்டு, துணைக்கொருவரைச் சேர்த்துக்கொண்டு அத்தோட்டத்தில் உலாவப்போனார். வழியில் பழயகம்பளிபோர்த்திய ஒருமனிதர் அவ்வழியாய்ப் போகிறதை கரீபு கண்டு, அவர் கிட்டநெருங்கிப் பார்த்தார். நீண்ட தாடியையுடைய ஒருவிருத்தர், நரைத்த தலைமயிரை பின்புறந் தொங்கவிட்டு, கையில் தடிக்கொம்பொன்று பிடித்துக்கொண்டு, அதிகக் கவலை யடைந்தவராக வலமிடம் திரும்பிப் பார்க்காமல் நடந்து போகிறார்.

அவருடைய கோலத்தை கரீபு பார்த்து புதுமை யடைந்து, அவரின் வரலாற்றை யறியவிரும்பி, "வயோதிபரே! எங்கு செல்லுகின்றீ" ரென்று கேட்டார். அவர் நித்திரையிலிருந்து விழித்தவரைப்போல் கரீபை யேறெடுத்துப் பார்த்துவிட்டு, தலை குனிந்து மாறியும் நடக்க ஆரம்பித்தார். கரீபு மறுபடியும் அவ்வயோதிபரை யழைத்து "ஏன், நான்கேட்டதற்கு மறுமொழி கூறாமல் முன்னேறுகின்றீர். என்னுடைய வுத்தரவில்லாமல் இப்பூமியினூடே செல்லக்கூடாதென்பதை நீர் அறியமாட்டீரோ"? என்றுகேட்டார். அதற்கவர் கோபத்துடன் திரும்பி, "நான் கடவுளின் அடிமைகளிலொருவன். அவருடைய பூமியில் நான்நடந்து செல்கின்றேன். உமக்கேன் இக்கேள்வியும் தடுப்பு" மென்றார். கரீபு, இச்சொல்லைக்கேட்டு புதுமையாகி, அவரிடத்தில் நெருங்கி அவருடைய கையைப்பிடித்தார். அவ்விருத்தர் கையை உதறி, மஹாகோபத்துடனே தன் கைத்தடியால் கரீபை யடிக்க நாடினார்.

கரீபு; இந்த மனிதரின் புத்தி, சுபாவத்திலில்லை யாதலால் பொறுதிசெய்து பிடித்து அவரை சிக்ஷிக்கவேண்டுமென்று நினைத் திருந்தார். ஆனால், கரீபுடன் துணையாகச் சென்றவர் அவ்விருத் தாப்பியரின் கையைப்பிடித்து, "ஏ, மனிதனே! மரியாதையாக நில்லு. இதோ, உன்னுடன் சம்பாஷிக்கிறவர் அமீர்பஷீருடைய புத்திரராகுமென்றார். இதைக்கேட்ட விருத்தருக்கு நடுக்கமும் பிரமிப்புமுண்டாகி, கரீபை சற்றுநேரம் கூர்க்கப்பார்த்துவிட்டுத் தலை குனிந்தார். ஆனால், அவருக்குண்டுபட்ட நடுக்கம் நீங்காதிருந்தபடியால், கையிலிருந்த தடிக்கொம்பு நழுவி கீழே விழுந்துவிட்டது.

கரீபு அம்மனிதனை உற்றுநோக்கியபோது முந்தி அவரைக் கண்டிருக்கிறதாக கரீபுக்கு ஊசாட்ட முண்டாகி, தன் துணைவரை அம்மனிதருடன் பேசவிடாமல் தடுத்து ஆலோசித்து அவர் கிட்ட நெருங்கி, "உம்முடைய பெயரை அறிய நான்விரும்புகிறேன்" னென்றார். அதற்கவர், "அதுகூடாது, தங்களுடையபெயரைத் தாங்கள் சொல்லக் கேட்டுக்கொள்ளுகிறேன்" னென்றார்; கரீபு, "நான் அமீர் பஷீருடையமகன் கரீபு" என்று சொல்லி, "உம்முடையபெயரென்ன"? வென்றுகேட்டார்.

அவ்வயோதிபர் இச்சொல்லைக் கேட்டவுடனே கரீபின் கிட்ட நெருங்கி அவருடன் பேச நாடினார். அவரின் உதடுகள் துடித்துக் கொண்டிருந்ததால் பேசக்கூடாதவராகி, தன் கையைநீட்டி, கரீபின் தொப்பியைக் கழற்றினார். கரீபின் துணைவர் தடுக்கப் பார்த்தார் கூடவில்லை. வயோதிபர், கரீபின் தொப்பியைக் கழற்றி, தலையைத் தடவிப்பார்த்தார். காயத்தின் தழும்பிருந்தது.

அப்போது கரீபு "இந்த மனிதர் மிஸ்றின் பாலைவனத்தில் கரவர்களின் அபாயத்தைவிட்டும் நம்மைக் காப்பாற்றியவராயிருக்கப் போது"மென்றெண்ணி, உரத்த சப்தத்துடன், "தாங்கள் அமீர் சுலைமானல்லவா"? என்று கேட்டார். அவர் விடைகூற நாவெழாமல் "ஆம்" என்று சிரசை யசைத்தார். "என்னை மரணத்தினின்றுங் காப்பாற்றிய நாயகத்திற்கு சோபனமும் சந்தோஷமும் உண்டாகக்கடவ" தென்று வாழ்த்தி, அவருடைய கையை முகர்ந்து கொண்ட பிறகு, தன் துணைவரைப்பார்த்து "சிக்கிரம் சுத்த ஜலம் கொண்டுவாரு" மென்றேவினார். அதுபோல அவர்கொண்டுவந்து கொடுத்தார்.

அவ்வயோதிபருக்கு சரியான வுணர்வில்லா திருந்தபடியால் ஜலத்தை அவருடைய முகத்தில் தெளித்து உசாருண்டாக்கி, அவரின் படபடப்பும், நடுக்கமும் நீரும்படிக்கான சமாதானவார்த்தைகள்கூறி அவரை யிருப்பாட்டி, "வெகுகாலத்திற்குப் பிறகு தாங்கள் இங்கு வந்த காரணமென்ன ? தங்களுக்கென்ன சம்பவித்த" தென்று கரீபு கேட்டார். அவ்வயோதிபர், "ஹா"! வென்றுபெருமூச்செறிந்து அழுதார்; மறுமொழி கொடுத்தாரில்லை.

சற்றுநேரத்தின் பிறகு, அவர் கரீபிடத்தில் "தங்கள் தகப்பனார் அமீர்பஷீர் அவர்கள் எங்கே"? யென்று கேட்டார். அதற்கு



கரீபு "மிஸ்றுப்படையுடன் இக்காவி லிருக்கிறார்கள். கொஞ்சநாளையில் பைத்துத்தீனுக்குத் திரும்பிவிடுவார்க" ளென்றார். "அவர்கள் சுகத்துடனிருக்கிறார்களா"? என்று கேட்டார். கரீபு "ஆம், சுகமாக விருக்கிறார்கள். அவர்கள் தங்களைக் கண்டுகொண்டால் யாதோர் ஐயமின்றி சந்தோஷ மடைவார்கள். தாங்கள் எங்களுக்குப் பாரிய நன்றி செய்திருக்கிறீர்கள். தாங்கள் இப்போது என்னுடன் என் கூடாரத்துக்கு வாருங்கள். பொழுதுவிடிந்தவுடனே, பைத்துத் தீனுக்குப் பிரயாணமாவோம். என் தகப்பனாரவர்கள் வருகிறவரையில் தாங்கள் அங்கேயேயிருக்கலாம்" என்றழைத்தார். வயோதிபர் "வரமாட்டேன்" னென்று மறுத்தார். கரீபு "வரத்தான் வேண்டு" மென்று கட்டாயப்படுத்தி கூடாரத்துக்குக் கூட்டிச் சென்றார்.

அங்கு சென்று வயோதிபரை வஸ்திரங்களை மாற்றும்படிக்கும் குளிக்கும்படிக்கும் வேண்டினார். வயோதிபர் "என் அருமை மகனே! நான் ஸ்நானஞ் செய்கிறேன். என் உடையை மாற்ற மாட்டேன்" னென்று கூறி, குளித்தார். பிறகு சாப்பாடு தயாராக்கப்பட்டது. வயோதிபர் முதலானவர்கள் போஜனமருந்தி, காப்பி குடித்தார்கள்.

கரீபு, தன்னை மரணத்தைவிட்டுங் காப்பாற்றி, அவர் செய்தவுபகாரம் தன்மனதில் பூரணமுற்றிருப்பதினாலும், அதற்கு அறிகுறியாக தன்தலையில் காயத்தின் மறுவிருப்பதினாலும், அப்படிப் பட்டவரை தான் அபூர்வமாகச் சந்திக்க நேர்ந்ததைப்பற்றி இரம்ப சந்தோஷமடைந்து, அவ்வயோதிபரின் வரலாற்றை யிரண்டாமுறை கேட்டார். அதற்கவர் "என்வரலாற்றை அமீர்பஷீர் அவர்களிடத்தி லல்லாமல் மற்றவர்களிடத்தில் சொல்லமாட்டேன்" னென்றபடியால், கரீபு மறுபடி அதைப்பற்றி அவரிடத்தில்கேட்கவில்லை.

ஆனால் அவருக்குப் பிரதி செய்யும் விஷயத்தைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கும்போது, கரீபுக்கு தன் தாயாரின் எண்ணம் வந்தது. அப்போது கரீபு, சுலைமானைப் பார்த்து "நான் தங்களைச் சந்தித்ததினால் மெய்யாகவே பூரிப்படைந்திருக்கிறேன். எனக்குத் தாங்கள்செய்த பேருதவியைப்பற்றி நினைவுகூர்ந்து என் தாயார் தங்களைத் துதித்துக் கொண்டிருக்கிறபடியினாலே, தங்களை அவர்கள் கண்டால் இரம்ப சந்தோஷ முறுவார்கள். இன்னும் இரண்டு நாளை

யில் அவர்களைத் தாங்கள் கண்டுகொள்ளுவீர்கள். அப்போது அவர்களுக்குண்டாகும்பூரிப்பதாங்களும்அறிவீர்கள்" என்று கூறினர்.

வயோதிபர், "அவையாவும் தங்களுடைய நற்குணத்தினாலும் நல்லெண்ணத்தினாலும் உண்டானவைகளே ஒழிய என்னால் நடந்தவைகளல்ல. தங்களின் தந்தையர் அமீர்பஷீர் அவர்கள், எனக்கு மஹாபாரதூரமான உதவிசெய்திருக்கிறார்கள். என்கிறும், என்று இன்னமும் பேச ஆரம்பித்தார். பேச நாவெழாமல் அழுதுகொண்டிருந்தார். (அவ்விருத்தரின் விஷயங்களை இப்புத்தகத்தை வாசிக்கும் நாம் அறிந்திருக்கிறதுபோல் கரீபு அறியாதவராதலால், அவரின் அழுகையைப்பற்றி மிகுந்த ஆச்சரியமடைந்தார்.)

மறுநாட்காலையில், அவ்வயோதிபரை ஒரு குதிரையிலேற்றி அவரின் பணிவிடைக்காக இரண்டுபேரைத் துணையாக்கி, கரீபும், மற்றவர்களும் குதிரைகளிலேறி, பைத்துத்தினை முன்னோக்கி நடத்தி, பொழுதடைகிறவரையில் நடந்து, இரவானவுடன் ஓரிடத்தில் தங்கியிருந்து, மறுநாட்காலையில் பிரயாணமாகி பைத்துத்தினுக்குச் சமீபத்திலானார்கள். சிலர் முந்திச்சென்று அமீர்கரீபின் வருகையை சகலருக்கும் அறிவித்தார்கள். அவ்வூர்வாசிகள், கரீபைச் சந்திப்பதற்காக கோட்டைக்கு வெளியேவந்து கண்டு, சோபனமும்வந்தனமுங்கூறி கோட்டைக்குள் அழைத்துச் சென்றார்கள். கரீபின் தாயார் ஸல்மாநாயகியும், அவர்களின் தோழியாகிப் அமீர்பஷீரின் மனைவியரும், மற்றபெண்டுகளும், அந்தப்புரவாசலில் கரீபின் வரவையெதிர்பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

---

## 35-வது அத்தியாயம்

## மகிழ்ச்சியான சந்திப்பு.

——):o:(——

கரீபு பொழுதடையுஞ் சமையத்தில் தன்பரிவார சகிதமாக பைத்துத்தினுக்கு வந்து சேர்ந்து, அரண்மனைக்குச் சமீபத்திலாகி, அவ்வயோதிபரைமட்டில் கூட்டிக்கொண்டு உள்ளே சென்று, அரண்மனையின் முற்றவெளியைக் கடந்து, அந்தப் புரத்தின் தெரிசனை மண்டபத்தில் அவரை உட்கார்த்திவிட்டு, உள்ளே சென்றார்.



வாசலில் வழிபார்த்துக்கொண்டுநின்ற தாயார் முதலானவர்கள் அவரைக் கண்டவுடனே மிகுந்த ஆவலுடன் அணைத்து முகந்துகொண்டார்கள்.

பின்பு, தெரிசனை மண்டபத்தில் ஒரு அன்னிய மனிதரிருப்பதைக்கண்ட பெண்டுகள் வெட்கமுற்று, உள்ளுக்காக நாடினார்கள். உடனே கரீபு தன்தாயாரைப்பார்த்து, "என்மாதாவே! (Bonisouef) பனீசுவைபு பாலைவனத்தில் தங்களின் புத்திரரை இரக்ஷித்தவர், இதோ, தெரிசனை மண்டபத்திலிருக்கிற வயோதிபர்தான்; அவரின்கையை முத்தமிடுங்க" ளென்று கூறினர்.

இதைக்கேட்ட ஜமீலாநாயகி, இரண்டு முழங்கால்களும் ஒன்றோடொன்றுமோத நடந்துவந்து, அவரைஉற்றுநோக்கி, "அமீனே! அமீனே! தாங்கள் உயிர்த்திருக்கிறீர்களா? என்று பெருங்கூச்சலிட்டு அலறி ஸ்மரணைதப்பி கீழேவிழுந்தார்கள். அந்தப்புரஸ்திரீகள் இச்சப்தத்தைக்கேட்டு ஓடிவந்தார்கள். வயோதிபர் அதிக பிரமிப்படைந்து, "அமீனே அமீனே" என்று சப்தமிட்டது யாரென்று கவனித்து, இன்னாரென் றறிந்துகொண்டு, "ஸல்மாவே! ஸல்மாவே! நீங்கள் இவ்விடத்திலா யிருக்கிறீர்க" ளென்று சப்தமிட்டு மூர்ச்சையானார்.

அங்கிருந்த சகலரும் பிரமிப்படைந்தார்கள். கரீபு மற்றவர்களைவிட அதிக திகிலடைந்திருந்தார்.

அமீர்பஷீரின் மனைவியருடைய கட்டளைப்படிக்கு சுத்தஜலங்கொண்டுவந்து அவ்விருவரின் முகங்களிற் றெளித்து உசாருண்டாக்கினார்கள். அப்போதும் அவர்கள் ஒருவரை ஒருவர்பார்த்து அமீன்! அமீன்! என்று அரவமிட்டு அவருடைய ஸல்மாநாயகி, காலில்விழுந்தார்கள். அவரும், ஸல்மா! ஸல்மா! என்று கூறியழுதார். அவ்விருவருடைய அந்தரங்கங்களை அமீர்பஷீரின் மனைவியரைத் தவிர மற்றவர்கள் அறியமாட்டார்கள். ஆதலால், அவ்விருவருக்கும் பயித்தியம் பிடித்துவிட்டதென்று அவர்களெண்ணித் திகைத்திருந்தார்கள்.

ஸல்மாநாயகி, அமீன்பே, அமீர்கரீபு இம்மூவர் நீங்கலாக மற்றவர்களை அந்தப் புரத்துக்குப் போய்விடும்படியாக அமீர்பஷீரின் மனைவியர் கட்டளையிட்டார்கள். அதுபோல் அவர்களடங்கலும் போய்விட்டார்கள். கரீபு, அந்தவிருத்தர் தனக்குத் தந்தைய

ரென்றும், அவருடைய நாமம் அமீன்பே யென்றும், அமீர்பஷீரைத் தவிர வேறே தந்தையருண்டென்றும், தன் தாயாரின்பெயர் ஸல்மா என்றும் அறியாதவரா யிருந்தபடியால், கனவுகண்டு விழித்த வரைப்போல பிரமித்து, இவ்விருத்தரை நம் தாயார் கண்டவுடனே, நமக்கு நேர்ந்த அபாயத்தின் ஞாபகமும், அதில் நின்றும் நம்மைக்காப்பாற்றிய நினைவும் அவர்களுக்குண்டாகி, இந்தப்படிக் கழுது சப்தமிட்டார்களென்று ஆரம்பத்தில் நினைத்துக் கொண்டிருந்தார்.

ஆனால், அவ்விருவரும் தானறியாத புதுப்பெயர்களைக்கொண்டு அழைத்துக் கொண்டபடியால், முந்தின எண்ணத்தை மாற்றி இரம்ப ஆச்சரிய மடைந்து, தாயாரின் அழுகையை நிறுத்தும் படிக்கு சமாதானஞ்சொல்ல ஆரம்பித்தார். ஸல்மாநாயகி அழுகையை நிறுத்தக்கூடாதவர்களாக அதிக சந்தோஷத்தினால் ஆனந்தக்கண்ணீ ரோட்டிக்கொண்டிருந்து சற்று பொறுத்து, தன் புருட நாயகரைப்பார்த்து, "தங்களுடைய புத்திரர் கரீமை தாங்களேன் முத்தமிடா திருக்கிறீர்க" ளென்று கேட்டார்கள்.

உடனே அமீன்பே எழுந்து கரீமைக் கட்டியணைத்து என் அருமைமகனே! இருதயக்கனியே!! கரீமே!!! நீ, என் புத்திரனா? உன்னை நான் இன்னாரென் றறியாதுபோனேனே" யென்று பலவாறு புலம்பி பலமுறை முத்தமிட்டழுதார். கரீமும் அவருடன் துணையாக அழுதார்.

பின்பு அமீர்பஷீரின் மனைவியர், கரீமின் உண்மைப்பிதாவாகிய அமீன்பேயின் சரித்திரத்தைச் சுருக்கமாக கரீமுக்குச் சொல்லிக்காட்டினார்கள். கரீம் மிகுந்த ஆச்சரியத்துடன் செவிசாய்த்துக் கேட்டுக்கொண்டிருந்தார். அமீரின் மனைவியார் பேச்சை நிறுத்தியவுடனே, கரீம் எழுந்து நின்று மிகுந்த வணக்கத்துடன் தன் உண்மைப் பிதாவின் கரங்களை முத்தமிட்டார். பிறகு அமீன்பே தன் மூத்தமகன் ஸலீமைப்பற்றி ஸல்மாநாயகி யிடத்தில் விசாரித்தார். கரீமுக்கு, ஸலீமுடைய காரியத்தை மறைத்திருக்க நாடி, மற்றொரு சமயத்தில் சொல்லுகிறே" னென்று சைகைகாட்டினார்கள்.

சற்றுநேரம் அவர்களனைவரும் அமைதியுடனிருந்து, இராப்போஜனமருந்திய பிறகு, ஸல்மாவும் அவர்களின் புருஷரும்,



கரீமும் படுக்கை யறைக்குப்போனார்கள். அங்கே ஸல்மாநாயகி தன் புருஷருக்குண்டான துன்பங்களையும், அவர் அங்குவந்து சேர்ந்ததின் விபரத்தையும் கேட்டார்கள். அமீன்பே ஆதிமுதல் சொல்ல ஆரம்பித்து கடைசியாக, தான் ஸல்மாவைக் காணாத நிமித்தம் மரணத்தை விரும்பி சூதானுக்குப் போனதையும், ஸலீமைத் தான் வெட்டியதையும், வெட்டியபிறகு அவனுடைய சொல்லைக்கேட்டு அவனை யின்னாரென் றறிந்துகொண்டதையும் அவனைக்கொண்டே ஸல்மாநாயகி ஜீவித்திருக்கிறார்களென்றறிந்துகொண்டு, தான் மரணமடைய நாடியநாட்டத்தை விட்டதையும், மறுபடியும் அவனைப்பார்க்க நெருங்க நாடியதையும், பகைஞர்கள் நெருங்கிவிட்டபடியால் கூடாமல் ஓடிப்போய், ஓர் அச்சமற்ற தலத்திற் சேர்ந்து, தான் கண்டதையும், கேட்டதையும் ஆலோசித்து, சந்தேகமும் நிட்சயமும் உண்டுபட்டு கடைசியில் அவன் ஸலீமுதானென்று திட்டமாகி, அவனைத் தன்கையால் வெட்டியதைப்பற்றி மிகுந்த கைசேதப்பட்டு அழுததையும், ஸல்மாநாயகிக்கு விவரித்துக் கூறினார்.

இதைக்கேட்ட ஸல்மாநாயகி, "அவன் என்னிடத்தில் விசுவாசமுள்ள அடிமையாகவும், எனக்குத் தோழனாகவு மிருந்தானே" யென்று கைசேதப்பட் டழுதார்கள்.

பின்பு அமீன்பே ஸல்மாவைப்பார்த்து, "நானென்ன செய்வேன். நான் வாளையுருவிப் பிடித்துக்கொண்டு நெருப்பில் விழ நாடிவருகிறபோது, "தங்களினுயிரை தாங்கள் பெருந்தீயிலாக்க வேண்டாம். என் எஜமானி ஸல்மா உயிர்த்திருக்கிறார்க" ளென்ற சப்தம் என்காதுக்கெட்டியது. ஆர் சப்தமிடுகிறதென்று பார்த்தேன். சூதானியரின் உடையணிந்து கையில்வாள்பிடித்த ஒருவன் எதிரில் வரக்கண்டு, அவன் என்னை வெட்ட வருகிறானென் றெண்ணி, அவனை நான் ஒரு வெட்டு வெட்டினேன். அந்த வெட்டினால் அவன் மரணமடைந்தே யிருப்பானென் றெண்ணியிருந்தேன். அவ்வெட்டு அவன்மேனிலேறிய பிறகு, "என் எஜமானே! என்னைக்கொன்று விட்டீர்களே. நான் தங்களின் அடிமை ஸலீமல்லவா" என்று சப்தமிட்டதைக்கேட்டு அவனைப்பார்த்தேன். அவன் இரத்தத்தில் தோய்ந்திருந்தான். அவன் ஸலீமென் றறிந்து தூக்கிக்கொண்டு வெளியே ஓடநாடினேன். முந்தி நான்

கூறிய காரணத்தினால் கூடாமற் போயிற்று. அதனால் எப்போதும் விசாரமடைந்தவளாகவே யிருக்கிறேன்.

"நீங்கள் ஜீவித்திருப்பதை அவனுடைய சொல்லைக்கொண்டு நான் திட்டமாக அறிந்துகொண்டேன். ஆனால், இன்னவிடத்திலிருக்கிறீர்களென்பதை அறிந்து கொள்ளவில்லை. அறியும் வழியும் எனக்குப் புலப்படவில்லை. அதைப்பற்றி அவனும் சொல்லவில்லை. நீங்கள் மிஸ்றிலும் (சிரியா)ஷாமிலும் சூதான் தேசங்களில் நான் சென்றுபார்த்த விடங்களிலும் இல்லையென்பது எனக்கு நிலைவரமாயிற்று. அதனால் இரம்பக் கலக்கமடைந்தவளாகி, ஸயீது அச்செய்தியை யெனக்குச் சொல்ல முந்தியே நான் சாகாதிருந்ததைப்பற்றி கைசேதமடைந்தேன்.

அப்படிக் இறந்திருப்பேனாகில் இவ்வளவு துன்பத்தை அநுபவித்திருக்க மாட்டேன். நீங்கள் ஜீவித்திருப்பதை அறிந்தபிறகு, நான் தற்கொலை செய்துகொள்ள நாடவேயில்லை. ஆனால், இவ்வுலக வாழ்வை வெறுத்தவர்களைப்போல வேடம் பூண்டு உங்களைத் தேடித்திரிந்தால் கடவுள் சந்திக்கச் செய்வாரென்னும் எண்ணம் எனக்குண்டானது. ஆகையினாலே, வேடம்பூண்டு சூதானிலிருந்து புறப்பட்டு, ஒன்பது வருடமாக (Abyssinia) ஹபஷா(Arabia)அறபு முதலான தேசங்களிலெல்லாம் சுற்றித்திரிந்து தேடினேன். என்னை, சன்னியாசியென்றே சகலரும் மதிப்பார்கள். வியசனத்தினாலும், கஷ்டத்தினாலும் என் தேகமெலிந்து நோய்வாய்ப் பட்டேன். அப்போதும் உங்களைக்காணமுந்தி மரணமடையாதிருக்கச்செய்ய, கடவுளைப் பிரார்த்தித்தவளாகவே யிருந்தேன்.

கடைசியில் உங்களை நான் கடத்திச்சென்ற பூமிக்குவந்து அத்தேசத்தின் மண்ணையாவது முகரலா மென்று நினைத்து, ஷாமுக்கு வந்து, அவ்வூர் கடற்கரைவழியாக நடந்துவரும்போது, இரண்டு நாளைக்குமுன் (Soor)சூர்என்னும் பட்டணத்திற்கு நெருக்கத்தில் என் அருமைப்புதல்வன் கரீபைச்சந்தித்து அவருக்கும் எனக்கும் சிலசம்பாஷணைகள் நடந்தபிறகு,கடைசியாகஇங்குவந்து சேர்ந்தோம். எனக்கு வலாமையும், விருத்தாப்பியமும் உண்டானதைப்பற்றி நீங்கள் புதுமைப் படவேண்டாம். உங்களுடைய தேட்டத்தால் நானடைந்த விசனமும் கஷ்டமும் என்னை இவ்



வாறாக்கி, காலம்வரமுன்னரே நரையையு முண்டாக்கி விட்டன" வென்றார்.

கரீபு இதைக்கேட்டு தான் விழித்திருப்பதாக நிச்சயிக்கக் கூடாதவரையில் தீர்மானமான பிரமிப் படைந்து அபூர்வமான இச்சந்திப்பைப் பற்றியும், பனீசுவைபின் பாலைவனத்தில், தன் உண்மைப் பிதாவின் மூலமாக மரணத்தினின்றுங் காக்கப்பட்டு; இருவரும் ஒருவரை யொருவர் இன்னாரென்றறியக் கூடாதிருந்ததைப் பற்றியும் ஆச்சரியமடைந்து, தன் தாயாரைத் திரும்பிப் பார்த்து, "இவ்வளவு காலமாக இவைகளை யெனக்கு மறைத்து வைக்குஞ் சக்தி யெப்படிக்குண்டாயிருந்த" தென்று கேட்டார்.

அதற்கு ஸல்மாநாயகி, "என் அருமை மகனே! முதலாவது மிஸ்றின் காஹிறா மலைக்கோட்டைக்குள் கொல்லப்பட்ட அரசவமிசத்தாருடன்உம்தந்தையரும் கொல்லப்பட்டிருப்பார்களென்று நாங்கள் தீர்மானித்த பிறகு, அதை உமக்கு வெளிப்படுத்துவதில் யாதொரு பிரயோசனமுமில்லை. இரண்டாவது, அமீர்பஷீர் முதலானவர்களுக்கும் என் வரலாற்றை வெளிப்படுத்தக் கூடாதென்று நாடியிருந்தேன். இவ்விரண்டு காரணத்தினாலுமே உமக்குச்சொல்லாதிருந்தேன்.

"அமீர்பஷீர் அவர்கள்,மிஸ்றிலிருந்து திரும்பிவருகிறவரையில் என் இரகசியத்தை அறியாதவர்களாகவே யிருந்தார்கள். வந்தபிறகு சொல்லாமலே அவர்கள் அறிந்து கொண்டார்கள். அவர்களுக்குமுன் ஆதியிலேயே நம்முடைய வுண்மை ஊழியனான ஸயீதும், இவ்வூர் பாதிரிமடத்தின் தலைமைப்பாதிரியாரும் என் இரகசியத்தை அறிந்திருந்தார்கள். உம்முடைய தந்தையர் மிஸ்றிலிருக்கிறார்களென்று நான் அறிந்தபிறகு, அதை நான் உமக்கறிவித்தால்,நீர் அவர்களைத் தேடப்போவீர். கண்டுகொண்டால் சந்தோஷப்படுவீர். காணாதிருக்கக் கற்பனை யுண்டா யிருந்தால் நிர்நிமித்தமாக வுமக்கு சஞ்சலத்தை யுண்டாக்கியவள் நானே யாவேன்என்பதைப் பயந்ததற்காகவும், உம்முடைய எண்ணப்படிக்கு நீர்அமீர்பஷீருடைய மக்களில் ஒருவரென்றே யெண்ணிக் கொண்டிருப்பதற்காகவுமே அதையும் உமக்குச் சொல்லாமல் மறைத்து, விசுவாசமுள்ள ஸயீதை மிஸ்றுக்கனுப்பி, உம் தந்தையரை அவன் கண்டதாக செய்தி கிடைத்தால் உமக்கு அறிவிக்கலாமென்றும்,இல்லாது போனால் எப்போதும் போலிருந்து விடலாமென்றும்எண்ணியிருந்

தேன். இப்போது, காணமற் போனவராகிய, நமது நாயகரைக் காணச்செய்த கடவுளுக்கு இரம்ப துதிசெலுத்துகிறேன். இதுதான் நம்வரலாற்றின் உண்மை. அதை உமக்கு விவரித்துவிட்டே"னென்றார்கள்.

அன்றிரவு மூன்று சாமம் வரையில் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். சிறுதூக்க முதல் அவர்களுக்குண்டாகவில்லை. அவர்களின் அறையில் கணப்புச்சட்டி வைக்கப்பட்டிருந்தது. இடிச்சப்தமும், பனிக்கட்டிகள் விழுகிற சப்தமும் காற்றினிரைச்சலும் கேட்டுக்கொண்டிருந்தன. அப்படிக்கிருக்கும்போது ஸல்மாநாயகி மற்றவர்களைப் பார்த்து, "இரவின் பெரும்பாகம் கழிந்துவிட்டது. இரவு முழுதுங் கடந்து விட்டாலும் நமக்குணர் விருக்கமாட்டாதென்பதில் சந்தேகமில்லை. ஆனால், நம்முடைய கண்கள் நித்திரையை நாடுவதினாலே படுக்கைக்குப் போவதை நலமாகக் காண்கிறேன்; பொழுது புலர்ந்த பிறகு நாமெல்லாங்கூடி, கடவுளினுதவியால் மற்றவிஷயங்களைப் பேசி முடிப்போ"மென்றார்கள்.

மற்றவர்களும் "நல்ல"தென்று சம்மதித்துப்படுக்கைகளுக்குப் போய்விட்டார்கள். அமீன்பே மட்டில் தன் சிரேஷ்ட புத்திரர் ஸலீமின் சங்கதியை அறியாதவராக கலக்கங்கொண்டு தூங்காதிருந்தார். பொழுது விடிந்தவுடனே, தன் பெண்சாதியின் அறைக்குள் வந்து, ஸலீமின் சங்கதியை விசாரித்தார். ஸல்மாநாயகி விபரித்துக் கூறினார்கள். அவர் இரம்ப வியாகுலமடைந்து அழுதார். ஸல்மாநாயகி, "ஸலீமின் சங்கதியை கரீபுக்குச் சொல்லாமல் மறைத்து வைத்திருக்கிறேன். அவனறிந்தால் அவசியமின்றி அவனுக்கு சஞ்சலத்தை யுண்டாக்கியதாகுமல்லவா"? என்றார்கள்.

அமீன்பே, "நல்லவேலை செய்தீர்கள்! வரிஷையும் விவேக சாதுர்யமுமுடையவுங்களை, கடவுள் ஆசீர்வதிப்பாராக" வென்று கூறினார். பின்பு கரீபு விழித்தெழுந்து, பெற்றோரிடத்திற்கு வந்தார். அன்று பகல்முழுதும் சந்தோஷமாகப்பேசி, காலங் கழித்தார்கள். அச்சந்தோஷசபையில் தலைமைப்பாதிரியாரும் கூட்டாவதற்காக, ஸல்மாநாயகி பாதிரியாரை வரவழைத்தார்கள். அவர் வந்து, அமீன்பேயைப்பார்த்து அதிக சந்தோஷமடைந்து மீண்டார். அமீர்பஷீர், அமீன்பேயைக் கண்டால் மிகுந்த மகிழ்ச்சியடைவார்களென்பதை சகலரும் அறிந்திருந்தபடியினாலே, அவரின் வருகையை வழிபார்த்திருந்தார்கள்.



சிலநாளைக்குப் பிறகு; அமீர்பஷீர் பைத்துத்தீனுக்கு வந்து, அமீன்பே, அவர் பெண்சாதி பிள்ளைகளுடனிருக்கிறதைக் கண்டு, நினையாப்புறத்தில் சந்திப்புண்டானதைப்பற்றி ஆச்சரியமுற்று ஆனந்தமடைந்தார். ஆனால், அரசாக்ஷி விஷயத்தில் கவலையுடையவராயிருந்தார். அதாவது-அமீர்பஷீர், இபுறாஹீம்பாஷாவுக்கு உதவிசெய்தநிமித்தம்பற்றி, மாக்ஷிமைபொருந்திய உதுமானிய கவர்ண்மெண்டார் அவர்பேரில் வெறுப்புற்றிருப்பதுடன், (Aleppo) ஹலபின் தேசாதிபதி, அமீர்பஷீரல்லாத வேறொருவரை லிபனோன் மலைநாட்டிற்கு அமீராகத்தெரிந்தெடுக்கும்படிக்கு லிபனோனிகளுக்கு வற்புறுத்தி யெழுதி யிருந்தார்.

அதனால் லிபனோன் வாசிகளாகிய (Druses) டரூஸியர் துருக்கியர்களுக்காகவும், (Maronites) மாறூனைஸ் கிறிஸ்தவர்கள் அமீர்பஷீருக்காகவும், தீருல்கமர், ஜஹ்லா, அல்மதன் என்னும் ஊர்களில் பலமுறை யுத்தஞ்செய்து இருபக்கத்தாரிலும் தோல்வியும்வெற்றியும் உண்டாயிக்கொண்டிருந்தன.

பின்பு டரூஸிகள், இபுறாஹீம்பாஷா, ஹிம்ஸ் பட்டணத்திலிருக்கும் துருக்கிய போர்வீரர்களுடன் யுத்தம் புரியப் போயிருக்கும் சமயம் பார்த்து, அமீர்பஷீருக்கு மாற்றமாக அமானுவில் வந்து கூடினார்கள். இக்காவாசிகள் பலமாக அரண்காத்திருந்தபடியால், ஐந்து மாதங்களுக் கதிகமாகியும் அக்கோட்டைபிடிபடாதிருந்தது.

கி. பி. 1832-ம் ௵ மேமீ 27௳ இபுறாஹீம்பாஷா தன் போர்வீரர்களை "ஒரே தடவையில் இக்காவைத்தாக்குங்க"ளென்று ஆக்ஞாபித்தார். அதுபோல் வெகு ஊக்கத்துடன், மிஸ்று போர்வீரர்கள் இக்காவைத்தாக்கி மாரிபோல குண்டுகளைப்பிரயோகித்து அத்திகதியிலேயேஅக்கோட்டையை தங்கள் வசத்திலாக்கி, அத்தேசாதிபதி அப்துல்லாபாஷாவுக்குக் கார்மான வாக்களித்தார்கள். அப்பாஷா, இபுறாஹீம்பாஷா விடத்திற்குவந்தார். அவ்விருபாஷாக்களும் ஒருவரையொருவர்கட்டியணைத்துக்கொண்டார்கள். இபுறாஹீம்பாஷா, அப்துல்லாபாஷாவை சமாதானப்படுத்தி, அவருக்கும்அவரின் குடும்பஸ்தர்களுக்கும் அடைக்கல வாக்குக்கொடுத்து, அவரை சிங்கார மாளிகைக்குக் கூட்டிச்சென்று அங்கிருந்து ஓர் கப்பலிலேற்றி, இஸ்கந்தரிய்யாவி லிருக்கும், தன் தந்தையர் முஹம்மதலீ பாஷா விடத்துக் கனுப்பிவிட்டு, இக்கா பிடிபட்ட சந்தோஷ

சாரத்தை வைத்தத்தினி லிருக்கிற அமீர்பஷீருக்குத்தெரியப்படுத்தினார்.

அமீர்பஷீர், இபுருஹீம்பாஷாவுக்கு சோபனங்கூறுவதற்காக இக்காவுக்குப்போக நாடினார். கரீபும் கூடவருவதாகக் கேட்டுக்கொண்டார். அமீர்பஷீர் "என் அருமை மகனே! நீர் அங்குவரத் தேவையில்லை. உம் உண்மைப் பிதாவுடன் இங்கு தரிபட்டிருப்பதே நலம். அல்லது சுகாதாரத்திற்காக வெளியிற் போய் வரலாம். அதைவிட இங்கிருப்பதே உசிதம். ஏனென்றாலோ, அரசாங்க விஷயக்குழப்படிகளினாலே நமக்கு விரோதிகள் அதிகரித்துவிட்டார்கள். டரூஸ் கூட்டத்தாரின் தீங்கு நமக்குண்டாவதைப் பயப்படுகிறேன். ஆகலால், வெளியிற் போய்வரப் பிரிய மிருந்தால், நான் திரும்பி வருகிறவரையில் அதிக தூரம்போகாமல் சமீபமான தலங்களுக்குப் போய்விட்டு வரலா"மென்று சொல்லிவிட்டு இக்காவுக்குப் போய் சிலநாளின் பிறகு மீண்டுவந்தார்.

பின்பு இபுருஹீம்பாஷா (Damascus)திமஷ்குபட்டணத்திற்கு யுத்தத்திற்காகப் போயிருக்கிற செய்தியை அமீர்பஷீர் அறிந்து தன்மகன் கலீல், அமீன் இருவரையும் கூட்டிக்கொண்டு அங்கு செல்லத் தயாரானார். கரீபும் அவர் கூடப்போக நாடினார். "தேவையில்லை"யென்று கரீபை அமீர்பஷீர்தடுத்து, "நீர் இங்கிருப்பதே நலம். நம் குடும்பத்தாரைக்காக்க ஒருவர் முக்கிய தேவையல்லவா"? என்றார். அமீர்பஷீரின் சொல்லை கரீபு "சரி" யென்று ஒப்புக்கொண்டு, அவருடன் கொஞ்சத்தூரமாவது சென்று பயணமனுப்பிவிட்டு வரவேண்டுமென்று நினைத்து, தன் குதிரையிலேறி இரண்டுமணிநேரப் பயண தூரம் வரையில் கூடப்போனார்.

பின்பு அமீர்பஷீர் கரீபைப் பார்த்து, "என் அருமை மகனே! போதும், நீர் நும்பெற்றோரிடத்திற்குத்திரும்பு"மென்றார். உடனே கரீபு அமீர்பஷீரின் கையைத்தொட்டு முத்தமிட்டு, அவருக்கும் அவருடைய மக்கள் கலீலுக்கும் அமீனுக்கும்வந்தனங்கூறி ஊருக்குத் திரும்பினார். கரீபுக்கு அமீர்பஷீருடன் யுத்தத்துக்குப்போகவேண்டு மென்பதே நாட்டமாகவிருந்தது. ஆனால், அவருடைய சொல்லுக்கு விரோதமில்லாமல் வைத்ததினைக்காத்திருக்கவேண்டி வந்ததால் திரும்பிவர நேர்ந்தது.

அப்போது அவர், வெள்ளிப்பட்டை யடிக்கப்பட்ட சேணம் வைத்து, பட்டியத்தில் சேர்த்த நீல நிறமுடைய அறபு ஜாதிக்குதி



ரையிலேறி யிருந்தார். அவர் வழமையாக அணியும் தலைப்போர்வைமுதலிய உடைகளும் உடுத்திருந்தார். அக்குதிரை மலைக்கற்களுள்ள அவ்வெளியில் நாட்டிய மாடிக்கொண்டே வந்தது.

கரீபுக்கு எப்போதும் தன்னைமதிப்பு உண்டாகிறதேயில்லை. அவர் உண்மைப் பிதாவை சந்தித்தபிறகு பெற்றோருக்கு ஊழியஞ் செய்வதிலும், அவர்களுக்கு க்ஷேமமுண்டாக்குவதிலுமே கருத்துடையவராயிருந்தபடியால், அதைப்பற்றி யோசித்துக்கொண்டே வந்தார்.

---

## 36-வது அத்தியாயம்.

## பாரதூரமான அபாயம்.

கரீப் திரும்பி வருகிறபோது அழகான ஓர் மாளிகை வழியால் வந்தார். அம்மாளிகையை அவர் பலமுறைபார்த்திருக்கிறார். ஆனால் உள்ளே சென்றதில்லை. அது ஊருக்கு வெளியில் தனித்தவிடத்தில் வெகு அரணிப்பாகக் கட்டப்பட்டிருந்தது. அதைச் சூழ பலவிதகனிவருக்கத் தருக்களும், புட்பச் செடிகளும் வைக்கப்பட்டிருந்தன. அவைகளின் அழகையும் ஒழுங்கையும் நோட்டமிட்டுக்கொண்டே போனார்.

அப்போது திடீரென்று அம்மாளிகைப் பக்கத்திலிருந்து, "அமீர்கரீபே! ஜாக்கிரதையாகுங்கள். தங்களைக் காத்துக்கொள்ளுங்க"ளென்று ஒரு சப்தம் கேட்டதும் சப்தம் வந்ததிசையைப்பார்த்தார். ஒருவருமில்லை.

ஆனால், தனக்குப் பின்னால் ஒரு குதிரை மிகுந்த வேகமாக ஓடிவருகிற சப்தம் காதில் விழுந்தது. திரும்பிப்பார்த்தார். கையில் ஈட்டி பிடித்து முகமூடியிட்ட ஒருவன் ஒருகுதிரையிலேறி, தன்னைக் குற்றுவதற்காகக் கிட்டநெருங்கி விட்டதை கரீபு கண்டு இமை கொட்டித் திறப்பதற்குள்ளாக, தன்வாளை உறைவிட்டு நீக்கிக் கையிற் பிடித்துக்கொண்டு அவன் பிடித்திருந்த ஈட்டியை ஒரே வீச்சில் இரண்டு துண்டாக்கி யெறிந்தார். மறுபடியும்கரீபு அவன் பேரில் அடர்ந்தேறினார். அவன், தன் குதிரையைக் கொஞ்சம் பின் வாங்கச் செய்து நின்றான். அவனை யின்னானென்று கரீபு அறியவில்லை.

அப்போது "அடே, மோசக்காரனே! நீயார்?" என்று
கரீபு உரத்த சப்தமிட்டு கேட்டார். அவன் மறுமொழி கொடா
மல் சட்டைச்சாக்கிலிருந்து ஒரு கைத்துப்பாக்கியை யெடுத்து
கரீபுபேரில் நீட்டினான். உடனே கரீபு எகிறிப்பாய்ந்து அத்
துப்பாக்கியைப் பிடித்துத் திருப்பினார். அதன் குண்டு வேறு
திசையில் போய்விட்டது. அதற்குள் முகமூடியிட்ட சில்குதிரை
வீரர்கள் கரீபைச் சூழ்ந்து கொண்டார்கள்.

கரீபு, சற்றேனுமஞ்சாமல் சிம்மராஜனைப்போன்று சப்தமிட்டு
"வடா, கீழ்மக்களே! நீங்கள் அதிகம் பேரிருக்கிறீர்களென்றாகால்
அஞ்சுவே னென் றெண்ணுகிறீர்களோ"? என்றுகூறி முன்னேறி
அவர்களில் ஒருவனை வெட்டினார். அவன் கீழே விழுந்து மடிந்
தான். மற்றொருவனையும்வெட்டினார். அவனுமிறந்தான். விரோ
திகள் அதிகப்பட்டு விட்டார்கள். கரீபுக்கு கை அயர்ந்திருக்கிற
சமயத்தில் அவருடைய இடதுதோளில் ஒருவெட்டு விழுந்தது!
அதையும் அவர் பாராட்டாமல் அல்ரமணிநேரம் வரையில் சண்டை
கொடுத்து நின்றார்.

கடைசியாக அவருக்குக் களைப்புண்டானபடியாலும், விரோதி
கள் சூழ்ந்துகொண்டதாலும், தனக்கு நேருகாக்கூடிய அபா
யத்தைப்பற்றி யோசித்துக் கலங்கிக்கொண்டிருக்குஞ் சமயத்தில்
அம்மாளிகைப் பக்கத்திலிருந்து "கரீபே! உனக்குத்துணை விருங்
கள். அத்துராத்மாக்களை ஒருபொருட்டாக நினைக்காதீர்கள்"
என்று சப்தம்வந்ததுடன்; அம்மாளிகையின்சிங்காரவனத்திலிருந்து
ஒரு குதிரைவீரர் முகமூடியிட்டவராய் உருவிய வாளுடன் வெகு
விரைவாக வந்து அக்கூட்டத்தார்பேரிற் பாய்ந்தார். அதனால் கரீ
புக்கு அதிக ஊக்கமுண்டாகி அடர்ந்தேறி யிருவரும் வெட்டினார்
கள். மூன்றுபேர்களை யிழந்துவிட்டு, அக்கூட்டத்தார், காயப்பட்ட
வர்களுடன் ஓடிவிட்டார்கள். பின்பு, முகமூடியிட்ட ஓர் அந்நியவீரர்
திடீரென்று தனக்குதவிசெய்ய வந்ததைப்பற்றி கரீபு ஆச்சரிய
மடைந்து அவரையின்னாரென்றறிய நாடி, அவரிடம் நெருங்க வந்
தார். அதற்குள் அவ்வீரர், தன் குதிரையை அம்மாளிகைப் பக்
கத்தில் திருப்பி, "நான் போகிறேன்" னென்று சாடை காட்டிவிட்டு
குதிரையை நடத்தினார். கரீபு, "என் சகோதரரே! கடவுள்பேரி
லாணையாக உம்முடன் நான் வார்த்தையாட நாடுகிறேன்; சற்று
தாமசிப்பீராக" வென்று உரக்கக் கூவினார்.



அவர் மறுமொழி கொடுக்கவில்லை. அதனால் கரீபு புதுமை
யடைந்து, அவராரென்றறிய அதிக ஆவல்கொண்டு அவரைப்
பின்றொடர்ந்தார். அவர், கரீபு வருவதைக்கண்டு தன் குதிரையை
விசையாகத் தட்டி நிமிஷநேரத்திற்குள் அம்மாளிகையின் சிங்
காரவனத்திலாகி மறைந்து விட்டார். கரீபு சிங்காரவனத்தின்
வாசலில் வந்தார். காவற்காரர்கள் அவரைத் தடுத்து, "எங்கே
போகிறீர்க"ளென்றுகேட்டார்கள். கரீபு "இந்த மாளிகைக்குடைய
வரைச் சந்திக்கவந்தே" னென்றார். அவர்களில் ஒருவன், "இப்
போது அவர்கள் இங்கில்லை" யென்றான். கரீபு, "அதனால் குற்ற
மில்லை; திட்டமாக எனக்கு முன்னாலே இங்குவந்த ஒரு குதிரை
வீரரைத் தெரிசிக்க நாடுகிறே" னென்றார்.

அதற்கவன், "இப்போது குதிரைவீரர் ஒருவரும் இங்கு வர
வில்லை. நீங்கள் வழிதப்பி வந்தவர்களென்று நினைக்கிறே" னென்
றான். அதற்கு கரீபு, "ஒருவீரர் தன் குதிரையுடன் இவ்வனத்துக்
குட்புகுத வுண்மையாக என்னிருகண்ணாலும் கண்டேன். ஆத
லால், என்னுடைய சொல்லை நீ அபத்தமாக்கவேண்டா" மென்றார்.
அப்போதும் கரீபுடைய சொல்லை அவன் நம்பினானில்லை.

கரீபு, அவ்வீரனை இன்னாரென்றறியக் கவனம் பூண்டவராயி
ருந்தபடியால், தன் முன்கையிற் பட்ட வெட்டுக் காயத்திற்கூட அவ
ருக்கு ஞாபகமில்லாதிருந்தது. அதற்குப் பிறகு அவருக்குஞாபகம்
வந்தபடியால், அக்காயத்தைக் கழுவி சுத்தமாக்கிப் பரிகாரஞ் செய்
யப்பிந்தினால் வேதனை யுண்டாகக் கூடுமென்பதைப் பயந்து, அக்
காவற்காரனை நோக்கி, "உன்னுடன் சம்பாஷிக்கிறவர் அமீர்பஷீரின்
புத்திரரென்றறிவையா"? என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் அவன் திடுக்குற்று, கரீபின் கிட்டநெரு
ங்கி மரியாதையுடன், "என் நாயகமே! தாங்கள் மன்னிக்கவேண்
டும். சத்தியமாக நான் அறியமாட்டே" னென்று சொல்லி, குதி
ரையின் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு, "நாயகமே! இறங்
குங்க" ளென்று கேட்டுக்கொண்டான். கரீபு கீழே யிறங்கினார்.
அவன் கரீபை யுள்ளே கூட்டிச்சென்று சிங்காரவனத்தைக் கடந்து
மாளிகைக்குள் வந்து மேன்மாடியிலேறி விலையேறப்பெற்ற விரிப்
புகள் விரித்து சிங்காரிக்கப்பட்ட தெரிசனை மண்டபத்தில் உட்கா
ரச் செய்தான்.

கரீபு, "இதெல்லாம் எனக்குத் தேவையில்லை. என் காயத்தைக் கழுகக் கொஞ்சம் தண்ணீரும் ஒரு துணியும் தரவேண்டு"மென்றார். கரீபை அவன் அங்கு வைத்துவிட்டு அவர்கேட்ட வஸ்துக்களைக் கொண்டுவர உள்ளே போய்விட்டான். கரீபு அவ்விடத்தில் தனித்துட்கார்ந்து காயத்தின் இரத்தத்தைக் கழுகுவதற்காகத் தன் கையைத் திறந்து வைத்து, அக்குதிரைவீரரைப்பற்றி ஆலோசித்தவரா யிருந்தார்.

அப்படியிருக்கும்போது, அம்மண்டபத்திற் கெதிர்த்த அறையிலிருந்து கார்மேகம்போன்ற கூந்தலையும், இளம்பிறை போன்ற நெற்றியையும், கரும்பவளத்துளிருக்குச் சமதியான புருவங்களையும், சேற்கெண்டையின் கண்களைப்போன்ற செவ்வரிபடர்ந்த கண்களையும், குமிழம்மலர் நிகர்ந்த மூக்கையும், வள்ளையை வாட்டிய செவிகளையும், கண்ணாடி யொத்த கன்னங்களையும், கமுகின் திரட்சிபோன்ற கண்டத்தையும், மூங்கிலின் வடிவமைந்த தோளையும், பவளப் பிளவுக்குச் சமதியான அதரத்தையும், பூரணமதி நிகர்த்த முகத்தையும், முத்துப்பந்தியை மிகைத்த தந்தங்களையும், விளக்கிலையான சிறுமயிர் படர்ந்த முன் கைகளையும், கெளிறு போன்ற விரற்களையுடைய காந்தள் மலருக்கு மேலான கைகளையும் கிளிமூக்குபோன்ற நகங்களையும், நூற்பிளவுபோன்ற இடையினையும், சின்னவராற்போன்ற கணைக்கால்களையும், தாராசுபோன்ற பரடுகளையும், பந்தொத்த குதிகளையும், கமட முதுகுபோன்ற புறவடிகளையும், மிருதுவான செந்தபாதங்களையும், கிளிமொழியினையும், அன்னத்தின் நடையினையும், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு,என்னும் மகளேக்குணம் நான்கினையும் சகல இலக்ஷணங்களையும், மங்கைப் பருவத்தினையும் உடைய ஒரு பால்யஸ்திரீ, வார்த்துசிக்கழுத்து மயிர்ச்சாந்துபூசி, பின்னலிட்ட கூந்தலைப் பின்னுவிட்டு, கைவிரற்களில் வச்சிர மோதிரங்களும், கைகளில் வஜ்ரகடகங்களும்,காற்களில் பொற் காப்புக்களும், காதில் நித்திலவாளியும் அணிந்து,தூய வெள்ளையுடுத்து, அன்ன நடையைப் பின்னும் நடையுடன் வெகு ஒய்யாரமாக நடந்து, கரீபுக்கெதிரே வந்தாள்.

கரீபு அக்கன்னிகையின் அழகைக்கண்டு திகைத்து, தெய்வரம்பையென்பவள் இவள் தானுக்குமென் றுநினைத்து அவளையேநெடுத்துப் பார்க்க வெட்கித்து தலைகுனிந்தார். அம்மங்கை, கரீபைப்



பார்த்து, "என் நாயகமே! தங்களை ஒருக்காலும் முகமுகமாய்ச் சந்தித் தறியாத நான், தங்களுடைய உத்தரவில்லாமல், நம்முடைய வழக்கத்துக்கு விரோதமாக, சமுகத்துற்ற குற்றத்தை மன்னிக்க வேண்டுகிறேன். என்னுடைய பணிவிடையாளன் தங்கள் கையில் காயம் பட்டிருப்பதாக எனக்கறிவித்து,அதற்குப்பக்குவஞ்செய்யத் தேவையாகும் வஸ்துக்களைக் கொண்டுவரப் போயிருக்கிறான். இப்போது நான் இந்த வீட்டில் தனித்தவளாயிருந்தபோதிலும், அவ் விஷயத்தில் தங்களுக்குதவி செய்ய வருவதை நான் தவறாகக்காணவில்லை"யென்றாள்.

இதைக்கேட்ட கரீபு அப்பெண்பேரில் தன் பார்வையைச் செலுத்தி, அவளின் நிரப்பமான அழகைப்பார்த்து பிரமிப்பும், நாகரீகமான வார்த்தைகளில் வியப்புமடைந்து தலைகுனிந்துவிட்டார். அப்போது அவருடைய சரீரத்தில் ஒருவித கதப்புண்டாயிற்று. அதை அவர் அப்போதுதான் முதற்றடவையாகக் கண்டார்.

பின்பு கரீபு, அப்பெண்ணின் இனிமையான பேச்சிற்காக அவளுக்குத் துதிகூறி, "அன்பிற்குரிய நாயகியே! எனக்காகத் தாங்கள் இவ்வளவு கஷ்டத்தைச் சுமந்துகொண்டதைப்பற்றி நான் கைசேதப்படுகிறேன். கடவுளின் கற்பனையானது என்னை இவ்விடங்கொண்டுவந்து சேர்த்து, தங்களைத் தெரிசிக்கச் செய்துவிட்டது. அதினால் நான் பெற்ற பாக்கியத்திற்காக, கடவுளை இரம்பத் துதிக்கிறேன்" என்று சொன்னார். அப்போதும் அவருடைய இருதயத்தில் ஒருவிதவுணர்வும், உறுப்புகளில் விலவிலப்புமுண்டாயின.

பின்பு பணிவிடையாளன் தண்ணீரும் துணியுங் கொண்டு வந்தான். அப்பெண், தன் மெல்லினமான கையினால் கரீபின் காயத்தில் தண்ணீரைவிட்டு மிருதுவாக இரத்தத்தைக் கழுவித் துடைத்து துணிசுற்றிக் கட்டினாள். அப்போது கரீபு ஆலோசனைக்கடலில் மூழ்கி யிருந்தார். அப்பெண் பேரில் அவருக்கு அதிக பிரியமுமுண்டானது. அப்பெண் அவருடைய கையைத் தொட்டபோது, அவ்விருவரின் உடற்களும் ஒன்றோடொன்று சம்பந்தப் பட்டதால் மனமென்னும் இரும்பை ஆசையென்னும் காந்தம் இழுத்து ஒன்றோடொன்று முட்டச் செய்துவிட்டபடி

யால், மின் சாரதத்துவத்தால் பிருவேற்றப் பட்டவர்கள் போலிருந்தார்கள். அப்பெண் அவருடைய காயத்தைக் கழுவியபோது அவளுடைய முகத்தை அவர் பார்க்கவுமில்லை. அவளுடன் பேசவுமில்லை.

---

### 37-வது அத்தியாயம்.

## பட்சத்திற் காதாரம் பார்வை.

அப்பெண், கரீபின்காயத்திற்குப்பக்குவஞ்செய்தபிறகு அவர்க்கெதிரி லுட்கார்ந்து, அவர் அவ்விடத்திற்கு வந்ததற்காக அவளுடைய இனிமையும் மெல்லினமும் பொருந்திய நாகரீகமான மொழியால் சோபனங் கூறினள். கரீபு தன்னுணர்வில்லாதவராயிருந்தபோதிலும், தன் விவேகத்தால் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, தனக்குண்டாயிருக்கும் இச்சையின் படபடப்பையும், தத்தளிப்பையும் ஒருவாறு அடக்கினர். பேசுகிறபோதல்லாது மற்ற நேரங்களில் அப்பெண்ணை யேறிட்டுப்பாராதவராயிருந்தார். அவளைத் தடுத்திருந்ததுபோல் அவரையும் வெட்கம் தடுத்து நின்றது. சற்று நேரத்தின் பிறகு சம்பாஷிக்க ஆரம்பித்தார்கள்.

கரீபு:——சகல லக்ஷணங்களையுமுடைய நாயகியே! இம்மாளிகைக்குடையவரை இன்னாரென்றறிவிக்க நாடுவீர்களா?

மங்கை:——என் நாயகமே! அவர்கள் இப்போது இங்கில்லை. இன்றுகாலையிற்றான், மாக்ஷிமைதங்கிய தங்கள் தகப்பனாரவர்கள் கூட திமஷ்கு பட்டணத்திற்கு யாத்திரை யானார்கள்.

கரீபு:——மெய்தான். அவர்களின் திருநாமத்தை அறிவிக்க நாடுவீர்களா?

மங்கை:——அவர்களின் திருநாமம் அமீர் அப்பாஸ்.

கரீபு:——அவர்கள் பனீஷிஹாபு குலத்தி லுள்ளவர்களல்லவா?

மங்கை:——ஆம், என் நாயகமே!

கரீபு:——இப்போது அவர்களுடைய பிள்ளைகளில் வேறே யாராவது இங்கிருக்கிறார்களா?



மங்கை:——இவ்வேழைச் சிறுமியைத்தவிர வேறே ஒருவருமில்லை. என்னையல்லாமல் அவர்களுக்கு வேறே பிள்ளையுமில்லை.

கரீபு:——என் நாயகியே! தங்களின் மேன்மையைப்பற்றி நான் வியப்படைகிறேன். தங்களிடத்தில் இன்னொரு கேள்வி கேட்க நாடுகிறேன். அதினால் அதிகக் கேள்விகேட்டவனுவதைப் பயப்படுகிறேன். மன்னிக்கவேண்டும்.

மங்கை:——என் நாயகமே! நாடியதைக் கேளுங்கள்.

கரீபு:——நான் அதிக அபாயத்தில் மாட்டிக்கொண்டபோது இங்கிருந்து முகமூடியிட்ட ஒருவர்வந்து எனக்குதவிபுரிந்தார். அவருடன் பேச்சுக்கொடுத்தேன். அவர் மறுமொழி கொடுக்காமல் வந்துவிட்டார். நானும் கூடவந்தேன். அவர் இத்தோட்டத்திலாகி குதிரைவிட்டிறங்கி கால்நடையாக இம்மாளிகையுள் நுழையக்கண்டேன். அவர்யார்?

என்றதைக்கேட்ட அப்பெண், வெட்கத்தினால் கன்னங்கள் சிவக்கச் சிரங்குனிந்து மறுமொழிதாராமல் தன்புடைவையின் அருகை விரற்களால் நெருடிக்கொண்டிருந்தாள். கரீபு இதைப் பார்த்து சந்தேகமுற்று, இவ்வீட்டில் தன்னைத்தவிர வேறே ஒருவருமில்லையென்று அவள் சொன்ன பிறகும் நாம் இக்கேள்வி கேட்டது மடமையென்று கைசேதப்பட்டு, அவளைப்பார்த்து "என் நாயகியே! தங்களிடத்தில் கேட்கக்கூடாத கேள்வியைக் கேட்டுவிட்ட குற்றத்தை மன்னிக்கவேண்டு" மென்றார்.

அப்பெண் தலையை நிமிர்த்து, "நாயகமே! தாங்கள் கேட்க வேண்டியதையே கேட்டீர்கள். தங்களைப்போன்ற சத்குணவாலிபர் அவ்வாறு கேட்கத் தகுதியுடையவர்தா" னென்றாள். கரீபு, தன்னை அவள்புகழ்ந்து பேசியதால் வெட்கித்துத் தலைகுனிந்திருந்தார். அப்பெண் அவரைப்பார்த்து "தங்களுக்குதவிபுரிந்த வீரரைப்பற்றி நமக்குள் இரண்டாம்முறை சந்திக்கக் கற்பனையிருந்தால் அப்போது சொல்லுகிறே" னென்றாள். இதைக்கேட்ட கரீபுக்கு அப்பெண்பேரில் அதிகபட்சமுண்டாகி "நாயகியே! இதுபோன்ற இரணகளத்தி லல்லாமல் சந்திப்புண்டாகாதென்றுனக்குப் புலப்படுகிறபடியால், அதையேவிரும்புகிறே" னென்றார்.

அப்டேன் யாதொன்றும் பேசாதிருந்தான். கொஞ்சநேரம் இருவரும் தலைகுனிந்திருந்தார்கள். அப்படிக்கிருக்கும் போது கரீபுக்கு தன்பெற்றாரின் ஞாபகம் திடீரென்றுவந்தது. பொழுதடையுஞ் சமயமாகவு மிருந்தது. இதற்கு மேலும் அவ்விடத்தில் தாமசித்திருந்தால் அவர்களுக்குக் கவலையுண்டாகு மென்பதைப் பயந்தும், இவ்விளம்பருவப் பெண்ணுடன் தான் தனித்திருப்பதில் சந்தேகமேற்பட்டு மானக்குறை உண்டாகப் போது மென்பதை அஞ்சியும், உடனே யெழுந்து நின்று, தான்போவதற்காக அவளிடத்தில் உத்தரவு தேடினார்.

அவளு மெழுந்துநின்று கைலாகு கொடுத்து விடையளித்து, "கடவுளி னுதவியால் போய்வாருங்க" ளென்று கூறி "அந்த மூதேவிகளான துஷ்டர்கள் வருவதைத்தாங்கள் அஞ்சவில்லையா?" என்று கேட்டாள். அதற்கவர், "கடவுளின் கிருபையால் எனக்கு யாதோர் தீங்குஞ்சம்பவிக்கா" தென்று சொல்லி, அருமையான வஸ்தை யிழந்துவிட்டுப் போகிறவனைப்போலாகி வெளிப்பட்டார். பணிவிடையாளர்கள் வெளியில் குதிரையைத் தயாராக வைத்திருந்தார்கள்.

கரீபு குதிரையிலேறி பைத்துத்தீனை நோக்கி நடத்தி, கொஞ்சதூரஞ் சென்று அம்மாளிகையைத் திரும்பிப்பார்த்தார்; அம்மாளிகை மேன்மாடிஜன்னலால், அப்பெண் அவரைப்பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அப்போது அவருக்கு ஒருவித வுணர்வும், அவள்பேரில் பரிபூரண காதலுமுண்டாகி, அவளுடனேயே தன்வாழ்நாளைக் கழிக்கவேண்டு மென்று தீர்மானித்தபிறகு, இக்கா யாத்திரையின் போது தன் தாயார் ஒருபெண்ணைக் குறிப்பிட்டுக் கூறியதில் ஞாபகத்தைச் செலுத்தி, அப்பெண் பேரில் தனக்குப் பிரியமில்லாதுபோக நேர்ந்தால் பெற்றோருக்கு வழிப்பட்ட பிள்ளையா யிருக்கவேண்டுமென்ற தன் எண்ணத்திற்கு மாற்றமாகு மென்பதைப் பயந்தும், "அப்பெண் யாவளென்பதை நாம் அறியமாட்டோமே" என்பதை யோசித்துக்கொண்டும் அதே கவலையாக பைத்துத் தீனுக்கு வந்து சேர்ந்தார். அவரின் வருகையை வழிபார்த்திருந்த பெற்றோர், அவரைக்கண்டவுடனே அவருடன் கட்டி யணைத்து முத்தமிட்டு அந்தப்புரத்திற்குக் கூட்டிச் சென்றார்கள். அப்போது அவருடைய முகத்தில் பேதகக்குறியைக் கண்டார்கள்.



## 38-வது அத்தியாயம்.

## தேடிவதட்டங்களும் கூடுவதரிது.

ஸல்மாநாயகி, கரீபுடைய முகம் பேதலித்திருப்பதைப் பற்றிக் கேட்டார்கள். கரீபு, வழியில் தனக்குச் சம்பவித்த அபாயத்தையும், முகமூடியிட்ட குதிரைவீரர் ஒருமாளிகைக்கு ளிருந்துவந்து உதவி புரிந்ததையும், அவரிருக்குமிடத்தைத் தானறியக்கூடாமற் போனதையும் விபரித்துக்கூறினார். அவர்கள், தன் புத்திரர் அபாயமின்றி வந்ததற்காகக் கடவுளைத் துதித்தார்கள்.

பின்பு கரீபு, தாயாரைப்பார்த்து, "என் மாதாவே! இன்னும் சொல்லவேண்டிய திருக்கிறது. இன்றிரவைக்கு விண்ணப்பஞ் செய்கிறே" னென்றார். அதைக்கேட்டு ஸல்மாநாயகி திகில்கொண்டு பொழுதடைவதை வழிபார்த்திருந்தார்கள். இராப்போஜனத்தின் பிறகு கரீபு அம்மாளிகைக்குச்சென்றதையும், அங்கு நடந்தவைகளையுஞ்சொல்லி முடித்துத் தாயாரைப் பார்த்து கூறுகிறார்.

கரீபு;——என் அருமை மாதாவே! நான்கண்டமங்கையோ, சகல லக்ஷணங்களுமுடையவளா யிருக்கிறாள். அவள்பேரில் என் மனம் படிந்துவிட்டது. நான் விரோதிகளை விட்டும் காக்கப்பட்டதற்கு அவளே காரணியென்று கருதுகிறேன். ஆனால், தாங்கள் குறிப்பிட்டிருக்கிற பெண்ணை நான் அறியவேண்டுமே.

ஸல்மா:——என் அருமை மகனே! உமக்குப் பிரியமில்லாத விஷயத்தில் உம்மை நான் கட்டாயப்படுத்தமாட்டேன். இல்லறத்தின் பிரதானமானது விவாகமாகையால், அதில் பிரவேசிக்க முன்னரே இரம்ப நோட்டமிடவேண்டும். நீர் கண்டபெண்ணை நான் அறிந்தவ ளல்லள். ஒருக்கால் உமக்கு இணக்கமானவளா யிருக்கவும்போதும். நான் குறிப்பிட்ட பெண்ணை நானறிவேன். அவள் பனீஷிஹாபு கோத்திரத்திலுள்ளவள். தந்தைக்கு ஒரே பெண்.

கரீபு:——நான்கண்ட பெண்ணும் தந்தைக்கு ஒருவள்தான். புனீஷிஹாபு கோத்திரத்தினள்தான்.

ஸல்மா:——அவள் தனித்திருக்கிறதைக்கொண்டு உயர்குலத்தாளென்று சொல்ல விடம்படாது. நான் குறிப்பிட்டபெண்ணோ,

அமீர்பஷீரின் சுகிர்தமான ஒரு அமீரின் புதல்வி. அவ்வமீர், அவசியமான பிரயாணங்களிற்கூட அமீர்பஷீருடனே அல்லாமல் தனித்துப் போகமாட்டார்.

கரீபு :——இப்பெண்ணின் தந்தையரும் அத்தகையினர்தான். தாங்கள் குறிப்பிட்ட பெண்ணின் தந்தையருடைய பெயரென்ன?

ஸல்மா :——அவருடைய பெயர் அமீர் ஸயீது.

கரீபு :——(இதைக்கேட்டு சப்தமிட்டு) அவள் தான் இவள்.

ஸல்மா :——அவள் அன்னியரிடத்தில் குரல் காட்டிப்பேச மிகவும் வெட்கிப்பள். நீர் அவளைக் காணவும் பேசவும் வாய்க்காதே.

கரீபு :——அது உண்மைதான். ஆனால், அவள் எனக்கு வெட்கக்கூடாத அவசரம் வந்து சம்பவித்தது. தங்கடமான காலத்தில் விலக்கப்பட்டதையும் அனுஷ்டிக்கப்படுமல்லவா?

ஸல்மா :——அந்தமாளிகை யெங்கிருக்கிறது?

கரீபு :——அம்மாளிகை, நம் பட்டணத்திற்கு வெளியே பல விருக்ஷங்கள் சூழ்ந்த சிங்காரவனத்தில் கட்டப்பட்டிருக்கிறது.

ஸல்மா :——நீர் சொன்னது சரியே. இவள் அவள்தான். ஆனால், அம்மாளிகையிலிருந்து ஒரு குதிரைவீரன் புறப்பட்டுவந்து மீண்டானென்கிறீரே. இன்று முதல் அவ்விடத்தில் ஆண் பிள்ளைகளில்லையே.

கரீபு :——அஃதெனக்குத் தெரியாது. அவ்வீரரைக்குறித்து அப்பெண்மணிடத்தில் கேட்டேன். சமையம் வாய்த்துழிசொல்லுகிறேனென்றாள். அதின் கருத்து எனக்குப் புலப்படவில்லை. அவர் அவளா யிருக்கப்போதுமென்று என்னுகிறேன்.

ஸல்மா :——அதின் கருத்து எனக்கும்விளங்கவில்லை. ஆனால், ஆரம்பத்தில் ஜாக்கிரதையா யிருக்கும்படிக்கு உனக்கு உசாருண்டாக்கியதும், பின்பு முகமூடியிட்டு உதவிக்கு வந்ததும் அப்பெண்ணென்றே நினைக்கிறேன். ஏனென்றாலே, அவள் குதிரையேற்றத்தில் மஹா தேர்ச்சியடைந்தவள். ஆண்பிள்ளைகளைப்போல வீரமுடையவள்.

என்றதைக்கேட்ட கரீபுக்கு சந்தேகநிவாரணமாகி, கஷ்டத்தின்பேரில் முடியுமென்று கருதியிருந்த விஷயம் இலேசில் முடிந்ததே யென்று சந்தோஷ மடைந்திருந்தார்.



ஸல்மாநாயகி, தன் புருஷனை வரவழைத்து நடந்தவைகளைச் சொல்லிக்காட்டி ஆலோசித்து, "அமீர்பஷீர், திமஷ்கு பட்டணத்திலிருந்து வந்த பிறகு அப்பெண்ணின் தந்தையரிடத்தில் அவளை கரீபுக்காகக் கேட்போ"மென்று தீர்மானித்திருந்தார்கள்.

முந்திய சந்திப்பினாலேயே இருவர் மனமும் ஒன்றையொன்று வலியக்கொண்டமையால், கரீபு அப்பெண்ணைவிட்டு விலகியிருக்கச் சக்தி பெறாமல் மறுபடியும் அவளைப்போய்ச் சந்திக்கவேண்டுமென்னும் வாஞ்சையோடிருந்தாலும், அப்பெண்ணின் தகுதியைப் பேறுவதற்காக அவ்வெண்ணத்தைத் விட்டிருந்தார். (Damascus) திமஷ்கு பட்டணத்துக்குப் போயிருந்த அமீர்பஷீரும், அமீர்ஸயீதும் திரும்பி வந்தார்கள்.

அமீன்பே மேற்படி பெண்ணை கரீபுக்குப்பேசுவதற்காக அமீர்பஷீரிடத்தில் சம்மதங் கேட்டார். அமீர்பஷீர் மறுமொழி சொல்லாமையால் அவருக்கு ஐயமுண்டாகி சம்பாஷிக்கத் தொடங்கினார்.

அமீன்பே :——தாங்கள் தெளிவாக மறுமொழிதரவேண்டும்.

அமீர்பஷீர் :——அப்பெண் அருமையாகவும் ஒழுங்காகவும் வளர்க்கப்பட்டவள். சகல இலக்ஷணங்களும் பொருந்தியவள். அப்பெண்ணைப் பேசும் விஷயத்தில் நான் தலையிடமாட்டேன். உங்களுக்குப் பிரியமிருந்தால் நீங்களே அப்பெண்ணின் தந்தையரிடத்தில் கேளுங்கள்.

அமீன்பே :——தாங்கள் அப்பெண்ணின் தந்தையரை இரம்ப நேசித்திருப்பதை நான் அறிந்திருக்கிறபடியால், அவருடைய புத்திரியைப் பெண்பேச எங்களுக்கு அதிக ஆவலுண்டானது.

அமீர்பஷீர் :——ஆம், நான் அதிகமாகவே நேசித்திருந்தேன். இப்போது எங்களிருவருக்கும் வெறுப்புண்டாகக்கூடிய ஒரு காரியம் சம்பவித்திருக்கிறபடியால், அவ்விஷயத்தில் தற்போது நான் தலையிட இடம்பாடாகாது.

அமீன்பே :——அப்படியானால் அப்பெண் நமக்குத் தேவையில்லை. ஆனால், கரீபு திருட்டாக ஒருமுறை அப்பெண்ணைச் சந்தித்திருக்கிறானே தவிர மற்றதை யறியமாட்டான்.

(என்று) கரீபு அப்பெண்பேரில்வைத்திருக்கும் ஆவல்இந்தன்மையதென்று அறியாதவரானதால் அவ்வாறு சொல்லிவிட்டு, தன்

பெண்சாதியிடத்துக்கு வந்து சங்கதிகளைச் சொன்னார். ஸல்மாவும், கரீபும் அப்பெண்மீது மிகப் பிரீதியுடையவர்களா யிருந்தபடியினாலே, இச்சொற்களைக் கேட்டவுடனேயே அவ்விருவரின் முகங்களும் வாட்டமுற்றன. அமீன்பே, அமீர்பஷீருடன் சம்பாஷிக்க மறுபடியும் போகக் கூடாதவரா யிருந்தார்.

கரீபு யாதொன்றிலும் மனஞ் செல்லாமல், இதற்கென்ன பரிகாரஞ் செய்கிறதென்று யோசித்துத் தியங்கி, (பொறுத்தார் அரசாள்வர்) என்பதற் கிணங்க, தாமசத்தின்பேரில் நிறைவேறவுங் கூடுமென்று திடச்சித்தங்கொண்டு இதற்கு ஒரு தகுந்த யுக்தி செய்யவேண்டுமென்று யோசித்ததில், அமீர்பஷீருக்கும், தன்பிரியநேசியின் தந்தையருக்கும் சமாதான முண்டாகும் வழியைத்தேடுவதே உசிதமென்னும் யோசனை தட்டுப்பட்டது.

அதற்காக இரகசியப் பிரயாசைபெடுத்துவந்தார். ஆனால், தன்னுடைய நாட்டம் நிறைவேறமுன், அப்பெண்ணை யாரேனும் விவாகஞ் செய்துகொள்ளுவார்களோ என்ற ஐயம் கலக்கிக் கொண்டிருந்தது.

39-வது அத்தியாயம்.

## அபாயத்திலும் அபாயம்.

இபுறாஹீம்பாஷா, பைத்துத்தீனுக்கு வருகிறவரையில் கரீபு, தன் யோசனையை வெளியிடா திருந்தார். கி. பி. 1832-ல் டரூஸ் வம்சத்தாரிடத்திலிருந்து ஆயுதங்களைப் பறிப்பதற்காக இபுறாஹீம்பாஷா, பைத்துத்தீனை நாடி தீருல்கமருக்குவந்து தாணையமிட்டிருந்தார். அமீர்பஷீர், டரூஸிகளின் தலைவர்களுக்குக்கடிதங்களெழுதி, ஆயுதங்களுடனே இபுறாஹீம்பாஷாவின் சமுகத்திற்கு வந்து, அவ்வாயுதங்களை அவர்களுக்கு ஒப்புக்கொடுத்து அவர்களிடத்தில்சரண்புகுதவேண்டுமென்று கட்டளை யிட்டிருந்தார்.

அமீர்பஷீருக்கும், அமீர்ஸயீதுக்கும் ஒற்றுமை யுண்டாக்க இது நல்ல சமையமென்று கரீபு நினைத்து, அதற்கான முயற்சியுடனிருந்தார். அப்படியிருக்கும்போது ஒருநாள் சாயுங்கால வேளையில் ஒரு தோட்டத்தில் கரீபுக்கும், அமீர்ஸயீதுக்கும் சந்திப்புண்டா



யிற்று. கரீபு அவரை அறிவார். அவரும் கரீபுடையவிஷயங்களை நிரம்பக் கேள்வியுற்று அவர்பேரில் நிரம்ப பக்ஷமுடையவராயிருந்தார். அப்போது அத்தோட்டத்தின் ஒரு பக்கத்தில் இருவரும் உட்கார்ந்து, அமீர்பஷீருக்கும் அமீர் ஸயீதுக்குமுண்டுபட்டிருக்கு மனஸ்தாபங்களின் காரணம் வெளியாகிற வரைக்கும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

கரீபு:——என் நாயகமே! என்னிடத்திலிருக்கிற ஒரு இரகசியத்தை தங்களிடத்திற் சொல்ல நாடுவீர்களா?

அமீர்ஸயீது:——தடையின்றி சொல்லுங்கள்.

கரீபு:——தங்களின் புத்திரி என்னுயிர்த் துணைவியாயிருக்கத் தாங்கள் பிரியப்பட்டால், நானும் என் தாயாரும் தங்களிடத்தில் கேட்கவேண்டுமென்று தீர்மானித்து அமீர்பஷீரவர்களிடத்தில் ஆலோசித்தோம். அப்பெண்ணைக் கேட்பதில், தனக்கு ஆக்ஷேபனையில்லையென்றும், தான் கேட்கமாட்டேனென்றும் சொன்னார்கள். அவர்களுக்குப் பொருத்தமில்லாததை நான் செய்கிறது தகுதியல்ல. தங்கள் மகள் பேரில் எனக்கு கட்டப்பான நேசமுண்டாகியிருக்கிறது. என் தாயாரும் அப்படியே நேசித்திருக்கிறார்கள். அமீர்பஷீரவர்களுடன் தாங்கள் சமாதான மாகிறதுதான் அக்காரிய முடியக் கருவியாகிறது.

அமீர் ஸயீது:——(இதைக்கேட்டு பெருமூச்செறிந்து) என் அருமைமகனே! இரண்டுநாளைக்கு முன்னதாக இவ்விஷயத்தில் முந்தி யிருப்பீர்களாகில் ஒரு கஷ்டமுமிராது. அமீர்பஷீர் அவர்களுக்கும் எனக்கும் உண்டாயிருக்கிற மனஸ்தாபம் நீங்குவது கஷ்டமல்ல. அதிக கட்டப்பான சங்கடமொன்று குறுக்கிட்டிருக்கிறது.

கரீபு:——(திகிலடைந்து) அதென்ன சங்கடம்?

அமீர் ஸயீது:——இபுறாஹீம்பாஷா அவர்கள் நேற்றிரவு அவர்களின் தளகர்த்தர் கர்னல் ஹினுபே மூலமாக அவர்களுக்கு அதிக முடுகுதலும் பட்சமுமுள்ள ஒரு சேனைத் தலைவருக்காக என்மகளைப் பெண்பேசி யனுப்பினார்கள். சம்மதிப்பதைத் தவிர வேறே மறுமொழிகொடுக்க எனக்கு சக்தியில்லை. ஆதலால், அம்மணிதனை நான் பார்க்க வேண்டுமென்றேன். "இன்றிரவைக்கு அவர் உங்கள் வீட்டுக்கு வருவா"ரென்று ஹினுபே சொல்லிவிட்டுப் போ

யிருக்கிறார். இச்செய்தியை நான் தங்களுக்கு மட்டில் சொல்லி யிருப்பதால் தாங்கள் அதை மறைத்து வைத்திருக்கவேண்டும்.

என்றதை கரீபு கேட்டு பதறி சினமுண்டவராகி, அப்பெண்ணைக் கேட்டவனுக்குத் தீங்குண்டாக்க வேண்டுமென்ற நாட்டமும், அப்பெண்ணை யின்னொருவர் கேட்டு விட்டபடியால் அவள்பேரில் அதிக பிரியமுண்டாகி, எப்படியாகிலும் தானே அவளைக்கல்யாணம் முடிக்கவேண்டுமென்ற பிடிவாதமுங் கொண்டு அமீர் ஸயீதை நோக்கி, "என் நாட்டம் நிறைவேற என்னவழி செய்யலாம்"? என்று கேட்டார்.

அமீர் ஸயீது, "என் அருமைமகனே! அதற்கு என்னிடத்தில் யாதொரு வழியுமில்லை. தங்களை விட நான் அதிககலக்கம்பிடித்தவனா யிருக்கிறேன். இபுறுஹீம் பாஷாவின் எவலை மறுக்க என்னால் கூடவுமாட்டாது. பெண் கேட்டிருக்கிற மனிதனின் பூர்வோத்திரத்தை எனக்கறிவிப்பாரு மில்லை. எனக்கு அவளைவிட்டு வேறு பெண்ணுமில்லை. அவளை நான் மிகுந்த அருமையுடன் வளர்த்தேன்" என்றார்.

கரீபு இதைக்கேட்டுத் திகில்கொண்டு கொஞ்சநேரஞ் சிரங் குனிந்திருந்து அமீர்ஸயீதை நோக்கி, "அந்தமனிதன் தங்களிடத்திற்கு எப்போது வருவான்"? என்று கேட்டார். அதற்கு அமீர் ஸயீது "இரவு எட்டுமணி சுமாருக்கு வருவாரென்றார். கரீபு விடை வாங்கிக்கொண்டு வந்துவிட்டார்.

பின்பு கரீபு இரண்டுமணிநேரம் வரையில் இக்கஷ்டம் நீங்க என்ன சூழ்ச்சி செய்யலாமென்று யோசித்தும் புலப்படாமையால், உரோசத்தினாலும் அப்பெண் மீது அவருக்கிருக்கும் காதலினாலும் இன்றிராத்திரி அம்மனிதன் வருகிறவழியில் காத்திருந்து அவனைக்கண்டு அவ்வெண்ணத்தை விட்டொழித்து மீளும்படிக்குப் பயமுறுத்தவேண்டும். அதினால் அவன் திரும்பி விடவுங் கூடும். அப்படிக்கில்லாது முன்னேறினானேயானால் அவனைக்கொன்று விடவேண்டும் என்று தீர்மானித்தார்.

ஆனால், கரீபின் சற்குணமும், விவேகமும், பெருந்தகைமையும், அநியாயமாக ஒருவனைக் கொல்லக் கூடாதென்று தடுத்து நின்றன. (சுருக்கிக் கூறுவோம்) உரோஷமும், விவேகமும், தன்தன்தொழிலைச் செய்யத்தலைப்பட்டு நின்றபடியினாலே, அவ்



விரண்டிற்கும்கரீபே நியாயாதிபதியாகி, "அம்மனிதன் வருகிறவழியில் காத்திருந்து அவனைக்கண்டு பயமுறுத்தி அவனுடைய நாட்டத்தை அறிந்து அதற்குப்பிறகு பார்த்துக்கொள்வோ" மெனத் தீர்ப்புசெய்தார்.

---

### 40-வது அத்தியாயம்.

### முக்காடு நீக்கல்.

அன்றிரவு மணி எழானவுடனே, கரீபு உடையணிந்து வீட்டிலிருந்து வெளிப்புறப்பட நாடினார்.

ஸல்மாநாயகி:—(அதைக்கண்டு) என் அருமைமகனே! நீர் எங்கு செல்ல வுடையணிகின்றீர்?

கரீபு:—என் மாதாவே! இபுறுஹீம்பாஷாவின் பாளையத்திலிருக்கும் என் சினேகிதரைக் காணப்போகிறேன்.

ஸல்மாநாயகி:—நேற்று நீர் தனித்துவரும்போது சம்பவித்ததைப்பற்றி ஆலோசிக்கிறேன்.

கரீபு:—அது ஒருசமயம்; இப்போது மஹாப்பராக்கிரமசாலியாகிய இபுறுஹீம்பாஷா இவ்வூர்ப்பக்கத்தில் தாணையமிட்டிருக்கிறார்கள். அதனால் ஒன்றிற்கும் அஞ்சத் தேவையில்லை.

ஸல்மாநாயகி:—கடவுளுதவியால் போய் வருவீராக.

என்றவுடனே கரீபு தன் ஆயுதத்தைப் புடைவைக்குள்மறைத்துக்கொண்டு வெளியிலாகி வேற்றுடையணிந்து அமீர்ஸயீதின் வீட்டுக்குப் போக வருகிற மனிதனைத் தடுப்பதற்காக பாதையில் காத்து நின்றார். எட்டுமணி சுமாருக்கு ஒருமனிதன் தனியே நடந்து வருவதை அவர்கண்டு அவனை யுற்றுநோக்கினார்.

அம்மனிதர், காலில் (Boots) நெடும்பாதரக்ஷை மாட்டி முழங்காலிற் சுற்றிக்கட்டிய காற்சட்டையுடுத்து, இடுப்புவரையில் அங்கிபூட்டி, சிரசில் துருக்கித்தொப்பி தரித்து, இடையில் செவந்த அகல வார் அணிந்த வாலிபராயிருந்தார். அவரின்உடை அவரை மிஸ்று தளகர்த்தராகக் காட்டிற்று. கரீபு அவர் கிட்ட நெருங்கி வந்தனங் கூறினார். அவர் பிரதி வந்தனமளித்தார். வம்பு வளர்ப்பதற்காக கரீபு அவரிடத்தில் சுங்கான் பற்றவைக்க

நெருப்பு வேண்டுமென்றார். தளகர்த்தர் நெருப்பு கொடுத்தார். கரீபு அதைவாங்கி சுங்கானைப் பற்றவைத்து பிருவாக இழுத்து அவ்வெளிச்சத்தால் அத்தளகர்த்தரின் முகத்தை யுற்றுப்பார்த்தார். அவரை எப்போதோ கண்டஞாபகம் வந்தது. ஆனால், இன்னாரென்று ஸ்திரப்படுத்தக் கூடாதிருந்து, அவரைப்பார்த்துப் பேசத்துவக்கினார்.

கரீபு :——இவ்விரவில் நீங்களெங்கே போகின்றீர்கள் ?

தளகர்த்தர் :——நீங்களேன் கேட்கவேண்டும்? வழிப்போக்கர்களைத் தடுப்பது உங்களின் அப்பியாசமோ?

கரீபு :——ஒருகாரியத்திற்காக விசாரித்தேன். நீங்கள் மறுமொழி கொடுத்த பின்பு அதை விவரிக்கிறேன்.

தளகர்த்தர் :——இது அவசியக்கேள்வியல்ல. நீங்கள் இப்றாஹீம் பாஷாவின் தளகர்த்தருடன் சம்பாஷிக்கிறீர்கள்.

கரீபு :——(தளகர்த்தரின் தொனியால் அவரை முன்னறிந்தவராக நினைத்து ஐயுற்று) அதை நான் அறிவேன். என்கேள்விக்கு விடையளிக்க உங்களுக்கு மனமில்லாவிட்டாலும், உங்கள் பெயரைமட்டில் அறிவிக்க வேண்டுகிறேன்.

தளகர்த்தர் :——என் பெயர் ஸாலிம் ஆகா.

கரீபு :——ஸாலிம் ஆகாவே! என் சகோதரரே !! என் பிரியநேசரே !!! தங்களுக்கு சோபனமும் சந்தோஷமுமுண்டாவதாக. தாங்கள்தானா, இவ்வழி போகின்றீர்கள் ?

ஸாலிம்ஆகா :——ஆமாம்; தாங்கள் அமீர் கரீபா ?

கரீபு :——ஆம்; கரீபுதான்.

ஸாலிம்ஆகா :——தாங்கள் இங்குவந்த காரணமென்ன? நான் செல்லும் பாதையில் குறுக்கிட்டதின் நாட்டமென்ன ?

கரீபு :——தாங்களென்று அறியமாட்டேன். நான் ஒருமனிதனை வழிபார்த்து நின்றேன். தாங்கள் இப்போது எங்கேபோகிறீர்கள் ?

ஸாலிம்ஆகா :——அமீர்ஸயீதுடைய வீட்டிற்குப்போகிறேன். இதோ, தெரிகிறது அவர்களின் வீடல்லவா ?

கரீபு :——ஆம்; நான் தங்களை அங்கு சேர்ப்பிக்கவிருப்பமோ



ஸாலிம்ஆகா:——அது தங்களுடைய இஷ்டம்.

கரீபு, தளகர்த்தரை தன் சிநேகராகிய ஸாலிம்ஆகா வென்றறிந்தபோதே அவருக்குற்றிருந்த வரோஷமென்னும் அக்கினியை நேசமென்னும் நீரால் அவித்து, அப்பெண்பேரில் அவர் வைத்திருந்த காதலை அகற்றி, "அப்பெண்ணை ஸாலிம் ஆகாவுக்காக நாமே முன்னின்று பேசி முடிவு செய்யவேண்டு" மென்று தனக்குள்ளே தீர்மானப் படுத்திக்கொண்டார்.

பின்பு இருவரும் நடந்து, அமீர்ஸயீதின் மாளிகைக்கு வந்து கதவைத் தட்டினார்கள். கதவு திறக்கப்பட்டது. கரீபும்,ஸாலிமும் ஒன்று சேர்ந்துவந்திருப்பதைப்பற்றி அமீர்ஸயீது புதுமையடைந்து, கல்யாண கருமம் சங்கடமாகமுடியுமோ? என்னவோ? என்று இரம்பப் பயந்திருந்தார். ஆனால், அதை வெளியாக்காமல் அவ்விருவருக்கும் சோபன வாழ்த்து கூறி, தெரிசன மண்டபத்திற்குக் கூட்டிக்கொண்டு சென்று, ஆசனங்களிலிருத்தி, காப்பித் தண்ணீர் பரிமாறினார். அவ்விருவரும் அளவளாவி மகிழ்வுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். அவ்விருவரும் ஒன்று சேர்ந்து வந்ததின் காரணத்தை அறியக்கூடாமல் அமீர்ஸயீது கலங்கிக்கொண்டிருந்தார்.

## 41-வது அத்தியாயம்.

## உண்மையான நேசம்.

அப்படியிருக்கும்போது கரீபு, அமீர்ஸயீதைப் பார்த்து "மேன்மை தங்கிய அமீரே! நாங்கள் ஒரு முக்கிய விஷயத்திற்காக, இப்போது தங்கள் சமுகத்தில் வந்திருக்கிறோம். எங்களை பேர்கெட்டவர்களாக்க மாட்டீர்களென்பதை தாங்கள் விரும்புகிறேன்" என்று வணக்கமாகக் கூறினார்.

அமீர்ஸயீது, "கரீபே! அதைச் சொல்லுங்கள். தங்களுடைய காரியங்கள் என் சிரசின்பேரிலும் கண்ணின்பேரிலுமாயிருக்கும்" என்றார். கரீபு, "அமீரே! நிகரற்ற சௌந்தரியமும், விவேகமும் பொருந்திய என் சகோதரர் ஸாலிம்ஆகாவுக்காக, தங்கள் புத்திரி ஸாஉதாநாயகியைப் பெண்பேச வந்தேன். என் சகோதரரின் காரியத்தைத் தாங்கள் அறியாதிருந்தால் நான் அறிவிக்கிறேன்.

அவரோ, வீரமும் விவேகமும் பரிபூரணமாக வுடையவர். அவருடைய தகுதியைப்பற்றி இப்பொழுதிம்பாஷா அவர்கள் பரிஷ்காரமாகத் தங்களுக்கு கூறித் திருக்கப்போதும். மேன்மை வாய்ந்த தங்கள் திருச் சமூகத்தின் முதிருதவென்னுஞ் சிறப்பைப் பெறுதற்காகவே, எங்களையல்லாத மற்றவருள் பெரும்பாலாரிலுஞ் சிறந்த நிகரற்ற இரத்தினமாகிய ஸுஉதாநாயகி அவர்களைப் பெண்பேசத் துணிந்தோம்.

“எங்கள் நிலைமையைப்பேணி நாங்கள் நாடிவந்த கருமத்தில், தாங்கள் எங்களுபேரில் கிருபை பாலிப்பீர்களென்றும் நம்பிக்கையும் எங்களுக்கிருக்கிறது. ஆகையால், இவ்விஷயத்தில்தாங்களெங்களுக்கு மங்களவாக்குக் கிடைக்கப் பலிதமாகவே விரும்புகிறோம்” என்று வெகு விநயத்துடன் கூறினார்.

கரீபின் சம்பாஷணை வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஸாலிம்ஆகா, “நம்முடைய விவாக சங்கதியை இப்பொழுதிப்பாஷாவும், அமீர்ஸயீதும் தவிர மற்றவர்க ளறியமாட்டார்களே. இவருக்கு எங்கிருந்து கிடைத்த” தென்று ஆச்சரிய மடைந்திருந்தார். கரீபு தான் விரும்பிய பெண்ணை விவாகஞ் செய்ய நாடியவர்பேரில் கடும்பகை சாதித்திருந்ததை அமீர்ஸயீது அறிந்திருந்ததினாலே, அவருடைய பேச்சைக் கேட்டு பிரமிப் படைந்திருந்தார்.

அவ்விருவரின் ஆச்சரியத்தையும் பிரமிப்பையும் கரீபு பார்த்து அவர்களை நோக்கி, “இக்கருமத்தில் நான் நடுவாக நின்று பேசுகிறதைப்பற்றி நீங்களிருவரும் ஆச்சரிய முறவேண்டாம். ஒருவன் தன் சகோதரனுக்கு இவ்வாறான முக்கிய விஷயங்களில் உதவிபுரிய வேண்டியது அவசியமல்லவா? என் மூலமாக இக்காரியம் நிறைவேறுமாகில் என்னை நானே மஹா பாக்கியவானென் றெண்ணிக் கொள்ளுவேன்” என்று கூறி, தன் அந்தரங்கத்தை ஸாலிம்ஆகா அறிந்தால் கட்டாயம் அப்பெண் பேசலை கெடுப்பா ரென்பதைப் பயந்து, அமீர்ஸயீதைப் பார்த்து, “நான் தங்களுடன் சற்றுநேரம் தனித்துப்பேசவேண்டும்” மென்றார். கரீபை அமீர்ஸயீது தனித்த விடத்திற்கழைத்துக் கொண்டுபோனார்.

கரீபு:——அமீரவர்களே! உண்மையாக ஸுஉதா நாயகியை நான் விவாகஞ்செய்யநாடி, அவ்விஷயத்தில் பொறுதி செய்யக்கூடமல் அப்பாக்கியம் சீக்கிரத்தில் கிடைப்பதை வழிபார்த் திருந்தேன்.



அப்படிக் கிருக்கும்போது அப்பெண்ணை வேறொருவர் கேட்டிருக்கிறதாக தாங்கள் சொன்னீர்கள். அப்போதே அவ்விஷயம் நிறைவேறுவண்ணம் நீக்குசெய்யத் தீர்மானித்திருந்தேன். பின்பு, அவர் என் உண்மைத் தோழரென்றும், மரணத்தறுவாயி லின்றும் திட்டமாக என்னைக் காப்பாற்றி, தன் விவேகத்தை வெளிப்படுத்திய என் சோதரரென்று மறிந்தேன். அவர் எனக்குச் செய்த நன்றியை உயிருள்ள வரையில் நான்மறக்கமாட்டேன். அவருக்குப் பிரதி நன்றி செய்யவேண்டுமென்றே கருதியிருந்தேன். தங்களின் சங்கை வாய்ந்த குமாரியை அவர் விவாகம் பண்ண அபீஷ்டமுற்றதை நானறிந்தபோது, அவ்விஷயத்திலெனக்குண்டாயிருந்த உரோசத்தை யடக்கி, அவருடைய நாட்டம் நிறைவேறும் பொருட்டு, அவருடனேயே தங்கள் சமூகத்திற்கு வந்தேன். ஆனால், நமக்குள் நடந்தவை ஒன்றையும் அவர் அறிந்தவரல்லர். ஆகையால், நம் குடும்பத்தில் அமீர்களின் மக்களை அக்குடும்பத்தினருக்கே விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கத்திற்கு விரோதப்படினுஞ் சரியே. என் நாட்டப்படிக்கு தங்களின் அருமந்தச் செல்வியை அவருக்கே விவாகஞ் செய்துகொடுக்கச் சம்மதிக்கவேண்டுமென்று தங்களை மிகவும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அமீர்ஸயீது:——(கரீபுடைய அருமையான வார்த்தைகளைக் கேட்டு வியப்புற்று) என் அருமை கரீபே! தங்களின் விவேக சாதுரியத்தைப்போலும், சற்குணத்தைப்போலும், நான் கண்டதேயில்லை. இப்படிப்பட்ட மனிதருமா, இருக்கிறார்களென்று நான் மிகுந்த புதுமைப் படுகிறேன். ஆதலின், தங்களினெண்ணத்திற்கு நான் வழிப்பட யாதோர் ஆக்ஷேபனையுமில்லை. ஆனால், இவ்விஷயத்தைப்பற்றி சற்று முன்னர் என் மகளிடத்திற் பேசினேன். அவளோ, திட்டமாகத் தங்கள் பேரிலேயே பிரியமுள்ளவளாயிருக்கிறாள். விரோதிகளால் தாங்கள் சூழப்பட்டபோது சம்பவித்ததையும், தாங்கள் அபாயமின்றி காக்கப்பட்டு இம்மாளிகைக்கு வந்ததையும் அவளெனக்குச் சொல்லிக் காட்டினாள். அப்போது, தங்களிடத்தில் சற்குணமும், அன்பும், மேன்மைப்பாடு மிருப்பதாக அவளறிந்து, அதுமுதல் தங்கள்பேரில்மாறாத பிரியங்கொண்டிருக்கிறாள். ஆகையால், அவளுடைய பிரியத்தை வேறொன்றாகக் கொண்டு நிறைவேற்றப் பார்ப்பது அவளிடத்தில் பலிக்கமாட்டாதென் றெண்ணுகிறேன்.

கரீபு:——அப்பெண், என்மீது வைத்திருக்கும் அன்புக்காக அவர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன். என்பேரில் அவர்களுக்கிருக்கும் அன்பைவிட, இரட்டிப்பு நான் அவர்கள்மேல் வைத்திருக்கிறேனென்பது மறுக்கப்படாத சத்தியம். அதனாலேயே, நேரே தங்களிடத்தில் நான் அப்பெண்ணைப்பேச முன்வந்தேன். சில காலமாக என் இதய கோஷ்டத்தை வெகு கஷ்டத்துடன் பொறுத்திருந்தேன். ஆனால், கற்பனையில் அப்பெண் எனக்காக வருந்தவில்லைபோலும். ஆகையால், இன்றுமுதல் அப்பெண்ணை என்சகோதரியாகப் பாவித்துக் கொண்டேன். சகோதரன் சகோதரியை நேசிப்பதுபோல நான் அப்பெண்ணை நேசிக்கிறேன். என் அருமைத் தோழர் விஷயத்தில் சம்மதி தர, தங்கள் புத்திரியைத் தாங்கள் கட்டாயப்படுத்துவீர்களென்று நான் ஆதரவு வைத்திருக்கிறேன்.

எனினிலோ, அவர் போலொத்த சற்குணர் கிடைப்பதரிது. அன்றியும் என் சகோதரி ஸுஉதாநாயகி கூடிய சீக்கிரத்தில் அவரால் சந்தோஷம் பெற்று பாக்கியத்துடன் வாழ்வார்களென நான் உறுதியாகக் கூறுகிறேன். அல்லாமலும் அவருக்காகவே இபுறாஹீம் பாஷாவும் அப்பெண்ணுடைய கையைக் கேட்டிருக்கிறதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். அவர் கடுங்கோபியென்பதும், தனக்கு மாறு செய்பவரைத் துரிதத்தில் சிக்ஷிக்கிறவரென்பதும் தாங்களறிந்த விஷயந்தான். ஆனால், தங்கள் புத்திரியை அவர்கேட்குமுன் நான் விரும்பியிருந்ததை மட்டில் அவருக்குத் தெரிவிக்காதிருக்கும்படிக்கு தங்களிடத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அமீர் ஸயீது:——(கரீபின் மேலான விவேக சாதுர்யத்திற்காக மகிழ்ந்து அவரை யிறுகத்தழுவி, நெற்றியை முகர்ந்து) அதிக விசுவாசமும், சற்குணமும் நிறைந்த என் அருமைமகனே! தாங்கள் குடித்தபாலுக் குடையவர்களின் வாழ்நாள்வளர்ந்தேற, கடவுளை நமஸ்கரிக்கிறேன். தங்களைப்போல விவேகியை யிதுகாறும் நான் கண்டதே யில்லை. தங்களின் வேலைச் செய்யக்கடமைப்பட்டிருக்கிறேனென்பது சத்தியம்.

கரீபு——எனக்குப் புலப்படாதிருக்கிற ஒன்றைத்தெரிய விரும்புகிறேன். அதாவது, தங்கள் புத்திரி ஸுஉதாநாயகி, சமயம் வாய்த்தபோது சொல்வதாக எனக்கு வாக்களித்திருக்கிறார்கள். அதைத் தாங்களறிந்திருக்கவும் போதும். அதற்குத்தாங்கள் மறுமொழிதரப் பொருந்துவீர்களா?



அமீர் ஸயீது——அஃதென்ன புலப்படாமை? தெரிந்தால் மறுமொழி தரத் தடையில்லை.

கரீபு——விரோதிகள் என்னைச் சூழ்ந்துகொண்ட நேரத்தில் முகமூடியிட்ட ஒரு குதிரைவீரன் எனக்குதவியாக வந்து நின்று, அவ்விரோதிகளைப் பின்வாங்கச்செய்து, இம்மாளிகைக்குத் திரும்பி விட்டார். ஸுஉதாநாயகி யிடத்தில் அவரைப்பற்றிக் கேட்டேன். "சாவகாசமான மற்றொருவேளையிற் சொல்லுகிறே" னென்றார்கள்.

அமீர் ஸயீது——(புன்னகைகொண்டு) ஆரம்பத்தில் தங்களை ஜாக்கிரதையா யிருக்கும்படிக்குச் சப்தமிட்டதும், தாங்கள் அபாயத்தில் சிக்குண்டிருப்பதை இந்த ஜன்னல்வழியால் கண்டு அச்சமயம் இவ்விடத்தில் ஆண்பிள்ளைகள் ஒருவருமில்லாதிருந்ததால், முகமூடியிட்டு ஆண்வேடம் பூண்டுவந்து தங்களுக் குதவிபுரிந்ததும், அவ்வுதவி புரிந்தவர் யாரென்றறிய நாடித் தாங்கள் கேட்ட கேள்விக்கு நாணத்தால் மறுமொழி தராது வந்துவிட்டதும் என் மகள் ஸுஉதாவேயாம்.

என்றதைக்கேட்ட கரீபு, அப்பெண்ணின் வீரம், விவேகம், நாணம், நற்குணம், ஈவு, இன்மொழி, அழகு, அருங்குரல் முதலியவற்றைப் பற்றி மிகுந்த ஆச்சரியமடைந்து, பழைய எண்ணத்தில் திரும்ப நாட்டமுண்டாகவே, ஸாலிம் ஆகாவின் நேசமும், அவர்செய்த நன்றியும் குறுக்கிட்டதால் அவ்வெண்ணத்தை ஒழித்து, அவருக்கே அப்பெண்ணை விவாகமுடித்து வைக்கவேண்டுமென்று தீர்மானித்து, அமீர் ஸயீதை நோக்கி, "அமீரே! தங்களின் செல்வச்சேயாகிய ஸுஉதாநாயகி என்மீது அன்புபாராட்டி என்னை ரக்ஷித்ததற்காக அவர்களுக்கு வந்தனமும் துதியுஞ் செலுத்துகிறேன். இவ்வித மேன்மையையுடைய அவர்கள், என் பிராணநேயராகிய ஸாலிம் ஆகாவுக்கு மனைவியாவதையே நான் தகுதியாகக் காண்கிறேன்" என்று கூறினார்.

தெரிசனை மண்டபத்திலிருக்கிற ஸாலிம் ஆகா, அமீர் ஸயீதை கரீபு தனித்த விடத்திற்கழைத்துச் சென்று நெடுநேரமாகியும் திரும்பி வராமையால் சந்தேகமுற்று ஆலோசித்துக்கொண்டிருக்

கும்போது, ஒரு பணிவிடைக்காரன் காப்பித் தண்ணீர் கொண்டு வந்து அவருக்குக் கொடுத்தான். அவர் அதைவாங்கி அருந்திய வராய், அம்மண்டபத்தின் சிங்காரங்களைப் பார்ப்பவர்போலாகி, கரீபு அமீர்ஸயீதுக்கு நெருங்கிய பெந்துவா யிருக்கவேண்டும். நாம் குறிப்பிட்டிருக்கிற விஷயம் அவர்களின் குடும்பமுறைக்கு விரோதமாயிருப்பதால், அவர்களுக்குள் நீண்ட ஆலோசனை நடை பெற்றுக்கொண்டிருக்க வேண்டுமென்று நினைத்திருந்தார்.

காப்பி யருந்தியபிறகு கோப்பையைப் பணிவிடை யாள னிடத்தில் கொடுக்கும்போது அவனைப்பார்த்து "அமீர் கரீபு அமீர் ஸயீதின் பெந்துவாயிருக்கலாமோ?" என்று கேட்டார்.

பணிவிடையாளன்——ஆம், என் எஜமானே! அவ்விருவரும் பனீஷிஹாபு கோத்திரத்தி லுள்ளவர்கள், ஆனால், தூரபெந்து வா யிருப்பார்களென் றெண்ணுகிறேன்: கடவுளினுதவியால்கூடிய விரைவில் சமீபபெந்துக்களாய் விடுவார்கள்.

ஸாலிம்ஆகா——சீக்கிரத்தில்சமீபபெந்துக்களாவார்களென்று நீ சொன்னதின் கருத்தென்ன?

என்றபோது, பணிவிடைக்காரன், "அதின் கருத்து" என்று சொல்ல ஆரம்பிக்கும்போது, யாரேனும் வந்துவிடப்போகிறார்க ளென்று அஞ்சி அறைவாசலைப்பார்த்தான். ஒருவரும் வரவில்லை. பின்பு, "என் எஜமான் அமீர் ஸயீது அவர்களின் புத்திரியை அமீர் கரீபு தனக்காகப் பெண்பேசியிருக்கிறார்க" ளென்று சொன்னான்.

ஸாலிம் ஆகா இதைக்கேட்டு ஆச்சரியமடைந்து, அவரை மிகைக்கவந்த வுரோஷத்தையும் அடக்கிக்கொண்டு, பணிவிடையாளனைப் பார்த்து, "நீ சொன்னது உண்மைதானா?" என்று கேட்டார். அவன், "மெய்தான். இன்று சாயுங்காலம் இவ்விஷயத்தைப்பற்றி என் எஜமான், தன்புத்திரியுடன் பேசும்போது நான் கேட்டுக்கொண் டிருந்தே" னென்றான். அதனால் ஸாலிம் ஆகா வியப்புற்று, கரீபு தன்கூடவந்ததினும், தனக்கு முன்பாகப் பேசினதினும், அமீர் ஸயீதுடன் அவ்விஷயத்தைப்பற்றித் தனித்துப்பேசிக்கொண் டிருப்பதினும் சந்தேகங்கொண்டு, அப்பெண் கரீபின் இனத்தாளானதாலும், நம்மைப் பார்க்கினும் அவர்



மேற்பதவியினரானதாலும் அவரே அவளை விவாகஞ்செய்துகொள்ள விட்டுவிட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டிருந்தார்.

அப்படியிருக்கும்போது, அமீர்ஸயீதும், கரீபும், ஸாலிம் ஆகா விருக்கு மிடத்திற்கு முகமலர்ச்சி யுடையவர்களாக வந்து, அவரை ஆலோசனையில் முக்கியவராகக்கண்டு, அவர்களும் அங்குட்கார்ந் தார்கள். அப்போது ஸாலிம் ஆகாவை அமீர் ஸயீது பார்த்து "தங்களைப்பற்றி அமீர்கரீபு சொன்னவைகளை நான்கேட்டு நிறைந்த மகிழ்ச்சியடைந்தேன். என்புத்திரி, தங்களின் மனைவியாகவும் பணிவிடைக்காரியாகவு மிருக்க தாங்கள் பிரியப்பட்டால், நானே என்னைப் பாக்கியவானென் றெண்ணிக்கொள்ளுவேன். இதுமுதல் தங்களை என்மருகரென் றழைக்கப் பொருந்தினே" னென்று கூறினார்.

அதற்கு ஸாலிம்ஆகா "சங்கைபொருந்திய அமீரே! தாங்களும் என் உண்மைத்தோழராகிய கரீபும் எனக்குச்செய்த நன்றிக்காக, தங்களிருவருக்குந் துதிசெலுத்த நான் கடமைப் பட்டவனானேன். ஆனால், திடீரெனச் சம்பவித்திருக்கிற ஒரு விஷயத்திற்காக இப்போது நான் இரம்ப வெட்கிக்கிறே" னென்று சொன்னார். அதற்கு அமீர்ஸயீது "கடவுள் கிருபையால் அது நலமா யிருக்கப்போது" மென்றார்.

ஸாலிம்ஆகா, "அது நலமென்பதையும், இடரென்பதையும் நானறியமாட்டேன். சமீபத்தில் யுத்தத்திற்குப் போகவேண்டிய தாயிருக்கிறது. அங்கு சென்று, க்ஷேமத்துடன் திரும்புவே னென்பது என்ன நிச்சயம். ஆகையால், விவாக விஷயத்தை நான் திரும்பி வருகிறவரையில் பின்போட்டு வைப்பது நயமாகத் தெரிகிற" தென்றார்.

கரீபு ஸாலிம்ஆகாவைப் பார்த்து, "தற்போது எந்த தேசத்திற்கு யாத்திரையாகப் போகிற" தென்று கேட்டார். அதற்கு ஸாலிம்ஆகா, "உதுமானிய அரசாங்கத்தார் வெளிப் பார்வைக்கு இபுராஹீம்பாஷா அவர்களை (Syria-சிரியா) ஷாம்தேசாதிபதியாக நியமித்துவிட்டு, அந்தரங்கத்தில் அவர்களை எவ்விதத்தாலாவது அத்தேசத்தைவிட்டுக் கிளப்பிவிடவேண்டு மென்று கருதி, அதற்காக பெரியபடை யொன்றை அனுப்பிப்பார்களென்பதிற்சந்தேகமில்லை.

அல்லாமலும் அவர்கள் இத்தேசங்களிலிருப்பது, தத்துவ ஐரோப்பிய அரசர்களுக்குப் பொருத்தமில்லாதிருக்கிறது" என்றார்.

கரீபு ஸாலிமைப்பார்த்து, "தாங்கள் சொல்வது சரியாயிருந்தாலும், இபுறாஹீம்பாஷாவின் படையிலிருந்து தங்களை வெளிப்படுத்த என்னாலியன்ற வரையில் நான் முயற்சி யெடுக்கிறேன். தாங்கள் எங்களுடன் சுகித்திருக்கலாம். யுத்தங்களுக்குப் போகவேண்டிய தேவையுமிராது. இபுறாஹீம்பாஷா அவர்க்கே தங்களுக்கு விவாகஞ் செய்துவைத்த நாடியிருக்கிறபடியால் தங்களை அவர்கள் அழைத்துக்கொண்டு போகமாட்டார்களென்று நம்புகிறேன்" என்றார்.

கரீபின் வார்த்தைகள் ஸாலிம்ஆகாவின்வாயை மூடப்பண்ணியபடியால், அவர் மறுத்துப் பேசக்கூடாதவரானார். (ஸாலிம்ஆகா, அப்பெண்ணை கரீபுக்காக விட்டுவிடவேண்டுமென்னு நாட்டங் கொண்டு தவணை கேட்டாரேயன்றி, பிரயாணத்தை முன்னிட்டல்ல.)

பின்பு, கரீபும் ஸாலிமும் தனித்துப்பேச ஆரம்பித்தார்கள்.

ஸாலிம்ஆகா:——என் அருமைச் சகோதரரே! இன்றிரவு தங்களிலிருந்து வெளியான காரியத்தில் நான் மிகுந்த புதுமையடைகிறேன். விவாக விஷயத்தைத் தங்களுக் கறிவிக்குமுன் இன்னதென்றறியக்கூடாதவனா யிருக்கிறேன். தாங்கள் அப்பெண்ணைத் தங்களுக்காகக் கேட்டிருப்பதை யறிந்து வியப்புறுகிறேன். தாங்கள் ஏன், அப்பெண்ணை மணம் புரிந்து கொள்ளக்கூடாது?

கரீபு:——அமீர்பஷீர் அவர்களுக்கும் அமீர் ஸயீது அவர்களுக்கும் உண்டாயிருக்கிற மனஸ்தாபமே அதை விலக்கிற்று.

ஸாலிம்ஆகா:——அதைநீக்குவது பாரமல்ல. அவ்விருவரையும் ஒற்றுமைப்படுத்தும் விஷயத்தில் நானே முன்னிற்கிறேன்.

கரீபு:——அவர்களைச் சமாதானப்படுத்த இடம்படாது. அப்பெண்ணை நான் மணம்புரியவுங்கூடாது. அவள் தங்களுக்கே தகுதியுடையவளாகக் காணப்படுகிறாள். தாங்களே அவளைவேட்டல் வேண்டும். இவ்விஷயத்தில் தாங்கள் என்னுடன் வாதாடாதிருக்கக் கோருகிறேன்.

என்றபோது, "அவ்விஷயத்தில் எவ்வளவாக நாம் தருக்கித்தாலும் பிரயோசனப்படா" தென்பதையறிந்த ஸாலிம்ஆகா, கரீபைப்



பார்த்து, "நல்லது, தங்கள் பிரியப்படிக்கேசெய்வோம். நாளைத் தினம் அப்பெண்ணுக்குப் பரிசங் கொண்டுவருவோ" மென்றார். ஆனால், கரீபுடன் எவ்வித வாதாட்டஞ் செய்ய ஸாலிம்ஆகாவுக்கு இடமில்லாதுபோனபடியால், தான் பேசவந்த பெண்ணை தன் உயிர்த்தோழரும், சத்திய சகோதரருமாகிய கரீபுக்கே விவாகஞ்செய்துவிக்கவேண்டுமென்று தனக்குள்ளே தீர்மானப்படுத்தி யிருந்தார்.

பின்பு, இருவரும் அமீர்ஸயீ திடத்தில் விடைவாங்கிக்கொண்டு தத்த மிருப்பிடத்துக்குச் சென்றார்கள்.

---

42-வது அத்தியாயம்.

## இபுறாஹீம்பாஷாவும், ஷாமும்.

---

மறுநாள், அப்பெண்ணுக்குப் பரிசங் கொண்டுபோவதற்காக ஸாலிம்ஆகா வரும்வழியை கரீபுசிலமணித்தியாலம் காத்துநின்றார். அவர் வரவில்லை. அதனால் இரம்ப ஆலோசனையாகி, பொழுதடைந்தவுடனே வீட்டுக்குத் திரும்பிவந்து, அவர் வராமையின் காரணமென்ன வென்பதில் யோசித்தவரா யிருந்தார். மற்றநாளிரவு, கரீபு அரண்மனை வெளிவாசலில்வந்து, ஸாலிம்ஆகாவின்காரியத்தைப்பற்றி சிந்தித்தவராக உலாவிக் கொண்டிருந்தார். அப்போது ஸாலிம்ஆகா அங்கு வந்து கரீபைச் சந்தித்து புன்னகை நகைத்தார்.

கரீபு:——சகோதரரே! நேற்று தாங்கள் வருவீர்களென்பதை வழிபார்த்தவனாக அஸ்தமிக்கிற வரையில் காத்திருந்தேன். தாங்கள் வராதிருந்த காரணமென்ன?

ஸாலிம்ஆகா:——விவாகச் சடங்கின் பராக்கால் நேற்றுவரக் கூடவில்லை.

கரீபு:——யாருடைய விவாகம்?

ஸாலிம்ஆகா:——நேற்று ஒரு பெண்ணை எனக்கு விவாகஞ் செய்யப்பட்டது. ஆதலால், இப்போது நான் மணமகனாகி விட்டேன்.

கரீபு :——(பேராச்சரிய மடைந்தவராகி) தாங்களேன்,
அவ்வாறு சொல்கின்றீர்கள்? பரிசங்கொடுப்போவதாக நாம்செய்து
கொண்ட தீர்மானத்திற்கு மாற்றமாகிறதல்லவா ?

ஸாலிம்ஆகா :——அப்பெண்ணை விரும்பியவருக்காக, பரிசங்
கொண்டு செல்ல இதோ, தயாராயிருக்கிறேன். எழும்புங்கள்.
நிச்சயமாக நான் ஒருவருக்கு மணவாளனாக்கப்பட்டேன். (சக்க
ளமை) சக்களத்திகளின் போராட்டத்தை நான் விரும்பவில்லை.

கரீபு :——(சாலிமுக்கு·நம்முடன் வாதாட வழியில்லாதுபோ
னதால்,ஸூஊதாநாயகியை நாமே மணம்புரிந்துகொள்ளட்டுமென்று
கருதி, வேறு பெண்ணை விவாகஞ் செய்துகொண்டாரென்றுதெளி
ந்து) சகோதரரே ! தாங்கள் செய்தது ஒழுக்காகுமா ?

ஸாலிம்ஆகா :——என் அருமையான சகோதரரே ! நான்
செய்தது ஒழுங்குதான். ஸூஊதா நாயகியைத் தாங்களே மணந்து
கொள்ளவேண்டுமென்பது என்முழுக்கருத்தாயிருக்கிறது. உங்க
ளிருவருக்கும் கடவுளின் ஆசீர்வாதம் உண்டாவதாக. நம்மிரு
வரையுங் குறித்து,அப்பெண்ணிடத்தில்சம்மதங் கேட்கப்பட்டால்,
தங்களையே அப்பெண் தெரிந்தெடுப்பாளென்பதை நானறிந்திருக்
கிறேன். அவளுடைய நாட்டத்தை முடிக்கச் செல்வோம்; வாருங்
கள்.

கரீபு :——தங்களைப்பற்றி என் ஊன்றாரிடத்தில் அறிவிக்க
வேண்டியதிருப்பதால் அவர்களிடத்திற்கு நாம் சென்று, நம் காரி
யத்தை அவர்களிடத்திற் சொல்லி, அவர்களுடைய கருத்தையும்
அறிந்து கொள்ளுவோம்; வாருங்கள் இன்றிரவை நாமிரு
வரும் விழிப்பிலே கழிப்போம். தங்களின் விவேகத்திற்காகவும்
சற்குணத்திற்காகவும் நான் இரம்ப வியப்படைகிறேன்.

ஸாலிம்ஆகா:——(கரீபைக்கட்டியணைத்துநெற்றியைமோந்து)
சகோதரரே ! தாங்கள் சொன்னவை தங்களுக்கே உரித்தாயின
றன. நிச்சயமாக,தாங்கள் திருப்பாற்கடலின்துளிபோன்றிருக்கின்
றீர்கள். நான் மோகித்த பெண்ணை, நேசத்தைப்பெரிதாகமதித்து,
தன் சிநேகிதனுக்கு மணஞ்செய்துவிக்கப் பொருந்தியவாலிபர்.
தங்களைத்தவிர வேறே ஒருவரை நான் கண்டதுமின்று, கேட்
டதுமின்று.



என்று சொன்ன ஸாலிம்ஆகாவை, கரீபு அரண்மனைக்குள்
அழைத்துச் சென்று, முற்றவெளியிலிருக்கச்செய்து, அவர் அந்தப்
புரத்திற்குப்போனார். அச்சமயம் ஸல்மாநாயகி, அமீன்பேயுடன்
கரீபின் விவாக விஷயத்தி லேற்பட்டிருக்குந் தடையைப்பற்றிப்
பேசி, கைசேதப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்தப்
புரவாசலில் மனிதரின் காலடிச் சப்தங்கேட்டு, "கரீபே !" என்று
கூப்பிட்டார்கள். கரீபு, "அடிபணிந்தேன், என் அன்னையரே !"
யென்று மறுமொழி கொடுத்தார். உடனே ஸல்மாநாயகி கரீபை
அழைத்துச்செல்ல வெளிவாசலில் வரவே, முற்றவெளியில் கரீ
புடன்அன்னியவாலிபரொருவர்உலாவிக் கொண்டிருப்பதைக்கண்டு
பின்வாங்க நாடினார்கள்.

இதைக்கண்ட கரீபு, "என் அருமை மாதாவே ! இதோ, நிற்
கிறவர் என் அருமைத்தோழரும் சத்ய சோதரருமாகையால்,தாங்
கள் வெட்கவேண்டியதில்லை" யென்று சொல்லிவிட்டு, உள்ளே
சென்று தன் உண்மைப் பிதா அமீன்பேயையும் வெளியே கூட்
டிக்கொண்டுவந்து, அவ்விடத்தில் விரிக்கப்பட்டிருந்த விரிப்புகளில்
உட்கார்த்தி, தானும் உட்கார்ந்தார். ஸல்மாநாயகி, முகமூடியிட்ட
வர்களாகக் கொஞ்சத்தூரத்தி லிருந்தார்கள்.

பின்பு கரீபு, அமீர்லயீதின் குமாரியை ஸாலிம்ஆகா பெண்
பேசியதையும், அதற்காக தான் முயற்சி யெடுத்ததையும், தான்
விரும்பி யிருந்ததை ஸாலிம்ஆகா எவ்வழியாலோ அறிந்து, தனக்
காக அப்பெண்ணைவிட்டு வேறுபெண்ணை அவர் கல்யாணஞ்செய்து
கொண்டதையும் விவரித்துக் கூறினார். கரீபின் பெற்றோர், ஸாலிம்
ஆகாவின் விவேகத்திற்காகவும், சற்குணத்திற்காகவும் வியந்து அவர்
பேரில் அதிகப்பற்றுதலுடையவர்களானார்கள்.

பின்பு கரீபின்பெற்றோர், ஸாலிம் ஆகாவை விளித்து, "நீங்களிரு
வரும் சத்தியஞ் செய்துகொண்ட சகோதரர்களானதால், கரீபைப்
போலவே தங்களையும் எங்களுடைய சொந்தப் பிள்ளையாக இது
முதல் அங்கீகரித்துக்கொண்டோ" மென்று கூறி, அவ்விருபிள்ளை
களின் ஆயுள்வளர்ந்தேறவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்
தார்கள்.

அன்றிரவு பூரணமதிதோற்றி ஆகாயம் தெளிவா யிருந்தபடி
யால், அந்நால்வரும் நிலாவெளிச்சத்திலுட்கார்ந்துசந்தோஷமாகப்

பேசிக் கொண்டிருந்தார்கள். நித்திரை முற்றாக விலகி யிருந்தது. அப்போது கரீபு மற்றவர்களைப் பார்த்து, "இச்சமையம் விழித்திருந்து சம்பாஷிக்க இணக்கமான சமயமென்று சொல்லி, திண்டுகள் போடும்படிக்கும், காப்பி தயார் செய்யும்படிக்கும் கட்டளையிட்டு, வெகு வுல்லாசமாகத் திண்டுகளிற் சாய்ந்து கொண்டு, சிகரெட்டு, காப்பித்தண்ணீர் குடித்தவர்களாக பலவிஷயங்களைப் பற்றி சம்பாஷிக்க ஆரம்பித்தார்கள்.

ஸாலிம்ஆகா :——என் சகோதரர் கரீபுக்கு அமீர்பஷீர் அவர்கள் தந்தையரென் றெண்ணியிருந்தேன்.

கரீபு :——ஆம், அவர்கள் வளர்த்த தந்தையர். இதோ சாய்ந்திருக்கிறவர்கள்தான் என் உண்மைப்பிதா. (என்று சொல்லி தந்தையரைப்பார்த்து, "சிறைச்சாலையிலிருந்து என்னை வெளிப்படுத்தினவர், இதோ யிருக்கிற என் சகோதரர் ஸாலிம்ஆகாதான்.)

அமீன்பே ——இந்தஸாலிம்ஆகா, உடைபிறல்இபுருஹீம்பாஷாவின் தளகர்த்தாகக் காணப்படுகிறார். சத்குண சிலராகிய இவர், நமக்குச் செய்த பெரிய நன்றி யென்னுஞ் சாகரத்தில் மூழ்கியவர்களாக நாமிருப்பதுடன், கரீபே! இவருக்குப் பிரதிசெய்ய வழியேற்பட, கடவுளிடத்தில், கையேந்திக் கேட்கிறோம்.

(அமீன்பே ஸாலிம் ஆகாவை முன்னோக்கல்.)

ஸாலிம் ஆகாவே! மிஸ்று போர்வீரர்கள் இந்த லிபனான் தேசத்தில் நீண்டகால மிருப்பார்களா?

ஸாலிம்ஆகா:——ட்ரூஸிகளிடத்திலிருந்து ஆயுதங்களைப்பறித்துக்கொண்ட பிறகு, அவர்கள் இங்கிருப்பதில் பிரயோசனமில்லையென்றெண்ணுகிறேன். இத்தேசத்தின் சமாதானத்தை முன்னிட்டு, கிறிஸ்தவர்களின் ஆயுதங்களும் பறிக்கப்படுமென்று நம்புகிறேன்.

அமீன்பே :——இத்தேசம் நம் கையை விட்டுப்போய்விடுமென்று இபுருஹீம்பாஷா பயப்படுகிறதாகக் கருதுகிறீர்களோ?

ஸாலிம்ஆகா :——அதில் சந்தேகமில்லை. 1833-ம் வருஷம் மேய்மீ 14வ கோத்தாஹியாவில் நடந்த வுடன்படிக்கைப் படிக்கு, உதுமானிய அரசாக்ஷியார் தற்போது இபுருஹீம்பாஷாவை (சீரியா) ஷாம்தேசாதிபதியாக நியமித்திருந்தாலும், சில காரணங்களால் அத்தேசாதிபத்தியம் நிலைபெறாதென் றெண்ணுகிறேன்.



(Ottoman) உதுமானியா, தன் ஆதினங்களைக் கைப்பற்றிக்கொள்ள விரும்பி, (Asia Minor) சின்னாசியாவில் முன்னேறிச்சென்ற இபுருஹீம்பாஷாவைத் தடுத்தாவைப்பதற்காகவே, அவ்வுடன்படிக்கையை உதுமானிய மஹாமந்திரிசபையார் ஒப்புக்கொண்டார்கள். நான் பார்த்தவரையில் இந்த பாஷாவின் அவா, மஹாபாரதூரமாயிருக்கிறது. ஷாம்தேசத்தார் உண்டாக்கிய குழப்படிகளில் இவர்களடைந்த கஷ்டங்களைத் தாங்களறிந்திருப்பீர்கள். அவைகளை யெல்லாம் சகுறித்துக்கொண்டு தன்னுடைய நாட்டத்தை நிறைவேற்றிக்கொண்டார்கள். ஆனால், இத்தேசத்தில் அவர்கள் ஜெயம்பெற்றதுபோல சின்னாசியாவில் வெற்றியடைவார்களென்பது சந்தேகம். இங்கு அவர்களுக்கு அமீர்பஷீர் அவர்களின் உதவியிருந்தது. அங்கு அப்படிப்பட்ட வுதவிபுரிவாரில்லை.

அமீன்பே:——இந்த பாஷாவின் வீரசூரத்தைப்பற்றி வியப்படைகிறேன். இவர், தந்தயரைப் பார்க்கிலும் அதிசூரராகத் தெரிகிறார்.

ஸாலிம் ஆகா :——இப்பாஷாவின் தந்தையருடைய தீரத்தைப் புகழ்ந்துபேசும் பலரைக் கண்டிருக்கிறேன். இவரின் தந்தையர், தயாள குணத்திலும், இராஜ தந்திரத்திலும் இவரைவிடச் சிறந்தவர். யுத்தப் பிரியராதலால், போர்வீரர்களுடனேயேயிருக்க விருப்பமுடையவர். ஆகையால், அவரை அவரின் தயாள குணத்திற்காக சமேர்சையாய் நேசிப்பார்கள். இவர் முன்கோபியானதால், இவரை இவரின் கோபத்திற்கஞ்சி நேசிப்பார்கள். கிரேக்கு தேசத்தில் இவர் செய்த யுத்தங்களை நான் பார்த்திருக்கிறேன். இவரின்வீரம் மஹா ஆச்சரியப்படத்தக்கது. நாபாரீன் யுத்தத்தில் ஆங்கிலேய, பிரான்ஸிய போர்க்கப்பற்கள் கிரேக்கருக்குதவி செய்யாதிருந்தால், கிரேக்கர் எவ்வளவு உரோஷத்துடனும் ஊக்கத்துடனும் நின்று அமராடினும், இவர்களே வெற்றியடைந்திருப்பார்கள்.

## 43-வது அத்தியாயம்.

## மூவாருயுத்தமும், இன்கிஷாரியர் நாசமும்.

கரீபு :——ஸாலிம் ஆகாவே! கிரேக்கர் கலகம் விளைத்ததற்கு உண்மையான காரணமென்ன? தாங்கள் அறிவீர்களா?

ஸாலிம் ஆகா:——ஆம், அறிவேன். நான் சிறுவயதில் அத்தேசத்துக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கு வளர்க்கப்பட்டேன். கிரேக்குதேசம் மாக்ஷிமை பொருந்திய உதுமானிய அரசாக்ஷிக்குட்பட்ட ஒன்றாயிருந்தது. பூர்வ கோத்திரத்தாராகிய கிரேக்கர் ஆதியில் தங்களுக்கிருந்த தத்துவம், மேன்மை, ஆக்ஷி முதலியவைகளில் நினைவு கூர்ந்தவர்களாயிருந்தார்கள். அக்காலத்தில் சர்வியாவும் உதுமானிய ஆக்ஷிக்குட்பட்டதாயிருந்தது.

பின்பு, துரோகசிந்தையால் (Servia) சர்வியா, உதுமானியாவுக்கு மாறுசெய்ய ஆரம்பித்து, இனமொத்த சம்பந்தத்தை முன்னிட்டு (Russians) ருஷியர் செய்த உதவியால் தனியரசாயிற்று. இதையறிந்த கிரேக்கருக்கு தாங்களும் சுயாதீனம் பெறவேண்டுமென்னும் எண்ணம் உண்டானமையால், பல தேசங்களிலும் பரவியிருக்கும் கிரேக்கர்களுக்கு இரகசியக் கடிதங்களெழுதினார்களென்பதைத் தாங்களும் அறிந்திருப்பீர்கள். பின்பு, (Russia) ருஷியா (Austria) அவுஸ்திரியா, (Greece) கிரேக்கு முதலான தேசங்களில் அந்தரங்க சபைகள் கூட்டத்தலைப்பட்டார்கள்.

கிரேக்க வாலிபர்களடங்கலும் அக்கூட்டத்திற்சேர ஆரம்பித்து, மித்திர சங்கம் என்று ஒருசங்கம் ஏற்படுத்தினார்கள். அக்காலத்தில் நான், கிரேக்கரின் இராஜதானியாகிய (Athens) அதன்ஸ் பட்டணத்தில் ஒரு தனவான் வீட்டில் பணிவிடைக் காரனாகவிருந்தேன். அப்போது எனக்குவயது பதினைந்து. ஒருநாள் என் எஜமானுடன் நானும் அம்மித்திர சங்கத்திற் சேர்க்கப்பட்டேன்.

கரீப்:——அஃதிருக்கட்டும். தாங்கள் பணிவிடைக்காரனாயிருந்ததின் காரணமென்ன?

ஸாலிம் ஆகா:——அதைப்பற்றித் தாங்கள் யோசிக்கவும் புதுமைப்படவும் வேண்டாம். அதைக்குறித்துப் பிந்திக் கூறுகிறேன். அது, என் மனச்சம்மதத்தின் பேரில் நடந்ததுமல்ல.

நானும் என் எஜமானும் அச்சபைக்குப்போய் சமுகங்கொடுத்தோம். அங்கு கிரேக்கர் பெருங்கூட்டமாகக் கூடியிருந்தார்கள். அச்சபாமண்டபம் நிறைய ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. அம்மண்டபத்தின் நடுவில் ஒரு மேஜைபோடப்பட்டிருந்தது. அம்மேஜையின் சமீபத்தில் ஓர் அழகான ஆசனத்தின்



பேரில் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் முன்னிருக்கிற மேசையில் கிறிஸ்து வேதபுத்தகமொன்று வைக்கப்பட்டிருந்தது. அச்சபையின் சபாநாயகர், என்னையும் என் எஜமானையுங் கூப்பிட்டார். நாங்கள் அவர்கிட்ட நெருங்கினோம். அப்போது எங்களுக்கு நீளமாகப் போதித்து, சத்தியஞ் செய்யச்சொன்னார். அதுபோல் நாங்கள் சத்தியஞ் செய்தோம். அங்குள்ள சகலரும் அப்படியே சத்தியஞ் செய்தார்கள்.

அதின் சுருக்கம் வருமாறு:——"மெய்யான கடவுளின் சமுகத்தில் சர்வவிஷயங்களிலும் இம்மித்திரசங்கத்திற்கு விசுவாசம் பாராட்டிவருவதாக உண்மைப்பிரமாணிக்கம் பண்ணுகிறேன். இச்சபையிலுள்ள இரகசியங்களில் எதையேனும் இதிற் சேராத மற்றவர்களிடத்திற் சொல்லுகிறதேயில்லை. என் சுதேசத்தின் பகைவர்கள் மீது நான் எப்போதும் குரோதம் வைத்து சமயம் வாய்த்துழி, அவர்களுக்கு நாசத்தை யுண்டாக்குவிப்பேன். பரிசுத்தமான சிறப்புள்ள என் சுதேசமே! பல நூற்றாண்டாக உன்னுடைய பிள்ளைகள் உன் நிலைமையைப் பார்த்துப் பரிதபித்து சூடான கண்ணீர் சொரிந்துகொண்டிருக்கிறபடியால், இதுமுதல் எப்பொழுதும் உனக்கு உரிமை கிடைக்கும் விஷயத்தில் என் உயிர்பிரியும் வரையில் நான் பிரயாசைப்படுகிறதாக உனக்கு சத்தியஞ்செய்து தருகிறேன்."

கரீப்:——அச்சபை எவ்விடத்தில் எப்போது எவரால் ஸ்தாபிக்கப்பட்டது.

ஸாலிம் ஆகா:——ருஷியருடைய துராலோசனையின் பேரில் (Odessa) ஒடெஸ்ஸா பட்டணத்தின் பிரதான வர்த்தகருள் ஒருவரான நிக்கோலஸ் கூபாஸ் என்பவரால் அச்சபை ஒடெஸ்ஸாவிலேயே ஆரம்பத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, கி. பி. 1821-ம் வரு மார்ச்சு மாசம் வரையில் மறைக்கப்பட்டேயிருந்தது. பிறகு (Danube) டான்யூப் நதிக்கரையிலுள்ள ருஷிய அரசாக்ஷியில் சேவித்துக் கொண்டிருந்த ஒரு கிரேக்க ஆபிஸரால் கலகமேற்பட்டு, அச்சபை (Dardanelles) டார்டனலீஸ் வரையில் பரவிற்று.

இஸ்லாமிகளில் உட்கலகம் ஏற்பட்டிருக்கும் சமயம்பார்த்து கிறிஸ்தவர்களும் கலகம் விளைப்பது சகஜமல்லவா? அதுபோல், அப்போது ஸ்தம்பூலில் குழப்ப முண்டுபட்டு, சிலர் பட்டணத்

னைத் தீய்க்கிரை யாக்கவும் நாடினார்கள். அதைக்கண்ட கிரேக்கர்கள் இதுவே தக்கசமையமென்று நினைத்து, தாங்களும் கலகம் பண்ண ஆரம்பித்து, கொலையுண்டு கிடந்த ஒருகலகத்தலைவனை துருக்கியர்கள் கொலை புரிந்தார்களென்று பிரஸ்தாபம் பண்ணி, பழிக்குப்பழி வாங்கப்போகிறதாகக் கூறி, பலபாகங்களிலும் கலகமும் கொடுமையுஞ் செய்ய ஆரம்பித்தார்கள். அன்றியும், ஸ்தம்பூலை ஆக்ஷிசெய்துவரும் சுல்தான் மஹ்முது கான் அவர்கள், மிஸ்று தேசாதிபதியும், தன் மந்திரியுமாகிய முஹம்மதுஅலிபாஷா அவர்கள், தன் போர்வீரர்களுக்கு யுத்தப்பயிற்சி செய்வித்தது போல, அவர்களும் புதிய யுத்தப் பயிற்சியில் தன்போர்வீரர்களைத் தேற்ற முயன்றார்கள். அதற்கு இன்கிஷாரிய படைவகுப்பினர்கள் "கூடாது" என்று மறுத்து நின்றார்கள்.

கரீபு:——இன்கிஷாரியரென்றால் யாவர்?

ஸாலிம்ஆகா:——சுமார் 500-வருடங்களுக்குமுன் அரசாக்ஷி செய்துவந்த சுல்தான் அவுர்கான் என்னும் உதுமானிய அரசர், சிறையிலகப்பட்ட கிறிஸ்தவர்களின் பாலியர்களுக்கு யுத்தப்பயிற்சி கற்பித்து போர்வீரர்களாக ஏற்படுத்தியிருந்தார்கள். கல்வியிற் றேர்ந்த அவர்கள், இஸ்லாம் மார்க்கமே சத்தியமார்க்கம் என்று தெளிந்து, அதை அனுசரித்துவரும் அரசாக்ஷியாருக்கு இரம்பப் பாடுபட்டு வந்தார்கள் என்பதும், இன்கிஷாரியர் அந்த சந்ததியிலுள்ளவர்களென்பதும் தாங்கள் அறிந்திருக்கவேண்டுமே. பக்தாசிய்யா என்னும் ஞானபாதையை ஸ்தாபித்த ஹாஜிபக்தாஸ் என்னும் மஹான் அவ்வகுப்பினர் பெருகும் படிக்குக் கடவுளைப் பிரார்த்தித்தார்கள். அதுபோல் அவர்கள் பெருகி, உதுமானிய அரசாங்கத்தாருக்கு யுத்தத்தில் பெரிய உதவியா யிருந்தார்கள்.

ஆனால், அச்சாதியாருக்குள் பிடிவாதமும் முரட்டுக்குணமும் விசேஷமாக இருந்தபடியினாலே, உதுமானிய அரசாங்கத்தாருக்கு அது பெருந்தொல்லையா யிருந்தது.

கரீபு:——அத்தொல்லையை நீக்க என்ன யுக்தி செய்தார்கள்?

ஸாலிம்ஆகா:——மேற்கூறிய சுல்தான் மஹ்முது கான் அவர்கள், புதிய யுத்தப் பயிற்சியைக் கற்றுக்கொள்ளும்படிக்கு, அச்சாதியாருக்கு நயமும் பயமுங் காட்டிக் கூறியும், அவர்கள் இணங்கினார்களில்லை. அதனால் சுல்தான் அவர்கள் கோபமும் குரோதமுங்



கொண்டு, அச்சாதியாரின் தீங்கினின்றும் விலகியிருக்க ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நாடி, அக்கூட்டத்தார் யாவரையும், இத்மைதானி மைதானத்தில் வந்து கூடும்படிக்குக் கட்டளையிட்டார்கள். அதுபோல வந்து கூடினார்கள்.

கலகத் தலைவர்களை ஒப்புக்கொடுக்கும்படிக்குஅவர்களிடத்தில் சுல்தான் அவர்கள் கேட்டார்கள். அவர்கள் சம்மதிக்கவில்லை. இதைக்கேட்ட சுல்தான் அவர்கள், கல்வியிற் றேர்ந்த மஹாபுருஷர்களை வரவழைத்து, சபைகூட்டி, இக்கூட்டத்தா ரிருக்கும் வரையில் அரசாக்ஷிக்கு இடைஞ்சலாகவே யிருக்கிறது, ஆகையினாலே, இவர்களடங்கலையும் நாசப்படுத்திவிடவேண்டுமென்று தீர்மானித்து, வேத போதகர்களின் தீர்மானத்தை யெதிர் பார்த்தார்கள். அவர்களும் அதுபோலத் தீர்ப்பளித்தார்கள். அத்தீர்ப்புப் பத்திரத்தை வாங்கிக் கட்டிக்கொண்டு, தீர்க்க தரிசிகளின் நாயகம் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களின் சிறப்பான துவஜத்தை வெளியிற் கொண்டு வந்தார்கள்.

அக்கொடியைக் கண்ட முஸ்லீம்களில் இன்கிஷாரியரைத்தவிர மற்றவர்கள் சுல்தான் அவர்களின் சார்பிலானார்கள். அம்மைதானத்திற்குச் சமீபத்திலுள்ள ஜாமிஉ-அஹ்மது தேவாலயத்தில் அத்துவஜத்தை நாட்டி, இன்கிஷாரியர் அடங்கலையும் சர்வசங்காரஞ் செய்யும்படிக்கு சுல்தான் அவர்கள் ஆக்ஞாபித்தார்கள். இருவகுப்பினர்க்கும் கடும்போர் நடந்து, ஹிஜ்ரி 1240-ம் ௵ துல்கயிதா மீ 8உக்குச்சரியான கி. பி. 1826-ம் ௵ ஜூன்மீ 16உயன்று மூன்று மணிநேரத்திற்குள் இன்கிஷாரியர் அனைவரும் நாசமடைந்தார்கள்.

அமீன்பே:——இது, 25-வருடங்களுக்கு முன், மிஸ்றில் அரசவமிசத்தாரான அமீர்மார்கள்கொல்லப்பட்டதைக்கேள்விப்பட்டது போல, இன்கிஷாரியர் கொல்லப்பட்டதையும் கேள்விப்பட்டிருக்கிறேன். சுல்தான் மஹ்முது கான் அவர்கள், இன்கிஷாரியரின் சங்கரிப்பில், மிஸ்று தேசாதிபதி முஹம்மதுஅலிபாஷாவைப் பின்பற்றினார்கள்போலும்.

(அரசவமிஷத்தார்கள் கொல்லப்பட்டதுபோல, என்று அமீன்பே சொன்னபோது, ஸாலிம்ஆகா மெல்லினமான ஒரு பெருமூச்செறிந்தார்.)

ஸாலிம்ஆகா :——உதுமானியர், யுத்தத்திலும் உட்கலகத்திலும் கைசோர்ந்திருக்குஞ் சமயத்தில், கிறேக்கர், ஐரோப்பிய கிறிஸ்துவ அரசர்களின் அந்தரங்க வுதவியினால், ஆறு வருடங்கள்வரையில் பல பாகங்களிலும் யுத்தஞ் செய்து கொண்டிருந்தார்கள். கடைசியாக 1827-ம் வரு ஜூலைமீ 6உ (London) லண்டனில் இங்கிலேயர், ருஷியர், பிரான்ஸியர், இம்மூவரும் ஒன்று சேர்ந்து கிறேக்கருக்குப் பகிரங்கவுதவி செய்கிறதென்று தீர்மானித்து, அப்போது நாபாரினைத் தாக்கிக்கொண்டிருந்த இப்ருஹீம்பாஷா அவர்களுக்கு மாறுபாக ஆங்கிலேயரும், பிரான்ஸியரும், போர்க் கப்பல்களை யனுப்பி உதவி செய்தார்கள். ருஷியரின் கப்பல் வரவில்லை. அவை பின்னடைந்தது. மூன்றுதேசத்தாருடன் இப்ருஹீம் பாஷா சண்டைகொடுத்தார்கள். அப்போது அவர்கள் காட்டிய சவுரியத்தை வியர்த்தகூற என்னாலாகாது. 1827-ம் வரு அக்டோபர்மீ 21உ நாபாரினில் நடந்த யுத்தத்தில், இப்ருஹீம்பாஷா வசமிருந்த கப்பல் உடைந்து போனபடியால், யுத்தம் நின்று அக் கிறேக்கு தேசம் கிறேக்கரின் சுயாதீனமாயிற்று. அக்கப்பல் வருமுன்னமே நான் நாபாரினில் இருந்தபடியால், இப்ருஹீம்பாஷாவிடத்திற்கு வந்து சரணடைந்தேன்.

---

41-வது அத்தியாயம்.

## இழந்தபொருளைப் பெறல்.

அமீன்பே :——ஸாலிமே! கிறேக்கு சுயாதீனம் பெற்றதைப் பற்றி, உள்ளபடிக்குக் கூறினீர்கள். ஆனால் வேறொரு விஷயத்தைப்பற்றி நான் கேட்க நாடுகிறேன். அக்கேள்வி தங்களுக்குத் தொந்தரையாகத் தோற்றினும், தங்களுக்கும் என்மகன் கரீபுக்கும் உண்டாயிருக்கிற நேசபாசத்தை முன்னிட்டு கரீபிடத்தில் கேட்பதுபோல, தங்களிடத்திலுங் கேட்கத் துணிந்தேன்.

ஸாலிம்ஆகா :——தாங்கள் இஷ்டப்பட்டதைக் கேட்கும்போதெல்லாம் மறுமொழி தரக் கடமைப்படுகிறேன்; கேளுங்கள்.

அமீன்பே :——மேலே கூறியபடிக்கு, நாபாரின் யுத்தத்தின்போது, இப்ருஹீம்பாஷாவிடத்தில் தாங்கள் சரணடைந்ததாகச்



சொல்லுகிறது எனக்கு சரிப்படவில்லை. தாங்களும் அத்தேசத்தில் சுயாதீனம் பெற்றவர்களாக லிருக்கக்கூடாது?

ஸாலிம்ஆகா :——(பெருமூச்செறிந்து,) அத்தேசத்தில் நானிருக்கப் பிரியப்படாமலே, அதைவிட்டு விலகினேன். அது என் சுயதேசமுமல்ல, அங்கு என் பெந்துக்களில் ஒருவருமில்லை. தெய்வச்செயலால் அங்கு செல்லவும், அடிமைகளைப்போல விலைப் படவும் சம்பவித்தது. நான் சுயதேசஞ்சென்று, தாய் பிள்ளைகளைப் பார்க்க, எப்போது சமையம் வாய்க்குமென்று அத்தேசத்திலிருந்தேனே ஒழிய வேறொன்றிற்கல்ல. அவ்வெண்ணம், இப்ருஹீம் பாஷா அவர்கள் அங்கே வருகிறவரையில் கைகூடாதிருந்தது.

கரீபு :——தாங்கள் சிறுபோதில் எடுபட்டுப்போய், பெரியவயதாகி சுதேசத்திற்கு வந்து, தங்கள் பெந்துக்களைச் சந்தித்தபோது, தங்களை அவர்கள் இன்னாரென்றறிந்து கொண்டார்களா? இல்லையா?

(என்றபோது ஸாலிம்ஆகா பெருமூச்செறிந்து அழுதார். அவருடைய நிலைமையைக்கண்டு மற்றவர்கள் ஆச்சரியப்பட்டார்களே யன்றி, அழுகையின் காரணம் இன்னதென்றறியக் கூடாதவர்களாயிருந்தார்கள்.)

கரீபு :——என் சகோதரரே! தாங்கள், கடந்தசலிப்புடையவர்களாக, பெருமூச்செறிந்து அழவேண்டிய காரணமென்னையோ? அறிவிப்பீர்களா? அத்துயரத்தை நீக்கி வைக்குஞ் சக்தி, ஒருக்கால் எங்களிடத்தி லிருக்கவும் போதும்.

ஸாலிம்ஆகா :——நான் படாத பாடும்பட்டு, சுதேசத்திற்குத் திரும்பிவந்து, என் மாதாவைத் தேடிக் கிடைக்காமற்போனதின் ஞாபகம் எனக்கு வந்துற்றதால்தான், அதிக சஞ்சலப்பட்டு அழநேர்ந்தது.

ஸல்மாநாயகி :——தாய்மார்களுக்குச் சம்பவிக்கும் தௌர்ப் பாக்கியமும் கைசேதமும் இவ்வாறு தான். இப்போது தாங்கள் ஜீவந்தரா யிருப்பதைத் தங்கள் தாயார் அறிவார்களா?

ஸாலிம்ஆகா :——என் தாயே! அவர்கள் அறிவார்களென்று நான் எண்ணவேயில்லை. நான் எடுபட்டுப்போய், சற்றேறக்குறைய 25-வருடங்களாகின்றன. அவர்கள் ஜீவித்திருக்கிறார்களென்பதும் எனக்குப் புலப்படவில்லை.

ஸல்மாநாயகி :——அவர்கள் ஜீவித்திருந்தாலும், தாங்கள் ஜீவித்திருப்பதாக அவர்கள் நினைத்திருக்க மாட்டார்கள். அதிருக்கட்டும். தாங்கள், தாயாரைப்பற்றிப் பேசுகிறீர்களே ஒழிய தந்தையரைப்பற்றிப் பேசவில்லையே.

ஸாலிம்ஆகா :——என் தந்தையர் திட்டமாக மரணமடைந்து விட்டபடியால், அவர்களைப்பற்றி நான் கவலைப்படவேண்டியதில்லை.

கரீபு :——தங்கள் தாயாரைத் தாங்கள் நன்றாகத் தேடிப்பார்த்தீர்களா? அவர்களை யெந்த தலத்தில் விட்டுப் பிரிந்தீர்கள்?

ஸாலிம்ஆகா :——25-வருடங்களுக்கு முன், இச்கா பட்டணத்தில் அவர்களைவிட்டுப் பிரிந்தேன். திரும்பி வந்து நீண்டகாலம் என் அருமைமாதாவைத் தேடினேன். காணக்கூடவில்லை. என்னை அருமையாக வளர்த்து, கடப்பாள கிருபை பாராட்டி வந்த என் தாயார், நான் எடுபட்டுப்போன நிமித்தம்பற்றி எவ்வளவு கஷ்டமடைந்தார்களோ? நான் அறியேன்.

என்று அழுதார். அதைக்கண்ட மற்றவர்களும் அழுதார்கள். பெண்களின் மனங்கள் அதிக இரக்கமுடையனவாகையால், ஸல்மாநாயகி தேம்பித் தேம்பி யழுதார்கள். இச்காஎன்றசொல், ஸல்மாநாயகியின் செவிக்கேறவே, அவ்வூரில் ஸலீமை யிழந்த ஞாபகம் அவர்களுக்குண்டாகி, அதை தன் புருஷருக்கு நினைப்பூட்டுதற்காக கரீபுக்குத் தெரியாமல் அமீன்பேயைச் சாடையாகப் பார்த்தார்கள். அவரும் சாடையாக பெண்சாதியைப் பார்த்து பெருமூச்செறிந்து குனிந்தார்.

கரீபு :——ஆதியில் தாங்கள் (சீரியா) ஷாம் தேசவாசியோ?

ஸாலிம்ஆகா :——அல்ல, நான் மிஸ்று மேன்மக்கள்சந்ததியிலுள்ளவன். அங்கே என் பிதா கொல்லப்பட்டார். அப்போது எனக்கு ஏழுவயது. என் மாதா என்னை இச்காவுக்குக் கொண்டுவந்து, சில காலம் அங்கிருந்தோம்.

கரீபு :——அங்கிருந்து தாங்கள் எவ்வாறெடுபட்டுப் போனீர்கள்?

ஸாலிம்ஆகா :——ஒருநாள், கடற்கரையில் படகேறி விளையாடிக்கொண்டிருக்கும்போது என் படகு அலைவாரப்பட்டு, வெகுதூரம் வெளியே போய்விட்டது. அவ்வழி போய்க்கொண்டிருந்த



கிரேக்கர் கப்பல் கப்பித்தான், என்னைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு போய், நாபாரீனில் ஒரு வர்த்தகரிடத்தில் விற்று விட்டான். அவரிடத்தில் நான் வளர்ந்து வந்தேன். அதற்குப் பிறகு, நான் முன் சொன்னவைகள் எனக்குச் சம்பவித்தன.

இதைக்கேட்டுக் கொண்டிருந்த ஸல்மாநாயகி, "இவருடையகாரியம் நம்முடைய காரியத்திற்குச் சமதியாயிருக்கிற"தென்றெண்ணி, அவருடன் பேச ஆரம்பித்தார்கள். சஞ்சல மிகைப்பால், பேச நாவெழாமல் பிரமிப்புற்று அவர் பேசப்போகிற மீதி வரலாற்றில் செவி சாய்த்துக் கொண்டிருந்தார்கள். அமீன்பேயும் அவர்களைப் போலவே யிருந்தார்.

கரீபு :——சகோதரரே! இதென்ன புதுமை? நாங்களும் மிஸ்றிகளே. தங்களுக்கு நேர்ந்தவாறே, கிஞ்சிற்று முன் பின்னாக எங்களுக்கும் சம்பவித்திருக்கிறது. தங்கள் பிதாவின் பெயரென்ன? ஒருக்கால், அவர்களை யென்பிதாஅவர்கள் அறிந்திருக்கவும்போதும்.

ஸாலிம்ஆகா :——என் தந்தையரின் திருநாமம் (பிரின்ஸ்) அமீன்பே. என் தாயார் பெயர் (பிரின்ஸெஸ்) ஸல்மாநாயகி.

என்றவுடனே, (பெற்றமனம் பித்தானதால்) ஸல்மாநாயகி, "என் அருமை மகனே! ஸலீமே!! என்னிருதயக் கனியே!!! என்று சப்தமிட்டலறி அவரைக் கட்டியணைத்து, உச்சியைத்தடவி நெற்றியை முகர்ந்து, ஸ்மரணையற்றுக்கீழே சாய்ந்தார்கள். அமீன்பேயும் அவ்வாறாகவே ஆயினர். ஸலீம், இவர்களின் நிலைமையைப் பார்த்துப் பிரமித்து, அவ்விருவரின் முகங்களையும் உற்றுநோக்கிப் பெற்றோரென்று தீர்மானித்து, அவர்களின் கைகளை யெடுத்துக் கண்ணில் வைத்து முத்தமிட்டு அழுதார். அவர்களும் ஆனந்தக் கண்ணீரை ஓட்டினார்கள். கரீபு, "ஸலீம்" என்றொரு சகோதரிருப்பதை அறியாதவரானதால் திகைப்படைந்திருந்தார். இருந்தாலும் உடனே சுத்த ஜலங்கொண்டு வந்து, இருவரின் முகங்களில் தெளித்தார். அவர்கள் உணர்வு பெற்றெழுந்து, "என் கண்ணே! கண்மணியே!! ஸலீமே!!! என்று, மடக்கி மடக்கிப் பன்முறை அழைத்தார்கள்.

இதைக்கண்ட கரீபு "இதென்னடா ஆச்சரியம்? இந்தசகோதரர் எங்கிருந்தப்பா முளைத்து வந்தார்? காலம் நாள்தோறும்

நவீன விஷயங்களைக் கொண்டு வருகிறது" என்றுரைத்து, அம்மூவரையும் அறைக்குள் அழைத்துவந்து விளக்கின் வெளிச்சத்தில் அவர்களின் முகங்களைக் கூர்க்கப்பார்த்து, ஸலீம் தன் உண்மைச் சகோதரர்தானென்று தெளிந்து அவரைக் கட்டியணைத்து முத்தமிட்டார்.

(அப்போது, தாய்தந்தையருக் குண்டுபட்ட சந்தோஷத்தின் அளவை இதைவாசிக்கும் எவரும் கேட்கத் தேவைப்படமாட்டார்களாதலாலும் இணைகூறற் கியலாதாகையாலும் அதையே அதற்கிணைப்படுத்திப் பின்போந்தோம்.)

அவர்களடங்கலும், இச்சம்பவத்தைக் கனவாகக் கருதியிருந்தார்கள். ஆனால், ஸலீம் "தாய்தந்தையரைக்காண்போ"மென்னு நம்பிக்கை யிழந்திருந்த வராதலால், அவருடைய பிரமிப்பு மற்றவர்களுடைய பிரமிப்பைக் கடந்ததாயிற்று. அன்றிரவை மற்றவிஷயங்களிற் போக்கினார்கள். பொழுது புலரவே அமீன்பே அமீர்பஷீரிடத்திற் சென்று ஸலீமின் வரலாற்றைக் கூறி, அவரை இபுறுஹீம்பாஷாவுடைய பட்டாளத்திலிருந்து விலக்கி, தன்னுடனிருக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அமீர்பஷீர் நல்லதென்று சம்மதித்தார்.

அமீன்பே திரும்பிவந்து, ஸலீம் வந்துசேர்ந்ததைப்பற்றி அமீர்பஷீர் மகிழ்ச்சியடைந்ததாக ஸல்மாநாயகி முதலானவர்களுக்குச் சொல்லிக் காண்பித்தார். பின்பு அமீர்பஷீர், ஸலீமை தன்சமுகத்தில் வரவழைத்து அவர் பெற்றோருடன் சேர்ந்துகொண்டதற்காக சுபசோபனங் கூறினார். ஸலீம் அமீர்பஷீரின் கையை முத்தமிட்டு, "பலதிசையிலும் பிரிந்திருந்தவர்களை ஒருதலத்திற் சேர்க்கக் காரணரா யிருந்த தங்களுக்கு கடவுள் அதிகபாக்கியத்தைத் தருவாராக" என்று வாழ்த்தி, "நாங்கள், தங்களின் உபகாரமென்னும் நிலத்தில் உற்பவித்த மனுப்பூடாயிருக்கிறோம்" மென்றுகூறி, டரூஸிகள் மிஸ்று கவர்ன்மெண்டாருக்கு மாற்றஞ்செய்து குழப்பம் பண்ணிக்கொண்டிருப்பதை நீக்குதற்காகக் கையாடவேண்டிய இராஜதந்திரத்தைப் பற்றிய ஆலோசனையில் அமீர்பஷீர் இருந்தபடியால், அவருடன் அதிகமாகப்பேசக்கூடாதென்று நினைத்து விடைபெற்றுக்கொண்டு திரும்பி வந்துவிட்டார்.



45-வது அத்தியாயம்

## அதிட்ட விவாகம்.

(இனி அமீர் ஸயீதைப்பற்றிக் கூறுவோம்.)

அமீர்ஸயீது, தன்மாளிகையிலிருந்து கரீபு, ஸாலிம் இருவரும் போனபிறகு தன்மகள் ஸுஊதா இடத்திற்குவந்து, நடந்தவைகளைக் கூறி, "என் அருமைமகளே! நீ, ஸாலிம்ஆகாவுக்கேவாழ்க்கைப்படப் பொருத்தந் தரவேண்டு"மென்று கேட்டார். ஸுஊதாநாயகி, உண்டில்லையென்று மறுமொழி கூறவில்லை. கட்டாயப்படுத்திக்கேட்கக் கூடாதென்று விட்டுவிட்டு, மறுநாட் காலையில் கேட்டார். அப்போது ஸுஊதாநாயகி சற்றுநேரம் கலக்கமுற்றிருந்து "என் தந்தையரே! கரீபு பேரில் திட்டமாக நான் பிரியப்படாதிருந்தால் அவருக்காக என்னுயிரை மரணத்தனலில் நான் ஏன், எறியவேண்டும்? ஸாலிம் ஆகாவின் குலத்தையும், தாய்தந்தையரையும் அறிந்தவர் யாவர்?" என்று கேட்டார்கள்.

அமீர் ஸயீது, "ஆம், என் அருமைப் புதல்வியே! இபுறுஹீம் பாஷாவின் கட்டளைக்கு நாமென்ன செய்கிறது? அதைமறுக்க நம்மா லியலுமா?" என்றுகேட்டார். ஸுஊதாநாயகி, தன்னை மறந்து அழுதார்கள். அமீர் ஸயீதுகலக்கமுற்று, "அருமையாகவளர்த்தெடுத்த நம் ஒரே புத்திரியை குலமறியப்படாத ஒருவருக்கு விவாகஞ்செய்து வைப்பதில் கட்டாயப் படுத்துகிறதா? இபுறுஹீம்பாஷாவின் விருப்பத்திற்கு மாற்றம் செய்கிறதா?" என்னும் ஆலோசனையி லிருந்தார்.

காலைப்போஜன வேளை சமீபித்தும் உணவருந்தாமல், தன்னையும் தன் புத்திரியையும் இச்சங்கடத்தைவிட்டு எவ்வாறு நீக்கிக்கொள்ளுகிறதென்று ஆலோசித்துக் கொண்டிருக்கும்போது, இரண்டுகுதிரை சவாரிக்காரர் வாசலில் வந்திருக்கிறதாகப் பணிவிடைக்காரன் செய்தி யறிவித்தான். அமீர் ஸயீது வாசலில் வந்து பார்த்து "ஸலீமையும், கரீபையும் கண்டு, அவர்களுக்கு சோபனங் கூறினார். அவ்விருவரும், அவருடைய முகத்தில் கலக்கமும், சினமுங்கொண்ட குறிப்பைக் கண்டார்கள். பின்பு மூவரும் தெரிசனை மண்டபத்தில் உட்கார்ந்து சம்பாஷிக்கத் தொடங்கினார்கள்.

ஸலீம்:——அமீர் ஸயீதே! நாங்கள், மஹா ஆச்சரியமான சமாசாரத்துடன் தங்களிடத்தில் வந்திருக்கிறோம். அது, தங்களை சந்தோஷப்படுத்தி, கோபத்தையும் கலக்கத்தையும் அடக்குமென்பதில் ஆக்ஷேபணையில்லை.

அமீர்ஸயீது:——அஃதென்ன சமாச்சாரம்?

ஸலீம்:——ஸுஉதாநாயகி, என்சகோதரர் கரீபுக்கு மனைவியாகத் திட்டமாக சங்கற்பிக்கப் பட்டார்கள். அவரும் நானும் தாய் தந்தையர் ஒன்றித்த சகோதரர்களென்று நான் தங்களுக் கறிவிக்கப் போகிறது என்னை சந்தோஷப் படுத்துகிறது.

அமீர்ஸயீது:——இது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. அதின் கருத்தை நான் விளங்கிக்கொள்ளக் கூடாதவனா யிருக்கிறேன்.

என்றபடியால், ஸலீம் சகல சம்பவங்களையும் ஆதியோடந்தமாக எடுத்துரைத்தார். கரீபு, பனீஷிஹாபு கோத்திரத்தில் தாய்புறத்தால் சம்பந்தப் பட்டவரென்பதையும் கரீபும், ஸலீமும் சகோதரர்களென்பதையும் அப்போதுதான் அமீர்ஸயீது அறிந்தார். அறிந்தவுடனே எழுந்து, கோபமும் கலக்கமும் நீங்கியவராக சமாளி முகத்துடன் தன் புத்திரியிடத்தில் வந்து, செய்தி அறிவித்தார்.

(தான்காதல்கொண்ட கரீபும், மாறியும் தனக்கே குறிக்கப்பட்டாரென்பதை யறிந்த ஸுஉதாநாயகியின் மனம் எவ்வித மிருக்குமென்பதை நாம் எடுத்துரைக்க வேண்டியதில்லை. வாசிப்பவர்களே வரையறுத்துக்கொள்ளுவார்கள்.)

அன்றுபகல் அவர்கள் மூவரும் விவாக விஷயத்தைக் குறித்துப் பேசிக்கொண் டிருந்தார்கள். அப்போது கரீபு "இவ்விஷயத்தைப்பற்றி நம்தேச வழமைப்படிக்கு எங்கள் தகப்பனாரவர்கள் தங்களிடத்தில் வந்துபேசி முடிவுசெய்துக் கொள்ளுகிறது நலமல்லவா?" என்று அமீர்ஸயீதிடத்தில்கேட்டார். அவர், "அதுவே சரி" யென்று ஒத்துக்கொண்டார். அன்றிரவு மாலைப் போஜனத்தின் பிறகு, ஸலீமும், கரீபும் அவரிடத்தில் விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினார்கள். சிலநாளைக்குப்பின் அமீன்பே, அமீர்பஷீரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, அமீர்ஸயீதிடத்திற்கு வந்து விவாக விஷயத்தைப்பற்றி கலந்துபேசி முடிவு செய்து கொண்டார்கள். ஸல்மாநாயகி பெண்ணைப்பார்த்துவிட்டு வந்தார்கள்.



கி.பி.1836-ம்வருஷக்கடைசியில், கரீபுக்கும், ஸுஉதாநாயகிக்கும் விவாக வுடன்படிக்கை யெழுதப்பட்டது. அதுமுதல் 10-நாள் வரையில் பலவித வேடிக்கை விளையாட்டுகளும் நடத்தப்பட்டன. பைத்துத்தீன் முழுதும் கொடிகுடை ஆலவட்டம் முதலானவிருதுகளாலும், விதவிதமான தீபங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, இரவுபகலென்று வித்தியாசஞ் சொல்லக்கூடாதிருந்தது. சுற்றுப் பக்கங்களிலுள்ள நாட்டார், பெரும் கூட்டமாக வந்திருந்தார்கள். வாள்வீச்சு, சிலம்பம், குதிரைப் பந்தயம், யுத்தப் பயிற்சி, விலையுயர்ந்த பட்டுப்புடைவையை ஆகாயத்திற்பிடித்து எகிரிப்பாய்ந்து இருதுண்டாக வெட்டும் வித்தை, பருத்த காளைமாட்டை ஒரே வீச்சில் பிளக்கும் சமர்த்துவம் முதலியன நடைபெற்றன.

சகல வித்தைகளிலும் தேர்ந்த வித்துவான்கள், வீரசிரேஷ்டர்கள் முதலிய பலரும் அங்குவந்து, தத்தம் சாமர்த்தியங்களை வெளியாக்கினார்கள். அப்பத்து நாளும் இரவுபகலாக விருந்துப் பந்திகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இக்கல்யாணச்செலவுகள் யாவும் அமீர்பஷீருடைய சொந்தப் பொக்கிஷத்திலிருந்தே செய்யப்பட்டன. அதிககஷ்டத்தின் பின்னால் சுகம்பெறுவோமென்றெண்ணுகிறவர்களா யிருந்த, தன் சிறியதந்தையரின் மகள் ஸல்மாநாயகியையும், அவர்களின் புருஷர், புத்திரர்களையும், அவர்கள் பட்டகஷ்ட நிஷ்டூரங்களை மறந்து சந்தோஷமாக்குவிப்பதற்காகவே, அமீர்பஷீரால்இவ்வித ஆடம்பரக்கல்யாணம் நடத்தப்பட்டது.

## 46-வது அத்தியாயம்.

## ஸயீது.

அமீன்பே முதலானவர்களுக்கு விசுவாச அடிமையாகிய ஸயீது; தன் விவேகத்தையும், உரோசத்தையும் முன்னிட்டு, தன்எஜமானைத் தேடச்சென்ற விடத்தில்வெட்டப்பட்ட விஷயத்தைக் குறித்த எண்ண முண்டாயிருந்தபடியால், அவர்களின்சந்தோஷம் நிரப்பமாக்கப்பட்டதா யில்லை. தனது அடிமைஸயீதை, தன்கையால் வெட்டநேர்ந்ததைப் பற்றி அமீன்பே கைசேதமும் சலிப்பும் அடைந்தவரா யிருந்தபடியால், அவருடைய முகம் அதிக வாட்டமுற்றிருந்தது.

அமீன்பே, தன்னைக் காணவருகிறவர்களுக்கு உபலாலனை செய்வதைத் தவிர மற்றொன்றில் பராக்காகாமல், "அவனிருந்தன்றோ இவ்வலங்காரங்களைக் கண்டு மகிழவேண்டு" மென்று ஸயீதைநினைத்து நினைத்துக் கலங்கிக்கொண் டிருக்கும்போது, மடத்தின் தலைமைப்பாதிரி முகமலர்ச்சி யுடையவராக வந்து, அவருக்கு வந்தனங் கூறினார். அமீன்பே பிரதிவந்தனமும், இலாலனையுங் கொடுத்தார்.

தலைமைப்பாதிரி:——தாங்கள்முகவாட்டமுற்றிருக்கிறகாரணமென்ன? அதை நமக்குச்சொல்ல மாட்டீர்களா?

அமீன்பே:——கடவுளின் உதவியால் நாங்களடங்கலும் ஒருதலத்திலானதால் உண்டான சந்தோஷம் பரிபூரண முறாததினால் என்மனம் கலங்கிக் கொண்டிருக்கிறது.

தலைமைப் பாதிரி:——எந்த வஸ்து அதைக்குறைக்கிறது?

அமீன்பே:——தேடினால் கிடைக்கக் கூடாத ஒருவஸ்து. அதை கிடைக்காமலாக்கிக் கொண்டதும் நானே யாகிறேன்.

தலைமைப் பாதிரி:——அக்குறையை சர்வ வல்லமையுள்ள கடவுள் அதிசீக்கிரத்தில் நிவர்த்தியாக்குவார்.

அமீன்பே:——கடவுள் சர்வ வல்லமை யுள்ளவ ரென்பதில் ஆக்ஷேபணையில்லை. அப்படிக்கில்லாதிருந்தால் இப்பிரபஞ்சத்தின் பலகோணங்களிலும் பிரிந்திருந்த நாங்கள் ஓரிடத்தில் கூட்டப்படுவோமா? நான் கைசேதப்பட்டுக் கொண்டிருக்கிறவஸ்து கிடைப்பதரிது. அவ்வஸ்து மடிந்துபோய் விட்டதாக நினைத்துத்தான் சஞ்சல மடைகிறேன். என் மூதேவித் தனத்தின் கையினாலேயே அவ்வஸ்து மாண்டது.

தலைமைப் பாதிரி:——(புன்னகை யுற்று) தாங்கள் ஸயீதை நினைத்துச் சொல்லுகிறதாக எனக்குப் புலப்படுகிறது; அவன் சாகவில்லை; உயிர்த்திருக்கிறான்.

அமீன்பே:——(பிரமிப்பும் படபடப்புங்கொண்டு,) பாதிரியாரே! என் சலிப்பையாற்ற வுபசாந்தி கூறுகிறீரென் றெண்ணுகிறேன். என்னுடைய வெட்டு அவனுயிரைப் போக்கி யிருக்குமென்று நம்புகிறேன்.

தலைமைப் பாதிரி:——என் அருமை மகனே! அவன் ஜீவித்திருக்கிறான். என் சொல்லைத் தாங்கள் நம்பா விட்டால், இதோ, கண்கூடாகத் தங்களுக்கு அவனைக் காட்டுகிறேன்.



அமீன்பே:——பாதிரியாரே! என் முகவாட்டத்தைநீக்குதற்காக பரிகாச வார்த்தை யாடுகிறீர் போலும். கடவுள் பேரில் சத்தியமாக அதை விட்டுவிடும். அது என் சலிப்பை அதிகப்படுத்துகிறது. கனவிற்கூட அவனைக் காண்பேனென்னு நம்பிக்கை யெனக்கில்லை. ஆனால், அவனுடைய உருபிகரம் என் கண்முன்னால் ஆடிக்கொண்டிருக்கிறது.

தலைமைப் பாதிரி:——அவனுடைய சங்கதியைச் சொல்வதற்காகவே தங்களிடத்திற்கு வந்தேன். இப்போது அவன் எங்கள் மடத்திலிருக்கிறான். அதற்காக தங்களுக்கு நான் சோபனங் கூறுகிறேன்.

அமீன்பே:——(துளும்பிப் பதறி வெடுக்கென் றெழுந்து,) அவன் எங்கிருக்கிறான்? எனக்குக் காட்டுங்கள். அவனிருக்குமிடத்தில் என்னையுங் கூட்டுங்கள்.

தலைமைப்பாதிரி:——தாங்கள் வரத் தேவையில்லை. நான் கூட்டி வருகிறேன்.

என்று சொல்லி தலைமைப் பாதிரி போய்விட்டார். அமீன்பே ஓடோடியும் போய், ஸல்மா, கரீபு முதலானவர்களுக்கு ஸயீது வந்திருக்கிறதைத் தெரிவித்தார். இதைக்கேட்டதும் அவர்களின் இதய தாமரைகள்பூரிப்பால்மலர்ந்து புளகாங்கிதங் கொண்டது. ஆனால், இனி யொருமுறை ஸயீதைச் சந்திப்போ மென்னும் நம்பிக்கை யிழந்தவர்களானதால், கிஞ்சிற்று சந்தேகங்கொண்டார்கள்.

அமீன்பே, உடனே வெளியில் வந்து, பேன் வாத்திய கோஷ்டத்துடன் வேடிக்கை நடத்திக் கொண்டிருந்தவர்கள் சகிதமாக, ஸயீதை யெதிர்சென் றழைக்க, பாதிரி மடத்தை முன்னோக்கிச் சென்றார். கரீபின் கல்யாண ஊர்கோலத்திற்காகத் தயாராக்கப்பட்டிருந்த சகல தளபாடங்களையும், ஸயீதின் எதிர்சென் றழைத்தலில் சாதனமாக்கிக் கொண்டார்கள். கரீபு சிங்காரமான மணவுடையுடன் கூடச் சென்றார். இடைவழியில் பாதிரியும், ஸயீதும் வருகிறார்களென்று சொல்லப்பட்டது.

அமீன்பே, ஸலீம், கரீபு இம்மூவரும் ஸயீதை யெதிர் சென்றழைக்க விரைந்து முன்னேறினார்கள். கால் நடையாக வந்த ஸயீது, அமீன்பேயின் காற்களில் விழுந்து முத்தமிட்டான். கரீபை

சிறு பிராயத்தில் விட்டுப் பிரிந்தவனைபடியால், அருகாமையிலிருக்-
கிறவரை யின்னாரென் றறிந்து கொள்ளக்கூடாமல் வலமிடம் திரும்-
பித் திரும்பிப் பார்த்தான். அதைக்கண்ட கரீபு, "நம்மைத்தான்
பார்க்கிறு" னென்றறிந்து, "ஸயீதே! நான்தான் கரீபு" என்றுசொன்-
னார். அவன் கரீபைக் கட்டியணைத்து முத்தமிட்டு, ஆனந்தக்கண்-
ணீர்வடித்து, 'நான் துற்பாக்கியத்திலிருந்து சற்பாக்கியம் பெற்ற-
தற்காகக் கடவுளை யிரம்பத் துதிக்கிறேன். இவ்விதசந்திப்பில்
நீண்டகாலமாக ஆசைவைத்திருந்தேன். இப்போது பெற்றுக்-
கொண்டேன். சர்வ புகழும் கடவுள் ஒருவருக்கே உரியன. நீங்-
கள் எனக்கருங் கடப்பான சங்கை செய்துவிட்டீர்கள். நான் அவ்வள-
வுக்குத் தகுதியுடையவனல்லாத, தங்களுடைய அடிமையாயிருக்-
கிறேன்" னென்றான்.

அமீன்பே ஸயீதை அணைத்து முத்தமிட்டு, "ஸயீதே! நீ சத்-
தியமாக எனக்கு சகோதரனைவிடச் சிறந்தவனா யிருக்கிறாய். எங்-
களுக்காக நீ யடைந்த கஷ்டத்திற்குப் பிரதிசெய்ய, நாங்கள் சக்தி
பெறமாட்டோம். நாங்கள் ஜீவித்திருப்பதற்கு நீயே காரணனா-
யிருந்திருக்கிறாய். நீ இல்லா திருந்தால் நாங்களடங்கலும் மரித்-
திருப்போ மென்பதற் காக்ஷேபணையில்லை" யென்றார். ஸயீது,
எஜமானின் மரியாதைக்காக வாய்பேசாது மவுனமுற்றிருந்தான்.

பின்பு, சகலரும் அங்கிருந்து கால் நடையாகவே, ஊர் வலத்-
தளபாடங்களுடனே பைத்தீனுக்குள் ளானார்கள். அப்போது
ஸயீது நொண்டி நொண்டி நடந்து வந்தான். அவனுடைய முகத்-
தில் விருத்தாப்பியக் குறிகள் தோன்றி யிருந்தன. அமீபே, ஸயீ-
தைப் பார்த்து, "நீ ஜீவித்திருப்பதை அறிய எவ்வளவோ, விருப்ப-
முடையவனா யிருந்தேன். நீமரித்திருப்பாயென்று நாங்கள்எண்ணங்-
கொள்ளும்படியான இவ்வளவு நீண்டகாலமாக நீ யெங்கிருந்தாய்?
இங்குவரத் தாமசப் பட்டதின் காரணமென்ன?" வென்று கேட்-
டார். ஸயீது பெருமூச்சுவிட்டு, "சமீபத்தில் என் வரலாற்றை விவ-
ரிக்கிறேன். இப்போது என் எஜமான் கரீபை நான் கண்குளிரப்
பார்க்க விடுங்கள். அவர்களின் விவாகத்திற்காகவே இவ்வளவு
ஆடம்பரமும் நடத்தப்பட்டிருக்கிற தென்பதை நான் அறிந்து
கொண்டேன். நான் பெற்றுக்கொண்ட இப்பெரும்பாக்கியத்திற்-
காகக் கடவுளை யிரம்பத் துதிக்கிறேன்."



என்றுகூறி, ஸலீமை கூர்க்கப்பார்த்தான். அவனுக்குவிளங்க-
வில்லை. "கரீபின் பக்கத்திலிருக்கும் இவ்வாலிபர் யாரென்பதை
நான் அறிந்து கொள்ளக்கூடவில்லை" யென்றான். அமீன்பே,
"ஸயீதே! இக்கா பட்டணத்தில் நீங்கள் இழந்த, என் அருமைப்
புத்திரர் ஸலீம் அல்லவா?" என்றார். இதைக்கேட்ட ஸயீது, ஸலீ-
மைக் கட்டியணைத்து முத்தமிட்டு "என் அருமை நாயகமே? தாங்-
கள் ஸலீமா? என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, கடவுள் எனக்-
குக் கொடுத்த பாக்கியங்களுக்காக, அவருக்கு நான் அதிக துதி
செலுத்துகிறேன்.

"இவ்வுலகத்தில் நான் ஆவா வைத்திருந்ததற் கதிகமாகவே
பெற்றுக்கொண்டேன். ஸலீமை நான் காண்பேனென் றுநினைக்கவே
யில்லை புகழடங்கலும் சர்வசக்தி கர்த்தருக்கே உடையன-
வாகு" மென்று துதித்து, தன் எஜமானி ஸல்மாநாயகியைப்பற்றிக்
கேட்டான். "அவர்கள் சுகமா யிருக்கிறார்களென்றும், அவர்களும்
அந்தப்புர ஸ்திரீகளும் உன் வரவை யெதிர் பார்த்திருக்கிறார்க"
ளென்றும் அமீன்பே சொன்னார். பலவிதமாகப் பேசிக்கொண்டே
நடந்து அரண்மனை வந்துசேர்ந்தவுடனே, அமீன்பே ஸயீதைக்
கூட்டிக்கொண்டு அந்தப் புரத்துள்ளே சென்றார்.

ஸயீதின் வரவை யெதிர் பார்த்திருந்த ஸல்மாநாயகி, அவனைக்
கண்டவுடனே அவனுக்கு சோபனங் கூறினார்கள். அவன் அவர்-
களின் கையை முத்தமிட்டான். அவனை ஸல்மாநாயகி பார்த்து,
"ஸயீதே! என் புத்திரனின் மணமகிழ்ச்சியைவிட, நீ வந்துசேர்ந்-
ததே எனக்குப் பெருமகிழ்ச்சி. ஏனெனிலோ, உண்மையாக நீ விசு-
வாசமும், ஊக்கமு முடையவனா யிருக்கிறாய்" யென்றார்கள். ஸயீது
தன் எஜமானியைத் துதித்து, "என் எஜமானியே! நான் தங்களின்
ஊழியர்களில் ஓர் சிற்றடிமை" யென்று கூறினான். அவன் வந்து
சேர்ந்ததைப்பற்றி அந்தப்புரஸ்திரீகளும்சந்தோஷமடைந்தார்கள்.

பின்பு, ஊர்கோலத் தளபாடங்களும், வேடிக்கை விளையாட்டு-
களும் ஒழுங்காக்கப்பட்டன. விவாகச் சடங்கின் மகிழ்ச்சியுடன்,
ஸயீது வந்த கொண்டாட்டமும் கலந்து கொண்டபடியால், வெகு
மும்முரமாக விருந்தது. அமீன்பே ஸயீதின் வரலாற்றை யறிய
அவாக்கொண்டு, "ஸயீதே! நீ உயிர் பிழைத்து வந்ததை நமக்கறி-

விப்பாயா?" என்று கேட்டார். அதற்கு ஸயீது, "என் எஜமானே! நாங்கள் என்னை வெட்டிய பிறகு, ஷெண்டி வீரர்களிற் சிலர் என்னைச் சூழ்ந்துகொண்டு, நான் தங்களுக்குச் சொன்ன செய்தியை ஆதாரமாக்கி, நான் அவர்களைச் சேர்ந்தவனல்லவென்று எனக்கு விலங்கிட்டார்கள்.

"பின்பு, பாலும் மாவுங் கொண்டுவந்து குழைத்தென் காயத்தில் வைத்துக்கட்டினார்கள். அப்போது, மிஸ்ற போர்வீரர்கள் அவர்களிடத்தில் பழிவாங்க வருகிறார்களென்று அவர்கள் நினைத்து, என்னை யிம்சிக்க நாடி, என்னையுந் தூக்கிக்கொண்டு ஓடினார்கள்.

"நான் அவர்களிடத்தில் என்னை விட்டுவிடவாவது, வெட்டிவிடவாவது வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். நான் அவர்களுடைய அந்தரங்கங்களை மிஸ்றிகளுக்கு அறிவித்து விடுவேனென்பதைப் பயந்தும், என்னிடத்தில் சிலசமாசாரங்களை அறிய விரும்பியும் என்னைவிட்டு விடவுமில்லை. கொன்று போடவுமில்லை. என்காயமும் நாளுக்குநாள் ஆறிவந்தது. என் சரீரமும் சற்றுத் திடப்பட்டது. ஓரிரவு, அவர்களுக்குத் தெரியாமல் விலங்குகளைத் தறித்துவிட்டு, அங்கிருந்து ஓடினேன். நான் ஓடுவதை அவர்கள் அறியமாட்டார்களென்றே எண்ணியிருந்தேன்.

"கொஞ்சதூரம் நான் ஓடியபிறகு, சிலர் என்னைப்பிடிக்கப் பின்தொடர்ந்து வந்தார்கள். அவர்களை நான் கண்டபோது விரைந்தோடினேன். எனக்கிருந்த பலஹீனத்தினாலும் நான் அடைந்திருந்த கஷ்டத்தினாலும் விரைந்தோடற் கியலாமையானதால், அவர்கள் என்னை நெருங்கிப் பிடித்துக்கொண்டுபோய், என் கைகாற்களுக்கு விலங்கிட்டார்கள். அதே கவலையால் நான் பிணியுற்று, சிலகாலம் சுகக் குறைவாகவே யிருந்தேன். அவர்கள், இல கஷ்டமான அப்பாலை வனத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப்போய், கூடார மடிக்கிறதே வேலையாயிருந்தார்கள்.

"ஒருநாள் ஓரிடத்தில் என்னை தனிவிடுத்துவிட்டுப் போனார்கள். அவர்களுள் ஒருவன் என்பேரில் இரக்கமுற்று, கொஞ்சம் தினையரிசியும், தண்ணீருங் கொடுத்துவிட்டுப் போனான். அப்போது நான் பலஹீனனாகவும், காழ்ந்திருக்கமுதல் அசக்தனாகவு மிருந்தேன். அதனால் எனக்கு மரணஞ் சமீபித்து விட்டதாக



நான் நிர்மானித்து, தங்களையும், மற்றவர்களையும், சொந்தமாக என் கொடுங் கையிலேந்தி அருமையுடன் வளர்த்த என் எஜமான் கரியையும் நினைத்து, சஞ்சலம் அதிகமாகி, இரவுபகலாய் அபய சப்தமிட்டு அழுதுகொண்டிருந்தேன்.

"ஆனால், தாங்கள் ஜீவித்திருப்பீர்களென்கிற எண்ணமும், எப்போதாகிலும் தாங்கள், தங்கள்மனைவி மக்களைக் கண்டுகொள்ளுவீர்களென்ற ஆதரவும் எனக்கிருந்தபடியால், கொஞ்சம் ஆறுதலடைந்திருந்தேன். இருந்தாலும், அவர்களிருக்குமிடத்தைச் சொல்லாமற்போன நான், என்னையே தூஷணித்துக்கொண்டு, உண்டி-திண்டியில் பிரியமற்றவனாகி, அவ்வனத்தில் சிலகாலத்தைக் கழித்தேன். நான் படுகிறதுன்பமுந் துயரமும், அவ்வனத்தில் இராக்காலங்களில் கேட்கும் கோணுப்புமுதலிய துட்ட மிருகங்களின் சப்தங்களால் அதிகரித்தன.

"நாளுக்குநாள்என்சரீர பலனுக்குறைந்து அதிகஅசக்தியாய்விட்டபடியால், மரணஞ் சமீபித்து விட்டதென் றெண்ணி, என் சரீரம் அவ்வனத்தின் மிருகங்களுக் கிரையாகா திருக்கவேண்டி, அவ்வனத்திலிருந்த ஒரு குழியளவில் நகர்ந்துநகர்ந்து நெருங்கி, அதை எனக்குக் கல்லறையாகப் பாவித்துக் கொண்டிருந்தேன். அதிகரிப்பான என் அழுகையால்என்கண்ணீரும்வற்றி, சரீரமுமெலிந்து என்புந்தோலுமே காணப்பட்டன.

"அப்படிப்பட்ட சமையத்திலுங் கூட, தாங்கள் முதலானவர்களின் எண்ணம் என் நெஞ்சை விட்டொழியாது சலித்து, கடவுளைப்பிரார்த்தித்தனுகவேயிருந்தேன்." (என்று சொல்லிக்கொண்டு வருவதைக் கேட்டுக்கொண்டிருந்த சகலருடைய கண்களிலும் கண்ணீர் ததும்பிற்று. ஸல்மாவும் அமீன்பேயும் அதிக பரதாபப்பட்டார்கள்.)

பிறகு ஸயீது அமீன்பேயைப்பார்த்து, "என் எஜமானே! சர்வ சிருஷ்டி கர்த்தர் என் பரிதாப நிலைமையைப் பார்த்து என்மீதிரங்கி, நான் நினைத்திராத ஒருவழியை யெனக்குங் கருணை புரிந்தார். நான் குழிக்கருகில் கிடக்கும்போது சற்று தூரத்தில் புழுதி பறக்கக்கண்டு, பார்த்துக்கொண்டிருந்தேன். ஓடிப்போன ருதாணிகளாகிய ஷாய்கியயா கூட்டத்தார்களைத் துரத்திக்கொண்டு வரு

ற மிஸ்று குதிரை வீரர்கள், கொடிகள் பிடித்தவர்களாக வந்தார்கள். நான், என் கையை உயர்த்தி அவர்களைக் கூப்பிட்டேன். அவர்கள் என்னிடத்திற்கு விரைந்து வந்தார்கள். நான் அவர்களுடைய உதவிக்காரனென்றும், மரணத் தறுவாயிலிருக்கிறேனென்றும் சைகைகாட்டினேன். அவர்கள் என்னைத் தூக்கிக்கொண்டுபோய் கூடாரத்தில் வைத்து, எனக்கு தக்கபரிகாரஞ் செய்தார்கள்.

"நான் சுகமடைய கடவுள் நாடிவிட்டபடியால், வரவர சுகமடைந்து, என் தேகத்தில் வலுவுண்டாகி சுபாவத்திலாயினேன். அவர்கள் "நீயார்?" என்று என்னைக்கேட்டார்கள். நான், "இஸ்மாயீல்பாஷாவின் மனிதனென்றும், காயமடைந்து ஷாய்கீய்யா கூட்டத்தாரால் சிறைவாரப் பட்டேனென்றும் அவர்களுக்கு விபரமாய்ச் சொன்னதுடன், அக்கூட்டத்தாரைத் தேடிப்போவதில் பிரயோசனமில்லையென்றுஞ் சொன்னேன். என் யோசனையை அவர்கள் ஒப்புக்கொண்டு, ஷெண்டிக்குத் திரும்பிவிட்டார்கள். நானும் அவர்கள் கூடவே வந்தேன்.

"நான் நடக்க சக்திபெற்றவுடனே, தங்களுடைய காரியம் எவ்வாறு முடிந்ததோவென்று சிந்தித்து, தங்களிடத்திற்கு சீக்கிரத்தில் போகவேண்டுமென்று நாடிக்கொண்டு சிலகாலம் அங்கிருந்தேன். அப்போது எனக்குக் காய்ச்சல்கண்டு வாதனைபட்டதால், நடக்க சக்தியற்றவனானேன். இவ்வாறாக இரண்டு வருடங் கடந்தது. என்னுடைய விஷயத்தில் ஒன்றையாவது நான் ஒருவரிடத்திலுஞ் சொல்லவில்லை. பிறகு அவர்கள் கர்தூமுக்குப் பிரயாணமானார்கள். நானும் அவர்கள் கூடச் செல்லநாடி, சூதானியரின் வண்டியிலேறும்போது என் கஷ்டகாலத்தின்கூறு சறுகி விழுந்து என் கால் ஒடிந்துபோயிற்று. அதுகாரணத்தினால் சிலகாலம் கர்தூமிலேயே தங்கியிருந்தேன்.

"எனக்கு சரியான மருந்து கிடைக்காததாலும், நான் வயசு தளர்ந்தவனானதாலும் என்கால் சுவஸ்தமாக அதிக தாமசப்பட்டது. நாளுக்குநாள் சுகமடைந்தே வந்தது. பின்னரும் என்காலவித்தியாசம், முஹம்மதுஅலி பாஷாவால் கூர்ஷித்பாஷா என்பவர் கர்தூமின் கவர்னராக நியமிக்கப்பட்டு வந்தார். சூதானிகள், அவர்களிருப்பிடங்களைக் குச்சுவீடுகளாக்கி, கூரைக்கு தோலோடு பாவுகிறது அவர்களுடைய வழக்கமென்பதைத் தாங்களறிந்



திருக்கிறீர்கள். கூர்ஷித்பாஷா அங்குவந்தவுடனே, கல்வீடுகள் கட்டும் படிக்குக் கட்டளையிட்டார். அதுபோல் கல்லறுத்து சூளையிட்டு வீடுகள் கட்டத் தொடுத்தார்கள். முன்னால் முறிந்துபோன என்கால் சுகமாகிவிட்டது.

"ஒருநாள் நான்ஒருவீட்டிலிருக்கும்போது ஓடுகள்சரிந்து என் காலில் விழுந்து, முந்திமுறிந்த காலே அப்போதும் ஒடிந்தது. ஒரேகால் இரண்டுவிசை முறிந்ததால், அக்கால் பொருந்துதல் மஹாகஷ்டம். மேலும் என்போலொத்த வயோதிபனுக்குப் பொருந்துவது அதிலும் கஷ்டமாயிருக்கும். இச்சமயம் நான் தங்களிடத்தில் அதிக நீளமாய்ப் பிரசங்கிக்கிறதாக எனக்கே தெரிகிறது. சஞ்சலமான விஷயங்களை விபரிக்குநேரம் இதுவல்ல. ஆகையால், சுருக்கிக் கூறுகிறேன். சிலவருஷம் வரையில் என்காலுக்குப் பக்குவஞ்செய்கிற வேலையிலிருந்தேன். கடவுள் எனக்கு சவுக்கியத்தைக் கொடுத்தார். தங்கள் சமுகத்திற்குவந்து தாங்கள் முதலானவர்களைக் காணவேண்டுமென்னு மெண்ணம் என்னை வாதித்துக்கொண்டிருந்தமையால், நான்நடக்கக்கூடிய சக்திபெற்ற சென்றவருடம் கர்தூமிலிருந்து புறப்பட்டு, பாலைவனங்கள், ஆறுகள், கடற்கள் முதலானவைகளைக்கடந்து, இன்றிரவு பாதிரிமடத்துக்கு வந்து சேர்ந்தேன். தலைமைப்பாதிரியார், நானடைந்த கஷ்டங்கள் நீங்கி என் மனங்குளிரும்படிக்கான சமாச்சாரங்களையெனக்கறிவித்தார். இப்போது தங்களையும் மற்றவர்களையுங் கண்டு கொண்டேன். எல்லாப்புகழும் கடவுள் ஒருவருக்கே உரியன"வென்று துதித்தான். மற்றவர்களும் அதுபோல கடவுளைத் துதித்தார்கள்.

அமீன்பே "இப்போது என்சந்தோஷம் நிரப்பமுற்றது. இனிமேல் கரீபின் கல்யாணச் சிறப்பை நடத்துங்க" ளென்றார். ஸயீது வந்தசெய்தியை அமீர்பஷீருக் கறிவித்தார்கள். அவரும் இரம்ப சந்தோஷ மடைந்தார். ஸயீது அமீர்பஷீரைத் தெரிசிக்கச் சென்றான். அவர், அவனுடைய விவேகத்தையும், விசுவாசத்தையும், ஊக்கத்தையும் வியந்து புகழ்ந்து பேசினார். கரீபின் கல்யாணமும் வெகு அலங்காரமாக நிறைவேறிற்று.

## 47-வது அத்தியாயம்.

## இபுருஹீம்பாஷா ஷாமைக் கைவிடல்.

கி. பி. 1840-ல் (Powers) பவர்கள், இபுருஹீம்பாஷாவையும் அவரின் போர்வீரர்களையும்(Syria) ஷாமிலிருந்து வெளிப்படுத்தும் விஷயத்தில் உதுமானிய அரசாக்ஷியாருடன் கலந்து கொண்டார்கள். அதினால் அமீர்பஷீர்,இபுருஹீம்பாஷாவுக்கு பஹிரங்கவுதவிசெய்து வந்தவ ரானதால் அதிக கலக்கத்திலிருந்தார். அந்த வருஷத்தில் கணக்கற்ற கடும்போர்கள் நடந்தன. மிஸ்றுவீரர்கள்சிலபூாதங்களாகக் கடின ஊக்கத்துடன் போர்புரிந்துவந்தும், கடைசியில் ஷாமை விட்டுவிட்டுமிஸ்றுக்குத் திரும்பிவிட்டார்கள். பிரான்ஸியர் தனக்கு உதவி புரிவதாக வாக்களித் திருந்தபடியால், அமீர்பஷீர் அதைநம்பி மிஸ்று அரசாக்ஷியாருடன் கடைசிவரையில் ஒத்து நின்றார்.

கடைசியில் பிரான்ஸியர் அவருக்குக்கொடுத்தவாக்கை நிறைவேற்றாதிருப்பதை அவர்கண்டு, தன்னை மாக்ஷிமைதங்கிய உதுமானிய அரசாக்ஷியாருக்கு ஒப்புக்கொடுக்க நாடினார். அப்படிக்கான பிறகு, அவ்வரசாக்ஷியார் கட்டாயம் தன்னை லிபனான் நாட்டைவிட்டு அப்புறப் படுத்துவார்களென்பதை யறிந்து, பைத்துத்தீனிலுள்ள விலையேறப்பெற்ற பொருட்களைச் சேகரப் படுத்திக்கொண்டு, பெண்சாதி, பிள்ளை, பவுத்திரர்கள் முதலான சுயபெந்துக்களையும், பிள்ளைகளின்போதகராகிய முஅல்லிம்பத்ருஸ் கராமாவையும், அரண்மனைப் பண்டிதரையுங் கூடக் கூட்டிக்கொண்டு (Saida) சைதாவுக்குப்போகத் தயாராயினர்.

---

## 48-வது அத்தியாயம்.

## அமீர்பஷீர் ஊருக்குப் புறம்பாக்கப்படுதல்.

அமீன்பே, ஸல்மாநாயகி, ஸலீம், கரீபு முதலானவர்கள் இதைப் பற்றி ஆலோசித்து, அமீர்பஷீர் போகுமிடத்துக்கே போகிறதென்று தீர்மானித்து, அவர்களும், ஸயீதும், ஸலீம் கரீபுடைய



பெண்சாதிமார்களும் குடும்ப சகிதமாக அமீர்பஷீருடன் சேர்ந்து பைத்துத்தீனைவிட்டு நீங்கி, 1840-ம் வரு அக்டோபர்மீ 1உ சைதாவுக்கு வந்துசேர்ந்தார்கள். அவ்வூர்த் தலைவரான காலிதுபாஷா அமீர்பஷீர் முதலானவர்களை யெதிர்சென் றழைத்து மரியாதை செய்து கடல்மார்க்கமாக (Beyrout) பேறூத்துக் கனுப்பினார்.

அவர்கள் அங்குசேர்ந்து கரையிறங்கினார்கள். அப்பட்டணத்தின் அதிபர், ஷாம், மிஸ்று, பிரான்ஸ் இவையல்லாத ஓரிடத்தை அவர்களின் இருப்பிடமாகத் தெரிந்துகொள்ளச் சொன்னார். அமீர்பஷீர் (Malta) மால்ட்டா தீவைத் தெரிந்துகொண்டார். அதைப்பற்றி (Sublime Porte) அல்பாபுல் ஆலீ என்னும் உதுமானிய போர்ட் சங்கத்தாருக் கறிவித்தார். அமீர்பஷீருடைய பிரியப்படிக்கு அத்தீவுக்கே அனுப்பும்படிக் கட்டளைவந்தது. அது போல் அவர்களடங்கலும் அங்கனுப்பப்பட்டார்கள்.

அதிக் வளம்பொருந்திய லிபனான், மலைநாட்டை விட்டுவிட்டு அவர்கள் புறம்பாவதை நினைத்து, கப்பலி லுள்ளவர்கள் இரம்ப பரிதாபப் பட்டார்கள். கப்பல் பாய்விரித்தோடி கரை மறைகிற வரையில் அமீர்பஷீர் முதலானவர்களின் கண்கள், தங்களின் சுயதேச மலைநாட்டின் பேரிலேயே யிருந்தன. அவர்கள் யாவரும் மால்ட்டா தீவில் சேர்ந்து அங்கு 11-மாத மிருந்தார்கள். பின்பு அமீர்பஷீர் ஸ்தம்பூலுக் கழைக்கப்பட்டார். அங்கே அவர் சங்கையுடன் ஒப்புக்கொள்ளப் பட்டார்.

அங்குசேர்ந்த மற்றுநாள் (Grand Vizier) பிரதான மந்திரியாகிய றவூப் பாஷாவின் மந்திரி சபைக்கு அழைக்கப்பட்டார். "அவர் மிஸ்றிகளுடன் ஒற்றுமையா யிருந்ததை முன்னிட்டு, அச்சபைக்குவந்தால் அவருக்கு சங்கைசெய்தற்கு ஒருவரும் எழுந்திருக்கக் கூடாது" என்று பெரிய மந்திரியார் கட்டளை யிட்டிருந்தார்.

(அமீர்பஷீர், பார்ப்பவர் பயப்படத்தக்க, சிம்மம்போன்ற ரூபீகரமுடையவ ரென்பதை முதற்பாகம் 1-ம் அத்தியாயத்தில் நாம் கூறியிருப்பதை வாசித்தோர் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள்.)

அப்படிப்பட்டவர், குறித்த கெடுப்படிக்கு மந்திரிசபைக்கு வந்தார். வந்தவுடனே, மஹாமந்திரியாரே முதலிலெழுந்து நின்று

அமீர்பஷீருக்கு சங்கை செய்தாரென்றால், மற்றவர்களைச் சொல்ல வேண்டியதில்லை. சிலநேரமிருந்து பேசிவிட்டு தன் இருப்பிடத்திற்குப் போய்விட்டார். அவர் போன பிறகு, மற்ற மந்திரிமார்கள் பெரிய மந்திரியாரைப்பார்த்து, "தாங்கள் அமீர்பஷீரின் சங்கையைக் குறைக்க நாடி, ஒருவரும் எழும்பக்கூடாதென்று கட்டளையிட்டிருந்தீர்களே; தாங்களேன், முதலில் எழுந்து நின்று மரியாதை செய்தீர்க" ளென்று கேட்டார்கள்.

அதற்கவர், "அந்த மனிதனுடைய முகத்தை நான் கண்டவுடனே, எந்தவஸ்து என்னையெழுந்து நிற்கச்செய்ததென்பதைக் கடவுளே அறிவர். இவ்விதமான மனிதனை இப்பூமியின் பேரில் நான் கண்டதேயில்லை" யென்று விடைகொடுத்தார்.

உதுமானிய அரசாக்ஷியார், ஸ்தம்பூலின் குடாவுக்குச் சமீபத்தில் இருக்கிற அர்னவூத் குவா என்னும் வளம்பொருந்திய சிற்றூரில்குடியிருக்கும்படி அமீர்பஷீருக்குக் கட்டளை யிட்டார்கள். அவ்வூரில் அவர் குடும்பசகிதமாக சுகத்துடன் வாழ்ந்திருந்தார். கரீபு, ஸ்தம்பூல் போன்ற பட்டணத்தைப் பார்க்காதவராகையால், அதின் கட்டிடங்களையும், அலங்காரங்களையும் பார்த்து மகிழ்ந்தார்.

(சுருக்கிக் கூறுவோம்.)

பிரின்ஸ்அமீன்பே, பிரின்ஸேஸ் ஸல்மாநாயகி, ஸலிம், கரீபு இவர்கள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டதினால், அவர்கள் மஹாபாக்கியசாலிகளென் றெண்ணிக் கடவுளைத் துதித்துக்கொண் டிருந்தார்கள். அடுத்த வருடத்தில் அமீர்பஷீர் பரலோக யாத்திரை யானார். அவருடைய சரீரகம் ஸ்தம்பூலில் அடக்கஞ் செய்யப்பட்டது. அதற்குப்பிறகு அமீர்பஷீர் முதலானவர்களின்சமாச்சாரங்களைப் பற்றி ஒன்றும் கேள்விப்படவில்லை.

அமீன்பே சரித்திரம்
முற்றுப் பெற்றது.